சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# மெய்கண்டசாத்திரம்

## 3. சிவஞானபோதம்

ஸ்ரீபாண்டிப்பெருமாள் விருத்தி

*மெய்கண்டார் யாண்டு—732*

திருவாவடுதுறையாதீனவெளியீடு—92

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேவநாயனுர் அருளிச்செய்த

# சிவஞானபோதம்

## ஸ்ரீபாண்டிப்பெருமாள் விருத்தியும் தெளிபொருள்விளக்கமும்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
21—வது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீ—ல—ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்**
கட்டளையிட்டருளியபடி

திருவாவடுதுறையாதீனவித்துவான்
**த. ச. மீனுட்சிசுந்தரம்பிள்ளையால்**
பல பிரதிகளைக்கொண்டு
பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்றன.

# இப்புத்தகத்தில் அடங்கியவை



திருக்கயிலாயபரம்பரைத் ... ந்த ... ாதீன ை
21-வது குருப் ... ஓ ... ந்தி
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமண் ... சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

சித்தாந்தசைவ நூல்களின் முடிமணியாகத் திகழ்வது சிவஞானபோதமேயாம். "மலர்தலை யுலகத்துப் புறவிருளின் நீக்கிப் பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுதற்குப் பன்னிருவகைத்தாய ஞாயிறுபோல, அநாதி மூலமலவிருளின்நீக்கிச் சிவபரம் பொருளை ஆன்மாவிற்கு [illegible] ந்த [illegible] யின் றிலை பெறுவித்தற்குப் பன்ன [illegible] று [illegible] வில் ஞா [illegible] ஞாயிறாய் எழுந்தது [illegible] ன் போதமே

என்பர். வேதாகமம் முதலிய எல்லா நூல்களும் திருவைந்தெழுத்தால் உணர்த்தப்படும் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்த இலக்கணங்களையே கூறப்புகுந்தன. எனினும், அவையெல்லாம் முப்பொருளின் தடத்த சொரூபங்களாகிய பொது இயல்பு சிறப்பியல்புகளைத் தனித்தனியே கூறுவன. இச்சிவஞானபோதம் அவ்விரண்டின் இயல்புகளையும் ஒருங்குவைத்து நேரே கூறும் சிறப்புடையது. ஆகலின், இது அவ்வெல்லா நூல்கட்கும் சிரத்தான மாக விளங்குகின்றது. இதனை, "**மெய்கண்டானூல், சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலூற்றும்**" என ஸ்ரீ அருணந்தி தேவ நாயனார் தமது ஆசிரியர்கட்டளையின்படி அருளிச்செய்தவழி நூலாகிய சிவஞானசித்தியாரில் முன்னூற் சிறப்பு என்னும் பகுதியில் அருளிச் செய்தமையும், ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் பொழிப்புரையில் அதனை விரித் துரைத்தருளினமையும் காண்க.

திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்னும் ஞான நூல்கள் இரண்டனையன்றி, ஏனைய சாத்திர நூல்களுக்கெல்லாம் தாயகமாக வுள்ளது இச்சிவ ஞான போதமே. ஆகலின், ஏனைய சைவசித்தாந்த சாத்திர நூல்களைக் கற்றலாற் பெறும் பேறு இஃதொன்றனைக் கற்றலாற் பெறுதல் ஒருதலை என்பர் பெரியோர்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சைவசமயாசாரியர்கள் நால் ஒ[illegible]ம் சி[illegible]வருளினலே தமிழ்நாடு [illegible]தற்பொ[illegible]வதாரம் செய்தருளி [illegible]தாகமங்களை[illegible] ஒருங்குதிரட்டித் தேவார

திருவாசகங்களாகிய தமிழ் வேதங்களாக அருளிச் செய்தனர். அவை தோத்திர வடிவாம்.

அதன்பின் மெய்கண்டதேவநாயனார் திருவெண்காட்டடிகள் திருவருளினால் சாமுசித்தராய்த் திருவவதாரம் செய்து வேதாகமங்களினதும் தேவார திருவாசகங்களினதும் சாரத்திற் சாரமாயுள்ள சிவஞானபோதமாகிய இந்நூலைத் தமிழில் பெயர்த்துக் கூறியருளி வார்த்திகம் எனப்படும் பொழிப்புரையும், மேற்கோள் ஏது எடுத்துக் காட்டுக்களும் செய்தருளினர். இது சாத்திரவடிவாம்.

இத்துணைப் பெருமை வாய்ந்த இச்சிவஞான போதநூலுக்குச் செய்யுள் வடிவில் அமைந்த சிறந்த பேருரையே சிவஞான சித்தியார் என்பது. இப்பேருரையைச் செய்யுள் வடிவில் முதன்முதல் கண்டருளிய பெரியோர் ஸ்ரீ மெய்கண்டதேவநாயனாருடைய மாணவர் நாற்பத்தொன்பதின்மரில் முதல்வராகிய ஸ்ரீ அருணந்திதேவநாயனாரே ஆவார்கள். அதன்பின் அவ்வுரை உபதேச பரம்பரையில் பல பெரியோர்கட்குக் கிடைத்தது. ஸ்ரீ அருணந்திதேவநாயனார் ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனாருக்கும், அவர்கள் ஸ்ரீ உமாபதிதேவநாயனாருக்கும், அவ்வாசிரியர் ஸ்ரீ அருணமச்சிவாயருக்கும், அந்த ஞானாசிரியர் ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசருக்கும், அச்சித்த மூர்த்திகள் இவ்வாதீனத்துப் பிரதம பரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளுக்கும் பரம்பரையே உபதேசம் செய்தருளினர், அதன்பின் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளின் அருளுபதேசம் பெற்ற மூன்றாவது குரவர் ஸ்ரீ அம்பலவாண ந்த தனையுரை செய்தருளப்பட்டது. பி ரியவுரை முதலிய பல உரைநூல்க ப்பட்டன.

பின்பு, ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகராதீனத்துப் பதினொன்ருவது குருமூர்த்திகள் காலத்தில் ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளால் தமிழ்ச்சிவஞான போதமாகிய இந்தச் சாத்திர நூலுக்குச் சிற்றுரை பேருரைகள் செய்தருளப்பட்டன. சிவஞான போதத்துக்குச் சம்பிரதாயவுரை எனப்படும் பழைய வுரையும், சிற்றுரையும் இவ்வாதீன வெளியீடாக முன்பே வந்துள்ளன. சிந்தனையுரை இந்த வெளி யீட்டை யடுத்து ஆராய்ந்து அச்சிடவேண்டுமென ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் கட்டளையிட் டருளியது.

இப்பொழுது ஆராய்ந்து பதிக்கப்பெற்றுள்ள இவ்வுரை ஸ்ரீ பாண்டிப்பெருமாள் விருத்தியுரையாம். இவ்வுரை திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் காலத்துக்கு முந்தியது. இவ் விருத்தியுரை இயற்றியருளிய பாண்டிப்பெருமாள் சிவஞானபோதத்துக்கு ஒரு பதவுரையும் இயற்றி யிருக்கின்றனர் எனத் தெரிகின்றது. அப்பதவுரை யுட்சிற்சில பகுதிகளே கிடைக்கின்றன. முழுவதும் கிடைப்பது அரிது.

ஸ்ரீ பாண்டிப்பெருமாள் என்பவர் திருநெல் வேலிச் சீமையிலே தோன்றியவர். இவர் சைவ வேளாளர். திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடு துறை ஆதீனத்துச்சீடருள் ஒருவர் இவர். ஆயினும் இவர் இவ்வாதீனத்தை யடுத்து ஞானதீக்கை முதலியன பெற்றவரல்லர். சாஸ்திரோபதேசமும் இவ் வாதீனத்திலே பெற்றாரிலர். எனினும், மெய்கண்ட சந்தானத் [illegible] ம் பெற்றவர் என்பதில் [illegible] யமில் [illegible] ருரையால் அறியப்படும். [illegible]ம்பிரதாய திருட [illegible] அறிக.' 'சம்பிரதாய திட்டி

யால் அறிவித்தது' என அங்கங்கே குறிப்பிட்டுச் செல்கின்ருர் இவர். சம்பிரதாயம்—அநுக்கிரம். நல்லாசிரியரையடுத்து வடமொழி தமிழ் மொழிப் புலமை மிகுதியாகப் பெற்றவர். ஸ்ரீமெய்கண்டதேவ நாயனுரை உபாசனு மூர்த்தமாகக் கொண்டு சிவ ஞானம் கைவரப்பெற்றவர். மெய்கண்டதேவர் அருளால் இவ்வுரையை வரைந்தாரென்பது "மெய் கண்டான் பேரருளால் ஆராய்ந்துரை யெழுதினுன்" என வரும் உரைச் சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவஞானிகளும் புகழும் வண்ணம் இவர் இவ்வுரை செய்தார் என்பது" பழுதிரியும் உண்மைப் பாண்டிப் பெருமாள்—சிவஞான போதம் தெரியவுரை செய் தான் — தவஞானிகள் உணரத்தான்" என்னும் பகுதியால் தெளிவாம். சிவஞானபோதம் முதற் சூத்திரத்துக்கு உரை எழுதத் தொடங்கிய இவ்வா சிரியர் சிவஞானசித்தியார் அளவை இலக்கணம் 14 திருவிருத்தங்கட்கும் விரிவானவுரை முதற் கண் வரைந்துள்ளார். இதனைப் "பெத்தமறு பாண்டிப் பெருமாள்" என்னும் வெண்பா (70 பக்கம்) நன் குணர்த்தும்.

இவ்வாதீனத்திலிருந்து எழுந்த சிந்தனையுரை, சம்பிரதாய வுரை, சிற்றுரை, பேருரைகளிற்கண்ட சிவஞான போதச் சூத்திரங்களும், உதாரண வெண் பாக்களும் பல இடங்களில் இவ்வுரைகாரரால் வேறு பாடம்கொள்ளப்பட்டுஉரையும்வரையப்பெற்றுள.

காப்புச் செய்யுளில் 'பொல்லாரிணையடி' என்பர். சூத்திரம் (1) 'தோன்றிய [illegible]' (4) 'நின்றைந்த வத்தைத்தே' (5) 'அள[illegible]ந்த [illegible]) 'சத்தெதி ராதலின்' (8) 'தம்முதல்[illegible] 'அரன் கழ[illegible]

பெறுமே.' (11) 'காணவுளத்தை'...... 'அரன் கழல் தருமே' எனச் சூத்திர பாடங்களும் வேறுபட்டுள.

உதாரணவெண்பாக்கள் :— பக்கம்— 78, 108, 111, 135, 137, 143, 148, 150, 163, 167, 184, 192, 196, 201, 208, 225, 227, 229, 231, 236, 238, 245, 248, 255, 258, 266, 272, 273, 280, 284, 290, 297, 298, 299, 302, 305, 307 காண்க.

நூன்மரபு உணர்த்தும் 'எந்தை சனற்குமரன்' (பக்-309) என்றவெண்பாவும் பெரும் பகுதி வேறு பாடமாக வுள்ளது. இதற்கு உரையும் உண்டு.

சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுட்களிற் பல வேறுபாடம் கொள்ளப்பட்டு இவ்வுரையிற் காட்டப்பட்டுள்ளமையும் அறிக.

இனி, ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் அருளிய சிற்றுரை பேருரைகள் தமிழகத்துச் சித்தாந்த சைவர்களால் பெரிதும் பயிலப்பட்டுவர இப் பாண்டிப் பெருமாள் உரை அருகி மறையத் தொடங்கியது. இவ்வாதீனத்திலே சம்பிரதாய முறையில் ஞானசாத்திரங்கற்போர் ஆதீனத்து உரைகளையே கற்பது வழக்கம். ஆயினும், ஆராய்ச்சி செய்வோருக்குப் பாண்டிப் பெருமாள் உரையும் இன்றியமையாததேயாம். இதனையடுத்துத் தெளிபொருள் விளக்கவுரையும் சிவஞானபோதத்துக்கு அச்சிட்டு வைக்கப்பட்டுளது. இதனால், சிவஞான போதத்தைக் கற்கும் பெருவிருப்பினர் பலர்க்கும் பயன் பெரிதாம் என்[illegible] ஆகலின். பழையவுரை, சிந்தனையுரை[illegible] ளிபொருள் விளக்கவுரை முதலியவைகளை [illegible] ஒருசேரப்படித்தல் நலம்.

பாண்டிப் பெருமாள் விருத்தி, தெளிபொருள் விளக்கவுரை ஆகிய இரண்டும் எழுதிய கையெழுத்துக் காகிதப் பிரதியொன்று இவ்வாதீனத்துக் கல்விக் களஞ்சியத்தில் இருந்தது. இதனை எழுதியுள்ள பெரியார் ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் ஆவார். சுமார் 68 ஆண்டுகளின் முன் அச்சிட்ட பாண்டிப் பெருமாள் விருத்தியும் இப்புத்தகத்தை ஆராய்ந்து அச்சிடுவதற்குப் பெரிதும் துணை செய்தது.

இத்தெளிபொருள் விளக்கவுரை அச்சிட்டு முடியுங்காலத்தில் என் இளவல் சிரஞ்சீவி T S. இராசகோபால பிள்ளை 'சைவம்' பத்திரிகையில் 1915–16 ஆம் ஆண்டில் முன்பு இது வெளிவந்ததாக அறிவித்துத் தாம் தொகுத்துள்ள பிற்பகுதிகளை அநுப்பியுபகரித்தார். அவை ஒத்திருந்தன. மயிலாப்பூர் — சைவத்திரு. ஜெம்புலிங்கம் பிள்ளையவர்கள் அன்பளிப்பாக ஜெய ஆண்டுப்பிறப்பில் அநுப்பியுள்ள (5—4—54) ஞானபாநுப் பத்திரிகைத் தொகுப்பு (1895) இரண்டாம் முறைப்பதிப்புப் புத்தகத்தில் சிறிது வேறுபாட்டுடன் சிவஞான போத நுட்பம் என்னும் பெயரால் மூன்று சூத்திரங்கட்கு மட்டும் இவ்வுரை வெளிவந்திருக்கக் கண்டேன். அவ்விருவருக்கும் என்நன்றியுரித்தாகுக.

ஸ்ரீ மெய்கண்டசாத்திரப் பிரதிட்டாசாரிய மூர்த்திகளாய் இவ்வாதீனத்தில் இப்பொழுது இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானமாக விளங்கி வீற்றிருந்தருளும் ஸ்ரீ–ல–ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் பெருங்கருணை[illegible]ந்த சாத்திரங்கள் பதினான்கும் சிறந்த [illegible] இவ்வாதீன வெளியீடுகளாக அச்சிட்டு [illegible]ன்றி வழங்க[illegible]

பட்டுள. சித்தாந்த சைவ வுலகம் அவைகளை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

ஒன்றுக்கும் பற்றாத எளியனேனையும் ஆட்கொண்டருளி இப்பணி விடையையும் ஏற்றருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவடித்தாமரைகளை அடியேன் எக்காலத்தும் சிந்தித்து-வந்தித்து-வாழ்த்துகின்றேன்.

பெரியோர் இதன்கண்ணுள்ள குற்றங்களைப்
பொறுத்தருளுவாராக.

இங்ஙனம்,

*சித்தாந்தசைவமணி—*

*திருவாவடுதுறை* 20—10—55.

**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**

*ஆதீன வித்துவான்.*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பொருளடக்கம்

எண் — பக்கஎண்



## 1. பொதுவியல்பு (அ) பிரமாணவியல்

1. முதற்சூத்திரம் :



ஸ்ரீ மெய்கண்டதேவர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம்
# பாண்டிப்பெருமாள்விருத்தியுரை

விநாயகர்துதி

**கல்லா னிழன்மலை**
**வில்லா ரருளிய**
**பொல்லா ரிணையடி**
**நல்லார் புனைவரே.**

இதன் பொருள்

*கல் ஆல் நிழலார் — கல்லாலினுடைய நிழலிலே எழுந்தருளியிருந்தவர்,—*

*எனவே, தம்மை வழிபட்டவர்களை அநுக்கிரகிக்கை காரணமாகச் சரியை கிரியா யோக ஞானமாகிய ஆகமங்களை அருளிச்செய்தவர் என்பதாம்.*

மலை வில்லார் — மகாமேருவாகிய மலையை வில்லாக வளைத்தவர்,—

எனவே, தம்மை வழிபடாதவர்களை நிக்கிரகித்தவர் என்பதாம்.

'ஆர்' என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக.

அருளிய பொல்லார் — அவரால் அருளப்பட்ட பொல்லாத பிள்ளையார் என்னும் திருநாமத்தையுடைய மூத்த நாயனார்,—

இணை அடி நல்லார் புனைவர் ஏ — அவருடைய இரண்டு சீபாதங்களையும் அறிவாலுயர்ந்த தவங்களையுணர்ந்த ஞானவான்கள் சூடுவார்கள் என்றவாறு.

எனவே, சிட்டரை அநுக்கிரகித்தும், துட்டரை நிக்கிரகித்தும் செய்ய வல்லவரே கர்த்தா என்பதாம்.

ஆகலால், அவரால் அருளப்பட்ட மூத்த நாயனாரும் அத்தன்மையர் என்றாயிற்று. அது வழிபடுவோருடைய பாசத்தை நிக்கிரகித்து, மோட்சத்தை அநுக்கிரகிப்பர் என்னும் பொருட்டாயிற்று.

ஞானவான்கள் அவருடைய சீபாதங்களைப் புனைவார்கள் எனவே யாமும் அது செய்யக் கருதினம் என்பதாயிற்று.

# சிறப்புப்பாயிரம்

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருள்தீர்ந்
தருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

*என்பது பாயிரம்.*

**"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே."**

*என்பவாகலின், பாயிரமுரைத்தே நூல் உரைக்கற் பாற்று.*

*பாயிரமாவது நூற்கு இன்றியமையாதது.*

*அது பொதுப்பாயிரம் எனவும், சிறப்புப்பாயிரம் எனவும் இருவகைப்படும். பொதுப்பாயிரமாவது — எல்லா நூற்கும் பொதுவாய் வருவது. சிறப்புப்பாயிர மாவது — தன்னால் உரைக்கப்படும் நூற்கு இன்றி யமையாதது.*

## பொதுப்பாயிரவிதி

*அவற்றுள் பொது நான்கு வகைப்படும்.*

*அவை கற்பிக்கும் ஆசிரியனது முறைமையும், அவன் கற்பிக்கும் முறைமையும், அதற்கு மாணாக்கன் இயல்பும், அவன் கற்கும் முறைமையும் ஆம்.*

**"ஈவோன் தன்மை ஈதல் இயற்கை**
**கொள்வோன் தன்மை கோடல் மரபென**
**ஈரிரண் டென்ப பொதுவின் தொகையே."**

*என்பவாகலின்.*

*கற்பிக்கும் ஆசிரியரும் இருவகையார், கற்கப்படுவோரும் கற்கப்படாதோரும் என. அவருட் கற்கப் படுவோர் நான்கு வகைப்படுவர்.*

**"மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்**
**உலைவில் உணர்வுடை யோர்."**

'மலைபோல்' *என்பது: தான் கூறிய பொருளைப் பிறன் ஒருவன் திரிவுகாட்டிய வழி நிலைகுலையாது திரிவு படாமற் கூறுதல்.*

'நிலம்போல்' *என்பது: தான் கூறிய பொருளைப் பிறன் ஒருவன் திரிவுகாட்டியவழி ஆண்டு வெகுளாது அறிவுறுத்தலும், தன்னை வழிபட்டாற்குத் தக்க கற்பித்தலும்.*

'பூப்போல்' *என்பது: கேட்டோர்க்கு இன்பம் பயக்குமாறு கூறுதலும், மற்று இதற்கு எளிதாக மெல்லியவாகக் கூறுதலும்.*

'துலாக்கோல்போல்' என்பது: இருவர் ஆசிரியர் தம்முள் மாறுபட்டு வினவியவழி அதனது நிலைமையைத் துணிந்து கூறவல்லவனாதல்.

இன்னும் "மலைநிலம் பூவே துலாக்கோல்" என்றதனால் நிலைமையும், பொறையுடைமையும், மெல்லியனாதலும், நடுவுநிலைமையும் ஆகிய ஒழுக்கமும் கொள்க.

கற்கப்படாதோரும் நால்வகையர் :—

**"கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு**
**குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப."**

'கழற்பெய் குடம்போல்' என்பது : சொரியுங் காலத்து ஒருங்குவிழும். அதுபோல, கொள்வோன் உணர்வு சிறிதாயினும் தான் கற்றதெல்லாம் ஒருங்குரைத்தல்.

'மடற்பனைபோல்' என்பது: ஆசாரியன் உணர்வுடையன் ஆயினும் கற்பார்க்குக் கிட்டுதல் அருமை.

'முடத்தெங்குபோல்' என்பது: தன்னைப்போற்றுவாரிடத்துப் பழம் விழாது பிறர்மனைக்கண் வீழ்த்தும். அதுபோல, வழிபடுவோர்க்குப்பயன்படாது பிறர்க்குப் பயன் படுதல்.

'குண்டிகைப் பருத்திபோல்' என்பது: குடத்தின் கண் இட்ட பருத்தி ஒருங்குகொள்ளக் கருதுவார்க்குச் சிறிதேயொழிய வாங்குதற்கு அருமை போல, உணர்வுடையோர்க்குச் சிறிதே உரைத்தல்.

'ஈதல் இயற்கை' என்பது: ஆசிரியன் கற்பிக்கும் முறைமை.

"ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பிற்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்."

இதன்கண் 'பொழிப்பு' என்பது: தொகுத்துரைத்தல். 'அகலம்' என்பது: விரித்துரைத்தல். 'நுட்பம்' என்பது: கடாவிடை கூறுதல். 'எச்சம்' என்பது: கடாவறத் துணிந்த பொருள்.

"பாடம் கண்ணழி வுதாரணம் என்றிவை
நாடிற் றிரிபில ஆகுதல் பொழிப்பே."

"தன்னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய அகலம் என்மனார் புலவர்."

"ஏதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம்."

"துடைத்துக்கொள் பொருளே எச்சம் என்ப."
என்பவற்றாற் கொள்க.

'மதி' என்பது: திங்கள், (நாள் – கிழமை) நாள், பக்கம், கரணம், யோகம் என்ற ஐந்தாம். எனவே, அவற்றிற் பொருந்தும் திங்களும், பொருந்தும் நாளும் என்றதாம்.

*கொள்வோன் தன்மை இருவகைப்படும். கற்பிக் கப்படுவோரும் கற்பிக்கப்படாதோரும் என. அவருட் கற்பிக்கப்படுவோர் :—*

**"அவர்தாம்,**
**தன்மகன் ஆசான் மகனே மன்மகன்**
**பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே**
**உரைகோ ளாளனோ டிவரென மொழிப."**

*இதனோனே அறுவகையர் என்று கொள்க.*

*இனி, கற்பார் இயல்பு:—*

**"அன்னம் கிளியே நன்னிற நெய்யரி**
**யானை ஆனே றென்றிவை போலக்**
**கூறிக் கொள்ப குணமாண் டோரே."**

*'அன்னம்போல்' என்பது: பாலும் நீரும் கலந்த வழி நீருண்ணாது பாலுண்ணும்: அதுபோல, பல்லுரை கேட்டவழி நல்லுரை கொள்ள வல்லனாதல்.*

*'கிளிபோல்' என்பது: அது சொல்லிற்றுச் சொல்லும்: அதுபோல, ஆசிரியன் கூறியது பிறழாமற் கூறியது.*

*'நன்னிறம்போல்' என்பது:*

**"எந்நிறம் தோய்தற்கும் ஏற்ப தாதல்**
**நன்னிறத் தியல்பென நாடினர் கொளலே."**

*'நெய்யரிபோல்' என்பது: பன்னாடை, அது நெய் யினையேற்றவழிக் குற்றமுள்ளது மேலே தோற்று விக்கும். அதுபோல, கேட்டவற்றுள் குற்றமுள்ளன எடுத்து விளவ வல்லனாதல்.*

'யானைபோல்' என்பது: யானை ஒருவன் செய்த தனை மறவாது, அதுபோல் கற்றது மறவாமை.

'ஆனேறுபோல்' என்பது: ஓசை கேட்கும் வழி அதன்மேல் ஒருப்பட்ட உள்ளத்ததாய்க் கேட்கும், அதுபோலக் கேட்குங்கால் ஒருப்பட்ட உள்ளத்தனாய்க் கேட்டல்.

இனி, கற்பிக்கப்படாதார் எண்வகையராம்:—

**"மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்**
**அடுநோய்ப் பிணியாளன் ஆறுச் சினத்தன்**
**தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்**
**நெடுநூலைக் கற்கலா தார்."**

என்பதனால் அறிக.

கல்லாதார் இயல்பு :—

**"குரங்கெறி விளங்காய் எருமை யாடே**
**தோணி யென்றுங் கிவையென மொழிப."**

'குரங்கெறி விளங்காய்போல்' என்பது: விளாவின் கண் குரங்கு இருந்தவழிக் காய்கோடலால் தான் கல்வி ஞன் அதனை எறிய, அது விளங்காய்கொண்டு எறியும் அது பெற்றாற்போல, வழிபட மொழிந்துகொள்ளாது ஒரு பொருளைக் கடாவிக்கேட்டால் அவ்வழி அவன் கூறிய உரையைத் தனக்குப் பொருளாகக்கோடல்.

'எருமைபோல்' என்பது: ஒரு குளத்தில் தண்ணீர் உண்டால் அதனைக் கலக்குமாறுபோல, பொருள் கேட்டோன் அதனைத் திரிவுசொல்லிக்கொள் ளாமை.

*'ஆடுபோல்' என்பது: தனக்கு வயிற்றுக்கு ஒரு தூற்றிலே கறிக்கலாயினும் பல தூற்றினும் சென்று கறிக்கும். அதுபோல, ஓர் நூலைக் கற்கக் காணாது பல நூலும் கற்க முயறல்.*

*'தோணிபோல்' என்பது: தானாக இயங்கமாட்டாது இயக்குவார் வழி இயங்குமாறுபோல, ஆசிரியன் சொன்னபொழுது வல்லனாய் அவனது நீக்கத்துக் காணமாட்டாமை.*

**"செவ்வன்தெரிகிற்பான்மெய்ந்நோக்கிக்காண்கிற்பான்**
**பல்லுரையும் கேட்பான் மிகப்பெரிதும் காதலான்**
**தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்**
**இவ்வாறு மாண்பு முடையாற் குரைப்பவே**
**செவ்விதின் நூலைத் தெரிந்து."**

*இதனான் அறிக.*

*இனிக், கோடன்மரபு வருமாறு :—*

**"கோடன் மரபு கூறுங் காலைப்**
**பொழுதொடு சென்று வழிபடன் முனியான்**
**முன்னும் பின்னும் இரவினும் பகலினும்**
**அகலா னாகி அன்பொடு புணர்ந்தாஅங்**
**காசற உணர்ந்தோன் வாவென வந்தாஅங்**
**கிருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்**
**போவெனப் போகி நெஞ்சு களனாகச்**
**செவிவா யாகக் கேட்டவை கேட்டவை**
**வல்ல னாகிப்**
**போற்றிக் கோடல் அதுவதன் பண்பே."**

"எத்திறம் ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே."

"அனைய நல்லோன் கேட்குவ னாயின்
வினையி னுழப்பொடு பயன்றலைப் படாஅன்."

"ஆசான் உரைத்தவை அமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல வாகும்."

"அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருபால்
செவ்வித னுரைப்ப அவ்விரு பாலும்
மையறு புலமை மாண்புநனி யுடைத்தே."

*இவற்றானும் அறிக.*

## சிறப்புப்பாயிரவிதி

*இனிச் சிறப்புப்பாயிரமாவது :—*

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே."

"காலம் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே."

*என்பனவற்றால் பதினொரு வகைப்படும்.*

*ஆக்கியோன் பெயர் என்பது : நூல் செய்த ஆசிரியன் பெயர்.*

*வழி என்பது: இன்னதன் வழித்தோன்றல்.*

எல்லை என்பது: வழங்கும் எல்லை கூறுதல்: நூலி னது அளவு கூறலும் ஆம்.

நூற்பெயர் என்பது: நூலின் பெயர்கூறுதல்.

யாப்பு என்பது:

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழி பெயர்த்தல்" என நான்கினுள் ஒன்றை யாத்தல்.

நுதலிய பொருள் என்பது: கற்றதனாற் பயனாகிய வீடு கூறல்.

காலம் என்பது: நூல் தோன்றிய காலம் கூறல்.

களன் என்பது: தோன்றிய இடம் கூறல்.

காரணம் என்பது: நூல்செய்தற்குக் காரணம் கூறல்.

அவை இந்நூலகத்து வருமாறு பாயிரச் சூத்திரப் பொருளுரைப்ப விளங்கும்.

## பாயிரப்பொருள்

மலர் தலை உலகின் மா இருள் துமிய பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதை காண்டல் செல்லா கண் போல் — இடமகன்ற உலகின்கண் உண்டாய மகத் தாகிய இருள் நீங்கப் பல சமயத்தாராலும் புகழப்பட்ட ஆதித்தன்வரின் அல்லது காட்சியை யுடைத்தாகாத கண் போல,—

ஈண்டிய பெரும் பெயர் கடவுளில் கண்டு கண் இருள் தீர்ந்து அரு துயர் குரம்பையின் ஆன்மா நாடி — எங்கும் தானாகி நிறைந்த பெரிய பெயரையுடைய கர்த்தாவாலே (தன்னுடைய இச்சா ஞானக் கிரியை யாகிய சைதன்னியத்தைக் காட்டும் அக்கினியும் போல மறைத்து நிற்பதான) அஞ்ஞானம் ஆகிய மூல மலம் தீர்ந்து, அரிய துயரத்தையுடைய (புண்ணிய பாவங்களால் செறியப்பட்ட) உடம்பிலே ஆன்மாவை ஆராய்ந்து கண்டு,—

ஒன்றினொன்று தோன்றிவருதலையுடைய பஞ்ச பூதக்கூட்டரவை 'மலர்தலை யுலகு' என்றார். உலகத்தை மறைத்து நின்ற இருள் ஆதித்தனாலே போனவிடத்துக் கண்ணுக்குப் பிரகாசமுண்டாய், அந்தப் பிரகாசத்தி னாலே காட்டின ஆதித்தனையும், மறைந்து நின்ற பிரபஞ்சத்தையும், மறைத்த இருளையும் கண்டாற்போல, ஆன்மாவும் தன்னை மறைத்து நின்ற மூலமலம் கர்த்தா வினுடைய திருவருளாலே போன இடத்து ஞானக் கண்ணுடைத்தாய், அந்த ஞானக்கண்ணாலே காட்டின கர்த்தாவையும், மறைந்து நின்ற தன்னையும், மறைத்த மூலமலத்தையும் காண்டலின் 'கடவுளிற்கண்டு' என்றார். எல்லாப்பெயரையும் கடந்து அப்பாலாய் நிற்றலால் 'பெரும்பெயர்க்கடவுள்' என்றார். அன்றியும் பதியே ஆசாரியனாய் வருகின்ற முறைமையால் பெரிய பெயரை யுடைய ஆசாரியனாலே கண்டு என்றுமாம். ஆன்மா நாடிக்கண்டு எனவே, பதிஞானத்தாலே பாசத்தை நீக்கி ஆன்மாவைக் காண வேண்டுகையால் பதி பசு பாசத்தினுடைய உரூபம், சொரூபம், சுபாவம், வியாத்தி

வியாபகமும், தரிசனமும், பதிசத்திசாலங்களினாலே பஞ்சகிருத்தியம் பண்ணுகின்ற முறைமையும், அவையிற்றினாலே ஆன்மாக்கள் தொழிற்பட்டு வருகின்ற முறைமையும், அவைதாம் ஆன்மாக்களுக்குக் கிருத்தியப்படுகின்ற முறைமையும், பின்பு சத்திநிபாதம் உண்டாம் முறைமையும், பலபிரகாரங்களாகிய முத்தி இலக்கணங்களும், அவையிற்றில் பரமுத்தியே முத்தி என்னும் முறைமையும் ஆராய்ந்து கண்டு என்றார்.

மயர்வு அற — மயக்கமற,—

அது நூல் பின்னொடு முன் மலையாமல் என்றதாம்.

நந்தி முனிகணத்து அளித்த உயர் சிவஞான போதம் உரைத்தோன்—ஸ்ரீநந்திகேசுரர் இருஷிகணங்களில் சனற்குமாரபகவானுக்கு (பரமேசுரன் தமக்கு அருளிச்செய்த) மிக்க சிவஞானபோதத்தை அருளிச் செய்தவன்,—

முனிகணமாவார் :— அகத்தியன், புலத்தியன், சனகன், சனாதனன், சனந்தனன், சனற்குமாரன், குசிகன், குற்சன், வான்மீகன், வாமதேவன், வைசம்பாயன், தும்புரு, வியாதன், வசிட்டன், விசுவாமித்திரன், சித்திரசேனன், யதுதீரன், கோதமன், கவுதமன், அசீராகன், கௌருகன், காலவாச்சியன், வஞ்சமன், அங்கிசமன், குருகபாலீசன், துருவாசன், தைப்பியதமன், நாரதன், நாராயணன், பாரத்துவாசன், கபிலன், கண்ணன், காசிபன், காவேடன், பராசரன், மார்க்கண்டேயன் என்று சொல்லப்பட்ட இவர் முதலாயினார்.

இந்நூல் வந்த முறைமை :—

"போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே
பொருந்திஞே ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறி யெனுமவர்கட் கறிய முன்னாள்
இறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக்
குவலயத்தி னவ்வழியெங் குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே."
(*சிவஞானசித்தி—பரபக்க—செய்—9*) *என்பதனுலறிக.*

*இந்தச் சிவஞானசித்தி இந்நூலின் வழிநூல் ஆத லான் மேலும் இவ்வாறு காட்டும் பொருள் உணர்க.*

*பெண்ணை புனல் சூழ் வெண்ணெய் சுவேதவனன் — பெண்ணையாற்று நீரால் சூழப்பட்ட வெண்ணெய் நல்லூரில் அவதரித்த சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமத்தையுடையவன்,—*

*பொய் கண்டு அகன்ற மெய்கண்ட தேவன் — அசத்தை அசத்தென்று கண்டு சத்தைத் தரிசித்த மெய்கண்டதேவன் என்னும் சிறப்புப் பெயரையுடைய வன்,—*

*பவம் நனி வன் பகை கடந்த தவர் அடி புனைந்த தலைமையோன் ஏ — பிறவியாகிய வலிய பகையை வென்ற (ஸ்ரீநந்திகேசுரதேவர், சனற்குமாரபகவான், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதிமாமுனிகள் என் னும்) தபோதனர்களுடைய சீர் பாதங்களைச் சூடின மேம்பாட்டையுடையவன் என்றவாறு.*

எனவே, பரமேசுவரன் ஸ்ரீநந்திகேசுரதேவற்கு அருளிச்செய்து தொகுத்துரைத்த பன்னிரண்டு கிரந்தத்தையும் பன்னிரண்டு சூத்திரமாக மொழி பெயர்த்துப் பொல்லாத பிள்ளையார் பிரதிபட்சத்தருளிச் செய்ய, அதற்கேற்ற உதாரண வெண்பா, அவையடக்கம் ஒன்றுடன் எண்பத்து மூன்றாக அருளிச் செய்தவர் என்பதாம்.

மொழி பெயர்த்தல் — கிரந்தத்தைத் தமிழாகச் செய்தல்.

## பொழிப்புரை

இடமகன்ற உலகின்கண் மகத்தாகிய இருள்போக யாவரும் புகழப்பட்ட ஆதித்தன்வரின் அல்லது காட்சி யுண்டாகாத கண் போல, எங்கும் நிறைந்து நின்ற பெரிய பெயரையுடைய கர்த்தாவாலே கண்டு, தன்னிடத்து உண்டாகிய மூலமலத்தைக் கெடுத்து, அரிய துயரையுடைய உடப்பிலே ஆன்மாவை ஆராய்ந்து கண்டு, பின்னொடுமுன் மலையாமல் நந்திகேசுரர் இருஷி கணங்களிற் சனற்குமார பகவானுக்கு அருளிச்செய்த சிவஞானபோதத்தைத் தமிழாக அருளிச் செய்தவன்; சுவேதவனன் ஆகிய மெய்கண்டதேவன்; தவராடி புனைந்த தலைமையோன் (எ — று.)

**"தோன்று தோன்றித் துறைபல முடிப்பினும்**
**தான்தற் புகழ்தல் தகுதி யன்றே."**

என்பதனால், நூல்செய்தவன் பாயிரம் செயற்பாலன் அல்லன். அது செய்வார் தன் ஆசிரியனாதல், மாணாக்கனாதல், தன்னோடு ஒருங்கு கற்றோன் ஆதலாம். தான்

செய்யினும் பிறன்போலக் கூறல் வேண்டும். அதனால், இந்தப் பாயிரம் செய்தார் யாவர்? என்னில், அவர் மாணுக்கராகிய, இதன் வழி சிவஞானசித்தி என்னும் நூலைச் செய்தாரும், நாற்பத்தொன்பது பெயரில் சண்டைத் தலைவன் நாயனுருமாகிய அருணந்திதேவ தம்பிரான்.

இதனுள், சிறப்புப்பாயிரம் பதினொன்றும் வருமாறு :—

1. ஆக்கியோன் பெயர் — சுவேதவனப் பெருமாளாகிய மெய்கண்டதேவன்.
2. வழி — நந்தி முனிகணத்தளித்தது.
3. எல்லை — கேட்போரது பொருண்முடிவு.
4. நூற்பெயர் — சிவஞானபோதம்.
5. யாப்பு — மொழி பெயர்த்தல்.
6. நுதலிய பொருள்-பதி பசு பாசங்கள் உணர்த்தல்.
7. கேட்போர் — பொல்லாத பிள்ளையார்.
8. பயன் — சுவாநுபூதியாக நேயத்தழுந்தல்.
9. காலம் — சத்தி நிபாதம் நிகழ்தல்.
10. களன் — திருவெண்ணெய்நல்லூர்.
11. காரணம் — போதமிகுத்தோர் தொகுத்த பேதைமைக்கே பொருந்தினர் இவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல ஏது நெறியெனுமிவர்கட் கறிய உணர்த்துதல்.

இத்தனையும் பாயிரம் உரைக்கப்பட்டது.

**சிறப்புப்பாயிரம் முடிந்தது.**

---

# அவையடக்கம்

*வெண்பா*

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமையிகழார் — தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

இதன்பொருள்

*தம்மை உணர்ந்து — தம்மை (த் தம்முடைய தேகத்துக்கு அந்நியம் என்பதனை) அறிந்து,—*

*இது ஆன்மதரிசனம்; ஆன்மதரிசனம் பண்ணுமிடத்துப் பாசதரிசனமும் கூறினாராயிற்று.*

*தமை உடைய தன் உணர்வார்—தம்மை அடிமையாகவுடைய சிவனையும் அறிவார்,—*

*இது சிவதரிசனம்: எனவே, பதி பசு பாசங்களையுணர்ந்த ஞானவான்கள் என்பதாயிற்று.*

*எம்மை உடைமை எமை இகழார் — (அவர்கள் சுவாநுபூதியாகிய ஞேயத்து அழுந்திச் சிவனோடு ஒன்றுபட்டவர்கள் ஆதலால்) எம்மை அடிமையாக உடையவர்கள்; யாம் சொல்லும் நூலுக்குக் குற்றம் சொல்லார்,—*

*தம்மை உணரார் உணரார் — அத்தன்மையாகிய தம்மை அறியாதவர்கள் (பாசபந்தியாய் நிற்கின்ற*

முறைமையும், அந்தப் பாசம் நீங்கிச் சிவன் உண்ணின்று உணர்த்துகின்ற முறைமையும்) அறியார்கள் ஆகையால்,—

உடங்கு இயைந்து தம்மில் புணராமை கேளாம் புறன் — அவர்களுடன் கூடிப் பொருந்தியிராதபடியாலே அவர்கள் வாக்கால் குற்றம் கேட்பதில்லை என்றவாறு.

என்றது, வேதாகம புராணங்களின் பொருள் உணர்ந்த ஞானவான்கள் இந்த நூலில் குற்றம் உண்டாயினும் குற்றம் தீர்ந்து கொள்வர் என்றும், உலக நூலை உணர்ந்தோர்க்கு இப்பொருள் தெரியாமையால் அவர்கள் சொல்லும் குற்றம் குற்றமில்லை என்றும், இந்நூல் ஞானவான்களுடன் அல்லது பிறருடன் கூறுவதாகாது என்றும் உணர்த்தவே அவையடக்கம் உணர்த்தினாராயிற்று.

இது கர்னபரம்பரையாய்க் குருபரம்பரையாய் வரும் நூல் ஆதலால் இந்தச் சந்தானத்தார்க்கு அன்றிப் பிறர்க்கு இப்பொருள் தெரியாது என்பதூஉம் கூறினார் என உணர்க.

**அவையடக்கம் முடிந்தது.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## பொதுவியல்பு – பிரமாணவியல்

# முதற்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பொதுவியல்பு

## பிரமாணவியல்

### முதற்சூத்திரம்

**அவனவள் அதுவெனும் அவைமூ வினைமையின்**
**தோன்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்.**

கருத்து

*பிரபஞ்சம் மாயாமலத்திலே தோன்றி ஒடுங்கும் என்பதூஉம், அது ஒரு கர்த்தாவாலொழிந்து உண்டாகாது என்பதூஉம் கூறுகின்றது.*

## இதன்பொருள்

*அவன் அவள் அது எனும் அவை — அவனென்றும் அவளென்றும் சுட்டப்பட்ட உயர்திணையும், அது என்று சுட்டப்பட்ட அஃறிணையும் ஆகிய அவை,—*

*மூ வினைமையின்—சிருட்டி திதி சங்காரம் ஆகிய மூன்று தொழிலையுடைத்தாகி வருதலாலே,—*

*தோன்றிய திதியே ஒடுங்கி மலத்து உளது ஆம் — (மாயாமலத்தின் கண்ணே) தோன்றி நின்ற முறைமையே ஒடுங்கி மீளவும் உண்டாம்,—*

*அந்தம் ஆதி என்மனார் புலவர் — (அத்தொழில்கள் தானே உண்டாகாது; அதற்குக் கர்த்தா ஒருவன்) அந்தத்தின் உள்ளான் என்று சொல்வார்கள், வேதாகமபுராணங்களை உணர்ந்த ஞானவான்கள் என்றவாறு.*

*ஆதி – கர்த்தா, அந்தம் – அந்தத்தின் உள்ளான்; என்பது எக்காலத்தும் அழிவுபடாத சிற்சொரூபத்தையுடையான் என்றதாம். சங்காரகர்த்தா என்றும் ஆம்.*

"ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னொருவன் வேண்டும் தான்முத லீறு மாகி
மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே."
(சித்தியார் சுபக்கம் சூத் – 1, செய் – 1.)

*என்னும் வழிநூலானும் உணர்க.*

*இப்பொருள் சாத்திரத்தானும், சம்பிரதாயத்தானும், அளவைப் பிரமாணங்களானும் உணர்த்துமாறு அறிக.*

*சாத்திரமும் சம்பிரதாயமுமே அன்றி, அளவை என்பது என்னை? எனின், சாத்திரமும் அளவைகளை யொழிந்து உணர்த்தமாட்டாது; ஆதலின், அது நாற்கு இன்றியமையாதது.*

**உதாரணம்**

"அருளினு லாக மத்தே
அறியலாம் அளவை யாலும்
தெருளலாம் சிவனை ஞானச்
செய்தியால் சிந்தை யுள்ளே
மருளெலாம் நீங்கிக் கண்டு
வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்க லாகும்
அடியரோ டிருக்க லாமே."

எனவும், (சித்தி — சுப — பாயி — 5 — செ.)

" மறையினால் அயனால் மாலால்
மனத்தினால் வாக்கால் மற்றும்
குறைவிலா அளவை யாலும்
கூறொணா தாகி நின்ற
இறைவனார் கமல பாதம்
இன்றியான் இயம்பும் தன்மை
நிறையினார் குணத்தோர்க் கெல்லாம்
நகையினை நிறுத்து மன்றே."

எனவும், (சித்தி—சுப—பாயி—செ—4.)

*அளவைப் பிரமாணங்கள் இன்றியமையாமல் வருமாறு காண்க. அளவை இதன் வழிநூலான் வந்தவாறு உணர்க.*

அளவை வருமாறு:—

சிவஞானசித்தியார்

**"அளவை காண்டல் கருதலுரை**
**அபாவம் பொருளொப் பாறென்பர்**
**அளவை மேலும் ஒழிபுண்மை**
**ஐதி கத்தோ டியல்பெனநான்**
**களவை காண்பார் அவையிற்றின்**
**மேலும் அறைவர் அவையெல்லாம்**
**அளவை காண்டல் கருதலுரை**
**என்றிம் மூன்றின் அடங்கிடுமே."**

இதன்பொருள்

*அளவை — அளவைப் பிரமாணமாவது,—காண்டல் — பிரத்தியட்சம் [பிரதி அட்சம் = பிரத்தியட்சம். அட்சம் — இந்திரியம், பிரதி — விஷயம். எனவே, இந்திரிய விஷயம்],—*

*அதாஃவது கண் செவி வாய் மூக்கு மெய் இவ்வைந்து இந்திரியங்களும் தத்தமக்கு விஷயமான உருபம் சத்தம் இரதம் கந்தம் பரிசம் இவையிற்றை உணர்தல். (அக்ஷம் — கண்: பிரதி — அது காண்கின்ற ஒளி எனினுமாம்)*

*கருதல் — அநுமானம்,—*

*அஃதாவது அநுமானத்தாலே தோற்றும் அநுமேயத்தை அறிதல்.*

*உரை — ஆகமம்,—*

*இவை மூன்றும் மேல் விரித்துரைப்பதனால் அறிக.*

அபாவம் — அபாவம் [பாவம் – உள்ளது. அபாவம் – இல்லாதது] அது இல்லதனை இல்லை என்றல்,—

அஃதாவது உலகத்தார் இல்லை என்று மதித்த பொருளைத் தானும் இல்லையென்று கோடல். அஃது என்போல? என்னில், முயற்கோடு இல்லை என்றவழி அதனை உண்டோ என்று மயங்காமல் தானும் இல்லையென்று கோடல். அது சித்தினிடத்து அசித்து உதியாது என்றால் அஃது ஒக்கும் என்று கோடல்.

பொருள் – அருத்தாபத்தி,—

அஃதாவது கங்கையிலே இடைச்சேரி இருப்பதென்றால் ஆற்றுக்குள் என்று உணராமல் அதன் கரையிலே என்று உணரலாம். அது உடம்பு அறியும் என்றால் உடம்பு சடம் ஆகையால் அறியாது; உடம்பினுள்ளே ஆன்மா நின்று அறிகின்றது என உணர்தல்.

ஒப்பு—உவமம்: உவமானம் என்பதூஉம் அது,— [உவமம் — ஒன்றோடொன்றை ஒப்புறுத்தல்]

அஃதாவது ஆமாவை ஆப்போன்று இருக்கும் என்று கேட்டவன் அதனைக் காட்டகத்துக் கண்டபொழுது அந்த ஆவோடு உவமித்து உய்த்துணர்தலாம். அது சாத்திர சம்பிரதாயங்களால் கேட்ட பொருளை உவமையால் அறிதல். அன்றியும், உவமம் காட்டி உரைப்பினுமாம். அஃது இன்னது, இன்னது போலும் என்றலாம். மாயையும் பூதாதியும் மண்ணும் கடமும் போலும் என்றும், ஆன்மாவும் மூலமலமும் செம்பும்

காளிதமும் போலும் என்றும், பதியினுடைய கிருத்தி யம் ஆதித்தனைப் போலும் என்றும் பொருள் உரைப் பினும் அமையும்.

ஆறு என்பர் அளவை—அளவை ஆறும் ஒருவர் சொன்ன அளவை என்று சொல்லுவார்கள்,—

மேலும் — இவை யொழிந்தும்,—

ஒழிபு — மீட்சிமொழி (பாரிசேடம்),—

அஃதாவது கீழைச்சேரி தோற்ற தென்றால், மேலைச்சேரி வென்றதென்பது சொல்லாமல் உணர்தல். அஃது ஒருவன் முத்திபெற்றான் என்றால், பாசச்சேத னம் பண்ணினான் என்பது சொல்லாமல் அறிதல்.

[பாரிசேஷமாவது: பாரித்துச் சேஷித்தல் – கூட் டிக்கழித்தல்] அஃதாவது மூவர் இருந்தவிடத்தே ஒரு களவை நாடில், நாங்கள் இருவரும் அல்ல என் றால், நின்றவன் கள்வன் ஆவான். அது போகம் பதி பசு பாசங்களில் யாதுக்கோ ? என்றவழிப் பதிக்கு மன்று, பாசத்துக்கும் அன்று என்றால், பசுவுக்காம் என அறிதல்.

உண்மை — சம்பவம்,—

அஃதாவது ஒருகல் இரும்பை ஈர்க்குது என்றால் அது காந்தம் என அறிதல். ஒருவன் சந்நிதியிலே பிரபஞ்சம் கிருத்தியப்பட்டு வருகுது என்றால், அவன் நித்த முத்த சுத்தனாகி நிராதாரனாகிச் சிற்சொரூபனாகி யிருக்கின்ற பரமேசுவரன் என அறிதல்.

ஐதிகம் — ஐதிகம்,—

அஃதாவது உலகத்தார் ஒரு மரத்தின்கண்ணே பேய் உண்டு என்றால் தானும் அஃது உண்டென்று கோடலன்றி உண்டோ? இல்லையோ? என்று ஐயப்படா தொழிதல். உலகத்தார் சாத்திரங்களாலே மகா மேரு முதலாயின உண்டு என்றால், தானும் உண்டென்று கொள்ளுதலன்றி உண்டோ? இல்லையோ? என்று ஐயப்படா தொழிதல்.

ஒடு — எண் ஒடு.

இயல்பு — இயைபு,—

இயைபு எனினும், சுபாவம் எனினும், தன்மை எனினும் ஒக்கும். ஆனைமேல் இருந்தவன் தோட்டிதா என்றால் பிறிதோர் தோட்டி யென்று உணராமல் யானைத்தோட்டி என்று உணர்ந்து அதனைக் கொடுத்தல். என்றது, ஒருசொல் பலவாகிய இடத்து அதற்கு ஏற்பன அறிந்து பொருள் கூறுதலாம். சிவம் என்பது பல பொருள்படும் ஆதலால் அஃது அறிந்து கூறுதல். அஃதாவது,

"தத்துவ மெண்மூன் றுஞ்சென்
றுன்மதத் துவத்தொ டுங்கும்
வித்தையி லொடுங்கு மாறும்
சிவத்தினி லொடுங்கும் மூன்றும்
நித்ததத் துவமிம் மூன்றும்
என்பர்கள் இரண்டும் நின்ற
சுத்தமாம் சிவத்தொ டுங்கும்
தோற்றமும் அதுபோ லாகும்."

(சித்தி–சுப–சூத்–2, செய் 72)

என்றதன்கண் சிவம் என்றதனைச் சுத்தமாயை எனக் கொள்ளுதலாம். அப்படி வருவன காண்க.

என நான்கு அளவை காண்பார் — என்று இப்படியும் நாலளவை சொல்வார்கள்,—

அவையிற்றின் மேலும் அறைவர் — அவை பத்தும் ஒழிந்து வேறும் சில பிரமாணங்கள் சொல்வார்கள்,—

அவை எல்லாம் அளவை காண்டல் கருதல் உரை என்று இ மூன்றின் அடங்கிடும் ஏ — இந்தப் பிரகாரத்தின் மேற் சொல்லப்பட்ட பிரமாணங்களெல்லாம் பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம் என்னும் மூன்றினுள் அடங்கும் (எ—று)

பூர்வக்காட்சி அனுமானம் முதலிய மேல் வருமாற்றால் அறிக. இவை அநுமானத்தே அடங்குமாறு அறிக. மேலும் இப்படி வந்துழிக் காண்க. (க)

**"மாசறு காட்சி ஐயம்**
**திரிவின்றி விகற்ப முன்னு**
**தாசற அறிவ தாகும்**
**அநுமானம் அவிநா பாவம்**
**பேசறும் ஏதுக் கொண்டு**
**மறைபொருள் பெறுவ தாகும்**
**காசறு முரையிம் மானத்**
**தடங்கிடாப் பொருளைக் காட்டும்."**

இதன்பொருள்

மாசு அறு காட்சி ஐயம் திரிவு இன்றி விகற்பம் முன்னுது ஆசு அற அறிவது ஆகும்—குற்றமற்ற பிரத்தி

யக்ஷமாவது ஐயமும் திரிவும் இன்றி விகற்பத்தினும் செல்லாடல் குற்றமற அறிவதாகும்,—

அநுமானம் அவிநாபாவம் பேசுறும் ஏதுகொண்டு மறைபொருள் பெறுவது ஆகும்— [விநா – நீங்குதல், அவிநா — நீக்கமற்றது: பாவம் — உள்ளது] அநுமானப் பிரமாணமாவது நீக்க மற்றதாய் உள்ளதாகச் சொல்லப்பட்ட ஏதுக்கொண்டு மறைந்த பொருளைக் காணப்படுவதாகும்,—

நீக்கமாகச் சொல்லப்பட்ட ஏதுக்களும் உளவோ? என்னில், அவையும் சிலவுள. அவை பொருந்துவதும், பொருந்தாதுமாய் வரும். அவை வருமாறு :—

ஏது என்றும், பொது என்றும், எச்சம் என்றும், முதலென்றும் நான்குவகையாம்.

ஏது — புகையைக்கண்டு நெருப்பு உண்டென அறிதல்.

அவை தப்ப வருவதும் உண்டு, தப்பாமல் வருவதும் உண்டு. தப்பாமல் வருவது நெருப்பைவிட்டு நீங்காமல் மறுமைப்பட்டுப் புலப்படும் புகையாகிய காரண அனுமானத்தாலே அனுமேயத்தை அறிதல்.

பொது — யானைமேலிருந்தோன் காளம் ஊத அந்த ஓசை கேட்டவன் சாதனமாய் உள்ளதோர் ஒற்றுமையாய் உள்ள யானைக்கு ஓர் ஒற்றுமைப் பாடின்று இருந்தும், அந்தக்காள ஓசையைக் கேட்குந் தோறும் அந்த இடத்தே யானை உண்டு என அறிதல்.

இவையிற்றில் சாமானிய அநுமானமாகிய காளம் யானையொழிய ஊதலும் கூடும். பொது எனினும் சாமானியம் எனினும் ஒக்கும்.

எச்சம் — ஆற்றிலே வெள்ளம்வர அந்தக் காரிய ஏதுவைக்கொண்டு அறுதியிட்டு இதற்குக் காரணமாகிய மழை மலைத்தலையின் கண்ணே உண்டு என உணர்தல்.

காரியம் எனினும் எச்சம் எனினும் ஒக்கும். காரிய அநுமானமாகிய வெள்ளம் மலையில் மேகம் பெய்யாதொழிய அணை உடைந்து வரவும் கூடும்.

முதல் — சூன் முதிர்ந்த முகிலைக்கண்டு அச்சூல் காரண ஏதுவாகக் காரியமாயுள்ள மழை பெய்யும் என்று உணர்தல். முதல் எனினும், காரணம் எனினும் ஒக்கும். காரண அனுமானமாகிய சூல் முதிர்ந்த மேகம் பெய்யாதொழியவும் கூடும்.

நின்ற அநுமானங்களெல்லாமும் கருதி உணரப் படுதலால் கருத்தளவாகிய அநுமானத்துள் அடங்கும்.

புகையும் காள ஓசையும் நிகழ்காலம், வெள்ள வரவு இறந்தகாலம் முகில் எதிர்காலம்.

காசு அறும் உரை இ மானத்து அடங்கிடா பொருளை காட்டும் — குற்றமற்ற சாத்திரப்பிரமாணம் இந்த இந்த அனுமானத்துள் அடங்காத பொருளைக் காட்டும் என்றவாறு.

இவையிற்றுக்கு மேல்வரும் புறனடை அடக்கங்களில் விரிக்குமாற்றால் அறிக. (உ)

**"கண்ட பொருளை இரட்டுறவே**
**கருதல் ஐயம் திரியவே**
**கொண்டல் திரிவாம் பேர்சாதி**
**குணமே கன்மம் பொருளெனவைந்**
**துண்ட விகற்பவ் வுணர்வினுக்குப்**
**பொருளி னுண்மை மாத்திரத்தின்**
**விண்ட லில்லா அறிவாகும்**
**விகற்ப மில்லாக் காட்சியே."**

## இதன்பொருள்

*கண்ட பொருளை இரண்டு உறவே கருதல் ஐயம்— காணத்தக்கதொரு பொருளை இரண்டுபடக் கருதல் ஐயக்காட்சியாம்,—*

*அது குற்றி கொல்லோ ? தோன்றுகின்ற உரு என்றல். அஃதாவது பிரபஞ்சம் ஒருவன் படைக்கப் பட்டதோ ? தானே உண்டானதோ ? என்று ஐயப் படுதல். அன்றியும், சங்கரிப்புண்ட பிரபஞ்சம் சிவ னிடத்தே ஒடுங்குகின்றதோ ? மாயையினிடத்தே ஒடுங்குகின்றதோ ? என்று ஐயப்படுதலும் ஆம்.*

*திரியவே காண்டல் திரிவு ஆம் — பிரபஞ்சம் தானே உண்டானது என்றும் சிவனிடத்தே ஒடுங்கும் என்றும் கோடல் திரிபுக் காட்சியாம்,—*

*திரிபுக் காட்சியாவது உண்மைப் பொருள் வேறு படக்கோடல்.*

*பேர் சாதி குணமே கன்மம் பொருள் என ஐந்து உண்டு அ விகற்ப உணர்வினுக்கு — விகற்பித்து அறி யும் அறிவுக்கு இது இன்னபெயரை உடைத்து என்றும்,*

இன்ன சாதியுடைத்து என்றும், இன்ன குணம் உடைத்து என்றும், இன்ன தொழில் உடைத்து என்றும், இன்ன நிறம் உடைத்து என்றும் உண்டாகும்,—

விகற்பம்—வேறுபடுதல். பொருள் என்பதற்குப் பேர் சாதி குணம் கன்மம் ஆகிய நாலையும் உடைய மூலம் பொருள் என்றும்.

பொருளின் உண்மை மாத்திரத்தின் விண்டல் இல்லா அறிவு ஆகும் விகற்பம் இல்லா காட்சியே — அவையிற்றினையுடைய அதனது சொரூப மாத்திரத்தை ஒரு மாத்திரையிலே பகுத்தறியாமல் அறிவதாகும் விகற்பமில்லாக்காட்சி என்றவாறு.

தற்பிரியாபாவம் — அப்பிராந்தி. அது மூன்று காலமும் இன்றி, தன்மை முன்னிலை படர்க்கை இன்றி, பெயர் முதலாயின இன்றித் தன்னறி காட்சி. அது சுவாநுபூதியாக உணர்வது என்றும். தவம் மிக்காரே அதற்குச் சான்று என்பதாம். "கண்டவர் விண்டிலர்" என்பதூஉம் அது. (௩)

"காண்டல் வாயில் மனந்தன்வே
தனையோ டியோகக் காட்சியென
ஈண்டு நான்காம் அநுமானம்
தனக்கும் பிறர்க்கும் என்றிரண்டாம்
மாண்ட வுரைதந் திரமந்திரத்தோ
டுபதே சச்சொல் எனமூன்றும்
பூண்ட அளவைக் கெதிர்புலன்றன்
இயல்பு பொதுவென் றிரண்டாமே."

## இதன்பொருள்

காண்டல்—பிரத்தியட்சம்; அஃதாவது,—வாயில் — இந்திரியப்பிரத்தியட்சம்,—மனம்—மானதப்பிரத்தியட்சம்,—தன்வேதனை—ஸ்வவேதனைப் பிரத்தியட்சம்,—

ஒடு — எண் ஒடு.

யோகக்காட்சி — யோகப்பிரத்தியட்சம்,—என ஈண்டு நான்கு ஆம் — என்று நால்வகையாம்.

காட்சி என்பதை எவ்விடத்தும் கூட்டுக.

அநுமானம் தனக்கும் பிறர்க்கும் என்று இரண்டு ஆம்—அநுமானமாவது அநுமேயத்தை அதற்கு ஏற்ற உறுப்புக்கொண்டு தான் அறிதலும் பிறர்க்கு அறிவித்தலும் என இரண்டு வகையாம்,—

மாண்ட உரை தந்திரம் மந்திரத்தோடு உபதேசச்சொல் என மூன்று ஆம் — மாட்சிமையை உடைய ஆகமப்பிரமாணம் தந்திரகலை என்றும், மந்திரகலை என்றும், உபதேசகலை என்றும் மூன்று வகையாம்,—

பூண்ட அளவைக்கு எதிர் புலன் தன் இயல்பு பொது என்று இரண்டு ஆம் ஏ — இப்படிச் சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்பட்ட பிரமேயம் தன்னியல்பு என்றும் பொது இயல்பு என்றும் இரண்டாம் என்றவாறு.

எதிர்தல் — தோன்றுதல். புலம் — பிரமேயம், தோன்றும் பிரமேயம்: இவை மேல் விரிக்குமாற்றால் அறிக. (௪)

*தனக்கு அந்நியமான பாசங்களுடனும் ஆகாமல், சீவன்முத்தன் என்னும் பேரும் பெறுமல் தன்னுடைய சுபாவத்தே நிற்றல் பொது இயல்பாம்.*

*தற்சுபாவமாவது :*

''உயிரெனப் படுவ திந்த
உடலின்வே றுளதா யுற்றுச்
செயிருறும் இச்சா ஞானச்
செய்திகள் உடைய தாகிப்
பயிலுறும் இன்ப துன்பப்
பலன்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்ச வத்தைப்
படுமுண்மை துரியா தீதம்.''

(சித்தி–சுபக்–சூத்–3, செய்–1)

*மாயை தனக்கு அந்நியமான கன்மங்களும் ஆகாமல், தன்னுடைய சுபாவத்தினும் நில்லாமல், காரணம் முதலாகிய பெயர் பெற்றுக் கலை முதலாகிய தத்துவங்களைக் கொடுத்து நிற்றல் தன்னியல்பு.*

*மாயை கன்மங்களும் ஆகாமல் கர்த்தா ஏவல்வழி நின்று கலை முதலாகிய தத்துவங்களையும் கொடாமல், தன்னுடைய சுபாவத்தே நிற்றல் பொது இயல்பாம்.*

*"நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் அகிலத்துக்கு வித்துமாய்" என்பதனில் "மாயை மயக்கமும் செய்யு மன்றே" (சித்தி – சுப – சூத்–2, செய்–53) என்பதனுல் அறிக.*

*விந்து, மோகினி, மான் என்று கூறப்பட்ட உபா தானம் மூன்று. அவையிற்றில் விந்துவுக்கும் மானுக்கும் இவ்வாறு ஒட்டிக்கொள்க.*

"விந்துவின் மாயை யாகி மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் அராக மாதி முக்குண மாதி மூலம்
தந்திடும் சிவன வன்றன் சந்நிதி தன்னின் நின்றே"

*(சித்தி-சுப-சூத்-1, செய்-19) என்பதனால் உபாதானம் மூன்றும் அறிக.* (ரு)

**"உயிருடன் உணர்வு வாயில் ஒளியுரு வாதி பற்றிச்
செயிருறு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக் காட்சி
அயர்விலிந் திரிய ஞானம் ஐம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞானம் மானதக் காண்ட லாமே."**

இதன்பொருள்

*உயிருடன் உணர்வு வாயில் ஒளி உரு ஆதி பற்றி செயிர் உறு விகற்பம் இன்றி தெரிவது இந்திரியக் காட்சி — ஆன்மா தனக்கு உடனாகிய அறிவு இடமாகப் பற்றி ஒளியாகிய உரூபம் முதலாயினவற்றைக் குற்றம் உறும் விகற்பமின்றி அறிவது வாயிற்காட்சியாம்,—*

*ஒளியாகிய உரு என்க. உருவாதி — உரூபம், சத்தம், பரிசம், இரதம், கந்தம் என இவை ஐந்துமாம். வாயிலிடமும் புலனும் ஆகும் வாயில்பற்றி என்க. இவையிற்றினது உண்மையாகிய பொருளைப் பகுத்தறியாமல், இந்திரியங்களோடும் உற்று நில்லாமல் ஆன்மா அஞ்ஞானத்தால் அறிவதை இந்திரியக் காட்சி யென்றார்.*

“விண்டலில்லா அறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே” என்றதற்கும் இதற்கும் வேறுபாடு என்னை? எனின், இது ஆன்மா அஞ்ஞானத்தால் அறிவது, அது பரஞானத்தால் அறிவது. உதாரணம்:—

“பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தார் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வைந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞான மிவையெல்லாம் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.”
(சிவஞானசித்—சுப—சூத்—11, செய்—2) என்பதனால் அறிக.

அயர்வு இல் இந்திரிய ஞானம் ஐம்புலன் சார்ந்து உயிர்க்கண் மயர்வு அற வந்த ஞானம் மானதக் காண்டல் ஆம் ஏ — அப்படி விகற்பமறக்கண்ட இந்திரியக் காட்சி கண் முதலாகிய புலன் ஐந்தையும் சார்ந்து ஆன்மாவினிடத்தே மயக்கமற வந்த ஞானம் மனத்தாற்காணும் மானதக்காட்சியாம் என்றவாறு.

இது பாசஞானம் என அறிக.

“வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகியான் மாவிவைகீழ் நாட லாலே

காதலினுன் நான்பிரமம் என்னும் ஞானம்
கருதுபசு ஞானமிவன் உடலிற் கட்டுண்
டோதியுணர்ந் தொன்றொன்ரு வுணர்ந்திடலாற் பசுவாம்
ஒன்ருகச் சிவனியல்பின் உணர்ந்திடுவன் காணே."

(சித்தி-சுப-சூத்-9, செய்-2.) என்பதனுலும் அறிக. (சு)

"அருந்தின்பத் துன்ப முள்ளத்
தறிவினுக் கராக மாதி
தருந்தன்வே தனையாம் காட்சி
சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால
இயல்பகல் பொருள்க ளெல்லாம்
இருந்துணர் கின்ற ஞான
மியோகநற் காண்ட லாமே."

## இதன் பொருள்

*அருந்து இன்ப துன்பம் உள்ளத்து அறிவினுக்கு அராகம் ஆதி தரும் தன் வேதனையாம் காட்சி—ஆன்ம ஞானத்துக்கு இச்சா ஞானக் கிரியைகள் தரும் இன்ப துன்பங்களை அருந்துதல் தன்வேதனைக்காட்சியாம்,—அது ஆன்மா தான் அந்தந்த விஷயங்களை நின்று புசிக்கும் அவதாரம்.*

*சமாதியால் மலங்கள் வாட்டி பொருந்திய தேச காலம் இயல்பு அகல் பொருள்கள் எல்லாம் இருந்து உணர்கின்ற ஞானம் யோக நல் காண்டல் ஆமே—இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானங்களுடனே கூடிய சமாதியாலே இந்திரியங்கள் சீவியாதபடி அகற்றிப் பொருந்த முடைத்தாகிய தேச கால சுபாவங்களையும் விரிந்த*

பொருள்களையும் ஓரிடத்தே இருந்து அறிகின்ற அறிவு நல்ல யோகத்தாற் காணும் யோகக் காட்சியாம் என்றவாறு.

இது அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம் என்னும் அட்டமாசித்தி முதலாயின பொருந்தி விந்து நாத சொரூபமாகிய உண்மையைப் பார்த்திருப்போரது தன்மையாம். இத் தன்மையை யுடையோர் எல்லாத் தேசத்தும் உண்டாகிய செல்காலம் வருங்காலங்களும் அவ்விடங்களில் உண்டாகிய சுபாவங்களும் பொருள்களும் கண்டிருப்பர் என்றதாம்.

இனி, இவை யொழிந்து கண்டுணராமை, உணர்ந்ததை யுணர்தல், நினைப்பு எனச் சில போலிகளும் கூறுப. அவை வருமாறு :—

கண்டுணராமையாவது — சிலவற்றைக் கண்டு அதன் பெயர் அறியாதிருத்தல்.

உணர்ந்ததை உணர்தலாவது — முன்பு குளிர் வந்துற்ற காலத்து நெருப்பு மருந்து என்றுஅறிந்தான் பின்பு அதற்கு இது மருந்து என்று உள்ளம் கொள்ளல்.

நினைப்பாவது — குழவிப்பருவத்தே தந்தை தாயை இழந்தோன் காரணம் கருதாது நினக்கு இன்னோர் தந்தை தாய் என்று பிறர் சொல்வதனைக் கருதிக் கோடல்.

இம்முறைப் போலிகள் மேல் வருமாற்றால் அறிக.

"உள்ள தாவது கண்ட தென்றுரை
    கொண்ட தென்னுல கத்துநீ
பிள்ளை யாய்வளர் கின்ற நாளுனைப்
    பெற்ற தாயொடு தந்தையைக்
கள்ள மேபுரி கால னுருயி
    ருண்ண வின்றொரு காளையாய்
மெள்ள வேயுள ரென்று கொண்டு
    விரும்பு மாறு விளம்பிடே."

(சித்தியார்-பரபக்கம்-உலகாய-மறுதலை—1.)

இது நினைப்பு. (எ)

பிரத்தியக்ஷம் முடிந்தது

---

**"பக்க மூன்றின் மூன்றேது**
**வுடைய பொருளைப் பார்த்துணரத்**
**தக்க ஞானம் தன்பொருட்டாம்**
**பிறர்தம் பொருட்டாம் அநுமானம்**
**தொக்க இவற்றால் பிறர்தெளியச்**
**சொல்ல லாகும் அச்சொல்லும்**
**மிக்க அந்நு வயத்தினொடு**
**வெதிரே கச்சொல் எனவிரண்டாம்."**

இதன்பொருள்

*பக்கம் மூன்றின் — பட்சம், சபட்சம், விபட்சம் என்னும் மூன்றிடத்தினும்,—*

*மூன்று ஏது உடைய பொருளை பார்த்து உணர தக்க ஞானம் தன் பொருட்டு ஆம் — ஏதுவும் நிமித்தமும் காரணமும் ஆகும் இயல்பு, காரியம், அநுபலத்தி என்னும் மூன்று ஏதுவுடைய பொருளைக் கண்டறியத் தக்க அறிவு தன்னுடைய பொருட்டாம்,—*

*பிறர் பொருட்டு ஆம்—பிறர் அறியும் பொருட்டு,—*

*அநுமானம் தொக்க இவற்றால் பிறர் தெளிய சொல்லலால் ஆகும்—காரியம் முதலான ஏதுக்கொண்டு காரணத்தைக் காண்பது பிறர் மனம் தெளிய உரைக்கலாகும் பிறர் பொருட்டனுமானமாம்,—*

*அ சொல்லும் மிக்க அந்நுவயத்திஞெடு வெதிரேகச் சொல் என இரண்டாம் — அப்படிச் சொல்லுவது மிகுந்த ஒற்றுமைப்பட்ட சொல்லுடனே வேற்றுமைப் பட்ட சொல் என இரண்டாம் என்றவாறு.*

*அந்நுவயம் — பொருத்த முடையது: வெதிரேகம் — பொருந்தாதது. இவை விரிக்குமாற்றால் அறிக.* (அ)

**"மூன்று பக்கம் பக்கநிகர்**
**பக்க நிகரில் பக்கமெனத்**
**தோன்றும் பக்கம் துணிபொருளுக்**
**கிடமா முவமை நிகர்பக்கம்**
**ஆன்ற பொருள்சென் றடையாத**
**இடமாம் நிகரில் பக்கமுதல்**
**ஏன்ற இரண்டும் பொருளுண்மைக்**
**கிடமாம் ஒன்று பொருளின்றும்."**

இதன் பொருள்

*மூன்று பக்கம் — முன்சொன்ன மூன்றுபக்கம்,—*

*பக்கம் நிகர்பக்கம் நிகர் இல் பக்கம் என தோன்றும் — பக்கம் என்றும், ஒத்தபக்கம் என்றும், ஒவ்வாத பக்கம் என்றும் தோன்றப்படுவதாகும். அவை பக்கம், சபக்கம், விபக்கம் என்பவையாம்,—*

*பக்கம் துணிபொருளுக்கு இடம் ஆம் — பட்சமாவது சாதனம்கொண்டு சாத்தியத்தைத் துணியும் பொருளுக்கு இடமாயிருக்கும்,—*

*அஃதாவது இந்த மலை தன்னிடத்தே நெருப்பையுடைத்து என்று சுட்டிக் கூறுதற்கு இடமாவது. அது சுபாவ ஏது: அஃது எத்தால்? என்னில், புகையால் என்றல் காரிய ஏது.*

*உவமை நிகர் பக்கம் — சபட்சமாவது ஒன்றை உவமித்துக் காட்டும் இடமாம்,—*

*ஆன்ற பொருள் சென்று அடையாத இடம் ஆம் நிகர் இல் பக்கம் — விபட்சமாவது சாத்தியமாகிய பொருள் சென்று கூடாத இடமாம்,—*

*முதல் என்ற இரண்டும் பொருள் உண்மைக்கு இடம் ஆம் — முன் சொல்லப்பட்ட பட்சம் சபட்சம் இரண்டும் சாத்தியப்பொருள் உண்டாதற்கு இடமாம்,—*

*ஒன்று பொருள் இன்றும்-விபட்சம் சாத்தியமாகிய பொருள் சாதிப்பதற்கு இடமல்லவாம் என்றவாறு.*

*இவை மேல் வரும் புறனடைச் சூத்திரத்தால் அறிக.* (௬)

''ஏது மூன்று மியல்புகா
 ரியத்தோ டநுப லத்தியிவை
ஓதி னியல்பு மாமரத்தைக்
 காட்ட லுறுகா ரியம்புகைதன்
ஆதி யான அனல்காட்ட
 லாகு மநுப லத்தியது
சீத மின்மை பனியின்மை
 காட்டல் ஆகும் செப்பிடினே.''

இதன் பொருள்

*ஏது மூன்றும் இயல்பு காரியத்தோடு அநுபலத்தி* — முன் சொன்ன ஏதுக்கள் மூன்றும் இயல்பேது காரிய ஏது அநுபலத்தி ஏது என்றும்,—

*அவை ஓதில்* — அவையிற்றை முறைமையாகச் சொல்லில்,—

*இயல்பு மா மரத்தை காட்டல்* — இயல்பேது மா என்பது மரத்தைக் காட்டி நிற்றல்,—

அஃதாவது பொருளுண்மை சுட்டலாம். அது ஒன்றுண்டு என்று சுட்டப்படுதல். அது பதியுண்டு, பசுவுண்டு, பாசமுண்டு என்று சுட்டப்படுதலாம்.

*உறு காரியம் புகை தன் ஆதி ஆன அனல் காட்டல் ஆகும்* மிக்க காரியமாகிய புகை காரணமாகிய நெருப்பைக் காட்டும் தன்மையாம்,—

என்றது, பிரபஞ்சம் காரியமாயிருத்தலால், காரியம் செய்வோனின்றி இல்லை ஆதலால், காரியம் கர்த்தாவைக் காட்டிற்று. பசுவுக்குத் தேகம் அசேதனம் ஆதலால் இந்த தேகத்தை நடத்துவான் ஒரு சைதன்னியன் உண்டென்று காட்டிற்று. பாசத்துக்குக் காரணமின்றிக் காரியம் தோன்றாது என்பதனால் காரியமாகிய பிரபஞ்சம் காரணமாகிய மாயையைக் காட்டிற்று.

*அநுபலத்தி அது சீதம் இன்மை பனி இன்மை காட்டல் போலும் செப்பிடின் ஏ* — அநுபலத்தி ஏதுவாவது குளிர் இல்லாமை பனியில்லாமையைக் காட்டுதல் போலும் சொல்லுமிடத்து என்றவாறு.

என்றது யாதொன்று யாதொன்று காரணமில்லை யாகிறது காரியமுமில்லை என்பதாம்.

எனவே, கர்த்தாவாகிய காரணம் இல்லையாகில் பிரபஞ்ச காரியமுமில்லை, ஆன்மா இல்லையாகில் தேகமும் இல்லை, மாயை இல்லையாகில் பிரபஞ்சமும் இல்லை என்றதாம் : மண் இல்லையாகில் கடமில்லை என்பது போல். (ய)

**"புகையால் அனலுண் டடுக்களைபோல்**
**என்னப் புகறல் அன்னுவயம்**
**வகையாம் அனலில் லாவிடத்துப்**
**புகையின் றுகும் மலரினெடு**
**முகையார் நீரிற் போலென்று**
**மொழிதல் வெதிரே கச்சொலிவை**
**தொகையா றுறுப்பைந் தொடுங்கூடச்**
**சொல்லு வாறு முளர்துணிந்தே."**

இதன் பொருள்

புகையால் அனல் உண்டு — புகையுண்டாதலால் அம்மலையிடத்து நெருப்புண்டு,—

இது பிரதிக்ஞை. பிரதிக்ஞை எனினும், பட்சமெனினும் ஒக்கும். அஃது எங்ஙனம்? எனில்,

அடுக்களை போல் — அட்டிலிடத்துப் புகையும் அனலும் கூடக்காணும் தன்மை போல்,—

இது திட்டாந்தம். திட்டாந்தம் எனினும், சபட்சம் எனினும், ஒத்த பட்சம் எனினும் ஒக்கும்.

என்ன புகறல் அன்னுவயம் — என்று இப்படிச் சொல்லுவது ஒற்றுமைப்பாட்டை அறிய இயற்றியது; அன்னுவயம்,—

வகை ஆம் அனல் இல்லா இடத்து புகை இன்றுகும்—கூறு படுத்திச் சொல்லும் நெருப்பில்லாத இடத்துப் புகையில்லையாம்,—

அஃது என்போல ? என்னில்,

மலரினெடு முகை ஆர் நீரில் போல் என்று மொழிதல் வெதிரேகச் சொல்—மலரினுடனே முகை நிறைந்தநீர் இல்லாவிடத்து இல்லையானற்போல என்று கூறுதல் வேற்றுமைப்பாட்டையுடைய சொல்லாம்: வெதிரேகச் சொல்,—

முகை — தாமரை மொட்டு. வெதிரேகம் எனினும், விபட்சம் எனினும், ஒவ்வாத பட்சம் எனினும், மீட்சிமொழி எனினும், ஒழிபு எனினும் ஒக்கும். அது இரண்டாவது வலியுறுத்தல்.

அது நெருப்பை யுடைத்தல்லாததி யாதோரிடம் அவ்விடத்துப் புகையில்லை: புனல் இல்லாதவிடத்துத் தாமரையில்லாதாற்போல என்று பொருளினது மீட்சி மொழியாய்த் தநுமீய திட்டாந்தத்திற்கு நன்றாகிய காரிய ஏதுவாயிற்று. இனி, விசுவம் பொய் என்றல் தன்னுடைய பட்சம்.

அஃது என் ? என்னில், பண்ணப்படுதலால்.

என்பது: பட்சத்தின் கண்ணே உள்ளதாகியதோர் இயல்பாகிய ஏது. யாது பொருள் யாதொருவன் காரியமாகச் செய்யப்பட்டது, அநித்தம்.

அது என்போல? என்னில், கடம்போல என்றல் காரிய ஏதுவாகிய சபட்சமாம்.

யாதொன்று பண்ணப்படாதது, அநித்தமல்ல. என்போல? என்னில், பதி பசு பாசம் போல என்றல் விபட்சம்.

யாதோரிடத்துப் புகையுள்ளது அவ்விடத்து நெருப்புண்டு என்னும் அந்நுவயத்தானும், யாதோரிடத்து நெருப்பில்லை அவ்விடத்துப் புகையில்லை, புனல் இல்லாவிடத்துத் தாமரையில்லாதாற்போல என்னும் வெதிரேகத்தானும், புகை நெருப்பையும் சாதித்து இடமும் சாதித்தவாறு போல யாதொன்று காரியமாயுள்ளது அவ்விடத்துக் காரணமுண்டு என்னும் அந்நுவயத்தானும்; யாதோரிடத்துக் காரணமில்லை அவ்விடத்துக் காரியமில்லை என்னும் வெதிரேகத்தானும்; காரியமான பிரபஞ்சம் தனக்குக் காரணமான மாயையையும் சாதித்துத் தோற்றுவிக்கும் கர்த்தாவையும் சாதித்தது என அறிக.

இவை தொகை ஆர் உறுப்பு ஐந்தொடும் கூட சொல்லுவாரும் உளர் துணிந்து ஏ—இப்படிச் சொல்லப்பட்ட இவை தொகுதி பொருந்திய ஐந்து அவயவத்தோடும் கூடச் சொல்லுவாரும் உண்டு தெளிந்து என்றவாறு.

ஐந்து அவயவமாவது:- பட்சம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம்.

இனி, பட்சமாவது: மலை நெருப்பை உடைத்து என்றல்.

ஏதுவாவது: காணாத நெருப்பை மலையுடைத்து என்றது என்னை? என வினவிய வழிக், காரணமாகிய நெருப்பினது காரியமாகப் புகை அவ்விடத்துத் தோன்றுதலாலே அது அதற்குப் பொருந்திய காரிய ஏது.

திட்டாந்தமாவது: அஃது என்போல? என்னில், புகையுள்ள இடத்தே நெருப்புண்டாம், அடுக்களை போல எனச் செப்புதல்.

உபநயமாவது: மேற்கூறிய ஏதுவைப் பட்சத்தே வருவித்தல்; அது மலை புகையுடைத்து என்றல்.

நிகமனமாவது: மேற்கூறிய பட்சத்திடத்துப் புகையுடைத்து ஆதலால் நெருப்புடைத்து எனக் கூட்டுதல். அது அந்த ஏதுவை இரண்டாவதும் வலியுறுத்தலாம்.

சொல்லுவாரும் உளர் என்ற உம்மையால் சொல்லாதாரும் உளர் என்பதாம். அது உபநயமும், நிகமனமும் முன்சொன்ன மூன்றினும் அடங்கும் ஆதலால் என அறிக. எனவே, அவை மூன்றும் சிறப்புடையவாம்.

## உதாரணம்

"பூபூத ராதி யோவற வுஞற்றும்
ஒருவனை யுடைத்துப் பொருவிரி காரியம்
ஆதலிற் கடம்போ லென்னிற் கோதின்
றிருங்கட மதனோ டியற்றிய வொருவனை
ஒருங்குடன் கண்டோ னெழிந்திக லிரிகடங்
கண்டா லிவையு மவனெனக் கொண்டாங்
குண்டோ வுலக முஞற்றுட னொருவற்
கண்டு மற்றது முண்டிவ ணெனவெனிற்
கண்டதின் மான முனக்குக் கொண்டல்கொள்
கிரிவளர் தூம மதனி லெரிவள
ரட்டி லொண்புகை யயலென வுணர்ந்து
மொட்டினை பிறங்க லொள்ளழ லொட்டிய
தென்னை விசேட சமனியத் தியாதிற்
பன்னெனில் விசேட மென்னி னன்றே
காட்சிய தலதிலைச் சமனிய மாட்சிய
தென்றேற் செயலொடு செய்வோற் கண்டோன்
மன்ற மாண்வினை காணி னென்றுங்
கோதுவ னொருவன் றீதுகு செயலென்
றற்றேன் மாக மாதிய வினையா
கெற்றேற் பாக மியைதலிற் கடவற்
றின்னு மொண்குண மன்னலிற் புவிபோல்
ஆதிய வழியு மழிபவை செயலென்
றேதுரு வஃதுந் தீதறு செயலே."

*இதை ஞானாமிர்தத்துப் பதியுண்மை சாதிக்கு மிடத்து (அகவல்—50) இந்த ஐந்துறுப்பும் வந்தவாறு காண்க.*

*இப்பொருள் முன் விரித்த முறையே பதி பசு பாசம் மூன்றுக்கும் வருமாறு விரித்துப் பொருளுரைக்குமாறு அறிக.* (கக)

**"போது நாற்றத் தாலறிதல் பூர்வக் காட்சி யநுமானம்**
**ஓது முரையா லறிவினள வுணர்தல் கருத லநுமானம்**
**நீதி யான்முற் கன்மபலம் நிகழ்வ திப்போ திச்செய்திக்**
**காதி யாக வரும்பயனென் றறித லுரையா லநுமானம்."**

இதன் பொருள்

*போது நாற்றத்தால் அறிதல் பூர்வக்காட்சி அநுமானம் — ஒரு பூவைக் காணாதிருக்க இதனது மணத்தாலே இன்ன பூ என்பது பண்டு கண்டுணர்ந்த அநுமானம்,—*

*ஓதும் உரையால் அறிவின் அளவு உணர்தல் கருதல் அநுமானம் — ஒருவன் சொல்லும் வசனத்தால் அவனுடைய அறிவின் எல்லையை அறிவது கருத்தநுமானம்,—*

*நீதியான் முன்கன்மபலம் நிகழ்வது இ போது இ செய்திக்கு ஆதியாக வரும் பயன் என்று அறிதல் உரையால் அநுமானம் — இந்தச் சனனத்தில் இந்தத் தொழிலுக்குத் தோற்றமாய் வருகின்ற பிரயோசனம் முறையாக முன்பு செய்த புண்ணிய பாவங்களினுடைய பிரயோசனத் தோற்றம் என்று அறிவது சாத்திரப் பிரமாணமாம் என்றவாறு.*

*இது பிரத்தியட்ச அநுமானமும், கருதல் அநுமானமும் சாத்திர அநுமானமும் கூறியவாறு அறிக.* (கஉ)

**"அநாதியே அமல ஞய அறிவனூ லாக மந்தான்**
**பிஞதிமா றின்றிப் பேனல் தந்திர மந்தி ரங்கள்**
**மஞதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகும்**
**தஞதியீறிலாதான்தன்மையுணர்த்துதலுபதேசந்தான்'**

இதன் பொருள்

*அநாதியே அமலன் ஆய அறிவன் நூல் ஆகமம் தான் பின் ஆதி மாறு இன்றி பேணல் தந்திரம் — எக்காலத்தும் நின்மலன் ஆகிய சர்வஞ்ஞன் அருளிச் செய்யப்பட்ட சாத்திரங்களைப் பின்ஞெடுமுன் மலையாமல் விரும்பிக் கற்றறிவது தந்திரகலை என்று பெயராம்,—*

*மந்திரங்கள் மஞதிகள் அடக்கி தெய்வம் வழிபடும் வாய்மை ஆகும் — மனம் முதலாகிய கருவிகளை அடக்கித் தான் வழிபடுதெய்வத்தை உச்சரிப்பன மந்திரகலைகளாகும்,—*

*தன் ஆதி ஈறு இலாதான் தன்மை உணர்த்துவது உபதேசம் தான் – தனக்கு முதலும் முடிவும் இல்லாத கர்த்தாவினுடைய உண்மையை அறிவிப்பது உபதேச கலை என்றவாறு.* (கங)

**"ஈண்டு பக்கப் போலிநான்**
**கேதுப் போலி யொருமூன்ருய்**
**வேண்டு மெழுமூன் ருகவிளங்**
**குவமைப் போலி யீரொன்பான்**
**காண்டும் தோல்வித் தானமிரண்**
**டிருபத் திரண்டாம் கருதிலிவை**
**ஆண்டு மொழிவ ரவையெல்லாம்**
**அளக்கி லறுபத் தைந்தாகும்."**

## இதன் பொருள்

*ஈண்டு பக்கப்போலி நான்கு – இவ்விடத்து முன் சொன்ன பக்கப்போலி நான்கு,—*

*போலி என்பது வடமொழிக்கு ஆபாசம் என்றதாம்.*

*ஏதுப்போலி ஒரு மூன்று ஆய் வேண்டும் எழு மூன்று ஆக – ஏதுப்போலியாவது ஒரு மூன்று வகையாய் இருபத்தொன்றாக விரும்பி வரும்,—*

*ஆக இருபத்தொன்றும் நாலும் இருபத்தைந்து: இது பக்கப்போலி.*

*விளங்கு உவமைப்போலி ஈர் ஒன்பான் – விளக்கமுடைய திட்டாந்தப்போலி பதினெட்டு,—*

*ஆக இருபத்தைந்தும் பதினெட்டும் நாற்பத்து மூன்று.*

*காண்டும் தோல்வித்தானம் இரண்டு இருபத்திரண்டு ஆம்-காண்பேமாகிய விபக்கத்தானம் இரண்டு வகையாய் இருபத்திரண்டாம்,—*

*கருதில் இவை ஆண்டு மொழிவர் அவை எல்லாம் அளக்கில் அறுபத்தைந்து ஆகும் – விசாரிக்கில் இவையெல்லாம் அந்தந்த இடங்களிலே சொல்லா நிற்பர்கள்: அவை எல்லாம் தொகை கூட்டின் அறுபத்தைந்தாம் என்றவாறு.*

*ஆக நாற்பத்துமூன்றும் இருபத்திரண்டும் அறுபத்தைந்து.*

ஆண்டு மொழிவர் என்றது பக்கம், ஏது, திட்டாந்தம், வெதிரேகம் என்னும் நாலிடத்தினும் என்றதாம்.

அவற்றுட் சில வருமாறு:—

பக்கப்போலி நான்காவது: அப்பிரசித்த விசேடணம், அப்பிரசித்த விசேடியம், அப்பிரசித்தோபயம், அப்பிரசித்தாசம்பந்தம்.

அப்பிரசித்த விசேடணமாவது:— அப்பிரசித்தம்—பிரசித்தமல்லாதது: விசேடணம் – துணிவு.

அஃதாவது தத்தமக்கு மாத்திரம் தமக்குள்ள சாத்தியாசாத்தியமாயுள்ள துணிவு தாம் அறியாதிருத்தல். அது பௌத்தன் தனக்குமாறாகிய சாங்கியனைக் குறித்துச் சத்தத்துக்குக் கேடுண்டு என்றால், அவன் உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் கேடில்லையாகக் கொண்ட கோட்பாடு அறியாது சில பொருளைக் கேடு உண்டென்று கொண்டாற்போல, சத்தம் ஒன்றினையும் எடுத்துக் கேடுண்டு என்றமையால் அவனது விசேடணம் ஆகிய சாத்தியதன்மம் தெரியாதாம். இதனாலே, சாங்கியன் நித்தவாதி எனவும், பௌத்தன் அநித்த வாதி எனவும் அறிக.

அப்பிரசித்த விசேடியமாவது:— தம்முடைய எதிரிக்குத் தாம் கூறும் தன்மை தெரியாதிருத்தல். அஃதாவது சாங்கியன் மாறுநின்ற பௌத்தனைக் குறித்து ஆத்மா சைதன்னியவான் என்றால் அவன் ஆத்மா என்பது ஒன்றில்லை என்னும் வாதியாதலின், அவன் ஆத்மாவாகிற தன்மை தெரியாதிருத்தலாம். எனவே, சாங்கியன் ஆத்மவாதி என அறிக.

அப்பிரசித்தோபயமாவது:— உபயம் – இரண்டு. அஃதாவது தமக்கு மாறாயினார்க்கு உள்ள தன்மியும், சாதனமாகிய தன்மமும் ஆகிய அவ்விரண்டும் மாறானோர் இசையாமையால் அவை தெரியாதிருத்தல். அது வைசேடிகன் பௌத்தனைக்குறித்துச் சுகம் முதலாகிய காரியத்துக்குக் காரணமாகியது ஆன்மா என்றால், சுகம் முதலாகிய காரியமும் காரணம் ஆகிய ஆன்மாவும் அவ்விரண்டும் அவன் அறியாமையால் அவனது தன்ம தன்மி இரண்டும் தெரி.........ற்று. இதனாலே வைசேடிகன் சுகதுக்கமும் ஆன்மா...........பௌத்தன் அவ்விரண்டும் கொண்டிலன் என அறிக.

அப்பிரசித்தா சம்பந்தமாவது :— தமக்குமாறாய் நின்றவன் ஆராய்ந்து துணிந்த பொருளைத் தானும் அவனுக்குப் பொருந்தச் சாதித்துக் கொடுத்தல். அஃதாவது சாங்கியன் தனக்கு மாறாநின்ற பௌத்தனைக் குறித்துச் சத்தம் அநித்தம் என்று கூறின் பௌத்தன் கோட்பாடும் அது ஆதலின், வேறு அவனுக்குச் சாதிக்க வேண்டுவதில்லையாயிற்று.

இன்னும் இவை நாலும் இன்றி வருவனவும் உள.

அவையாவன :— பிரத்தியட்ச விருத்தம், அநுமான விருத்தம், சுவசன விருத்தம், உலக விருத்தம், ஆகம விருத்தம் ஆக விருத்தம் ஐந்தாம். விருத்தம் — மாறுபட்டது. அவற்றுள்,

பிரத்தியட்ச விருத்தமாவது — பொருந்திய காட்சியை மாறு கொள்ளுதல். அது சத்தம் செய்தலால் அறியப்படாது என்றல்.

அநுமான விருத்தமாவது — கருதலாகிய பிரமாணத்தை மாறுபடக் கூறல். அஃதாவது எல்லாருக்கும் புலப்பட அநித்தமாகிய கடத்தை நித்தம் எனக்கூறல்.

சுவசன விருத்தமாவது — தான் கூறிய சொற்றனே தனக்கு மாறுபடக் கூறல். அஃதாவது என்தாய் மலடி என்றல். சுவசனம் — தன் சொல்.

உலக விருத்தமாவது — உலகத்தார் கூறும் கூற்றுக்கு மாறாகக் கூறல். அஃதாவது மதி சந்திரன் அல்ல என்றல்.

ஆகம விருத்தமாவது—தனது நூற்பொருளுக்கு மாறுபடக் கூறல். அஃதாவது நித்தம் சாதிக்கும் வாதியாயுள்ள வைசேடிகன் அநித்தமாகிய சத்தத்தை நித்தம் என்று கூறல்.

இவை ஒன்பதும் பக்கப்போலி.

**பக்கப்போலி முடிந்தது.**

## ஏதுப் போலி

ஏதுப் போலி வருமாறு:— ஏதுப் போலி மூன்று கூறாய் வரும் என்றது—அசித்தம் என்றும், அநேகாந்திகம் என்றும், விருத்தம் என்றும் வரும்.

அவற்றுள், அசித்தமாவது :— உபயாசித்தம், அந்நியதா சித்தம், சந்தேகா சித்தம், ஆச்சரியா சித்தம், எனநாலாம்.

அவற்றுள், உபயாசித்தமாவது :— அசித்தம்— சித்தத்துக்குப் பிரகாசமல்லாதது; உபயம்—இரண்டு: சாதனமாகிய ஏது இரண்டு வாதிகளுக்கும் இல்லையாதல், அஃதாவது சத்தம் அநித்தம். அஃது எத்தால்? என்னில், கண்ணுக்குத் தோற்றுதலால் என்றதாம்.

அந்நியதா சித்தமாவது:- தனக்கு மாறாய்நின்ற வாதிக்குப் பொருந்திய ஏது அல்லவாயிருத்தல். அஃதாவது சத்தம் பண்ணப்படுதலால் அநித்தம் என மாறாய்நின்றோன் கூறில், சத்தம் மறைதலும் வெளிப்படுதலும் அல்லது பண்ணப்படுதல் சாங்கியன் கொள்ளாமையின், சத்தம் பண்ணப்படுதலாகச் சொல்லுதல் அவனுக்கு அசித்தமாயிற்று. எனவே, அவ்வாதிகளுக்குப் பொருந்தின ஏதுவேகொண்டு பொருள் சாதிக்க வேண்டுமென்று கொள்க. சாங்கியனுக்குச் சத்தத்துக்குப் பொருள் எல்லாம் மறைதல் அல்லது கேடில்லை என்பது அவன் துணிவானவாறு காண்க.

சந்தேகாசித்தமாவது—கூறு நின்ற ஏது ஐயமாய் நிற்கிற பொருள் சாதித்தல். அஃதாவது ஆவியோ? பனியோ? தோன்றுநின்றது என ஐயமுறுநிற்ப அது புகை, அவ்விடத்தே நெருப்புண்டு என்று கூறுதல்.

ஆச்சரியாசித்தமாவது — மாறாய் நின்ற வாதி கருத்து அறிய ஏதுவிற்குப் பொருந்திய தன்மி இல்லையாகிய ஏதுவைக் காட்டல். அஃதாவது சாங்கியன் ஆகாசம் சத்தமாகிய குணத்தாலே குணியாம் என்னில், ஆகாசம் பொருளல்ல என்னும் பௌத்தனுக்கு அதனது குணியாகிய தன்மி அசித்தமாயிற்று.

**அசித்த ஏது முடிந்தது.**

அநேகாந்திகம் வருமாறு :—

அநேகாந்திகம் — ஒன்று பல ஆதல், எனவே, அறிவு இரண்டுக்கும் நிற்றலின் அநேகாந்திகம் ஆயிற்று.

அநேகாந்திகம் சாதாரணம், அசாதாரணம், சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபி, விபக்கைகதேச விருத்திசபக்கவியாபி, உபயைகதேசவிருத்தி, விருத்த வியபிசாரி என ஆறும். அவற்றுள்,

சாதாரணமாவது—பொருள் சாதித்தற்குக் கூறும் ஏது சபக்கத்திற்கும் விபக்கத்திற்கும் பொதுவாயிருத்தல். அஃதாவது சத்தம் நித்தம் அறியப்படுதலால் என்று கூறுதல். அவ்வறியப்படுவது நித்தம் அநித்தம் என்று சொல்லப்பட்ட இரண்டிற்கும் பொருந்தும். அது பொருந்துமாறு — கடம்போன்ற அநித்தத்தை அறியும் அறிவோ ? ஆகாசத்தைப்போன்ற நித்தத்தை அறியும் அறிவோ ? என்று கூறுதலாம். இதனால் ஆகாசம் நித்தம் என்று கொண்டான் என அறிக.

அசாதாரணமாவது—தான் பொருந்திய பக்கத்து உண்டாகிய ஏது சபக்கத்தின் கண்ணும் விபக்கத்தின் கண்ணும் இல்லையாதல். அஃதாவது சத்தம் அநித்தம் கேட்கப்படுதலால் என்று கூறில் கேட்கப்படுதலாகிய ஏது சத்தமாகிய பக்கத்தின்கண்ணே உண்டாவதல்லது ஆகாசமாகிய சபக்கத்தின்கண்ணும் கடமாகிய விபக்கத்தின்கண்ணும் மீண்டதாகலின் ஐயம்பொருந்தி அநேகாந்திகம் ஆயிற்று.

சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாவது — பக்கத்துக்கூறிய ஏது சபக்கத்துண்டாய் விபக்கத்துக் கண்ணாகி யிருத்தல்வேண்டும். அவ்வாறு ஒழிந்து சபக்கத்தின்கண் ஒரு கூற்றின்கண் உண்டாய் விபக்கத் துக்கண் முழுதும் உண்டாதல். அஃதாவது, சத்தம் தொழிலிடைக் தோன்றுதாகும்; அநித்தம் ஆதலால்; எனக் கூறியவழி, அவ்வநித்தம் என மேற்கூறிய ஏது, செயலிடைத்தோன்றுமைக்குச் சபக்கம் ஆகிய மின் ஆகாசம் என்னும் இரண்டினுள்ளும் அநித்த ஏது மின்னின்கண்புலப்பட்டு, ஆகாசத்தின்கண்புலப்படாது ஆகலின், அவ்வநித்தம் கடம் முதலாயினவற்றில் பொருந்துதலின் கடம்போலே அழிந்து செயலிடைத் தோன்றுமோ? மின்போலே அழிந்து செயலிடைத் தோன்றுதோ? என்று கூறுதலாம்.

இவையெல்லாம் ஆகாசம் அழியாது எனக் கொண்ட பௌத்தன் கூறும் கூற்று என அறிக.

விபக்கைகதேசவிருத்தி சபக்கவியாபியாவது — பக்கத்துக்கூறிய ஏது விபக்கத்துக்கண் ஒரு கூற்றின் கண் உண்டாய்ச் சபக்கத்துக்கண் முழுதும் பொருந்து தல். அஃதாவது, சத்தம் செயலிடைத் தோன்றும் அநித்தம் ஆதலான் என்றவழி அவ்வநித்த ஏது சத்தம் தோன்றுதலாகிய பக்கத்திற்கும், விபக்கமான மின் ஆகாசம் என்னும் இரண்டினுள்ளும் மின்னின் கண் புலப்பாடு ஆகாசத்தின்கண் புலப்படாது. சபக்க மான கடம் முதலானவற்றில் முழுதும் கிடைத்தலால் ஏகாந்தமல்ல. அது மின்போல அநித்தமாய்த்

தொழிலிடைத் தோன்றுதோ ? கடம்போல அநித்த மாய்த்தோன்றுமோ ? எனக் கூறுதலாம்.

உபயைகதேசவிருத்தியாவது — கூறப்படும் ஏது சபக்கத்தின்கண்ணும் விபக்கத்தின்கண்ணும் ஓரிடத்து நிகழ்தல். அஃதாவது சத்தம் நித்தம் அமூர்த்தம் ஆதலால் என்று கூறியவழி அமூர்த்தமாகிய ஏது நித்தத்துக்குச் சபக்கமாகிய ஆகாசம் பரமாணு இரண்டினும் ஆகாசத்தின்கண் நிகழ்ந்து ரூபமாகிய பரமாணுவின்கண் நிகழாமையானும், அநித்தமாகிய விபக்கமானகடம் சுகம் முதலாயினவற்றில் அநித்தமான சுகத்தின்கண்ணே அமூர்த்த ஏது நிகழ்ந்து அநித்தமான கடத்தின்கண்ணே அமூர்த்தம் நிகழாமையானும், நித்தம் அநித்தம் என்று சொல்லப்பட்ட சபக்க விபக்கத்துக்கண் ஓரோ இடத்து நிகழ்ந்தமையால் ஏகாந்தம் அல்லவாய் அமூர்த்தம் ஆகிய ஆகாசம் போல நித்தமோ ? அமூர்த்தமாகிய சுகம்போல அநித்தமோ ? என்று கூறுதலாம்.

மூர்த்தம்-உருபம்; அமூர்த்தம்-உருபமில்லாதது.

விருத்த வியபிசாரியாவது — சொல்லப்படும் ஒரு பொருள்தானே மாறுபட்டுவரும் ஏது இரண்டிற்கும் இடங்கொடுத்தல். அஃதாவது சத்தம் அநித்தம் தொழிலிடைத்தோன்றலால். அதற்குப் பொருந்திய திட்டாந்தம் யாது? என்னில், அத்தொழிலிடைத் தோன்றற்குச் சபக்கமான கடாதி என்ன; சத்தத்தினும் அநித்தம் சாதிப்பானுகிய வைசேடிகனும் நிற்க, சத்தப் பிரமத்தும் அநித்தம் கேட்கப் படுதலால் சத்தத்துவம்

எனப்பெயர்பெற்ற சத்தப்பிரமம் போல எனக் கூறுதலின், இவ்வாறு இரண்டும் ஒரு பொருளின் கண்ணே மாறுபாடாகிய அநித்தநித்தங்கள் கூறப்படுதலின் ஐயம்நிகழ்ந்து ஏகாந்தம் அல்லவாயிற்று.

**அநேகாந்தமாகிய ஏதுப் போலி முடிந்தது**

---

## விருத்தம்

---

இனி, விருத்தம் வருமாறு :—

தன்மசொரூப விபரீத சாதனம், தன்மவிசேட விபரீத சாதனம், தன்மிசொரூப விபரீத சாதனம், தன்மி விசேட விபரீதசாதனம் என நாலாம். அவற்றுள்,—

தன்ம சொரூப விபரீத சாதனமாவது — தான் கூறிய ஏதுவினாலே சாத்தியமாகக் கருதப்பட்ட பொருளினது வடிவு கெடுதல். அஃதாவது சத்தம் நித்தம்; பண்ணப்படுதலால்: என்றால், பண்ணப்படும் பொருள் அநித்தம் ஆதலின், சொல்லப்பட்ட ஏது நித்தத்தை விட்டு அநித்தம் சாதித்தலால் மாறுபாடாயிற்று என அறிக.

தன்ம விசேட விபரீத சாதனமாவது — தான் கூறிய ஏது, துணியப்பட்ட பொருளின்கண் உளதாகிய சிறப்புக் கெடச் சாதித்தல். அஃதாவது கரணம்

முதலாகிய இந்திரியங்கள் பிரக்ஞாவான் ஆகிய ஆன்மாவினுடைய பொருள் என்பது பக்கமும்; அஃது எத்தால்? என்னில். தொக்கு நிற்றலின் என்பது ஏதுவும்; அஃது என்போல? என்னில், சயனாசனங்கள்போல என்ற சபக்கமும் கூறியவழி; தொக்குநிற்றலின் என்ற ஏது சயனாசனங்களின் கூட்டம் பிறனுக்குப் பொருளானாற்போல, கண்முதலிய இந்திரியங்களும் பிறனுடைய பொருளாகச் சாதித்துச் சயனாசனத்தாள் அவயவங்களையுடைய புருடனைப்போலக் கண்முதலிய இந்திரியத்துக்குப் புருடனைச் சாதிக்கிற அவயவம் இல்லாத ஆன்மாவை அவயவம் உளதாகச் சாதித்தலின், அச்சாதித்தல்தான் தன்மியின்கண் உளதாகிய சிறப்பைக் கெடுத்தலின் மாறுபாடாயிற்று.

தன்மத்தையுடையது தன்மி. விபரீதம்—மாறுபாடு.

தன்மிசொரூப விபரீத சாதனமாவது — தான் துணிந்து கூறப்பட்ட தன்மியாகிய பொருளினது வடிவைத் தான்கூறிய ஏதுத்தானே மாறுபடுத்தல். அஃதாவது உண்டென்று சொல்லப்பட்ட உண்மைப் பொருளானது பொருளுமன்று, பண்புமன்று, தொழிலுமன்று எனக்கூறிய தன்னுடைய பக்கத்துக்கு; எத்தால்? என்னில், தான் ஒரு பொருளுமாய்ப் பண்புக்கும் தொழிலுக்கும் வேறாதலால் என ஏதுக் கூறி; அஃது என்போல்? என்ன; சாமானியமாகிய பொதுவும், விசேடியமாகிய சிறப்பும் போலத் திட்டாந்தம் கூற, பொருளும் பண்பும் தொழிலும் ஒன்றாய் நின்று அவையிற்றினிடத்து நிற்கும். உண்டென்று சொல்லப்பட்ட உண்மை அவற்றின் வேறாதலால்

என்று காட்டப்பட்ட ஏதுப்பொருளும், பண்பும், தொழிலும் என்று சொல்லப்பட்ட மூன்றினுடைய உண்மைத்தன்மை ஏதுப்படுத்திக்காட்ட, பொதுவாகிய உண்மையில் உண்மை சாதிக்கப்படும் பொருட்கண் இல்லாமையின், காட்டப்பட்ட திட்டாந்தத்தில் பொது வாகிய சாமானியத்தை ஒழிந்து சிறப்புப் பிறிதொன்று இலாமையானும், உண்டென்று பகர்ந்த உண்மைத் தன்மையை இல்லாமையாக்குதலால் வேறுதல் என்னும் ஏது மாறு கொண்டதாயிற்று.

இதற்கு ஏது—வேறுதல்; திட்டாந்தம்—பொதுவும் சிறப்பும்.

தன்மி விசேட விபரீத சாதனமாவது — தன்மி யுடைய விசேடமின்மை சாதித்தல். அஃதாவது பாவ மாகிய உண்மைப்பொருள், பொருளுமல்ல பண்புமல்ல தொழிலுமல்ல என்னும் தன்னுடைய பக்கத்திற்குத் தான் ஒருபொருளாய்ப் பண்புக்கும் தொழிலுக்கும் வேறுதலால் என முன்னம் காட்டிய ஏதுவே இதற்கு ஏது ஆதலின், பாவமாகிய உண்மை தன்னை உள்ள தென்று அறிவித்தது. அதன்கண்ணே உளதாயிருப் பதோர் தொழில் ஆதலால் குணம் கன்மங்களோடு ஒற்றுமைப்படுக்க, இவற்றோடு வேறுதல் என்று காட்டப்பட்ட ஏதுவினது விசேடத்தைக் கெடுத்தல் ஆதலால் மாறுண்டாயிற்று.

**விருத்த ஏது முடிந்தது**

---

ஏதுப்போலி மூன்றுவகையானும் வந்தது; பதினறு மேலும் இப்படி வருவனவற்றுற் காண்க.

**ஏதுப்போலி முடிந்தது**

---

## திட்டாந்தப் போலி.

---

திட்டாந்தப் போலி வருமாறு:—

திட்டாந்தமும் இருவகைப்படும். அவை வருமாறு:— சாதன தன்மவிகலம், சாத்திய தன்மவிகலம், உபயதன்ம விகலம், ஐய அந்நுவயம், விபரீத அந்நுவயம் என சாதான்மிய திட்டாந்தம் ஐந்தாம்; சாத்தியாவ்வியா விருத்தி, சாதனவ்வியா விருத்தி, உபயாவ்வியாவிருத்தி, ஐயவெதிரேகம், விபரீதவெதிரேகம் என வைதன்மிய திட்டாந்தம் ஐந்தாம்: ஆகப்பத்தாம்.

சாதன தன்ம விகலமாவது:— சாதனமாயுள்ள பொருளும் சாத்தியமாயுள்ள பொருளும் ஆகிய இரண்டும் எடுத்துக்காட்டின் கண்ணே உளதாக வேண்டும். அவ்வாறு ஒழிந்து சாதனம் குறைவுபட வருவது, சத்தம் நித்தம், வடிவுடைத்தல்ல ஆதலால். அஃது எங்ஙனம்? என்னில், யாதொரு பொருள் வடிவுடைத்தல்லாதது, அப்பொருள் நித்தமாதல் காண்டல் பொருந்திற்று. பரமாணுக்கண்ணே எனக்கூறிய வழி, திட்டாந்தமாகக் காட்டப்பட்ட பரமாணு நித்தமாகிய தன்மையை உடைத்தாய வடிவுடைத்தாதலின்,

யாதொரு பொருள் யாதொரு பொருள் பண்ணப்படுவது அநித்தம் என்று கூறும் ஒற்றுமைப்பாடு கூறுதே கடத்தின் கண்ணே பண்ணப்படுதலும் அநித்தமும் காணப்பட்டதென்று கூறியவழி, அவ்விரண்டிற்கும் ஒற்றுமைப்பாடு தெரியாதாகும் ஆதலால் ஐயமாயிற்று.

விபரீத அந்நுவயமாவது:— பண்ணப்பட்ட கடம் முதலானவற்றினும், பண்ணப்படாத மின் முதலானவற்றினும் இவ்விரண்டு கூற்றின்கண்ணும் கிடக்கும் அநித்தத்திற்கும் பொதுவாகிய சாத்தியதன்மத்தாலே, கடம் முதலான அமூர்த்தப் பொருட்கண் கிடக்கும் பண்ணப்படுவதாய சாதன தன்மத்தை அறுதியிடுதல். அஃதாவது சத்தம் அநித்தம் பண்ணப்படுதலால் எனின், யாதொருபொருள் யாதொருபொருள் பண்ணப்படும் அநித்தம் எனச் சாதனதன்மத்தாலே சாத்திய தன்மத்தைக் கருதி, யாதொருபொருள் யாதொருபொருள் பண்ணப்படுவது என விபக்கமாகிய சாத்தியதன்மத்தாலே சாதன தன்மத்தைக் குறித்தல். அந்தப் பொதுவாகிய சாதனம் சாத்தியத்தையின்றியும் நிகழ்தலின் மாறுபாடு ஆயிற்று.

**சாதான்மிய திட்டாந்தம் முடிந்தது.**

---

## வைதன்மிய திட்டாந்தம்

இனி, வைதன்மிய திட்டாந்தம் வருமாறு :—

சாத்திய வியாவிருத்தியாவது:— சாதன தன்மமாகிய ஏது மீண்டு, சாத்தியதன்மமாகிய பொருள் மீளா தொழிதல். அஃதாவது 'சத்தம் நித்தம் வடிவில்லை ஆகலின்' என்றால், யாதொரு பொருள் யாதொரு பொருள் நித்தமாயுள்ளது வடிவில்லை, அஃது என் போல? என்னில், 'பரமாணுவைப்போல' என்று கூறில், அவ்வாறு வைதன்மிய ஏது எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட பரமாணு நித்தமாய் வடிவுடைத்து ஆதலால், அச்சாதனம் வடிவுடைத்தல்லாமை மீண்டு சாத்தியமாயுள்ள பொருள் மீளா தொழிதலை உடைத்தாயிற்று. வியாவிருத்தி—மீளுதல்.

சாதனவியாவிருத்தியாவது—காட்டப்பட்ட வைதன்மிய எடுத்துக்காட்டின் கண் சாத்தியமாகிய பொருள் மீண்டு சாதனமாகிய பொருள் மீளா தொழிதல். அஃதாவது 'சத்தம் அநித்தம் வடிவுடைத்தாதலின்' என்றால், யாதொருபொருள் யாதொருபொருள் நித்தமும் அல்ல வடிவுடைத்துமல்ல தன்மம்போல என்றால், வைதன்மிய எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட தன்மம் வடிவுடைத்தல்லவாய் நின்று அநித்தம் ஆதலின், சாதிக்கப்படும் பொருளாகிய அநித்தம் மீண்டு வடிவுடைத்தல்லாமை மீளாதொழியலாயிற்று.

தன்மம்—புண்ணியம். அழியாமல் நின்று ஊட்டுதலின் அநித்தம் அன்று என்றார்.

உபயவியாவிருத்தி இருவகைப்படும்; அவை உள் பொருளின் கண்ணும், இல்பொருளின் கண்ணும் வரும்.

உள்பொருட்கண் உபய வியா விருத்தியாவது :— உள்பொருட்கண்ணே சாத்தியமாயுள்ள பொருளும், சாதனமாயுள்ள ஏதுவும் மீளாதபடி வைதன்மிய திட்டாந்தம் எடுத்துக் காட்டாகக் காட்டப்படுதல். அஃதாவது சத்தம் அநித்தம் மூர்த்தம் ஆதலால் என்ற வழி, யாதொருபொருள் அநித்தமும் அல்ல வடிவுடைத்துமல்ல ஆகாசம்போல என்று வைதன்மிய எடுத்துக்காட்டாகக் காட்டியவழி, ஆகாசம் பொருள் என்னும் சாங்கியன் முதலாயினார்க்கு ஆகாசத்தின் கண்ணே நித்தமும் மூர்த்தமும் இரண்டும் காரியமாகில், சாத்தியமாகிய பொருளினது நித்தமும் சாதனமாகிய ஏதுவினது வடிவின்மையும் கண்டில ஆயிற்று.

இல்பொருட்கண் உபயவியாவிருத்தியாவது—சத்தம் அநித்தம் அமூர்த்தம் ஆதலால் என்றவழி, யாதொரு பொருள் யாதொருபொருள் நித்தமும் அல்ல வடிவுடைத்துமல்ல ஆகாசம் போல என வைதன்மிய எடுத்துக்காட்டாகக் காட்டில், ஆகாசம் பொருளல்ல என்னும் பௌத்தனுக்கு ஆகாசம்தானே இன்மையானால், சாத்தியமாகிய பொருளினது நித்தமும் சாதனமாகிய ஏதுவினது வடிவுண்மையும் இரண்டும் மீட்சி மீளாமையும் இல்லையாயிற்று. நித்தமும் அல்ல வடிவுடைத்தன்றும் அன்று என்றது, அநித்தமுமாய் வடிவுடைத்தாயிருக்கும் என்றதாம்.

ஐயவெதிரேகமாவது:— சாத்தியமாகிய பொருள் இல்லாத இடத்துச் சாதனமாகிய ஏதுவின்மை சொல்லாதே விடுதலாம். அஃதாவது சத்தம் அநித்தம் பண்ணப்படாமையால் என்றால், யாதொருபொருள் யாதொருபொருள் அநித்தமும் அல்ல, பண்ணப்படுவது அல்லாததும் அல்ல என்னும் வேற்றுமை வாய்பாடு தெரியச்சொல்லாது கடத்தின்கண்ணே பண்ணப்படுதலும் அநித்தமும் கண்டோம் ஆதலான் என்றவழி அவ்வேற்றுமை வாய்பாடு தெரியாதாயிற்று.

விபரீத வெதிரேகமாவது:— பிரிக்கும் பொருளைப் பிரிக்கும் வாய்பாட்டால் பிரியாது தலைதடுமாறாகக் கூறல், அஃதாவது, சத்தம் அநித்தம் மூர்த்தம ஆதலான் என நின்ற இடத்து யாதொருபொருள் யாதொருபொருள் நித்தமும் இல்லை அவ்விடத்து மூர்த்தமும் இல்லை என்னாதே, யாதோரிடத்து அமூர்த்தமில்லை அவ்விடத்து நித்தமும் இல்லை என்றால் வெதிரேகம் மாறுபடும் எனக்கொள்க.

மேலும் இவ்வாறு வரும் போலிப்பொருள்கள் எல்லாம் வந்துழிக் காண்க.

**அளவை முடிந்தது.**

---

**அளவைக்குப் பாண்டிப்பெருமாளுரை முடிந்தது.**

---

சிவஞானபோதம் பாண்டிப்பெருமாள்விருத்தி

## அளவைச் சிறப்பு

பண்ணில்லாற் கில்லாத பாடற் பயன்போன்றும்
கண்ணில்லாற் கில்லாக் கவின்போன்றும்—எண்ணிலா
அஞ்சொல் அளவை அறியா தவற்கில்லை
செஞ்சொல் அளவின் சிறப்பு.

## ஆசிரியர் வணக்கம்

எண்ணிறந்த கல்விதனை எண்ணியளா விட்டாலும்
விண்ணிறைந்த கீர்த்தி விளைந்தாலும் — கண்ணிறைந்த
பேரின்ப வெள்ளம் பெறக்கிடையா நெஞ்சமே
சீரின்ப ஆசானைத் தேடு.

## தனியன்

பெத்தமறு பாண்டிப் பெருமாள் சிவஞான
சித்தி அளவைக்கும் தேர்ந்துணர்ந்து—முத்தித்
திடமுடைய வண்மைச் சிவஞான போதத்
துடனெழுதி னன்நல் லுரை.

# முதற்சூத்திரம் — முதலதிகரணம்

'அவனவளது' என்னும் சூத்திரத்துக்கு *உதாரண வெண்பா வருமாறு,—*

### உதாரண வெண்பா — 1

**பூதாதி யீறு முதலுந் துணையாகப்**
**பேதாய் திதியாகும் பெற்றிமையின்—ஓதாரோ**
**ஒன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டும்**
**அன்றென்று முண்டென்ன ஆய்ந்து.**

#### கருத்து

*இது பிரபஞ்சம் நித்தம் என்றும், தோற்றமும் ஈறும் சுபாவம் என்றும், சார்பிற்றோன்றும் என்றும் சொல்லுவோர்க்கு அவை அப்படி அல்ல, ஒரு கர்த்தா உண்டு என்கிறது.*

#### இதன்பொருள்

*பேதாய் — அறிவில்லாதவனே,—*

*என்றது பிரபஞ்சம் அநாதியே நித்தம், தோற்றமும் ஈறும் இல்லை என்கிற அறியாதவனே !*

*பூத ஆதி திதி ஆகும் பெற்றிமையின்—பிரபஞ்சம் நிற்கின்ற முறைமையிலே,—*

*ஈறும் முதலும் துணை ஆக ஓதாரோ—சங்காரமும் தோற்றமும் உண்டாக யாவரும் சொல்லாரோ? சொன்னது ஒக்கும்,—*

*அநாதி நித்த மலத்து ஒன்றுதலும் இறுதலும் இயல்பு, தோற்றில் ஓர் சார்பிலே தோன்றும், அதற்கு ஒரு கர்த்தாவும் இல்லை என்பையாகில்,—*

*ஒன்று ஒன்றின் தோன்றி உளது ஆய் இற கண்டும் — ஒரு பொருளிலே ஒரு பொருள் தோன்றி நின்று அழிவதனைப் பிரத்தியட்சமாகக் கண்டு வருகச்செயும்,—*

*அன்று என்றும் உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ — நீ சொல்லும் சுபாவமும் சார்பும் அல்ல என்றும் அந்த மூன்று தொழிலுக்கும் ஒரு கர்த்தா உண்டென்றும் ஆராய்ந்து யாவரும் சொல்லார்களோ? யான் சொல்லவேணுமோ? என்றவாறு.*

*என்னவும் என்னும் உம்மை தொக்கு நின்றது.*

*ஓதாரோ என்றதனை இரண்டிடத்தும் கூட்டுக: அது காப்பிசை.*

*இதற்குச்* **சிவஞானசித்தியார்** *உதாரணம்: சூத்—1.*

"உதிப்பது மீறு முண்டென்
றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல கநாதி யாக
மன்னிய தென்ப ரென்னில்
இதுக்கியா னநுமா ஞதி
யெடேனிப்பூ தாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக்
காணலான் மேதி னிக்கே." (2)

"இயல்புகாண் தோற்றி மாய்கை
யென்றிடி னியல்பி னுக்குச்
செயலதின் றியல்பு செய்தி
செய்தியே லியல்ப தின்றும்

இயல்பதாம் பூதம் தானே
இயற்றிடும் செய்தி யென்னில்
செயல் செய்வான் ஒருவன்
வேண்டும் செயற்படும் சேதனத்தால்.''(3)

''நிலம்புனல் அனல்கால் காண
நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலம்தரும் ஒருவன் இங்குப்
பண்ணிட வேண்டா என்னில்
இலங்கிய தோற்றல் நிற்றல்
ஈறிவை இசைத லாலே
நலங்கிளர் தோற்றம் நாசம்
தனக்கிலா நாதன் வேண்டும்.'' (4)

''சார்பினில் தோற்று மெல்லாம்
தருபவன் இல்லை யென்னில்
தேரினில் லதற்கோ தோற்ற
முள்ளதற் கோநீ செப்பாய்
ஓரினில் லதுவும் தோன்று
துள்ளதே லுதிக்க வேண்டாம்
சோர்விலா திரண்டு மின்றி
நிற்பது தோன்று மன்றே.'' (5)

*என்பதனுல் இதன் வழிநூலார் விரித்துரைத்த வாறு அறிக.*

*இது பிரபஞ்சம் ஒரு கர்த்தாவை யுடைத்து என்னும் பக்கமும், அஃது எத்தால்? என்னில், காரியமா யிருத்தலால் என்னும் ஏதுவும், அந்நுவயமாகிய சாதன சாத்தியப் பொருட்டு ஆயினவாறு அறிக.*

**முதலதிகரணம் முடிந்தது.**

## இரண்டாமதிகரணம்

### உதாரண வெண்பா – 2.

**இலயித்த தன்னிலில யித்ததாம லத்தால்**
**இலயித்த வாறுளதா வேண்டும்—இலயித்த**
**தத்திதியி லென்னில் அழியா தவையழிவ**
**தத்திதியும் ஆதியுமாம் அங்கு.**

கருத்து

*இல்லதற்கு ஏது சங்கரிப்புண்ட பிரபஞ்சம் சங்கரித்த கர்த்தாவாலொழிந்து தோன்றாது என்பதாம்.*

*எனவே, இல்லதற்குத் தோற்றம் இல்லை ஆதலானும், உள்ளது தோற்றுவிக்கவேண்டா ஆதலானும், உள்ளதும் இல்லதுமாய் இருப்பது தோன்றும் என்பதூஉம், தோன்றுமிடத்துச் செய்வோனை யொழிந்து காரியப்படாது என்பதூஉம், மண்ணிற்கடாதியொழிந்து படாதி தோன்றாதவாறு போலத் தோன்றுமிடத்தல்லது தோன்றாது என்பதூஉம், கர்த்தாவினிடத்து ஒடுங்காது மாயையிலே ஒடுங்கும் என்பதூஉம், ஆதலால் சங்காரகர்த்தாவே முதல்வன் என்பதூஉம் கூறுகின்றார்.*

இதன்பொருள்

*இலயித்த தன்னில் – சங்கரித்த கர்த்தாவாலே,—*

*இலயித்தது ஆம் — சங்கரிப்புண்ட பிரபஞ்சம் உண்டாம்,—*

அஃது என்போல? என்னில், ஒருவன் கற்ற சொல்லும் பொருளும் அவன் கருத்திலே ஒடுங்கி வேண்டின இடத்தே விரியுமாறுபோலவும், சாக்கிராதியாகிய அவத்தைகள் ஆன்மாவினிடத்திலே ஒடுங்கித் தோன்றுமாறு போலவும் ஆம்.

அஃது அப்படியாகில், கர்த்தாவினிடத்தே ஒடுங்கின பிரபஞ்சம் மீளவும் தோன்றுவானேன்? என்கின்றாயாகில்,

மலத்தால் இலயித்தவாறு உளது ஆ வேண்டும் — மாயையிலே ஒடுங்கி மீளவும் அந்த முறைமையிலே தோன்றும்,—

எனவே, கர்த்தாவினிடத்துத் தோன்றாது மாயை உபாதானம் என்பதாயிற்று.

அவ்வாறு என்றது உள்ளதும் இல்லதும் ஆகிய பூதாதி தோன்றும் என்பதூஉம், மண்ணில் கடாதி ஒழிந்து படாதி தோன்றாதுபோலத் தோன்றுவதல்லது தோன்றாது என்பதூஉம் ஆம்.

இலயித்தது அ திதியில் என்னில் — பிரபஞ்சம் சேரச் சங்காரப்படாது சில நிற்கச் சங்காரப்படும். அந்தச் சங்காரப்பட்டது நின்று அவையிற்றிலே மீளவும் உண்டாம் என்கின்றாயாகில்,—

அழியாது அவை அழிவது அ திதியும் ஆதியும் ஆம் அங்கு—மகாசங்காரத்து நீ அழியாமல் சில நிற்கும் என்று சொல்கின்றவை எல்லாம் சேர அழியும், நிற்றலும் தோற்றமும் அவையிற்றுக்கு உண்டாகையால் என்றவாறு.

*இப்பொருட்கு உதாரணம் சிவஞானசித்தியார் சூத்–1.*

"கற்றநூற் பொருளும் சொல்லும்
கருத்தினில் ஒடுங்கித் தோன்றும்
பெற்றியும் சாக்கி ராதி
யுயிரினிற் பிறந்தொ டுக்கம்
உற்றதும் போல வெல்லா
வுலகமும் உதித்தொ டுங்கப்
பற்றொடு பற்ற தின்றி
நின்றனன் பரனு மன்றே." (31)

"உயிரவை ஒடுங்கிப் பின்னும்
உதிப்பதென் அரன்பா லென்னில்
செயிருறு மலத்தி னுகும்
சிதைந்ததே தென்னிற் சித்தத்
தயர்வொழி காரி யங்கள்
அழியுங்கா ரணங்கி டக்கும்
பயில்தரு காரி யம்பின்
பண்டுபோற் பண்ணு மீசன்." (32)

"உள்ளதும் இலது மின்றி
நின்றதொன் றுளதே லுண்டாம்
இல்லதேல் இல்லை யாகும்
தோற்றமும் இசையா தாகும்
உள்ளகா ரணத்தி லுண்டாம்
காரிய முதிக்கும் மண்ணில்
இல்லதாம் படம்க டாதி
எழில்தரும் இயற்று வாறல்." (6)

"ஒருபொருள் ஒருவ னின்றி
உளதில தாகும் என்னில்
தருபொருள் உண்டேல் இன்றும்
தன்மையின் றின்றே லுண்டாய்

வருதலின் றிலது காரியம்
முதலுள தாகு மென்னில்
கருதுகா ரியமு முண்டாய்த்
தோற்றமும் கர்த்தா வாலாம். (7)

"ஓரிட மழியப் பின்னும்
ஓரிடம் நிற்கு மொக்கப்
பாரிட மழிவ தின்றும்
என்றிடிற் பயில்வித் தெல்லாம்
காரிட மதனிற் காட்டும்
அங்குரம் கழியும் வேனில்
சீருடைத் துலகு காலம்
சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும். (9)

*என்பனவற்றால் இதன் வழிநூலார் விரித்துரைத்த வாறு அறிக. இனி, இலயித்தது அ திதியில் என்னில் —சங்கரிப்புண்ட பிரபஞ்சம் அளிக்கின்ற கர்த்தாவாலே என்கின்றாயாகில்,—சங்கரிப்புண்ணாது அவை அழிவது அந்த அளித்தலும் படைத்தலும் சங்காரத்தே சங்கரிப் புண்ணும்.*

*அ திதியும் ஆதியும் ஆம் அங்கு — அளித்தலும் படைத்தலும் சங்கார கர்த்தாவினிடத்தே ஆம் என் பாரும் உளர்.*

*சங்காரகர்த்தாவே கர்த்தா என்றும், மாயை உபா தானம் என்றும் கூறலின் தன்னுடைய பக்கம் ஆயிற்று. இந்தப் பக்கத்துக்கு ஏதுவும் திட்டாந்தமும் மேல் வருவனவற்றால் அறிக.* (2)

## உதாரண வெண்பா 3.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமாம்
அத்தன்ருள் நிற்றல் அவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்
கூட்டரனே மண்போற் குளிர்ந்து. [கொடுத்துக்

### கருத்து

*மாயையிடத்து உள்ளது தோன்றும் என்பதூஉம், அது தோன்றுமிடத்து வினைக்கு ஈடாகத் தோன்றும் என்பதூஉம், தோற்றுவிப்போன் தன்னுடைய சத்தியாலே தோற்றுவிப்பன் என்பதூஉம், ஆன்மா அழிந்து தோன்றாது என்பதூஉம் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*வித்து உண்டாம் மூலம் முளைத்தவா — அங்குரம் தோன்றினவாற்றாலே (அது தோன்றத்தக்க) விதை உள்ளதாம்,—*

*என்பது; பிரபஞ்சம் தோன்றி நின்று அழியும், நீர் சொல்லுகின்ற மாயை உபாதானமாக ஒடுங்குவது, தோற்றுவது ஆகாது. அஃது என்போல? என்னில், ஒரு மரத்தின்கண் உண்டாகிய சாகை முதலியன உதிர்ந்து மீளவும் அதன்கண்ணே புக்குப் புறப்படா தாற்போல, என்போர்க்கு; அந்தச் சாகை முதலியன அதற்குக் காரணமாகிய வித்து உண்டாகவே உண்டு என்றதாம். எனவே, வித்து இல்லையாகில் சாகை முதலியனவும் இல்லையாம் என்பதாயிற்று.*

*அந்த மாயைக்குத் தாரகம் யாது? என்னில்,*

*தாரகம் ஆம் அத்தன் தாள்* — கர்த்தாவினுடைய பராசத்தி தாரகமாம். அஃது என்போல? என்னில்,—

*மண்போல் குளிர்ந்து* — ஈரத்தையுடைய மண் போலக் குளிர்ந்து,—

குளிர்ந்த எனத்திரிக்க. ஈரம் — கர்த்தா, மண் — சத்தி.

அந்தக்கர்த்தா நிற்கின்றபடி எப்படி? என்கின்றுயாகில்,

*நிற்றல் வித்தகம் ஆம்* — அவன் நிற்கின்ற முறைமை சொல்லக்கூடாது, ஆச்சரியமாயிருக்கும்.

"சீலமோ வுலகம் போலக் கொண்ணீ........ நிலைசெயல் கடவுட் கண்ணே" (சித்தி-சுப-சூ-1, செய்-30) என்பதனுல் அறிக.

*அவர் வினையால்* — (ஆன்மாக்கள்) அவரவர் செய்த கன்மத்தாலே,—

*அரன் வேண்டு உருவை தான் கொடுத்து கூட்டும் வேட்டுவன் ஆம் அ புழு போல்* — சங்காரகர்த்தா வேண்டின ரூபத்தைக் கூட்டும் முறைமை வேட்டுவாளியனுல் ஆகத்தக்க புழுப்போலும் என்றவாறு.

என்பது: மாயாகாரியம் தோன்றி அழியுமாறு போல, ஆன்மாவும் தோன்றுவது, அழிவதாம் என்போருக்கு இல்லை என்று மறுத்தலாம். அஃதாவது, வேட்டுவாளியன் இறந்த புழுவுக்கு உயிரும் தேகமும் கொடுத்ததில்லை, உயிர் நிற்க உரூபம் வேருக்கியது. அதுபோல, ஆன்மா நிற்க அதன் வினைக்கு ஈடாக வேண்டின உரூபத்தைக் கொடுப்பன் என்றதாம்.

இதனை 'அச்சுமாறுது' என்போருக்குக் காட்டு வாரும் உளர். அது இரண்டாம் சூத்திரத்தே வரு கின்றது ஆகலால் புனருத்தி கூறுர் என அறிக. எனவே, மாயை — முதற் காரணம்; சத்தி — துணைக் காரணம்; கர்த்தா நிமித்த காரணன் என்றுராயிற்று. அது—

''காரிய கார ணங்கள்
முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரில்மண் திரிகை பண்ணும்
அவன்முதல் துணைநி மித்தம்
தேரின்மண் மாயை யாகத்
திரிகைதன் சத்தி யாக
ஆரியன் குலால னய்நின்
றுக்குவன் அகில மெல்லாம்''

(சித்தி–சுபக்–சூத்–1, செய்–18) என்பதனுல் அறிக.

மாயை என்றது சுத்தமாயையையும், அசுத்த மாயையையும்.

மாயை உபாதானம் என்னும் துணிபொருட் பக்கத்துக்குப் பிரபஞ்சம் காரியமாய் வருதலால் எனக் காரியம் ஏதுவும், வித்தும் முளையும் போல எனச் சபக் கமும், வித்து இல்லையாகில் இலை முதலாயின இல்லை என விபக்கமும் கூறியவாறு அறிக.

ஆன்மா அழிந்து தோன்றுது என்னும் பக்கத் துக்குப் புழுப்போல என்னும் சபக்கம் கூறியவாறு காண்க.

**சிவஞான சித்தியார் சூத்திரம்—1.**

"தோற்றமும் நிலையும் ஈறும்
மாயையின் தொழில தென்றே
சாற்றிடும் உலகம் வித்துச்
சாகாதி அணுக்க ளாக
ஏற்றதேல் ஈண்டி நிற்கும்
இல்லதேல் இசைவ தின்றும்
மாற்றம்நீ மறந்தா யித்தால்
மாயையை மதித்தி டாயே." (14)

"மாயையி னுள்ள வஞ்சம்
வருவது போவ தாகும்
நீயிதிங் கில்லை யென்னின்
நிகழ்ந்திடும் முயலிற் கோடு
போயுகும் இலைக ளெல்லாம்
மரங்களிற் புக்குப் போதின்
ஆயிடும் அதுவு மென்னில்
காரணம் கிடக்க வாமே." (15)

"விந்துவின் மாயை யாகி
மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால்
வைகரி யாதி மாயை
முந்திடும் அராக மாதி
முக்குண மாதி மூலம்
தந்திடும் சிவன வன்றன்
சந்நிதி தன்னில் நின்றே." (19)

"வைகரி செவியிற் கேட்ப
தாயத்த வசன மாகி
மெய்தரு முதான வாயு
மேவிட விளைந்த வன்னம்

பொய்யற வடைவு டைத்தாய்ப்
புத்திகா ரணம தாகி
ஐயமில் பிராண வாயு
வடைந்தெழுந் தடைவு டைத்தாம்.'' (20)

“உள்ளுணர் வோசை யாகிச்
செவியினி லுறுதல் செய்யா
தொள்ளிய பிராண வாயு
விருத்தியை யுடைய தன்றித்
தெள்ளிய வக்க ரங்கள்
சிந்திடும் செயல தின்றி
மெள்ளவே யெழுவ தாகும்
மத்திமை வேற தாயே.'' (21)

“வேற்றுமைப் பட்ட வன்னம்
வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுத லடைவொ டுக்கிச்
சொயம்பிர காச மாகிச்
சாற்றிய மயிலி னண்டம்
தரித்திடும் சலமே போன்றங்
காற்றவே யுடைய தாகிப்
பைசந்தி யமர்ந்து நிற்கும்'' (22)

“சூக்கும வாக்க துள்ளே
சோதியாய் அழிவ தின்றி
ஆக்கிடு மதிகா ரத்துக்
கழிவினை தன்னைக் கண்டால்
நீக்கமி லறிவா னந்த
முதன்மைநித் தியமு டைத்தாய்ப்
போக்கொடு வரவி லைப்பு
விகாரமும் புருட னின்றும்.'' (23)

"மண்ணினிற் கடாதி யெல்லாம்
வருவது குலால னாலே
எண்ணிய வுருவ மெல்லாம்
இயற்றுவன் ஈசன் தானும்
கண்ணுகா ரியங்க ளெல்லாம்
காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்கே நின்றிங்
கென்றிடிற் பகரக் கேணீ." (29)

*என்பது: என இதன்வழி நூலார் இப்பொருளுரைத்தவாறு காண்க.* (3)

## உதாரண வெண்பா—4.

**நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்
தாக்காது நின்றுளத்தில் கண்டிறைவன்—ஆக்காதே
கண்ட நனவுணர்வில் கண்ட கனவுணரக்
கண்டவனின் இற்றின்றும் கட்டு.**

### கருத்து

*இது கர்த்தா பிரபஞ்ச கிருத்தியம் செய்கின்ற முறைமையும், அந்தக் கிருத்தியம் எல்லாம் அநுக்கிரகம் என்றும், அப்படிக்கிருத்தியம் செய்கைச்சே அதில் ஒரு சற்றும் பிரயோசனம் இன்றி விகாரமற்று இருப்பன் என்கின்றதும் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*இறைவன்—கர்த்தா,—*

*அன்றே—அநாதியிலே,—*

காலத்தில் தாக்காது நின்று உளத்தில் கண்டு—காலம்போல ஒன்றினும் தாக்காது எல்லா ஆன்மாக்களிடத்தினும் ஒக்க நின்று அவரவர் செய்த கன்மங்களைப் பார்த்து,—

காலம் போல என்றது, செல்காலம் வருகாலம் நிகழ்காலம்போல என்றதாம். அந்த மூன்று காலமும் காண்பார்க்குக் காலமாய் நின்றதல்லது அது தான் அசைவின்றி நிற்குமாறு போலத் தற்சுபாவம் குறையாமல் நிற்பன் என்பதாம்.

கார்காலம், வேனிற்காலம் போல என்றுமாம். அது, கார்காலத்துண்டாம் பலங்கள் வேனிற்காலத்து உண்டாகாது; வேனிற்காலத்து உண்டாம் பலங்கள்கார் காலத்து உண்டாகாது. அதுபோலப் பக்குவம் அறிந்து செய்வன் என்பதுமாம்.

எனவே, காலம் கர்த்தா என்போருக்கு அல்ல என்பதும் ஆயிற்று.

தாக்காது நின்று எனவே பற்றின்றி நிற்றல் கூறினர்.

உளத்தின் நின்று எனவே சர்வான்மாக்களிடத்தும் பக்கப்பிரதிபக்கமற நிற்றல் கூறினர்.

கண்டு எனவே, நித்த முத்த சுத்தனாய், சிற்சொரூபனாய், அவிகாரியாய் உள்ள கர்த்தா பார்த்தான் என்பதனால் சர்வான்மாக்களும் பிறவியில் அழுந்தாமல் முத்திபெற வேணும் என்று பார்த்தான் என்பதாம். எனவே, அவன் கிருத்தியமெல்லாம் அநுக்கிரகம் என்பதுவும் கூறினர்.

நோக்காது நோக்கி—அளியாமல் அளித்து,—

நொடித்து — அழியாமல் அழித்து,—

ஆக்காதே — படையாதே படைத்து,—

நோக்காமல் நோக்கி என்பதனாலே நொடியாமல் நொடித்து, ஆக்காதே ஆக்கி எனக் கூறுக.

இன்றும் கட்டு இற்று — இப்பொழுது இத்தன்மைத்தாகச்செய்யும் செயல் இத்தன்மைத்து,— அஃது எத்தன்மை ? என்னில்,

கண்ட கனவு உணர்வில் கண்ட நனவு உணர கண்டவனின் — தான் கண்ட கனவைச் சுத்த தத்துவங்களால் அறிந்த அறிவாலே முன்பு கண்டு போந்த நனவிலே விளங்கக் கண்டவனைப்போல,—

என்பது; கனவுகண்ட புருஷனுக்கு அது புதிதல்லவாய்க் காணுமிடத்துப் பொய்யல்லவுமாய், நனவில் மெய்யல்லவுமாய், அதில் ஒரு பிரயோசனமின்றியிருந்தாற்போல, பிரபஞ்சம் காரியப்பட்டு வருகச்சே புதிதல்லவுமாய்ப் பொய்யும் அல்லவாய் மெய்யுமல்லவாய்த் தனக்கு ஒரு பிரயோசனமும் இன்றி இருப்பன் என்பதாம்.

எனவே, விகார அவிகாரமின்றி இருப்பன் என்பதூஉம் கூறினாராயிற்று.

காலத்தின் என்னும் இன்னும், கண்டவனின் என்னும் இன்னும் உவமைக்கண் வந்தன.

கர்த்தா கிருத்தியம் செய்கைச்சே பற்றற்றிருப்பன் என்னும் பக்கத்துக்குக் காலம்போல என்னும்

சபக்கமும், தனக்கு ஒரு பிரயோசனமும் இன்றி அவிகாரியாய் இருப்பன் என்னும் பக்கத்துக்குக் கனவு கண்டவனைப்போலும் என்னும் சபக்கமும் காட்டியவாறு காண்க. இப்படிக் கிருத்தியம் செய்கின்ற கர்த்தாவினுடைய சத்தி பலவோ என்றும், சத்தியினுடைய வடிவு ஏது என்றும் வினவியவாறும், "ஒன்றதாயிச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி, நின்றிடும் சத்தி" (சிவஞானசித்தி—சுபக்—செய்—63) என்று நிறுத்தியவாறும் இதன்கண் அடக்கிக் கூறுக.

இற்று என்பதனால் "சத்திதான் பலவோ என்னில் தானொன்றே யநேக மாக, வைத்திடும்', "சத்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்" (சித்தி.—சுப—சூத் 1, செய்—61, 62) என்பனவற்றால் அறிக.

"தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்", "உரைத்தவித் தொழில்கள் மூன்றும் மூவருக் குலக மோத, வரைத்தொரு வனுக்கே யாக்கி", "இறுதியாம் காலம் தன்னில் ஒருவனே", "சொன்னவித் தொழில்க ளென்ன காரியம் தோற்ற என்னில்",

"அழிப்பிளைப் பாற்ற லாக்கம்," "காலமே கடவு ளாகக் கண்டனம் தொழிலுக் கென்னில்" என்பன இதன்வழிநூலார் (சித்தியார்—சுபக்—சூத்—1, செய்—33, 34, 35, 36, 37, 10) விரித்துரைத்தவாறு அறிக. (4)

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

---

# மூன்றுமதிகரணம்

## உதாரண வெண்பா — 5.

ஒன்றலா வொன்றால் உளதாகி நின்றவா
றென்றலா வொன்றிலவை ஈறுதல்—ஒன்றலா
ஈறே முதலதனில் ஈறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு.

### கருத்து

*இது பிரபஞ்சம் தோன்றி நின்று ஒடுங்குவது மாயையிலேயாகில், அந்த மாயையே அமையாதோ? கர்த்தா வேண்டுமோ? என்போருக்கு மாயை சடம் என்று சாதிக்கின்றது.*

### இதன்பொருள்

*ஒன்று அலா ஒன்றால் உளது ஆகி நின்ற ஆறு—இது என்று சுட்டிக் காணப்படானுமாய், பிரபஞ்ச கிருத்தியத்தைச் செய்கையினாலே காணப்படுவானும் ஆகிய கர்த்தாவால் பிரபஞ்சம் தோன்றி நின்ற முறைமையாலே,—*

*ஒன்று அலா ஒன்றில் அவை ஈறு ஆதல்—இது என்று சுட்டிக் காணப்படாதுமாய், பிரபஞ்ச கிருத்தியத்துக்கு உபாதானமாய் நிற்றலாலே, காணப்படுவதாகிய மாயையிலே அவை சென்று ஒடுங்குதலையுடைத்து,—*

*அவை என்றது தோற்றமும் நிற்றலும் ஆகிய அவை. "ஆதி யோதிய மேதகு மாயை" என்னும்*

ஞானமிர்தத்தில் (அகவல்–14) 'அளவில் வலியிற்று' என்பதனால் அறிக.

ஒன்று அலா ஈறே முதல்—அப்படியாகில் இது என்று சுட்டிக் காணப்படாததாய் எல்லாம் சென்று ஒடுங்குதற்கு இடமாகிய மாயையே முதன்மை யுடைத்து,—

முதன்மை– தலைமை.

கர்த்தா வேண்டா என்றும். அது பிரபஞ்ச கிருத்திய சாதனங்கொண்டே சாத்தியமாகிய கர்த்தா வையும் கண்டேம்; அதுபோல, மாயையையும் கண்டேம்: ஆதலால், ஒரு தன்மையாயிருந்தது. அவ்விரண்டினுக் கும் அத்தன்மையால் ஒன்றே அமையாதோ? அஃ தன்றியும், எல்லாம் தோன்றிநின்று ஒடுங்கும் இடம் மாயையாய் இருந்தது; கர்த்தா இதுதானே! வேறு வேண்டா என்றதாம்.

அதனில்—அந்த மாயையினிடத்து (நீ சொல்லு கின்ற கர்த்தத்துவம் இல்லை),—

ஈறு அலா ஒன்று—(பிரபஞ்சம் அழியும் பொழுது தானும்கூட அழியாதோ? கர்த்தத்துவம் இன்றிச் சடமாய் இருக்கும் என்பையாகில்) அது அழியாதது ஒருபொருள்,—

அதுதான் எக்காலத்துள்ளது? என்பையாகில்,

அன்று—அநாதி,—

பலவாறே தொழும்பு ஆகும் — அது எல்லா முறைமையானும் கர்த்தாவுக்கு ஏவற்றொழில் செய்து வரும் என்றவாறு.

பலவாற்றானும் என்றது அசித்தாகையானும், தனக்கென ஒரு சுதந்தரமில்லையானும் என்றதாம்.

அன்றியும், அருவிலே உருவம் தோன்றுமோ? என்றும், விந்துவின்கண் உண்டாகிய காரியங்கள் எவ்வாறு? என்றும், கர்த்தாவுக்கு அவை உரூபமானால் ஆகாதோ? ஒன்றலா ஒன்றாக வேணுமோ? என்றும் வினவினார்க்குக் கூறலுமாம். இப்பொருள்,

''அருவினி லுருவம் தோன்றி
அங்காங்கி பாவ மாகி''

''அருவுரு வீன தாகும்
விகாரமு மவிகா ரத்தில்
வருவது மில்லை யென்னில்''

''வித்தைக ளவித்தை ஈசர்
சதாசிவ மென்றி வர்க்கு''

''மூவகை யணுக்க ளுக்கு
முறைமையால் விந்து நாதம்
மேவிய தில்லை யாகில்''

''பந்தமும் வீடு மாய
பதபதார்த் தங்க ளல்லான்''

''உலகினை யிறந்து நின்ற
தரனுரு வென்ப தோரார்''

"வித்தையோ டீசர் சாதாக்
கியம்சத்தி சிவங்க ளைந்தும்"

"சிவனரு வுருவு மல்லன்
சித்தினோ டசித்து மல்லன்"

*என்பன பலவும் இதன்கண் அடங்கியதாதலால் வழி நூலார் விரித்துரைத்தவாறு அறிக.* (சித்தியார்–சுபக்–முதற்சூ-27, 28 25, 26, 44, 48, 66, 70–*செய்யுட்கள்*)

*'தொழும்பாகும்' என்றனால் மாயாகாரியமும் அழியாது என்பதாம். இப்பொருள்,*

"கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி
வருதலால் அநாதி வையம் மற்றொரு கடவு ளித்தைத்
தருதலால் ஆதி யாகச் சாற்றலு மாகும்"
(*சித்தி–சுப–சூத்–*1, *செய்–*16) *என்பதனாலறிக.*

*'மாயை கர்த்தா அல்ல' என்பதற்கு:—*

"புத்திமற் காரி யத்தால்
பூதாதி புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றால்
அறிதலால் அவற்றை மாயை"
*என்னும் வழிநூலானும்* (*சித்தியார்–சுபக்-முதற்சூத்–*17);

"என்னையிது வெனினுலகுக் குபாதான மில்லை
இறைவனல தெனினசித்துச் சித்தினிடத் துதியா
மன்னியுள தேல்முதல்வன் என்கொ லென்னின்
மாயைதா னசித்துருவாய் மருவ மாட்டா(து)"

( *சிவப்பிரகாசம்–பொது–சூத்–*2, *செய்–*5. ) *என்னும் சார்புநூலானும் அறிக.*

இவை ஐந்துவெண்பாவாலும் கர்த்தாவுக்கும் மாயைக்கும் பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயனம், நிகமனம் கூறியவாறு அறிக.

அஃது எப்படி? என்னில்,

'பூதாதி' என்பதனில் ஒரு கர்த்தா உண்டு என்னும் பக்கமும், அஃது எத்தால்? என்னில்,

பிரபஞ்சம் காரியமாயிருத்தலால் அக்காரியத்தைச் செய்வான் உண்டு என்பதனுல் காரிய ஏதுவும்,

'நோக்காது' என்பதனில் காலம் போலவும், கனவுகண்டவன் போலவும் என்னும் திட்டாந்தமும்,

இந்த வெண்பாவில் உபநயன, நிகமனமும் கூறினுர்.

'இலயித்த தன்னில்' என்பதனில் மாயை உண்டு என்னும் பக்கமும், 'வித்துண்டாம்' என்பதனில் காரியமாயிருத்தலால் என்னும் ஏதுவும், வித்தும் முளையும் போல என்னும் திட்டாந்தமும், இந்த வெண்பாவில் உபநயன நிகமனமும் கூறினுர்.

இவை சாமானியமாகிய பொருள் போல விசேடமாகிய சாதன சாத்தியப் பொருட்டாயின வாறு காண்க. (5)

**முதற்சூத்திரம் மூன்ருமதிகரணம் முடிந்தது.**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## பொதுவியல்பு – பிரமாணவியல்

# இரண்டாஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# இரண்டாஞ்சூத்திரம்

**அவையே தானே யாயிரு வினையிற்**
**போக்கு வரவு புரிய ஆணையின்**
**நீக்க மின்றி நிற்கு மன்றே.**

## இதன்பொருள்

*அவையே தானே ஆய்* — கர்த்தா முன் கூறப் பட்ட அவன் அவள் அது எனும் பிரபஞ்சமாய்,—

*ஆய்* எனவே அல்லவாய் என்பதூஉம், விட்டு நீங்காமலும் கூறப்பட்டது. எனவே, ஆயுமாய் அல்ல வுமாய் உடனுமானன் என்பதாம். *தான்* — கர்த்தா.

*இரு வினையில் போக்கு வரவு புரிய ஆணையின்* — தன்னுடைய ஆக்கினையாலே, ஆன்மாக்கள் முன்புள்ள புண்ணிய பாவங்களினாலே இறந்து பிறந்துவர,—

*நீக்கம் இன்றி நிற்கும் அன்றே*—ஒழிவற நிறைந்து நிற்பன் அநாதி சுபாவமாக என்றவாறு.

*இது, கர்த்தா பிரபஞ்சம் எல்லாமாய், அவையல்ல வுமாய், அவற்றிற்கு உடனுமாய், தான் அவையிற்றில் சிறிதும் தோய்வின்றி ஒழிவறக் கலந்து, ஆன்மாக்கள் முன்பு செய்த கன்மங்களுக்கு ஈடாகத் தன்னுடைய சத்தியாலே பிறந்து இறந்துவர, அநாதி சுத்தனாய் ஒழிவற நிற்பன் என்றதாம்.*

*உதாரணம்: சிவஞான சித்தியார்.*

"உலகெலா மாகி வேறா
    யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத்
    தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யவற்றின் செய்தி
    தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னாகி
    நின்றனன் நீங்கா தெங்கும்,"

*என்ற வழிநூற் சூத்திரமும் காண்க.* (*சூத்தி*–2. *செய்*–1)

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா — 1

**கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்**
**இட்டதொரு பேரழைக்க என்னென்றுங்—கொட்டி**
**அவனுள மாகில்லா னுளமவனா மாட்டா**
**தவனுளமா யல்லனுமா மங்கு.**

கருத்து

*இது சர்வான்மாக்களிடத்தும் கர்த்தா இரண்டற நிற்கின்ற முறைமை கூறுகின்றது.*

## இதன் பொருள்

*கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு உள்ளம்* — என்பு தோல் நரம்பு இறைச்சி முதலாயினவற்றால் கட்டப்பட்ட தேகத்தையும் கரணங்களையும் கொண்டு நின்று ஆன்மா,—

*இட்டது ஒரு பேர் அழைக்க என் என்றாங்கு* — தேகத்துக்கு இட்டதொரு பெயரை ஒருவன் சொல்லி யழைக்கத் தான் அவையாய் நின்று என் என்றாற் போல,—

*ஒட்டி அவன் உளம் ஆகில்லான்* — சர்வான்மாக் களிடத்தும் வேறறக் கலந்து நிற்கின்ற கர்த்தா அப்படி நின்றானாகிலும், அந்த ஆன்மாக்களாவான் ஒருவ னல்லன்,—

*உளம் அவன் ஆ மாட்டாது* — அப்படி வேறறக் கலந்து நிற்கின்ற ஆன்மாக்களும் அந்தக் கர்த்தாவாக மாட்டா,—

*அவன் உளம் ஆய் அல்லனும் ஆம் அங்கு* — கர்த்தா ஆன்மாவுமாய் அல்லவுமாய் நிற்பன் பெத்த மாகியவிடத்து என்றவாறு.

ஆன்மாக்களிடத்தே கர்த்தா வேறறக் கலந்து நின்றும் நீங்கி நிற்பன் என்னும் பக்கத்துக்கு, தேகத் துடனே ஆன்மா வேறறக்கலந்து நின்று நீங்குகின் றமை சபக்கம் ஆயினவாறு காண்க. எனவே, ஆன்மா வும் தேகமும் வேறு என்பதும் உணரக்கூறினாராயிற்று.

அது 'ஒன்றின முடித்தல்' என்னும் தந்திரவுத்தியால் தத்துவாதீதனாய் நிற்கின்ற கர்த்தாவைப் பாசபெத்தனாகிய ஆன்மாவோடு உவமித்தார்.

"சீவனும் இச்சா ஞானச் செய்தியாற் சிவனை யொப்பன்" (சித்தி–சுபக்–சூத்–1, செய்–64) என்பதனால் அறிக.

அஃது எங்ஙனே? என்னில்,

ஆன்மாவும் கர்த்தாவைப்போலக் கர்த்தத்துவமும் சர்வஞ்ஞத்துவமும் உடையன் ஆகையானும், போக்குவரவின்றி இருத்தலானும், அவயவங்களுடனே கூடவும் நீங்கவும் வல்லன் ஆதலானும், வியாத்தி வியாபகங்களையுடையவன் ஆதலானும் எனக்கொள்க. அஃது எங்ஙனே? என்னில், கர்த்தத்துவமாவது — தான் செய்த புண்ணியபாவங்களைத் தப்பாமல் புசித்தற்குக் கர்த்தாவாதல். சர்வஞ்ஞத்துவமாவது – பெத்த முத்திகள் இரண்டினுடைய அநுபவதிசையிலுண்டாகிய சர்வஞ்ஞத்துவம். போக்குவரவின்றியிருத்தலாவது — யாதோரவத்தை அடைந்ததாயினும் பெத்தத்தை விட்டு நீங்காமல் அவயவங்களுடனே கூடவும் நீங்கவும் வல்லனாவது; யாதொரு விடயங்களினும் நின்று புசிக்குமிடத்து அவை அவையாய் நின்று புசித்துப், பின்பு அவையிற்றை நீங்கி, விகற்பிக்க வல்லனாதல். வியாத்தி வியாபகமுடையனாவது:—கன்மம் புசித்தற்குப்பொருந்திய பதி யாதோரிடம் அந்தந்த இடங்களிலே நிறைந்து நிற்கையுடையனாதலும் ஆம்.

“ உருவொடுகருவியெல்லாமுயிர்கொடுநின்றுவேறாய்
வருவது போல ஈசன் உயிர்களின் மருவி ”
(*சிவஞானசித்—சுபக்—சூத்—2, செய்—3*) *என்றார் வழிநூலார்.*

## உதாரண வெண்பா – 2.

**ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்**
**ஒன்றென்ற நீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்றால்**
**அக்கரங்க ளின்றாம் அகர வுயிரின்றேல்**
**இக்கிரமத் தென்னு மிருக்கு.**

### கருத்து

*இது வேதத்தில் கர்த்தாவும் ஆன்மாவும் இரண்டல்ல எனக் கூறியது என்போர்க்கு இரண்டு என்பதூஉம், ஆன்மாவுக்குக் கர்த்தாவை யொழிந்து சேட்டையில்லை என்பதூஉம் கூறுகின்றது.*

### இதன் பொருள்

*ஒன்று என்றது ஒன்றே காண்— (வேதங்களெல்லாம் ஒன்று என்று சொல்ல நீர் ஆன்மாக்கள் தோறும் கர்த்தா நிற்பன் என்று இரண்டாகச் சொல்கின்றது என்னை? என்னையாகில்) அந்த வேதங்கள் ஒன்றென்று சொல்லுகின்றது ஒத்தாரும் மிக்காரும் இன்றி நித்த முத்த சுத்தனாய் இருக்கின்ற தனி முதலைக்காண்,—*

*ஒன்றே பதி—(நான் ஒன்றென்று சொன்னதும் அதுதான் என்னையாகில்) அந்தத் தனி முதலே கர்த்தா, அது ஆன்மா அல்ல என்றதாம்,—*

*இது வேதத்தில் கடாகாச ஆகாசம்போல, சீவான்மா என்றும் பரமான்மா என்றும் பேர்வேற்றுமை யொழிந்து ஒருவனே உள்ளது என்று சொல்வோரை மறுத்தது.*

*(நீ) பசு ஆம் ஒன்று என்ற நீ பாசத்தோடு உளை காண்—ஒன்றென்று சொல்கின்ற நீதான் காண் ஆன்மா; பாச பெத்தன் காண் நீ,—*

*நீ பாச பெத்தன் எனவே அவன் சுத்தன் என்பது மீட்சிமொழி ஆயிற்று.*

*அக்கரங்கள் இன்றும் அகர உயிர் இன்றேல்—அகரமாகியவுயிர் இல்லையாகில் நின்ற அக்கரங்கள் ஓசை பெறுதல் இல்லையாம்,—*

*ஒன்று இன்றால் இ கிரமத்து என்னும் இருக்கு—கர்த்தா இல்லையாகில் ஆன்மாக்களும் சேட்டையில்லை, இந்த முறைமைபோல என்னும் வேதங்கள் என்றவாறு.*

*'அக்கரங்கள் இன்றேல் அகர வுயிரின்றும்' என்று பாடமாயின் அக்கரங்களில்லையாகில் அகரவுயிருமில்லையாம் என்க. அது ஆன்மாக்கள் இல்லையாகில் கர்த்தாவும் இல்லை என்றதாம். என்பது, கர்த்தாவை உணர்வாரில்லை என்றதாம்.*

*"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்."*

*(தொல்—எழுத்—மொழிமரபு—சூத்—12)*

*கர்த்தாவும் ஆன்மாவும் வேறற நிற்கின்ற பக்கத்துக்கும், கர்த்தாவையின்றி ஆன்மா சேட்டையில்லை என்னும் பக்கத்துக்கும்: 'அகாரமும் அக்கரங்களும் சபக்கம்' ஆயினவாறு காண்க.*

"ஒன்றென மறைகளெல்லா
முரைத்திட வுயிர்களொன்றி
நின்றனனென்று பன்மை
நிகழ்த்துவ தென்னை யென்னின்"

*(சித்தி–சுபக்–சூத்–2, செய்–2) என்றார் வழிநூலார்.*

## உதாரண வெண்பா—3

**பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்**
**எண்ணும் சுவையும்போல் எங்குமாம்–அண்ணல்தாள்**
**அத்துவித மாதல் அருமறைகள் ஒன்றென்று**
**தத்துவித மென்றறையு மாங்கு.**

## கருத்து

*இது கர்த்தாவும் ஆன்மாவும் இரண்டற நின்ற கலப்புக் கூறுகின்றது.*

## இதன் பொருள்

*பண்ணையும் ஓசையும் போல பழம் அதுவும் எண்ணும் சுவையும் போல் எங்கும் ஆம் அண்ணல் தாள் அத்துவிதம் — கர்த்தா அவன் அவள் அது எனும் பிரபஞ்சம் எல்லாம் ஒழிவற நிறைந்து இரண்டல்ல ஒன்று என நிற்றல்; பண்ணுக்கு நாதம் நின்று அவையிற்றின் சொரூபங்களை நிறைவித்தாற் போலவும், பழமும் அதிற் சொல்லப்பட்ட இரதமும் போலும்,—*

பண்ணும் ஓசையும் பாடுவானையின்றி இல்லாமையால் முதல் மூன்றாயிற்று. எனவே, மாயை முதலியவற்றை இரண்டற நின்று தன்னுடைய இச்சா ஞானக் கிரியைகளைக் கொண்டு தன்மை முன்னிலை படர்க்கையாலே நின்று நடத்துவன் என்றதாம்.

பழமும் இரதமும் என்றது பழம் இரதத்தைப் பிரிந்திராது, இரதம் பழத்தைப் பிரிந்திராது, பழத்திலே இரதம் நிறைந்து நிற்கும்; அதுபோல, பதியும் பிரபஞ்சமும் அநாதியிலே இப்படியிருக்கும் என்றதாம்.

ஆதல் — இப்படியாதலாலே,—

அரு மறைகள் ஒன்று என்னாது அத்துவிதம் என்று அறையும் ஆங்கு — அரிய வேதங்கள் ஒன்றென்று சொல்லாமல் இரண்டல்ல என்று சொல்கின்றது, சொல்லி முடிக்குமிடத்து என்றவாறு.

என்பது: ஒன்று என்னும் சொல் இல்லாமல் இரண்டல்ல என்றது எவ்வாறு? என்னில், இரண்டல்ல என்ற சொல்லாலே ஒன்று என்னில், அப்படிச் சொல்லுகின்றது ஒன்று உண்டாகையாலே ஒன்றல்ல; ஆனால், இரண்டல்ல என்ற சொல்லாலே இரண்டுமல்ல: எனவே, ஒன்றுமல்லவாய் வேறறக் கலந்து நிற்கின்ற முறைமை கூறலாம். அது நபுஞ்சகம் என்றாற்போலவாம்.

கர்த்தா பிரபஞ்சத்தை வேறற நின்று சேட்டிப்பிக்கின்றான் என்னும் பக்கத்துக்குப் பண்ணும் ஓசையும் சபக்கமாகி, வேறற அநாதியிலே நிற்கின்ற பக்கத்துக்குப் பழமும் இரதமும் சபக்கம் ஆயினவாறு அறிக.

## உதாரண வெண்பா – 4.

**அரக்கொடு சேர்த்தி அணைத்தவக் கற்போல்**
**உருக்கி உடங்கியைந்து நின்று–பிரிப்பின்றித்**
**தானே உலகாம் தமியேன் உளம்புகுதல்**
**யானே உலகென்பன் இன்று.**

### கருத்து

*இது அத்துவிதம் என்றதனை ஒன்று என்றதாகக் கருதி ஏகனும் என்போரை மறுத்து முன் சொன்ன தனையே வலியுறுத்தியது.*

### இதன்பொருள்

*அரக்கோடு சேர்த்தி அணைத்த அ கல் போல்— பொன் மெழுகுடனே மணலையும் கூட்டிப் பிடித்த சாணை போல,—*

*வட்டிலிங்கம் கூட்டி மாணிக்கத்துடனே சேர்த்த வெண்கற்போல என்பாரும் உளர்.*

*உருக்கி உடங்கு இயைந்து நின்று பிரிப்பின்றி தானே உலகு ஆம்—கர்த்தாவும் பிரபஞ்சத்தைச் சேட்டிப்பித்து வேறறக் கலந்து நிறைந்து நின்று தானே பிரபஞ்சம் என்னும்படியாய் இருப்பன்,—*

*உருக்கல்—சேட்டிப்பித்தல்.*

*தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் இன்று—இந்திரியங்களை நீங்கி யான் தமியனை இடத்து என்னிடத்திலே புகுதலாலே, யான் பிரபஞ்ச ரூபி என்று சொல்வேன் இப்பொழுது என்றவாறு.*

உருக்கி என்பதனை உளம்புகுதலுடனே நெகிழ்வித்து எனக் கூட்டுவாரும் உளர். புகுதல்—புதிதாகப் புக்கதன்று, அநாதியிலே ஏகிபவித்து நின்ற முறைமை. முன்பு தோன்றாமல் இந்திரியங்களை நீங்கியவிடத்தே காண்டலால் இப்பொழுது பிரகாசித்தது என அறிக.

பிரபஞ்சமும், கர்த்தாவும் அத்துவிதமாய் நின்ற முறைமை இந்த நாலு வெண்பாவிலும் கூறியவாறு அறிக.

கர்த்தாவும் பிரபஞ்சமும் வேறறக்கலந்து அத்துவிதமாய் நிற்பன் என்னும் பக்கத்துக்கு, அரக்கொடு கூட்டிப்பிடித்த சாணை சபக்கம் ஆயினவாறு அறிக.

இந்தவினை இவ்வாறு விரித்துரைத்தமையான் வழிநூலார் விரியாதவாறு அறிக. ஆதலாலே, விரியாதது விரித்துரைத்தார் என அறிக. எனவே, இரண்டு நூலும் ஒன்று என்றாயிற்று.

இனி, வெண்பாவுககு விருத்தமாகவும் ஒரு விருத்தத்தே இரண்டு வெண்பா அடக்கியும் வருவன மேலேகாண்க.

## முதலதிகரணம் முடிந்தது.

---

# இரண்டாமதிகரணம்

## உதாரண வெண்பா—5

உள்ளதே தோற்ற வுயிரணையும் அவ்வுடலின்
உள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்கும் செய்யேபோல்
செய்வன் செயலணையா சென்று.

### கருத்து

*இது கர்த்தாவினுடைய ஆக்கினையாலேயொழிந்து ஆன்மாக்களுக்குப் புண்ணியபாவம் கூடாது என்பதூஉம், அது கூடுமிடத்து முன்புள்ளது ஒழிந்து கூடாது என்பதூஉம் கூட்டுமிடத்து விருப்பு வெறுப்பின்றிக் கூட்டுவன் என்பதூஉம் கூறுகின்றது.*

### இதன் பொருள்

*உள்ளதே தோற்ற உயிர் அணையும் அ உடலின்—முன்புள்ள கன்மத்துக்குப் பொருந்தியுள்ளதொரு தேகம் வந்துதோன்ற, அந்தத் தேகத்தே ஆன்மாச் சென்று பொருந்தும்,—*

*உள்ளது ஆம் முன் செய் வினை—(அநாதி சுத்தனுப் இருக்கின்ற ஆன்மாவுக்குக் கன்மம் உண்டானபடி ஏன்? என்கின்றாயாகில், அநாதி சுத்தனல்ல) முன்பு செய்தவினை அநாதியிலே உள்ளதாயிருக்கும்,—*

உள் அடைவே—(தேகத்தை உண்டாக்குவது கன்மமாயிருந்தும் கன்மம் தேகமின்றி யுண்டானவாறு எங்ஙனே? என்று சொல்வையாகில்) முன்பு போந்த முறைமையால்,—

அஃதாவது முன்பு எடுத்ததேகம் கன்மத்தை யுண்டாக்கும், அந்தக் கன்மம் தேகத்தை யுண்டாக்கும் ஆதலால், இவை ஒன்றுக்கொன்று தொன்றுதொட்டு வித்தும் மரமும் போலவும், விளைவும் உணவும் வித்தும் போலவும் வரும் என்றதாம்.

வள்ளல் அவன்—கர்த்தா,—

வள்ளல் — என்றும் விரும்பியது கொடுப்பன் என்பதாம். அது பெத்தம் முத்தி இரண்டையும் கொடுத்தல். தான்சொன்ன வேதாகமங்களின் வழியே ஒழுகாதோர்க்குப் பெத்தத்தைக் கொடுப்பன் என்றும், வழிபடுவோர்க்கு முத்தியைக்கொடுப்பன் என்றுமாம்.

செய்பவர் செய்தி பயன் விளைக்கும் செய்யே போல் செய்வன்—(பெத்தமுத்திகளைக் கொடுக்கின்ற முறைமை எப்படி? என்னில்), யாதொரு வேளாண்மையைச் செய்யுமவர்கள் செய்த பிரயோசனத்தைக் கொடுக்கும் செய் போலக்கொடுப்பன்,—

அது செந்நெல் இடப் பூரி விளையாது என்பதாம். எனவே, கர்த்தாவுக்கு விருப்பு வெறுப்பில்லை என்பதாயிற்று.

செயல் அணையா சென்று—(இப்படிச் செய்கிறவன் விகாரியாகானோ? என்னில், விகாரியாகான்)அவன்

*சந்நிதி மாத்திரத்தே நடக்கும். அந்தச் செய் விகார மின்றியிருக்க அது விளைந்தாற்போல என்றதாம் என்றவாறு.*

*தழை முதலிய இடுவார்க்குப் பயன் மிகக் கொடுத்தும், இடாதோருக்குக் குறையக் கொடுத்தும் செய்யும் செயல் போல என்பாரும் உளர்: அது உவமையன்று.*

"இருவினை இன்பத் துன்பத்"

"பேறிழ வின்ப மோடு
பிணிமூப்புச் சாக்கா டென்னும்"

"உடற்செயல் கன்ம மிந்த
வுடல்வந்த வாறே தென்னில்"

"முற்செயல் விதியை யிந்த
முயற்சியோ டநுப வித்தால்
இச்செயல் பலிக்கு மாறென்"

"மேலைக்கு வித்து மாகி
விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல"

"அருளினு லுரைத்த நூலின்"

"மருத்துவ னுரைத்த நூலின்
வழிவரிற் பிணிகள் வாரா"

"மண்ணுளே சிலவியாதி மருத்துவ னருத்தியோடும்
திண்ணமா யறுத்துக் கீறித்தீர்த்திடும்"

*என்பன (சித்தியார் சுபக்—சூத்—2, செய்யு—4, 9, 10, 11, 12, 33, 34, 35.) வழிநூலார் விரித்தவாறு அறிக.*

*கர்த்தா விருப்பு வெறுப்பின்றி ஆன்மாக்களைப் பிரித்துக் கூட்டுவன் என்னும் பக்கமும்; அஃது எத்தால்? என்னில், வினையால் என்னும் ஏதுவும்; அஃது என்போல? என்னில், செப்போல என்னும் சபக்கமும்; வினையில்லையாயிற் செயலில்லை என்னும் விபக்கமும் கூறியவாறு காண்க.*

## உதாரண வெண்பா—6

**அவ்வினையிற்செய்வதனில்அவ்வினைஞர்தாஞ்சென்றங்**
**கவ்வினையிற் காந்த பசாசம்போல்–அவ்வினையைப்**
**பேராம லூட்டும் பிரானின் நுகராரேல்**
**ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு.**

### கருத்து

*இது ஆன்மா கன்மாவுக்கு ஈடான தேகத்தைத் தானே பொருந்தும் என்போர்க்கும், கன்மந்தானே சென்று ஒரு தேகத்தைப் பொருந்தும் கர்த்தா வேண்டா என்போர்க்கும், அவையிற்றை மறுத்துக் கர்த்தாவாலொழிந்து ஆகாது என்றது.*

### இதன்பொருள்

*அ வினையின் செய்வதனில்—முன்புண்டான கன்மம்போலப், பின்பும் கன்மத்தைச் செய்யுமிடத்து,—*

*இன்–உவமப்பொருள். என்றது முன்பு உண்டான கன்மம் புசித்து வருகச்சே அவனை அறியாமல் ஆகாமியம் ஏறுமாபோல் என்றதாம். எனவே, முன்பு நாம்*

இன்ன கன்மம் செய்தோம், இன்ன கன்மம் புசிக்கின்றோம், மேலும் இன்ன கன்மம் செய்துகொள்ளுகின்றோம் என்று ஆன்மா அறியாது என்றதாம். கன்மமும் இன்ன கன்மமும் செய்தான் இன்னது ஊட்டவேணும் மேலும் இன்னது சென்று பொருந்தவேணும் என்றும் அறியாது என்றுமாம்.

அ வினையார் தாம் சென்று அங்கு அ வினையில் அ வினையை—பிராரத்த கன்மத்தைப் புசிப்பதான ஆன்மாக்கள் தாம் புசிப்பதான கன்மத்திலே கூடி அந்தக் கன்மபலங்களை,—

காந்த பசாசம் போல் போமாமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்—காந்தத்தையும் இரும்பையும் முகமொக்க ஒருவன் கூட்டுமாபோலக் கூட்டித் தப்பாமல் புசிப்பிக்கும் கர்த்தாவாலே புசியார்களாகில்,—

என்றது காந்தமும் வலித்துக் கொள்ளும் தன்மையுடைத்து, பசாசமும் வலிகொடுக்கும் தன்மையுடைத்து; அவ்விரண்டும் ஒருதானத்திலே கிடக்கச்சே காந்தமும் வலித்துக் கொண்டதில்லை, பசாசமும் வலிகொடுத்ததில்லை. அவ்விரண்டையும் ஒருவன் முகமொக்கப்பிடித்த பொழுது காந்தமும் வலித்துக் கொண்டது, பசாசமும் வலிகொடுத்ததுபோல என்றதாம்.

ஆர் தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு—யாவர் தாம் அவையிற்றை அறிந்து கூட்டவல்லார், அந்தந்த யோனிகள் தோறும் அந்தந்த உலகங்கள் தோறும் என்றவாறு.

என்பது: முன்புசெய்த வினையைப் புசிக்குமிடத்து அந்த வினையையுடையவர்கள் தாமாய் அறிந்து அந்த வினையைக் கூடிப் புசிக்கமாட்டார்கள். அந்த வினைதான் அறிந்து சென்று வினையுடையவர்களைக்கூடமாட்டாது. புசித்து வருகின்ற முறைமையுண்டாகையாலே ஆன்மாக்கள் செய்கின்ற கன்மங்களெல்லாம் கர்த்தாவே அறிந்து பக்குவாபக்குவங்களுக்கு ஈடாகக் கூட்டிப் புசிப்பிப்பன் என்றதாம். ஆர்தான் என்றது வேறொரு தெய்வமில்லை என்பதாம். அது:—

"யாதொருதெய்வங்கொண்டீர்அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்"
"இங்குநாம் சிலர்க்குப் பூசை இயற்றினால்"
"காண்பவன் சிவனே யாகில்"
"தாபர சங்க மங்கள்"
"அரனடிக் கன்பர்" (சித்தி—சுபக்—சூத்—2, செய்—25,26, 27 28,29)என்பன இதன்வழிநூலார்விரித்தவாறுஅறிக.

ஆன்மாக்கள் செய்த கன்மங்களையறிந்து கூடி நுகர்விப்பன் என்றதற்கு:—

"......இதமகி தங்களெல்லா மிறைவனே"
"இறைவனிங் கேற்ப தென்னை"
"நிக்கிர கங்கள் தானும் நேசத்தால்"
"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்"
என்பனவற்றால் அறிக. (சித்தி—சுபக்—சூத்—2, செய்—13, 14, 15, 16)

"இம்மையின் முயற்சி யானே"
"இருவினைச் செயலின்"
(சித்தி—சுபக்—சூத்—2, செய்—7, 8) என்பனவற்றால் முன் செய்த கன்மம் புசிப்பதறிக.

"செயல்களே பலத்தைச் செய்யும்"
"செய்தவர் மனத்தே யெல்லாச் செய்தியும்"
"தானஞ்செய் பொருட ரித்தோர்"
"உலகுடல் கரணம் காலம் உறுபலம்"

(சித்தி—சுபக்—சூத்—2, செய்—17, 20 21, 22) என்பனவற்றால் கர்த்தா கூட்டுமாறு அறிக.

அவ்வவ யோனிதோறும், அவ்வவ்விடங்கள்தோறும் என்பது ஆன்மாவும் அறியாது, கன்மமும் அறியாது என்பது அறிக.

இப்படி இந்த வெண்பாவால் அப்பல பொருளும் விரித்தவாறு அறிக.

கர்த்தா கன்மத்துக்கு ஈடான தேகத்தை ஆன்மாக்களுக்குக் கூட்டுவன் என்னும் துணி பொருட் பக்கத்துக்கு, காந்தமும் பசாசமும்போல என்னும் சபக்கமும்; கூட்டானேல் கூட்டாது என்னும் விபக்கமும் வந்தவாறு காண்க.

### உதாரண வெண்பா — 7.

நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலார் பொன்வாள்
அலர்சோகம் செய்கைமலத் தாம்.

### கருத்து

இது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று மலமும் அநாதி, கர்த்தா சருவஞ்ஞன், ஆன்மா கிஞ்சிஞ்ஞன் என்பதூஉம், கர்த்தா அவிகாரி என்பதூஉம் கூறுகின்றது.

இதன்பொருள்

நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லில் புதிது அன்று தொன்மையே—நெல்லுக்கு முளையும் தவிடும் உமியும் அநாதியே, செம்புக்குக் களிம்பு சொல்லுமிடத்துப் புதிதாகவுள்ளதல்ல, அநாதியிலே யுண்டானது,—

ஏகாரம் தேற்றம்.

வல்லி மல கன்மம் அன்று உள ஆம் — விலங்காகிய கன்மமலமும் ஆணவமலமும் மாயாமலமும் அவைபோல அநாதியிலே உள்ளதாம்,—

வள்ளலார் செய்கை — கர்த்தா இவையிற்றைச் செய்யும் செயல்,—

ஆல் அசை.

பொன் வாள் அலர் சோகம் செய்கை — ஆதித்தனுடைய கிரணங்கள் அலர்வனவற்றை அலர்த்தியும், குவிவனவற்றைக் குவித்தும் செய்யும் செயல்போலும்,-

இப்படிச் செய்யவேண்டியது என்னே? எனின்,

மலத்து ஆம் — ஆணவமலத்தைப் புசிக்குதல் காரணமாக ஆம்,—

மலம் மூன்றும் ஒருகாலத்து உளது என்பது தோன்ற நெல்லுககு உமியும், செம்பிற் களிம்பும்போல என்றும். எனவே, ஆன்மா அநாதிமல சம்பந்தனுய் வினைக்கு ஈடாகக் கர்த்தா கூட்டின தேகத்தேநின்று பிராரத்த கன்மம் புசிப்பது என்பதனுல் கிஞ்சிஞ்ஞத்துவமும், கர்த்தாவுக்குச் சர்வஞ்ஞத்துவமும் கூறினர்.

ஆதித்தனுடைய சந்நிதியிலே அலர்வன அலர்ந்து குவிவன குவிந்துவர அவன் விகாரமற்று இருந்தாற் போல, கர்த்தாவும் விகாரமற்றிருப்பது கூறினர்.

ஆதித்தனுடைய ஒரு கிரணம் பலவிதமானாற் போல, கர்த்தாவினுடைய சிற்சத்தியும் பலவிதம். ஆண்டும், அப்பொழுது கர்த்தாவும் போகாதிகாரவானாகி இச்சா ஞானக்கிரியைகளை யுடையவனாவன். அப்பொழுது அந்தச் சிற்சத்தி இச்சா சத்தி என்றும், ஞானசத்தி என்றும், கிரியா சத்தி என்றும் பெயரை யுடைத்தாம்.

"ஒன்றதாயிச்சாஞானக்கிரியையென்றொருமூன்றாகி நின்றிடும் சத்தி" (சித்தி–சூத்–1, செய்–63) என்றார் வழிநூலார்.

மலம் அநாதி என்பதற்கு:—

"ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனா யாதி
அன்றதாய்" (சித்தி–சூத்–2, செய்–80) என்றார்.

மாயாமலம் அநாதி என்பதற்கு:—

"நித்தமா யருவா யேக நிலையதாய்"
(சித்–சூத்–2, செய்–53) என்றார்.

கன்மமலம் அநாதி என்பதற்கு :—

"தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனும்...."

அஃது எத்தால்? என்னில், ஆன்மாக்களினுடைய கன்மங்களுக்கிடாக உண்டான தேகத்திலே நின்றும் இலய போகாதி காரியமாய், "தந்து, நன்மைதீமையினு மின்பத் துன்பினும் நாடிக் காண" (சித்தி–சூத்–2, செய்–39) என்றார்.

கன்மம் என்றது புண்ணிய பாவங்கள். அது,

" இருவினைச் செயல்கா ணிம்மை
யிரும்பொரு ளின்பம் வேண்டி
வருவினை செய்யுங் காலை "

(சித்தி–சூத்–2, செய்–8) என்பதனுலறிக.

மாயை என்றது யாது ? என்னில், சுத்த மாயையும் அசுத்த மாயையும்.

இவை ஒன்ருே ? இரண்டோ ? என்னில், அவை ஒன்ருய் இருக்கச்சே இரண்டாயிருக்கும்.

அஃது என்போல ? என்னில், கண்ணுடியில் இரு புறமும்போல.

ஆனுல், சுத்த மாயையில் உள்ளவை எவை ? அசுத்த மாயையில் உள்ளவை எவை ? என்னில்,

சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் இவை ஐந்தும் சுத்த மாயையிலே தோன்றும். சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியாதிய வாக்குகளும் தோன்றும்.

அது ஞானமாய் நின்றபொழுது சிவம் என்று பெயராம். கிரியையாய் நின்ற பொழுது சத்தி என்று பெயராம். அந்த ஞானமும் கிரியையும் தம்மில் சமமொத்து நின்றபொழுது சதாசிவம் என்று பெயராம். அதில் ஞானம் குறைந்து கிரியை அதிகமானபொழுது மகேசம் என்று பெயராம். அதிற் கிரியை குறைந்து ஞானம் அதிகமானபொழுது உருத்திரமாம். அது சுத்த வித்தை; இவையிற்றுக்கு முற்பிற்பாடில்லை: நின்ற நின்ற நிலைகளிலே பெயர் பெற்றன.

*அன்றியும், விந்துவில் ஆயிரத்தொன்றிலே ஞானம் தோன்றியது என்றும், ஞானத்தில் ஆயிரத் தொன்றிலே கிரியை தோன்றியது என்றும், இப்படி இப்படித் தோன்றின கிரமம் சொல்லுவாரும் உளர்.*

''வித்தைகள் வித்தை யீசர் சதாசிவர் என்றி வர்க்கு
வைத்துறும் பதங்கள்'' (*சித்தி–சூத்–1, செய்–25*)

''ஞானமே யான போது சிவன்ருழில் ஞான
மொக்கில்''

''வித்தையோடீசர்சாதாக்கியஞ்சத்திசிவங்களைந்தும்
சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்திர வடிவ மாகும்''
(*சித்தி–சுப–முதற்சூ–65, 66 செய்*) என்பனவற்ருல் *அறிக*.

*'விந்துவின் மாயை யாகி' என்பதனுல் சுத்த மாயை அசுத்த மாயை இரண்டும் வேறல்ல என்பது அறிக.*

*இனி, காலம் முதலாகப் பிருதிவியந்தமாக அசுத்த மாயையிலே தோன்றும்; அவை தோன்றுமாறு:—*

*மாயையிலே காலமும், நியதியும், கலையும், வித்தை யும், அராகமும், புருடனும் இவை தோன்றும். ஆக மாயையுடன் ஏழு. இவை சுத்தமும், அசுத்தமுமாய் இருக்கும் முன் சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும்.*

*அந்த மூலப்பிரகிருதியிலே இராசத தாமத, சாத்துவிகம் என்னும் மூன்று குணமும் தோன்றும். அந்த மூலப்பிரகிருதியாகிய அவ்வியத்தத்திலே சித்த மும், புத்தியும் தோன்றும்.*

அவ்வியத்தம், மூலப்பிரகிருதி, மான் என்பன ஒரு பொருட்சொற்கள்.

அந்தப் புத்தியிலே ஆங்காரம் தோன்றும். அந்த ஆங்காரம் பூதாதியாங்காரம், வைகரியாங்காரம், தைசதவாங்காரம் என மூன்றும். தைசத ஆங்காரத்தே மனம் தோன்றும். வைகரியாங்காரத்திலே ஞானேந்திரியமும், கன்மேந்திரியமும் தோன்றும்.

ஞானேந்திரியமாவன — செவி, மெய், கண், வாய், மூக்கு. இவையிற்றின் விடயம் — சத்த, பரிச, ரூப, ரச, கந்தம். கன்மேந்திரியங்களாவன — வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். இவையிற்றின் விடயமாவன — வசன, கமன, தான, விசர்க்க, ஆனந்தம். முன் சொன்ன பூதாதியாங்காரத்தே சத்த, பரிச, ரூப, இரத, கந்தம் ஐந்தும் தோன்றும். சத்தத்திலே ஆகாசம் தோன்றும், பரிசத்திலே வாயுத் தோன்றும், உரூபத்திலே தேயுத்தோன்றும், இரதத்திலே அப்புத்தோன்றும், கந்தத்திலே பிருதிவி தோன்றும். இந்தச் சத்தாதியும், வசனாதியும், ஒன்றுக்கொன்று ஆதாரமாம். ஆறும் விழுதும்போல் என அறிக. இப்பொருள் :—

"மாயையிற்காலமோடுநியதிபின்கலாதிதோன்றும்"
"விச்சையி னராகம் தோன்றி"
"வருங்குண வடிவாய்"
"சித்தமா மவ்வி யத்தம்"
"ஆங்காரம் புத்தி யின்க ணுதித்(து)"
"மனமது தைச தத்தின் வந்து"

"நற்செவி துவக்குக் கண்ணு"
"வாக்கொடுபாதம்பாணிபாயுவோடுபத்தமைந்தும்"
"ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று"
"சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளில்"
(சித்தி–சூத்–2, செய்–54 56, 57, 58 59, 60, 61, 62, 64, 65,) என்பனவற்றால் அறிக.

இவை தூல, சூக்கும, பரமாய் நிற்கும். "தத்துவ ரூப மாகும் தருமரு வுருவ மெல்லாம்" (சித்–சூத்–2, செய்–71) என்பதனால் அறிக.

ஒடுங்குமாறு உணர்த்துவது:— "தத்துவ மெண் மூன் றுஞ் சென் றொன்மதத் துவத்தொ டுங்கும்" என்பதனால் (செய்–72) அறிக. இதிற் சிவம் என்றது விந்துவை.

ஆணவமலத்தைப் போக்க என்றது:—

"எல்லாமாய்த் தத்து வங்கள் இயைந்தடுதன் அணுவுக் கென்னில்" (சித்–சூத்–2, செய்–79) என்பதனால் அறிக.

ஆன்மா அநாதிமலசம்பந்தன் என்றும், அந்த மலம் மூன்றும் ஒருகாலத்து உள்ளதென்றும் கூறிய பக்கத்துக்கு; நெல்லுக்கு உமியும் செம்பினில் களிம்பும் போல என்று சபக்கம் காட்டியவாறுகாண்க.

கர்த்தா அவிகாரியாயிருந்து பிரபஞ்சகிருத்தியம் பண்ணுவது என்னும் பக்கமும்; அஃது எத்தால்? மலத்தைநீக்கி முத்திகொடுத்தற்கு எனவே, அருள் காரணமாக என்னும் ஏதுவும்; அஃது என்போல? என்னில், ஆதித்தனைப்போல என்னும் சபக்கமும் காட்டியவாறு அறிக.

*மலத்தை நீக்க எனவே முத்திகொடுக்க என்பது தானே ஆயிற்று.*

"மும்மலநெல்லினுக்குமுளையொடு தவிடு மிப்போல்"
*அன்றிப், பஞ்சமலமும் கூறுமது:*

"மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்று"
*(சித்தி—சுபக்—சூத்—2, செய்—86, 87) என்பதனுல் அறிக. இவை விரித்துக் கூறுக.*

இரண்டாமதிகரணம் முடிந்தது.

---

## மூன்றுமதிகரணம்

---

### உதாரண வெண்பா—8

**கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து**
**விண்படர்ந்தத் தூடு வினையினுல்-கண்செவிகெட்**
**டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனம்**
**தள்ள விழும்கருவில் தான்.**

### கருத்து

*இது ஆன்மாவுக்குத் தேகம்விட்டால் அறிவில்லை என்றும், மீண்டு ஒரு தேகம் எடாது என்றும் சொல்வோர்க்கு அவை உண்டு என்கின்றது.*

### இதன்பொருள்

*கண்ட நனவை கனவு உணர்வில் தான் மறந்து— ஆன்மா முன்புகண்டு பரிசித்துப் போந்த நனவிலுள்ள காரியங்களைத் தான்மறந்து கனவிலே நின்று அறியும் அறிவைப்போல,—*

*கண் செவி கெட்டு*—கண் செவி முதலாகிய தூல சரீரம் இறந்து,—

*உளம் அணு ஆய் விண் ஊடு படர்ந்து சென்று*—ஆன்மா சூக்குமதேகத்துடனே ஆகாய வழியாகப் போய்,—

*வினையினல்*—முன்பு செய்த கன்மங்களாலே,—

*உள்ளதே தோற்ற*—நரகம் சுவர்க்கம் முதலிய போகங்களுக்கு ஏற்ற தேகம் வந்து உண்டாக,—

*மனம் தள்ள விழும் கருவில் தான்*—மனத்தையும் தோற்பிக்கும்படி விரையக் கர்ப்பாதானத்தே விழும் என்றவாறு.

மனம் தள்ள என்றது மனமும் தோற்க என்றதாம்.

மனம் நினைத்தவிடத்தே ஓர் மாத்திரைக்குட் செல்லும்; அதிலும் விரையச் செல்லும் என்பதாம்.

"வினைமாண் துப்பின் மனமாண் தேரில்
துடிபல பகுத்த விசையிற் சேறல்"
என்றார். (ஞானமிர்தம்–20 அகவல்)

"மலமாயை கன்ம மாயேயம் திரோதாயி"
(சித்தி–சூத்-2, செய்–88) என்றார் வழிநூலார்.

விழும் என்ற உம்மையால் விழாமற் பாவமிகுதிகளாலே பாடாணம்போற் கிடக்கும் என்பதூஉம் ஆம். அது—

"உடல்விடா யோனி பற்றி யுதிப்பினு முதிக்கும்"
(சித்தி—சூத்—2, செய்-37) என்பதனாலறிக.

"பூதனு சரீரம் போனாற் புரியட்ட ரூபந் தானே"
(செய்—36) என்பதனால் நரக சுவர்க்க போகம் துய்ப்பதறிக.

நனவின்கண் உண்டாகிய கனவின்கண் மாறிச் சீவித்தாற்போல, ஆன்மா தேகத்துக்கீடான அறிவு மாறிச் சீவித்து நிற்கும்.

அறிவு கெடாது என்றும், தேகம் மாறும் என்றும், சூக்கும தேகத்தோடே சென்று நரக சுவர்க்கம் துய்க்கும் என்றும் கூறிய பக்கத்துக்குக் கனவு சபக்கம் ஆயினவாறு காண்க.

## உதாரண வெண்பா — 9

**அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு**
**பரகாயம் போய்வருமப் பண்பும் — பரவில்**
**குடாகாய வாகாயக் கூத்தாட்டாம் என்ப**
**தடாதுள்ளம் போமா றது.**

## கருத்து

இது தூலசூக்குமங்கள் ஒன்றுகெட்டு ஒன்றுதோன்றும் என்போர்க்கும், அறிவுகெடும் என்போர்க்கும், அச்சு மாறாது என்போர்க்கும், கர்த்தா ஆன்மாவுமாய் நின்று பின் தோன்றாது என்போர்க்கும், ஏகான்மவாதிகளுக்கும் அவையல்ல என்றும் அறிவும் தேகமும் மாறிப்பிறக்கும் என்றும் கூறுகின்றது.

இதன்பொருள்

*உள்ளம் போமாறு அது பரவில் — ஆன்மா ஒரு தேகத்தைவிட்டு ஒரு தேகத்தை எடுக்கச்செல்லும் முறைமையைச் சொல்லில்,—*

*குடாகாய ஆகாயம் அடாது - குடத்தில் நின்ற ஆகாயம் மகாகாயத்தோடே கூடினாற்போலக் கூடும் என்பது பொருந்தாது,—*

*இது வேதாந்தியை மறுத்தது.*

*கூத்தாட்டாம் என்பது அடாது—ஒருவன் பல கூத்துக்கட்டி ஆடினாற்போலும் என்பது பொருந்தாது,—*

*இது ஏகான்மவாதியை மறுத்தது.*

*அரவு தன் தோல் உரிவும் — பாம்பு தன்னுடைய தோலையுரித்துப் போட்டுப் போனாற்போலவும்,—*

*இது ஒன்று கெட்டு ஒன்று தோன்றும் என்போர்க்குக் கூறியது. அஃதாவது, தூல உடம்பு ஒழிந்து சூக்கும உடம்பில்லை என்போர்க்கு உண்டு என்றதாம். இப்பொருள்:—*

"சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா"
"விதிப்படி சூக்கு மத்தே யுருவரும்"
"தூலமா முடம்பி னுக்குச் சூக்கும முதல தற்கு"
(*சித்தி-சூத்-2, செய்-48, 49, 50*) *என்பனவற்றாலறிக.*

*அ கனவும்—முன்னர்க்கூறிய கனவுபோலும்,—*

என்றது : தூல உடம்புடனே கூடி நனவின்கண் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த அறிவு கெடாமல் கனவின்கண் சூக்கும தேகத்துடனே கூடி நின்றாற்போல என்றதாம். எனவே, அறிவு கெடாது என்று மீளவும் வலியுறுத்திக் கூறியவாறு அறிக.

வேறு பரகாயம் போய் வரும் அ பண்பும் — தம் முடைய உடம்பு வேறாகப் பரகாயப் பிரவேசம் பண்ணு தலைச் செய்வோருடைய முறைமையும்போலும் என்ற வாறு.

எனவே, அச்சு மாறாது என்போருக்குக் கூறிய தாம். இப்பொருள்:—

"சங்கமந் தாப ரங்கள்"
"நரர்களாய்த் துய்ப்ப ரென்னில்"
"வண்டுக ளாகி மாறு மயிர்க்குட்டி"
"அகலிகை கல்ல தானாள்"
"செப்பினாய் மாற வேறு"
"அவ்வவ யோனி தோறும்"

(சித்தி–சூத்–2, செய்–41, 42, 43, 44, 45, 46) என்பன வற்றால் அறிக.

சூக்குமம் கெடாது என்றும், அறிவு கெடாது என்றும், அச்சு மாறாது என்றும் கூறிய பக்கத்துக்கு; அரவுபோலவும், அக்கனவுபோலவும், பரகாயப் பிர வேசம்போலவும் கூறிய சபக்கம் காண்க.

"பன்னக மண்ட சங்கள்"
(சித்தி–சூத்–2, செய்-38) என்பனவற்றால் அறிக.

**மூன்றாமதிகரணம் முடிந்தது.**

---

# நான்காமதிகரணம்.

## உதாரண வெண்பா — 10.

எங்குமுளன் என்றளவை ஒன்றன் றிரண்டெனின்
எங்கும் உளனன் றெவற்றெவனும்—அங்கண்
அவையவ னன்றில்லைப் பொன்னொளிபோ லீசன்
அவையுடைமை ஆளாநா மங்கு.

### கருத்து

*இது கர்த்தா ஏகாந்தம் அநேககாந்தமின்றி அகண்ட பூரணனாய் நிறைந்து நிற்றல் கூறியது.*

### இதன் பொருள்

*எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று இரண்டு என்னில் — கர்த்தா அவன் அவள் அது என்னும் அவற்றுள் நிற்கின்றான் என்ற பிரமாணத்தாலே ஒருவன் அல்ல பல என்று நீ சொல்வாயாகில்,—*

*ஒன்றல்ல வெல்லாம் பல என்பது தமிழ்நடை. என்றது, கண்டிக்கப்படான் ஆகலால் ஒன்றல்ல என்றதாம்.*

*எங்கும் உளன் — அவன் எவ்விடத்தும் பூரணமாகி நிறைந்து நிற்பன்,—*

*எவற்று எவனும் அன்று — யாதொருபொருள் யாதொரு பொருள்களிலே கண்டிக்கப்பட்டு நிற்பான் அல்லன்,—*

என்றது: தூல உடம்புடனே கூடி நனவின்கண் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த அறிவு கெடாமல் கனவின்கண் சூக்கும தேகத்துடனே கூடி நின்றாற்போல என்றதாம். எனவே, அறிவு கெடாது என்று மீளவும் வலியுறுத்திக் கூறியவாறு அறிக.

வேறு பரகாயம் போய் வரும் அ பண்பும் — தம் முடைய உடம்பு வேறாகப் பரகாயப் பிரவேசம் பண்ணு தலைச் செய்வோருடைய முறைமையும்போலும் என்ற வாறு.

எனவே, அச்சு மாறாது என்போருக்குக் கூறிய தாம். இப்பொருள்:—

"சங்கமங் தாப ரங்கள்"
"நரர்களாய்த் துய்ப்ப ரென்னில்"
"வண்டுக ளாகி மாறு மயிர்க்குட்டி"
"அகலியை கல்ல தானாள்"
"செப்பிஞய் மாற வேறு"
"அவ்வவ யோனி தோறும்"

(சித்தி–சூத்–2, செய்–41, 42, 43, 44, 45, 46) என்பன வற்றால் அறிக.

சூக்குமம் கெடாது என்றும், அறிவு கெடாது என்றும், அச்சு மாறாது என்றும் கூறிய பக்கத்துக்கு; அரவுபோலவும், அக்கனவுபோலவும், பரகாயப் பிர வேசம்போலவும் கூறிய சபக்கம் காண்க.

"பன்னக மண்ட சங்கள்"

(சித்தி–சூத்–2, செய்-38) என்பனவற்றால் அறிக.

**மூன்றுமதிகரணம் முடிந்தது.**

---

## நான்காமதிகரணம்.

### உதாரண வெண்பா — 10.

**எங்குமுளன் என்றளவை ஒன்றன் றிரண்டென்னின்**
**எங்கும் உளனன் றெவற்றெவனும்—அங்கண்**
**அவையவ னன்றில்லைப் பொன்ஞெளிபோ லீசன்**
**அவையுடைமை ஆளாநா மங்கு.**

கருத்து

*இது கர்த்தா ஏகாந்தம் அநேககாந்தமின்றி அகண்ட பூரணனாய் நிறைந்து நிற்றல் கூறியது.*

இதன் பொருள்

*எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று இரண்டு என்னில் — கர்த்தா அவன் அவள் அது என்னும் அவற்றுள் நிற்கின்றான் என்ற பிரமாணத் தாலே ஒருவன் அல்ல பல என்று நீ சொல்வாயாகில்,—*

*ஒன்றல்ல வெல்லாம் பல என்பது தமிழ்நடை. என்றது, கண்டிக்கப்படான் ஆகலால் ஒன்றல்ல என்றதாம்.*

*எங்கும் உளன் — அவன் எவ்விடத்தும் பூரண மாகி நிறைந்து நிற்பன்,—*

*எவற்று எவனும் அன்று — யாதொருபொருள் யாதொருபொருள்களிலே கண்டிக்கப்பட்டு நிற்பான் அல்லன்,—*

எனவே, அகண்ட பரிபூரணன் என்றதாம்.

அங்ஙண் அவை அவன் அன்று இல்லை—அவன் அவள் அது என்றவையெல்லாம் கர்த்தாவையொழிந்து இல்லையாம்,—

எனவே, கர்த்தா பிரபஞ்சத்தை நீங்கி நில்லான் என்பதாயிற்று. அஃது என்போல? என்னில்,

பொன் ஒளி போல்—ஆதித்தனுடைய பிரகாசம் போல,—

என்றது ஆதித்தனுடைய பிரகாசம் எங்கும் தானாய் நிற்கச்சே ஒன்றின் அகப்படாமல் நின்றது போல என்றதுவாம்.

அவை உடைமை ஆள் ஆம் நாம் அங்கு— (கர்த்தாவும் பிரபஞ்சமும் இப்படியாகில், முன் சொன்ன விந்து நாத வடிவாகிய சதாசிவம் முதலியவையெல்லாம் எப்படி? என்னில்,) அவை அவனுக்கு உடைமையாய் ஏவற்றொழில் செய்யும் அவ்விடத்து என்றவாறு.

இப்பொருள்:—

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன்"
"சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மனி தானாகி"
"சத்திதான் நாத மாதி தானாகும்"
"சிவம்சத்தி தன்னை யீன்றும்"

(சித்தியார்—சூத்-2, செய்—74, 75, 76, 77) என்பனவற்றால் அறிக.

*அவ்விடத்து என்றது அந்தந்தத் தொழில்களை அவர்கள் செய்யுமிடத்து என்றதாம். எனவே, அவையிற்றுக்கும் இத்தன்மைய என்றதாம்.*

*கர்த்தா ஓரிடத்து மறைந்து நிற்பானுமல்லன், பலவாகக் கண்டிதப்பட்டு நிற்பானுமல்லன், எங்கும் ஒழிவற நிறைந்து நிற்பன் என்னும் துணி பொருட் பக்கத்துக்கு, ஆதித்தனைப் போல என்னும் சபக்கம் காட்டியவாறு காண்க.*

*'அவையுடைமை ஆளாநா மங்கு' என்பதற்கு அப்படிச் சொல்லப்பட்ட பிரபஞ்சம் உடைமையுமாய், அடிமையுமாய் வரும் என்பாரும் உளர்.*

**நான்காமதிகரணம் முடிந்தது.**

---

**இரண்டாஞ்சூத்திரம் முடிந்தது.**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## பொதுவியல்பு – பிரமாணவியல்

# மூன்றாஞ் சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# மூன்றாஞ்சூத்திரம்.

உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புல னொடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா.

## கருத்து

*இச்சூத்திரம் என் நுதலிற்றோ? எனின், ஆன்மரூபம் சாதிக்கின்றது.*

## இதன் பொருள்

*மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா உளது — மாயை முதலிய தத்துவங்களாலே இயந்திரிக்கப்பட்ட உடம்பிலே ஆன்மா உண்டு,—*

*அஃது எத்தால்? என்னில்,*

*இலது என்றலின் உளது — இல்லை என்று சொல்லுகையால் உளது,—*

இல்லை என்கையால் உள்ளதாம் என்பது எங்ஙனே? என்னில், இல்லை என்று சொல்லப்பட்டது ஒன்று உண்டே, அதுதான் ஆன்மா என்றதாம்.

எனது உடல் என்றலின் உளது — என்னுடைய உடம்பு என்று சொல்லுகையால் உண்டு,—

அஃது எங்ஙனே? என்னில், என்னுடைய பொருள் என்றவையெல்லாம் வேறுஞற்போல என்றதாம்.

ஐம்புலன் அறிதலின் உளது—சத்தம் முதலாகிய ஐம்புலன்களையும் அறிதலால் உளது,—

ஒடுக்கம் அறிதலின் உளது — சாக்கிரம் முதலாகிய அவத்தைகளிலே ஒடுங்கும் முறைமை அறிதலால் உண்டு,—

கண்படில் உண்டி வினை இன்மையின் உளது — அறிவிக்க அறிகையால் உண்டு,—

உளது என்பதனை எவ்விடத்தும் கூட்டுக.

"புனைவுறு செய்யுட் பொருளை யொருவழி
வினைநின்று விளக்கினது விளக்கெனப் படுமே"

"முதலிடை கடையென மூவகை யான"

என்பதனால் இதனுள் ஆன்மா உண்டு என்னும் பக்கத்துக்குச் சபக்கமும் காட்டியவாறு காண்க. இவை மேல்வரும் வெண்பாக்களில் விரித்துக் கூறுமாறு காண்க.

இனி, 'இலது என்றலின்' என்பதற்குப் பிரமாணம்:—

# முதலதிகரணம்

## உதாரண வெண்பா — 1.

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீயனைத்தும் — நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலால் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

### கருத்து

*இது பதிபசுபாசமாகிய முதல் மூன்றுமில்லை, உடம்பே அறியும் என்றவனைப்பற்றி அந்த மூன்று முதலும் உண்டு என்பதுவும், உடம்பு அறியாது அந்த உடம்புக்கு வேறாகிய ஆன்மா அறியும் என்பதுவும் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*அஞ்சு எழுத்தாய் நின்று—ல வ ர ய அ என்னும் அஞ்செழுத்தையுமுடைய பூதங்களுடனே கூடி அது அது என்னும்படி நின்று,—*

*அனைத்தும் அன்று அன்று என விட்டு நின்று ஒன்று உளது அதுவே நீ—அப்படி நின்றவை எல்லாத்தையும் இது அல்ல இது அல்ல என்று நீங்கி நின்றது ஒன்று உண்டே அதுதான் காண் ஆன்மா,—*

*அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலால் சார்மாயை நீ அல்லை — இந்திரியங்கள் எல்லாவற்றினும் இப்பொழுது கூடிநின்று, கண்ணாடி*

அடுத்ததொன்றைக் காட்டி நிற்கச்சே அந்தக்கண்ணாடி அடுத்ததாகாத தன்மைபோல, தேகாதி அவயவங்களைப் பொருந்தி உன்னைக் காட்டுதலாலே உன்னைப் பொருந்தி வருகிற மாயையின் காரியமாயுள்ளவை நீயல்லை,—

தற்பரமும் அல்லை தனி— ஆனால், ஐம்புலன்களிடமாக நின்று எல்லாத்தையும் அறிவேன் யான் ஆகில், யானே கர்த்தா என்பையாகில், யாதொன்றுக்கும் மேலாயுள்ளது யாதொன்று, அதற்கு மேலாயுள்ளது அந்தப்பரம்: அதுவும் அல்லை, நீ தனி ஒரு முதல்காண் என்றவாறு.

கண்ணாடி அடுத்ததனைக் காட்டி நின்றாற்போல என்றும் ஆம். அஃதாவது, சடமாய் உள்ள அவயவங்கள் ஆன்மாவுக்கு உண்டாகிய விகாரங்களாலே பொருந்திய இன்பதுன்பங்களைக் காட்டிநிற்கும் என்றதாம்.

இனி, கண்ணாடியைக் காண்பான் ஒருவனுக்கு ஆதித்தப் பிரகாசமின்றிக் காணவொண்ணாதாற்போல, ஆன்மா இந்திரியங்களிடமாக நின்று சீவிக்குமிடத்துக் கர்த்தாவாலொழிந்து சீவியாது என்பதுவும் கூறினாராயிற்று. எனவே, மூன்று முதலும் தரிசிப்பித்தவாறு காண்க. கண்ணாடியை ஒருவன் எடுத்து நடத்தினாற்போல, தேகத்தையும் ஒருவன் எடுத்து நடத்துவன் என்பதாம். எனவே, ஆதித்தன் இல்லையாகில் கண்ணாடியாலும் சேட்டையில்லை என்றதாயிற்று.

"உடலின்வே றுயிரே னிந்த
வுடலன்றோ வுணர்வ தென்னின்"

"தோற்பாவைக் கூத்துந் தொல்லை
மரப்பாவை யியக்கமும்"

(சித்தி-சுபக்-சூத்-3, செய்-2; சூத்-4, செய்-24) *என்றார் வழிநூலார்.*

*பூதங்களிடமாக நின்று ஆன்மா சீவிக்குமிடத்துக் கர்த்தாவின்றிச் சீவியாது என்று கூறிய பக்கத்துக்கு, கண்ணாடியும் அடுத்த பொருளும் ஆதித்தனும் போல என்னும் சபக்கமும்; அடுத்த பொருளும் ஆதித்தனும் இல்லாத பொழுது கண்ணாடிக்குச் சேட்டையில்லை என்னும் விபக்கமும் காட்டியவாறு காண்க.*

**முதலதிகரணம் முடிந்தது.**

---

## இரண்டாமதிகரணம்

---

*'எனதுடல் என்றலின்' என்பதற்குப் பிரமாணம்:—*

**உதாரண வெண்பா — 2**

**எனதென்ற மாட்டின் எனதலா தென்னு**
**துனதலா வுன்கைகா லாக்கை—எனதென்றும்**
**என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்**
**உன்னிலவை வேறா முணர்.**

கருத்து

*இது உடம்பு அறியாதாகில் உணர்வறியாதோ? என்போருக்கு உடம்பும் உயிரும் அறியாது என்கின்றது.*

## இதன்பொருள்

எனது என்ற மாட்டின்—ஒருவன் தன்னுடைய பதார்த்தத்தை என்னுடையது என்று சொன்னபடியாலே,—

எனது அலாது என்னாது—தன்னுடைய பதார்த்தமல்லா தொழிந்து என்னுடைய பதார்த்தமல்ல என்று சொல்லாது,—

எனவே, தன்னுடைய பதார்த்தத்தை தன்னுடையதென்றும், தன்னுடையதல்லாததனைத் தன்னுடையது அல்ல என்றும் சொல்வது உலக வழக்கம் என்றதாம். ஆதலால்,

உனது அலா உன் கை கால் ஆக்கை எனது என்றும் என் அறிவு அது என்றும் உரைத்து நீ நிற்றி காண் உன்னில் அவை வேறு ஆம் உணர்—உன்னுடையது அல்லாதகையையும் காலையும் உடம்பையும் என்னுடையது என்றும், உன்னுடையது அல்லாத அறிவை என்னுடைய அறிவு என்றும் நீசொல்லி நிற்கின்றாய்; யாதொருபொருள் என்னுடையது என்றது அது தனக்கு வேறாம் ஆதலால் உனக்கும் அவை வேறாய் இருக்கும்: விசாரித்துப்பார் என்றவாறு.

'எனதென்ற மாட்டின் எனதலா தென்னாது' என்றதற்கு என்னுடையதல்ல என்று சொல்லாதே, என்னுடையது என்று சொன்னபடியாலே என்றும் ஆம்.

*அறியப்படுவன யாவையும் அறிந்து யான்நினைந் தேன், யான்செய்தேன், யான் சொன்னேன் என்று வருகையால் அறிவையுடையது வேறு என்றதாம்.*

"என்னுடல் பொறிபி ராணன்"

"பொன்னணி யாடை மாலை"

"உடலியா னல்லே னிந்த வுணர்வியா னல்ல வான
கடனியா தென்னின்"

"புந்தியைமனமதென்றுமனமதுபுந்தியென்றும்"

(*சித்தி-சூத்-4, செய்*–25, 26, 27, 28) *என்றார் வழிநூலார்.*)

*எனவே, ஆன்மா தேகாதியுடனே கூடி மனோ வாக்காலே அறிந்துரைத்துச் செய்து அறிவினுக்கும் ஆதாரமாய் நிற்கும் என அறிக.*

*இது 'எனதுட லென்றலின்' என்றதற்குச் சாதன சாத்தியப்பொருட்டாக, சம்பிரதாயதிட்டியாக, உடம்புக்கு ஆன்மா வேறு என்னும் பக்கத்துக்கு உலக வழக்கம் சபக்கமாயினவாறு காண்க.*

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

---

## மூன்றுமதிகரணம்

---

*'ஐம்புலன் அறிதலின்' என்றதற்குப் பிரமாணம்:—*

**உதாரண வெண்பா — 3**

**ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி**
**அன்றும் புலனுய அஞ்செழுத்தை—ஒன்றறிதல்**
**உள்ளதே யாகி அதுநீ தனித்தனிகண்**
**டுள்ளலவை யொன்றல்லே யோர்.**

## கருத்து

இது ஐம்பொறி யொழிய ஆன்மா இல்லை என்போர்க்கு உண்டு என்கின்றது

## இதன்பொருள்

ஒன்று அறிந்தது ஒன்று அறியாது ஆகி உடல் மன்னி அன்றும் புலன்—செவி மெய் வாய் கண் மூக்கு ஆகியபொறிகள் உடலிலே ஓர் இந்திரியம் அறிந்ததனை ஓர் இந்திரியம் அறியாதாகி மாறுபடும்,—

ஆய அஞ்சு எழுத்தை ஒன்று அறிதல் உள்ளதே ஆகியதுநீ—ஐந்து பொறிகளுக்கும் விடயமாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்கள் ஐந்தையும் அறிந்தது ஒன்றுண்டே அப்படி உண்டாகியதுதான் காண் நீ,—

நீ என்றது ஆன்மா. அப்பொழுதும் பொறிக ளன்றோ? அறிந்தது என்கின்றாயாகில்.

தனி தனி கண்டு உள்ளல் அவை ஒன்று அல்லை ஓர்—பொறிகள் ஐந்தும் தமக்கு விடயமான ஐந்தையும் தனியே தனியே கண்டித்து செவிக்கு விடயம்இது, கண்ணுக்கு விடயம்இது, மெய்க்கு விடயம்இது, வாக்குக்கு விடயம்இது, மூக்குக்கு விடயம்இது என்று நினைத்தலால்; அவையிற்றில் ஒன்றல்லை நீ, விசாரித்துப் பார் என்றவாறு.

என்றது, அந்தந்த விடயங்களிலே போகிய விடத்து அழுந்தி சூட்சித்து அறிந்து பின்பு நீங்கின விடத்து அவையிற்றைக் கருதி நிற்றலாலே, நிச்சய கர்த்தா வேறொருவன் வேறே உண்டு, அதனை உனக் கேற்க விசாரித்துப்பார் என்றதாம்.

"அறிவதைம் பொறியே யென்னின்"
(சித்தி-சூத்-3, செய்-3) என்றார் வழிநூலார்.

*இது சாதன சாத்தியப்பொருட்டாகச் சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.*

முன்றுமதிகரணம் முடிந்தது.

---

## நான்காமதிகரணம்

---

*'ஒடுக்கம் அறிதலின்' என்றதற்குப் பிரமாணம்:-*

### உதாரண வெண்பா — 4.

**அவ்வுடலி னின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாங்கிடப்பச்**
**செவ்விதி னவ்வுடலில் சென்றெடுங்கி—அவ்வுடலின்**
**வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை**
**மாறலுட னீயல்லை மற்று.**

கருத்து

*இது பிராணவாயு அறியும் என்போர்க்கு அது அறியாது என்கின்றது.*

இதன்பொருள்

*அந்தக்கரணங்களைக் கருவியாகக்கொண்டு பிராணவாயு அறியும் என்கின்றாயாகில்,*

*அ உடலில் — முன்னர் அல்லவென்று சொன்ன உடம்பிலே,—*

*ஐம்பொறிகள் தாம் கிடப்ப* — செவி முதலாகிய பொறிகள் ஐந்தும் சேட்டையின்றிக் கிடப்ப,—

*நின்று உயிர்ப்ப* — பிராணவாயுநின்று உச்சுவாச நிச்சுவாசம் செய்ய,—

*செவ்வி தின் அ உடலில் சென்று ஒடுங்கி* — முறைமையாக அந்தந்த உடம்பிலே சென்று ஒடுங்கி,—

*அவ்வுடலின்* என்றது உணர்த்துமுறைமையின்றி ஆன்மா சாக்கிர முதலாகிய அவத்தைகளிலே ஒடுங்கு மிடத்து அந்தந்த அவத்தைகளுக்கு உண்டாகிய கருவி கள் அந்தந்த இடத்துக்கு உடம்பாம் ஆதலால் என அறிக.

*அ உடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி மீண்டு அதனை மாறலுடன்* — அப்படி அவத்தைப் பட்ட அவ்வுடம்பிலே வேறோர் உடம்பை எடுத்துக் கொண்டு நின்று கனவிலே வியாபித்து மீண்டும் அதனை உடனே மாறுகையால்,—

*நீ அல்லை* — நீ அந்தப் பிராணவாயு அல்லை,—

*மற்று* — கருவி என்ற அந்தக்கரணங்களும், அதற்கு என்றவாறு.

"மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை"
(தொல்–சொல்–இடையியல்-சூத்–14) இது வினைமாற்று.

'உடனீயல்லை' என்றது உடம்பு நீயல்லை என்பா ரும் உளர். அன்றியும், உடம்பும் நீயல்லை பொறிகளும்

*நீயல்லை பிராணவாயுவும் நீயல்லை என உடன் ஓதுவா ரும் உளர். அது புனருத்தியாம்.*

"அறிந்திடும் பிராணவாயு"
(*சித்தி-சூத்-3, செய்-4) என்றார் வழிநூலார்.*

*இதுவும் சாதன சாத்தியப்பொருட்டாகச் சம்பிர தாயதிட்டியால் அறிவித்தது.*

**நான்காமதிகரணம் முடிந்தது.**

---

## ஐந்தாமதிகரணம்

---

*'கண்படில் உண்டி வினையின்மையின்' என்றதற் குப் பிரமாணம்:—*

### உதாரண வெண்பா — 5.

**கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணுதே**
**உண்டி வினையின்றி உயிர்த்தலால்—கண்டறியும்**
**உள்ளம்வே றுண்டாய் ஒடுங்கா துடனண்ணில்**
**உள்ளதாம் உண்டிவினை ஊண்.**

### கருத்து

*இது அவயவம் பொருள் என்போர்க்கும், அரிசனமும் நீறும் கூடின இடத்தே ஒரு சிவப்பு எழுந்தாற்போலப் பூதக் கூட்டத்தே ஓர் அறிவு தோன்றும் என்போர்க்கும் அவை அல்ல என்கின்றது.*

இதன் பொருள்

கண்டு அறியும் இ உடலே காட்டு ஒடுங்க காணாதே — எல்லாப்பொருளையும் கண்டறியும் என்ற இந்த உடம்பு காட்டுகின்றவன் ஒடுங்கினபொழுது காண்பதில்லை,—

இது அவயவம் பொருள் என்போரை மறுத்தது.

அஃது எப்படி? என்னில், கண்ணாகிய கருவியும் காட்டுகின்ற ஒளியும் உண்டாயிருக்கக் கருத்து வேருய் நின்றவிடத்துக் கண் ஒரு பொருளையும் காணாதபடியாலே அறிவுவந்து கூடிற்றில்லையாம். பின்பு கண்யாதொரு பொருளையும் கண்டறிகையில் அறிவு வந்து பொருந்தியதாம். கையாற் கண்டறிகின்ற கண்ணுக்குக் கருதியறிகின்ற அறிவு வேறே உண்டு என்றதாம்.

உண்டி வினை இன்றி உயிர்த்தலால் கண்டு அறியும் உள்ளம் — உறக்கத்தில் ஊணும் உற்சாகமும் இன்றிக் கிடந்து உயிர்க்கையினாலே இந்த உடம்பிலே நின்று கண்டறிவது ஆன்மா,—

என்றது அவத்தைப்பட்ட இடத்துச் சுத்த தத்துவங்களை அநுபவிக்கை உடம்புக்கில்லை ஆதலானும், விழித்த இடத்து அவற்றை அநுபவிக்கை உண்டாகையானும், அப்படி ஒரு காலத்தே அநுபவித்தும் ஒரு காலத்தே அநுபவியாதிருந்ததுவும் ஆன்மா என்றதாம்.

இதனை ஒரு பதமாக்கி நீ கண்டறியும் என்ற இந்த உடம்பு காட்டுகின்ற ஆன்மா அவத்தைகளிலே ஒடுங்கின பொழுது ஒரு பொருளையும் காணமல் ஊணும்

உற்சாகமும் இன்றிக் கிடந்து உச்சுவாசம் நிச்சுவாசம் செய்கையாலே கண்டறிவது ஆன்மா என்று கூறுவாரும் உளர்.

வேறு உண்டாய் ஒடுங்காது உடன் நண்ணில் உள்ளது ஆம் உண்டி வினை ஊண் — பூதக்கூட்டத்தே அறிவுண்டாமாகில் அந்த அறிவு ஒரு காலத்தும் ஒடுங்காமல் ஒன்றுபட்டுப் பொருந்தி அவத்தைகளினும் ஊணும் உற்சாகமும் உண்டாம் என்றவாறு.

எனவே, உறக்கத்தில் ஊணும் உற்சாகமும்இன்றி விழித்தபொழுது உண்டாய் வருதலால், நீ சொல்லுகின்றதல்ல என்பதாயிற்று.

இதுவும் காரியங்கொண்டு காரணம் அறிதலால் சாதன சாத்தியப் பொருளானவாறு அறிக.

"கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டொடுங்கி"
(சித்தி-சூத்-4, செய்-30) என்றார் வழிநூலார்.

ஐந்தாமதிகரணம் முடிந்தது.

---

## ஆறுமதிகரணம்

'உணர்த்த வுணர்தலின்' என்றதற்குப் பிரமாணம்:—

### உதாரண வெண்பா — 6

அறிந்தும் அறிவதே யாயும் அறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த
தெதுவறியும் அன்றுகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுவதுதான் என்னும் அகம்.

## கருத்து

இது ஒருவனே சீவான்மாவுமாய் நிற்கையிற் கட்பேத மொழிந்து சர்வபேதமில்லை என்போர்க்கு உண்டு என்கின்றது.

## இதன் பொருள்

அறிந்தும்—ஒருவன் சில பொருள்களை அறிந்தும்,—

அறிவதேயாயும்—மேலும் அறியத்தக்க பொருளை அறிய அறிவிக்கத் தக்காரைத் தேடியும்,—

அறியாது—சிலபொருள்களை அறியாமலிருந்தும்,—

அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி அறிந்தது—முன்பு அறிந்தவற்றையும் அறியாமல் விட்டுச் சாக்கிரம் முதலாகிய அவத்தைகளிலே அடங்கி விழித்தவாறே அறிந்த அது,—

எது அறிவும் அன்றாகும்—எல்லாத்தையும் ஒரு காலத்தில் அறிகின்ற கர்த்தா அல்லவாம்,—

மெய்கண்டான் – சத்தியத்தைத் தரிசித்தவன்,—

அதுதான்—அப்படி அறிகின்ற அதுதான்,—

அகம் ஒன்றின்—ஆன்மா ஒன்றின் அது என்னும் கர்த்தாவினுடைய அடிமை என்று சொல்வன் என்றவாறு.

எனவே, கர்த்தா சர்வஞ்ஞன், அவத்தைகளிற் படாதவன், சுகதுக்கங்கள் இல்லாதவன்.

ஆன்மா கிஞ்சிஞ்ஞன், அறிவிக்க அறிபவன். அவத்தைகளிலேபட்டுச் சுகதுக்கங்களை அநுபவிப்பவன்; ஆதலால், சீவான்மா பரமான்மா என்றதாம். சீவாத்துவிதியை மறுத்ததுமாம்.

"அறிந்திடும் ஆன்மா வொன்றை
ஒன்றினால் அறித லானும்
அறிந்தவை மறத்த லானும்
அறிவிக்க அறித லானும்"
(சித்தி-சூத்-5, செய்-3) என்றார் வழிநூலார்.

*இதுவும் காரியங்கொண்டு காரணம் அறிதலால் சாதன சாத்தியப் பொருட்டாயினவாறு அறிக*

**ஆறாமதிகரணம் முடிந்தது.**

---

## ஏழாமதிகரணம்

---

*'மாயா வியந்திர தநுவினு ளான்மா' என்றதற்குப் பிரமாணம்:—*

### உதாரண வெண்பா — 7

**கலையாதி மண்ணந்தம் காணிலவை மாயை**
**நிலையாவாம் தீபமே போலும்—அலையாமல்**
**ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அஃதுதநுவாய்**
**தானத்தின் வேறாகும் தான்.**

#### கருத்து

*இது மாயையாலே இயந்திரிக்கப்பட்ட உடம்பு வேறு வேறு பேர்களைக்கொண்டு நிற்றலால் ஆன்மா உண்டு என்கின்றது. அஃதாவது சித்துத்தானே உலகமாய்ப் பரிணமித்தும் சிவனாகியும் நிற்கும் ஆதலால் எல்லாம் சித்து என்போர்க்கு அஃது அப்படியன்று என்று கூறுகின்றது.*

#### இதன்பொருள்

*கலை ஆதி மண் அந்தம் காணில் அவை மாயை நிலையாவாம்—கலை, காலம், நியதி, வித்தை, அராகம், புருடன்; மனம், புத்தி, ஆங்காரம், சித்தம்; செவி, மெய், கண், வாய், மூக்கு; வாக்கு, பாதம், பாணி,*

பாயுரு, உபத்தம்; சத்த, பரிச, ரூப, ரச, கந்தம்; ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி இவை மாயா காரியமாய்த் தோன்றி நின்று ஒடுங்கும்,—

தீபமே போலும்—விளக்கு இருக்கிற இடத்தையும் விளக்கு என்றாற் போலும்,—

அலையாமல் ஞானத்தை முன் உணர்ந்து—தனக்கு ஒரு கேடின்றிச் சிவனுடைய ஞானத்தை இடமாக நின்றறிந்து,—

நாடில் அது தரு ஆய்—விசாரிக்கில் அந்தக் கலை யாதி மண்ணுந்தம் தனக்கு உடம்பாய்,—

தான்—ஆன்மா,—

அத்தின் வேறு ஆகும்—அவையிற்றுக்கு வேறாகும் தான் என்றவாறு.

தான் அவை 'தீபமே போலும்' என்றது தகழி யும் எண்ணெயும் திரியும் கூடிநின்று எரிந்த தீபத்தைச் சேர விளக்கு என்றாற்போலும் என்றதாம்.

எனவே, தேகத்துடனே கூடிநின்றொழிய அறி யாது என்பது கூறினார்.

'ஞானத்தை முன்னுணர்ந்து' என்றது தேகாதி யுடனே கூடிநின்று அறியினும் சிவனையொழிந்து அறியாது என்பது கூறினாராயிற்று.

எனவே, கலையாதி மண்ணுந்தம் அசித்து, ஆன்மா அல்ல என்றும் கூறினார்.

"அறிவுடல் சிந்தை யான்மா அறிதலால்"
(சித்தி-சூத்-4, செய் 29) என்றார் வழிநூலார்.

ஆன்மா 'தேகாதியிடமாக நின்று அறியும்' என்னும் பக்கத்துக்குத் 'தீபம்போலும்' என்னும் சபக்கம் காட்டியவாறு காண்க.

**ஏழாமதிகரணம் முடிந்தது மூன்றுஞ்சூத்திரம் முடிந்தது**

***பிரமாணவியல் முற்றிற்று.***

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## பொதுவியல்பு – இலக்கணவியல்

# நான்காஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# பொதுவியல்பு – இலக்கணவியல்
## நான்காஞ்சூத்திரம்

---

**அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை**
**சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா**
**தமைச்சர சேய்ப்பநின் றைந்தவத் தைத்தே.**

*இதுவும் ஆன்மரூபம் சாதிக்கின்றது.*

*இச்சூத்திரம் வேறு கூறவேண்டியது என்னை? எனின், அவைபோல் இன்றி இவை நீக்கமற்றவை ஆதலால், பிரித்துக்கூறல் அருமைபற்றிக் கூறினார் என அறிக.*

### இதன்பொருள்

*ஆன்மா — ஆன்மா,—*

*அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று — மனோ புத்தி ஆங்கார சித்தம் என்னும் அவையிற்றில் ஒன்றல்ல,—*

அவை சந்தித்தது — அவற்றுடனே கூடி நீக்கமற நின்றது,—

சகச மலத்து உணராது—செம்பிற்களிம்பு போலச் சகசமாய் நிற்கின்ற மூலமலத்தாலே ஒன்றையும் அறியாது,—

அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று ஐந்து அவத்தைத்து ஏ — மந்திரிகள் முதலாவுள்ள பரிவாரத்தையும் இராசாவையும்போல நின்று ஐந்தவத்தையிலே பொருந்தும் என்றவாறு.

அந்தக்கரணம் என்றது உட்கரணம் என்றதாம். எனவே, புறக்கரணம் கூறி உட்கரணம் கூறுமாறாயிற்று.

## முதலதிகரணம்

இனி, 'அந்தக்கரணம் அவற்றினொன் றன்று' என்றதற்குப் பிரமாணம் :—

### உதாரண வெண்பா — 1.

**மனமாதி யாலுணர்தல் மன்னு புலன்கள்**
**மனமாதி மன்புலனின் அல்ல—மனமேல்**
**உதித்தொன்றை உள்ளம் உணர்தல் அதனின்**
**உதிக்கும் கடற்றிரையே யொத்து.**

கருத்து

இது அந்தக்கரணம் அறியும் என்போர்க்கு அவை அறியாது, ஆன்மா அறியும் என்கின்றது.

## இதன்பொருள்

*மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள் — மனோ புத்தி ஆங்காரம் சித்தத்தினாலே கன்மத்துக்கு ஈடாகப் பொருந்தினதொரு விடயத்தை அறிதலையுடைத்து,—*

*அந்தக்கரணங்கள் நிலை செவி மெய் கண் வாய் மூக்கு ஆகிய ஞானேந்திரியங்கள்.*

*மனம் ஆதி மன் புலனின் அல்ல — ஞானேந்திரியங்கள் அந்தக்கரணங்களை உட்கரணமாகக் கொண்டு அறிந்ததாயினும், அந்தக்கரணங்கள் தாம் மன் நிலையாகிய ஞானேந்திரியங்களில் ஒன்றல்ல,—*

*மனம் மேல் உதித்து ஒன்றை உள்ளம் உணர்தல் அதனின்—மனம் முதலாகிய அவையும் கன்மத்துக்கு ஈடாகியதொரு பொருளிடத்தே தோன்றி ஆன்மாவாலே அறியும் தன்மை அந்த ஞானேந்திரியங்களைப் போலும்,—*

*உள்ளத்தால் உணர்தல் மூன்றும் வேற்றுமை இன் பொருள். எனவே, இந்திரியங்களுக்கு மனாதி உட்கரணம், மனாதிகளுக்குக் கலாதி உட்கரணம் என வரும்.*

*உதிக்கும் கடல் திரையே ஒத்து — கடலும் திரையும்போலும் எழுந்திருக்கும் என்றவாறு.*

*ஆன்மா ஒரு பொருளை அறியுமிடத்து மனாதி அவ்விடத்து உதிக்கும் என்றது எப்படி? என்னில்,*

உதிக்கும்படி கடலும் கடலிடத்துத் திரையும் போல உதிக்கும்.

கடல் ஆன்மா, திரை அந்தக்கரணம், காற்று கன்மம், ஆகாசம் விடயம்.

கன்மத்துக் கீடானதொரு விடயத்தை மறுதி உட்கரணமாக ஒரு புலனிலே நின்று ஆன்மா அறியும் என்றார்.

"உணர்வன கரண மென்னில்"

(சித்தி-சூத்-4, செய்-1) என்றார் வழிநூலார்.

அந்தக்கரணங்களாலே ஞானேந்திரியங்கள் அறியும் அறிவினும், ஞானேந்திரியங்களில் ஒன்றல்ல, அந்தக்கரணங்கள் என்னும் பக்கத்துக்கு; ஆன்மாவாலே அந்தக்கரணங்கள் அறியும் அறிவினும் அந்தக்கரணங்களில் ஒன்றல்ல ஆன்மா என்பது சபக்கம் ஆயினவாறு காண்க.

அந்தக்கரணங்களைக்கொண்டு ஆன்மா அறியும் என்னும் பக்கத்துக்குக் கடலும் திரையும் சபக்கம் ஆயினவாறு காண்க. அது புண்ணிய பாவங்களைப் பொருந்திக் கன்மத்துக்குப் பொருந்தினதொரு விடயத்தை அறுதியிட்டு நிற்கும் என்பதாம்.

'அவை சந்தித்த தான்மா' என்பதற்குப் பிரமாணம் :—

### உதாரண வெண்பா — 2.

சிந்தித்தாம் சித்தம் தெளியாதாம் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகும்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறும்
அவ்வேறும் போதுபோல் ஆங்கு.

## கருத்து

*இது அந்தக்கரணங்களின் சொரூபமும், அவையிற்றுக்கு ஆன்மா வேறு என்றும் கூறுகின்றது.*

## இதன்பொருள்

*சிந்தித்து ஆம் சித்தம்—சித்தம் நினைதலையுடைத்தாம்,—*

*தெளியாது ஆம் ஆங்காரம் — அகங்காரம் அகந்தைக்கு இடமாய் யான் எனது என்பது உடைத்தாய் என்னை ஒப்பாரில்லை என்று எழுந்திருந்து தெளியாமலை உடைத்தாம்,—*

*புந்தியாய் ஆய்ந்து — புத்தியாய் ஆராய்ந்து நிற்றலையுடைத்தாம்,—*

*மனம் ஆகும் பந்தித்து — மனம் ஒரு பொருளை நினைவதும் செய்து பற்றுதலையுமுடைத்தாம்,—*

*பற்றுதல் — பகுத்தறிந்து துணியாமல் ஐயமாய் நிற்றல். இப்பொருள் :—*

"சித்தமா மவ்வி யத்தம் சிந்தனை யதுவும் செய்யும்"
"ஆங்காரம்புத்தியின் கணுதித்தகந்தைக்குவித்தாய்"
"மனமது தைச தத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவதும் செய்தங் கைய நிலைமையி னிற்கும்"
(*சித்தி-சூத்*-2, *செய்*–58, 59, 60) *என்பனவற்றால் அறிக.*

*வெவ்வேறு தானே துணிந்து உள்ளம்—இப்படி உள்ளவையிற்றுடன் அதுஅதுவாய்நின்று அவற்றினது செயல்களை வேறு வேறாக அறிந்து அறுதியிடுவது ஆன்மா,—*

வேறு வேருக அறிந்து அறுதியிட்டது எப்படி? என்னில், சித்தத்துக்குப் பற்றுதல் தொழில் என்றும், அகங்காரத்துக்கு ஒன்றையும் தெரியாமை எழுந் திருக்கை தொழில் என்றும், புத்திக்கு ஆராய்வது தொழில் என்றும், மனத்துக்குப் பற்றுதல் தொழில் என்றும் அறிந்து அவையிற்றுக்கு வேருதலாம்.

அஃது எங்ஙனே? என்னில், கைப்பதொன்று கைக்கின்றேம் என்று அறியாது. புளிப்பதொன்று புளிக்கின்றேம் என்றறியாது,உவர்ப்பதொன்று உவர்க் கின்றேம் என்று அறியாது, அவையிற்றினுடைய அறுவகை இரதங்களையும் அறிந்து இது கைத்தது, இது புளித்தது, இது தித்தித்தது, இது துவர்த்தது, இது கார்த்தது, இது உவர்த்தது என்று ஒருவன் சொன்னாற் போல்வது என்றதாம்.

இவ் வேறு ஆம் — இந்த அந்தக்கரணங்களாலே ஆன்மாவும் வேறு வேறு குணங்களையுடைத்தாம். அஃது என்போல? என்னில்,—

அவ் வேறு ஆம் போது போல் ஆங்கு — அப்படி வேறு வேறு குணங்களாய் நிற்கின்ற ஆதித்தன்போல அவ்விடத்து என்றவாறு.

அவ்வேருதல் — உதயகாலம், உச்சிக்காலம், அபரான்னகாலம் இவையில் ஒரு தன்மையாகிய ஆதித்தன் வேறு வேறு குணமாய் நின்ருற்போல என்றதாம்.

'அவ்விடத்து' என்றது அந்தக்கரணங்களுடனே கூடி ஒன்ருய் அழுந்தித் தன்மயமின்றி அவையிற்றி னுடைய சொரூப குணமாய் நிற்குமிடத்து என்றதாம்.

*'அவை சந்தித்தது ஆன்மா' என்றது ஆன்மா அந்தக்கரணங்களுக்கு வேறென்றும், அவையிற்றுடனே கூடினபொழுது குணம் வேறுபடுமென்றும் கூறிய பக்கத்துக்கு; ஆதித்தன் காலங்களுக்கு வேறு என்பதும் காலங்களாலே குணம் வேறுபடும் என்பதும் சபக்கமாயிற்று. இவை நீக்கற்கரிதாய்த் தகளியும் திரியும் நெய்யும் தீபமும்போல நிற்கும் என அறிக. இப்படி அறிந்தவர் தம்மை அறிந்தவர்.*

"தம்மை அறியிற் றமக்கொரு கேடில்லை"

*என்றார் பிறரும்.*

"கருவியா மனமும் புத்தி"

*(சித்தி-சூத்-4, செய்-2) என்றார் வழிநூலார்.*

### உதாரண வெண்பா — 3.

**அகார வுகாரம் அகங்காரம் புத்தி**
**மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை**
**நாதம் உளவடிவா நாடிற் பிரணவமாம்**
**போதம் கடற்றிரையே போன்று.**

### கருத்து

*இது அந்தக்கரணங்களுக்கு அக்கரங்கள் சொரூபம் ஆமாறு கூறுகின்றது.*

### இதன்பொருள்

*அகார உகாரம் அகங்காரம் புத்தி — அகாரமாகிய அக்கரம் அகங்காரத்துக்குச் சொரூபம், உகாரம் புத்திக்குச் சொரூபம், —*

இது நிரனிறை.

மகாரம் மனம்—மகாரம் மனத்துக்குச் சொரூபம்,—

சித்தம் விந்து—விந்து சித்தத்துக்குச் சொரூபம்,—

பகாது இவற்றை நாதம் உள வடிவாம் — இந்த அக்கரங்களை நீங்காததாகிய நாதம் ஆன்மாவுக்குச்சொரூபமாம்,—

நாடில் பிரணவம் ஆம் — இந்த அக்கரங்கள் ஐந்தும் விசாரிக்கில் பிரணவமாம்,—

போதம் கடல் திரையே போன்று — இவை கூடின அவதாரத்தில் ஆன்மாவுக்கு உண்டாம் அறிவு கடலிடத்துத் திரையுகளித்து எழுந்திருந்தாற்போலும் என்றவாறு.

அந்தக்கரணங்களையும், அக்கரங்களையும் ஆன்மா பிரியாமல் நின்று உச்சாரணம் பண்ணுமிடத்து நாதம் உரூபமாய்ப் பிரணவம் உரூபீகரிக்கும்பொழுது ஆன்மாவுக்குப் போதம் கடற்றிரைபோலும் என்றதாம். அது சந்திராதித்தர் கூட்டமாகிய உவாவிலே கடல் கிளர்ந்து எழுந்தாற்போலும் என்றதாம்.

விந்துவின் உண்டாகிய தோற்றக்கிரமத்தில் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் நாலும் அந்தக்கரணங்களிலே பிரவேசித்து நிற்கும் ஆகையினாலும் அந்தக்கரணங்களுக்கு அக்கரங்கள் வடிவானவாறு அறிக.

*பிரணவத்தை உச்சரிக்குமிடத்து உச்சாரணம் நாதசொரூபமாகையால் ஆன்மாவுக்குச்சொரூபம் பிரம நாதம் என்பார் என அறிக.*

*இப்படி அக்கரங்களும் அந்தக்கரணங்களும் வேறற நின்று வேறுனற்போல, ஆன்மாவும் அந்தக் கரணங்களும் ஏகீபவித்து நின்று வேறாம் என்பது உணர்க.*

''அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி ஆங்கா ரங்கள்''
(*சித்தி-சூத்-4, செய்-3*) *என்றார் வழிநூலார்.*

*அந்தக்கரணங்களும் அக்கரங்களும் கூடிச் சீவிக் கும் அவதரத்தில் ஆன்மபோதம் வெகுவிதமாக எழுந் திருக்கும் என்னும் பக்கத்துக்கு, கடலும் திரையும் என்பது சபக்கம் ஆயினவாறு காண்க.*

## உதாரண வெண்பா — 4.

**எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்**
**நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணில்**
**பகரயன்மா லோடு பரமனதி தெய்வம்**
**அகரவுக ரம்மகரத் தாம்.**

## கருத்து

*இது அக்கரங்கள் சடமாகையால் அதிதேவதைகளை யொழிந்து பிரேரகப்படாது என்கின்றது. எனவே, அந்தக் கரணங்களும் இவையிற்றைக்கூடி நிற்பினும் சடமாகையால் ஆன்மாவை யொழிந்து பிரேரகப்படாது என்பதாம்.*

## இதன்பொருள்

எண்ணில்—முன்சொன்ன,—

ஓங்காரத்து நண்ணிய — பிரணவத்தைப் பொருந்திய,—

விந்துவொடு நாதத்து — விந்துவுக்கும் நாதத்துக்கும், —

அதிதெய்வம்—மிக்கதெய்வம்; பொருந்திய தெய்வம் என்றுமாம்,—

ஈசர் சதாசிவம் ஆம்—ஈசுரதேவரும் சதாசிவ தேவருமாம்,—

விந்துவுக்கு ஈசுரதேவர், நாதத்துக்கு சதாசிவ தேவர்.

கண்ணில்—கருதில்,—

பகர் அயன் மாலோடு பரமன்—சொல்லப்பட்ட பிரமாவும் விட்டுணுவும் உருத்திரனும் அதிதெய்வம்,—

அகர உகரம் மகரத்து ஆம்—அகாரத்துக்கும் உகாரத்துக்கும் மகாரத்துக்குமாம் என்றவாறு.

அகாரத்துக்குப்பிரமா, உகாரத்துக்கு விட்டுணு, மகாரத்துக்கு உருத்திரன்; இவைநிரனிறை. எண்ணில் ஓங்காரம் என்பதற்கு ஓங்காரத்துக்குத் தெய்வம் எண்ணில்லை, இந்தத் தெய்வம் எல்லாம் என்றுமாம்.

*கண்ணில் என்றவிதப்பால், அக்கரங்கள் பொருந்திய பிரணவத்தால் பிரயோசனம் அக்கரங்களுக்குமில்லை பிரணவத்துக்குமில்லை, அவற்றை அறிவோனுக்குப் பிரயோசன மாயிற்று. அதுபோல, அந்தக் கரணங்களுக்கு அக்கரங்களாலும் அதிதேவதைகளாலும் பிரயோசனமில்லை. அக்கரங்களுக்கும் அதிதேவதைகளுக்கும் அந்தக் கரணங்களால் பிரயோசனமில்லை: ஆன்மாவுக்கே பிரயோசனம் என்பதாம். எனவே, அந்தக்கரணங்களும் அக்கரங்களும் அதிதேவதைகளும் தத்துவங்களாம் ஆன்மாவுக்கு என்பது அறிக.*

"தத்துவ ரூப மாகும் தருமுரு வான வெல்லாம்"

"அயனரி யரனு மீசர் சதாசிவ மதிதெய் வங்கள்"

*(சித்தி-சூத்-2, செய்-71; சூத்-4, செய்-4) என்றார் வழிநூலார்.*

*மனாதிகளுக்குச் சொரூபம் அக்கரங்கள் என்பதுவும், அக்கரங்களுக்கு அதிதேவதைகள் சதாசிவ தேவர் முதலாயினர் என்பதுவும் சாத்திரப்பிரமாணம் என அறிக.*

அந்தக்கரணங்களைப்பிரிக்க அரிதாகையால் இப்படி இந்த நாலு வெண்பாவாலும் கூறினார் என உணர்க.

முதலதிகரணம் முடிந்தது.

## இரண்டாமதிகரணம்

*இனி, 'சகசமலத்துணரா' என்பதற்குப்பிரமாணம்:—*

### உதாரண வெண்பா — 5

**மாயா தநுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல்**
**ஆயாதாம் ஒன்றை அதுவதுவாய்—வீயாத**
**வன்னிதனைத்தன்னுள்மறைத்தொன்றும்காட்டம்போல்**
**தன்னைமலம் அன்றணைதல் தான்.**

### கருத்து

*இது சுத்தனுகிய ஆன்மாவை உடம்பு மறைத்தது என்போருக்கும், புருடனே அறிவன் என்போருக்கும், ஆன்மாவினுடைய சொரூபசுபாவமும் மலமாயைகளினுடைய சொரூப சுபாவமும் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*மாயா தநு விளக்கு ஆ மற்று உள்ளம் காணு தேல்—ஆன்மா மாயையினுடைய சொரூபம் காட்டாகக் கொண்டு காணுதாகில்,—*

*ஆயாதாம் ஒன்றை அது அதுவாய்—அந்தந்த விடயங்களாய் நின்று ஒரு கன்மத்தைப் புசித்தறிய மாட்டாது,—*

*மற்று – அசை.*

*வன்னிதனை தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம்போல் தன்னை மலம் அன்று அணைதல் தான் வீயாது—அக்கினியைக் காட்டம் மறைத்தும் அக்கினி*

கெடாததுபோல, ஆன்மாவை அநாதியிலே மலம் மறைத்து நிற்றலையுடைத்து; அப்படி ஆயினும், அந்த அக்கினி கெடாமல் நின்றாற்போல ஆன்மாவும் தன்னுடைய சைதன்னியம் கெடாது என்றவாறு.

இது மலம் என்பது ஒன்றில்லை மாயையினுடைய காரியமே உள்ளது என்றும், மாயை ஆன்மாவினுடைய ஞானக்கிரியைகளை மறைத்து நிற்கும் என்றும், சுத்தமாம் ஆன்மாவினுடைய அறிவை உடம்பு மறைத்தது என்றும் கூறுவோர்க்கு,

"போதகா ரியம றைத்து
நிற்றலாற் புகல்ம லங்காண்
ஓதலாம் குணமே யாக
வுயிரினுள் விரவ லாலே"

"பருதியை முகில்ம றைப்பப்
பாயொளி பதுங்கி னாற்போல்
உருவுயிர் மறைக்கின் ஞானக்
கிரியைகள் ஒளிக்கு மாகும்"

"புருடன்றன் குணம வித்தை
யெனிற்சடம் புருட னாகும்
குருடன்றன் கண்ணிற் குற்றம்
கண்ணின்றன் குணமோ கூறாய்"

(சித்தி-சூத்-2, செய்-84, 83, 85) என்று மலமாகிய இருளை மாயை விளக்காக நின்று நீக்காதாகில் ஒன்றையும் ஆன்மாக் காணாதென்று கூறியவாறு காண்க.

என்றது: மாயை ஆன்மாவுக்குத் தனுகரணபுவன போகங்களாய் நிற்றலானும், ஆன்மா சைதன்னியமான இச்சா ஞானக்கிரியைகள் கலாதிகளையும் கொண் டொழிந்து ஒன்றைச்சீவியாது ஆகையானும், அவை யிற்றினுடைய சீவிப்பாலே பிருதிவி முதலாகிய தத்துவங்களுடனே அந்தந்த இடங்களிலே நின்று மாயையின் மயக்கிலே அழுந்தி, ஆணவமலத்தாலே இரதிக்கப்பட்டுத், தன்மயமாகையை அடைந்துநின்று புசித்தல் வேண்டுகையால், கலாதிகளையும் அந்தக் கரணங்களையும் ஒழிந்து ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியை சீவியாது என்றது. கலை சித்தத்துக்குட் கருவியாய்நின்றுகிரியையை எழுப்பவேண்டுகையாலும், வித்தை புத்திக்குட் கருவியாய் நின்று ஞானத்தை எழுப்பவேண்டுகையாலும், அராகம் மனதுக்கும் அகங்காரத்துக்கும் உட்கருவியாய்நின்று இச்சையை எழுப்பவேண்டுகையாலும் என்க.

இச்சா ஞானக் கிரியையாவது: கிரியை — யான் செய்தேன் பிறர் செய்தார், என்னது யான் என்கை; ஞானம் — யாதொன்றினும் அழுந்தின இடத்து உண்டான அறிவு; இச்சை --இவ்விரண்டினும் பற்றும் இச்சை.

ஆனால், அந்தக் கிரியையும் ஞானமுமே அமை யாதோ? இச்சை வேணுமோ? என்னில், வேண் டிற்று. ஞானக்கிரியைகளினுடைய சீவிப்பு இச்சையை யொழிந்து எழுந்திராது ஆகையானும், அந்த ஞானத் துக்கும் கிரியைக்கும் உபாதானம் இச்சை ஆதலானும்,

ஞானக்கிரியைகளினிடமாக ஆன்மா நிற்கும் அவதரம் இச்சையே வடிவாகையாலும் என அறிக.

இப்படிக்கொத்த இச்சை ஒழிந்து இல்லை ஆதலால், கிரியை முன்னுயிருக்கவும் இச்சையை முன்னாகக் கூறினர்.

தன்மயம் என்றது ஞானத்தையும் ஞாதிருவையும் ஞேயத்தையும். ஞானம் என்றது ஆன்மஞானத்தை, ஞாதிரு என்றது அந்த ஞானத்தையுடைய ஆன்மாவை, ஞேயம் என்றது அந்த ஞானத்தாலே அறியப்பட்ட விடயத்தை.

இவையிற்றின் நின்ற தன்மையைத் தன்மயம் என்றார். இவை அவ்விடத்து இல்லையோ? என்னில், நேராக இல்லையன்று, உள்ளது, தோன்றாது. அஃது எங்ஙனே? என்னில், நாம் இதனைப் புசிக்கின்றோம் என்னும் அறிவும், புசித்தேம் என்று அவையிற்றின் நல்லதிது தீயதிது என்று சொல்லப்பட்ட விகற்ப அறிவும் அவ்விடத்தில்லை ஆதலால் அந்த அவதரத்துக்கு இல்லை என அறிக.

இப்படி மாயா போகங்களைப் புசிக்கும் அவதரத்தும், அவ்விடத்து அவையின்றி அத்துவிதமாயிருக்கும் என்பது சுவானுபூதியால் அறிக. சுவானுபூதி என்றது யாதொரு காரியத்தைச் செய்து செய்த காரியம் தனக்கான பிரயோசனம் இப்படி இப்படி எனக் காண்கை.

யாதொரு விடயத்தினும் அழுந்தின திசையில் காட்சியை இப்படி இவையிற்றைத் தரிசிக்கப்பட்டது

*முத்தித் திசையினும் ஒக்கும் ஆதலால், பெத்தம் முத்தி இரண்டினும் இப்படி அலையாமலிருக்கவேண்டும் என்னும் இடம் அறிவித்தார் என அறிக.*

*ஆன்மபோதத்தை மலம் மறைத்து நிற்கின்றது என்னும் பக்கத்துக்கு, காட்டமும் வன்னியும் என்று காட்டிய சபக்கம் காண்க.*

*மலம் இருளும், மாயை விளக்கும் என அறிக.*

"புகலுமல மொழித்தற்கு"

(*சிவப்பிர–பொது–செய்–25*) *என்றார் சார்புநூலார்.*

*"யானே யின்ன னுயினன்" என்னும் ஞானமிர் தத்தில்*

"பெரும மலமும் பிறழா மாயையும்
மற்றவற் பிணிப்பே யாயி னெற்றிவை
இரண்டென இசைத்த லெனினே தெருண்டிசின்
யாண்டு மொருவா தொளிர்வது வீண்டுப்
பிரிந்து புணர்ந்துறையும் பெற்றி யிருந்ததும்
ஒன்றே போலும் நன்று நனியுணர்
மறைத்தற் றொழில்பூண் பதுவு மதனைக்
குறைத்தற் செய்தி குலவுவ தோரிடை
இரண்டல வென்பதென் இருளிரு ளிரிசுடர்
மூரண்டர நின்ற முழுமல மாயை"

(*அகவல்*—11: *ஞானமிர்தம்*) *என்றார்.*

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

---

# மூன்றுமதிகரணம்

இனி, "அமைச்சர சேய்ப்பநின்று ஐந்தவத்தைத்தே" என்பதற்குப் பிரமாணம்:—

### உதாரண வெண்பா—6

**ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபியினில்**
**சென்றணையும் சித்த மிதயத்தில்—மன்றவே**
**ஐயைந்தாம் கண்டத்து நன்னுதலில் வாக்காதி**
**மெய்யாதி விட்டகன்று வேறு.**

என்றது அந்தக்கரணங்கள் அமைச்சாகவும், வாயில்காப்பார், ஒற்றுட்கள், தூதர், அத்தாளிகள், புரோகிதர் ஐவரும் ஞானேந்திரியங்களாகவும், யானைப்படை குதிரைப்படை தேர்ப்படை காலாள் சேனைபதியர் ஐவரும் கன்மேந்திரியங்களாகவும், சத்தாதி வசனாதி விடயங்கள் பத்தும் ஏவலாட்களாகவும், பிராணவாயு முதலிய வாயுக்கள் உறுதிச்சுற்றமாகவும் உடைய ஆன்மாவாகிய அரசன் என்றதாம்.

இராசா பவனிபோய்த் தன்னுடைய கோயிலுட் புகுமளவில் வாயில் தோறும் நிற்குமவர்களை நிறுத்தி அந்தப்புரத்தில் தானே புகுமாப்போல், கருவி காரணாதிகளுடனே உணர்த்து முறையிலே வியாபரித்த ஆன்மா, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்கின்ற அவத்தைகளைப் பொருந்தி இலாடம் கண்டம் இதயம் நாபி மூலாதாரம் ஆகிய விடங்களை அடையுமளவில், அவையிற்றில் நிற்கும் கருவி காரணாதிகளை முறைமையிலே நிறுத்தி அடைவன் என்றதாம்.

## கருத்து

*இது ஆன்ம ஞானத்தை மலம் மறைத்துநின்ற அவ தாரத்தின் செய்தி கூறுகின்றது.*

## இதன்பொருள்

*ஒன்று அணையா மூலத்து—மூலத்து ஆன்மா ஒரு கருவியையும் பொருந்தாது,—*

*அதீதத்துக்குத் தானமாகிய மூலாதாரத்தில் என்றது:*

*கருவிகாரணாதிகள் ஒன்றுமின்றி ஒன்றையும் அறியாமல் பிருதிவித்தானமாகிய மூலாதாரத்தே அவ் வியத்தனைக் கிடப்பன் என்றதாம். எனவே, அவ் வியத்தம் அவ்விடத்து ஒரு கருவி ஆயினவாறு அறிக. 'ஒன்றணையா' என்றது அறிகருவி ஒன்றணையாதென்ற தாம்.*

*உயிர் அணையும் நாபியினில்—துரியாவத்தையில் நாபித்தானத்திலே பிராணவாயுவை வந்து பொருந் தும்,—*

*நாபிதுரியத்தானம் ஆகையானும், நாபிக்குக்கீழ் பிராணவாயு இயங்காது ஆகையானும் மேலியங்கு வதாம்: அப்புவை யொழிந்து எழுந்திராது ஆகையா னும், அந்த அப்புவுக்குத்தானம் நாபியாகையானும் என அறிக. எனவே, கருவி இரண்டாயிற்று.*

*சென்று அணையும் சித்தம் இதயத்தில்—அந்தத் தானத்தை நீங்கிச் சென்று சுழுத்தியில் இதயத் தானத்தே சித்தத்தைக்கூடும்,—*

இதயம் தொடங்கி நாபிக்குமேல் சுழுத்தித்தானம் ஆகையானும், சித்தம் நினைவுக்கு உபாதானம் ஆகையானும், நினைவு எழுந்திருக்கவேண்டும் அவதரம் அக்கினி எழுப்பவேண்டும் ஆகையானும், அக்கினிக்குத் தானம் இதயம் ஆகையானும் என்றதாம். எனவே, கருவி மூன்றாயிற்று.

மன்றவே ஐ ஐந்தாம் கண்டத்து—நிச்சயமாகச் சொப்பனத்தில் கண்டத் தானத்தே இருபத்தைந்து கருவியுடனே ஆம்,—

சத்தாதிஐந்தும், வசனாதிஐந்தும், பிராணாதியான வாயுக்கள்பத்தும், மனாதிநாலும், புருடனும் என அறிக.

இந்த இருபத்தைந்தும் இவ்விடத்தாம் என்றது, கண்டம் தொடங்கி இதயம் அளவாகச் சொப்பனத் தானம் ஆகையானும், அதிலே கண்டத்துக்குக்கீழ் இதயத்துக்கு மேற் பாதியளவாக மனசுக்குத்தானம் ஆகையானும், மனம் வசனம் முதலாயினவற்றுக்கு உபாதானம் ஆகையானும், நின்றபாதி தொடங்கி இதயத்தளவும் புத்திக்குத்தானம் ஆகையானும், புத்தியிலே பூதாதி ஆங்காரம் தோன்றுகையானும், அந்த ஆங்காரம் சத்தம் முதலானவற்றுக்கும் வாயுக்கள் ஒன்பதுக்கும் உபாதானம் ஆகையானும் இவைதாம் வாயுவிடமாகச் சீவிக்கையானும் என அறிக.

நல் நுதலில் வாக்கு ஆதி மெய்ஆதிஆம்—சாக்கிரத் தானம் ஆகிய நன்றாகிய நுதலிலே வாக்குப் பாதம்

பாணி பாயுரு உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்தும், மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய ஞானேந்திரியங்கள் ஐந்துமாகிய பத்துடனுமாம்,—

ஆம் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக.

ஆகச் சாக்கிரத்துக்குக் கருவி முப்பத்தஞ்சு ஆயினவாறும் என்றது, நுதலிலே தொடங்கித் தாலு மூலத்தளவும் சாக்கிரத்தானம் ஆகையானும், தைசத ஆங்காரத்துக்குத் தானம் சோத்திராதிகளுடைய தானம் ஆகையானும், வைகரி ஆங்காரத்துக்குத் தானம் தாலுமூல தந்தோட்டங்கள் ஆகையானும், ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் இந்த ஆங்காரங் களிலே தோன்றுகையானும், அவை தாம் சீவிக்கு மிடத்து ஆகாசம் இடமாகச் சீவிக்கையானும் என அறிக.

விட்டு அகன்று வேறு — உணர்த்தும் முறைமை யில் கூடிநின்ற தத்துவத்தைச் சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்ததத்துவங்கள் ஐந்தும்; கலை, காலம், நியதி, வித்தை, அராகம், மாயை என்னும் வித்தியாதத்துவங்கள் ஆறையும்; பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்தையும் விட்டு நீங்கிச் சைதன்னிய ரகிதனாய் என்றவாறு.

எனவே, உணர்த்தும் முறைமையில் கருவி பதினு லும் அடங்கிற்று என்பதாயிற்று.

இவையிற்றை நீங்கும் அவதரம் ஆன்மாவுக்கு உண்டாகிய அறிவு தானந்தோறும் கெடும் என அறிக.

"புருடனே அறிவ னாகிற் பொறிபுல னாதி"

''படைகொடு பவனி போதும்
பார்மன்னன் புகுதும் போது''

"சாக்கிர முப்பத் தைந்து நுதலினில்''

(*சித்தி-சூத் -4, செய்-31, 32, 33*) *என்றார் வழிநூலார்.*

''கால் கொடுத் திருகை மூட்டி வாழிய''

*என்னும் ஞானமிர்தத்தால் (அகவல்-9) இவ்விரிவுகாண்க.*

## உதாரண வெண்பா – 7.

**இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்—இலாடத்தே
அவ்வவ இந்திரியத் தத்துறைகள் கண்டடைவே
அவ்வவற்றை நீங்கிலது வாங்கு.**

### கருத்து

*இது மேலாலவத்தையும், தெரிசனவத்தையும், கேவல சகல சுத்தமும் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம் இலாடத்தே ஐந்தவத்தை எய்தும் — இலாடத்தானத்தே சாக்கிராவத்தையைப் பொருந்தின ஆன்மா, கீழாலவத்தையைப் பொருந்ினாற்போல, அந்த இலாடத்தானம் தன்னிலே சாக்கிரம் முதலாயுள்ள ஐந்தவத்தையும் பொருந்தும்,—*

*தத்துவாதீத பரசிவன் தனதும் இந்தச் சுத்தாவத்தைகளையும் நீங்கி அருள் தாரகமான இடம் என அறிக. இந்த அவத்தை ஐந்தும் புரியுமிடத்து மயக்க விகற்பம் வாராமல் இருக்கவேண்டும்; ஆகையால், கேவல சகலமும் கூறினர்.*

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவென்"

*என்றும்,* (*சித்தி சூத்*–8, *செய்*–35)

"பொற்புறு கருவி யாவும் புணராமே அறிவி லாமற்
சொற்பெறுமதீதம்வந்துதோன்றுமேதோன்றிநின்ற
சிற்பர மதனுல் உள்ள செயலறுத் திடவு திக்கும்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதம் தானே"

*எனவும்,* (*சிவப்பிரகாசம்—உண்மை–செய்*–30)

*கூறியவை இந்த அவத்தையென அறிக. எனவே, இதுவும் நிட்டையல்ல என்றார்.*

*நிட்டையாவது — கர்த்தா அவத்தைகூடி, அருள் தாரகமாக நின்று, விசுவம் பொய்யாத் தன்னையும் சிவனையும் தோன்றாமல் ஞேயத்திலே அழுந்துதலாம். இது மேல் வருமாற்றால் அறிக.*

*கேவலமாவது—கண் இருளைச் சேட்டித்துக்காட்சியில்லையாய்த் தான் ஒடுங்குவதும் செய்யாமல் வெறுமனே இருளாய் நின்றாற்போலக் கருவிகளும் சீவியாமல் அவத்தைக்கும் படாமல் ஆணவமலாகிய இருளும் ஆன்மாவும் கூடிநிற்கும் அவதாரம். இதனை,*

"அறிவில னமூர்த்த னித்த
    னராகாதி குணங்க ளோடும்
செறிவிலன் கலாதி யோடும்
    சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கர்த்தா வல்லன்
    போகத்துக் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி ளுேடும்
    வியாபிகே வலத்தி லான்மா."
(சித்தி-சுபக்-சூத்-4, செய்-38) என்பதனுல் அறிக.

*சகலமாவது — கலாதிகளுடனே கூடிப் போக போக்கியத்திலே போவது வருவதாய்ச், சத்தாதி விடயத்தைப் பற்றுவது விடுவதாய்க், கன்மத்துக்கு ஈடான யோனிகளிலே பிறப்பது இறப்பதாய் உழலா நிற்கும். இதனை,*

"உருவினைக் கொண்டு போக
    போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்த
    மாதியாம் விடயம் தன்னில்
புரிவதும் செய்திங் கெல்லா
    யோனியும் புக்கு ழன்று
திரிதரும் சகல மான
    அவத்தையிற் சீவன் சென்றே"
(சித்தி-சூத்-4, செய்-39) என்பதனுல் அறிக.

*சுத்தாவத்தையாவது — கன்மசாமியத்தே சத்தி நிபாதம் பொருந்திச் சம்பிரதாயம் பெற்று மும்மலங் களும் நீங்கி ஆன்ம போதம் கெட்டுத் திருவருள் தாரகமாதல்.* இது உபதேசத்தால் அறிக.

"இருவினைச் செயல்க ளொப்பில்
ஈசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான
யோகத்தைக் குறுகி முன்னர்த்
திரிமல மறுத்துப் பண்டைச்
சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம்
பெறுவது சுத்த மாமே"
*(சித்தி–சூத்–4, செய்–40) என்பதனால் அறிக.*

"நீக்கமி லதீத மாசு
நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரம் கலாதி சேர்ந்த
சகலமாம் தன்மை யாகும்
நீக்கமி லிரண்டும் கூடா
தொழியவோர் நிலையில் நீடும்
சாக்கிர வதீதம் சுத்தத்
தகைமைய தாகும் தானே,"
*(சிவப்பிரகாசம்–உண்மை–செய்–12) என்பதனாலும் அறிக.*

"ஆன்மாவின் வடிவு தானும்
அநேகார்த்தக் கூட்ட மென்னில்," *என்பது முதலாக,*
"எங்குந்தான் வியாபி யாய்நின்று"
*என்பது ஈறாகக் கூறுபடுத்துச் சொல்லும் பொருள்களும், மறுத்துரையும்; (சித்தி–சூத்–4, செய்-5—18)*

"அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவமின்றாய்
வசித்திட வருவி யாபி"
"மாயையின் வயிற்றின் மன்னி வருஞ்சுக துக்க"
"சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னி"
*என்பனவற்றாலும், (சித்தி–சூத்–4, செய்–20, 21, 22) வழிநூலார் நிறுத்தியவாறு காண்க.*

**மூன்றாமதிகரணம்முடிந்தது நான்காஞ்சூத்திரமுடிந்தது**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## பொதுவியல்பு – இலக்கணவியல்

# ஐந்தாஞ் சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# ஐந்தாஞ்சூத்திரம்

**விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தளந் தறியா ஆங்கவை போலும்
தாந்த முணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.**

## கருத்து

*இச்சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், முன்னர்க் கூறிய ஆன்மாவுக்கு உண்டாகிய லட்சணம் அறிவிக்கையின் பொருட்டு, (எனவே, கர்த்தா உபகரிக்கின்ற தன்மையும்) கன்மம் மாயையம் திரோதாயி என்கின்ற பாசங்களினுடைய உரூபங்களும் சாதிக்கின்றது.*

## இதன் பொருள்

*விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்து அளந்து அறியா* — *முன் சொல்லப்பட்ட ஆன்மாவாலே மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்கள் தத்தமக்குள்ள அறிவுகளை அறிந்து நிற்கச்சே ஆன்மாவை அறியா,—*

ஆங்கு அவை போலும் — அவ்விடத்து அவை போலும்,—

தாம் தம் உணர்வின் தமி அருள் — ஒப்பில்லாத கர்த்தாவினுடைய அருளாலே ஆன்மாக்களும் தத்தமக்கு உண்டாகிய அறிவை அறிந்து கர்த்தாவை அறியாதிருக்கின்ற தன்மைகள்,—

தத்தமக்கு உள்ளவாவது ஞானேந்திரியங்கள் சத்த முதலாவுள்ளவற்றை விடயீகரிக்கின்ற மாத்திரம்; அதுபோல, ஆன்மாவும் ஒரு விடயத்தை அறிகின்ற மாத்திரம்.

காந்தம் கண்ட பசாசத்தவை ஏ — அருளாலே ஆன்மாக்கள் அறிகின்ற முறைமை எப்படி ? என்னில், காந்தமும் அதினுடைய சந்நிதியில் இரும்பும் போலும் என்றவாறு.

ஞானேந்திரியங்கள் விடயீகரிக்குமிடத்து விடயீகரிப்பித்த ஆன்மாவே அறியாது, கர்த்தாவினுடைய அருளாலே ஆன்மாக்கள் அறிந்து அறியாமல் நிற்கும் என்றது: ஆன்மாக்கள் பசுத்துவத்தாலே சரீரத்தைக் கூட்டுகின்ற முறைமையும், கன்மத்துக்கு ஈடாகக் கலாதிகளாலே அறிகின்ற முறைமையும், அப்படி அறிந்து போகங்களைக் கூட்டிப் புசித்து நிற்கின்ற முறைமையும், பின்பு சிவத்துவத்தாலே அவையிற்றை நீங்கிச் சத்தைக் கூடுகின்ற முறைமையும் கர்த்தாவால் ஒழிந்து உண்டாகாது, ஆகையால், ஆன்மா தானுயறியாது என்றதாம்.

இனி, இந்திரியங்கள் விடயீகரிக்கும் மாத்திரம் என்றது, ஆன்மா யாதொன்றையும் உறைந்தறியினல்லது இந்திரியங்கள் ஒரு விடயங்களையும் விடயீகரித்தறியா மாத்திரத்து என்றதாம். உறைந்தறிகையாவது- ஆன்ம சைதன்னியம் கலையாலே மிக்க பலத்தையுடைத்தாய் வித்தையாலே தரிசிக்கப்படுவதாம். இப்பொருள்:

"உயிருட னுணர்வு வாயி லொளியுரு வாதி பற்றி"
(சித்தி-அளவை-செய்-6) என்பதனுல் அறிக.

இனி, காந்தமும் இரும்பும்போல என்றது காந்தம் இரும்பைப் பிரேரிப்பிக்கைச்சே காந்தத்துக்கு விகார அவிகாரங்கள் இன்றி இருந்தாற்போல, கர்த்தாவும் ஆன்மாக்களைப் பிரேரிப்பிக்கைச்சே விகார அவிகாரமற்று இருப்பன் என்பதுவும், காந்தத்தையொழிந்து இரும்பு பிரேரிப்புண்ணுதாற்போலக் கர்த்தாவையொழிந்து ஆன்மாவும் தானுகக் காணப்படாது என்பதுவும் கூறியதாம்.

"பொறிபுலன் கரண மெல்லாம் புருடனு
லறிந்தான் மாவை — அறிதரா"
(சித்தி-சூத்-5, செய்-1) என்ருர் வழிநூலார்

பொறிகள் ஆன்மாவாலே அறிந்து ஆன்மாவை அறியாது என்னும் பக்கத்துக்கு, அஃது எத்தால்? என்னில், சடமாதலால் என்னும் ஏது வந்தது போல, ஆன்மாவும் கர்த்தாவாலே அறிந்து கர்த்தாவை அறியாது என்னும் பக்கத்துக்கு ஏது, தானுக ஒன்றை அறியாது என்னும் ஏதுவும், கர்த்தாவினுடைய அறிவுக்கு ஆன்மஅறிவும் சடத்தோடு ஒக்கும் என்பதுவும் கூறியவாறு அறிக.

"சிவன்சீவ னென்றி ரண்டும் சித்தொன்று
மென்னில்" என்பதனில் ....

"இதுவசித்தென் றிடிலவனுக் கிதுவுமசித் தாமே"
(சித்தி–சூத்–11, செய்–11) என்பதனுல் அறிக.

காந்தமும் இரும்பும் உண்மைப் பிரமாணம்.

இவையிற்றுக்குப் பிரமாணம்:—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா – 1.

**ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப**
**ஐம்பொறிக ளுள்ளம் அறியாவாம்-ஐம்பொறியிற்**
**காணுதேற் காணுது காணுமுளம் காணுதேல்**
**காணுகண் கேளா செவி.**

கருத்து

*இது இந்திரியங்கள் ஆன்மாவாலொழிந்து விடயீகரியாது என்பதூஉம், ஆன்மா இந்திரியங்களை யொழிந்து ஒரு கன்மத்தையும் அறிந்து புசியாது என்பதூஉம் கூறுகின்றது.*

இதன் பொருள்

*ஐம்பொறியை ஆண்டு அங்கு அரசு ஆய் உளம் நிற்ப ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம் — ஆன்மா ஐந்து இந்திரியங்களையும் ஏவல்கொண்டு தான் கர்த்தாவாய் நிற்க அந்த இந்திரியங்கள் ஐந்தும் நாம் ஏவல் செய்கின்றோம் என்றும், நமக்கு ஆன்மா கர்த்தா என்றும் அறியா,—*

இதில் ஏவல்கொண்டு நிற்க என்றது, ஆன்மா அந்த விடயங்களாய் நின்று போகங்களைப் புசிக்க வேண்டுகையானும் இந்திரியங்கள் தன் மாத்திரைகளை விடயீகரித்தாலொழிந்து ஆன்மாவும் அந்தந்த விடயங்களாய் நின்று கன்மத்துக்கு ஈடான போகங்களைப் புசிக்க இல்லையாதலானும் என்றதாம். ஏவல் கொள்வானொருவன் அதினுடைய பயன் கொள்வான் என அறிக.

"ஆருயிர் யாதொன் றகலின்" என்னும் ஞானமிர்தத்தில் (அகவல்–12) 'என்னை பாதந் திரியம்' என்றும் 'பாதந்திரியம் கரைகழி பந்தம் — சித்தென நித்தமாயின் மற்றது — முத்தி கூடுதல் முடியாது' என்றும் கூறியவாறு காண்க.

ஐம்பொறியில் காணுதேல் காணுது — ஐந்து இந்திரியங்களிலே நின்று அறியாதாகில் ஆன்மாவும் ஒன்றை அறியாது,—

என்றது: ஆன்மா ஒரு போகத்தைப் புசிக்குமிடத்துக் கன்மத்துக்கு ஈடாகப் பொருந்தின பொறிகளிலே ஒன்றும், பூதங்கள் ஐந்திலே ஒன்றும், மனுதிகள் நான்கும், கலாதிகள் ஐந்தும் கூடிப் புசிக்க வேண்டுகையானும், இவையிற்றை ஒழிந்து ஒரு பொருளையும் தானுக அறியமாட்டாது ஆகையானும் என அறிக.

காணும் உளம் காணுதேல் காணு கண் கேளா செவி–இப்படி அறிகிற ஆன்மா அறியாதாகில்

*கண்ணும் காணு செவியும் கேளா நின்ற பொறிகளும் தத்தம் விடயங்களைப் பொருந்தா என்றவாறு.*

*என்பது: ஆன்மா குழந்தைப் பருவமாயிருக்கிற அவதரத்தினும், அவத்தைகளைப் பொருந்தின அவதரத்தினும் ஐம்பொறிகளும் சீவிக்கவில்லையாதலால் என அறிக.*

*இது ஆன்மா இந்திரியங்களுடனே கூடிநின்று காணும் என்னும் பக்கமும், இந்திரியங்களிலே நின்று அறியாதாகில் அறியாது என்னும் விபக்கமும் கூறியவாறு காண்க.*

*முன்னர்ச் சூத்திரம் இரண்டினும் கூறிய மறுத்துரை யெல்லாம் இதனுடைய உட்கிடந்தவாறு அறிக. அவை:*

"......... நிகழ்புலன் கரண மெல்லாம் செறிவுற்றங்
கறிவு கொள்ள வேணுமோ சீவ ஞர்க்கே"

(*சித்தி–சூத்–4, செய்–6*) *என்பனவற்ருல் அறிக.*

முதலதிகரணம் முடிந்தது.

---

## இரண்டாமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 2

**மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டித்த**
**தென்னு மறையின் இயல்மறந்தாய்—சொன்னசிவன்**
**கண்ணு வுளம்வினையால் கண்டறிந்து நிற்குங்காண்**
**எண்ணுன் சிவனசத்தை இன்று.**

## கருத்து

இது பிரகிருதிதானே மூலம் புரியட்டகம் விகிருதி என்னும் மூன்றாய், அதுதான் தூலம் சூக்கம் பரம் என்று சொல்லப்பட்டுச் சுத்தனாயிருந்துள்ள புருடனுடைய சந்நிதியிலே சேட்டைப்பட்டு யோனிபலவாய் விரிந்து ஒடுங்குகின்ற தொழிந்து ஆன்மா என்றும் கன்மமென்றும் உண்டோ? என்போர்க்கு மறுத்து, ஆன்மா தன்னாலே விடயீகரிக்கின்ற இந்திரியங்கள் ஆன்மாவாலே அறிகின்றோம் என்பதனை அறியாதுபோலத் தானும் இப்படிக் கர்த்தாவால் அறிகின்ற தன்னை அறியாது என்னும் இடமும், கர்த்தாவே ஆன்மாவுக்கு உபகரிக்கவேணும் என்பதுவும் கூறுகின்றது.

## இதன் பொருள்

மன்னு சிவன் சந்நிதியில் மற்று உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய்—நிலைபெற்ற சிவனுடைய சந்நிதியிலே பிரபஞ்சம் சேட்டைப்பட்டு வருகின்றது என்று வேதம் சொல்லும் என்னும் இலக்கணமும் மறந்தாய்,—

என்றது: வேதத்தை ஒருவன் அறிந்து அறிவிக்க அவன் கண்ணாக ஒருவன் அறியவேணும் என்ற உரையும் மறந்தாய் என்பதாம். அது ஆன்மாவுமில்லை கன்மமும் இல்லை, பிரகிருதி மூன்றுவிதமாய்ப் புருடன் சந்நிதியில் சேட்டைப்படும் என்றாய், அது தானே சேட்டைப்படாது. ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கு ஈடாகச் சேட்டைப் படுத்த வேண்டும். ஆதலால், வினையும் கர்த்தாவும் உண்டு என்றதாம். கர்த்தாவே ஆன்மாக்களுக்கு அறிவிப்பனாகில், எல்லார்க்கும்

அறிவு ஒருதன்மையாய் இருக்கவேணும்; அன்றியும், கன்மங்களில் ஏற்றக் குறைதல் உண்டாகில் அக்கன்மம் தானே ஊட்டும்; கர்த்தா வேண்டா என்னையாகில்,

சொன்ன சிவன் கண்ணு உளம் வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண்—ஆன்மாக்கள் செய்த கன்மங் களை அறிந்து அறிவித்து நிற்பன் என்று சொன்ன கர்த்தாவைக் காட்டாகக் கொண்டு ஆன்மாக்கள் தத்தம் வினைக்கு ஈடாக ஒரு விடயத்தைக் கண்டறிந்து நிற்கும் விசாரித்துப்பார்,—

என்றது: ஆதித்தன் சந்நிதியில் எல்லாமலரும் ஒக்க மலராதுபோல எல்லார்க்கும் அறிவு ஒவ்வாது என்றும், பூமியில் இட்ட வித்தொழிய வேறொருமுளை முளையாதாற் போலச் செய்த கன்மமொழிந்து பலியாது என்றும்; ஆன்மா அறிவிக்க அறிகையானும், அறிந்த வற்றை மறத்தலானும், அறிகின்ற தன்னை அறியாமை யானும், தானாக ஒன்றை அறியாமையானும், அறியு மிடத்தும் கருவியும் பொருளும் காட்டும் முதலிய வேண்டுமென்றும் கூறியதாம். இப்பொருள்:

> "இறைவனே அறிவிப் பானேல்"
> "அறிந்திடு மான்மா வொன்றை
> ஒன்றினு லறித லானும்"
> "கருவியாற் பொருளாற் காட்டால் காலத்தால்"
> (சித்தி—சூத்-5, செய்-2, 3, 4) என்றார் வழிநூலார்.

எண்ணுன் சிவன் அசத்தை இன்று — உலக மெல்லாம் தனக்கு உருவமாக எண்பத்து நான்கு

*நூறுயிரம் யோனி பேதங்களும் தனக்கு அவயவங்களா கவும், இச்சா ஞானக் கிரியைகள் உட்கரணமாகவும் நின்று கர்த்தா அளவிறந்த ஆன்மாக்களுக்கும் அறிவைக் கொடுத்துச் சேட்டிப்பித்தானுயினும் இவை யிற்றை ஒன்றுக விசாரியான் இப்பொழுது என்ற வாறு.*

*எனவே, காரணகாரணனுகி நிற்பன் என்றதாம்.*

"நார மேய நல்லுயி ரனைத்தும்
நார மன்றே நாரமின் றின்றே
நாரச் செய்தியும் அன்றே நாரம்
ஆருயிர்க் கல்ல துயிரதற் குதவும்
பேருப காரமு மின்றே"

*என்னும் ஞானமிர்தத்தினும்* (*அகவல்*—57) *அறிக. என்றது: பிரபஞ்சம் இவன் கண்ணுக்குத் தோன்றுது என்பதும், அதுசடமாகையாலே சிற்சொரூபத்தின் கில்லாது என்றும் சொல்லியதாம்.*

"உலகமே யுருவ மாக யோனிக ளுறுப்ப தாக"

"இறைவன்றன்சந்நிதிக்கண்உலகின்றன்சேட்டை"

**(*சித்தி–சூத்–5, செய்–7, 6*; *என்றுர் வழிநூலார்.*)**

*ஆன்மா கர்த்தாவாலே இந்திரியங்களிடமாக நின்று காணும் என்னும் பக்கமும், அஃது எத்தால்? என்னில், வினைக்கு ஈடாக என்னும் ஏதுவும் வந்த வாறு காண்க.*

## உதாரண வெண்பா—3

**வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது**
**வெய்யோனை ஆகாத மீன்போல—மெய்யோனில்**
**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக்**
**கண்டுடனாய் மன்னுதலைக் காண்.**

### கருத்து

*இது கர்த்தா பிரபஞ்சமெல்லாம் வேறற நிற்கின்ற முறைமையும், ஆன்மாக்கள் திரோதத்தாலே மறைப்புண்டு கேடதின்றி நிற்கின்ற முறைமையும், திரோதமும் அருள் என்னும் முறைமையும் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது வெய்யோனை ஆகாத மீன்போல—ஆதித்தனுடைய பிரகாசத்திலே மழுங்கித் தன்னுடைய பிரகாசம் தோன்றாமல் அந்த ஆதித்தன் அல்லவாகி நிற்கின்ற நட்சத்திரங்கள் பல ஆனாற்போல,—*

*ஆன்மாக்கள் பல என்பதுவும், ஆதித்தனைப் போலக் கர்த்தா ஒருவன் என்பதுவும் கூறினார்.*

*மெய்யோனில்—ஆன்மாக்கள் முத்திபெறவேணும் என்னும் விருப்பத்தையுடைய கர்த்தாவினுடைய திரோதத்தாலே,—*

*கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை கண்டு—கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும்*

உற்றும்அறிகின்றஐந்து விடயங்களால் உண்டாகப்பட்ட போகங்களைப் புசித்து அறிகின்றேம் என்னும் முறைமையும் விசாரித்து,—

உடன் ஆய் மன்னுதலே காண்—அப்படிக் காட்டும் மாயை மறைப்புமாய் வருகின்ற கர்த்தாவினுடனே ஒன்றுபட்டு நிலைபெற்று வருதலை விசாரித்துப்பார் என்றவாறு.

கன்ம ஒப்புகளுக்கு உடனாய்ச் சாக்கிரத்தானத்திலே பொருந்துதலைப்பார் என்பாரும் உளர்.

எனவே, ஆதித்தப் பிரகாசம் நீங்க நட்சத்திரம் பிரகாசிக்குமா போல, திரோதம் நீங்க ஆன்மாவினுடைய சொரூபம் பிரகாசிக்கும் என்றதாம். அது கன்மம் புசித்து அறுமளவும் மறைப்புண்டாம், கன்ம சமத்துவம் பிறந்து திருவருளே நின்றுலொழிந்து பிரகாசமாகாது என்பதுவும் கூறியவாறு அறிக. எனவே, கர்த்தா ஆன்மாவையும் தேகத்தையும் கூட்டிப்பிரித்துக், கன்மம் புசிப்பித்து, முத்தியைக் கொடுப்பன் என்பதாயிற்று,

"தெரிந்துகொண் டொரோ வொன் றுக"
(சித்தி—சூத்-5, செய்—8) என்றார் வழிநூலார்.

ஆன்மா திரோதத்தாலே இந்திரியங்களிலே நின்று கன்மத்தைப்புசித்துச் சமத்துவம் பிறந்து சம்பிரதாயம் பெற்றால் தற்சொரூபம் பிரகாசிக்கும் என்னும் பக்கத்துக்கு நட்சத்திரமும் ஆதித்தனும் சபக்கம் ஆயினவாறு காண்க.

## உதாரண வெண்பா – 4.

**அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே**
**அருளும் அவனன்றி இல்லை–அருளின்**
**றவனன்றே யில்லை யருட்கண்ணோர் கண்ணுக்**
**கிரவிபோல் நிற்குமரன் ஏய்ந்து.**

### கருத்து

*இது கர்த்தா பெத்தம் முத்தி இரண்டினும் உபகரிக்கின்ற முறைமையும், திரோதந்தானே அருளாம் என்பதுவும் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*அருள் உண்டாம் ஈசற்கு — கர்த்தாவுக்குத் திரோதசத்தியாலே மறைத்துக் கன்மங்களைப் புசிப்பிக்கின்ற தொழிந்து ஒரு காலத்தும் அநுக்கிரகம் இல்லையோ? என்னில், அநுக்கிரகம் உண்டாம் கன்ம சமத்துவத்தே,—*

*அது சத்தி — திரோதசத்தி என்றும் அருட்சத்தி என்றும் இரண்டோ? என்னில், அப்படி மறைத்து மலபக்குவம் செய்த திரோதசத்தி தானே அந்த அருட்சத்தியாம்,—*

*அன்றே — அந்த அருட்சத்தி கர்த்தாவுக்கு என்று உண்டானது? என்னில், கர்த்தா என்றுள்ளான்? அன்றே உள்ளது,—*

*அநாதியிலே அருளுண்டாகிய கர்த்தாவுக்கு அந்தத் திரோதசத்திதானே அருட்சத்தி என்பாருமுளர்.*

அருளும் அவன் அன்றி இல்லை — கர்த்தாவும் அருளும் இரண்டோ? என்னில், அந்த அருட்சத்தியும் கர்த்தாவை யொழிந்து வேறாய் நிற்றலில்லை,—

அருள் இன்று அவன் அன்றே இல்லை — கர்த்தாவும் அநாதியிலே அருளையொழிந்து வேறாய் நிற்றலில்லை,—

என்றது: சத்தியும் சிவன் இல்லையாகில் இல்லை, சிவனும் சத்தியில்லையாகில் இல்லை என்றதாம். அது நெருப்பு வெம்மையின்றியில்லை, வெம்மை நெருப்பின்றியில்லை என்றாற்போலக் கொள்க. அஃது எப்படி? என்னில்,

இரவிபோல் நிற்பன் ஆம் ஏய்ந்து—ஆதித்தனும் பிரகாசமும் தன்னில் ஏகீபவித்து நின்றாற்போலக் கர்த்தாவும் சத்தியுடனே பொருந்தி நீக்கமற நிற்பன். அது காணுமாறு எங்ஙனே? என்னில்,—

அருட்கண்ணோர் கண்ணுக்கு இரவிபோல் நிற்பன்—திரோதம் நீங்கி அருளைத் தமக்குத் தாரகமாகப் பெற்றவர்கள் காட்சிக்கு ஆதித்தன் தன்னுடைய பிரகாசத்தாலே இருளையோட்டிக் காட்சியையுடைய கண்ணுக்குத் தானும் தோன்றி நின்றாற்போலத் தன்னுடைய சத்தியாலே சஞ்சித கன்மத்தையும் போக்கி மேலும் ஆகாமியமாய் வரும் வினையும் வாராமற் காத்துத் தன்னையும் தரிசிப்பன் என்றவாறு.

அஃது எப்படி? என்னில், ஆன்மாக்கள் ஒரு தேகங்களிலே பொருந்துதலும், போக போக்கியம்

புசித்தலும் கன்மத்துக்கு ஈடாகவொழிந்து இல்லையாதலானும், கன்மந்தான் வயிந்தவம் என்று சொல்லப்பட்ட நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதம் என்னும் அத்துவாவிலே யொழிந்து கிடையில்லையாதலானும், விந்து சொரூபமாயிருந்துள்ள மகாமாயையை யொழிந்து மாயையில் உண்டாகிய தநு கரண புவன போகங்கள் சீவியாதாகையானும், அந்த மகாமாயைதான் அவையிற்றை யொழிந்து சீவியாதாகையானும், சஞ்சித கன்மம் கலா சோதனையிலொழிந்துபோகாதாகையானும், கன்மத்துக்கு ஈடான போகங்களைப் புசிக்கும் அவதரம் திரோதாயியை யொழிந்து புசியாது ஆகையானும், அது நீங்கின விடத்து அருளாய் நிற்கையானும் இவ்வாறு கூறியவாறு அறிக.

திரோதம் அருட்சத்தியாம் என்பது சம்பிரதாய திட்டியால் அறிக.

அருள் பிரகாசித்தால் சிவன் தன்னைத் தரிசிப்பன் என்னும் பக்கத்துக்கு ஆதித்தனும் பிரகாசமும் சபக்கம் ஆயினவாறு காண்க.

"அருளது சத்தி யாகும் அரன்றனக் கருளை யின்றி"
(சித்தி–சூத்–5, செய்–9) என்றார் வழிநூலார்.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

**ஐந்தாஞ்சூத்திரம் முடிந்தது.**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## பொதுவியல்பு – இலக்கணவியல்

# ஆறுஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# ஆறுஞ்சூத்திரம்

**உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்**
**இருதிறன் அல்லது சிவசத் தாமென**
**இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.**

## கருத்து

*இச்சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், சத்தாகிய சிவனுடைய உண்மையும், அசத்தாகிய பிரபஞ்சத்தினுடைய உண்மையும் கூறுபாடு செய்து அறிவித்தலைக் கருதிற்று.*

## இதன்பொருள்

*உணர் உரு அசத்து எனின் — அறியப்பட்டவை யெல்லாம் சத்தல்ல என்கையினால்,—*

*உணராது இன்மையின்—அறியப்படாதது இல்லை யாதலான்,—*

*இரு திறன் அல்லது சிவசத்து ஆம் என – இந்த இரண்டு கூறுபாடும் இல்லாதது சத்தாகிய சிவம் என்று,—*

*இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே* — இந்த இரண்டு கூறுபாட்டாலும் நிலைபெற்ற உலகம் சொல்லும் என்றவாறு.

*உலகம்* என்றது உலகத்துள்ளோர் என இடமும், இடத்து நிகழ்பொருளும் ஆம்.

"உலகம் என்பு துயர்ந்தோர் மாட்டே"

எனவே கற்றுயர்ந்தோராம்.

அறிவினால் இது என்று அறியப்பட்டவையெல்லாம் பொய் என்றது என்னை? எனின், அவை தோன்றி நின்று இறுதலையுண்டாதலால். அறியப்படாதில்லையாம் என்றது என்னை? எனின் ஆமைமயிர்க்கயிறும், ஆகாயப் பூவும், முயற்கோடும் போலும் ஆதலால்.

"அறிவுறும் பொருளோ வீசன் அறிவுரு
 தவனே என்னில்"
"ஆவதா யழிவ தாகி வருதலால்"
"உணராத பொருள்சத் தென்னி னொருபய னில்லை"
 (சித்தி–சூத்–6, செய்–1, 2, 4) என்றார் வழிநூலார்.

இவற்றிற்குப் பிரமாணம் :—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா — 1

**அசத்தறியாய் கேணீ அறிவறிந்த தெல்லாம்
அசத்தாதல் மெய்கண்டா னுயின்—அசத்தலாய்
நீரில் எழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரிலிவை யின்றுமா னெுப்பு.**

## கருத்து

*இது தன்னைச் சிவமாகிய சத்தென்று பொருந்தியிருப் போர்க்கல்ல என்பது கூறுகின்றது.*

## இதன்பொருள்

*அசத்து அறியாய் கேள் நீ — பொய்யைப் பொய் என்று அறியாதவனே! நீ கேளாய்,—*

*அறிவு அறிந்தது எல்லாம் அசத்து—அறிவினால் இது என்று அறியப்பட்டவையெல்லாம் பொய்யாம்,—*

*ஆதல் மெய் கண்டான் ஆயின் — அப்படிப் பொய் ஆதலை உண்மையைத் தரிசித்தவன் ஆராய்ந்து பார்க்கில்,—*

*அசத்து அலாய்–அந்தப் பொய் அல்லாதவனே!,–*

*இன்று மாறு ஒப்பு — அஃது இல்லையாகும் முறைமைக்கு உவமை,—*

*நீரில் எழுத்தும் — நீரின்கண் எழுதும் எழுத்து எழுதிய வழியே அழியுமாறும்,—*

*நிகழ் கனவும் — மெய் என்னும்படி கையும் மெய்யும் தீண்டிக்கலந்த கனவில் செய்தி விழித்த காலத்து இல்லையானவாறும்,*

*பேய் தேரும் — கானல் நீர் என்று பார்த்துப் பின்பு நிரூபித்தவிடத்து நீர் இல்லையாய்க் கானல் ஆன வாறும், —*

*ஓரில் — விசாரிக்கில் என்றவாறு.*

அசத்தறியாய் என்றும், அசத்தலாய் என்றும் இரண்டாகியது என்னை? எனின், அசத்துடனே கூடி நின்றும் அதனை அறியாதவனே! என்று அறியாமைக் கும், அந்த அசத்தாய் நின்றாலும் அந்த அசத்தில் ஒன்றில்லை அசத்தை அறிகின்றவன் நீ என்பதும் தோன்றக் கூறினார் என்று கொள்க. எனவே, உப தேசத்தாலொழிந்து உன்னையும் உனக்கு வேறாகிய தேகத்தையும் அறியாய் என்றதாம். அஃது எப்படி? எனில், அறிவுக்கறிவாய் இருப்பதொன்றுக்கு அறிய வேண்டுவதொன்றில்லை ஆதலானும், அறியவல்லவாய் இருப்பதொன்றுக்கு அறிவில்லை ஆதலானும், அந்த வத்து வாக்கு மனத்துக்கு எட்டாமல் இருப்பதொரு ஞானசொரூபி ஆகையானும் உனக்குண்டாகிய உண்மை ஞானவுபதேசத்தாலொழிந்து பிரகாசியாது; பிரகாசித் தால் அசத்தும் அல்லவாகி அசத்தை அறிபவனும் ஆவை என்பதாயிற்று.

விசுவம் பொய் என்னும் பக்கத்துக்கு, நீரிலெழுத் தும், கனவும், பேய்த்தேரும் சபக்கம் ஆயினவாறு காண்க.

"மண்டனில் வாழ்வும் வானத்
தரசயன் மாலார் வாழ்வும்"

(சித்தி—சூத்—6, செய்—3) என்றார் வழிநூலார்.

**முதலதிகரணம் முடிந்தது.**

---

## இரண்டாமதிகரணம்

### உதாரண வெண்பா — 2.

**எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றாலென்**
**கண்ணி யுளதென்றன் மெய்கண்டான்—எண்ணி**
**அறிய விரண்டா மசத்தாதல் சத்தாம்**
**அறிவறியா மெய்சிவன்று ளாம்.**

### கருத்து

*இது சிவன் ஆன்மபோதத்துக்கும் எட்டான், அருள் தாரகமாக நின்று அறியவேணும் என்கின்றது.*

### இதன்பொருள்

*எண்ணிய சத்து அன்று அசத்து அன்றும் என்றால் என்—நிரூபித்து அறியப்பட்டதும் அல்ல வென்று சொன்னால் அதனால் பிரயோசனம் என்,—*

*கண்ணி உளது என்றல் மெய்கண்டான்—அந்த வத்து உண்டானதோ? இல்லையானதோ? என்றாயாகில், உண்மையைத் தரிசித்தவன் கருதி உண்டென்று சொல்லப்பட்டது,—*

*எண்ணி அறிய இரண்டு ஆம் அசத்து ஆதல்—அப்படி அறியப்படாததும் அல்ல, உண்டென்றவத்துவை அறியும்படியேது? என்னில், ஆன்மஞானத்தாலே நிரூபித்து அறியவொண்ணாதது, தனக்குவேறாய்ப் பொய்யாதலையு முடைத்தாம் ஆகையால். ஆனால், எப்படி அறிவது? என்னில்,—*

*சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன்—வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததான தொன்றை ஆன்ம ஞானத்தால் அறியாமல் அருளாலே அறிகின்ற வுண்மை சிவமாம்,—*

*சிவன் தாள் ஆம்—அந்த அருள் தான் ஏது? என்னில், சிவனுடைய திருவடியாம் என்றவாறு.*

"தத்துவம்சத்தசத்துச்சதசத்துமன்றென்றுலென்"
(சித்தி—சூத்—6, செய்—5)

இது சம்பிரதாயதிட்டி.

## உதாரண வெண்பா—3

**உணர்வ தசத்தாதல் ஒன்றுணரா தொன்றை**
**உணருநீ தானுணரா யாகில்—உணருருவில்**
**தானிரண்டா மெய்கண்டான் தன்று லுணர்தலால்**
**தானிரண்டாய்க் காணுன் தமி.**

இதுவுமது.

### இதன்பொருள்

*உணர்வது அசத்து—அறியப்பட்டவையெல்லாம் அழிந்துபோம்; ஆகையாற்பொய்,—*

*ஆதல் — ஆகையாலே,—*

*ஒன்று உணராது—அறியப்படாதது ஒரு பொருள்சிவம்,—*

*ஆகில்—அஃது அப்படியாகில்,—*

ஒன்றை உணரும் நீ தான் உணராய்— ஒரு பொருளை அறிந்து பிரயோசனம் கொள்ளத்தக்க நீ அதனை அறியாயாவை,—

என்றது, அறியப்பட்டதுமல்ல அறியப்படாததுமல்லவாகிய பொருளை அறியத்தக்கவன் அறிந்து பிரயோசனம் கொள்ளானாகில் அவனால் ஒரு பிரயோசனமும் இல்லை. எனவே, அறிவான் அறியவேணும் என்றதாம்.

உணர் உருவில் தான் இரண்டு ஆம்—நிரூபித்து அறியவென்று நினையில் அது தனக்கு வேறாம்,—

அறிவது எப்படி? என்னில்,

மெய்கண்டான் தன்னால் உணர்தலால்—சற்குரு கடாட்சத்தாலே சம்பிரதாய சுத்தியுடையனாகி உண்மையைத் தரிசித்தவன் சிவனுடைய அருளாலே உணர்வன் ஆதலால்,—

தான் இரண்டாய் காணான் தமி—சிவனைக்காணுமிடத்துத் தனித்து நின்று வேறாகக் காணான் என்றவாறு.

என்றது அநந்நியமாய் நின்று காண்பன் என்றதாம்.

"அறிபொரு ளசித்தாய் வேறு
மறிவுருப் பொருள்சத் தென்னில்"
(சித்தி—சூத்–6, செய்–6) என்றார் வழிநூலார்.

இதுவும் சம்பிரதாயதிட்டியால் அறிக.

## உதாரண வெண்பா — 4.

**பாவகமென் றுனசத்தாம் பாவகா தீதமெனில்
பாவகமா மன்றெனனிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்தல் தானென்னில் பாவகமாம் தன்னருளால்
பாவிப் பதுபரமில் பாழ்.**

இதுவும் அது.

### இதன்பொருள்

*பாவகம் என்றுன் அசத்து ஆம் — சிவனைத் தியானிக்குமிடத்து யாவனொருவன் ஒரு உருபங்களாகத்தியானிக்க வேண்டுகையில் அது அவனுடைய உண்மையல்லவாம்,—*

*பாவநாதீதம் எனில் பாவகம் ஆம் — தியானங்களைக் கடந்ததொரு தியானம் என்று தியானிக்கில் அதுவும் தியானத்திலே ஒன்றும், —*

*அன்று என்னில் பாழ் அது ஆம் — பாவிக்கப் படுவது ஒன்றல்ல என்னில் அது பாழாம்,—*

*'பாழாம்' என்றது பிரயோசனம் இன்றிச் சூனியமாம் என்றதாம்; எனவே முத்தியினுள்ள பொருளும் இல்லை என்றதாம்.*

*பாவகத்தை பாவித்தல் தான் என்னில் பாவகம் ஆம் — யாதொரு தியானத்தை தியானித்தலை அவன் தான் என்று பாவிப்போன் என்னில், அவனுடைய பாவகமாம்,—*

*என்றது நான் பாவிப்பதன்றி அவன்தான் பாவிக்கின்றனைகப் பாவிப்பேன் என்றதாம். ஆதலால், அவனுடைய பாவகம் உனக்குப் பிரயோசனமில்லை என்றதாயிற்று*

*தன் அருளால் பாவிப்பது பரம் இல் பாழ் —* ஆகையாலே சிவனுடைய அருளாலே தியானிக்கின்றதே மேலாகிய பொருள் இயல்பாம். அப்படிப் பாவித்தலில்லாதது பாழாம் என்றவாறு.

*என்றது பாவனை கெட்டுப் பாவிப்பேன் என்னையாகில், அதுவும் பாழாம் என்றதாம்.*

"பாவிப்ப தென்னிற் பாவம்"
(*சித்தி-சூத்-6, செய்-7*) *என்றார் வழிநூலார்.*

இதுவும் சம்பிரதாய திட்டியாலறிக.

### உதாரண வெண்பா — 5

**அறிய இரண்டல்லன் ஆங்கறிவு தன்னால்**
**அறியப் படானறிவி னுள்ளான்—அறிவுக்குக்**
**காட்டாகி நின்றனைக் கண்ணறியா மெய்யென்னக்**
**காட்டா தறிவறிந்து கண்டு.**

இதுவும் அது.

### இதன்பொருள்

*அறிய இரண்டு அல்லன் — சிவன் ஆன்மாவுக்கு அறிவாய் நிற்கையினாலே அறிகைக்கு வேறல்லன்,—*

ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான்—அப்படி யாயினும் அவ்விடத்து அறியுங்கால் தன்னுடைய அறிவால் அறியப்படான்,—

அறிவின் உள்ளான் — அப்படி அறியாமையிருக்கைக்குக் காரணம் என்? என்னில், ஆன்மாவுக்கு உயிராய் உள்ளான் ஆதலால், அஃது எப்படி? என்னில்,—

அறிவுக்கு காட்டு ஆகி நின்றனை — ஆன்மாவுக்குக் காட்டாகி நின்ற சிவனை,—

காட்டாது அறிவு அறிந்து கண்டு — ஆன்மா, தான் அறிந்து கண்டு நமக்குக் காட்டாய் நிற்கின்றது ஈது என்று பிரித்துக் காட்டமாட்டாது,— அஃது என் போல? என்னில்,

கண் அறியா மெய் என்ன — கண்ணுக்கு உயிராகிக் காட்சியைக் கொடுத்து நின்ற ஆன்மாவைக் கண் கண்டு காட்டமாட்டாதான தன்மைபோல என்றவாறு.

எனவே, அருள்தாரகமாய் நின்று அறியவேணும் என்பதாயிற்று.

"அந்நிய மிலாமை யானு மறிவினு ணிற்ற லானும்"

(சித்தி—சூத்—6, செய்—8) என்றார் வழிநூலார்.

அந்நியமின்றி உயிர்க்குயிராய் நின்று உணர்த்துகின்றான் என்னும் பக்கத்துக்குக் கண்போல என்னும் சபக்கம் காட்டியவாறு அறிக.

## உதாரண வெண்பா—6

**அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே**
**அதுவென் றறியறிவு முண்டால்—அதுவென்**
**றறிய விரண்டல்லன் ஆங்கறிவுள் நிற்றல்**
**அறியுமறி வேசிவமு மாம்.**

இதுவும் அது.

### இதன்பொருள்

*அது என்னும் ஒன்று அன்று — சிவன் ஆன்மாவை விட்டு நீங்கி நிற்பான் ஒருவனல்ல, ஆதலால் அது இது என்று சுட்டிக்காண்பதொரு பொருளல்ல,-*

*அது அன்றி வேறே அது என்று அறி அறிவும் உண்டால் அப்படி வேறின்றி நிற்பது ஒன்ருகில் ஆன்மாவும் சிவமும் ஒன்று என்ருல் ஆகாதோ ? என்னில், அது பொருளன்று; வேருயிருக்கும். அஃது எத்தால் ? என்னில், அது என்று அறிவிக்க அறிவுண்டாதலால், ஒன்று என்று சொல்லுமிடத்து ஒன்றென்று சொல்லுவான் ஒருவன் உளன்; ஆகையால், இரண்டாம் என்பது போலாம்,—*

*அது என்று அறிய இரண்டு அல்லன் — அஃது அப்படியாகில் பிரித்துக் காணவேண்டாவோ ? என்னின், ஆன்மபோதத்தால் சுட்டி அறிகைக்கு இரண்டாய் நில்லான்,—*

*ஆங்கு அறிவுள் நிற்றல் அறியும் அறிவே சிவமும் ஆம் — சிவன் யாவன்? என்னில், ஆன்மாவினிடத்தே*

*நிற்றலையும் உடையன் ஆகிச் சகலத்தையும் அறியும் அறிவையுடையவனே சிவனும் என்றவாறு.*

*உம்மை அசை.*

*ஆன்மாவுக்கு அறிவாய் நிற்றலாலே அவனறிவால் அறியும் ஆன்மாச் சிவமுமாம் என்று பொருளுரைப் பாரும் உளர். காண்பானும் காட்டுவானும்போல, யாதொன்றையும் மயங்கிநின்று அறிகின்றதே ஆன்மா; அறிவிக்கின்றவனே சிவன்; அவன் உன்னிடத்திலே நீங்காமல் எப்பொழுதும் நிற்கையினாலே நீ அந்தச் சிவம் என்று மயங்கி நின்றதொழிந்து நீ சிவனல்லை என்பதாம்.*

"ஒன்றெனு மதனு லொன்றென் றுரைப்பதுண்
டாகை யாலே, நின்றனன் வேருய்"

(*சித்தி—சூத்—6, செய்—9) என்ருர் வழிநூலார்.*

இதுவும் சம்பிரதாய திட்டியாலறிக.

*இப்படி இச்சூத்திரத்தில் மூன்று முதலும் தரிசிப் பித்தவாறு காண்க.*

**ஆருஞ்சூத்திரம் இரண்டாமதிகரணம் முடிந்தது.**

**இலக்கணவியல் முற்றிற்று.**

***பொதுவியல்பு முற்றிற்று.***

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## சிறப்பியல்பு – சாதனவியல்

# ஏழாஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# சிறப்பியல்பு – சாதனவியல்

## ஏழாஞ்சூத்திரம்

யாவையுஞ் சூனியம் சத்தெதி ராதலின்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிறன் அறிவுள திரண்டலா வான்மா.

### கருத்து

*இச் சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், மேலதற்கோர் புறனடை முன்னர்ச் சூத்திரத்திற் கூறிய மூன்று முதலேயும் விளங்கக் கூறுபடுத்திக் கூறுதலைக் கருதிற்று.*

### இதன்பொருள்

*யாவையும் சூனியம் சத்து எதிர் — சத்தாகிய சிவனுடைய சந்நிதியில் எல்லாம் சூனியமாம்,—*

*சூனியம் — பொய், என்றது சத்தின்முன்னர் அசத்துப் பிரகாசியாது ஆகையானும், விசுவத்திற் பிரயோசனம் அவன் அறிகையில்லை ஆகையானும்*

என்றதாம். ஆனால், விசுவம் நடத்தின முறைமை எப்படி? என்னில், இந்திரஞாலம் காட்டுவானுக்கு இல்லையாய்க் காண்பானுக்கு உண்டானவாறு போல என அறிக.

ஆதலின் சத்தே அறியாது—விசுவம் அப்படி யறிந்து பொய்யாய் வருகின்றதாதலாலே சிவன் அறியான்,—

அசத்து இலது அறியாது — விசுவம் தானே சேடமுமாய் அழியும் ஆகையாலே அறியாது,—

இருதிறன் அறிவு உளது இரண்டு அலா ஆன்மா—சத்தையும் அசத்தையும் கூறு செய்து அறியும் அறிவையுளதாய்ச் சத்தும் அல்லவாய் அசத்தும் அல்லவாய்ச் சதசத்தாய் நிற்கும் ஆன்மா என்றவாறு.

இதற்குப் பிரமாணம் வருமாறு :—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா — 1.

**அந்நியமி லாமை யரற்கொன் றறிவின்றும்**
**அந்நியமி லானசத்தைக் காண்குவனேல்-அந்நியமாக்**
**காணு னவன்முன் கதிர்முன் இருள்போல**
**மாணு அசத்தின்மை மற்று.**

கருத்து

இது தன்னைச் சத்தாகியசிவம் எனக் கருதினோர்க்கு அஃது அல்ல என்கின்றது.

## இதன்பொருள்

அந்நியம் இலாமை அரற்கு ஒன்று — ஆன்மாக்கள் சிவனுக்கு அந்நியமில்லாமை இருத்தலாலே வேறல்ல ஒன்று,—

அறிவு இன்றாம் — எல்லாம் சிவனுமாகில் அறிவானும் அறிபொருளும் இல்லையாம்,—

அந்நியம் இலான் அசத்தை காண்குவனேல்— வேறன்றியிலே யிருந்த சிவன்தானே அசத்தினுலே அறிவன் என்று நீ சொல்வாயாகில்,—

அந்நியம் ஆய் காணுன் — அசத்தைச் சிவன் வேருக நின்று காணுன்: அஃது எத்தால்? என்னில்,–

அவன் முன் மாணு அசத்து இன்மை—அந்தச் சிவன் முன் மாட்சிமையில்லாத அசத்தில்லை: அஃது என்போல? என்னில்,—

கதிர் முன் இருள் போல—ஆதித்தனுடைய சந்நிதியிலே அந்தகாரம் நில்லாதாுற்போல என்றதாம் என்றவாறு.

மாட்சிமை—அறிவில்லாமை. மற்று அசை.

எனவே, அறிவான் ஒருவன் அறிவிப்பானைக் கொண்டே அறியும் பொருளை அறியவேணும் என்பதாயிற்று.

இது 'சத்தின்முன் அசத்து நில்லாது' என்றதற்குப் பிரமாணம்.

*சத்தின்முன் அசத்து நில்லாது என்னும் துணி பொருட் பக்கத்துக்கு, ஆதித்தனும் இருளும் போல என்பது சபக்கம் ஆயினவாறு காண்க.*

"அனைத்தும்சத் தென்னி லொன்றை யறிந்திடா"
*(சித்தியார்–சூத்–7, செய்–1) என்றார் வழிநூலார்.*

முதலதிகரணம் முடிந்தது.

---

## இரண்டாமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 2.

**பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தேர்அசத்தாகும்பெற்றிமையின்-வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணும் அசத்தின்மை
கண்டுணரா தில்லதெனக் காண்.**

கருத்து

*இது அசத்து அறியும் என்போர்க்கு அஃது அறியாது என்கின்றது.*

*இது 'அசத்தில தறியாது' என்பதற்குப்பிரமாணம்.*

இதன்பொருள்

*பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு மற்று அணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும் பெற்றிமையின்— கானலை நீர் என்று கருதி வருகின்ற அறிவில்லாதவனுக்குக் கிட்டிப்பார்த்த இடத்து முன்பு தோன்றிய கானல் பொய்யாகும் முறைமைபோல,—*

என்றது இது நீரல்லவாயிருந்தது கானலாயிருந்தது என்று கருதுதலாம். மற்று அசை.

வாய்த்த அதனை கண்டு உணர்வார் இல்வழியில் காணும் — வாய்ப்புடைத்தாகிய அந்த அசத்தை அசத்தென்று கருதி, உணர்வார் இல்லாதவிடத்து மெய் யென்று கருதும், —

என்றது அது மெய்யாகவும் பிரயோசனமாகவும் தோன்றும் என்பதாம்.

அசத்து இன்மை கண்டு உணராது — அறிவார் பிறரில்லை, அசத்துத்தானே அறியும் என்பையாகில்; அந்த அசத்து அறிவில்லாதபடியாலே ஒன்றையும் கண்டறியாது, —

இல்லது என காண் — ஆதலாலே அசத்துக்கு அறிவில்லை என்று விசாரிப்பாயாக என்றவாறு.

வாய்த்து என்றது அருள் தாரகமாக நின்று என்றதாம். எனவே, அருள்தாரகமாம் அளவும் மெய்யாகத் தோன்றும் என்றதாம்.

இது விசுவம் பொய் என்றும், அதற்கு அறிவில்லை என்றும், அருள் தாரகமாக நின்று காணுமளவும் மெய் போலத்தோன்றும், அருள் தாரகமான இடத்துப் பொய்யாம் என்றும் கூறிய துணிபொருட் பக்கத்துக்கு, பேய்த்தேர் சபக்கம் ஆயினவாறு காண்க.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

---

## மூன்றுமதிகரணம்

### உதாரண வெண்பா — 3

**அருவுருவந் தானறிதல் ஆயிழையாய் ஆன்மா**
**அருவுருவ மன்றாகும் உண்மை—அருவுருவாய்த்**
**தோன்றியுடன் நில்லாது தோன்றாது நில்லாது**
**தோன்றல் மலர்மணம்போல் தொக்கு.**

கருத்து

*இது தம்மைச் சத்தாகிய சிவம் எனக் கருதினோர்க்கு ஆன்ம இலக்கணம் கூறுகின்றது.*

இதன்பொருள்

*அரு உருவம் தான் அறிதல் ஆயிழையாய் ஆன்மா — அருவாகிய சத்தையும் உருவாகிய அசத்தையும் அறிதலையுடையது ஆன்மா,—*

*ஆயிழையாய் — மகடூஉ முன்னிலை. இது பரமேசுவரன் பரமேசுவரிக்கு அருளிச் செய்தது.*

*ஆன்மா அரு உருவம் அன்றாகும்—தான் அந்த அருவாகிய சத்துமல்ல உருவாகிய அசத்துமல்ல,—*

*உண்மை—சத்தியமாகச் சொல்லில்,—*

*அரு உரு ஆய் தோன்றி உடன் நில்லாது தோன்றாது நில்லாது—தான் அந்த அருவுருவத்தினுமாகி உருவத்தினுமாகி அருவம் போலத் தோன்றாமலும் நில்லாது, உருவம் போலத் தோன்றியும் நில்லாது, இரண்டினும் வேறன்றி நிற்கும்,—*

*தோன்றல் மலர் மணம் போல் தொக்கு—அஃது எப்படி? என்னில், மலரிலே மணம் செறிந்து நின்றாற் போலும் தோன்றுதல் என்றவாறு.*

*மலரை யொழிந்து மணம் தோன்றுதுபோல ஆன்மாவும் தனித்துத் தோன்றுது என்பதுவும், மணம் அந்தந்த மலர்களின் இயல்பாய் நின்றாற்போல நின்ற நின்ற தேகத்தின் இயல்பாய் நிற்கும் என்பதுவும் கூறியவாறு அறிக.*

*சத்தைக் கூடிச் சத்தாகியும் அசத்தைக் கூடி அசத்தாகியும் நிற்கும்; எனவே, ஆன்மா 'சதசத்து' என்பதாயிற்று.*

"சத்தசத் தறிவ தான்மா
தான்சத்து மசத்து மன்று"
(*சித்தி–சூத்–7, செய்–2*) *என்றார் வழிநூலார்.*

*ஆன்மா தனித்து நில்லாது என்னும் பக்கத்துக்கு, மலரும் மணமும் சபக்கம் ஆயினவாறு காண்க.*

### உதாரண வெண்பா — 4

**மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்**
**பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசில்—அசத்துமலே**
**நீயறிந்து செய்வினைகள் நீயன்றி வேறசத்துத்**
**தானறிந்து துய்யாமை தான்.**

### கருத்து

***இது சத்தாதல் அசத்தாதல் ஆகாமல் சதசத்தான வாறு எங்ஙனே? என்போர்க்குக் கூறுகின்றது.***

இதன்பொருள்

மயக்கம் அது உற்று மருந்தில் தெளிந்தும் பெயர்த்து உணர் நீ சத்து ஆகாய் பேசில் — ஒரு பிணி வந்தடுத்தபொழுது மயக்கத்தைப் பொருந்தியும் அதற்கான மருந்து செய்ய அதனாலே தெளிந்தும் அறிவு பெயர்தலையுடையை ஆதலாலே நீ சொல்லு மிடத்து அந்தச் சத்தாகாய்,—

பசி வந்துற்றபொழுது மயக்கத்தைப்பொருந்தியும், புசித்தபொழுது தெளிந்தும் அறிவுபெயர்தலையுடையை என்றுமாம். எனவே, கர்த்தா ஒரு தன்மைத்தான அறிவையுடையர், நீ அறிவு பெயர்தலையுடையை, ஆதலால், கர்த்தா அல்லை என்றதாம்.

அசத்தும் அலை—ஆனால் அசத்தோ ? என்னில், அசத்தும் அல்ல. அஃது எத்தால்? என்னில்,

நீ அறிந்து செய் வினைகள் நீ அன்றி வேறு அசத்துதான் அறிந்து துய்யாமை தான் — நீ உன்னுடைய அறிவாலே அறிந்துகொண்ட புண்ணியபாவங் களினுடைய பிரயோசனங்களை நீ யொழிந்து உனக்கு வேறாகிய அசத்தானது தான் அறிந்து சீவியாது என்றவாறு.

தான் அசை.

எனவே, நீ சத்துமல்ல அசத்துமல்ல சதசத்து என்பதாயிற்று.

இது சம்பிரதாய திட்டி என அறிக.

## உதாரண வெண்பா — 5.

**மெய்ஞ்ஞானம் தன்னில் விளையா தசத்தாதல்**
**அஞ்ஞான முள்ளம் அணைதலால்—மெய்ஞ்ஞானம்**
**தானே யுளவன்றே தண்கடனீர் உப்புப்போல்**
**தானே யுளமுளவாய்த் தான்.**

இதுவும் அது.

இதன்பொருள்

*அஞ்ஞானம் — பாசஞானமாகிய அது,—*

*மெய் ஞானம் தன்னில் விளையாது — சத்தாகிய சிவனுடைய ஞானத்தைப் பொருந்தித் தோன்றாது; அஃது எத்தால்? என்னில்,—*

*அசத்து ஆதல் — அது பொய்யுமாய்ச் சடமும் ஆகையால்,—*

*உள்ளம் அணைதல் ஆம் — அந்தப் பாசஞானம் பசுஞானத்தைப் பொருந்தித் தோன்றுதலையுடைத் தாம்,—*

*மெய் ஞானம் தானே உள அன்றே—சிவனுடைய சுத்த ஞானம் என்று உளது? என்னில், அநாதியிலே உளது,—*

*உளம் உள ஆய் தான்—பசு ஞானம் என்று உளது என்னில், அதுவும் அப்படி அநாதியே உளதாம்; அஃது என்போல? என்னில்,—*

தண் கடல் நீர் உப்பு போல் தான் — குளிர்ந்த கடலும் நீரும் உப்பும் போல என்றவாறு.

என்றது: கடல் என்று உண்டு? அன்றே நீர் உண்டு, நீர் என்று உண்டு? அன்றே உப்பு உண்டு; அவைபோலப் பதிஞானமும் பசுஞானமும் பாசஞானமும் அநாதியிலே உள்ளன என்றவாறு.

கடல் பதி, நீர் பசு, உப்பு பாசம். உப்பானது நீரிலே பொருந்தி நிற்பதொழிந்து கடலிற் பொருந்தா தாறுற்போல அநாதியிலே ஒரு காலத்து உண்டாயிருக்கப் பாசஞானம் பசுஞானத்தைப் பொருந்தி நிற்கும், பதிஞானத்தைப் பொருந்தாது என்பதும் தோன்றிய வாறு அறிக.

சிவன் என்றுளன்? அன்றே ஆன்மாவும் உண்டு; ஆன்மா என்றுண்டு? அன்றே பாசமும் உண்டு; ஆயினும், பாசம் ஆன்மாவுடனே கூடி நிற்பதொழிந்து கர்த்தாவுடனே கூடி நில்லாது என்னும் துணிபொருட் பக்கத்துக்குக் கடலும் நீரும் உப்பும் சபக்கம் ஆயின வாறு காண்க.

"சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபா
லசத்தஞ் ஞானம், ஒத்துறு"
(சித்தி–சூத்–7, செய்–3) என்றார் வழிநூலார்.

இந்த ஐந்து வெண்பாவாலும் சிவன் சர்வஞ்ஞன் ஆகையாலே ஒரு காலத்திலே அசத்தை அசத்து என்றும், பின்பு சத்தைச் சத்து என்றும் மயங்கி

யறிதல் இல்லை; ஆகையாலே, சிவனுடைய ஞானம் ஒரு படித்தாய் இருக்கும் என்பதுவும், கானலை நீரென்றும் பின்பு கானலென்றும் மயங்கி அறிந்தலொழிந்து அறிவு ஒருபடித்தாயே இருந்தாற்போல அசத்தைச் சத்தென்றும், பின்பு சத்தை அசத்தென்றும் ஒருவன் மயங்கி அறிந்தலொழிந்து அதுவும் ஒரு வழிப்பட்டிருக்கும் என்பதுவும், அப்படி மருட்டி அறிவித்ததே பாசஞானம் என்பதுவும், தெருட்டி அறிவித்ததே சிவஞானம் என்பதுவும், மருட்டமருண்டும் தெருட்டத் தெருண்டும் நிற்கின்றதே பசுஞானம் என்பதுவும் கூறி மூன்று முதலையும் தரிசிப்பித்தவாறு காண்க.

**மூன்றுமதிகரணம் முடிந்தது.**

**ஏழாஞ்சூத்திரம் முடிந்தது.**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## சிறப்பியல்பு – சாதனவியல்

# எட்டாஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# எட்டாஞ்சூத்திரம்

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவாய்த் தவத்தினி லுணர்த்தவிட்**
**டந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே.**

## கருத்து

*என்பது சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், ஆன்மாக்கள் ஞானத்தைப் பெற்றுணரும்முறைமைகூறுகின்றது.*

## இதன்பொருள்

*ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து என—ஆன்மா செவி மெய் கண் வாய் மூக்கு என்னும் வேடருடனே கூடி வளர்ந்து உன்னுடைய உண்மையை மறந்தாய் என்று,—*

*தம் முதல் குரு ஆய்-தனக்குப் பிராணனாகி உண்ணின்று உபகரித்த கர்த்தாவே குருவாய்வந்து,—*

*தவத்தினில் உணர்த்த*—முன்னர்ச் சனனங்களிலே சாலோக சாமீப சாரூப்பியமாகிய பதங்களையுடையாராக, பத்தி ஞான வைராக்கியங்களாலேகூடியிருப்பதாயுள்ள சரியை கிரியா யோகங்களைச் சாத்திர முறைமைகளிலே நிகழ்த்தி, அது நிமித்தமாக மகத்தாகிய ஞானத்தைப் பெறுதற்கு, நல்லசார்பிலே வந்தவர்களுக்கு அறிவிக்க,—

*விட்டு*—முன்புநின்ற மருட்சியை விட்டு,—

*அந்நியம் இன்மையின் அரன் கழல் பெறுமே*—எக்காலத்தும் நீக்கமில்லாமையையுடைய கர்த்தாவுடைய திருவருளைப் பெறும் என்றவாறு.

'அரன் கழல் செலுமே' என்று பாடமாயின் திரோதம் நீங்கி ஞானமாய்ச் செல்லும் என்க.

"மன்ன வன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி"
(சித்தி–சூத்–8, செய்–1) என்றார் வழிநூலார்.

இதற்குப்பிரமாணம் :—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா — 1.

தவஞ்செய்தா ரென்றும் தவலோகம் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாம் கண்டு.

## இதன்பொருள்

*தவம் செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து—எக்காலமும் சரியை கிரியா யோகமாகிய தவங்களைச் செய்யுமவர்கள் தாங்கள் செய்த தவத்துக்கு ஈடாகிய சாலோக சாமீப சாரூபமாகிய உண்மை பொருந்தி,—*

*'சார்ந்து' சார்புடையோ ரிடத்து வந்து தோன்றி என்பாரும் உளர்.*

*பவம்செய்து பற்று அறுப்பார் ஆக தவம் செய் நல்சார்பில் வந்து உதித்து,—அந்த முத்திப் பதங் களினுடைய பற்றுதலையும் நீக்குவாராகத் தாம்தாம் செய்த தவங்களினுடைய சார்புகளிலே சனனத்தை உடையராகி வந்து தோன்றி,—*

*முன்பு தவஞ்செய்து சாலோகசாமீபசாரூபமாகிய பிறவியைச் செய்த பற்றுதலை நீக்குவாராக.*

*ஞானத்தை நண்ணுதலை கற்றூர் சூழ் சொல்லும் ஆம் கண்டு — சிவஞானத்தைப் பொருந்துதலை வேதா கமங்களைக் கற்றுணர்ந்தோருடைய துணிவு சொல்லும் அதனைத் தரிசித்து என்றவாறு.*

இது சாத்திரதிட்டியால் வந்ததென அறிக.

### உதாரண வெண்பா — 2

**பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கும்**
**இசைத்து வருவினையில் இன்பம்—இசைத்த**
**இருவினை யொப்பில் இறப்பில் தவத்தான்**
**மருவுவனு ஞானத்தை வந்து.**

## கருத்து

இது யாகாதி கன்மங்களைச் செய்து சுவர்க்காதிபோகங்களை அநுபவித்தல் நன்று என்போர்க்கு முத்தியல்லது நன்றல்ல என்பதுவும், முத்திபெறுவது என்போர்க்குக் கன்ம சமத்துவத்திலே என்பதுவும் கூறுகின்றது.

## இதன்பொருள்

பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும் இசைத்து வருவினையில் இன்பம்—உலகத்தில் மேலாய் வருகின்ற எக்கியாதி கன்மங்களால் உண்டாம் சுவர்க்காதி இன்பம் பசித்தபொழுது உண்டு சிறிது பொழுது தாகம் தீர்ந்திருந்து பின்னையும் பசியையுடையனுகின்றவனை ஒக்கும்,—

என்றது சுவர்க்காதி இன்பத்தை அநுபவித்தாலும் மீண்டும் இகலோகத்தே பிறக்க வேண்டும் என்று கூறியவாறும்.

"தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்"
(சித்தி—சூத்தி—8, செய்—25) என்றார் வழிநூலார்.

இப்படிச் சுகதுக்கங்களை அநுபவிக்கிற தொழிந்து கன்மம் ஒரு காலத்தில் தொலையாதோ? என்கின்றாயாகில்,

இறப்பு இல் தவத்தால்—போன சனனங்களிலே செய்த தபோ பலங்களினாலே,—

இசைத்த இரு வினை ஒப்பில் — புண்ணியபாவங்கள் இரண்டும் ஒருகாலத்தே வந்து புசிக்கைக்குச் சமமொத்த எல்லையிலே, —

*மருவுவன் ஆம் ஞானத்தை வந்து — மருட்சி நீங்கி முன்பு உண்டான ஞானத்தைப் பொருந்துவன் என்றவாறு.*

*தபோபலம் என்றது;*

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்"
(*சித்தி–சூத்–8, செய்–11*) *என்றார் வழிநூலார்.*

*முத்திவிடயம் பலவோ ? என்னில், அது:*

"இம்மையே யீரெட்டாண் டெய்தி" (*செய்–12*)

*கன்ம சமத்துவம் என்பதற்கு :*

"மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்திநி பாதம்"
(*செய்–29*) *என்றார் வழிநூலார்.*

"புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நோக்கும்"
*என்பது முத்திக்கு ஏதுவாம்; அறிக.* (*செய்யுள்–31*)

*மருட்சிநீங்கி முன்புள்ள ஞானம் பொருந்துவன் என்பதற்கு:*

"சூரியகாந் தக்கல்லி னிடத்தே" (*செய்–28*)

*எனவே, ஞானம்பெற்றே வீடுபெறவேணும் என்றாராயிற்று. அது:*

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்"
(*செய்—27*) *என்பதனுல் அறிக.*

*சரியை கிரியா யோகங்களாலே ஞானம் பெற வேணும் என்றீர், அவை எப்படி? அவற்றின் பேறு எப்படி? என்னில்,*

"சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க் கம்மென்று"
"தாதமார்க் கஞ்சாற்றில் சங்கரன்றன் கோயில்"
"புத்திரமார்க் கம்புகலிற்"
"சகமார்க்கம் புலனொடுக்கித்"
"சன்மார்க்கம் சகலகலை புராண வேத"

*(சித்தி—சூத்–8, செய்யுள்—18, 19, 20, 21, 22) என்பனவற்றால் அறிக.*

*அன்றியும், சிவஞானத்தை யுடையோர்க்கு ஈந்த பலனும் பின்பு ஞானத்தைக் கொடுக்கும் என்றுமாம். அது:*

"சிவஞானச் செயலுடையோர் கையிற் றானம்
திலமளவே செய்திடினும்"
*(செய்–26) என்பதனால் அறிக.*

இது சாத்திரதிட்டியானவாறு அறிக.

**முதலதிகரணம் முடிந்தது.**

---

# இரண்டாமதிகரணம்

**மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்**
**கஞ்ஞானவச்சகலர்க்கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்**
**பின்னுணர்த்து மந்தப் பிரளயா கலருக்கு**
**முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்.**

## கருத்து

*இது விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்க்குக் கர்த்தா உணர்த்தும் முறைமை கூறுகின்றது.*

## இதன்பொருள்

*மெய்ஞ்ஞானம் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு ஆணவமலம்ஒன்றுமுடையவிஞ்ஞானகலர்க்கு மலபாசம் போக்கத் தக்க எல்லையுள் உண்ணின்று உணர்த்து கின்ற கர்த்தா உணர்த்தத் தானே உண்மை ஞானம் விளையும்,—*

*சுபாவம் என ஞானம் உண்டானவருக்கும் ஒரு வன் உண்டாக்கவேண்டுகையில் அவன் குரு என்ற தாம்.*

*அந்த பிரளயாகலர்க்கு முன் உணர்த்தும் தான் குரு ஆய் முன் — ஆணவமலமும் கன்மமலமும் உடை யாராகிய அந்தப் பிரளயாகலர்க்கு உண்ணின்றுணர்த் துகின்ற கர்த்தா தானே தெய்வ குருவாய் வந்து முன் னின்று உணர்த்துவன்,—*

*அஞ்ஞான அ சகலர்க்கு அ குரு ஆய் மெய்ஞ் ஞானம் பின் உணர்த்தும் — ஆணவம் கன்மம் மாயை*

என்னும் மூன்று மலமும் கூடி அஞ்ஞானத்தைப் பொருந்திய அந்தச் சகலர்க்கு மானிடமான திருமேனியைத் தரித்து வந்து மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்னும் சத்திநிபாதங்களுக்கு ஈடான முறைமையாலே தீக்கை நடத்திச் சரியை கிரியா யோகங்களிலே நிறுத்திப் பின்னர் உண்மை ஞானத்தையுணர்த்துவன் என்றவாறு

விஞ்ஞானகலர் பிரளயாகலர்களை விரிக்கிற் பெருகும், வந்துழிக் காண்க.

சகலர்க்குத் தீக்கை முறைமையிலே என்றது, நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதம் என்னும் கலைகளிலே மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவங்களை அடைத்துக் கலாசோதனை பண்ணிச் சுத்தனாக்கி, மேலும் கன்மம் ஏறுதபடி உபதேசிப்பன் என்பதாம். அவை :

"உரைதருமிப் பசுவர்க்கம் உணரின் மூன்றும்"
"பலவிதமாசான்பாசமோசனந்தான்பண்ணும்படி"
"பாலரொடு வாலீசர் விருத்தர்பனி மொழியார்"
"ஓதியுணர்ந் தொழுக்கநெறி இழுக்கா நல்ல"
"அழிவிலாக் கிரியையினு லாதல்"
"மந்திரங்கள் முதலைந்தும் கலையைந்தின் வியாத்தி"
"வித்தையில்மந் திரமிரண்டு"
"சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்கள்"
"மூன்றுதிறத் தணுக்கள்செயும் கன்மங் கட்கு
முன்னிலையா"

( சித்தி–சூத்–8, செய் 2—10 ) எனவழிநூலார்செய்த முறைமை அறிக.

உத்தமரான விஞ்ஞானகலரும், மத்திமரான பிரளயாகலரும், அதமரான சகலரும் இப்படி என்னும் முறைமை கூறி அவர்களுக்கு உண்ணின்று உணர்த்து கின்ற கர்த்தாவே அவரவர் செய்திகள் அறிந்து குரு ஆவன் என்பது சாத்திரதிட்டி.

இதை விரிக்கின்ற பொருளைத் திவ்வியாகமங் களிலே காண்க.

### உதாரண வெண்பா—4

**அறிவிக்க வன்றி அறியா வுளங்கள்**
**செறியுமா முன்பின் வினைகள்—நெறியிற்**
**குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடாம்**
**குறைவில்சகன்சூழ்கொள் பவர்க்கு.**

### கருத்து

இது வேதாகமங்கள் ஒழிந்த நூல்கள் நூலல்ல என் கின்றது.

### இதன்பொருள்

அறிவிக்க அன்றி அறியா உளங்கள் — ஆன்மாக் கள் யாதொரு பொருளையும் அறிவிக்க வொழிந்து அறியாது,—

செறியும் ஆம் முன் பின் வினைகள்—முன்பு செய்த வினைகள் பின் செறிந்து வாரா நிற்கும்,—

என்றது, சஞ்சிதகன்மம் தீக்கையிலேபோம்; பிரா ரத்தம் புசிக்க வேணும் என்றதாம்.

*நெறியில் குறை உடைய சொல் கொள்ளார்* — *பதிபசுபாசங்களைக் கூறுமிடத்துத் திருந்தக் கூறுத லின்றிக் குறையுடைத்தாகிய சாத்திரங்களைச் சாத்திரம் என்று கொள்ளாராய்,*—

*என்றது, குறைவற்றநூல் வேதாகமங்கள் ஆத லால், அவையொழிந்த நூல்களை நூல் என்று கொள் ளார்கள் என்றதாம். எனவே, வேதாகமத்தின் வழி வந்த நூல்களே நூல்கள் என்றது.*

*குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு*—*சர்வஞ் ஞத்துவத்தினும் சர்வ கர்த்தத்துவத்தினும் சர்வாநுக் கிரகத்தினும் குறைவில்லாத சகநாதன் அருளிச்செய் யப்பட்ட வேதாகமங்களைச் சாத்திரம் என்று கொண் டுணர்வார்க்கு,*—

*கொள் பவத்தின் வீடு ஆம்*—*எடுத்த தேகத்திலே முத்தி பெறுவன் என்றவாறு,*

*வேதாகமம் ஒழிந்த நூலல்லவை:*

"இம்மையே யீரெட்டாண் டெய்தி"

(சித்தி–சூத்–8, செய்–12) *என்பதனில் உலோகாயதன் முதலாயினோர் கூறும் நூல்கள் நூலல்ல என்பதாம்.*

*வேதாகமமே நூலென்று கொள்ளுதல் :*

"ஓது சமயங்கள்"

"அருமறையா கமமுதனூல்"

"வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்"

"சித்தாந்தத் தேசிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்தி"

(சித்தி–சூத்–8, செய்–13—16) *என்ற வழிநூலால் அறிக.*

*சர்வஞ்ஞத்துவமும் சர்வகர்த்தத்துவமும் சர்வா நுக்கிரகமும் உடைமை :*

"இறைவனு வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மையனுக் கிரகமெல்லாம்" (செய்-17)

*என்பதனுல் அறிக.*

*'அறிவிக்க வன்றி அறியா வுளங்கள்' எனவே தனக்கெனவோர் அறிவில்லை, குரு அறிவிக்கும் முறைமையொழிந்து அறியார்கள் என்பதனுல் குருவும் சற்குருவாகவேணும், நூலும் வேதாகமமாய் இருக்க வேணும் என்றதாம்.*

இதுவும் சாத்திரதிட்டி என அறிக.

### உதாரண வெண்பா—5

**இல்லா முலைப்பாலும் ஏந்திழையார் கண்ணீரும்**
**நல்லா யுளதாமால் நீர்நிழல்போல்—இல்லா**
**அருவாகி நின்ருனே யாரறிவார் தானே**
**உருவாகித் தோன்ருனே லூற்று.**

### கருத்து

*இது குருவினுடைய திருமேனி மந்திரதேகமும் அல்ல என நின்றது.*

### இதன்பொருள்

*நல்லாய் — மகடூஉ முன்னிலை.*

இல்லா முலைப்பாலும் ஏந்திழையார் கண்ணீரும் உளது ஆம் போல் — ஏந்தின ஆபரணத்தை யுடையாரிடத்துக் காண்டற்கில்லாத முலைப்பாலும் கண்ணீரும் சிநேகத்தானும் சோகத்தானும் உண்டாகித் தோன்றினாற் போலவும், —

நீர் நிழல் போல் — நீரின் கண்ணே பார்த்த நிழல் தோன்றினாற்போலவும்,—

போல் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக.

இந்த மூன்றுவமை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் மூவர்க்கும் உருவாய் நின்று உபகரிக்கும் முறைமை கூறியதாம்.

இல்லா அரு ஆகி நின்றானை யார் அறிவார் தானே உரு ஆகி தோன்றானேல் உற்று—கண்டார்க்கு இல்லையாய் அரூபசொரூபியாய் நிற்கின்ற சிவன் இப்படி மூன்று விதமாகத் திருமேனிகொண்டு வாரானாகில் அவனை யாவர்தாம் அறிவார் என்றவாறு.

குருதி பாலாய்த் தோன்றினாற்போல விஞ்ஞானகலர்க்குப் பிராணனாய் நின்று உபகரித்த தற்சொரூபந் தானே பின்பும் தீவிரதரமாகிய சத்திநிபாதத்தாலே போதித்துப் போதசொரூபனாகி நிற்பன் என்றதாம்.

கண்ணீர் பிரளயாகலர்க்கு, அவர்களிடத்தே கலந்துநின்ற சிவன் தீவிரதரமாகிய சத்திநிபாதத்தாலே தெய்வகுருவாய்ப் போதித்து நிற்பன் என்றதாம்.

நீர் நிழல் சகலர்க்கு, உயிர்க்குயிராய் நிற்கின்ற சிவன் மந்தம் மந்ததரம் என்னும் சத்திநிபாதத்தாலே அவர்களைப்போலத் திருமேனி கொண்டு வருவன் என்றதாம்.

அருவாய் நின்ற சிவனை உருவாகவும் காணலாம் என்னும் பக்கத்துக்கு, முலைப்பாலும் கண்ணீரும் நீரும் நிழலும் சபக்கம் ஆயினவாறு காண்க.

அருவானவன் உருவுகொள்ளவேண்டியது என் ? எனின், அருளாலே என்னும் ஏதுவும் வந்தவாறு காண்க.

இனிச், சகலராவார் யாவர்? எனில், பிரமா முதல் எறும்பு ஈறாக; ஆகலால், திவ்வியசாதி என்றும் மானுட சாதி என்றும் விலங்கு சாதி என்றும் மூவிதமாவர். சகலர் திவ்வியசாதிக்கு மந்தச் சத்திநிபாதம், மானுட சாதிக்குமந்ததரசத்திநிபாதம்,விலங்குசாதிக்கு மந்ததர வித்தியான சத்திநிபாதம், இப்படி வேதாகமங்களிலே கூறும் முறைமை அறிக.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

---

## மூன்றுமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 6

**பன்னிறமே காட்டும் படிகம்போ லிந்திரியம்**
**தன்னிறமே காட்டும் தகைநினைந்து — பன்னிறத்துப்**
**பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா**
**மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு. [மெய்கண்டான்**

## கருத்து

இது ஞானதீக்கையினுடைய பெருமையும் பெத்த முத்திகளினுடைய நிலைகளும் கூறுகின்றது.

முன்னர் ஐந்து வெண்பாவானும் தம்முதல் குருவாய்த் தவத்தின் உணர்த்தினமை கூறி ஐம்புலன்களினும் மயங்கித் தம்மை உணராமை நின்றது கூறுகின்றது.

## இதன்பொருள்

பல் நிறமே காட்டும் படிகம்போல் இந்திரியம் தன் நிறமே காட்டும் தகை நினைந்து—பளிங்கு பல நிறங்களையும் காட்டும் முறைமைபோல, ஆன்மாவும் இந்திரியங்களினுடைய சொரூபங்களைக் காட்டும் முறைமையை விசாரித்து,—

என்றது, பளிங்கு பல நிறங்களையும் காட்டித் தன்னுடைய நிறம் வேறாய் நின்றாற்போல, ஆன்மாவுக்கு உண்டாகிய நிறம் இந்திரியங்களுடைய நிறமல்ல; வேறாய் இருந்தது என்று விசாரிக்க என்றதாம்.

'நினைந்து' என்றது: இந்திரியங்களுடனே கூடி அதுஅதுவாய் நின்று சீவிக்கின்ற முறைமை அறிதலாம்.

பல் நிறத்து பொய் புலனை வேறு உணர்ந்து—அப்படிப் பல குணபேதமாய்ப் பொய்யாகின்ற இந்திரியங்களை நம்முடைய சொரூபத்துக்கு இவை வேறு என்று கருதி,—

பொய் பொய்யா மெய் கண்டான்—பொய்யைப் பொய் என்று மெய்யைத் தரிசித்தவன்,—

மெய் பொருட்கு தைவம் ஆம் வேறு—உண்மையாகிய சிவனுக்கு அடிமை ஆவோன் என்றதாம்.

வேறு என்பதற்கு இந்திரியங்களுக்கு வேருய் என்றுமாம். இந்திரியங்களை நீங்கத் திருவடி அடைவர் என்றவாறு.

எனவே, ஆன்மா இந்திரியங்களுடனே கூடி நிற்குதல், சிவனுடனே கூடி நிற்குதல் ஒழிந்து தனித்து நில்லாது என்பதாம். ஊசல் ஆடினவன் ஊசற்கயிறு அற்ருல் ஊசலுக்கும் தனக்கும் பூமியே ஆதாரம் ஆனற்போல, இந்திரியங்கள் கெட்டால் சிவனே ஆதாரம் என அறிக. எனவே, இந்திரியங்களை நீங்கிக் கேவலம் சகலம் ஆகிய மயக்க விகற்பங்களில் தேசம் காலம் இடம் குணம் குறி முதலாயின கருதாமல் நிட்டை அடைக என்றதாம்.

"அறியாமை யறிவகற்றி"
"தேசமிடம் காலம்திக் காசனங்க ளின்றி"
"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு"
(சித்தி–சூத்–8, செய்–30, 33, 32) என்ருர் வழிநூலார்.

"பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போ லுள்ளம்"
(செய்–37) என்பதும் அறிக.

இந்திரியங்களினுடைய சொரூபத்துக்கு ஆன்ம சொரூபம் வேறு என்னும் துணிபொருட்பக்கமும், அஃது எத்தால்? என்னில், அவை பொய்யாதலால் என்னும் ஏதுவும், அஃது என்போல? என்னில், பஞ்சவன்னமும் படிகமும் போல என்னும் சபக்கமும் காட்டியவாறு அறிக.

**மூன்ருமதிகரணம் முடிந்தது.**

---

# நான்காமதிகரணம்.

## உதாரண வெண்பா – 7.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலனுணர்வில் தீர்ந்து–சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோல் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

### கருத்து

*இது தேகேந்திரியங்களை வேறு என்று கண்டவன் மீண்டும் பசுகரணமாய் நில்லான் சிவகரணமாய் நிற்பன் என்பதுவும், தேகாந்தத்தே திருவடியைப் பெறுகை நிச்சயம் என்பதுவும் கூறுகின்றது.*

### இதன் பொருள்

*சிறை செய்ய நின்ற செழு புனலின் உள்ளம்— அணைகட்ட அந்த அணையிலே கட்டுண்டு நின்றவெள்ளம் போன்ற ஆன்மா,—*

*சிறை செய் புலன் உணர்வில் தீர்ந்து—தன்னைச் சிறை செய்து நின்ற இந்திரியங்களை உணரும் முறைமையாலே உணர்ந்து நீங்கி, —*

*உலைவு இல் அரன் பாதத்தை உற்று மீளாது— கேடிலாத சிவனுடைய திருவடியைக் கூடி மீண்டும் இறவாது,—*

*அஃது என்போல? என்னில்,*

சிறை விட்டு அலை கடலில் சென்று அடங்கும் ஆறு போல்—கட்டுண்டு நின்ற அணையை விட்டு அலையையுடைய கடலிலே சென்று அடங்குதலையுடைய ஆறு போல என்றவாறு.

கடலிலே சென்றுபுக்க ஆற்றுநீர் மீண்டும் அதன் வழியே ஏறினும் அந்தஉப்புநீராயே ஏறினாற்போல, இந்திரியங்களுடனே கூடிப் பசுகரணமாய் நில்லாது சிவகரணமாய்நிற்கும் என்பதாம். எனவே, தேகாந் தத்தே திருவடியைப் பெறுவர் என்பதாயிற்று.

பசுகரணம் சிவகரணமாய் நிற்றலாவது, இந்திரியங் களைத் தற்சொரூபமே சொரூபமாக்கி நிற்பதேநிலை. அந்த நிலை கூடாதாகில், பசுகரணம் சிவகரணமாகச் சாக்கிரத்தே அதீதம்வர இருத்தலாம்.

"கருவிகழிந் தாற்காணு ரென்று மெனிற் காணார்"
"இந்நிலைதா னில்லையே லெல்லா மீசன்"
"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள்"
"பன்னிறங்க ளவைகாட்டும்" என்பதனில்
'முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி' என்றும்

(சித்தி-சூத்-8, செய்-36, 34 35, 37,) வழிநூலார் நூலிற் செய்தவாறு அறிக.

ஆன்மாவைச் சுத்தசலத்தோடு உவமித்தது இந்திரியங்கள் தற்சொரூபமாய் நின்ற அவதரம் என அறிக.

கடலைச் சிவனுக்கு உவமை நிறைவு குறைதலின்றி யிருத்தற்கு என அறிக.

இந்திரியங்களை நீங்கினால் ஆன்மா, சிவனைக்கூடி நீங்காது என்னும் பக்கத்துக்கு; சிறை விட்டு நீங்கின ஆற்றுநீர் கடலிற் சென்று அடங்குமாறு என்பது சபக்கம் ஆயினவாறு காண்க.

## உதாரணவெண்பா—8

**எவ்வுருவும் தானென்னில் எய்துவா ரில்லையாம்**
**இவ்வுருவின் வேறேல் இறையல்லன்-எவ்வுருவும்**
**கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லான்**
**கண்பேறே காணக் கழல்.**

### கருத்து

*இது ஆன்மாக்கள் சிவனைக் கூடுகின்ற முறைமை கூறுகின்றது.*

### இதன்பொருள்

*எ உருவும் தான் என்னில் எய்துவார் இல்லையாம்*—எல்லா ரூபங்களும் சிவனே என்னில் அவனைக் கூடுதற்கு ஒரு முதல் இல்லையாகும்,—

*இ உருவின் வேறேல் இறை அல்லன்* — இந்த ரூபங்களுக்கு வேறாய் நிற்பன் என்னின் ஏகதேசியுமாய்க் கர்த்தாவும் அல்லனாவன்,—

எனவே, சர்வவியாபி என்றதாம், ஆனால், எங்குமாய் நிற்கின்ற சிவனைக் காணவேண்டாவோ? என்னில்

*எ உருவும் கண் போல் அவயவங்கள் காணு*—எல்லா ரூபங்களையும் (காணுந்தன்மையுடைய)

கண்ணைப் போல நின்ற அவயவங்கள் காணாது நின்றாற் போலச் சிவன் எல்லாரிடத்தினும் ஒக்க நிற்கினும் ஊனக் கண்ணுடையவர்கள் காணமாட்டார்கள்,—

ஞானக்கண்ணையுடையவர்கள் காண்பார்கள் என்பதாம்.

அ கண் இல்லான் கண் பேறே காண் அ கழல்—திமிரத்தாலே கண் மறைந்திருந்தவன் அந்தப் படலத்தைக் கீறி நீங்கின பொழுது கண்பெற்றபேறு போலும் அந்தச் சீபாதம் காட்டக் காணுமாறு என்றவாறு.

என்றது, அந்தத் திமிரம் நீங்கின கண் காண்கின்ற உண்மையும், காட்டுகின்ற பிரகாசத்தினுடைய உண்மையும் பெற்று நின்றாற்போல ஞான திருட்டியை ஒன்றையும் காணமாட்டாது.

என்றது: ஆன்மா இந்திரியங்கள் எல்லாவற்றினும் ஒக்க நிற்கச்சே கண்ணுக்கே காட்சியுண்டாய் மற்றுள்ள அவயவங்களைப் பெற்றவன் தனக்குப் பிராணனாய் நிற்கின்ற சிவனையும் தன்னையும் காண்பன் என்றதாம்.

இது முன் வெண்பாவில் கடலிலே யாற்றுத் தண்ணீர் சென்று கூடினாற்போல ஒன்றாய் விடுமோ? என்றவனுக்கு ஆகாது என்பது கூறியதாம். அஃது எங்ஙனே? என்னில், எங்கும் வியாபித்து நிற்கின்ற ஆதித்தப் பிரகாசத்தைத் திமிரத்தாற் காணாத கண் திமிரம் நீங்கி அந்தப் பிரகாசத்துடனே கூடின இடத்து வேறும் அல்லவாய் ஒன்றும் அல்லவாய்

*நின்றாற்போலச் சிவனுடைய திருவருளைக்கூடி அத்து விதமாய் நிற்பன் என்றதாம்.*

*சிவன் சர்வவியாபியாய் நிற்பினும் சிலர் காண்பர் கள் யாவரும் காணார் என்னும் பக்கத்துக்கு, கண் காண்பதொழிந்து நின்ற அவயவங்கள் காணாதுபோல் என்பது சபக்கமும்; ஒன்றாகாது அத்துவிதமாய் நிற்கும் என்னும் பக்கத்துக்குக் கண்ணிற் பிரகாசமும் ஆதித்தப் பிரகாசமும் போல என்னும் சபக்கமும்; இந்திரியம் நீங்கினவனுக்குச் சிவனைக்காணலாம் என் னும் பக்கத்துக்குத் திமிரம் நீங்கின கண்போல என்பது சபக்கமும் ஆயினவாறு காண்க.*

"எங்குந்தா னென்னி னெய்த வேண்டா
எங்குமிலை யென்னின்வே றிறையு மல்லன்"
*(சித்தி–சூத்–8, செய்–38) என்றார் வழிநூலார்.*

### உதாரணவெண்பா — 9

**ஐம்பொறியி னல்லையெனு மந்தரங் கச்சிவனை**
**ஐம்பொறியை விட்டங் கணைசகலன்—ஐம்பொறியின்**
**நீங்கானீர்ப் பாசிபோ னீங்கிமல கன்மம்போம்**
**நீங்கானின் றீங்கு நினைந்து.**

### கருத்து

*இது ஞான உபதேசியாவதற்கு முன்பு கூடிநின்ற மலங் கள் பின்பும் கூடிநிற்குமாகில் அதனாற் பிரயோசனம் என்? என்போர்க்கு முன்பு அவை தானாக மருவிநிற்பன், இப் பொழுது நீங்குகையும் கூடுகையும் உண்டாகையால் பிரயோ சனம் உண்டு என்கின்றது.*

## இதன்பொருள்

ஐம்பொறியின் அல்லே எனும் அந்தரங்க சிவனை— உயிர்க்கு உயிராய் நின்று உபகரிக்கின்ற சிவன் நீ இந்த ஐந்து இந்திரியங்களின் அல்ல வேறு என்று உபதேசிப்பன்,—

ஐம்பொறியை விட்டு அங்கு அணே சகலன் — அப்படியே உபதேசிக்கைச்செயும் அந்த ஐந்து இந்திரியங்களையும் நீங்கி அந்தரங்கமான சிவனுடனே கூடுகின்றானில்லை,—

என்றது, இந்திரியங்களை வேறு என்றும், யான் அந்தரங்கம் என்றும் போதிப்பிக்கைச்சே சிவனைக் கூடாமலிருக்கைக்குக் காரணம் என் ? என்னையாகில்,

ஐம்பொறியின் நீங்கான்—பிராரத்தகன்மம் புசித்து அறுமளவும் அந்த ஐந்து இந்திரியங்களையும் சடக்கென விட்டு நீங்கான்,—

நீர் பாசிபோல் நீங்கி மலகன்மம் போம் நீங்கானில் — திரோபவம் மறைத்துநின்று பிராரத்த கன்மத்தைப் புசிக்குமளவும் அந்த ஞான உபதேசத்தால் பிரயோசனம் என் ? என்றாயாகில் நீரிடத்துண்டாகிய பாசி கல்லை விட்டெறிந்தபொழுது நீங்குமாறுபோல உன்னை விட்டு நீங்காத சிவனாலே உன்னை விட்டு நீங்கி மலமும் கன்மமும் போம்,—

என்றது, சிவனுடைய திருவருளைக் கூடின பொழுது நீங்கும், நீங்கினபொழுது கூடும், கல்விட்டெறிந்தபொழுது நீங்கியும் நின்றபொழுது கூடியும் நிற்குமாறுபோல என்பதாம்.

நீங்கு நினைந்து — இப்படி மறைப்பது விடுவதாய் வருகின்ற முறைமையை நினைந்து நீ அவையிற்றை நீங்குவாயாக என்றவாறு.

என்றது: 'தன்னை வினையைத் தலைவனை நினைய' என்றதாம்.

அஃது எப்படி? என்னில், சிவன் கன்மத்துக்கு ஈடாகத் திரோபவித்துப் புசிப்பிக்கிற முறைமையும், கன்மம் போகம் வருகின்ற முறைமையும், தான் புசிக்கின்ற முறைமையும் திருவருளாலே பார்க்க அதில் அழுந்துதலை நீங்கி ஆகாமியம் ஏறாமல் தேகாந்தத்தே வீடுபெறுதல் உடைத்தாம் என்றவாறு.

சிவனுடைய திருவருளைக் கூடினபொழுது மலமாயா கன்மம் நீங்கும், திருவருளை நீங்கினபொழுது கூடும் என்னும் பக்கத்துக்கு நீரும் நீர்ப்பாசியும்போல் என்னும் சபக்கமும் காட்டியவாறு அறிக.

"பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்குமது"
(சித்தி—சூத்- 8, செய்—39) என்றார் வழிநூலார்.

**நான்காமதிகரணம் முடிந்தது.**

**எட்டாஞ்சூத்திரம் முடிந்தது.**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## சிறப்பியல்பு – சாதனவியல்

# ஒன்பதாஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# ஒன்பதாஞ்சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே.

## கருத்து

*இச்சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், ஆன்மா கன்மங்களுக்கு ஈடான போகங்களினுடைய புசிப்பை அநுபவிக்கையில் அதனை ஞானதிருட்டியாலே நீங்கவேணும் என்னும் முறைமை கூறுகின்றது.*

*இது ஆன்மசுத்தி பண்ணுதலாம்.*

## இதன்பொருள்

*ஊனக்கண் பாசம் உணரா பதியை — பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறிதற்கு அரிதாய சிவனை,—*

ஊனக்கண் — பசுஞானம். பாசம் — பாச ஞானம்.

ஞான கண்ணினில் சிந்தை நாடி — ஞானக்கண்ணாலே தன்னிடத்தே நிற்கின்ற படியை ஆராய்ந்து,—

உராதுனை தேர்த்து என பாசம் ஒருவ—ஒருவர் ஊராததாகி விரைந்து செல்லும் கானற்றேரை ஒக்கும் பாசம் என்று நீங்க,

தண் நிழல் ஆம் பதி — சிவன் குளிர்ந்த நிழலாவன்.

விதி எண்ணும் அஞ்சு எழுத்து ஏ—ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றவாறு.

என்றது பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அரிதற்கரிய சிவனைத் திருவருளாலே கண்டு நிற்பதே நிலையாவது: அந்த நிலை கூடாமல் விசுவம் மேலிட்டதாகில் கானற்றேர்போல விசுவம் பொய் என்று நீங்க அந்த நிலையாம். அந்த நிலைமையும் கூடாதாகில் ஸ்ரீபஞ்சாக்கரத்தை உச்சரிக்க என்றதாம்.

ஊராத்தேர் தண்ணிழலாம் என்றது விசுவமாகிய வெய்யிலிலே நின்று அலைந்தவனுக்கு அது நீங்கக் குளிர்ந்த நிழலாயிருப்பன் என்றதாம்.

''பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனை''

(சித்தி–சூத்–9, செய்–1) என்றார் வழிநூலார்.

இதற்குப் பிரமாணம் :

# முதலதிகரணம்

## உதாரண வெண்பா — 1.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை—நாடியரன்
தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணார்
என்னும் எனஅறிவார் இன்று.

### கருத்து

*இது தன்னை அறியுமிடத்துச் சிவனுடைய ஞானத்தா லொழிந்து அறிதற்கு அரிதாகையால், சிவனை அறியுமிடத்து வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவன் ஆகையால், அவனுடைய ஞானத்தாலே தன்னையுங் கண்டு தான் சுத்தனாகிய அவனையும் காணவேணும் என்பது கூறுகின்றது.*

### இதன்பொருள்

*நாடியோ என்போ நரம்பு சீ கோழையோ தேடி எனை அறியேன் — முன்பு நான் என்று கருதிய எலும் போ நரம்போ சீயோ கோழையோ என்று ஆராய்ந்து பார்த்தவிடத்து அவையிற்றில் யாதென்று என்னை அறிகின்றிலேன்,—*

*தேர்ந்தவகை நாடி — தெளிந்த கூறுபாட்டாலே ஆராய்ந்து நாடி,—*

*என்றது யாதொன்றினுடைய உண்மையை அறியுமிடத்துச் சிவனுடைய ஞானத்தா லொழிந்து அறிதலில்லை என்னுமிடம் அறிந்து என்றதாம். எனவே, பசு*

*ஞானத்தாலும் பாசஞானத்தாலும் யாதொன்றையும் அறியவொண்ணுது என்பதாயிற்று.*

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகியான் மாவிவைகீழ் நாட லாலே
காதலினு ஞன்பிரம மென்னு ஞானம்
கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண்
டோதியுணர்ந்தொன்ருென்ருவுணர்ந்திடலாற்பசுவா
மொன்ருகச்சிவனியல்பினுணர்த்திடுவன்காணே"
*(சித்தி-சூத்-9, செய்–2) என்பதனுல் அறிக.*

*அரன் தன்னுலே தன்னேயும் கண்டு தமை காணுர் என் ஆம் என அறிவார் இன்று — சிவனுடைய அருளாலே சிவனேயும் கண்டு தம்மையும் அறியார்களாகில் எந்தப்பொருளே ஆம் பொருள் இது என்று அறிவார்கள் என்றவாறு.*

*எனவே, ஆகமப்பொருளும் இது என்று அறியார்கள் என்றதாம். எனவே, மனவாக்குக்கு எட்டான் என்பதுவும் கூறியவாறு அறிக. இது :—*

"கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னில்"
*(சித்தி–சூத்–9, செய்–3) என்ற வழிநூலானும் அறிக.*

"சிவனேயவன்திருவடிஞானத்தாற்சேரச்செப்புவது"
*(செய்–4)*

இது சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.

## உதாரண வெண்பா — 2.

**காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்**
**காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய**
**உள்ளம் தனைக்காணு வுள்ளத்தின் கண்ணுய**
**கள்வன்று னுள்ளத்திற் காண்.**

### கருத்து

*இது சிவனுடைய ஞானத்தாலொழிந்து பசுபாசஞானங்களால் யாதொன்றையும் அறிதற் கரிதாகையால், அப்படி அறியும் அவதாரம் ஆன்மஞான சொரூபியாய்ச் சுத்தனுவன் என்பது கூறுகின்றது.*

### இதன்பொருள்

*காட்டிய கண்ணே தனை காணு—எல்லாத்தையும் காட்டின கண் தன்னைக் காணமாட்டாது,—*

*கண்ணுக்கு காட்டு ஆய உள்ளத்தை கண் காணு—தன்னைக் காணமாட்டாத தன்றியும் தனக்குக் காட்டாகிய ஆன்மாவையும் காணமாட்டாது,—*

*காட்டிய உள்ளம் தனை காணு—கண்ணுக்குக் காட்டாய் நின்ற ஆன்மாவும் தன்னைக் காணமாட்டாது,—*

*உள்ளத்தின் கண் ஆய கள்வன் தான் உள்ளத்தில் காண்—ஆன்மாவுக்குக் காட்டாய் நிற்கின்ற சிவனையும் இப்படி ஆன்மாவினிடத்தே நிற்கின்ற முறையை விசாரி என்றவாறு.*

*இப்படிச் சுபாவங்களால் காண்டற்கு அரிதாய்த் தன்னாலே தன்னைக் காணவேண்டுகையிற் சிவனைக் கள்வன்தான் என்றார். எனவே, சிவனுடைய ஞானத் தாலொழிந்து, இந்திரியாதி காரணங்களை நீங்கித், தன்னையும் கண்டு, காட்டுகின்ற சிவனையும் காண்பது இல்லை என்றதாம். எனவே, சிவனுடைய ஞானம் தாரகமாக நின்று விசுவம் மேலிட்டபொழுது நீக்க வேணும் என்பதாயிற்று.*

"கண்டிடுங்கண் தனைக்காணு"

(*சித்தி–சூத்-9, செய்–5) என்றார் வழிநூலார்.*

இதுவும் சம்பிரதாயதிட்டியால் அறிவித்தது.

முதலதிகரணம் முடிந்தது.

## இரண்டாமதிகரணம்

### உதாரண வெண்பா – 3.

**நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா நந்தனாய்த்**
**தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்–அற்புதம்போல்**
**ஆனா வறிவாய் அளவிறந்து தோன்றுனே**
**வானே முதல்களையின் வந்து.**

கருத்து

*இது தத்துவசமூகம் குணத்திரயங்களையுடைத்தாகை யால் சொரூபமாகையானும், துக்கத்திரயங்களினுடைய மய மாகையானும், சுகதுக்கத்தினுடைய தானமாகையானும், யாதொன்றுக்கும் கீழாயிருக்கையானும் ஆன்மா அவை அவை யாய் நிற்றலானும், இவற்றை நீங்கத் தற்சொரூபமாம் என் கின்றது.*

இதன்பொருள்

நிர்க்குணன் ஆய் — சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் குணங்களை நீங்கி நிற்பானாய்,—

நின்மலன் ஆய் — மல மாயா கன்மங்களில் பொருந்தானாய்,—

நித்திய ஆனந்தன் ஆய் — அழிவில்லாத சுக சொரூபனாய்,—

தற்பரன் ஆய் நின்ற தனி முதல்வன்—யாதொரு பொருள் மேலாயுள்ளது அப்பொருட்கு மேலாய் உள்ளவனாய் ஒப்பில்லாமல் நின்ற சிவன்,—

வானே முதல் களையின் வந்து—ஆகாய முதலாய் உள்ள தத்துவ சமூகங்களை நீங்கில்,—

அற்புதம் ஆய்—ஆச்சரியமாய்,—

ஆன அறிவு ஆய்-விட்டு நீங்காத அறிவாய்,-

அளவு இறந்து வந்து தோன்றானோ—அளவைப் பிரமாணங்களைக் கடந்து அப்பாலாய் எழுந்தருளிவந்து வெளிப்படானோ? வெளிப்படுவனே என்றவாறு.

எனவே, தத்துவ சமூகத்தை நீங்கவேணும் என்பதாயிற்று. அது களங்கமாய் இருப்பனவற்றைப் பார்த்து அறியுமிடத்துக் களங்கமில்லாதவனாலே அறிய வேண்டுகையால் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம

சுத்தி இவை சிவனுடைய அருளாலொழிந்து இல்லை என்பதாயிற்று.

"குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச் சித்து"
(சித்தி—சூத்—9, செய்—6) என்றார் வழிநூலார்.

இது சம்பிரதாய திட்டியால் விரித்தது.

## உதாரண வெண்பா — 4

சுட்டி யுணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனால் பொய்விட்டுப் போம்.

### கருத்து

இது ஆன்மாச் சிவரூபமான விடத்துச் சிவனுவ தொழிந்து சிவன் தோன்றும் என்றது என்னை? என்போர்க்குச் சர்வத்தையும் பொய் என்று காண்பது சிவ ரூபனுமாய்ச் சுத்தனுமாய் நின்ற அவதாம் என்பதுவும், அந்த அவதரத்திலன்றி உண்மை தோன்றாது என்பதுவும், அந்த உண்மை தோன்றினும் அந்த உண்மையினுடைய ஞானமும் கர்த்தத்துவமும் உண்டாகாது என்பதுவும் கூறுகின்றது.

### இதன்பொருள்

சுட்டி உணர்வதனை சுட்டி அசத்து என்ன—இது இது என்று அறியப்பட்ட எல்லாப்பொருளையும் இது பொய்யாய் இருந்தது என்று அறிய,—

சட்ட இனி உளது சத்தே காண்—சடக்கென இப்பொழுது உள்ளதாவது உண்மையாகியசிவம் அதனை விசாரித்துப்பார்,—

என்றது: சிவசொரூபனுமாய்ச் சுத்தனுமாய் நின்று காணும் அவதரத்து அந்தந்த உண்மையொழிந்து அசத்துத் தோன்றுது என்பதாம்.

சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை - சிவசொரூபத்தினுடனே கூடிச் சுத்தனுகி அசத்தை அசத்தென்று நீங்கினும் இது என்று அறியப்பட்ட நீ அந்தச் சிவமாகாய்,—

என்றது: சிவனுடைய கர்த்தத்துவமும் பஞ்ச கிருத்தியமும் உனக்கு உண்டாகாது, சிவ சொரூபனை என்றதாம்.

உண்மையை தைவம் புணர்ந்து—இதனுல் பிரயோசனம் என்? என்கின்றுயாகில், அந்தச் சிவனுடனே கூடித் திருமேனியாய் அந்தச் சொரூபத்தைப் பெற்று,—

அதனுல் பொய் விட்டு போம்—அந்த அருளாலே பொய்யை நீங்கி நில் என்றவாறு.

எனவே, அந்தச்சிவனுடைய ரூபத்தைப் பெறுவதே சிவரூபம் என்பதாயிற்று. எனவே, அசத்து மேலிட்டால் இது அசத்தென்று நீங்கில் சிவரூபம் என்பதாயிற்று.

இதுவும் சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.

## உதாரண வெண்பா — 5.

**கண்டதை அன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்**
**அண்டனை ஆன்மாவின் ஆய்ந்துணரப்—பண்டணைந்த**
**ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனி லொண்கருட**
**சானத்தில் தீர்விடம்போல் தான்.**

### கருத்து

*இது ஆன்மா சிவரூபனுமாய்ச் சுத்தனுமான இடத்து ஆன்மபாவமில்லை என்று கூறுகின்றது.*

### இதன்பொருள்

*கண்டதை அன்று அன்று என விட்டு — இது என்று காணப்பட்ட பொருளையெல்லாம் இவை அல்ல அல்ல என்று நீங்கி,—*

*எனவே, மீட்சிமொழியால் காணாதபொருளா மோ? என்னில், அதுவும் அல்ல என்று கருதி என்க.*

*கண்ட சத்து ஆய்—காட்டாய் நின்று தனக்குக் காட்டுகின்ற சிவ சொரூபமாய்,—*

*அண்டனை ஆன்மாவின் ஆய்ந்து உணர—அண்டங்களெல்லாம் தானாய் நிற்கின்ற சிவனைத் தன்னிடத்தே ஆராய்ந்தறிந்து,—*

*ஆராய்ந்தறிந்து என்றது தனக்கு உபகரித்து நிற்கின்ற முறைமை.*

*பண்டு அணைந்த ஊனத்தை தான் விடும் ஆறு உத்தமனில்—உத்தம குருவினாலே தனக்கு அநாதியிலே*

பொருந்தின மல மாயா கன்மங்களை நீங்கும் முறைமை எப்படி? என்னில்,—

ஒண் கருட சானத்தில் தீர் விடம் போல் தான்— நன்றாகிய கருடதியானத்திலே விடம் தீருமாறு போலும் என்றவாறு.

இது இவன் அவனாகப் பாவித்தலாம். இந்தப் பாவனையே வேதாந்தத்திலும் அது நான்' என்னும் பாவனையாவதும் என்றவாறு. அது தற்பதம், தொம்பதம், அசிபதம் என மூன்றும்.

"கண்டவிவை"

(சித்தி—சூத்—9, செய்—7) என்றார் வழிநூலார்.

அநேக காலமாய் மருவிப்போந்தமையால் நீங்குதற்கு அரிது என்பது தோன்ற என அறிக. அது இப்படிப் பல வெண்பாவிலும் பாசம் நீங்கவேணும் என்று கூறியது.

சிவசொரூபமான பொழுது மலந்தீரும் என்னும் பக்கத்துக்குத் தான் கருடனாகிய பாவனை முற்றின பொழுது விடந்தீரும் என்னும் சபக்கம் காட்டியவாறு அறிக. வேம்புதின்ற புழுவுக்குக் கரும்பு கொடுத்தாலும் அதில் பற்றாமல் வேம்பே நுகருமாறு போல ஆன்மாவும் அப்படிக் கீழாய யோகங்களிலே மேலிட்டுக் கொண்டு வருதலை நோக்கி என்பதாம்.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

## மூன்றுமதிகரணம்

### உதாரண வெண்பா — 6.

**அஞ்செழுத்தா லுள்ளம் அரனுடைமை கண்டரனை**
**அஞ்செழுத்தால்அர்ச்சித்திதயத்தில்—அஞ்செழுத்தால்**
**குண்டலியில் செய்தோமம் கோதண்டம் சானிக்கில்**
**அண்டனும் சேடனும் அங்கு.**

### கருத்து

*இது ஆன்மா எந்தெந்தப் பொருள்களைக் கருதிற்று அந்தந்தப் பொருள்களாய் நிற்குமாகையால் பஞ்சாக்கரத் தாலே இப்படி தியானிக்க, அந்த நிலைமை எய்தும் என்பது கூறுகின்றது.*

### இதன்பொருள்

*அஞ்சு எழுத்தால் உள்ளம் அரன் உடைமை கண்டு — பஞ்சாக்கரத்தாலே ஆன்மா சிவனுக்கு அடிமையாகிய முறைமை உணர்ந்து,—*

*என்றது: சி ஆகிய சிவனும், வா ஆகிய அருளும், ய ஆகிய ஆன்மாவுக்கு ஒரு புறமாய் நிற்க; ந ஆகிய திரோதமும், ம ஆகிய மலமும் ஒரு புறமாய் நிற்க, தான் நிற்கும் முறைமை அறிந்து நவ்வையும் மவ்வை யும் நீங்கி, வவ்வே சொரூபமாய்ச் சிவனுக்கு அடிமை யாய் நின்றதனை உணர்ந்து என்றதாம்.*

*அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில்—* அப்படியுள்ள சிவனை அஞ்செழுத்தாலே அங்க நியாசம் பண்ணி இதய கமலத்தே பூசித்து,—

*அஞ்செழுத்தால் குண்டலியில் செய்து ஓமம்—* அஞ்செழுத்தாலே குண்டலித்தானத்தே அக்கினி காரியம் பண்ணி,—

*கோதண்டம் சானிக்கில் —* புருவமத்தியத்தே தியானிக்கில்,—

*அண்டன் ஆம் சேடன் ஆம் அங்கு —* மேலான சிவஞான சொரூபமாய் அவ்விடத்து அவனுக்கு அடிமையுமாம் என்றவாறு.

என்றது: பஞ்சாக்கரத்தின் உண்மையைப் பார்க்கவே அஞ்ஞானமாகிய பிரபஞ்சம்சீவியாது என்பதுவும், சம்பிரதாய வழக்கில் காட்டியவாறு.

"அஞ்செழுத்தா லான்மாவு மரனுடைமை"
(சித்தி–சூத்–9, செய்–8) என்றார் வழிநூலார்.

## உதாரண வெண்பா — 7.

**இந்துவிற் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணும்—முந்தவே
காட்டத்தொல் தீயென்னக் கனல்சே ரிரும்பென்ன
ஆட்டாளும் ஓதஞ் செழுத்து.**

### கருத்து

இது அங்கச் சிவனைத் தரிசித்தா லொழிந்து சுத்தனுகான் என்பது கூறுகின்றது.

இதன்பொருள்

இந்துவில் பானுவில் இராகுவை கண்ட ஆங்கு— கண்ணுக்குக் காண்டற்கு அரிதாகிய ராகு கேதுக்களைச் சந்திரனிடத்தும் ஆதித்தனிடத்தும் கண்டாற் போல,—

சிந்தையில் காணில் சிவன் கண்ணு முந்தவே— தன்னிடத்தே சிவனைக் காணில் அந்தச் சிவனருளாலே சோகம் எனப்பாவிக்கில் தனக்கு முதலாகிய சிவன் தானேயாம்,—

கண்ணிடம் என்றது காணுமிடத்து அருளே தாரகமாக நின்று காண்டலால், அது காண என்னும் பொழுது முற்பட்டுநிற்கும் என்றதாம்.

சந்திராதித்தரிடத்து ராகு கேதுக்கள் வேறாய் நின்று ஒருகாலத்தே கூடினாற்போல, ஆன்மாவும் சிவனும் வேறாய் நின்று ஒருகாலத்தேயோ கூடுவது? என்னில், இது காணும் முறைமைக்குவமை.

இனி, வேறறநின்று தோன்றுகிற முறைமைக்கு உவமை ஆன்மாக்களுடைய சத்திநிபாதம். சத்தி நிபாதம்—பரிபக்குவம்.

காட்டம் தொல் தீ என்ன—விறகில் பழைதாகி நிற்கும் அக்கினி என்ன,—

என்றது: அநாதியிலே கூடிநின்ற அக்கினி கடைந்த பொழுது தோன்றினாற்போல, ஒருவன் பரிபக்குவம் அறியுமளவும் ஒன்றி நின்று தோன்றுவன் என்றதாம்.

"விறகிற் றீயினன் பாலி னறுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகொண் டுணர்வு" (அகவல்— )

என்றார் ஞானமிர்தத்தாரும் என்பதனாலும் அறிக.

தொல் தீ—தொநீ இது கெட்டசந்தியும் விகாரமும்.

கனல் சேர் இரும்பு என்ன — அக்கினியைச் சேர்ந்த இரும்பை அந்த அக்கினி உள்ளடக்கிக் கொண்டு தானாகி நின்றது போல,—

ஆள் தான் ஆம் — தான் அவனுக்கு அடிமை யாவன்,—

என்றது: அக்கினியைச் சேர்ந்தபொழுது இரும் பாம் தன்மைபோய் அக்கினியேயாய் நின்றாற்போல, ஆன்மாவை அடக்கிச் சிவனும் தானாகி நிற்பன் என்ற தாம்.

இது சிவசோரூபத்தைப் பெறுதற்கு உவமை.

அடிமையாம் என்றது இரும்பு அக்கினியினுள் உள்ளடங்கி நின்றாற்போல நிலைபெற்ற ஆன்மாக்களும் கூடி நிற்பதென அறிக.

ஓது அஞ்செழுத்து — பஞ்சாக்கரத்தை ஓதினால் இப்படிக் கூடுமாகையால், எப்பொழுதும் பஞ்சாக்கரத் தை உச்சரி என்றவாறு.

இது பஞ்சாக்கரத்தை உச்சரித்தால் சிவனைக் காணலாம் என்னும் பக்கத்துக்குச்சந்திராதித்தர்களும்,

இராகு கேதுவும் சபக்கமும்; அநாதியிலே வேறற நின்று தோன்றுவன் என்ற பக்கத்துக்கு விறகும் தீயும் சபக்கமும்; சிவனைக் கூடிச் சிவசொரூபன் ஆவன் என்னும் பக்கத்துக்கு அக்கினியைச் சேர்ந்த இரும்பு சபக்கமும் என அறிக.

## உதாரண வெண்பா – 8.

**மண்முதல் நாளமலர் வித்தை கலாரூபம்**
**எண்ணிய ஈசர் சதாசிவமுன்—நண்ணிக்**
**கலையுருவாம் நாதமாம் விந்துவதன் கண்ணும்**
**நிலையதிலா மச்சிவன்றன் நேர்.**

### கருத்து

இது அந்தரியாகமாக இதயகமலத்திலே இப்படிப் பூசித்தால் அருட்சொரூபனுமாய்ச் சுத்தனு மாவன் என்பது கூறுகின்றது.

### இதன் பொருள்

மண் முதல் நாளம்—இதய கமலத்துக்குத் தண்டு எண் விரல் நீளமுமாய், ஐம்பதுகோடி யோசனை அகல மும் நீளமுமாய், பிருதிவி முதலாக மாயை ஈறாகிய தத்துவம் முப்பத்தொன்றும்,—

இதில் மாயை மூட்டெடன அறிக.

மலர் வித்தை — சுத்த வித்தை எட்டிதழாய் எட்டக்கரத்தையுமுடைய தாமரைப்பூவையும் உடைத் தாயிருக்கும்,—

*கலா ரூபம்-இவையிற்றுக்கு நிவிர்த்தி பிரதிட்டை வித்தை என்று மூன்று கலையும் உருபமாயிருக்கும்,—*

*என்றது, ஆன்மதத்துவம் இருபத்துநாலுக்கும் நிவிர்த்தி; வித்தியாதத்துவம் ஏழுக்கும் பிரதிட்டை; சுத்த வித்தைக்கு வித்தை என அறிக.*

*எண்ணிய ஈசர் சதாசிவம் முன்— (முன்என்றது மேல் அம்மலர்க்கு மேலாகிய காருண்ணியம்) மேல் எண்ணப்பட்ட ஈசுர தத்துவமும் சதாசிவமும்,—*

*நண்ணி கலை உரு ஆம்-இப்படிப் பொருந்தச் சாந்தி சாந்தியாதீதம் என்னும் கலைகளின் உருபமாயிருக்கும்,—*

*நாதம் ஆம்-அதன்மேல் நாதசொரூபமாம்,—*

*விந்து அதன் கண் ஆம் — அந்தவிந்துசத்தி அந்த நாதமிடமாக நிற்கும்,—*

*நிலை அதில் ஆம் அ சிவன் தாள் நேர் — அந்த ஞான சொரூபியாகிய சிவன் அதில் நிலையா நிற்பன், அவனே இப்படித்தியானிக்க இவற்றுள் உயிரான சிவன் தோன்றிடுவன் என்றவாறு.*

*எனவே, இப்படி நிற்க முன்சொன்ன நிலையிலே கூடிச் சுத்தனவன் என்பதாம்.*

*இப்படி அந்தரியாகமாகிய பூசை செய என்றதனால் பகிரியாகபூசை செய்ய வேணுமென்றில்லை. வேண்டிற் றாகில் செய் என்பது மீட்சிமொழியால் வந்தவாறு*

*அறிக. எனவே, அந்தரியாகமும் பக்கிரியாகமும் வேண்டும் என அறிக.*

"நாட்டுமித யந்தானு நாபியினி லடியாய்"
"அந்தரியா கந்தன்னை முத்திசா தனமா
அறைந்திடுவ ரதுதானும் ஆன்மசுத்தி யாகும்"
"புறம்பேயு மரன்"
"இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரதம்
எள்ளின் கண்"

(*சித்தி–சூத்*–9, *செய்*–9, 10, 11, 12) *என்றார் வழிநூலார்.*

*இப்படிப் பல பிரகாரங்களாலும் கூறிய ஏதுவும் திட்டாந்தத்தாலும் ஆன்ம தத்துவத்துச் சமுதாயத்தை நீங்கிப் பேரின்பத்தைப் பெறவேணும் என அறிக.*

*இது சாத்திரதிருட்டியும், சம்பிரதாயதிருட்டியும் என அறிக.*

**மூன்றுமதிகரணம் முடிந்தது.**

**ஒன்பதாஞ்சூத்திரம் முடிந்தது.**

***சாதனவியல் முற்றிற்று.***

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## சிறப்பியல்பு – பயனியல்

# பத்தாஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

# சிறப்பியல்பு – பயனியல்

## பத்தாஞ்சூத்திரம்

அவனே தானே யாகிய வந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

### கருத்து

*இந்தச் சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், மல மாயா கன்மங்களை நீங்கும் முறைமை கூறுகின்றது.*

### இதன்பொருள்

*அவனே தானே ஆகிய அ நெறி ஏகன் ஆகி — சிவன் ஆன்மாவிலே ஆன்மாவாய் நின்ற முறைமை போல ஆன்மாவும் சிவனிடத்திலேயாய் ஏகிபவித்து,—*

*இறை பணி நிற்க — முன்பு தன்னுடைய செயலான எல்லாம் சிவனுடைய செயலான முறைமையைக் கண்டு நிற்க,—*

தன்னுடைய செயலானவெல்லாம் இறைவனுடைய செயல் என்று நிற்க என்றுமாம்.

மலம் மாயை தன்னொடு வல் வினை இன்று ஏ — ஆணவமும் மாயாமலமும் ஆகிய இவற்றுடனே மேலும் ஆகாமியமாகி வரும் வலிய வினையும் இல்லையாம் என்றவாறு

என்றது, சிவனுடனே ஏகீபவித்து அந்தப்படியே ஒழுகி நிற்க என்றதாம். அது 'யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதியான் என்பதின்றி நிற்க' என்றதாம். அப்படிச் செருக்கற்று நிற்கத் திருவருள் தாரகமாம் என அறிக.

இவையிற்றுக்குப் பிரமாணம் :—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா — 1.

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாதல்
தானெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொ
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத் [ன்
தில்லென்று தானு மிறை.

### கருத்து

இது ஆன்மபோதம் சீவிக்குமிடத்துப் பாசங்களையொழித்து சீவியாது, அப்படிச் சீவிக்குமிடத்து ஆன்மாவும் அவற்றினுடைய சொரூபங்களாயே நிற்குமாதலால், அவற்றினுடைய உண்மையைப் பார்க்குமிடத்துச் சிவசொரூபத்தை

யொழிந்து பார்த்து நீங்கவொண்ணுது ஆகையால், தன்னுடைய பணி அவனுடையபணி என்னுமிடத்துச் சிவ சொரூபமாயே நிற்கும் என்பது கூறுகின்றது.

## இதன்பொருள்

நான் அவன் என்று எண்ணினர்க்கு நாடும் உளம் உண்டாதல் தான் என ஒன்று இன்றியே தான் அது ஆய்-நான் அவனுக்குச் செய்தேன் அவன் எனக்குச் செய்தான் என்று கருதுமவர்க்குக் கருதத்தக்க ஆன்ம போதமுண்டாம், அப்படி ஆன்மபோதம் சீவிக்கும் ஆதலாலே சிவன் தான் என்கைக்கு ஏகதேசமும் அவ் விடத்து இல்லையாம், அந்த ஆன்மாவிலே ஆன்மாவாய் நிற்பன்,—

என்றது, யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்போர்க்கு ஆன்மபோதமே சீவித்து நிற்பது. அப்படி ஆன்மபோதம் சீவிக்குமிடத்துச் சிவன் தோன்றுமல் நிற்பன் என்றுமாம்.

நான் என ஒன்று இல் என்று தானே எனும் அவரை — யான் என ஒன்றில்லை என்றும் எல்லாம் சிவன் தானே என்னும் அவர்களை,—

என்றது, நானும் பிறர்க்குச் செய்யமாட்டேன் பிறரும் எனக்குச் செய்யமாட்டார், என்னதும் இல்லை பிறரதும் இல்லை, நான் செய்வதும் ஒன்றில்லை பிறர் செய்வதும் ஒன்றுமில்லை, எனக்குச் செய்வானும் சிவனே எல்லாம் சிவனுடைய செயலே என்று பிறர்க் குச் செய்வானும் சிவனே என நிற்கின்றவர்கள் என்றதாம்.

*தன் அடிவைத்து இல் என்று தான் ஆம் இறை— அப்படிச்சிவபோதம் சீவித்தலையுடையவர்களைத் தன்னுடைய திருவடியிலே அடக்கிக் கொண்டு இவனுடைய செயலெல்லாம் என்னுடைய செயல் என்றும் இவனுக்குச் செய்வதெல்லாம் எனக்குச் செய்வதென்றும் அவனுடைய போதமில்லையென்றும் தானாய் நிற்பன் சிவன் என்றவாறு.*

"இவனுலகி லிதமகிதம் செய்த தெல்லாம்"
'யான்செய்தேன் பிறர்செய்தார்என்னதியானென்னும்'
(*சித்தி—சூத்—10, செய்—1, 2*) *என்றார் வழிநூலார்.*

இது சம்பிரதாய திட்டியால் அறிவித்ததென அறிக.

**முதலதிகரணம் முடிந்தது.**

---

## இரண்டாமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 2

**நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்லவழி**
**நாமல்ல நாமும் அரனுடைமை—ஆமென்னின்**
**எத்தநுவில் நின்றும் இறைபணியாக் கில்லைவினை**
**முற்செய்வினை யுந்தருவான் முன்.**

கருத்து

*இது இந்திரியங்களும் நம்மதல்ல, நாமும் சுதந்திரமுடையோமல்ல, நம்முடைய செயலெல்லாம் சிவன் செயல் என்பார்க்கு மேல் வினை ஏறாது என்கின்றது.*

## இதன்பொருள்

நாம் அல்ல இந்திரியம் - இந்திரியங்கள் யாவையும் நாமல்ல,—

நம் வழியின் அல்ல வழி—இந்திரியங்கள் விடயத்தின்மேற் செல்லுகின்ற செலவும் நம்முடைய செயலல்ல,—

நாம் அல்ல நாமும்—நாமும் நமக்கென ஒரு சுதந்திரம் உடையமல்ல,—

அரன் உடைமை ஆம் என்னின்—சிவனுடைய அடிமை ஆவேம் என்று சொல்லிட,—

எ தநுவில் நின்றும் முன் செய் வினையும் தருவான் முன்—நாம் எந்தெந்தத் தேகத்தை எடுத்தேம் அந்தந்தத் தேகத்தே தானும் எம்முடன் கூடி நின்று முன்பு செய்த வினைகளை அறிந்து புசிக்குமிடத்துக் கூட்டுவானுடைய அருளே தாரகமாக நில்,—

இறை பணி ஆக்கு—நீசெய்யும் செயலெல்லாம் இறைவன் செயல் என்றுவை,—

இல்லை வினை—மேல் ஆகாமிய கன்மம் ஏறு என்றவாறு.

நாமல்ல இந்திரியம் நம்வழியி னல்லவழி—நாமல்ல நாமும் அரனுடைமை—ஆமென்னில், இல்லைவினை என்றும்; அப்படி நிற்கக் கூடாதாகில், முன் எத்தனுவில் நின்றும் முற்செய்வினையும் தருவான் இறை

*பணியார்க்கில்லை வினை என்றும் பொருளைப் பிறுமாம்.*

*இல்லைவினை என்பதனை இப்பொருட்கு இரண்டிடத்தும் கூட்டுக.*

"இந்திரிய மெனைப்பற்றி நின்றே"

(*சித்தி–சூத்–10, செய்–3*) *என்றார் வழிநூலார்.*

*எனவே, முன்பு செய்தவினைகள் தான் செய்தாளுகவும் பிறர் செய்தாராகவும் கூறுதலால் ஏறியது. அப்படியின்றித் தாந்தாம் செய்த கன்மங்களைப் புசிக்குமிடத்துச் சிவனே கூட்டிப் புசிப்பிக்கையால் அவன் செயலைக்கண்டு நிற்கப் பிராரத்தம் புசிக்கிற தொழிந்து மேலைக்குவினை ஏறாது என்றது.*

இது சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.

**உதாரணவெண்பா – 3.**

**சார்ந்தாரைக் காத்தால் தலைவர் கடனுதல்**
**சார்ந்தாரைக் காத்தும் சலமிலனுய்ச்–சார்ந்தடியார்**
**தாந்தாளுச்செய்துபிறர்தங்கள்வினைதான்கொடுத்தல்**
**ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.**

கருத்து

*இது சிவன் பட்சபாதியல்ல என்கின்றதும், சிவன் செயலொழிந்து வேறு செயலில்லை என்பார்க்கு மேல்வினை ஏறாது என்பதுவும் கூறுகின்றது.*

## இதன்பொருள்

சார்ந்தாரை காத்தல் தலைவர் கடன் ஆதல்—அடைந்தவர்களை அஞ்சல் என்று இரட்சிக்கை கர்த்தாவுக்கு முறைமை ஆதல்: அதனாலே,—

சார்ந்தாரை காத்தும் சலம் இலன் ஆய்—அடைந்தவர்களை இரட்சித்து(ம் அடையாதவர்களை இரட்சியாதிருப்பினும் அவர்களுடன்) வெறுப்பின்றி இருப்பன்,—

உம்மை எதிர்மறை.

எனவே, அவரவர் கன்மங்களைப் புசிப்பிக்கின்றான் கன்மம் துலையொத்துத் தன்னை அடைந்தோரை இரட்சிக்கின்றான் என்பதாயிற்று.

சார்ந்த அடியார் தாம் தான் ஆ செய்து—தன்னை அடைந்த அடியார்களைத் தன்னுடைய சொரூபமே ஆக்கி,—

பிறர் தங்கள் வினை தாம் கொடுத்தல் — தன்னை அடையாத பிறருடைய வினைகளைப் புசிக்கும்படி கொடுத்தலை,—

ஆய்ந்தார் முன் செய் வினையும் ஆங்கு—ஆராய்ந்தவர்களிடத்து மேற் செய்யும் வினை இல்லையாம்; அவ்விடத்து என்றவாறு.

அவ்விடத்து என்றது பிராரத்தகன்மம் புசிக்குமிடத்து; அஃதாவது, என்னுடைய செயலெல்லாம் உன்னுடைய செயலே என்றும் நீ என்னுடைய

இடத்தேநின்று செய்விக்கின்றாய் செய்கின்றாய் என்றும் தன்பணியறுக்க என்றதாம்.

பிறர்தங்கள் வினை தாம் கொடுத்தல் என்பதற்கு, பிறர்வினையாற் பிறர்க்குத் தங்கள் வினையால் தமக்குப் பிறர் கொடுத்தலும் என்று பொருளுரைப்பினுமாம்.

"சலமிலனாய் ஞானத்தாற் றனை"
(சித்தி–சூத்–10, செய்–4)

இது சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.

## உதாரணவெண்பா—4

**இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபால்**
**முன்செய்வினை மாயை மூண்டிடினும்–பின்செய்வினை**
**மாயையுட னில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே**
**ஆயவத னாலுணரு மச்சு.**

## கருத்து

*இது சஞ்சிதவினை தீக்கையிலே போம், பிராரத்தம் புசிக்கவேண்டும், மேல் ஆகாமியம் ஏறாது ஞானவான்களுக்கு என்கின்றது.*

## இதன்பொருள்

*இங்குளி வாங்கும் கலம் போல ஞானிபால் முன் செய்வினை மாயை மூண்டிடினும் பின் செய்வினை மாயையுடன் நில்லாது—தீக்கையாலே சஞ்சிதகன்மங்களைப் புசிக்கப்பட்ட ஞானியிடத்தே பெருங்காயத்தை ஒரு பாத்திரத்தே நிறுத்திட்டுவைத்து அந்த நிறைக்கு ஒக்க வாங்கிவிட்டாலும் அதனுடைய நாற்றம்*

அதனிலே நின்றாற்போல, முன்பு செய்ததாய் இந்தத் தேகத்துக்கு அமைத்த பிராரத்தம் புசிக்கின்ற தொழிந்து பின்பு செய்யும் கன்மமும் அதற்கேற்ற தேகமும் பொருந்தி மீண்டும் புசித்தற்குப் பிராரத்தம் உண்டாகா. அஃது எத்தால்? என்னில்,—

மற்று அவன் தான் மெய் பொருளே ஆய அதனல்—அந்த ஞானிதான் சிவசொரூபமேயாய் நின்ற அதனல்,—

மற்று அசை.

உணரும் அச்சு அதனல்—ஒன்றை உணருமளவில் சிவகரணமாய் நின்று உணரும் ஏகீபவத்தால் என்ற வாறு.

அதனல் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக.

இப்படி இந்த மூன்று வெண்பாவாலும் ஆகாமிய கன்மங்களை நீக்கும் முறைமை கூறியவாறு அறிக. எனவே, தேகாந்தத்தே முத்தியென்பது கூறிளூரா யிற்று.

……" இங்குத்,
தங்கிப்போம் பாத்திரமும் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமும் சுந்தித்துச் சுழலுமா"

(சித்தி-சூத்-10, செய்-6) என்றார் வழிநூலார்.

சஞ்சிதம் தீக்கையாலேபோம், போனலும் பிரா ரத்தம் நிற்கும், அது புசிப்பற்ற எல்லையிலே வீடு

பேறும் என்னும் பக்கத்துக்கு; பெருங்காயம் வாங்கினர் பாத்திரமும் அதன் நாற்றமும் அது தகர்ந்தால் அந்த நாற்றம் வேறொன்றில் தோற்றுது என்பதுவும் சபக்கம் ஆயினவாறு அறிக.

### உதாரண வெண்பா — 5.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர் மாச்செலுத்தும் பாகரினும்—எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்
அரனடி நீங்கா ரதற்கு.

### கருத்து

இது ஞானிகள் விடயங்களிலே பட்டு மயங்கார்கள் என்பது கூறுகின்றது.

### இதன்பொருள்

நண் அனல் வேவாத நல் தவர் தம்மினும்—அக்கினிக்குள்ளேயிருந்தாலும் இருக்கின்ற நெருப்பில் வேகாத நல்ல அக்கினித்தம்பனையுடைய தபோதனரைப்போலவும்,—

பண் அமர் மா செலுத்தும் பாகரினும்—பண்ணியமைந்த நல்ல புரவியைச் செலுத்துகின்ற பாகரைப் போலவும்,—

எண்ணி அரன் அடி ஓர்பவர் — பதிபசுபாசத்தை ஆராய்ந்துணர்ந்து பதியினுடைய திருவடி நீழலொழிந்து ஒரு நிழல் இல்லை என்று நினைப்பவர்,—

*ஐம்புலனில் சென்றும் அரன் அடி நீங்கார் அதற்கு — ஐந்து விடயங்களிலே சென்றார்களாயினும் அதனிலே மயங்கி ஞானவீரம் குலைந்து பதியுடைய திருவடியை நீங்கார்கள் என்றவாறு.*

*எனவே, திருவடியே தாரகமாக நிற்பார்க்கு வினை ஏறாது என்றும், இந்திரியம் கைகடந்து செல்லாது மீளும் என்றும் கூறிய பக்கத்துக்கு; அக்கினித் தம்பனையுடையோரும் புரவி செலுத்துவோரும் சபக்கம் ஆயினவாறு அறிக. எனவே, ஞானவீரர் எப்படியிருந்தாலும் அவர்கள் இந்திரியங்களிற் படார் என்றதாம்.*

''அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகும்''
''நாடுகளிற் புக்குழன் றும் காடுகளிற் சரித்தும்''
(சித்தி-சூத்-10, செய்-6, 5) *என்றார் வழிநூலார்.*

*ஓர்பவர் நீங்கார் ஐம்புலனிற் சென்றும் நற்றவர் போலவும், பாகர்போலவும் என அறிக.*

### உதாரணவெண்பா — 6

**சதசத்தா மெய்கண்டான் தன்னை னுணரின்**
**இதமித்தல் பாசத்தி னின்றிக்—கதிமிக்**
**கெரிகதிரின் முன்னிருள்போல் ஏலா வசத்தின்**
**அருகணையார் சத்தணைவா ரங்கு.**

### கருத்து

*இது ஞானவான்களிடத்து மாயாகன்மம் மேலிடாதென்பது கூறுகின்றது.*

## இதன்பொருள்

சத் அசத்து ஆம் மெய்கண்டான் — இது சத்தி னுடைய உண்மையாம் இது அசத்தினுடைய உண்மை யாம் என்று கண்டு நாம் இவை இரண்டினுமல்ல சத சத்தாயிருந்தேம் என்று தம்மைத் தரிசித்தவர்,—

எனவே, பதி பசு பாசங்களைத் தரிசித்தவர் என் பதாயிற்று.

தன்னை உணரில் — யாதொரு பொருளையும் ஆன்மபோதத்தாலே உணராமல் சிவபோதத்தாலே உணர்வாராகில்,—

இதமித்தல் பாசத்தின் இன்றி — ஆணவமலத் தாலே இரதிக்கின்றதும் இல்லையாம்,—

ஏலா அசத்தின் அருகு அணையார் — பொய்யா கிய மாயாகாரியத்தினும் பொருந்தார்,—

சத்து அணைவார் அங்கு — எப்பொழுதும் சிவனைக் கூடிச் சிவசொரூபமாயிருப்பர்,—

ஆதலாலே, அவர்களிடத்து மலமாயா கன்மம் பொருந்தாது. அஃது என்போல ? என்னில்,

கதி மிக்கு எரி கதிரின்முன் இருள்போல்—செல வில் மிகுந்து உட்டிணம் பொருந்திய ஆதித்தன்முன் அந்தகாரம் இல்லாதாற் போல என்றவாறு.

‘சத்தணைவாரங்கு’ என்பதற்குப் பாசம் மேலிட்ட காகில் சடக்கெனச் சிவசொரூபத்தே கூடுவது என்பா ரும் உளர். எனவே, ஞானத்திலே நிற்குமளவும் அஞ்ஞானம் பொருந்தாது என்பதாயிற்று.

*மலம் மேலிடாது மாயாகாரியம் சீவியாது என்றது ஆதித்தன் முன் இருளும் நில்லாது விளக்கும் பிரகாசியாதானாற்போல என அறிக.*

*ஞானத்திலே நிற்குமளவும் பாசம் மேலிடாது என்னும் பக்கத்துக்கு ஆதித்தன் முன் அந்தகாரம் நில்லாது என்னும் சபக்கமும், ஆதித்தன் நீங்கிய விடத்து இருள் மேலிடுமாறுபோல ஞானத்தை நீங்கிய போது பாசம் மேலிடும் என்னும் விபக்கமும் காட்டிய வாறு காண்க.*

இரண்டாமதிகரணம் முடிந்தது.

பத்தாஞ்சூத்திரம் முடிந்தது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## சிறப்பியல்பு – பயனியல்

# பதினொராஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

## பதினொராஞ்சூத்திரம்

**காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்**
**காண வுளத்தைக் கண்டு காட்டலின்**
**அயரா வன்பின் அரன்கழல் தருமே.**

### கருத்து

*இச்சூத்திரம் என்னுதலிற்றே? எனின், பரமேசுர னுடைய திருவடியைக் கூடும் முறைமை கூறுகின்றது.*

### இதன்பொருள்

*காணும் கண்ணுக்கு காட்டும் உளம் போல்— காட்சியையுடைய கண்ணுக்குக் காட்டுகின்ற ஆன்மாப் போல,—*

*காண உளத்தை கண்டு காட்டலின் — சிவன், ஆன்மா தேகத்தை நீங்கிச் சுத்தனானவிடத்து ஆன்மா வைத் தானும் கண்டு தன்னையும் காணக் காட்டு தலாலே,—*

அபரா அன்பின் அரன் கழல் தரும் ஏ — அத் தன்மையை மறவாத அன்பினையுடைத்தாகத் தன்னுடைய திருவடியைக் கூட்டும் என்றவாறு.

என்றது, முத்தான்மாக்கள் இந்திரியங்களை நீங்கித் திருவருளைத் தாரகமாக நின்று காணும் முறைமை போல் அவ்விடத்தும் இந்திரியாதிகளை நீங்கித் திருவருளே தாரகமாகநின்று சீவன் முத்தரானவர்கள் என்றதாம். எனவே, இவ்விடத்தும் சிவனுடைய திருவடியைக்கூடிச் சிவாநுபவத்தைப் பெற்றிருப்பார்கள் என்பதாயிற்று.

"காயமொழிந் தாற்சுத்த னாகி யான்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்
கேயுமுயிர் காட்டிடக்கண் டிடுமிது போல்"
(சித்தி–சூத்–11, செய்–1) என்றார் வழிநூலார்.

இதற்குப் பிரமாணம்:—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா — 1.

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்துபோல் நின்றுணரு மாதலால்-ஐந்தினையும்
ஒன்றொன்றாய்ப் பார்த்துணர்வ துள்ளமே எவ்வுலகும்
ஒன்றொன்றாப் பார்க்கு முணர்ந்து.

கருத்து

இது சிவனும் சீவனும் சொரூபமொன்றென்னில், சாயுச்சியமானாலும் அடிமை உண்டென்பதுவும், கலந்தவிடத்தும் அத்துவிதமாயிருக்கும் என்பதுவும், பெத்தம்

முத்தி இரண்டினும் சிவன் பிரேரிப்பன் என்பதுவும், சிவனுடைய சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமும் இவனுக்கில்லை என்பதுவும் கூறுகின்றது.

## இதன்பொருள்

ஐந்தையும் ஒக்க உணராது அவற்று உணர்வது—பஞ்ச விடயங்களையும் ஒருகாலத்தே அறியாதாய் அவற்றுடனே கூடிநின்று அறிகின்ற ஆன்மா,—

ஐந்தும் போல் நின்று உணரும்—ஐந்து இந்திரியங்களையும் போல் நின்று சிவனாலே அறியும்,—

ஆதலால்—அதனாலே,—

ஐந்தினையும் ஒன்று ஒன்ற பார்த்து உணர்வது உள்ளமே—பஞ்சவிடயங்களையும் ஒவ்வொன்றாகப் பார்த்தறிவது ஆன்மாவே,—

எ உலகும் ஒன்று ஒன்ற பார்க்கும் உணர்ந்து—எல்லாப் பொருளையும் சிவன் ஒருகாலத்தே அறிந்து பார்த்திருப்பன் என்றவாறு.

என்றது ஆன்மா இந்திரியங்களுடனே கூடி இந்திரியங்களை விடயீகரிக்க, அந்தந்த விடயங்களை அது அதுவாய் நின்று சீவிக்கின்ற அவதரத்தில் இந்திரியங்கள் விடயீகரிக்க, யாம் சிவனாலே அவற்றை அறிகின்றேம் என்பது அறியாதிருந்தாற்போலச் சிவனருளுடனே கூடிக்கலந்தவிடத்தும் அறியாதிருக்கவேணும் என்பதாம்.

எனவே, முத்தியினும் அந்நியமாயிருந்து அநுபவிக்கவேணும் என்பதாயிற்று. ஆதலாலே, அடிமையுமாயிற்று

சிவன் எல்லாவற்றையும் ஒருகாலத்தே உணர்ந்து பார்த்திருப்பன் என்றதனால் சர்வபிராணிகளுக்கும் வேறறக் காட்டாய் நிற்பன் ஆதலாலே யாவரொருவர் யாதொன்றை உன்னினார்கள் அந்த உன்னினவற்றைத் தானறிந்து அவரவர் செயற்கு ஏற்ற தன்மைகளைச் செய்வன் ஆகையாலே அப்படிவேறறச் சிவாநுபவத்தை அளித்து நிற்பன் என்றதாம். எனவே, சிவஞானத்தாலே சிவனைத் தரிசித்தவர்கள் சிவனையொழிந்து வேறொன்று பாரார்கள் என்பதாம்.

அப்படி இருப்பதே இருப்பது அல்லது ஒன்றொன்றாகப்பார்த்துணர்வது ஆன்மாவினுடைய அறிவாம் என்பதாயிற்று.

இப்பொருள் :—

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தார் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பசுஞானம்"

(சித்தி–சூத்–11, செய்–2) என்றார் வழிநூலார்.

இது சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.

**உதாரண வெண்பா — 2**

**ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ணானன் உள்குவா ருள்கிற்றை
உள்ளத்தாற் காணானே வுற்று.**

இதுவுமது.

இதன் பொருள்

ஏகம் ஆய் நின்றே இணை அடிகள் ஒன்று உணர போகம் ஆய் தான் விளைந்த பொற்பினன் — தன்னுடைய திருட்டியுடனே ஏகமாய் நின்று தான் காட்டின தன்மை ஒன்றையும் கண்டுணரப் பேரின்பமாய் விளைந்த சிவன்,—

அது ஞாதிரு ஞான ஞேயங்களும் கூறி ஞேயத் தழுந்தல் கூறினர்.

ஏகம் ஆய் உள்ளத்தின் கண் ஆனன் — சர்வ வியாபியாய் ஆன்மாக்கள் யாவைக்கும் வேறறக் காட்டாய் நிற்கின்றவன்,

உள்குவார் உள்கிற்றை — நினைந்தார் நினைந்த நினைவுகளை,—

உள்ளத்தால் காணுறே உற்று — தன்னுடைய அருளாலே காணுதிருப்பனே தானும் அதிலே கூடி நின்று என்றவாறு.

எனவே, பெத்தம் முத்திகள் இரண்டினும் சிவனே நின்று பிரேரிப்பிக்கின்றவன் என்பதுவும், அவனையொழிந்து ஆன்மாக்கள் எவ்விடத்தும் ஒன்றை அறிந்து செய்யமாட்டாது என்பதுவும், பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குத் தோன்றி மற்றவர்க்குத் தோன்றாமல் காட்டாய் நிற்கின்றான் என்பதுவும் கூறியதாயிற்று.

"எவ்விடத்தும் இறையடியை யின்றியமைந்
தொன்றை அறிந்தியற்றி டாவுயிர்கள்"
(*சித்தி–சூத்–11, செய்–7*) *என்றார் வழிநூலார்.*

இதுவும் சம்பிரதாயதிட்டியால் அறிக.

முதலதிகரணம் முடிந்தது.

---

## இரண்டாமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 3

**அருக்கனேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்–அருட்கண்ணாற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்தும் தாமரைபோல்
நேசத்தர் தம்பா னினைந்து.**

கருத்து

*இது சிவன் எவ்விடத்தும் நிறைந்து நிற்பனாகில் யாவரும் காணவேண்டாவோ? என்பார்க்கு அவன் நிற்கின்ற முறைமை கூறுகின்றது.*

இதன்பொருள்

*அருக்கன் நேர் நிற்பினும் அல் இருளே காணார்க்கு—ஆதித்தன் முன்னே வந்து நின்றானாயினும் இராக்காலத்து இருளை ஒத்திருக்கும் குருடாயினார்க்கு,—*

*கண்ணுக்குக் காணார் அந்தகாரம் அதுபோல,*

இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் — சிவன் எவ்விடத்தும் நிறைந்து நின்றுணுயினும் பாசபெந்திகளுக்குத் தோன்றாமல் நிற்பன்,—

இருட்கண் மறைத்தல்.

நினைந்து நேசத்தர் தம்பால் — தன்னை உள்ளபடி உணர்ந்து சிவநேசத்தை வைத்தவர்களிடத்து,—

அருள் கண்ணுல் பாசத்தை நீக்கும் — ஞான திருட்டியைக் கொடுத்து அதனுலே பாசத் தாலங்களை நீக்குவன்,—

பாசத்தாலம் நீங்கவே தான் தோன்றுவன் என்பது மீட்சிமொழி ஆயிற்று. அஃது என்போல? என்னில்,

தாமரை அலர்த்தும் பகல் போல் — பக்குவப் பட்ட தாமரைப்பூவை அலர்த்தும் ஆதித்தனைப்போல என்றவாறு.

எனவே, பக்குவப்படாத பூவை அலர்த்தான் என்னும் மீட்சிமொழியால் பட்சபாதியல்ல என்பது கூறினுர்.

பகல் அலர்த்தும் தாமரைபோல் நேசத்தார் என்பதற்கு ஆதித்தன் அலர்த்துகைக்குப் பக்குவப்பட்ட தாமரைப்பூப்போல் என்னப்பட்ட நேசத்தையுடையவர்கள் என்பாரும் உளர்.

*சிவன் சர்வவியாபியாய் நிற்கச்சே பாசத்திலே நிற்கிறவர்கள் காணார் என்னும் பக்கத்துக்கு ஆதித்த னும், அந்தகனும் சபக்கம் ஆயினவாறும்; பக்குவான் மாக்களைத் தன்னருளாலே உணர்த்தித் தோன்றிநிற் பன் என்னும் பக்கத்துக்குத் தாமரைப்பூவும், ஆதித்த னும் சபக்கம் ஆயினவாறு அறிக.*

"எங்குந்தா னிறைந்துசிவ னின்றா னாகில்
எல்லாருங் காணவே வேணுந்தா னென்னில்"
(சித்தி–சூத்–11, செய்–8) *என்றார் வழிநூலார்.*

உதாரணவெண்பா –4.

**மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்**
**மன்னு மரனை மலந்துரந்து—மன்னி**
**வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்**
**சலிப்பில் விகாரியலன் தான்.**

கருத்து

*இது பரம முத்தித் திசையிலே மலம் நீங்கும் முறைமை கூறுகின்றது.*

இதன் பொருள்

*மன்னும் இருளை மதி துரந்த வாறு —நிலைபெற்ற இருளை மதி ஓட்டும் முறைமை போல,—*

*அன்பின் மன்னும் அரனை மலம் துரந்து — அநாதியிலே தன்னிடத்து நிலைபெற்று நிற்கின்ற கர்த்தா தன்னுடைய காருண்ணியத்தினாலே ஆணவ மலம் முதலாயினவற்றை ஓட்டி,—*

வலித்து இரும்பை காந்தம் வசம் செய்வான் செய்தல் மன்னி — காந்தம் இரும்பை வலித்துத் தன்னுடைய வசமாக்கிக்கொள்ளும் தன்மைபோலத் தன்னுடைய வசமாக்கிக்கொள்ளுதலைப் பொருந்தி,—

சலிப்பில் விகாரி அலன் தான்—அப்படிச் செய்யுமிடத்துச் சலனமும் விகாரமும் உண்டாகாதோ? என்னின், சலித்தும் இலனாகி விகாரமும் இலனாகி இருப்பன் என்றவாறு.

'மதி இருளைத் துரந்தாற்போல மலம் துரப்பன்' என்பது மல மாயா கன்மங்கள் அநாதியாயிருந்து அவை அழியுமோ? என்பார்க்கு, பக்குவமாயினார்க்கு அவை நீங்கி நிற்கும், கெடாது என்பது கூறினர். அஃது எங்ஙனே? என்னில், இருள் நிலைபெற்று நிற்கச்சே மதிவர நீங்கினாற்போல முதல் கெடாமல் மேலிடாமல் நிற்கும் என்பதாயிற்று.

"ஆணவந்தா னுதியந்த மடையா தாகும்
அடையிலந்த ஆன்மாவு மழியு மென்னில்"

"நெல்லுக்குத் தவிடுமிகள் அநாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்"

"இரும்பைக் காந்தம் வலித்தல்போல்
இசைத்தங் குயிரை"

(சித்தி-சூத்-11, செய்-5, 6, 12) என்றார் வழிநூலார்.

மல மாயா கன்மம் அழியாமல் நிற்கச்சே பக்குவர்க்கு நீங்கி நிற்கும் என்னும் பக்கத்துக்கு, மதியும் இருளும் சபக்கம் ஆயினவாறும்; பாசத்தை நீங்கத்

தன்னிடத்தே கூடிக் கொண்டு சலிப்பும் விகாரமும் இன்றி இருப்பன் என்னும் பக்கத்துக்கு, இரும்பும் காந்தமும் என்னும் சபக்கமும் காட்டியவாறு காண்க.

## உதாரணவெண்பா—5

**நசித்தொன்றி னுள்ளம் நசித்தலா லொன்று**
**நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமலம்**
**அப்பணைந்த வுப்பின் உளமணைந்து சேடமாய்க்**
**கப்பின்றும் ஈசன் கழல்.**

### கருத்து

இது பரம முத்தித்தசையில் மூன்று முதலினும் ஒன்றும் கெடாமல், முன்பு போல நிற்பதும் செய்யாமல் நிற்கும் முறைமை கூறுகின்றது.

### இதன்பொருள்

நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று— சிவனுடைய சொரூபத்தைப் பெற்றுக் கூடுமிடத்து ஆன்மா கெட்டுக் கூடும் என்னில் கெடுமாகில் கூடுகைக்கு முதலில்லையாம்,—

எனவே, கெடாமற் கூடுவது இல்லையாமோ? என்னில்,

நசித்திலதேல் ஒன்று ஆவது இல்லை—கெடுவது மில்லை என்னில் வேறுமாய்ச் சாயுச்சியமில்லையாம்,—

எனவே, கெட்டுக் கூடுவதுமில்லை கெடாதாகில் கூடுவதுமில்லை என்றார். ஆனால் கூடும் தன்மை எப்படி? என்னில்,

*நசித்து மலம்—மலமானது கெட்டு,—*

*அப்பு அணைந்த உப்பின் உளம் அணைந்து சேடம் ஆய் கப்பு இன்றாம் ஈசன் கழல்—நீருடன் கூடிய உப்புப் போல, ஆன்மா சிவனைக்கூடி அடிமையாய் வேறற இருக்கும் என்றவாறு.*

*மலத்தினுடைய நீக்கத்தை இவ்விடத்துங் கெடும் என்றார், அவ்விடத்தும் அதனுடைய சேட்டிப்பில்லை ஆதலால் எனக் கொள்க.*

*அப்பணைந்த உப்புப்போல என்றது நாழியுப்பும் நாழி நீரும் கூடின இடத்து நாழியாய் நீக்க ஒண்ணு தாய் மிகுதியாகாமல் நின்றாற்போல, ஆன்மாவும் சிவனைக்கூடி நீக்கமற்று மிகுதியாகாமல் இருக்கும் என்றதாம். இது கெட்டுக் கூடினதோ? கூடிக் கெட்டதோ? என்னில், கெட்டுக் கூடிற்றுமில்லை கூடிக் கெட்டதுமில்லை அவை இரண்டும் ஒருமாத்திரத் தேயாம் என்பது தோன்ற 'அப்பணைந்த உப்பு' என்றார்.*

"சென்றணையும் நிழல்போலச் சிவனிற்ப னென்னில்"

"செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்"

"சிவன்சீவ னென்றிரண்டும் சித்தொன்று மென்னில்"

"இரும்பைக் காந்தம் வலித்தாற்போல்" *—என்பதனில்—*

'அப்பணைந்த வுப்பேபோல்'

(*சித்தி—சூத்*—11, *செய்*—9, 10, 11, 12) *என்றார் வழிநூலார்.*

"பசுபதி யாகப் பன்னிய பனுவன்
மதியோர் பெரும வாயன் றதுவெனே
ஒன்ெறுன் ருயி னல்லதை யிரண்டொன்
றென்று மாகா தெவணெனி னுவது
கெட்டது வாத லதுவாய்க் கெடலை
தொட்டுவ திவணே வின்றே கெட்ட
தாத ருனே யமரர்க் காயினும்
மேவா தாகு மதுவாய்க் கெடுமெனின்
ஆகிய பின்னர்க் கெடுவ தியாதென்
றேவிய கடாவுக் கிடையீ டாவ
தழிந்தாய்த் தன்ரு யழிந்தது மன்று
மொழிந்தவை யிரண்டு மோரம யத்தே
எழுந்ததி யாவகை யென்னிற் செழுந்திரட்
காரிரு ளிரிய நூறிக் கனல்வாள்
ஏரொளி விளக்க மெய்திற் றன்றுஅங்(கு)
எய்திய பின்னர் இருளற விரித்த
செய்தி செப்பின் இல்லை மையறத்
தெளிமதி யிவணஞ் சிவணியது ........"

*என்ற ஞானமிர்தத்தானு (அகவல்—67) ம் அறிக.*

*சிவனும் ஆன்மாவும் வேறறக்கலந்து மிகுதியின்றி இருக்கும் என்னும் பக்கத்துக்கு, நீரும் உப்பும் சபக்கம் ஆயினவாறு காண்க.*

## உதாரணவெண்பா — 6

**பொன்வாண்வெங் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோல்—முன்வாள்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்டும்
மலத்திரித்துச் செல்லும் வரத்து.**

## கருத்து

*இது சீவன் முத்தித்தசையும் பரமுத்தித்தசையும் கூறுகின்றது.*

## இதன்பொருள்

*உள்ளம் — ஆன்மா,—*

*முன் வாள் மலத்தின் மறைந்து — தன்னுடைய அறிவினுடைய பிரகாசம் மலங்களிலே மறைப்புண்டு,–*

*மற்று உலகை உண்டு — பிராரத்த கன்மத்தைப் புசித்து,—*

*மலத்து இரித்து செல்லும் வரத்து — அப்படி மறைத்துப் புசிப்பித்த மலங்களை நீங்கிச் சிவனுடனே கூட்டும் பெருமை மலத்து இரித்தல் என் ? ,—*

*இரிதல் — கெடுதல்.*

*பொன் வாள் வெம்கொண்மூவில் புக்கு அடங்கி போய் அகல தன் வாளே எங்கும் ஆம் தன்மை போல் —ஆதித்தன் பிரகாசம் வெவ்விய மேகத்திலே புகுந்து பிரகாசம் மழுங்கி அது நீங்கிப்போகத் தன்னுடைய பிரகாசம் எவ்விடத்துமாய் நின்ற தன்மை போலும் என்றவாறு.*

*என்றது, ஆதித்தன் பகற்காலத்தில் பிரகாசமும் இன்றி இராக்காலத்து இருளுமின்றி நடுவே மேகம் மறைக்க ஒரு தன்மையாய் மக்கினமாயிருந்த தன்மை*

போல, சீவன் முத்த ராயினார் நேரே சிவப்பிரகாசமு மின்றி நேரே திரோதாயியினுடைய மறைப்புமின்றிப் பிராரத்துவ கன்மம் புசித்துத் தேகாந்தத்தே முகில் நீங்கிப் பிரகாசம் முதிர்ந்தாற்போலச் சிவ சொரூபத் தைக் கூடிக்கலந்து வேறற நிற்பர் என அறிக.

"தெரிவரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த ராவார்"
(சித்தி–11 சூத், 4 செய்) என்றார் வழிநூலார்.

சீவன் முத்தர் நேரே சிவப்பிரகாசமுமாகாமல், பாசத்தினும் அழுந்திடாமல், நடுவே ஓர் அவதாரமாய்த் தேகாந்தம் அளவும் நின்று போகம் புசித்துப் பின்பு சிவனைக் கூடுவார்கள் என்னும் பக்கத்துக்கு, மேகத் திலே மறைந்துபோம் ஆதித்தன் சபக்கம் ஆயினவாறு அறிக.

இந்தப் பதினொரு சூத்திரத்தானும் மூன்று முதலும் உரூப தரிசன சுத்தி ஞேயத்தழுந்தல் கூறி, மேல் அணைந்தோர் தன்மை கூறுகின்றார்.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

**பதினொராஞ்சூத்திரம் முடிந்தது.**

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் — விருத்தியுரை

## சிறப்பியல்பு – பயனியல்

# பன்னிரண்டாஞ்சூத்திரம்

— ஸ்ரீ பாண்டிப்பெருமாள்.

## பன்னிரண்டாஞ்சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

### கருத்து

*இச்சூத்திரம் என்னுதலிற்றோ? எனின், மனவாக்குக் கெட்டாத சிவனைச் சிந்தித்துக் கண்டு வழிபடும் முறைமை கூறுகின்றது.*

### இதன் பொருள்

*செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா அ மலம் கழீஇ — சிவந்த கமலம் போன்ற வலிய ஸ்ரீபாதத்தைக் கூடவொட்டாத அந்த மலத்திரயங்களையும் போக்கி,—*

திரோபவிக்குமிடத்து அஃதொழிய வேறொன்று மில்லை என்னும்படி திரோபவித்து, மீண்டும் அநுக்கிர கிக்குமிடத்துத் தான் ஒழிந்து இல்லை என்னும்படி அநுக்கிரகிக்கும் ஆதலால் 'நோன்றாள்' என்றார்.

அன்பரொடு மரீஇ — அப்படி மும்மலங்களையும் நீங்கச் சிவன் முத்தராயினாருடனே கூடி,

மால் அற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் என தொழும் ஏ — மயக்கமறச் சிவ னளவிலே சிவனேசம் மிகுந்தவர்களுடைய திருமேனி யையும் திருக்கோயில்களையும் சிவன் எனக்கண்டு வழி படும் என்க என்றவாறு.

என்றது, நிட்டையிலே கூடி அநவரதமும் இருத் தலே மிகுந்தது, அது கூடாதோர் நிட்டையுடையோ ருடனே கூடி மலத்திரயங்களையும் நீங்கினவர்களா யுள்ள வேடத்துள்ளோரை வழிபட்டுத் திருக்கோயில் தண்டம் பண்ணுக என்றதாம். மும்மலங்களையும் நீங்க என்றதாயிற்று.

இந்தத் திருமேனிகளை வழிபடவே மும்மலத்தை யுணர்த்தும் ஆதலாலே, அசிந்திதனாகிய கர்த்தாவைச் சிந்திதனாகக் கண்டு வழிபடவேண்டுதலிற் கூறினார்.

"செங்கமலத் தாளிணைகள்"

(சித்தி–சூத்–12, செய்–1) என்றார் வழிநூலார்.

இதற்குப்பிரமாணம் :—

## முதலதிகரணம்

### உதாரண வெண்பா – 1.

**புண்ணிய பாவம் பொருந்துமிக் காமியமும்**
**மண்முதன் மாயைகாண் மாயையும்—கண்ணிய**
**அஞ்ஞானங் காட்டுமால் ஆணவமும் இம்மூன்றும்**
**மெய்ஞ்ஞானிக் காகா விடு.**

கருத்து

*இது மலத்திரயங்கள் உள்ளளவும் ஞானங் கூடாதாகையால் அவற்றை நீங்கவேணும் என்கின்றது.*

இதன்பொருள்

*புண்ணிய பாவம் பொருந்தும் இ காமியமும் — கன்மமலமாவது புண்ணிய பாவங்களாகிய போகங்களைப் பொருந்தும்,—*

*மண் முதல் மாயை காண் மாயையும் கண்ணிய — மாயா மலமும் பிருதிவி முதலாகிய பொய்யை மெய்யாகக்கருதி மயங்க மயக்குதலைச் செய்யும்,—*

*அஞ்ஞானம் காட்டும் ஆல் ஆணவமும்—ஆணவமலம் பொய்யாகியவற்றிலே சுபத்தையடையப் பண்ணும்,—*

*ஆல் அசை.*

*இ மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு—இந்த மூன்று மலங்களுடனேகூடி நிற்றல் உண்மை ஞானிக்கு ஆகா ஆதலால் இவை நீங்கி நில் என்றவாறு.*

என்றது அநவரதமும் நிட்டை புரியவேணும் என்றதாம்.

இது சம்பிரதாயதிட்டியாற் காட்டியது.

முதலதிகரணம் முடிந்தது.

---

## இரண்டாமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 2.

**மறைப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்கும்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—மறைப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை.**

கருத்து

*இது ஆன்மா அரைத்த மஞ்சள் போலப் பற்றினதைப் பற்றும் என்றது கூறுகின்றது.*

இதன்பொருள்

*மறைப்பித்து தம்மை மலங்களில் வீழ்க்கும் சிறப்பு இலார் தந்திறத்து சேர்வை மறைப்பித்து— திருவருளில்லாத பெத்தான்மாக்கள் மலங்களிலே வீழ்ந்து தம்மையும் பாசத்தையும் சிவனையும் அறியாமலிருக்கின்றவர்கள் ஆகையாலே, தம்மைச்செறிந்தவர்களையும் உண்மையைப் பிறப்பித்து, மலங்களிலே விடுதலைச் செய்யும் சிறப்பிலார் தம்முடைய இடத்துக் கூடியிருத்தலை மீளவிடுத்து,—*

*பத்தர் இனத்து ஆய்*—பத்தர்களுடைய கூட்டமாய்,—

*பரன் உணர்வினால் உணரும் மெய் தவரை மேவா வினை*—சிவஞானத்தாலே உணராநின்ற உண்மை ஞானிகளை அர்ச்சனமாகிய வினை கூடாது என்றவாறு.

*சிவஞானிகள் எப்பொழுதும் சிவஞானத்தையே பிரகாசிப்பர்கள் ஆதலாலே அடைந்தவர்கள் வினையும் நீக்குவர்கள் என்பதாயிற்று. அது ஆன்மா மருவின தொன்றிலே மருவும் ஆதலால் என அறிக.*

"ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லார்"
(*சித்தி–சூத்–12, செய்–2*) *என்றார் வழிநூலார்.*

இதுவும் சம்பிரதாய திட்டி.

இது 'அன்பரோடு மரீஇ' என்றதற்குப் பிரமாணம்.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

---

## மூன்றுமதிகரணம்

---

### உதாரணவெண்பா—3

**தன்னுணரவேண்டித்தன துருவைத்தான்கொடுத்துத்
தன்னுணரத் தம்மு ளிருத்தலால்—தன்னுணரும்
நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி.**

## கருத்து

இது திருவேடத்தாரிடத்தே சிவன் பிரகாசித்து நிற்பன் ஆதலால் அவர்களைச் சிவனாக வழிபட வேணும் என்கின்றது.

## இதன் பொருள்

தன் உணர வேண்டி தனது உருவை தான் கொடுத்து தன் உணர தன்னுள் இருத்தலால்—தன்னை யாவரும் அறிதலை விரும்பித் தன்னுடைய திரு மேனியைத் தனது பத்தர்களிடத்தே கொடுத்துத் தன்னாலே யாவர்கள் யாதொன்றையும் அறியும்படி அவர்களுடைய உயிர்களுக்கு உயிராய் எழுந்தருளி யிருப்பன் ஆதலால்,—

தன் உணரும் நேசத்தர் தம்பால் நிகழும் ததி நெய் போல் – தன்னை யுணருகின்ற பத்தர்களிடத்தே தயிரின் நெய் போலத் தோன்றுவன்,—

பாசத்தார்க்கு இன்றாம் பதி—பாசபந்திகளுக்குப் பாலின் நெய்போலத் தோன்றுதலில்லையாய் இருப்பன் என்றவாறு.

எனவே, எங்கும் ஒக்கநிற்பன் தயிரில் நெய் போலப் பத்தர்களிடத்துத் தோன்றி நிற்பன் ஆதலால் அவர்களைச் சிவனாகவே வழிபடுவது நன்று என்றாயிற்று

சிவன் திருவேடத்தாரிடத்தே தோன்றி நிற்பன் என்னும் பக்கத்துக்கு, தயிரின் நெய் சபக்கமாயின வாறு காண்க.

"அறிவரியான் தனையறிய வாக்கை யாக்கி
அங்கங்கே யுயிர்க்குயிராய் அறிவுகொடுத்(து)"
(சித்தி–சூத்–12, செய்–3) என்றார் வழிநூலார்.

## உதாரண வெண்பா — 4.

**கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போல் நின்றங் குளதாமால்—கண்டவுருத்
தானதுவா யன்றானன் தானதுவாய்த் தோன்றானே
தானதுவாய்க் காணும் தவர்க்கு.**

### கருத்து

*இது திருக்கோயில் வழிபடுதல் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*கண்ட உரு தான் அது ஆய் அன்று ஆனன் — காணப்பட்ட வடிவுகள் எல்லாம் தானாகியிருந்து அவை அல்லவாகி நிற்கின்ற சர்வ வியாபியாய சிவன்,—*

*காட்டத்தில் அங்கி வேறு உண்டல்போல் நின்று அங்கு உளது ஆம் ஆல் — காட்டத்தில் அக்கினி வேறாக உண்டானபடி அல்லவானாற்போல எங்கும் வியாபித்து நின்று ஒருவன் தனக்கு வேண்டின பொழுது பிரார்த்தித்தவிடத்தே கடைய வந்து தோன் றினாற் போல,—*

*கண்டது ஒரு மந்திரத்தால் — மந்திர மூர்த்த மாகக் கண்டதொரு மூர்த்தமாதலால் அந்தந்த இடத் திலே,—*

*தான் அது ஆய் தோன்றுமே—அந்த ஞானமே திருமேனியான ஆநந்த ரூபியாய்த் தோன்றுமலிருப் பனே,—*

*ஓ – எதிர்மறை : தோன்றுவன் என்பதாம்.*

*தான் அது ஆய் காணும் தவர்க்கு — அந்தச் சிவசொரூபம் தானகி நின்று காணும் தபோதனர்க்கு என்றவாறு*

*எனவே, திருக்கோயிலுள் இருக்கும் திருமேனியை மந்திரமூர்த்தமாகக் கண்டு தற்பாவனையால் பாவிக்க அந்தப் பாவனையிறந்த சொரூபம் தானும் என்றவாறு.*

"திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன்..."

(*சித்தி–சூத்–*12, *செய்*--4) *என்றார் வழிநூலார்.*

*மந்திரமூர்த்தமான சிவலிங்கத்தே தற்சொரூபத் தைக் காணலாம் என்னும் பக்கத்துக்கு, காட்டமும் அக்கினியும் சபக்கம் ஆயினவாறு காண்க.*

**மூன்றுமதிகரணம் முடிந்தது.**

---

## நான்காமதிகரணம்

---

### உதாரண வெண்பா — 5.

**அதுவிது வென்ற தவல்லான் கண்டால்
அதுவிது என்றதுவு மல்லான்—பொதுவதனில்
அத்துவித மாதல் அகண்டமும் தைவமே
அத்துவிதி அன்பில் தொழு.**

## கருத்து

இது சிவனுக்குப் பூசை செய்தல் கூறுகின்றது.

அஃதாவது காடி காம்பு முதலாயினவற்றைத் தான் என்று வரும் ஆன்மாவை அல்லவாயிருக்கச்சே இவற்றுக்குச் செய்கிற உபகாரம் ஆன்மாவுக்காகின்ற முறைமைபோலச் சிவனுகின்ற தற்சொரூபனும் இவ்விடங்களிலே அப்படியாகியுமாய் அல்லவுமாய் நிறைந்து நிற்றல் என்றது. இந்தச் சிவலிங்கத்துக்குச் செய்கின்ற உபசாரமும் அவனுக்காம் ஆகையால் பூசை நமஸ்காரங்கள் செய்யவேண்டும் என்றதாம்.

## இதன்பொருள்

அது இது என்றது அது அல்லான் — அது அல்ல இது அல்ல என்று நீக்கப்பட்ட தேகம் முதலாயினவும் அல்லன்,—

கண்டால் அது இது என்றதுவும் அல்லான் — விசாரித்துப்பார்க்கில் அது அல்ல இது அல்ல என்று தேகம் முதலாயினவற்றைப் பிரித்து நீக்கப்பட்ட ஆன்மாவும் அல்லன்,—

பொது அதனில் அத்துவிதம் — பொதுவாக அவ்விரண்டினும் நிறைந்துநின்று அவற்றைச் சேட்டிப்பித்து நிற்பான்,—

ஆதல் — ஆகையாலே,—

அகண்டமும் தைவமே — சர்வமும் சிவமயமாம்,—

ஏகாரம் — தேற்றம்.

அத்துவிதி அன்பில் தொழு — அப்படி அந்தச் சிவலிங்கத்தினும் வேறறக் கலந்து நிற்பன் அவனைச் சிவனேசித்துப் பூசை நமஸ்காரம் செய் என்றவாறு.

இது சம்பிரதாயதிட்டியால் அறிவித்தது.

## உதாரண வெண்பா — 6.

**வினையா லசத்து விளைதலான் ஞானம்**
**வினைதீரி னன்றி விளையா—வினைதீர**
**ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழும்**
**ஆனத்தா லன்பிற் றொழு.**

### கருத்து

இது வழிபாட்டாலொழிந்து வினை நீங்காது என்கின்றது.

### இதன்பொருள்

வினையால் அசத்து விளைதலான் — யாதொரு வினையைச் செய்யுமிடத்து அந்த வினையினாலே அஞ்ஞானம் விளைந்து வருமாகையால்,—

என்றது, மனவாக்குக் காயத்தாலொழிந்து ஒரு வினையும் கூடாது. அந்த வினையைச் செய்யுமிடத்து யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்று ஒழியவாராது ஆகையால் யான் எனது என்பது உள்ள அளவும் வினை நீங்காது என்பதாயிற்று.

ஞானம் வினைதீரின் அன்றி விளையா — அப்படியாகிய வினை நீங்கினாலொழிந்து உண்மை ஞானம் விளையாது,—

*வினை தீர ஞானத்தை நாடி தொழவே அது நிகழும் — அந்த வினையைத்தீரத் திகழ் அந்த ஞானத்தினை ஆய்ந்தறிந்து வழிபட அந்தச் சிவப்பிரகாசம் தோன்றும்,—*

*ஆனத்தால் அன்பில் தொழு — ஆகையால் அன்பினையுடையாய் சிவபத்தரையும் சிவலிங்கத்தையும் அன்பினால் கண்டு வழிபடுக என்றவாறு.*

*அப்படி வழிபட்டுவரவே தேகாந்தமளவும் பிராரத்த கன்மம் புசிக்கவேணும், புசிக்குமிடத்து யான் எனது என்று ஒழிய வாராது, அது வருமளவும் வினை ஏறும், அந்தவினை ஞானத்திலே நின்று நீக்கவேண்டும், அந்த ஞானத்தில் நிற்றல் எப்பொழுதும் கூடாது ஆகையால் தொண்டர்களையும் சிவலிங்கத்தையும் வழிபட வந்தவினை ஏறாது என்றதாம்.*

*ஞானத்தை நாடி என்றது கன்மம் புசித்தற்கு வருகின்ற முறைமையும், இந்திரியங்கள் விடயீகரிக்கின்ற முறைமையும், தான் அதுஅதுவாய் நிற்கின்ற முறைமையும், கர்த்தா புசிப்பிக்கின்ற முறைமையும் ஆராய என்றதாம்.*

இது சம்பிரதாய திட்டியால் அறிவித்தது.

## உதாரண வெண்பா — 7.

**தன்னை அறிவித்துத் தான்தானுச் செய்தானைப்**
**பின்னை மறத்தல் பிழையலது—முன்னவன்தான்**
**தானேதா னுச்செய்தும் தைவமென்றும் தைவமே**
**ஆனுல் தொழுகை வலி.**

### கருத்து

இது தான் அவனான பின்பு வழிபாடு என்? என்போர்க்கு அதுவேணும் என்பதுவும், ஆசாரியனேசிவன் அவனை எவ்விடத்தும் காணவேணும் என்பதுவும் கூறுகின்றது.

### இதன்பொருள்

தன்னை அறிவித்து தான் தானு செய்தானை— ஒன்றையும் அறியாமலிருந்த ஆன்மாவைத் தன்னுடைய அருளினாலே ஆணவம் மாயை காமியம் என்னும் மூன்றையும் தரிசிப்பித்து, தன்னைத் தரிசிப்பித்து, தன்னுடைய சொரூபமே சொரூபமாக நிறுத்திய குருபரனை,—

சிவன் என்றும், குருஎன்றும், திருவேடம் என்றும் கூறியவாறு அறிக.

பின்னை மறத்தல் பிழை—அவன் தானான பின்பு தேகம் உள்ளளவும் மறக்கின்றது பாதகமாம்,—

அலது—இது அல்லதும்,—

முன்னவன் தான் தானே தான் ஆ செய்தும் தைவம்—அப்படிக் குருமூர்த்தமாகிய சிவன் தான் தன்னுடைய சொரூபமே இவனுக்குச் சொரூபமாகச் செய்தஇடத்தும் அடிமையாவன்றோ நிற்கின்றான்,—

தைவம் என்றும் தைவமே ஆனால் — என்றும் தைவமே ஆம் அதனாலே எவ்விடத்தும் அடிமையேயானால்,—

*தொழுகை வலி—இவ்விடத்தும் அடிமையாய் நின்று தொழுகையே அன்றோ தனக்குப் பலமாவது என்றவாறு.*

*எனவே, சிவனுடைய சொரூபமான இடத்தும் பெறுவானும் கர்த்தாவும் அடிமையும் உண்டு என்னும் துணிவும் இவ்விடத்தும் அப்படி அடிமையாய் நீங்காமல் நின்றுவழிபடவேணும் என்பதுவும் கூறினாராயிற்று*

"பரம்பிரமம் இவனென்றும் பரசிவன்தா னென்றும்"
(*சித்தி—சூத்—12, செய்—7*) *என்றார் வழிநூலார்.*

இது சம்பிரதாயதிட்டியால் அறிவித்தது.

## உதாரண வெண்பா — 8

**சிவமென்னு மந்ததரன் சிந்தைநேர் நோக்கப்**
**பவமின்றாம் கண்வா சகத்தில்—சிவமுண்டாம்**
**ஒன்று மிரண்டு மலர்த்தார்க்கிங் கொண்குருவால்**
**இன்றிந்நூல் மும்மை மலர்க்கு.**

### கருத்து

*இது சிவனையும் குருவையும் சாத்திரத்தையும் ஒன்றாக நினைந்து வழிபடவேணும் என்கின்றது.*

### இதன்பொருள்

*சிவம் என்னும் அந்த தரன் — சர்வான்மாக்களுக்கும் பிராணனாகியுள்ளான் என்னும் சிவன்,—*

*சிந்தை நேர் நோக்க பவம் இன்றாம் சிவம் உண்டாம் ஒன்று மலத்தார்க்கு — நின்ற நிலையிலே திருவுளத்தடைக்கப் பிறவியில்லையாகும் சிவம் பிரகாசிக்கும் ஒரு மலத்தையுடைய விஞ்ஞானகலர்க்குப் பார்க்கப் பவமின்றாம்,—*

கண் வாசகத்தில் பவம் இன்றாம் சிவம் உண்டாம் இரண்டு மலத்தார்க்கு ஒண் குருவால் சிந்தை நேர் நோக்க — திருநயனங்களாலே பார்க்கப் பிறவியில்லை யாகும் சிவம் பிரகாசிக்கும் இரண்டு மலத்தையுடைய பிரளயாகலர்க்குச் சகத்தில் ஒண் குருவாய்ச் சிந்தை நேராகப் பாாக்க,—

இன்று இ நூல் பவம் இன்றாம் சிவம் உண்டாம் ஒன்றும் இரண்டு மலத்தார்க்கு — இப்பொழுது சகத்திலே அவர்களைப்போலத் திருமேனிகொண்டு ஒள்ளிய ரூபனாகி வந்து திருவுளத்தடைக்கத்திருநயனங்களாலே பார்க்க இனிய சாத்திரங்களாயினவற்றை உணர்த்தப் பிறவியில்லையாகும் சிவம்பிரகாசிக்கும் மூன்று மலத்தையுடைய சகலர்க்கு என்றவாறு

நூல் என்றது நூலையுணர்த்த என்பதாம்.

பவம் இன்றாம் சிவம் உண்டாம் என்பதனை எவ்விடத்தும் கூட்டுக.

சகலர்க்கு எல்லாம் வேண்டும் என அறிக.

"பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும்
பரஞான மிவனென்றும்"

(சித்தி–சூத்–12, செய்–7) என்றார் வழிநூலார்.

இது சம்பிரதாயதிட்டியால் அறிவித்தது.

நான்காமதிகரணம் முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திரம் முடிந்தது.

**சிறப்பியல்பு பயனியல் முற்றிற்று.**

திருச்சிற்றம்பலம். திருச்சிற்றம்பலம். திருச்சிற்றம்பலம்,

---

# நூன்மரபு

## தனியன்

*திருச்சிற்றம்பலம்*

**எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழுமியல்பான்**
**நந்தி யருள்செய்த ஞானநூல்—சிந்தைசெய்திப்**
**போதுரைத்தான் மெய்கண்டான் பூதலத்தோர்** [தாமுணர
**ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.**

### கருத்து

*இது நூன்முறை கூறுகின்றது.*

### இதன்பொருள்

*எந்தை சனற்குமரன் ஏத்தி தொழும் இயல்பான்—எம்முடைய சுவாமியான சனற்குமார பகவான் தோத்திரங்கள் முதலாயின கூறித் தொழுத முறைமையாலே,—*

*நந்தி அருள் செய்த ஞானநூல்—ஸ்ரீநந்திதேவநாயனூர் அவருக்கு அருளிச் செய்த ஞானநூலை,—*

*அது பன்னிரண்டு கிரந்தசூத்திரமும்.*

*சிந்தை செய்து இப்போது உரைத்தான் மெய்கண்டான் பூதலத்தோர் தாம் உணர — 'யாம்பெற்றதெல்லாம் யாவரும் பெறுக' என்பது திருவுள்ளத்தடைத்து இப்பொழுது அருளிச் செய்தான் தமிழ் நூலாகப் பூமியுள்ளோர் அறியும்படி அசத்தை அசத்தென்று நீக்கிச் சத்தைத் தரிசித்தவன்,—*

*ஏது திருட்டாந்தத்தால் இன்று – பக்கம், ஏது, திருட்டாந்தங்களால் இப்பொழுது என்றவாறு.*

*என்றது: பரமேச்சுரன் நந்திகேச்சுர தேவர்க்கு அருளிச்செய்ய, அவர் சனற்குமார பகவானுக்கு அருளிச்செய்ய, அந்தப்பரம்பரையிலே மெய்கண்ட தேவநாயனாருக்கு அருளிச் செய்ய, அவர் இப்படித் தமிழாக அருளிச் செய்தார் என்றதாம்.*

*திருச்சிற்றம்பலம்.*

---

ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த
சிவஞான போதத்துக்கு
ஸ்ரீ பாண்டிப்பெருமாள் விருத்தியுரை முற்றிற்று.

---

## பாண்டிப்பெருமாள் உரைச்சிறப்புப்பாயிரம்

திரிவறுசொல் லுண்மைச் சிவஞான போதம்
பெரிதுணர்ந்த பாண்டிப் பெருமாள்—அருமறையின்
பேராம் சுவேதவன மெய்கண்டான் பேரருளால்
ஆராய்ந் துரையெழுதி ஞன். (1)

முற்றருளாம் மெய்கண்டான் முண்டகத்தா ளேபரவப்
பெற்றருளும் பாண்டிப் பெருமாளார் — சொற்ற
கழிப்பாலை மாநகரான் காட்டளவை யீட்டின்
மொழிப்பாலைக் கேளா முனம். (2)

தெரிவரிய செஞ்சொற் சிவஞான போதத்
தரிய பொருளி னமுதம் — கருதில்
பழுதிரியு முண்மைப் பாண்டிப் பெருமாள்
சிவஞான போதம் தெரியவுரை செய்தான்
தவஞா னிகளுணரத் தான். (3)

குறிப்பு :— *இச் செய்யுட்கள் மூன்றும் பண்டைக் காலத்தனவே. இவை பாண்டிப்பெருமாள் உரைப்பிரதியின் இறுதியில் எழுதப்பட்டுள. அச்சிட்ட பிரதியில் இரண்டாம் செய்யுளின் பின்னர்,*

'இது அகண்டபரிபூரணமாய்ச் சொருபத்தழுத்துதலாம்'
"இதுவிரிக்கிற் பெருகும்."
"இவ்வாறு மகாவாக்கிய முறையாற் காண்ப."

*என்னும் வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன.*

---

# சிவஞானபோதம்

# தெளிபொருள் விளக்கம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதம் தெளிபொருள்விளக்கம்

## பொதுவியல்பு – பிரமாணவியல்

## முதற்சூத்திரம்

**அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்**
**றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா**
**மந்த மாதி யென்மனார் புலவர்.**

(இ–ள்) *அவன் அவள் அது எனும் அவை —அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் சுட்டியுணரப்படும் பிரபஞ்சத்தொகுதி,—மூ வினைமையின்—(தோற்றம் நிலை இறுதி என்னும்) முத்தொழிலையுடைமையால்,— தோற்றிய திதியே — ஒருவனால் தோற்றப்பட்ட உள்பொருளேயாம்,— ஒடுங்கி மலத்து*

உளதாம் — அது தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமலம் நீங்காமையால் அது நீங்கும் பொருட்டு மீளத்தோன்றுவதாம்,— அந்தம் ஆதி—ஆதலால் சங்காரத்தொழில் செய்யும் கடவுளே உலகத்திற்கு முதற்கடவுள்,— என்மனூர் புலவர்-என்று அளவைநூல் உணர்ந்தோர் கூறுவர் (எ-று.)

பிரபஞ்சம் பலவகையாய்ச் சுட்டியுணரப்படுதலால் அதைப் படைத்துக்காத்து அழித்தற்குச் சுட்டுணர்வு இறந்த கடவுள் ஒருவர் வேண்டும் என்பார், பிரபஞ்சத்தை 'அவனவ ளதுவெனு மவை' என்றனர், பிரபஞ்சம் தோன்றி நின்று அழியும் தன்மையுடையது ஆதலினுல் அதைத்தோற்றி நிறுத்தி அழித்தற்குத் தோற்றமும் ஈறும் இல்லாத கடவுள் ஒருவர் வேண்டும் என்பார் 'மூவினைமையின்' என்றனர். உலகம் தானே தோன்றுமல் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டமையால் தோன்றிய என்னுது 'தோற்றிய' என்றனர். பிரபஞ்சமானது சில மதவாதிகள் கூறுவதுபோல், முயற்கொம்பு போன்ற இல்பொருளன்று, உள்பொருளே என்பார் 'திதியே' என்றனர். (திதிப்படும் உலகத்தைத் 'திதி' என்றது உபசாரம்.) பிரபஞ்சம் மலபரிபாகம் உண்டாதற்பொருட்டுக் கடவுளிடம் ஒடுங்கி மீளவும் தோன்றுவதனுல் 'ஒடுங்கி மலத்துளதாம்' என்றனர். (ஒடுங்கி மலத்து உளதாம் — ஒடுங்கின மலத்தான் உளதாம்.) சங்காரகாரணன் ஆகிய சிவபெருமானையே இவ்வுலகம் முதலாகவுடையது என்பார் 'அந்தமாதி' என்றனர். (அந்தம்—அந்தத்தைச் செய்யும் கடவுள்: சங்காரகர்த்தா)

இச்சூத்திரம் அநுமானப் பிரமாணம் ஆகிய அளவையால் இவ்வுலகம் கடவுளை முதலாகவுடையது என்பதை விளக்க வந்ததையால், 'என்மனார் புலவர்' என்பதற்கு அளவைநூல் உணர்ந்தோர் கூறுவர் என்று பொருளுரைக்கப்பட்டது.

## பிரமாணம்

பிரமாணம் காண்டல், கருதல், உரை எனமூன்று வகைப்படும். இவற்றுள், காண்டல் பிரத்தியக்ஷப் பிரமாணமும், கருதல் அநுமானப் பிரமாணமும், உரை ஆகமப்பிரமாணமும் ஆம். மற்றெல்லாப் பிரமாணங்களும் இம்மூன்றினுள் அடங்கும்.

பிரத்தியக்ஷப் பிரமாணமாவது: கண், செவி, வாய், மூக்கு மெய் இவ்வைந்து இந்திரியங்களாலும் முறையே உருவம் சத்தம் இரதம் கந்தம் பரிசம் என்பவைகளை அறிதலாம். (பிரத்தியக்ஷம் — இந்திரிய விஷயம், அக்ஷம்—இந்திரியம்; பிரதி—விஷயம். அக்ஷம் என்பது கண் எனவும், பிரதி என்பது அது காண்கிற ஒளி எனவும் பொருள்படும்.

அநுமானப் பிரமாணமாவது: அநுமானத்தாலே தோன்றும் அநுமேயத்தை அறிதல். உதாரணம்: காணப்பட்ட புகையைக் கொண்டு காணப்படாத (மறைந்துள்ள) நெருப்பை அறிதல்.

ஆகமப் பிரமாணமாவது: நூல்களைக் கொண்டறிதல்.

சித்துப் பொருளாகிய கடவுளை சடப்பொருள் களாகிய இந்திரியங்களால் அறிதல் கூடாது. அசித்துப் பொருள்களாகிய இந்திரியங்களால் அறியப் படுவனவெல்லாம் அசித்துப் பொருள்களாகவே இருக் கும். ஆதலால், பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் சச்சி தானந்தப்பொருளாகிய கடவுளை அறியலாகாது. அவரை ஆகமப்பிரமாணத்தையும் அநுமானப் பிரமாணத்தை யுமே கொண்டு அறிதல் வேண்டும் ஆனால் நூல்கள் கடவுள் மனம் வாக்குக் காயங்களால் அறியப்படாதவர் என்கின்றனவே, இதன் கருத்து யாது? என்னில் கூறுவாம். கடவுள் மனம் வாக்குக்காயங்களால் எட்டப் படாதவர் என்பது உண்மையே.

**சிவஞானசித்தியார்**

"மறையினு லயனுன் மாலான்
மனத்தினுன் வாக்கான் மற்றும்
குறைவிலா அறிவி னுலும்
கூறெளு தாகி நின்ற
இறைவனார் கமல பாதம்
இன்றியா னியம்பு மாசை
நிறையினர் குணத்தோர்க் கெல்லாம்
நகையினை நிறுத்து மன்றே."

*பிரயோசனமும் இன்றாய்விடும் ஆதலால், கடவுள் எதனாலும் எவராலும் அறியப்படாதவர் என்றது அவர் அருளைக்கொண்டன்றி ஆன்ம அறிவினால் சுட்டி அறியப்படாதவர் என்று நூல்கள் கூறியவாறாம். இது பற்றியே சிவஞான சித்தியாரில்—*

"அருளினா லாக மத்தே
அறியலா மளவி னாலும்
தெருளலாம் சிவனை ஞானச்
செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு
வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்க லாகும்
அடியரோ டிருக்க லாமே."

*என்று அருளிச்செய்யப்பட்டது. இவற்றால் அருளில்லாதவர்களுக்கு ஆகமப்பிரமாணங்களும் அநுமானப் பிரமாணங்களும் எவ்வளவு தான் எடுத்துக் காட்டினாலும் பயன்படா என்பதும், அருளுடையார்க்கே அவை பயன்படும் என்பதும் விளக்கியவாறாம்.*

**திருக்குறுந்தொகை**

"குறிகளும் மடையாளமும் கோயிலும்
நெறிகளும் மவர்நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதினும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே."

**திருத்தாண்டகம்**

"மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்
ஓரூர னல்ல னோருவம னில்லி

அப்படியு மந்நிறமு மவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே.''

**கந்தரநுபூதி**

''முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியும் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.''

*எனவரும் திருவாக்குக்களான் அறிக.*

*கடவுளின் அருளிருந்தால் சகல ஞானங்களும் தாமே உண்டாகும். ஆதலால், அவர் அருளுடையோருக்கு ஆகமப்பிரமாணங்களும் அளவைப் பிரமாணங்களும் எற்றுக்கு? எனின், கூறுவாம். அவர் அருளைப் பெற்றால் சகல ஞானங்களும் தாமே உண்டாம் என்பதும் உண்மையே, இதனை,*

''நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்''

*என்னும் திருக்குறட்பாவினாலும், அருட்சத்தியாகிய உமாதேவியாருடைய திருமுலைப்பாலை உண்டமாத்திரத்திலேயே ஆளுடைய பிள்ளையார் ஞானசம்பந்தராய் விளங்கின சரித்திரத்தாலும் உணரலாகும். ஆனால் ஆன்மாக்கள் பலவகைப்பட்ட பக்குவமுடையவர்களாய் இருத்தலினால், அவர் அருளும் அவ்வவர் பக்குவத்திற்கு ஏற்பப் பலபடியாக உபகரிக்குமே யன்றி*

எல்லாருக்கும் ஒரே அளவாகவும் ஒரே தன்மையாகவும் உபகரிக்காது. மனிதர்கள் சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என மூத்திறப்படுவர். இவர்களுள் சாமுசித்தராவார் முற்பிறவிகளில் சரியைகிரியாயோகங்களைச் செலுத்தி, அத்தவ விசேடத்தால் பூர்வ ஞானத்தோடேபிறந்து, மோட்சம் ஒன்றையே அபேட்சித்திருபவர்கள். இவர்களுக்குச் சிவபெருமான் தாமே நேரில் அநுக்கிரகம் செய்வர். ஆதலால், இவர்களுக்கு ஞானநூல் வேண்டுவதின்றாம். வைநயிகர் எனப்படுவார் முற்போந்த சனனங்களில் புறச்சமயங்களை அநுட்டித்துப்பெற்ற புண்ணிய பரிபாக விசேடத்தால் சைவ சமயத்தில் பிறந்து வேத சிவாகமங்களாகிய முதனூல்களையும், அவற்றின் புடைநூல் சார்புநூல்களையும் ஓதி, அவற்றில் விதித்தவாறொழுகி முத்திபெறமுயலுவோர். பிராகிருதர் எனப்படுவோர் உலகவாழ்க்கையையே சாசுவதமாக மதித்து, மோட்சாபேட்சையின்றி, கடவுள் வழிபாட்டைக் கைவிட்டு, மிருகங்களைப்போல் உண்டு உறங்கிச் சுகித்திருப்பவர்கள். இம்மூவருள் உத்தமராகிய சாமுசித்தருக்கும், அதமராகிய பிராகிருதருக்கும் ஞானநூல்கள் வேண்டுவதில்லை. மத்திமராகிய வைநயிகருக்கே அவை வேண்டும்.

சிவஞானசித்தியார்

"பண்டைநற் றவத்தால் தோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினில் தொகுப்பன் மாரக்கர்

கண்டநூ லோதி வீடு
காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும்
பரிசினைப் புகல லுற்றாம்.''

(இ–ள்) பண்டை நல் தவத்தால் — முன்செய்த நல்ல சைவ தவ விசேடத்தால்,—தோன்றி–(சாமுசித்தராய்ப்) பிறந்து,—பரமனை — முதல்வனிடத்தில்,—பத்தி பண்ணும்–(முத்திவிரும்பிப்) பத்திசெய்கிற,—தொண்டரை — சிவபத்தரை,—தானே– (நூல்வழியாலன்றி அம்முதல்வன்) தானே,—தூய கதியினில் தொகுப்பன்—பரிசுத்தமாகிய சிவகதியில் சேர்ப்பன்,—(ஆதலால் அவர்களுக்கு நூல்வேண்டுவதில்லை) மார்க்கர் கண்ட நூல் ஓதி வீடு காதலிப்பவர்கட்கு–சிவஞானிகள் பிரமாணம் என்று அறிந்து கைக்கொண்ட நூல் ஓதி அதன்வழியாய் முத்திபெற விரும்பும் வைநயிகராயினார்க்கு,—ஈசன் புண்டரிக தாள் சேரும் பரிசினை புகலல் உற்றாம்—சிவனுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளைக்கூடும் முறைமையினை வகுத்துக் கூறுகின்றாம். (எ–று)

காணப்பட்ட பிரபஞ்சத்தைக் கொண்டு காணப் படாத கடவுள் ஒருவர் உண்டு என்று அநுமானப் பிரமாணத்தாலும், ஆகமப் பிரமாணத்தாலும் நம்பி, அவரை மெய்யன்போடு வழிபடுவார்க்கே அவர் அருள் உண்டாகும். அவ்வாறு வழிபடாதவர்க்கு அது உண்டாகாது. இதனை, "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே" என்னும் திருவாசகத்தாலும் உணரலாம். ஆதலால், சிவஞான போதத்தின்

இம்முதற் சூத்திரமானது உலகிற்கு முதற்கடவுள் சிறப்புவகையால் உண்டு என்னும் ஆகமப்பிரமாணத்தை அநுமானப் பிரமாணத்தால் வலியுறுத்துகின்றது.

சிவஞான போதச் சூத்திரம் ஒவ்வொன்றும் அதிற் கூறப்பட்ட விஷயங்களுக்கு ஏற்ப அதிகரணங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

"தன்னாற் கூறப்படும்பொருள், அதன்கண் ஐயப்பாடு, அதற்குப்பிறர் கூறும் பக்கம், அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு, இயைபு ஆகிய இவ்வைந்தின் நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும்" இவற்றுள், தன்னாற் கூறப்படும் பொருள்" என்பது அதிகரணத்தில் சொல்லப்பட்ட விஷயம். "அதன்கண் ஐயப்பாடு" என்பது அவ்விஷயத்தில் தோன்றும் சந்தேகம். "அதற்குப்பிறர் கூறும்பக்கம்" என்பது அச்சந்தேகத்தால் பிறசமயிகள் கூறும் ஆட்சேபனைகள். "அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு" என்பது பிறசமயிகள் செய்யும் ஆட்சேபனைகளில் உள்ளகுற்றங்களை எடுத்துக் காட்டி அவைகளை மறுத்துச் சித்தாந்தப்படுத்திய துணிபு. "இயைபு" என்பது சித்தாந்தப்படுத்திக்காட்டிய துணிபுகளைப் பிரமாணங்களாலும், திட்டாந்தங்களாலும் வலியுறுத்தல்.

அதிகரணம் ஒவ்வொன்றுக்கும் சூர்ணிகை என்னும் கருத்துரையையும், வார்த்திகம் என்னும் பொழிப்புரையையும், உதாரண வெண்பாக்களையும் கொண்டு பொருளுரைக்கப்படும்.

முதற்சூத்திரம் மூன்று அதிகரணங்களையுடையது அவை வருமாறு :—

1. அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்.
2. தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்.
3. அந்த மாதி யென்மனார் புலவர்.

இவை மூன்றும் ஒன்றுக் கொன்று ஏதுவும் பயனுமாய் வருதலால் ஒரு சூத்திரத்தாற் கூறப்பட்டன.

## முதற்சூத்திரத்தின் சூர்ணிகை

1. சகம் பிறப்புஇருப்பு இறப்பாகிய முத்தொழிலை யுடையது.
2. அது அரனாலே யுடையது.
3. மற்றிருவரும் முத்தொழிற்படுவர்.

## முதற்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டுத் தோற்றமும் ஈறும் உள்ளதன் பாலே கிடத்தலின் உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத் தென்றது.

2. இனி, இல்லதற்குத் தோற்ற மின்மையின், உள்ளதற்குச்செய்வோரின்றிச் செய்வினையின்மையின் ஒடுங்கின சங்காரத்தின் வழியல்லது உற்பத்தியில்லை என்றது.

3. இனி, சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின்வழியல்லது சுதந் தரமின்றி நிற்றலான் சங்காரமே முதல் என்றது.

இம்முதற் சூத்திரத்திற்குரிய உதாரணவெண்பாக்கள் ஐந்து.

இனி, முதற் சூத்திரத்தின் முதலதிகரணத்தின் பொருளை, அதற்குரிய சூர்ணிகை வார்த்திகங்களோடும் உதாரண வெண்பாவோடும் சேர்த்து விளக்குவாம்.

## முதலதிகரணம்

---

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்.

(இ-ள்) அவன் அவள் அது என்று சுட்டியுணரப் படும் பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் என்னும் முத்தொழிலையுடையதாய் இருத்தலினால்.

இவ்வதிகரணத்தில் "தன்றாற் கூறப்படும் பொருள்" முதலிய ஐந்தும் வருமாறு:—

1. தன்றாற்கூறப்படும் பொருள் — பிரபஞ்சம் பிறப்பு இருப்பு இறப்பு ஆகிய முத்தொழிலையுடையது.

2. ஐயப்பாடு — பிரபஞ்சம் முத்தொழிலையுடையதோ? அன்றோ?

3. பிறர் கூறும் பக்கம்:— பிரத்தியட்சப் பிரமாணத்தால் அறியப்படாதன எல்லாம் அங்கீகரிக்கப் படுவன அன்று. ஆதலால், இவ்வுலகம் ஒருகாலத்தில் தோன்றியது என்பதும், இனி ஒருகாலத்தில் அழியும் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுவன அன்று. பிரபஞ்சம் தோற்றமும் ஈறும் இன்றி நித்தமாயிருப்பது என்பதே நிச்சயம்.

இவ்வாறு கூறுவோர் காட்சிப்பிரமாணம் ஒன்றையே ஒப்புக்கொள்ளும் உலோகாயதரும், மீமாஞ்சகருமாவார்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு :— 'தோற்றமும் ஈறும் உள்ளதன் பாலே கிடத்தலின் அதாவது உற்பத்தியும் நாசமும் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக்கிடத்தலின். ஒருவன் ஒருத்தி என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து' அதாவது காட்சிப்பிரமாணம் ஒன்றையே ஒப்புக் கொள்ளும் உலோகாயதருக்கும், மீமாஞ்சகருக்கும் அப்பிரமாணத்தைக் கொண்டே பிரபஞ்சம் தோன்றி நின்று அழிதலை விளக்க வேண்டி பிரபஞ்சம் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டியுணரப்படும் பொருள் களின் தொகுதியாகையாலும், அவ்வாறு சுட்டி அறியப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் தோன்றி நின்று அழிதலைப் பிரத்தியட்சமாகக் காண்பதனாலும் அவற்றின் தொகுதியாகிய பிரபஞ்சமும் அவ்வாறே தோன்றி நின்று அழியும் தன்மைத்து என்று சித்தாந் தப்படுத்தியதாம்.

5. இயைபு:—

**உதாரணவெண்பா — 1**

**பூதாதி ஈறு முதலும் துணையாகப்**
**பேதாய் திதியாகும் பெற்றிமையின்—ஓதாரோ**
**ஒவ்வொன்றில் தோன்றி யுளதாய் இறக்கண்டும்**
**அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து.**

இதன் பொருள்

*பேதாய்—காட்சி அளவையாலும் அறியமாட்டாத மடவோனே,—பூதாதி—பூதம் முதற்காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு,—திதி—நீ அங்கீகரிக்கும்திதி,—ஈறும் முதலும் துணை ஆக ஆகும் — நாசமும் உற்பத்தியும் தனக்குத் துணைக்காரணமாகக் கொண்டே நிகழும்,— (அதாவது உற்பத்தியும் நாசமும் இன்றி வெறும் திதி மாத்திரம் இராது. ஆனல், உலகத்திலுள்ள பொருள் கள் ஒன்று தோன்றவும் ஒன்று நிற்கவும் ஒன்று அழியவும் காண்கின்றோமே அன்றி எல்லாம் ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழியக் காண் கிலோம் எனில்) ஒன்று ஒன்றின் பெற்றிமையின் தோன்றி உளதாய் இற கண்டும் — ஒவ்வொரு கால விசேடத்தில் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழிவதனைக் கண்டுவைத்தும்,—(அதாவது கால விசேஷத்தால் ஒவ் வொரு சாதிச் செந்துக்கள் செடிகள் முதலியன ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழிதலாலும், பூகம்பம், எரிமலை, ஜலப்பிரவாகம், யுத்தம் முதலியவற்றால் பலபொருள்களும் ஒருங்கே அழிவது பிரத்தியட்சமாயிருத்தலாலும்) என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ — என்றாயினும் அதற்குரிய காலம் வருமென்று உலகத்திற்கும் அவ்வாறுதல் உண் டென்று அக்காட்சிபற்றி ஆராய்ந்து சொல்லார்களோ உன்னைப்போலும் மடமையில்லாதோர்: ( அதாவது உலகத்திற்கும் அதற்குரியகாலம் வந்தால் அவ்வாறுதல் கூடுமென்று அக்காட்சிப் பிரமாணத்தைக் கொண்டே அறிவுடையோர் ஆராய்ந்து சொல்வர் என்பதாம்).*

இனி, முதற் சூத்திரத்தின் இரண்டாம் அதிகாரணத்தை விளக்குவாம்.

## இரண்டாமதிகரணம்

"தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்"

(இ-ள்) பிரபஞ்சம் ஒருவனால் தோற்றப்பட்டதாய உள்பொருளேயாம். அது தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகச மலம் நீங்காமையால் அது நீங்கும் பொருட்டு மீளத் தோன்றுவதாம் (எ-று)

இவ்வதிகரணத்தில் தன்னாற் கூறப்படும் பொருள் முதலிய ஐந்தும் வருமாறு :—

1. தன்னாற் கூறப்படும் பொருள்—சகம் அரனாலே யுடையது.

2. ஐயப்பாடு — சகம் சார்பில் தோன்றுவதோ? அன்றி, அரனால் தோற்றப்பட்டதோ?

3. பிறர்கூறும்பக்கம்-பிரபஞ்சம் இல்பொருளாய்ச் சார்பிலே தானே தோன்றி அழியும். ஆதலால், அதைத் தோற்றி அழிப்பவன் ஒருவன் வேண்டாம்.

(இதுபுத்தர் கொள்கை)

பிரபஞ்சம் உள்பொருளாய் முதற்காரணத்தினின்றும் தானே தோன்றி அழியும். ஆதலால், அதற்கு நிமித்த காரணனாகிய கர்த்தா ஒருவன் வேண்டாம்.

இது இரணியகருப்பன், பாஞ்சராத்திரி என்பார் பக்கம்)

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு—

பிரபஞ்சம் முயற்கொம்புபோல் இல்பொருளாயின் அதற்கு முக்காலத்தும் உற்பத்தியில்லாதிருத்தல் வேண்டும். பிரபஞ்சத்திற்கு உற்பத்தி முதலியன காணப்படுதலால் அது இல் பொருள் அன்று; உள் பொருளே

இது புத்தரை மறுத்தது.

உள்பொருளைச் செய்பவரின்றிச் செய்தொழில் மாத்திரம் இல்லாமையால், உள்ளதாகிய பிரபஞ்சம் தோற்றுவிப்போனாகிய கர்த்தாவாலன்றி உண்டாகாது.

இது சாங்கியரை மறுத்தது.

எது எதனில் ஒடுங்குமோ அது அதனின் உற்பத்தியாம் என்னும் ஏதுவினால், சங்கார கர்த்தாவாகிய அரனிடத்தில் ஒடுங்கிய பிரபஞ்சம் அரனிடத்திலிருந்தே மீளத்தோன்றும்.

இது இரணிய கருப்பனையும், பாஞ்சராத்திரியையும் மறுத்தது.

5. இயைபு—

உதாரணவெண்பா—2

**இலயித்த தன்னிலில யித்ததாம லத்தால்**
**இலயித்த வாறுளதா வேண்டும்—இலயித்த**
**தத்திதியி லென்னி னழியா தவையழிவ**
**தத்திதியு மாதியுமா மங்கு.**

அந்நுவயம்: *இலயித்தது இலயித்த தன்னில் மலத்தால் ஆம். இலயித்தவாறு உளதா வேண்டும். இலயித்தது அத்திதியில் என்னின், அவை அழியாது. அத்திதியும் ஆதியுமாம் அங்கு அழிவது.*

இதன்பொருள்

*இலயித்தது – ஒடுங்கியது,—இலயித்த தன்னில் – ஒடுங்கிய பொருளினின்றும்,—மலத்தால்—மலம் காரணமாக,—ஆம்—மீள உண்டாம்,— (அது) இலயித்தவாறு —ஒடுங்கினபடியே,—உளதா வேண்டும்—மீள உண்டாக வேண்டும்,—இலயித்தது அ திதியில் என்னின் – ஒடுங்கினது திதி கருத்தாவாகிய விண்டுவினிடம் என்னையேல்,—அவை அழியாது – சர்வப் பிரபஞ்சமும் திதி கருத்தாவிடம் ஒடுங்காது,—அ திதியும்—அந்தத் திதி கருத்தாவாகிய விட்டுணுவும்,—ஆதியும் – சிருட்டி கருத்தாவாகிய பிரமனும்,—அங்கு—யாவும் ஒடுங்குமிடமாகிய அரனிடத்தில்,—அழிவதாம்—ஒடுங்கிவிடுவார்கள் என்றவாறு.*

விருத்தியுரை: *இலயித்தது—முன்னே ஒடுங்கிய உலகம் (மீளத்தோன்றுங்கால்) இலயித்த தன்னில் ஆம்—ஒடுங்கிய இடத்தினின்றும் தோன்றுவதாம்.*

*ஒடுங்கிய உலகம் ஏன் மீளத்தோன்றும்? என்னில்,*

*மலத்தால்—உலகம் மலத்தோடும் கூடியிருத்தலால், கருமமலம் பரிபாகமாகும் பொருட்டு ஒடுங்கி, ஆணவ மலம் பரிபாகமாகும் பொருட்டு மீளவும் தோன்றும்.*

ஆனால், முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக, வேறு பிரபஞ்சம் தோன்றும் என்னாமல், முன் ஒடுங்கின பிரபஞ்சமே மீளத்தோன்றும் என்பது எங்ஙனம்? என்னில்,

இலயித்தவாறு உளதா வேண்டும்—எது எவ்வாறு நின்று ஒடுங்கிற்றோ? அது அவ்வொடுங்கியவாறே மீளத்தோன்றி உளதாதல் வேண்டும்,—

இலயித்தது அ திதியில் என்னின்—உலகம் ஒடுங்கியது அதற்கு முதற்காரணமாகிய மூலப்பிரகிருதி வடிவாகிய வாசுதேவன் (என்னும்) திதி கர்த்தாவிடத்தில் என்னையாயின்,—

அவை அழியாது — நீ அவ்வாறு கொள்ளினும் மாயாகாரியத் தொகுதி முழுவதும் திதி கர்த்தாவிடம் ஒடுங்காது. மூலப்பகுதிக்கு மேல் வாசுதேவனுக்கு வியாபகம் இல்லாமையால், அதற்குக் கீழுள்ள ஏக தேசத்தனவாகிய நிவிர்த்திகலை பிரதிஷ்டாகலைகளைச் சார்ந்த தத்துவ புவனங்கள் மாத்திரம் அம்மூலப் பிரகிருதியில் ஒடுங்குமே யன்றி, அதற்கு மேற்பட்ட வித்தியாகலையைச் சார்ந்த அசுத்த மாயாதத்துவபுவனங்களும், அதற்கு மேற்பட்ட சாந்திகலை சாந்தியாதீத கலைகளைச் சார்ந்த சுத்த மாயா தத்துவ புவனங்களும் ஒடுங்காவாம்.

அ திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது—(ஆனால் மாயாகாரியத்தொகுதி முழுவதும் எங்கே ஒடுங்கும்? என்னில்,) அது திதி கருத்தாவாகிய நாராயணனோடும்,

சிருட்டி கர்த்தாவாகிய பிரமனோடும் தான் தோன்று தற்குக் காரணமாயுள்ள அந்த மகாசங்கார கர்த்தா விடத்தே ஒடுங்கும் என்றவாறு.

இனி, பல கிராமங்கள் ஒரு ஜில்லாவிலும், பல ஜில்லாக்கள் ஒரு இராஜதானியிலும், பல இராஜதானிகள் ஒரு தேசத்திலும், பல தேசங்கள் ஒரு கண்டத்திலும், பல கண்டங்கள் உலகத்திலும் அடங்கி நிற்றல் போல்; தத்துவங்களும் ஒன்றினொன்று அடங்கியிருக்கும். தத்துவ கர்த்தாக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு மேற்பட்ட தத்துவ கர்த்தாவினிடம் ஒடுங்கிவிடுவர். பிரமாவுக்குமேல் விஷ்ணு, அவருக்குமேல் உருத்திரர், அவருக்குமேல் மகேசுரர், அவருக்குமேல் சதாசிவர், அவருக்குமேல் விந்து, அதற்குமேல் நாதம், அதற்கு மேல் சத்தி, அதற்குமேல் சிவம். தத்துவாதீதராகிய சிவபெருமானே பிரமா விஷ்ணு உருத்திரர் என்னும் மூவருக்கும் மேலான முதல்வர் என்று கைவல்லியம், தைத்திரீயம், ஆரணியகம் முதலிய உபநிடதங்கள் முழங்குகின்றன. இதனைத் திருவாசகம்—"தேவர்கோ அறியாத தேவ தேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை — மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்று அருளிச் செய்தது. துரிய மூர்த்தியாகிய சிவபெருமான் கொள்ளும் நவவடிவங்களாகிய சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் மகேசுரன் உருத்திரன் மால் அயன் என்பனவற்றுள் மகேசுரன் வரையில் அவருக்குச் சுதந்திரவடிவம். உருத்திரன் மால் அயன் ஆகிய இம்மூவரும் உயிர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இம்மூவருள்ளும் மேற்பட்ட உருத்திரர்

குணதத்துவத்திலிருந்து பிரகிருதி புவனாந்தம் சங்கரிப்பவர். இவரும் மகேசுர தத்துவத்தில் ஒடுங்கி விட வேண்டியவர். இதனை உணராது சர்வ சங்கார மூர்த்தியாகிய பரமசிவனை மூவருள் ஒருவராகிய உருத்திர மூர்த்தியாகஎண்ணி இடர்ப்படுவாரை நோக்கியே திருவாதவூரடிகள் — "நம்மவ ரவரே, மூவரென்றே எம்பிரானொடு மெண்ணிவிண்ணாண்டு மண்மேல், தேவரென்றே இறுமாந் தென்னபாவம் திரிதவரே" என்று இரங்கிக் கூறியருளினர் என்க.

## உதாரணவெண்பா—3

**வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா**
**மத்தன்ற ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்**
**வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்**
**கூட்டானே மண்போற் குளிர்ந்து. [கொடுத்துக்**

### இதன்பொருள்

மண் குளிர்ந்து—நிலம் குளிர்ந்தபோது,—வித்து உண்டு ஆ — ( அதில் ) வித்து உளதாயிருக்க,—மூலம் முளைத்த வா — அவ்வித்திலிருந்து முளை தோன்றிய வாறுபோல்,—தாரகமாம் அத்தன் தாள் நிற்றல் — (மாயையானது) தனக்கு ஆதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியினிடத்தே உள்ளதாய் நிற்றலால்,—அவர் வினையால் வித்தகம் ஆம் — (அச்சத்தி சங்கற்பித்த வழி) அவரவர் வினைக்கு ஈடாக அவ்வக் காரியங்களை அவ்வவ் வியல்பில் பிறழாமல் பயக்கும் சதுரப்பாடுடையதாம்,—வேட்டுவன் ஆம் அ புழு போல் —வேட்டைவாளி எனப்படும் குளவியாதற்கு விரும்பும்

புழுவிற்கு வேட்டைவாளியானது அப்புழு விரும்பிய வடிவத்தைக் கொடுக்குமாறுபோல்,—வேண்டு உருவை தான் கொடுத்து கூட்டானே — இறைவன் அவரவர் வேண்டும் உருவினைக் கொடுத்து அவ்வவ் வினைக்குத் தக்கபடி பயன்களைக் கூட்டுவன்: (ஆதலால்) அது கொண்டு அவன் சுதந்திரத்துக்கு இழுக்கென்னை? என்றவாறு.

'ஆதலால் அது கொண்டு அவன் சுதந்திரத்திற்கு இழுக்கென்னை' என்பது குறிப்பெச்சம். போல்-அசை. நிற்றலின் என்பது நிற்றல் என விகாரத்தால் தொக்கது. ஏகாரம் எதிர்மறை.

"உலகம் தனக்கு முதற்காரணமாகிய மாயையில் ஒடுங்குமேயன்றி, நிமித்த காரணமாகியகர்த்தா ஒருவன் உண்டு எனக்கொள்ளினும் அவனிடம் ஒடுங்காது. எது எங்கு ஒடுங்குமோ? அது அங்கிருந்தே உண்டாம் என்னும் முறைப்படி மாயையில் ஒடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும்: அதற்கு ஒரு கர்த்தா வேண்டுவதின்று" என்பர் சாங்கியர்.

சாங்கியர் இவ்வாறு கூறுவது 'மண்ணில் ஒடுங்கிய குடத்தை அம்மண்ணே மீளத் தோற்றுவிக்கும்; அதற்குக் குலாலன் ஒருவன் வேண்டாம்' என்பது போலாம். குடம் உண்டாவதற்கு மண் ஒரு காரண மும், தண்டசக்கரங்கள் ஒரு காரணமும், குலாலன் ஒரு காரணமுமாம். இம் மூன்று காரணங்களினால் குடம் உண்டாயிற்று. இவற்றுள், மண் முதற்காரண மும் தண்டசக்கரங்கள் துணைக்காரணமும் குலாலன்

நிமித்தகாரணமுமாம். அதுபோலவே, உலகத்திற்கு மாயை முதற்காரணமும் சத்திதுணைக்காரணமும் சிவன் நிமித்தகாரணமுமாம். இம்மூன்று காரணங்களினுல் உலகம் உண்டாயிற்று.

அன்றியும், முளைக்கு ஆதாரமாயிருப்பது வித்து, வித்துக்கு ஆதாரமாயிருப்பது நிலம்; வித்தைப் போன்றது மாயை, முளையைப் போன்றது உலகம், நிலத்தைப்போன்றது சிவசத்தி. வித்திலிருந்தே முளை தோன்றினும் அவ்வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்தாலன்றி முளை தோன்ருது: அதுபோல், மாயையிலிருந்து உலகம் உண்டாயினும் அம்மாயைக்கு ஆதாரமாகிய சிவசத்தி சங்கற்பித்தாலன்றி மாயை (சடமாகையால்) தானே உலகத்தைத்தோற்றுவியாது. சத்தி சிவத்தினின்றும் வேருகாமையாலும், சத்திசிவத்தில் ஒடுக்கம் ஆதலாலும் சிவனே உலகத்திற்குக் கர்த்தா என்று துணியப்படும்.

முதல்வன் உலகத்தைப் பலவேறு வகைப்படச் சங்கற்பித்துத் தோற்றுவித்தல் ஏன்? என்னும் சந்தேகம் நீங்குமாறு வேட்டைவாளி உவமானம் கூறியவாறும் என்க.

**உதாரணவெண்பா — 4**

**நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்**
**ருக்காது நின்றுளத்திற் கண்டிறைவன் — ஆக்காதே**
**கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்**
**கண்டவனி லிற்றின்ருங் கட்டு.**

## இதன்பொருள்

இறைவன் — முதல்வன், — காலத்தில் தாக்காது நின்று — (இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலும் செய்தும் விகாரமின்றி நிற்பதாகிய) காலத்தைப்போல் விகாரப்படாது நின்று, — ஆக்காதே கண்டு — பிரபஞ்சத்தைக் கரணத்தாற் படையாது சங்கற்பமாத்திரத்தாலேயே படைத்து, — நோக்காதே நோக்கி நொடித்து — அவ்வாறே கரணத்தாற் காவாது சங்கற்ப மாத்திரத்தால் காத்து கரணத்தால் அழியாது சங்கற்ப மாத்திரத்தால் அழித்தலால், — இன்று ஆம் கட்டு - இவ்வமலனுக்குப் பந்தமின்றாதல், — உளத்தில் — உள்ளத்தைப் போலும் (அதாவது கற்ற நூற் சொல்லும் பொருளும் உள்ளத்தில் தோன்றுங்கால், உள்ளம் அவற்றில் தொடக்குண்ணாதவாறு போலும்), — கனவுகண்ட — கனவில் கண்டவற்றை, — கண்டநனவு உணர்வில் — புறத்துவிடயங்களை அறிந்து வந்த நனவுணர்வின்கண்ணே, — உணர கண்ட அவனில் — விளங்க அறிந்தவன் அப்பொழுது அவற்றில் தொடக்குண்ணாதவாறு போலும், — இற்று — இத்தன்மைத்து என்றவாறு

உம்முடையகர்த்தா குயவன் குடத்தைச் செய்வது போல் உலகத்தை உண்டாக்குவன் என்னையாயின், அவன்குயவனைப் போல் பந்தம் அடையானோ? என்னில்,

எமதுகர்த்தா குயவனைப்போல் கைகால்முதலிய அவயவங்களைக்கொண்டும், மனம் முதலியகரணங்களைக் கொண்டும் உலகத்தைப் படைப்பானல்லன். அவன்

சங்கற்பமாத்திரத்தால் படைத்தலின் அவன் தான் செய்யும் படைப்பு முதலியவற்றில் தொடக்குறான்.

எதுபோலும்? என்னில்,

ஒருவன் கற்றநூலிலே உள்ள சொல்லும் பொருளும் அவன் உள்ளத்தில் உதிக்குங்கால் அவன் உள்ளமானது அவற்றில் தொடக்குண்ணாத தன்மையினையும், சொப்பனத்தின்கண்ணே கண்டவைகளை சாக்கிரத்தின்கண்ணே அறிந்தவன் அக்கனவினிடத்தே தொடக்குண்ணாத தன்மையினையும் போலும் என்க.

அன்று ஏ–அசை: அநாதியேஎனினும் அமையும். குயவன் முதல்வனுக்கு ஒருபுடை உவமையே யன்றி முற்றுவமையன்று.

இனி, முதற்சூத்திரத்தின் மூன்றும் அதிகரணத்தை விளக்குவாம்.

## மூன்றுமதிகரணம்

### "அந்தமாதி"

(இ–ள்) சங்காரத்தொழில் செய்யும் கடவுளே முதற்கடவுள் (எ–று)

இவ்வதிகரணத்தில் தன்னாற்கூறப்படும் பொருள் முதலிய ஐந்தும் வருமாறு:—

1. தன்னாற் கூறப்படும் பொருள்:— சங்கார காரணனே முதற்கடவுளாகலான் மற்றிருவரும் முத்தொழிற் படுவர்.

2 ஐயப்பாடு—*முதற்கடவுள் ஏகனோ? அநேகனோ?*

3. பிறர் கூறும் பக்கம்—*சங்காரகர்த்தா உலகிற்கு முதற்கடவுள் என்பது உண்மை யாயினும் தேர் முதலாயின பலர்கூடிச் செய்வதனால், அவைகளைப் பார்க்கினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு மற்றும் அத்தன்மையரான முதற்கடவுளர் பலர் உண்டு எனக் கொள்ளல் வேண்டும்.*

*இது அநேகேசுர வாதிகள் பக்கம்*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு—

*தேர் முதலாயின பலரால் செய்யப்படினும் அவரனைவரும் ஒருவன் ஏவல்வழி நின்றே செய்பவரா கலானும், வேதத்தில் ஒவ்வோரிடங்களில் காணப்படும் "நாராயணர் ஒருவரே இருந்தார்" "பிரமா முதற் கண்ணேயிருந்தார்", "இந்திரனே உன்னில் மிக்கவ னில்லை", "தேவர்களுக்கெல்லாம் முதன்மையா யுள்ள வன் அக்கினி", "இறந்ததும் நிகழ்வதுமாகிய உலகத் திற்கு ஆன்மாவாயுள்ளான் சூரியன்" என்பன ஆதி வாக்கியங்களில் நாராயணன் முதலியோரைக் காரணம் என்றது, ஒருவன் ஏவல்வழி நின்றுசெய்யும் குயவன் கம்மியன் முதலியோரைப்போல் அவாந்தர காரண மாதல்பற்றியே ஆகலான், அவையெல்லாம் (அரசனாற் கட்டிய கோயிலைச் சிற்பியாற்கட்டியகோயில் என்பது போல) ஆகுபெயரால் சங்காரகாரணனாகிய முதற் கடவுளையே உணர்த்திநிற்குமாதலானும், செய்தும் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்கும் முதற்கடவுள் சங்காரகர்த்தா ஒருவனே.*

5. இயைபு—

### உதாரண வெண்பா — 5

**ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா**
**றொன்றலா வொன்றிலவை யீறுதல் — ஒன்றலா**
**ஈறே முதலதனி னீறலா வொன்றுபல**
**வாறே தொழும்பாகு மங்கு.**

இதன் பொருள்

*அவை — அச்சேதனப் பிரபஞ்சத்தொகுதி,— ஒன்று அலா ஒன்றால்— (உருவும் அருவும் என்னும் இருவகைப் பிரபஞ்சத்துள்) ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே, — உளது ஆகி — சிருட்டிக்கப்பட்டு,— நின்றவாறு — திதிப்பட்ட வாறே,— ஒன்று அலா ஒன்றில்—அந்தப்பரம் பொருளின்கண்ணே,— ஈறுதல்— ஒடுங்குதலால்,—ஒன்று அலா ஈறே முதல் — அச்சங் காரக் கடவுள் ஒருவனே உலகிற்கு முதற்கடவுள்,— (ஆனால், முத்தியடைந்த ஆன்மாக்கள் சுட்டுணர்வின்றிச் சிவத்தோடு சமமாய் இருக்கும் என்று வேதாகமங்கள் கூறுவதனால் அவைகளும் முதற்கடவுளர் ஆகாவோ? என்னில்,) அதனின்—அப்பரம்பொருளைப் போலவே,— ஈறிலா ஒன்று—அழிவின்றி நித்தமாயிருக்கும் சேதனப் பிரபஞ்சமானது (அதாவது உயிர்களானவை),—அங்கு— வீடு பேற்றின் கண்ணும் (அதாவது முத்தியினும்),— பல வாறே தொழும்பு ஆகும் — பலவழியானும் பரம் பொருளுக்கு அடிமையாம் (முதற்கடவுள் ஆகாது) என்றவாறு.*

மாயையின் காரியமாகிய அசேதனப் பிரபஞ்சம் சடமாகையாலும், சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்கள் பாசத்தால் பிணிப்புண்டு சுட்டியுணர்வதாய் இருத்தலாலும், இவ்விருவகைப் பிரபஞ்சமாகிய உலகம் தானே தன் இச்சையின்படி தோன்றி நின்று அழிய மாட்டாது. ஆதலால், இவைகளைத் தோற்றி நிறுத்தி அழித்தற்கு இவைகளுக்குவேறாய் ஒரு முதற்கடவுள் உண்டு என்பதுபெறப்பட்டது. படவே, உலகம் விசித்திரமாய்க்காணப்படுதலினால், இவ்வாறு நடத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும், அளவிலாற்றலும், பேரருளும், சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்கள் உடையவன் என்பதும் பெறப்பட்டது. இத்தன்மையனாகிய கடவுள் ஒருவனே போதுமாயிருக்கப் பலர் உண்டெனக் கொள்வது குற்றமாம். "இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பல ஆதல் செல்லாது" அதாவது ஒருசிறிதும் வேற்றுமையின்றி எல்லா இலக்கணங்களினாலும் தம்முள் ஒத்திருக்கும் வெவ்வேறு பொருள்கள் ஒருகாலத்தும் இரா. ஆதலால், உயர்வொப்பில்லாத முற்றுணர்வு, அளவிலாற்றலுடைமை முதலிய இறைமைக் குணங்களையுடைய கடவுளர்பலர் உண்டெனக்கொள்வது மடமையாகும். இக்கருத்தை விளக்கும்பொருட்டே முதற் கடவுளை 'ஒன்றலா ஒன்று' என்று கூறியருளினர்.

இருள் நீங்கிய விடத்தும் கண்ணானது சூரியனின்றிக் காணுதவாறு போல, மலம் நீங்கிய முத்தி நிலையிலும் ஆன்மாவானது தன்னுடன் முதல்வன் வேறறக் கலந்து அறிவித்தாலன்றி அறியாது. ஆன்மாவானது

எக்காலத்தும் ஸ்படிகம்போல் சார்ந்ததன் வண்ணமா யிருக்கும் இயல்பினது ஆதலால், அது முத்தியினும் சிவத்தைப்போல் தனித்துநிற்கும் இயல்புடையதன்று. அது முத்தியில் சிவத்தோடு கலந்து சிவானந்தம் அநுபவித்தல் மாத்திரமன்றி, சிவத்தைப்போல் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் உரிமையுடையதன்று. அன்றியும், ஆன்மா முத்தி நிலையில் சிவத்தோடு சமவியாபகம் அடையப்பெறினும், விளக்கொளியுள் அடங்கிய கண்ணொளிபோல் சிவவியாபகத்திற்குள் வியாப்பியமாய் அடங்கி நிற்கும். இக்காரணங்களால் சேதனப் பிரபஞ்சம் பல வழியானும் முத்தியினும் முதல்வனுக்கு அடிமையேயாம் என்று உணர்க.

இதனால், ஆன்மாக்கள் முத்தியில் பஞ்சகிருத்தியம் செய்யும் என்று கூறும் சிவசமவாதிகள் மறுக்கப்பட்டவாறு காண்க.

ஆன்மாக்கள் பெத்தநிலையில் மாத்திரமின்றி, முத்தி நிலையினும் அடிமைகள் என்பதை—

"நற்சங்க வெண்குழையோர் காதிற் கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே" எனவும்,

"மீளா அடிமை யுமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே" எனவும் வரும் தமிழ்வேதப்பனுவல்களானும் உணர்க.

## முதற்சூத்திரத்தின் தொகைப்பொருள்

இதனால், "உலகம் தோன்றி நின்று அழியும் என்பது காட்சிப் பிரமாணம் முதலியவற்றால் அறியக் கூடாமையால் அது நித்தப்பொருளே" என்னும் மீமாஞ்சகர், உலோகாயதர் கொள்கையும்; "உலகம் உள் பொருளாகாமல் இல்பொருளாய்த் தத்தம் சார்பிலே தோன்றி அழியும்" என்னும் புத்தர் கொள்கையும்; "உலகம் உள்பொருளாயின் அதுவொன்றே அமையும், இறைவன் வேண்டா" என்னும் சாங்கியர் கொள்கையும்; "காத்தற் றொழிலைச் செய்யும் விஷ்ணுவே முதற் கடவுளாதல் வேண்டும்" என்னும் பாஞ்சராத்திரர் கொள்கையும்; "அதி விசித்திரமாகிய உலகம் ஒருவராற் செய்தல் கூடாமையால், அதனைப்படைக்கப் பல கடவுளர் வேண்டும்" என்னும் அநேகேசுரவாதிகள் கொள்கையும்; "ஆன்மாக்கள் மலம் நீங்கிய முத்தி நிலையில் பஞ்ச கிருத்தியம் செய்வர்" என்னும் சிவசமவாதிகள் கொள்கையும் மறுக்கப்பட்டுச் சித்தாந்தம் செய்து முதற்கடவுளின் உண்மை நிலை நாட்டப்பட்டது.

**முதற்சூத்திரம் முடிந்தது.**

---

# இரண்டாஞ்சூத்திரம்

# இரண்டாஞ்சூத்திரம்

**அவையே தானே யாயிரு வினையிற்**
**போக்கு வரவு புரிய வாணையின்**
**நீக்க மின்றி நிற்கு மன்றே.**

இதன்பொருள்

*முதற் சூத்திரத்தினால் சித்தாந்தம் செய்யப்பட்ட சங்காரகாரணனாகிய சிவபெருமான்,—அவையே ஆய்—அவ்வுயிர்களேயாய்,—தானே ஆய் — அவைகளுக்கு வேறுமாய்,—அவையே தானே ஆய் — உடனுமாய் (நின்று),—ஆணையின்—தமது ஆணையினால்,—(அதாவது ஆணை என்னும் பரியாயப் பெயருடைய சிற்சத்தியால் வரும்) இருவினையின்—(நல்வினை தீவினைகள் என்னும்) இருவினைகளால்,—போக்கு வரவு புரிய—அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம்,—ஆணையின் — அவ்வாணையினின்றும்,—நீக்கம் இன்றி—பிரிப்பின்றி,—நிற்கும் — (சமவேதமாய்) நிற்பன் என்றவாறு.*

'அவையே தானேயாய்' என்பதனை அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என இரட்டுற மொழிந்து கொள்க. 'ஆய் புரிய நிற்கும்' எனவே, சிவபெருமான் உயிர்களைப்போல் கரணத்தாற் செய்யாமல் சங்கற்ப மாத்திரத்தால் செய்வர் என்பது பெறப் பட்டது. 'ஆணையின்' என்பதனைச் சிங்கநோக்காய் 'இருவினை' என்பதன் முன்னும் வைத்துப் பொருளுரைக்க. அன்றே—அசை; இதற்கு அநாதியே இவ் வாறு நிற்கும் என்று பொருள் கூறினும் அமையும். அவை எனச் சுட்டியது முதற் சூத்திரத்தில் கூறிய சேதனப் பிரபஞ்சத்தை: (அதாவது உயிர்களை).

சிவபெருமான் கலப்பினால் உடலின் உயிர்போல் இருத்தலால் உயிர்களேயாய் இருக்கின்றார் என்றும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன் போல் இருத்தலால் உயிர்களுக்கு வேறாய் இருக்கின்றார் என் றும், உயிருக்கு உயிராயிருக்கும் தன்மையால் கண் ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் இருக் கின்றார் என்றும் கூறப்பட்டது. இவை பின் வருவன வற்றால் தெளிவாய் விளங்கும்.

இச்சூத்திரம் நான்கு அதிகரணங்களையுடையது. அவை வருமாறு:—

1. அவையே தானே ஆய்;
2. ஆணையின் இருவினையின்;
3. போக்கு வரவு புரிய;
4. ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. அரன் உயிர்களில் இரண்டற நிற்பன்;
2. உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்;
3. உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்;
4. அரன் சர்வ வியாபகன்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும் என்றது, அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின்அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு.

2. இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும் என்றது, ஒரு நகரியைக்காப்பான் பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினை ஆகலான்.

3. இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வரும் என்றது, தோற்றமும் ஈறும் உள்ளதற்கல்லது உளதாதல் இன்மையான்.

4. இனி, நீக்கமின்றி நிற்குமன்றே என்றது, அவன் ஏகாநேகம் இரண்டும் இன்றிச் சர்வவியாபியாய் நிற்றலான்.

## இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் பத்து.

இனி, இச்சூத்திரத்தின் பொருளை ஒவ்வொரு அதிகரணமாக, அவ்வவற்றின் சூர்ணிகை, வார்த்திகங்களோடும் உதாரண வெண்பாக்களோடும், சேர்த்து விளக்குவாம்.

## முதலதிகரணம்

அவையே தானேயாய்.

*(இதன் பொருள்) முதல்வன் உயிர்களேயாயும், அவைகளுக்கு வேறாயும், உடனாயும் இரண்டற நின்று என்றவாறு.*

*இவ்வதிகரணத்தில் 'தன்னாற் கூறப்படும்பொருள்' முதலிய ஐந்தும் வருமாறு :—*

**1.** தன்னாற் கூறப்படும் பொருள்—

*அரன் உயிர்களில் இரண்டற நிற்பன்.*

**3.** ஐயப்பாடு—

*முதல்வனும் உயிர்களும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ?*

**2.** பிறர்கூறும்பக்கம்—

(1) *முதல்வனும் உயிர்களும், பொன்னும் பொன்னாலாகிய பணியும் போல் அபேதமாம்.*

*இவ்வாறு மாயாவாதிகள் கூறுவர்.*

(2) *முதல்வனும் உயிர்களும், ஒளியும் இருளும் போல் பேதமாம்.*

*இவ்வாறு மத்துவர் கூறுவர்.*

(3) *முதல்வனும் உயிர்களும், சொல்லும் பொருளும் போல் பேதாபேதமாம்.*

*இவ்வாறு கூறுவோர் பாஞ்சராத்திரிகள்.*

**4.** மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு—

*முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்கு உயிராதற்றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் நிற்பன். இவ்வாறு அவன் நிற்கும் நிலையே அத்துவிதநிலை என்று வேதம் கூறும்.*

**5.** இயைபு—

உதாரணவெண்பா — 1

**கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள**
**மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி**
**அவனுளமா கில்லா னுளமவனு மாட்டா**
**தவனுளமா யல்லனுமா மங்கு.**

இதன்பொருள்

*உள்ளம்—உயிரானது,—கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு—நரம்பு முதலியவற்றாற் கட்டப்படும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையும் கைக்கொண்டுநின்று,—இட்டது ஒருபேர் அழைக்க—உடம்புக்கு இட்ட பெயரால் பிறர்அழைக்க,—என் என்றுங்கு—என் என்பதுபோல்,—ஒட்டி—முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்,—ஆங்கு—அதுபோல்,—அவன் உளம் ஆகில்லான்—அம்முதல்வன் உயிராகமாட்டான்,— உளம் அவனு மாட்டாது—உயிர் முதல்வனாகமாட்டாது,—அவன் உளம்ஆய் அல்லனும் ஆம்— (அவ்வாறாயினும்) முதல்வன் உயிராயும் அதின் வேறாயும் நிற்பன் என்றவாறு.*

ஒட்டி என்பது பெயர். வினையெச்சமாகக் கொள்ளின் சிறப்புண்மை விரித்துரைக்க. ஒட்டுதல் — பொருந்துதல்.

உயிரானது உடம்போடுகூடி உடம்புவேறு தான் வேறு என்னாதபடி (அத்துவிதமாய்க்) கலந்து, உடம்புக்கு உண்டாகும் ஆக்கக்கேடுகளைத் தனக்கு உண்டானவனாக அநுபவித்து, உடம்புக்கிட்டபெயரால் பிறர் அழைக்கத் தான் ஏன் என்று வருவதனாலும், பலர் கூடியிருக்குமிடத்தில் உடம்புக்கு இட்டபெயரால் ஒருவனை அழைக்கின், அழைக்கப்பட்டவன் ஒருவனே ஏன் என்று வருவதனாலும், அவன் அவ்வாறு வருதற்கு வேறொருகாரணம் காணப்படாமையானும், அருத்தாபத்தி அளவையால் அவ்வுயிர் உடம்பென்றும் தானென்றும் வேற்றுமையின்றி அபேதமாய்நிற்றல் பெறப்பட்டது. அப்படி நிற்பினும் உயிர் உடம்பாகாது, உடம்பு உயிராகாது; உயிர்உயிரே, உடம்பு உடம்பே. அதுபோல், முதல்வன் உயிரோடு கலப்பினால் அவை வேறு தான்வேறு என்னாதபடி அபேதமாய் நின்றும் அவ்வுயிராகமாட்டான்: உயிர் முதல்வனாகமாட்டாது. முதல்வன்முதல்வனே, உயிர்உயிரே. அவ்வாறாயினும், முதல்வன் உயிராயும் அதனின் வேறாயும் நிற்பன். உயிர் அங்ஙனம் நில்லாது.

ஒருபொருளே அபேதம், பேதம், பேதாபேதம் என்னும் மூவகை இயல்பையும் உடைத்தாதல் எங்ஙனம் கூடும்? என்னும் சந்தேகம் உண்டாகாதவாறு இவ்வெண்பா உடல்உயிர் உவமையால் முதல்வனின் அபேத நிலை இத்தன்மைத்தென விளக்குகின்றது.

## உதாரணவெண்பா — 2

ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்றல்
அக்கரங்க ளின்றாம் அகர வுயிரின்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு

*இவ்வெண்பா, வேதமானது அத்துவிதம் என்றும், ஏகம் என்றும் கூறவும் அதற்குமாறாகப் பேதப்படக் கூறலாமோ? என்பார்க்கு, வேதம் அவ்வாறு கூறுவதன் கருத்து இத்தன்மைத்து எனவிளக்கி, இறைவன் உயிர்களோடு (தானேயாய்) அபேதமாய் நிற்கும் இயல்பை உதாரணத்தால் வலியுறுத்துகின்றது.*

### இதன்பொருள்

*இருக்கு ஒன்று என்றது ஒன்றே காண்—வேதம் ஒன்று என்பதற்குப்பொருள் ஒன்று என்பதேயாம்,—பதி ஒன்றே— (அதற்குத்தாற்பரியம்) பதிப் பொருள் ஒன்றே (இரண்டில்லை என்பதாம்),— ஒன்று என்ற நீ பசு ஆம் காண்— (இதனை அறியாது) ஒன்றென்று சொல்லுகின்ற நீ (அப்பதிப்பொருளின்வேறாய்) பசு என்று அறிவாயாக, – (பதியும் சேதனம், யானும் சேதனமாக என்னைப் பசுஎன்பது என்னை? எனில்,) பாசத்தோடு உளை—நீ மலத்தோடு கட்டுண்டிருக்கின்றாய் (ஆதலால், நீ பசு என்னப்பட்டாய்) (யானும் பதியும் வெவ்வேறு பொருள்கள் ஆனால், வேதம் 'பிரமம் இல்லையாயின் ஒரு பொருளும் இல்லை' என்று கூறுவது என்? என்னில்),—அகர உயிர் இன்றேல் அக்கரங்கள்*

இன்று ஆம்—அகரவுயிர் இல்லையாயின் எழுத்துக்கள் இல்லையாம்,—என்னும் — என்றுசொல்லுகின்ற,— இ கி ர ம த் து — இம்முறைமைபற்றி,—ஒன்று இன்று என்னும்—(வேதம் பிரமப்பொருள் இல்லையாயின்) ஒரு பொருளும் இல்லை என்றுஓதும் என்றவாறு.

வேதம் ஏகம்என்றும், அத்துவிதம் என்றும் கூறுவதனை "ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே" என்னும் யசுர்வேத வசனத்தாலும், "ஏகோஹி ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே" என்னும் சுவேதாசுவதர உபநிஷத்தாலும், "ஏகமேவாத்விதீயம்" என்னும் சாந்தோக்கிய உபநிஷத்தாலும், "சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம்" என்னும் மாண்டூக்கிய உபநிஷத்தாலும் உணர்க.

'ந த்விதீயாய' என்னும் வடமொழியின் முதலிலுள்ள நகரமெய் நீங்கிவிட அது 'அத்விதீயாய' எனநிற்கும். நகரமும் அகரமும் ஒருபொருளுடையன வாம். நகரம் நீங்கிவிடலும் அம்மெய்யின்மேல் நின்ற அகரம் இன்மை அன்மை மறுதலை என்னும் முப்பொருளையும் உணர்த்தும். இவற்றுள், மாயாவாதிகள் இன்மைப் பொருள் ஒன்று மாத்திரம் உரைத்து 'அத்துவிதம்' என்னும் சொல்லுக்கு "இரண்டில்லை, ஒன்றே" என்று பொருளுரைப்பர். அவ்வாறு பொருளுரைப்பது குற்றமாம் என்பதனை விளக்க வேண்டி நமது மெய்கண்டநாதர்,

"அத்துவிதம் என்றசொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவதுஉண்மையின் அத்துவிதம் என்ற

சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு.'' என்று சூர்ணிகை உரை அருளிச் செய்தனர்.

இச் சூர்ணிகையுரையின் பொருள் வருமாறு:—

அத்துவிதம் என்ற சொல்லின் நகரமானது இன்மை, அன்மை, மறுதலை என்னும் முப்பொருள் உணர்த்தும். அவற்றுள், இன்மைப் பொருளைக் கொண்டு, அத்துவிதம் என்ற சொல் மாத்திரத் தாலேயே ஒருபொருள்என்பது பொருத்தமாம் என்று சொல்லின், ஒருபொருள் தானே தன்னை ஒன்று என்று சொல்லவேண்டுவதில்லை. ஆதலால், அவ்வாறு சொல்லும்பொருள் வேறு உண்டு என்பது பெறப்படும். அன்றியும், எண்ணுப்பெயர் மேல் வந்த நகரம் அன்மைப் பொருளையே உணர்த்திப் பொதுமையில் நிற்பதன்றி, ஏனைச்சொற்களின் மேல் வந்த நகரம் போல் இன்மை மறுதலைப்பொருள்களை உணர்த்தாமை யினால் அத்துவிதம் என்றே சொல்லே வேறு காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தும். இதனால், ஆன்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும் என்பது கொள்ளற்பாற்று என்பதாம்.

இறைவனும் உயிரும் வெவ்வேறு பொருள்கள் என்பதனை உணராது. ஒருபொருளே என்று மயங்கி 'நான் பிரமம்' என்றுகூறி இடர்ப்படுவார்க்கு இரங்கியே எசுர்வேத முடிவு 'அஹம் ப்ரஹ்மம்' என்று கூறாது 'நான் பிரமம் ஆகின்றேன்' என்னும் பொருள்தரும் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்று கூறும். வேதங்களில் சிறந்த சாமவேதத்தின்முடிவு 'அதுநீ' என்று பொருள்

தரும் 'தத்வம்' எனக்கூறாது 'அது நீ ஆகின்றாய்' என்று பொருள்தரும் 'தத்துவமஸி' என்று கோஷிக்கும். சிவம் ஆன்மாவின்அறிவினுள் அறிவாய் விளங்கும் ஒற்றுமையை நோக்கி இருக்குவேதத்தின் அந்தம் 'ப்ரக்ஞானம் ப்ரஹ்மம்' என்றும் ஆன்மா சிவசக்தியாத்மகமாயிருத்தலைப்பற்றி அதர்வணசிரசு 'அயமாத்மா ப்ரஹ்மம்' என்றும் வழங்காநிற்கும். இந்த நான்கு மகா வாக்கியங்களும் சிவசீவர்கள் ஒன்றே என்றும், இரண்டே என்றும் பொருள் பயத்தலின்றி ஒன்றும் இரண்டும் அன்றி நிற்கும்நிலையின என்று கூறாநிற்கும்.

## உதாரணவெண்பா — 3

**பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்**
**எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்—அண்ணருள்**
**அத்துவித மாத லருமறைக ளொன்றென்னா**
**தத்துவித மென்றறையு மாங்கு.**

இவ்வெண்பா வேதத்திற் கூறப்பட்டுள்ள அத்துவிதம் என்னும் சொல்லின் உண்மைப்பொருளை உதாரண வாயிலாக விளக்கி, இறைவன் உயிர்களோடு 'அவையேதானேயாய்' (அஃதாவது பேதாபேதமாய்) நிற்கும் முறைமையை வலியுறுத்துகின்றது.

### இதன்பொருள்

பண்ணையும் ஓசையும் போல—பண்ணும் அதனின் வேறன்றாய் எண்ணப்படும் இசையும் போலவும்,—

பழமதுவும் எண்ணும் சுவையும்போல் — பழமும் அதனின் வேறன்றாய் எண்ணப்படும் சுவையும்போல வும்,—எங்கும் ஆம் அண்ணல் தாள்—எங்கும் வியாபக மாய் இருக்கும் முதல்வன் திருவருள்,—அத்துவிதம் ஆதல்—உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்,— அரு மறைகள் ஒன்று என்னாது — அரிய வேதங்கள் ஏகம் என்று கூறுவதோ டொழியாது,—அத்துவிதம் என்று ஆங்கு அறையும்—அத்துவிதம் என்றும் அவ் விடங்களிற் கூறும் என்றவாறு.

அஃதாவது, வேதமானது பதிப்பொருள் ஒன்றே என்பதனை ஏகம் என்னும் சொல்லாலும், அது உயிர் களோடு இரண்டறக்கலந்து நிற்றலை அத்துவிதம் என்னுஞ்சொல்லாலும் விளக்கிற்றுஎன்பதாம் இதனால் வேதத்திற்கூறப்பட்ட 'ஏகம்,' 'அத்துவிதம்' என்னும் சொற்களுக்குப்பொருள் 'பிரமப்பொருள் ஒன்றே உளது, இரண்டாவது பொருள் இல்லை' என்றுகூறும் மாயாவாதக் கொள்கை மறுக்கப்பட்டது.

## உதாரண வெண்பா — 4

**அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போல்**
**உருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றி**
**தானே யுலகாம் தமியே னுளம்புகுதல்**
**யானே யுலகென்பே னின்று.**

இச்சூத்திரத்தின் முதல் மூன்று உதாரணவெண் பாக்களுள் முதல் வெண்பாவினால் முதல்வன் உயிர் களோடு 'அவையேயாய்' (அபேதமாய்) நிற்றலையும்,

இரண்டாவது வெண்பாவினால் 'தானேயாய்' (பேதமாய்) நிற்றலையும், மூன்றாவது வெண்பாவினால் அவையே தானேயாய்' (பேதா பேதமாய்) நிற்றலையும் வெவ்வேறு உவமைகளால் விளக்கி, இந்த நான்காவது வெண்பாவினால் முதல்வன் அம் மூவகை இயல்பையும் ஒருங்கே உடையவனாயிருத்தலை ஒரு உவமையால் விளக்குகின்றார்.

## இதன்பொருள்

உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அ கல் போல்—அரக்கையுருக்கி அதனோடு சேர்த்து அணைத்த கற்பொடியானது அவ்வரக்கினோடு வேறறக் கலந்து நீக்கமின்றி நிற்றல்போல்,—உடங்கு இயைந்து பிரிப்பு இன்றி நின்று—(முதல்வன் உயிர்களோடு) ஒருங்கு கூடி நீக்கமின்றி உடனாய்நிற்றலால்,— தானே உலகு ஆம்— தானேயாம் உலகேயாம் தானே உலகேயாம் (அதாவது பேதமும் அபேதமும் பேதாபேதமுமாம்),—(ஆனால், 'யானே எல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன்' என்று உயிர்களும் தாம் உணர்ந்த அநுபவத்தைக் கூறும் என வேதாகமங்கள் முழங்குகின்றனவே? அதனால் உயிர்களும் முதல்வன் போலவே அபேதமாயும் பேதமாயும் உடனாயும் நிற்கும் இயல்பை யுடையனவோ? என்னில், அப்படியன்று),—தமியேன் உளம்புகுதல்—அம்முதல்வன் பாசக்கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய் நின்ற என் உள்ளத்தில் சோகம் பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலால், —யானே உலகு என்பன் இன்று— யானே உலகெல்லாம் என்பேனாயினேன் இம்முத்திக் காலத்து

(ஆகையால், உயிர்களும் அவ்வாறு நிற்கும் இயல்புடையன அன்றும்) என்றவாறு.

கலப்பாய் நிற்றலால் உலகேயாம் என்பார் 'உடங்கியைந்து' எனவும், பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயாம் என்பார் 'நின்று' எனவும் உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுலகாம் என்பார் 'பிரிப்பின்றி' எனவும் கூறினர்.

சிவபெருமான் உலகுயிர்களோடு தானேயாயும், வேறேயாயும், உடனாயும் நிற்றலைத் தேவாரம்—

"ஈறாய்முத லொன்றாயிரு
பெண்ணாண் குணமூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ
டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம்
வீழிம் மிழலையே"

என்று அருளுவதாயிற்று.

"அரக்கினோடு சேர்ந்த கற்பூரணமானது அரக்கின் இயல்பை அடைந்தவாறுபோல, எனது ஆன்மாவில் சிவபெருமானைக்கண்டு இவரை உலகமேயாய் உள்ளார் என்று கூறுகின்றேன்" என்று ஞானவரண பாடியத்தில் கூறப்பட்டது.

"நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன் என்றும்; நான் பிரமமாய் இருக்கின்றேன் என்று

எவன் அறிகின்றானோ? அவன் இவையெல்லாம் ஆகின்றான் என்றும் வாமதேவரிஷி கூறினார்" என்று பிருகதாரணியம் கூறுகின்றது. "காணப்படுவதும் காணப்படாததும் ஆகிய ஈதெல்லாம் என்னால் வியாபிக் கப்பட்டன, நானே உலகத்துக்கு நாதன், என் னிலிருந்தே அனைத்தும் பிரவர்த்திக்கின்றன, நானே பிரமம், நானே அநக்ஷரமாக அறியற்பாலன்" என்று சர்வஞானோத்தரம் உயிர்கள்மேல்வைத்துக்கூறுகின்றது இவ்வாறு வேதாகமங்கள் பல இடங்களில் கூறுவதனால் ஆன்மாக்களும் சிவபெருமானைப் போலவே அபேத மாயும் உடனாயும் நிற்கும் இயல்பினையுடையனவோ? எனில், அப்படியன்று. பாசக்கூட்டத்தினின்றும் நீங் கித் தனியாய் நின்ற ஆன்மாக்களின் அகத்தில் 'சோகம்பாவனை' எனப்படும் சிவோகம்பாவனையால் சிவபெருமான் புகுந்து வேற்றுமையின்றித் தோன்று தலால் அவ்வாறு கூற நேர்ந்தது என்க.

ஆனால், வேதாகமங்களில் "பிரமாகம்" அதாவது பிரமம் நான் என்றும், "சிவோகம்" அதாவது சிவம் நான் என்றும், அத்துவிதபாவனை செய்யும்படி விதிக் கப்பட்டிருத்தல் யாது காரணத்தால்? எனின், கருடனும் மாந்திரீகனும் வெவ்வேறாய் இருந்தும் "கருடோகம்" என்னும் அத்துவித பாவனையானது விடநிவர்த்தியின் பொருட்டு வேண்டப்படுதல்போல், பிரமப்பொருளாகிய சிவபெருமானும் ஆன்மாவும் வெவ் வேறுபொருள்களாயிருந்தும் ஆன்மாக்கள் மலநிவர்த்தி யடைந்து பரசிவத்துவம் எய்துமாறு வேதாகமங்களில் அத்துவிதபாவனை விதிக்கப்பட்டதென்க.

*இவ்வதிகரணத்தால் 'முதல்வனும் உயிர்களும்'*

"பொற்பணிபோல் அபேதம்" என்று ஏகான்ம வாதிகளும்,

"இருளும் ஒளியும் போல் பேதம்" என்று மத்துவரும்,

"சொல்லும் பொருளும்போல் பேதாபேதம்" என்று வைணவர்களும்,

பிணங்கிக் கூறுவதை மறுத்து; 'முதல்வனும் உயிர் களும்'

"உடல் உயிர்போல் அபேதமும்"

"கண்ணும் கதிரவனும்போல் பேதமும்"

"அறிவும் கண்ணொளியும்போல் பேதாபேதமும்"

*ஆகிய இம் மூவகை இயல்போடும் நிற்றலாகிய அத்து வித உண்மை சித்தாந்தம் செய்யப்பட்டது.*

*"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளி யாய்ப்—புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்,— பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேத மும்சொற் பொருள்போற் — பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன,– அறத்திறனால் விளைவதாய் உடலுயிர்கண் ணருக்கன்—அறிவொளிபோல் பிறிவரு மத் துவித மாகும்,–சிறப்பினதாய் வேதாந்தத் தெளி வாம் சைவ–சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்"*

(சிவப்பிர–செய்–7) *என்று கூறியிருத்தலாலும் தெளிக.*

# இரண்டாமதிகரணம்

'ஆணையின் இருவினையின்'

(இ-ள்) உயிர்களுக்கு இருவினை முதல்வன் ஆணையினால் வரும் என்பதாம். இதில்:—

**1.** தன்னாற் கூறப்படும் பொருள்:

உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

**2.** ஐயப்பாடு:

புனருற்பவம் செய்யுங்கால் முதல்வனுக்குத் துணைக்காரணம் முதலியன வேண்டப்படுமோ? வேண்டப்படாவோ?

**3.** பிறர்கூறும்பக்கம்:

துணைக்காரணம் வேண்டப்படின் முதல்வனது சுதந்திரத்திற்கும், அளவிலாற்றலுக்கும் இழுக்காய் முடியும் ஆகலான், முதல்வனுக்குத் துணைக்காரணம் வேண்டப்படா.

இவ்வாறு கூறுவோர் பரிணாமவாதிகள்.

**4.** மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

ஒருபட்டணத்தைக் காக்கும் அரசன் தனது தண்டத்தொழிலை ஓர் அதிகாரியிடம் வைத்து உலகியலை நடத்தல் போல், ஆன்மாக்கள் புண்ணிய பாவங்களை

*அநுபவிக்க முதல்வன் தனது ஆணையை இருவினைகள் மாட்டுவைத்து நடாத்துவன். அதனால், இருவினை முதல்வன் ஆணையிலே வரும் என்னப்பட்டது. படவே, முதல்வன் சுதந்திரத்திற்கும் அளவில் ஆற்றலுக்கும் இழுக்கில்லை என்பது பெறப்பட்டது.*

**5.** இயைபு :

### உதாரணவெண்பா — 5

**உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலின்**
**உள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்**
**செய்பவர் செய்திப் பயன்விளைக்கும் செய்யேபோல்**
**செய்வன் செயலணையா சென்று.**

*இது வினை ஒன்று உண்டு என்பதற்கும், அதுவே உயிர்க்குப் பயனைப் வரும் என்பதற்கும், மறுசெனனத்தில் வினை ஏறும் என்பதற்கும், அது முதல்வனையின்றி அமையாது என்பதற்கும் பிரமாணம் கூறுகின்றது.*

### இதன்பொருள்

*உள்ளதே தோற்ற — (முதற்சூத்திரத்தினால் இல்லது தோன்றாது என்பது பெறப்பட்டமையின்) முன் உள்ளதாகிய புண்ணியபாவம் என்னும் இருவகையான சஞ்சிதவினையே தன்பயனாகிய இன்பத்துன்பங்களையும் அவைகளை அநுபவித்தற்குரிய இடமாகிய உடம்பையும் தோற்றுவிக்க,—உயிர் அ உடலின் அணையும் — உயிரே அவ்வுடம்பிற்பொருந்தி இருவினைகளை அநுபவிக்கும்,— (உடல் சடப்பொருள் ஆகையால்*

அவைகளை அநுபவிப்பதில்லை) ஆனால், முன்வினையானது அநுபவிக்கப்பட்டொழிந்தால் மறு பிறவியாகிய மேலைக்குவினை எவ்வாறு உண்டாகும்? என்னில், முன் செய் வினை உள் அடைவே உள்ளது ஆம்—முன்செய்த வினை அநுபவித்தற்கு ஏதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம்,— அதாவது முன் செய்த வினையை அநுபவிக்கும்போது அதற்குத் துணைக்காரணமாய் உண்டாகும் விருப்பு வெறுப்புக்களே மறு பிறப்புக்கு வினையாய் ஏறும் என்பதாம். அப்படியானால், அந்த வினை ஒன்றே போதுமாயிருக்க, முதல்வன் எதன் பொருட்டோ? என்னில், செய்பவர் செய்தி பயன் விளைக்கும் செய்யே போல் — உழவர் செய்யும் தொழிலுக்குத் தக்க பயனை விளைவிக்கும் விளைநிலம் போல்,—அதாவது விளைநிலம் விளைவிப்பதன்றி அத் தொழில்தானே விளைவிக்கமாட்டாதது போல் என்க. வள்ளல் அவன் செய்வன்—(உணவும் வித்துமாய் ஆதி தொடுத்து முறையே வரும் பிராரத்தவினை ஆகாமிய வினை என்பவற்றை) முதல்வனே அவ்வுயிர்களுக்குக் கூட்டுவன்,—செயல் சென்று அணையா—(அவ்வாறன்றி) வினைகள் தாமே போய் உயிர்களுக்குப் பயன்களாக அடையா என்றவாறு.

தற்பயன் குறியாது வேண்டுவார் வேண்டியவாறே ஈயும் அருளுடையவன் ஆதலால் முதல்வனை 'வள்ளல்' என்றனர். உள் அடைவு — உள்ளுதற்கு ஏதுவாகிய அடைவு: அதாவது அநுபவித்தற்கு ஏதுவாகிய முறைமை என்க.

## உதாரணவெண்பா—6

**அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர்தான்சென்றங்**
**கவ்வினையைக் காந்த பசாசம்போல் — அவ்வினையைப்**
**பேராம லூட்டும் பிரானி னுகராரேல்**
**ஆர்தா மறிந்தணைப்பா ராங்கு.**

*இது இருவினை சடமாகையால் ஆன்மாக்களைத் தாமே சென்று அடையமாட்டா; ஆயினும், ஆன்மாக்கள் சேதனமாதலால் அவையே அவற்றின் பயனை அறிந்து எடுத்து அநுபவிக்கும். ஆதலால், அதற்கு ஒரு கர்த்தா வேண்டுமோ? என்னும் சந்தேகத்தை நீக்குகின்றது.*

### இதன்பொருள்

*காந்த பசாசம் போல்-ஒருவன் இரும்பினை எடுத்து நேரே பிடித்தால் காந்தமானது அதனைவலித்துக்கொள்வது போல்,—அ வினையை பேராமல் ஊட்டும் பிரானின் — அவ்வினைப்பயன்களைப் பிறழாமல் ஊட்டு விக்கும் முதல்வனுல்,— அ வினைஞர் தாம் — அவ்வினைகளைச் செய்யும் ஆன்மாக்கள்தாம்,—அ வினையை செய்வதனில் சென்று அ வினையை நுகராரேல் — அவ்வினைகளைச் செய்தற்குரிய இடமாகிய உடம்பிற் பொருந்தி அவற்றின் பயனை அநுபவிப்பர் அவ்வாறு அநுபவியாராயின், ஆங்கு-(அறிவும் சுதந்திரமும் இன்றி மலத்தின் மறைப்புண்டு கிடக்கும்) அப்பெத்தகாலத்தில்,— ஆர் தாம் அறிந்து அணைப்பார் — வேறே எவர்தாம் அவற்றை யறிந்து கூட்டுவார்: (ஒருவருமில்லை) என்றவாறு.*

## உதாரணவெண்பா—7

**நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்**
**சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி**
**மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்**
**அலர்சோகம் செய்கமலத் தாம்.**

*இது அவ்வினை ஆதியோ? அநாதியோ? ஆதியாயின், முன் இல்லாதது இடையே தோன்றாது. அநாதியாயின், ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை என்பார்க்கு முதல்வன் உயிர்களுக்கு வினைப்பயன்களைக் கூட்டும் முறைமை இத்தன்மைத்து என விளக்குகின்றது.*

### இதன்பொருள்

*நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லின் தொன்மையே புதிது அன்று — நெல்லினிடத்து உமியும் செம்பினிடத்துக் களிம்பும் எப்போது உண்டாயின என்று ஆராய்ந்து சொல்லுங்கால் அந்நெல்லும் செம்பும் உண்டாயினபோதே உண்டாயினவாம். இடையே வந்தன அன்று,—(அதுபோல)வல்லி மல கன்மம் அன்று உள ஆம்-மாயை மலம் கன்மம் என்னும் மும்மலங்களும் அநாதியே (ஆன்மா உள்ளவன்றே) உள்ளனவாம்,—கமலத்து அலர் சோகம் பொன் வாள் செய் வள்ளலால் ஆம்-முன்னே உண்டான தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் சூரியனால் செய்யப்படுவது போல, சிவபெருமானது திரோதான சத்தியினால் மும்மலங்களும் தத்தம் காரியங்களைச் செய்யும் என்றவாறு.*

*மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தி ஆதலின் வல்லி என்றார்.*

# மூன்றுமதிகரணம்

போக்குவரவு புரிய

(இ-ள்) ஆன்மாக்கள் மாறிப்பிறந்து வரும் என்றவாறு.

மாறிப்பிறத்தல்—இறந்து பிறத்தல். இதில்,—

1. தன்ஞற் கூறப்படும் பொருள்:

உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்.

2. ஐயப்பாடு:

புனருற்பவம் சடத்துக்கே யல்லாமல் சித்துக்கும் உண்டோ?

3. பிறர்கூறும் பக்கம்:

வேதத்தில், குடம் உடைந்தபோது அக்குடத்தில் அடங்கியிருந்த ஆகாயம்(குடாகாயம்)வெளியிலிருக்கும் ஆகாயத்தோடு கூடுமாறுபோல், உடம்பு நீங்கிய காலையில் உயிரானது பிரமப்பொருளோடு கூடுமென்று கூறியிருத்தலால், இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை.

இது கிரீடாப் பிரமவாதிகள் பக்கம்.

கிரீடாப்பிரமவாதமாவது ஏகான்மவாதத்தின் பிரிவுகளுள் ஒன்று. இச்சமயத்தினர் 'பிரமப்பொருளே நான். நான் ஒரு படித்தாயன்றிப் பலவேறு வகைப்பட்ட விகாரப் பொருள்களோடு கூடிப் பலவகையாய் விளையாடுகின்றேன் என்று அறிவதே முத்தி' என்பார்கள்.

*இவ்வதிகரணத்தால் குடாகாய உவமையே கூறி, புனருற்பவம் உயிரின் பொருட்டுச் சிவத்துக்கே ஆம் என்று கூறும் சிவாத்துவித சைவர்களும், மூலப்பகுதியில் தோன்றும் புத்திதத்துவத்திற்கே அது என்று கூறும் சாங்கியர்களும் மறுக்கப்படுகின்றனர்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*உற்பத்தியும் நாசமும் தொடர்ச்சியாயுள்ள பொருளுக்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையின் ஆன்மாக்கள் மாறிப்பிறந்து வரும்.*

5. இயைபு:

### உதாரணவெண்பா — 8

**கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து**
**விண்படர்ந்தத் தூடு வினையினால்—கண்செவிகெட்**
**டுள்ளதே தோற்ற வுளமணு வாய்ச் சென்றுமனம்**
**தள்ள விழுங்கருவிற் றான்.**

### அந்நுவயம்

*கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற, உளம் அத்தூடு விண்படர்ந்து, கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து, மனம்தள்ள, வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழும்.*

### இதன்பொருள்

*கண் செவி கெட்டு — கண் செவி முதலிய உறுப்புக்களையுடைய இவ்வுடம்பு கெட்டவழி,— உள்ளதே*

தோற்ற — (தனக்கு அழிவின்றிச் சிருட்டி காலம் தொடங்கிச் சங்கார காலம் வரையில்) நிலைத்திருப்பதாகிய சூக்குமதேகமானது பூதசார உடம்பு முதலியனவாய்க் காரியப்பட,—உளம்—உயிரானது,— அத்தூடுவின்படர்ந்து — அப்பூதசாரம் முதலிய உடம்பினிடமாகப் பொருந்தி சொர்க்க நரகங்களில் சென்று அநுபவித்துப் பின்னர்,—கண்ட நனவை கனவு உணர்வின் மறந்து— நனவிற் கண்டவைகளைக் கனுக்காணும்போது மறந்து அறிவு வேறுபட்டாற்போல (முன்னை உடம்பு கெட்டமையும், பூ த சா ர உடம்பு முதலியவற்றோடுகூடிச் சொர்க்க நரகங்களை அநுபவித்தமையும்) மறந்து அறிவு வேறுபட்டு,—மனம் தள்ள — (முன்னுடம்பு நீங்கும் போது அடுத்தவினையினுற் காட்டப்படும் தெய்வப் பிறப்பு மக்கட்பிறப்பு விலங்கின்பிறப்பு நரகர்ப்பிறப்பு என்னும் நால்வகைப் பிறப்பைப்பற்றி ஆன்மா விரும்புமாறு) மனம் செலுத்துதலால்,—வினையினுல்—(அந்தப் பிறவியை எடுத்தற்கு ஏதுவாகிய) புண்ணியபாவ விசேடத்தால்,—அணு ஆய் சென்று—சூக்குமதேகமாத்திரையாய்ச் சென்று,—கருவில் விழும்—(அம்மனம் தள்ளிய பிறவிக்கு வாய்ந்த) கருவின்கண் விழும் என்றவாறு.

உடம்பு நீங்கும்போது முதலில் கெடுவன கண்ணும் செவியும் ஆகையால் அச்சிறப்பு நோக்கி 'கண் செவி கெட்டு' என்றனர். பஞ்சபூதங்களின் காரியம் எனப்படும் தூல உடம்பானது எங்ஙனம் சூக்கும உடம்பின் காரியமாகும்? என்னும் ஐயம் நீக்குதற்கு 'உள்ளதே தோற்ற' என்றனர். அணு என்றது சூக்கும உடம்பை.

'உள்ளதே தோற்ற' என்றதனால் ஆன்மாவானது தூலசரீரம் கெட்டுப்போக, சூக்குமதேகத்தோடு பூதசாரமாகிய தேவசரீரம் முதலியவற்றை எடுத்தலாகிய உடல் மாறுதல் கூறப்பட்டது. 'விண்படர்ந்து' என்றதனால் சொர்க்கலோகம் முதலியவற்றில் செல்லுதலாகிய இடம்மாறுதல் கூறப்பட்டது. 'கண்ட கனவைக் கனவு உணர்வில் தான் மறந்து' என்றதனால் முன்னுடம்பு கெட்டமை, சுவர்க்கம் முதலிய உலகங்களை அடைந்தமை, அவ்விடங்களில் அநுபவித்தமை என்பவைகளை மறத்தலாகிய அறிவு மாறுபடுதல் கூறப்பட்டது. இவற்றால் ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு உண்டு என்பது உண்மையாயின் முற்பிறவிகளில் அநுபவித்தவைகளை அவைகள் இப்பிறவியில் ஏன் அறியவில்லை? என்னும் ஐயமும் நீக்கப்பட்டது.

சூக்குமஉடம்பாவது சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரணதன்மாத்திரை ஐந்தும்; மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றும் ஆகிய எட்டினாலும் ஆக்கப்பட்ட அருவுடம்பு.

இவ்வெண்பாவினால் வேதத்திற்கூறிய பஞ்சாக்கினி வித்தையும் பெறப்பட்டது. பஞ்சாக்கினி வித்தையின் இயல்பாவது:— நல்வினை செய்த உயிர்கள் அந்நல்வினைப் பயனை அநுபவித்தற்பொருட்டு, அவ்வுடம்பினை விட்டு நீங்கி, சூக்குமதேகம் பெற்று, சொர்க்கலோகம் சென்று அவ்விடத்தில் இன்பம் அநுபவித்தற்குரிய பூதசாரவுடம்பெடுத்து அவ்விடத்திலுள்ள தேவர்களோடு வாழ்ந்து, போகங்களை அநுபவித்துத் தொலைத்து, எஞ்சிய வினையினால் அத்தேவ சரீரத்தைவிட்டு

நீங்கி, சூக்கும தேகத்தோடு மேகமண்டலத்தினை அடைந்து, மழைத்துளிகளோடு கூடி நிலத்தினை அடைந்து, நெல் முதலிய பயிர்களோடு கலந்து உணவு ரூபமாய்ப் புருடசரீரத்தை அடைந்து, அதில் சுக்கில மாய்ப் பரிணமிக்கிறது. பிறகு அச்சுக்கில ரூபத்தோடு தாய் வயிற்றை அடைந்து, கருவாய்ப் பரிணமித்துத் தூலதேகத்தோடு நிலத்தில் தோன்றுகிறது. இவ்வாறு ஆன்மாவானது தூல உடம்பைவிட்டு நீங்கிய பிறகு சொர்க்கமும், மேகமண்டலமும், நிலமும், தந்தையும், தாயும் என்னும் ஐந்திடத்தும் தங்கிப் பிறத்தலினால் இவ்வைந்திடமும் அக்கினியாகவும், இவைகளை அடைந்த ஆன்மா அவ்வக்கினியிலிட்ட ஆகுதியாகவும் தியானித்தல் வேதத்தில் கூறப்பட்டதொரு சாதகம் ஆதலின் இது பஞ்சாக்கினி வித்தை எனப்பட்டது.

### உதாரணவெண்பா—9

**அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு**
**பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்**
**குடாகாய ஆகாயக் கூத்தாட்டா மென்ப**
**தடாதுள்ளம் போமா றது.**

இது வேதத்திற் கூறப்பட்டுள்ள குடாகாய உவமையை ஆன்மா தூல உடம்பை விட்டு நீங்குவதற்குக் கூறி மயங்குவார்க்குக் குடாகாய உவமையின் உண்மைப் பொருள் இத்தன்மைத்து என விளக்குகின்றது.

### இதன்பொருள்

(இத்தூல உடம்பு கெட்டவழி ஆன்மாவானது சூக்கும தேகம் பூதசார உடம்பு முதலியன பெறுதற்கு

வேதத்தின் கண்ணே) அரவு தன் தோல் உரிவும் — பாம்பு தோலுரித்துப் புதியதொரு தோலைப் போர்த்துச் செல்லுதலும், — அ கனவும் — புருடன் நனவுடம்பினின்றும் நீங்கிக் கனவுடம்பிற் செல்லுதலும், — பரகாயம் போய் வரும் அ பண்பும் — யோகிகள் தங்கள் உடம்பை விட்டு மற்றோர் சரீரத்திற்போய் மீளுதலும், — பரவில் வேறு — ஆகிய இவ்வுவமைகள் மிகவும் வழங்கவும் இவற்றிற்கு மாறாக, — குடாகாய ஆகாய கூத்தாட்டு ஆம் என்பது அடாது — குடாகாயமானது குடமுடைந்தால் ஆகாயத்தோடு கூடுவது போன்றதோர் கூத்தாட்டாகும் என்பது பொருந்தாது (ஆனால், வேதத்தில் குடாகாய உவமை ஏன் கூறப்பட்டது? என்னில்,) உளம் போம் ஆறு அது — ஆன்மா (மகாசங்கார காலத்தில்) சூக்கும உடம்பு விட்டுப் போதற்கே அவ்வுவமை வேதத்திற் கூறப்பட்டது என்றவாறு.

குடவாகாயம் என்பது குடாகாயம் என மருவியது. பரவுதல் — எல்லோரும் அறிய மிகவும் நிகழ்தல்.

ஆன்மா உடலை விட்டுப் போதற்கு இவ்விருவகை உவமைகளையும் வேதாகமங்கள் கூறுதலால், அவை தம்முள் முரணுதவாறு பொருள் கூறுதலே பொருத்தமுடைத்தாம். ஆதலால், பாம்பு தோலுரித்தல் முதலிய உவமானங்கள் ஆன்மா தூல உடல்விட்டுப் போதற்கும், குடாகாய உவமானம் சூக்கும உடம்பு விட்டுப் போதற்கும் பொருத்தமுடையனவாம். இவ்வேறுபாடு உணராது தூல உடம்பை விட்டுப் போதற்குக் குடாகாய உவமை கூறுதல் குற்றமாம்.

## நான்காமதிகரணம்

ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே.

(இ—ள்) முதல்வன் தனது ஆணையாகிய சிற்சத்தியோடு நீக்கமின்றி நிற்பன் என்றவாறு. இதில்,

1. தன்றாற் கூறப்படும் பொருள்:

முதல்வன் சர்வவியாபகன்.

2. ஐயப்பாடு:

ஆணை எனப்படும் சத்தி முதல்வனின் வேறோ? அன்றோ?

3. பிறர்கூறும் பக்கம்:

(அ) சத்தி முதல்வனின் வேறு.
இது மீமாஞ்சகர் முதலியோர் பக்கம்.

(ஆ) சத்தி முதல்வனின் வேறன்று.
இது நையாயிகர் முதலியோர் பக்கம்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

முதல்வன் ஏகாநேகம் இரண்டும் இன்றி (அஃதாவது ஒன்று, வேறு என்னும் இருதன்மையுமின்றி) அவ்விரண்டினுக்கும் பொதுவாய்த் தனது சிற்சத்தியோடு சமவேதமாய் (அதாவது நீக்கமின்றி)ச் சர்வவியாபியாய் நிற்பன்.

*சமவேதம்—சமவாயத்தோடு கூடியது. 'சமவாயம்' என்னும் வடமொழி தமிழில் 'நீக்கமின்றி நிற்றல்' என்று மொழிபெயர்க்கப்படும். இவ்விடத்தில் சமவாயம் என்றது தாதான்மிய சம்பந்தத்தை. தாதான்மியமாவது உடலினுள்ள கையானது உடலோடு ஒன்றுயும், ஒருவாறு உடலிற்கு வேருயும் இருப்பதுபோல், பொருளால் ஒன்றேயும் ஒருவாறு வேருயும் இருத்தல்.*

5. இயைபு:

## உதாரணவெண்பா—10

**எங்குமுளன் என்றளவை ஒன்றன் றிரண்டென்னில்**
**எங்கு முளனன் றெவற்றெவனும்—அங்கண்**
**அவையவ னன்றில்லைப் பொன்ஞெளிபோ லீசன்**
**அவையுடைமை யாளாநா மங்கு.**

### இதன்பொருள்

*எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று — முதல்வன் 'அவையே தானேயாய்' நிற்பன் என்று மேலே கூறிய பிரமாணத்திஞல் ஒரு பொருளாதல் கூடாது. (ஏனெனில், ஒருபொருளாயின் அது ஓரிடத்தில் இருப்பதன்றி எங்கும் வியாபித்து நிற்க மாட்டாது. எதுபோல்? எனில், கங்காநதிக்கரையில் நிற்கும் ஒருவனே அதே காலத்தில் காவிரி நதிக்கரையிலும் நிற்கமாட்டாமைபோல் என்க.),— இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று — முதல்வன் இருபொருளாய் (அதாவது வேருய்) நிற்கும் என்னில், அவன் எங்கும் அவையே தானேயாய் வியாபித்து நிற்றல் கூடாது*

(ஏனெனில், தன்னிடத்திலே வேற்றுமையுடையவன் பிறபொருள்களிடத்தில் வேற்றுமையின்றி வியாபித்து நிற்க இயலாதாகையால் என்க.) ஆனால் (அவன் எங்கும் உளன் அல்லன் என்னலாமோ? என்னில்),— எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்றுஇல்லை— எவ்வெவ்விடத்து எவ்வெப்பொருள்கள் உண்டோ? அவ்வவ்விடத்து அவ்வப்பொருள்களெல்லாம் (அகர உயிரின்றேல் அக்கரங்கள் இல்லையாமாறுபோல்) அம்முதல்வனை இன்றியமையா (ஆதலால் அவன் எங்கும் உளனல்லன் என்றலும் பொருந்தாது.)

(ஆனால் முதல்வன் சிற்சத்தியோடு ஏகாநேகமின்றி நீக்கமற நிறைந்திருப்பன் என்பதற்குப் பொருள் யாதோ? என்னில்,) ஈசன் பொன் ஒளி போல்—முதல்வன் சூரியனும் ஒளியும்போல் (ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தால் சிவமும் சத்தியும் என்று) இயைந்து நிற்கும் (அதாவது சூரியன் ஒன்றே தன்னை நோக்கக் கதிரோன் எனவும், விஷயங்களை நோக்கக் கதிர்எனவும் தாதான்மியத்தால்இருவகையாய் இயைந்து நிற்றல் போல, சுத்த சைதன்னியமாகிய சிவம் ஒன்றே புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய்த் தன்னியல்பில் நிற்கும் அவசரத்தில் சிவம் எனவும், புறப்பொருளை நோக்கி நின்று உணர்த்தும் அவசரத்தில் சத்தி எனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு இயைந்து நிற்கும்): (ஆனால், பசுபாசங்களுக்கும் வியாபகமிருத்தலால் அவைகளும் சிவபெருமானைப் போலவே தத்தம் சத்திகளோடு நீக்கமறக் கலந்து நிற்கும் எனப்பெறப்பட்டுச் சிவத்திற்குச்

சமமாக எண்ணப்படுமோ? என்னில், அப்படி எண்ணப் படா),—அவை உடைமை ஆம் நாம் ஆள் அங்கு — (அவை அவ்வாறாயிருப்பினும் சிவத்தின் வியாபகத்தை நோக்க வியாப்பியம் ஆதலினால்) இப்பாசங்கள் உடைமையாம் பசுக்களாகிய நாம் அடிமை ஆவோம் அம் முதல்வனிடத்தில் என்றவாறு.

வியாபகம் என்பது மேலிடு நிறைவும், வியாப்பியம் என்பது வியாபகத்தில் அடங்கிய நிறைவுமாம். இவை கட்குச் சமுத்திரமும், சமுத்திரத்திலுள்ள நீரும், உவரும் உவமானங்களாம்.

"வியாபக மாதி விரிக்குங் காலை
வியாபக மேலிடு நிறைவா மென்ப."

"வியாத்தி சமநிறை வாகும் விளம்பின்
வியாப்பிய மொன்றின் மிடைந்த நிறைவே."

"வியாபகம் கடலே வியாத்தியந் நீரே
வியாப்பிய முவரென விளக்கிய நூலே."

இவ்வதிகரணத்தால் முதல்வன் வியாபகன் ஆகையால் வியாபகப் பொருளுக்கு ஒன்றாய் நிற்றல் கூடாது என்பதும், அது கூடாமையால் இரண்டாய் நிற்பன் என்னில் அவன் வியாபகனாதல் கூடாது என்பதும், அவன் வியாபியல்லன் எனில் பசு பாசங்கள் அவனை இன்றியமைதல் கூடாது என்பதும் பெறப்பட்டு; முதல்வன் ஒருவனே ஞாயிறும் ஒளியும் போலச் சிவமும் சத்தியும் எனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சர்வவியாபியாய்ப் பொதுமையில் நிற்பன் என்பதும்,

*புறப்பொருளை நோக்காது ஒன்றிலும் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் அறிவு மாத்திரமாய் நிற்கும் நிலையில் சிவம் எனவும், புறப்பொருளை நோக்கி உலகெலாமாயும், வேறாயும், உடனுமாயும் நின்று ஆன்மாக்களுக்கு உணர்த்திநிற்கும் நிலையில் சத்தி எனவும் பெயர் பெறும் என்பதும் விளக்கப்பட்டன.*

*தீயின் சத்தி ஒன்றே சுடுதல் அடுதல் முதலிய தொழில்களுக்கு ஏற்றவாறு சுடும்சத்தி அடும்சத்தி என்பன ஆதியாகப் பெயர் பெறுமாறு, சிவசத்தி ஒன்றே காரிய வேறுபாட்டால் பராசத்தி, ஆதிசத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பஞ்ச சத்திகளாகவும், இவற்றினின்றும் தோன்றிய எண்ணிறந்த சத்திகளாகவும் விரிந்து எண்ணிறந்த பேர்களைப்பெறும். இச்சத்திகளோடு கூடிய சத்திமானாகிய சிவபெருமானும் எண்ணிறந்த பேர்களைப் பெறுவர். இவைகளைச் சிவாகமம் விரித்துரைக்கும்.*

### சிவஞானசித்தியார்

"சத்தியாய் விந்து சத்தி
யாய்மனோன் மனிதா னாகி
ஒத்துறு மகேசை யாகி
யுமைதிரு வாணி யாகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன்
வருஞ்சத்தி யொருத்தி யாகும்
எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்."

"சத்திதா னாதி மாதி தானாகும் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகும் தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம்சத்தன் வேண்டிற்றெல்லாமாம்சத்திதானே."

(சூத்–2, செய்–75, 76)

## இரண்டாஞ்சூத்திரத்தின் தொகைப்பொருள்.

*இச்சூத்திரமானது சிவபெருமானும் உயிர்களும் பொன்னும் பணியும் போல் அபேதமாம் என்று மாயா* வாதிகளும், *இருளும் ஒளியும்போல் பேதமாம் என்று* மாத்துவரும், *சொல்லும் பொருளும்போல் பேதா பேத மாம் என்று* பாஞ்சராத்திரிகளுங் *கூறுவதை மறுத்து உடலும் உயிரும்போல் அபேதமும், கண்ணும் ஒளியும் போல் பேதமும், ஆன்மபோதமும் கண்ணொளியும் போல் பேதாபேதமுமாம் என்றும்; உயிர்கள் பிறத்தல் இறத்தல்கட்குக் காரணமாகத் தமது ஆணையாகிய சத்தி வாயிலாக அவைகளுக்குக் கன்மபலனைச் சிவ பெருமானே கொடுப்பர் என்றும்; உயிர்கள் தூல உடம்பைவிட்டுச் சூக்கும உடம்போடு பூதசாரசரீரம் முதலியவற்றை அடைந்து சொர்க்கம் முதலியவற்றிற் போய் இன்பம் அநுபவித்து, எஞ்சிய கன்மத்தினுல் சூக்குமதேகத்தைக்கொண்டு மக்கள் விலங்கு முதலிய பிறவிகளுள் தம்மனம் செலுத்திய பிறவிக்கேற்ற கரு வில் விழும் என்றும், சிவபெருமான் ஒருவரே சிவமும் சத்தியுமாய் நிற்பர் என்றும் அறிவுறுத்துகின்றது.*

## இரண்டாஞ்சூத்திரம் முடிந்தது.

---

# மூன்றுஞ்சூத்திரம்

# மூன்றாஞ்சூத்திரம்

**உளதில தென்றலின் எனதுடல் என்றலின்**
**ஐம்புலன் ஒடுக்கம் அறிதலிற் கண்படில்**
**உண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்**
**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.**

*உலகத்திற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருள் உண்டு என்பதை முதற்சூத்திரத்தினால் விளக்கி, அருட்சத்தியும் மாயையும் ஆகிய துணைக்காரணம் முதற்காரணங்களது உண்மையும், அவற்றால் உலகம் காரியப்படுமாறும் இரண்டாம் சூத்திரத்தினால் விளக்கி, அவற்றாலாய பயனை அடைதற்குரிய ஆன்மாக்களின் உண்மையை இம் மூன்றாம் சூத்திரத்தால் விளக்குகின்றார்.*

இதன்பொருள்

*இலது என்றலின் ஆன்மா உளது—இல்லை என்று சொல்லுதலால் (அவ்வாறு சொல்லும்) ஆன்மா உளது, —எனது உடல் என்றலின் (ஆன்மா) உளது—எனது*

உடம்பு என்று கூறுதலால் (உடம்புக்கு வேறாக) ஆன்மா உளது,— ஐம்புலன் அறிதலின் (ஆன்மா) உளது—ஐம்புலன்களை (வேறாக) அறிதலால் (அவற்றிற்கு வேறாக) ஆன்மா உளது,—ஒடுக்கம் அறிதலின் (ஆன்மா) உளது — ஐம்புலன்களும் ஒடுங்கின சொப்பனத்தானத்தில் நிகழ்ந்தவற்றை அறிதலினால் ஆன்மா வேறு உண்டு,—கண்படில் உண்டி வினை இன்மையின் (ஆன்மா) உளது—நித்திரையில் (இன்பத்துன்ப) அநுபவமும் (உடம்பின்) சேட்டையும் (பிராணவாயுவுக்கு) இல்லாமையால் (அதற்கு வேறாக) ஆன்மா உளது,— உணர்த்த உணர்தலின் (ஆன்மா) உளது — அறிவிக்க அறிதலால் (மறந்து மறந்து அறிதலின்றி அறிந்தவாறே அறிந்து நிற்கும் பிரமத்திற்கு வேறாக) ஆன்மா உளது, —மாயா இயந்திர தனுவினுள் (ஆன்மா) உளது—மாயா காரியங்களால் ஆக்கப்பட்ட சூத்திரப்பாவை போலும் உடம்பின் கண்ணே (எல்லாம் கூடிய சமுதாயத்திற்கு வேறாக) ஆன்மா உளது என்றவாறு.

## மூன்றும் சூத்திரத்தின் அதிகரணங்கள்

1. இலது என்றலின் ஆன்மா உளது.
2. எனதுடல் என்றலின் ஆன்மா உளது.
3. ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது.
4. ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது.
5. கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது.
6. உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது.
7. மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது.

இவ்வேழு அதிகரணங்களால் சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமூகான்மவாதி என்னும் எழுவர் மதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிக்கப்படுகின்றது.

## மூன்றும் சூத்திரத்தின் சூர்ணிகை

1. இல்லை என்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

2. எனதுடல் என்று பொருட் பிறிதின்கிழமையாகச் சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

3. ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேறாய் உயிர் உண்டு.

4. கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக்கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.

5. நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவும், சரீரத்துக்குப் புசிப்பும் தொழிலும் இல்லாதபடியினாலே பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

6. மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.

7. எல்லாத்தத்துவங்களுக்கும் வேறுவேறு பெயர் இருக்கையினாலே அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

## மூன்றும் சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது என்றது.

*எவற்றையும் அன்று அன்று என விட்டு ஆன்மா இலது என்று நிற்பது உளதாதலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.*

2. இனி, எனதுடல் என்றலின் ஆன்மா உளதென்றது.

*என்பதி என்மனை என்றாற்போல என்கை என்கால் என நிற்பதுளதாதலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.*

3. இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளதென்றது.

*ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்று அறியாமையின், இவ்வைந்தினாலும் ஐம்பயனும் அறிவது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.*

4. இனி, ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளதென்றது.

*நனவின்கட் கனவு கண்டாம் என்றும், கண்டிலம் என்றும் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.*

5. இனிக், கண்படில் உண்டிவினை யின்மையின் ஆன்மா உளதேன்றது.

*ஒடுங்கின விடத்து இன்பத்துன்பம் சீவனம் பிர கிருதிக்கு இன்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத் துன்பம் சீவியா நிற்பதுளது ஆகலின் அதுவே அவ் வான்மாவாம் என்றது.*

6. இனி, உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்றது.

*அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பதுளது ஆகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.*

7. இனி, மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா உளது என்றது.

*அவை தாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான்.*

**இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் ஏழு.**

## முதலதிகரணம்

இலதேன்றலின் ஆன்மாவுளது.

(இ – ள்) *இல்லையென்று சொல்லுதலால் (அவ் வாறு சொல்லும்) ஆன்மா உளது என்றவாறு.*

**1.** தன்ஞற் கூறப்படும் பொருள் :

*இல்லை என்று சொல்லுதலால் அவ்வாறு சொல் லும் ஆன்மா உளது என்றவாறு.*

2. ஐயப்பாடு :

*ஆன்மா உடல் முதலியனபோலக் காணப்படுதல் இல்லை: ஆகையால், உளதோ? இலதோ?*

3. பிறர் கூறும் பக்கம் :

*ஆன்மா என்பதொன்றில்லை. உண்டு என்று சொல்லுதல், முயற்கொம்பு இல்லை எனில் அஃதுண்டு என்று சொல்லுவதை ஒக்கும்.*

*இது மாத்துமிகர் கொள்கை. இவர்கள் ஆன்மா சூனியப்பொருள் என்பர். ஆதலால் இவர்கள் சூனி யான்மவாதிகள் எனப்படுவர். சூனியமாவது உள்ளது மன்று, இல்லதுமன்று, இரண்டுமாவது மன்று, வேறு மன்று எனப்படும் பாழ்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு :

*ஆன்மா என்பது ஒன்றில்லை என்னும் சூனியான்ம வாதிகளும் இல்லை என்று வாளா கூறுது உடல் பொறி விடயங்கள் எல்லாவற்றையும் முறையே இது ஆன்மா வன்று, இது ஆன்மாவன்று என்று ஒவ்வொன்ருகக் கழித்து 'இவையெல்லாம் ஆன்மா அல்ல என்று கழிக் கப்படுதலினுல் ஆன்மா என்பது சூனியமாம் என்பர் ஆதலினுல் இவைகளை அவ்வாறு ஒவ்வொன்ருய்க் கழித்து நிற்பதோர் அறிவு உளது ஆதலால் அவ் வறிவே ஆன்மாவாம்.*

5. இயைபு :

## உதாரண வெண்பா — 1

**அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்**
**நின்றென் றுளததுவே நீயனைத்தும்—நின்றின்று**
**தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை**
**தற்பரமு மல்லை தனி.**

### அந்நுவயம்

*அனைத்தும்நின்று, அன்று அன்று என விட்டு, அஞ்சு எழுத்தாய் ஒன்று நின்றுளது; அதுவே நீ, சார்மாயை அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம் போல் காட்டலால் நீ அல்லை; தற்பரமும் அல்லை; தனி.*

### இதன்பொருள்

*அனைத்தும் நின்று — (உடல் பொறி விடயம் முதலிய) எல்லாவற்றினும்(அது அதுவேயாக)நின்று,— அன்று அன்று என விட்டு — (ஆன்ம ஆராய்ச்சி செய்யத்தொடங்கி அவைகளை முறையே ஒவ்வொன்றாக) இது நானன்று இது நானன்று என்று கழித்த வழி, — அஞ்சு எழுத்தாய் ஒன்று நின்றுளது — (அவ்விடத்து) பஞ்சாக்கர ரூபமாய் அறிந்து வந்ததோர் அறிவு நிலைபெற்றுள்ளதல்லவா ? — அதுவே நீ — அவ்வறிவே நீ என்று அறிவாயாக,— சார் மாயை — உன்னால் சாரப்பட்ட மாயையானது,— அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலால் நீ அல்லை— (அதன் காரியமாகிய) நிலம் முதலிய அனைத்துமாய் உன்னோடு கலந்து நின்று இப்பெத்தகாலத்தில் கண்ணுக்குக் கண்ணாடிபோல் உன் அறிவை விளக்கிநிற்றல்*

மாத்திரமேயன்றி அறிவதன்று (ஆதலால் அறியும் பொருளாகிய) நீ அம்மாயை யல்லை,— தற்பரமும் அல்லை— அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை,— தனி — அவ்விரண்டின் வேறு என்றவாறு.

அது அதுவாய் நிற்றலாவது–சார்ந்ததன் வண்ணமாயிருத்தல். அஃதாவது ஆன்மா உடம்போடு கூடியிருக்கும் பெத்த காலத்தில் அஞ்ஞானத்தால் அவ்வுடம்பு பொறி முதலியவற்றையே தானாக மதித்து அவை வேறு தான் வேறு என்னுதபடி அழுந்திக் கிடத்தல்.

இவ்விடத்தில பஞ்சாக்கரம் என்பது அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் ஆகிய சூக்கும பஞ்சாக்கரத்தை.

உடல் முதலியவற்றை இது நானன்று இது நானன்று என்று ஒவ்வொன்ருய்க்கழித்த அறிவையும், மற்ருேர் அறிவு அவ்வாறு கழித்தலாகாதோ? எனின், அவ்வாறு கழித்த உணர்வையும் கழிக்கும் உணர்வு வேறுண்டு எனப்பட்டு மேலும் மேலும் வரம்பின்றி யோடிக்கொண்டேயிருக்கும். ஆதலால், "அஞ்செழுத்தாய் நின்று ஒன்று உளது, அதுவே நீ" என்ருர்.

முதலிரண்டு சூத்திரங்களால் சிவமும் மாயையும் உண்டு என்பது பெறப்பட்டமையால், அவ்விரண்டுமே அவ்வறிவினையும் அறிந்து நீக்கும். ஆதலால், வரம்பின்றியோடு மாறில்லை எனில், மாயையானது ஆணவ மலத்தால் விழுங்கப்பட்டு அறிவு இச்சை செயல்களை

இழந்து கிடக்கும் ஆன்மாக்களின் இச்சா ஞானக் கிரியைகளை விளக்கும் கருவிமாத்திரமா யிருப்பதன்றி அறியும் பொருளன்று. ஆதலால் அறியும் பொருளாகிய நீ அம்மாயை யல்லை என்பார் "தர்ப்பணம் போற் காட்டலால் சார்மாயை நீயல்லை" என்றார். மாயையால் விளங்கி அறியும் நீ மாயாதீதமாகிய சிவரூபமல்லை என்பார் "தற்பரரூபமல்லை" என்றார்.

## இரண்டாமதிகரணம்

எனதுடல் என்றலின் ஆன்மாவுளது.

(இ-ள்) எனதுடல் என்று பிறிதின் கிழமைப் பொருள்படக் கூறுதலால் உடம்புக்கு வேறாக ஆன்மா வுளது என்றவாறு. இதில்,

1. தன்றுற் கூறப்படும் பொருள் :

எனதுடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே உடம்புக்கு வேறாய் உயிருண்டு.

2. ஐயப்பாடு:

ஆன்மா உடம்பேயோ? உடம்பின் வேறோ?

3. பிறர்கூறும்பக்கம்:

ஆன்மா உடம்பினிடத்தேயன்றித் தனியே காணப்படாமையாலும் நான் பருத்தேன் நான் சிறுத்தேன் என உடம்பையே நான் என்று வழங்கி வருதலாலும் உடம்பே ஆன்மாவாம்.

*இது தேகான்மவாதிகள் பக்கம். இவர்கள் உலோகாயதருள் ஒருசாரார்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பான் என உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக்கு ஏற்றி வழங்கினும் யான் உடம்பு யான் கை யான் கால் என வழங்குதலின்றி எனது என வேற்றுமைப்படவே யாவரும் வழங்குதலினால் உடம்பிற்கு வேறாய் உயிர் உண்டு*

5. இயைபு:

### உதாரணவெண்பா—2

**எனதென்ற மாட்டின் எனதலா தென்னு**
**துனதலா துன்கைகால் யாக்கை—எனதென்றும்**
**என்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகாண்**
**உன்னிலவை வேறு முணர்.**

### அந்நுவயம்

*எனது அலாது என்னுது எனது என்ற மாட்டின், உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண்: உன்னில், அவை வேறும்: உணர்.*

### இதன்பொருள்

*எனது அலாது என்னுது எனது என்ற மாட்டின்—(உலோகாயதனே! நீ உலோகாயத நூல் கேட்கு முன்னெல்லாம் பதி மனைவி முதலிய புறப்பொருளையே உயிரெனக் கொண்டு மயங்கிக் கிடந்தாய் அல்லவா!*

அப்படி மயங்கி நின்ற காலத்தில் அவைகளை) எனதன்று என வேறாகக்காணாமல் தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல,—உனது அலாது உன் கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றி காண்—உனதல்லாத உன் கை கால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அவ்வாறு அறிந்த பாச அறிவை என் அறிவது என்றும் தற்கிழமைப் பொருளாகக் கூறிக்கொண்டு நீ ஒரு பொருள் வேறு நிற்கின்றாய் காண்,—உன்னில்—(உலோகாயதநூல் ஆராய்ந்த பின்னர்ப் பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேறாயிருத்தலை அறிந்தாற்போல, கை கால் முதலியவற்றின் இயல்புகளையும் ஏதுக்கள் முதலியவற்றால்) ஆராய்ந்து பார்ப்பாயானால், — அவை வேறு ஆம் உணர் — அக் கை கால் முதலிய உனக்கு அந்நியமாம் அதனை அறிவாயாக என்றவாறு.

தற்கிழமைப்பொருளும் பிறிதின் கிழமைப்பொருளும் ஆறாம் வேற்றுமைப் பொருள்களாம். தற்கிழமையாவது சாத்தனது கருமை என்பதுபோல் தன்னோடு ஒற்றுமையுடையது. பிறிதின்கிழமைப் பொருளாவது சாத்தனது வீடு என்பது போல் தன்னின் வேறாயது.

## மூன்றாமதிகரணம்

ஐம்புலன் அறிதலின் ஆன்மாவுளது.

(இ—ள்) (சத்தம் முதலிய) ஐம்புலன்களை (வேறாக) அறிதலால் (அவற்றுக்கு வேறாக) ஆன்மா உளது என்றவாறு. இதில்,

1. தன்றற்கூறப்படும்பொருள்:

*சத்த பரிச ரூப ரச கந்தங்களை அறியும் அறிவே ஆன்மாவாம்.*

2. ஐயப்பாடு.

*ஆன்மா ஐம்புலனே? அவற்றின் வேறே?*

3. பிறர்கூறும்பக்கம்:

*சுரோத்திரம் முதலிய ஐம்பொறிகள் சத்தம் முதலிய ஐம்புலன்களை அறியும் என்பது சர்வசம்மதமாம். ஆதலால் அவை உடல்போல் சடமன்று. அன்றியும், உடம்பை எனதுடல் என்று பிறிதின் கிழமைப்பொருள் பட வழங்குவது போலன்றி, நான் கேட்டேன் நான் பார்த்தேன் என்று தற்கிழமைப் பொருளாகவே வழங்குதலால் ஐம்புலன்களே உயிராதல் அமையும்.*

*இது இந்திரியான்மவாதிகள் பக்கம்.*

*இவர்களும் உலோகாயதருள் ஒரு சாரார்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*ஐம்புலனாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களுள் ஒவ்வொன்றையே ஒவ்வொரு இந்திரியம் அறியும். ஒரு இந்திரியம் அறிவதை மற்றோர் இந்திரியம் அறியாது. ஆதலால், இவ்வைந்து இந்திரியங்களாலும் ஐந்து பயன்களையும் அறிவது எதுவோ? அதுவே ஆன்மாவாம்.*

5. இயைபு:

## உதாரணவெண்பா — 3

**ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி**
**அன்றும் புலனாயவ் வஞ்செழுத்தை—ஒன்றறிதல்**
**உள்ளதே யாகில் அதுநீ தனித்தனிகண்**
**டுள்ளலவை யொன்றல்லை யோர்.**

### அந்நுவயம்

*உடல்மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியா தாகி, அன்றும் புலனாய் அவ்வஞ்செழுத்தை அறிதல் ஒன்று உளதே ஆகில், அது நீ. அவை தனித்தனி கண்டு உள்ளல் ஒன்று அல்லை: ஓர்.*

### இதன்பொருள்

*உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாது ஆகி — உடம்பின்கண் நிலைபெற்று ஒரு விடயத்தை அறிந்த இந்திரியம் மற்றொரு விடயத்தை அறியாதாய், —அன்றும் புலன் ஆய் அ அஞ்சு எழுத்தை—அவ்வாறு மாறுபடும் சத்தம் முதலிய புலன்களைச் சூக்கும பஞ் சாக்கரத்தால் செலுத்தப்பட்டு ஆராய்ந்து அறிகின்ற அவ்வைம்பொறிகளின் தொழிற்பாட்டை,— அறிதல் ஒன்று உளதே ஆகில்—(இவ் இவ்விந்திரியம் இவ் இப் புலன்களை அறியும் என்பதை) உணர்தலையுடையதோர் பொருள் (இல்லதென்றால் அவ்வறிவு நிகழாது ஆத லால்) உளதேயாம் எனின்,— அது நீ — அவ்வாறு உணரும் பொருளே நீயாகிய ஆன்மா (அவ்வாறு உணர் வனவும் அவ்விந்திரியங்களே என்றால் ஆகாதோ என் னில்),— அவை தனி தனி கண்டு உள்ளல் — அவ்விந்*

திரியங்கள் தத்தம் விடயங்களை வேறு வேறு கண்டறிவது மாத்திரமன்றித் தாம் அவ்வாறு அறிதலை அறியமாட்டா ஆகையாலும்,— ஒன்று அல்லை ஓர்—(இன்னது இன்னதை அறியும் என்று அவ்வைந்தின் தொழிற்பாட்டையும் அறிந்து அவற்றால் வரும் பயனை அநுபவிக்கும் நீ) அவற்றின் வேறாவை அதனை ஆராய்ந்து அறிவாயாக என்றவாறு.

அன்றும் புலன்—மாறுபடும் புலன். புலன் ஆய்—புலனை ஆராய்கின்ற. உள்ளல்—உள்ளலான். அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்டபொறியை அஞ்செழுத்து என்றது ஆகுபெயர்.

இம்மூன்று அதிகரணங்களாலும் சாக்கிரத்தின் உண்டாகும் இயல்பு கொண்டு ஆன்மாவின் உண்மை சாதிக்கப்பட்டது.

## நான்காமதிகரணம்

### ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது.

(இ–ள்) ஐம்புலன்களும் ஒடுங்கின சொப்பனத் தானத்தில் நிகழ்ந்தனவற்றை நனவின்கண் அறிதலினால் அவ்வாறு அறியும் அறிவாகிய ஆன்மா உண்டு என்றவாறு. இதில்,—

1. தன்றற்கூறப்படும்பொருள்:

கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக்கனவுடற்கு வேறாய் உயிருண்டு.

2. ஐயப்பாடு:

*ஆன்மா கனவுடலோ? அதனின் வேறோ?*

3. பிறர்கூறும் பக்கம்:

*இந்திரியங்களின் வேறாய் அறிவது சூக்கும உடம்பே ஆகும். அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி அறியும். ஆதலால், அவ்வாறு அறியும் சூக்கும உடம்பே ஆன்மாவாம்.*

*இது சூக்கும தேகான்மவாதிகள் பக்கம். இவர்களும் உலோகாயதருள் ஒரு சாரார்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*கனவின்கண் நிகழும் சூக்கும உடம்பே ஆன்மாவாயின், கனவொழிந்து நனவின்கண் வந்தபோது அக்கனவு நிலையைக் கண்டபடியே கூற வேண்டும். அங்ஙனம் கூற அறியாது மயங்கி மயங்கிக் கூறுதலால், தூல உடம்பால் சாக்கிராவத்தையையும் சூக்கும உடம்பால் சொப்பனாவத்தையையும் அநுபவிப்பதும், சாக்கிரத்தில் அநுபவித்தவை சொப்பனத்தில் தோன்றாமல் போதலையும், சொப்பனத்தில் அநுபவித்தனவற்றுள் சில சாக்கிரத்தில் தோன்றுதலையும் சில தோன்றாமற் போதலையும் அறிவதும் ஆகிய அறிவே ஆன்மாவாம்.*

5. இயைபு:

## உதாரண வெண்பா — 4

**அவ்வுடலி னின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாங்கிடப்பச்**
**செவ்விதின் அவ்வுடலிற் சென்றடங்கி—அவ்வுடலின்**
**வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை**
**மாறலுடல் நீயல்லை மற்று.**

### அந்நுவயம்

*அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் கிடப்ப, அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று, அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி, மீண்டு அதனை மாறல் நீ உடல் அல்லை.*

### இதன்பொருள்

*அ உடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள்—அத் தூல உடம்பினின்று உயிர்ப்பனவாகிய ஐம்பொறிகள், —கிடப்ப–(அவ்வுடம்பிலேயே தொழிலற்றுக்) கிடப்பன வாக,— அடங்கி அ உடலில் செவ்விதின் சென்று — (அவை அவ்வாறு கிடந்தபோது புறத்து நிகழும் தொழிற்பாடெல்லாம்) அடங்கி அவ்வுடலினுள்ளே வருத்தமில்லாமற் போய்,— அ உடலின் — அத்தூல உடம்பு போல்,—வேறு ஒன்று கொண்டு விளையாடி— இதற்கு வேறாகியதோர் உடம்பை எடுத்துக்கொண்டு (வேறொரு விதமாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று) விளையாடி,— மீண்டு அதனை மாறல்—மீளவும் அதனை மாறி மேற் செல்லுதலால் ( அஃதாவது, சொப்பனவத்தை விட்டு நீங்கி அதற்கு மேலுள்ள சாக்கிராவத்தைக்குரிய தூல தேகத்தை அடைதலால்),*

— நீ உடல் அல்லை — நீ அச்சூக்குமதேகம் அல்லை: அதனின் வேறாவை என்றவாறு.

உயிர்ப்ப—உயிர்ப்பன. மீண்டு—மீள. மாறல்—மாறலால்.

அவ்வுடம்பு என்று சுட்டியது முன் தேகான்மவாதிகளை மறுத்த இடத்து உயிரன்று எனச் சாதித்த தூல உடம்பை.

சூக்குமதேகமாவது சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் காரண தன்மாத்திரைகள் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினாலும் உண்டாகும் அருவுடம்பு.

## ஐந்தாமதிகரணம்

கண்படில் உண்டிவினை யின்மையின் ஆன்மா உளது.

(இ-ள்) நித்திரையில் (பிராணவாயு இயங்கிக்கொண்டிருந்தும்) உண்டி (இன்பத்துன்பமும்) வினை (சேட்டித்தலும்) இல்லாதபடியினால் (பிராணவாயுவுக்கு வேறாக) ஆன்மா உளது என்றவாறு. இதில்,

1. தன்னாற் கூறப்படும் பொருள் :

நித்திரையிலும் பிராணவாயுத் தொழிற்பண்ணவும் சரீரத்திற்குப் புசிப்பும் தொழிலும் இல்லாதபடியினாலே பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

2. ஐயப்பாடு :

*ஆன்மா பிராணவாயுவோ? அதனின் வேறோ?*

3. பிறர் கூறும்பக்கம்:

*சொப்பனத்தான மாத்திரையினன்றித் தொழிற் படாத சூக்குமதேகம் போலன்றிச் சுழுத்தி துரியங் களினும் தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்கு தல் விடுதல் செய்கின்றமையால் அப்பிராணவாயுவே ஆன்மாவாகும்.*

*இது பிராணான்மவாதிகள் பக்கம். இவர்களும் உலோகாயதருள் ஒருசாரார்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*விழித்த போது இன்பத்துன்பங்களை அறிதல் போல உறங்கும்போது தனித்தியங்கும் பிராணவாயு அறிதலின்று ஆகலின், அஃது ஆன்மாவன்று. துயி லின் கண் நிகழ்ந்த உண்டி வினைகளை நனவின் கண் உணர்ந்து நான் சுகமாகத்துயின்றேன் என்றறிந்து கூறும் அறிவே ஆன்மாவாம்.*

5. இயைபு:

**உதாரணவெண்பா — 5**

**கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணுதே**
**உண்டிவினை யின்றி உயிர்த்தலால்—கண்டறியும்**
**உள்ளம்வே றுண்டாய் ஒடுங்கா துடனண்ணில்**
**உள்ளதா முண்டிவினை யூன்.**

## இதன்பொருள்

கண்டு அறியும் இ உடலே கண்டறிதற்கு நிலைக் களமான இவ்வுடம்பின் கண்ணே,—காட்டு—காட்டாய கருவிகள், — காணதே ஒடுங்க — தொழிற்படாமல் ஒடுங்கவும், — உண்டி வினை இன்றி — (அவை ஒடுங்கியவழி) உண்டியும் வினையும் (உடம்புக்கு) இல்லையாகவும், — உயிர்த்தலான் — (பிராணவாயு) நிலை பெற்று இயங்குதலால், — கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு — கண்டறியும் உரிமையையுடைய உயிர் (அப்பிராணவாயுவின்) வேறாய் உண்டு, — ஒடுங்காது உடல் நண்ணில் — (அவ்வுயிர்) ஒடுங்காமல் உடலினிடத்தே பொருந்தியிருக்குமாயின், — ஊன் உண்டி வினை உளதாம் — அவ்வுடம்பு உண்டியும் வினையும் உடைத்தாம், —ஆய்—(அதனை நீ) ஆராய்ந்தறிவாயாக என்றவாறு.

உண்டி என்றது இன்பத்துன்ப நுகர்ச்சியை. வினை என்றது உடம்பின் தொழிற்பாட்டை. கண்டு, அறிதல் ஒரு பொருட் பன்மொழி. ஊன் என்றது உடம்புக்கு ஆகு பெயர்.

பிராணான்மவாதி எனப்படுவோன் 'பிராணவாயு இயங்குதலினாலேயே அறிவு நிகழ்வதனால் அப்பிராணவாயுவே ஐம்பொறிகளையும் கொண்டு அறியும் நித்திரையில் உடம்பினிடத்திலே அப்பிராணவாயு இயங்கினாலும் ஐம்பொறிகளாகிய கருவிகள் இல்லாமையால் அது அறியவில்லை. ஆதலால், பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவாம். ஆதலால் அதற்கு வேறாய் உயிருண்டு என்பது பொருந்தாது' என்று

கூற; அவனை மறுத்து 'பிராண வாயுவே அறியும் தன்மையுடைய பொருளாயின் உறக்கத்தில் அப்பிராண வாயு இருக்கவும் கருவிகள் நீங்கிவிடுதல் கூடாவாம். ஆதலால், கருவிகளை அடக்கியும் விட்டும் பிராணவாயு வைக்கொண்டு அறிவதாகிய உயிர் வேறுண்டு' என்று உயிருண்மை சாதித்தலும், அவன் மீளவும் 'சுழுத்தி யில் உயிர் இருக்கவும் கருவிகள் ஒடுங்கியிருக்கும் என்று கூறுவதுபோல், பிராணவாயுவே கருவிகளை ஒடுக்கியும் விட்டும் அறியும் எனல் ஏன் பொருந்தாது' என்று கேட்க; அதற்கு உத்தரமாக 'பிராணவாயு சுழுத்தியிலும் நனவிலும் ஒரு தன்மையான போக்கு வரவுடையதாய் இயங்குகின்றது. ஆனல், அறிவு ஒரு தன்மையாய் இன்றி நனவில் அறிந்தும் சுழுத்தியில் அறியாமலும் இருத்தலால் பிராணவாயுவின் வேருய் அவ்வேறுபாடுடைய பொருள் ஒன்று உண்டு என்பது பெறப்படும். அப்பொருளே இந்திரியங்களை ஒடுக்கியும் விட்டும் பிராண வாயுவைத் துணையாகக் கொண்டும் அறிவதாகிய உயிர் எனப்படும்.' என்று உயிருண்மை சாதித்தவாறாயிற்று.

இவ்வதிகரணத்தால் சுழுத்தி துரியங்களில் நிகழும் இயல்பைக் கொண்டு உயிர் உண்டு என்பது சாதிக்கப்பட்டது.

இதுவரையில் இச்சூத்திரம் முதலதிகரணம் முதல் வெண்பாவில் 'சார்மாயை நீயல்லை' என்றதனை வலி யுறுத்தியவாறும்.

# ஆரூமதிகரணம்

உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது.

*(இ-ள்) அறிவிக்க அறிதலால் (மறந்துமறந்து அறிதலின்றி அறிந்தவாறே அறிந்து நிற்கும் பிரமத்திற்கு வேறாக) ஆன்மா உளது என்றவாறு. இதில்,*

1. தன்ஞற் கூறப்படும் பொருள்:

*பிரமத்திற்கு வேறாய் உயிர் உண்டு.*

2. ஐயப்பாடு:

*ஆன்மா பிரமப் பொருளேயோ? அதனின் வேறோ?*

3. பிறர் கூறும் பக்கம்:

*பிரமப்பொருள் மேலே கூறிய சடப்பொருள்கள் போலன்றிச் சித்துப் பொருளாகையால் அதுவே உயிராம்.*

*இவ்வாறு கூறுவோர் விஞ்ஞானன்மவாதிகள் எனப்படும் மாயாவாதிகள்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

*தொழிற்படும் கருவிகள் ஒன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத்தையில் இருக்கும்போது அறியமாட்டாமல், பின்னே கலை முதலிய கருவிகளால் அறிவிக்க அறிவதனுல் எக்காலத்தும் மாறுபாடின்றி அறிந்தவண்ணமே அறிந்து நிற்கும் சித்தாகிய பிரமத்துக்கு வேறாய் உணர்த்த உணர்வதாகிய ஆன்மா உண்டு.*

5. இயைபு:

## உதாரணவெண்பா—6

**அறிந்தும் அறிவதே யாயும் அறியா**
**தறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த**
**தெதுவறிவு மன்றுகும் மெய்கண்டா னென்றின்**
**அதுவதுதான் என்னு மகம்.**

### இதன் பொருள்

*அறிந்தும் அறிவது ஆயும் அறியாது*—(கருவிகள் எல்லாவற்றோடும் கூடிச் சாக்கிரத்தானத்தில் நின்று விடயங்களை அறியுமிடத்தும் ஒருங்கேஅறியமாட்டாது) ஒன்றினையே அறிந்தும் ஒன்றினை அறியப் புகுவதாயும் முன் அறிந்த தொன்றினை அறியாதொழிந்தும், — *அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி* — இவ்வாறு ஒவ்வொன்றாக அறிந்த விஷயத்தையும் விடாதறிய மாட்டாது விட்டுவிட்டு ஐந்தவத்தைப்பட்டு அடங்கி,— *அறிந்தது எது* — (மீள அறிந்து வருதல் பிரத்தியட்சமாகக் காணப்படுதலான் அவ்வாறு) அறிந்துவந்த பொருள்யாது? (அது சடமன்று என்பது முன்னே காட்டப்பட்டது) — *அறிவும் அன்று* — இயல்பாக உணரும் பேரறிவும் அன்று,— *மெய் கண்டான் ஒன்றின்* — இனி மெய்யாகிய சித்தாந்த நெறியினை உணர்ந்தோன் பின் யாதென்று மனம் ஒருங்கி ஆராயின்,— *அது அது தான் என்னும் அகம் ஆகும்* — (காட்டும் ஒளிக்கு வேறாகிய கண்ணொளி போல அவ்வறிவிற்கு வேறாய்) அதுவதுவே தானென (ச்சார்ந்த வண்ணமாய்) நின்று அறியும் இயல்பை யுடைய உயிராம் என்றவாறு.

அறிந்தும் அறிவதேயாயும் என்னும் உம்மைகள் எண்ணும்மைகள். அறியாது என்பதில் எண்ணும்மை விகாரத்தாற் றொக்கது.

## ஏழாமதிகரணம்

### மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது

(இ–ள்) மாயா காரியங்களால் ஆக்கப்பட்டுச் சூத்திரப் பாவை போல் உள்ள உடம்பின்கண்ணே அம் மாயா காரியங்கள் யாவும் கூடிய சமுதாயத்திற்கு வேறாய் உயிருண்டு என்றவாறு. இதில்,

1. தன்னூற்கூறப்படும்பொருள்:

மாயாகாரியங்கள் அனைத்தும் கூடிய சமுதாயத்திற்கு வேறாய் உயிருண்டு.

2. ஐயப்பாடு:

ஆன்மா அனைத்தும் கூடிய சமுதாயமேயோ? அதனின் வேறோ?

3. பிறர்கூறும் பக்கம்:

உடம்பு முதலியவற்றுள் ஒவ்வொன்றே (முற் கூறியவாறு) ஆன்மாவன்று என்பது ஒக்கும். அவற்றுள் ஒன்று குறைந்தாலும் அறிவு நிகழாமையாலும் அவையெல்லாம் கூடியபோது அறிவு நிகழ்தலாலும் அவையாவும் கூடிய சமுதாயமே உயிராகும்.

இது சமூகான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர், வைபாடிகர் பக்கம். இவர்கள் சகம் முழுவதும் அகச் சமுதாயம் புறச்சமுதாயம் என்னும் இவ் விரண்டினுள் அடங்கும் என்பர். புறச்சமுதாயம்—நிலம் முதலாயின. இவற்றின் காரணம் பரமாணுக்கள். அவை: நிலவணு நீரணு தீயணு வளியணு என நால்வகைப்படும். அவை பல ஒன்றுகூடியபோது புறச்சமுதாயம் தோன்றும். அகச்சமுதாயம் — சித்தமும் சித்தப் பகுதியுமாம். அவற்றிற்குக்காரணம் உருவம் வேதனை ஞானம் குறி வாசனை என்னும் ஐவகைப்பட்ட கந்தம் அதாவது சமுதாயமாம்.

## 4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

உருவகந்தம், வேதனகந்தம், ஞானகந்தம், குறிக்கந்தம், வாசனகந்தம் என்னும் ஐந்துகந்தம் எனக் கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மா எனப் பெயர்பெறாது வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலால் கலைமுதல் பிருதிவி ஈறாக விரிந்திருக்கும் தத்துவங்களாகிய மாயாகாரியங்களால் ஆக்கப்பட்டுச் சூத்திரப்பாவை போலுள்ள உடம்பின்கண்ணே அவ்வுருவக்கந்தம் முதலியவற்றின் சமுதாயத்திற்கு வேறாய் உயிர்உண்டு.

## 5. இயைபு:

### உதாரணவெண்பா—7

**கலையாதி மண்ணந்தம் காணிலவை மாயை**
**நிலையாவாம் தீபமே போல—அலையாமல்**
**ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்**
**தானத்தின் வேருகும் தான்.**

## இதன்பொருள்

காணின் கலை ஆதி மண் அந்தம் ஆம் — சமுதாயம் என்பவை யாவை என்று ஆராய்ந்து பார்க்கில் அவை கலை முதல் நிலம் ஈறாகிய தத்துவங்களேயாம், — அவை மாயை நிலையாவாம் — அவை யெல்லாம் மாயையின் காரியங்களாதலால் நிலைத்தலின்றிச் சில காலம் நின்று அழிவனவாம்,— ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில் — அவையாவும் கூடிய சமுதாயத்தின் விளங்கித் தோன்றும் ஞானத்தின் இயல்பை அசையாமல் கருத்தை ஒருக்கி முன் உணர்ந்து பின் அச் சமுதாயத்தை யாது என்று ஆராயின்,— அது தீபமே போல தனு ஆம்—அச் சமுதாயம் கண்ணுக்கு விளக்குப்போல் உயிருக்குத் தூல சூக்கும பரங்களாகிய உடம்பாம்,— தான் அத்தின் வேறு ஆகும் — (ஆதலால், கண் விளக்கின் வேறு ஆயினாற்போல) உயிர் அவ் வுடம்பின் வேறும் என்றவாறு.

அதனின் என்பது அத்தின் என மருவியது.

## மூன்றும் சூத்திரத் தொகைப்பொருள்

சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுதாயான்மவாதி என்னும் எழுவரும் முறையே சூனியம் தேகம் இந்திரியம் சூக்குமதேகம் பிராணன் விஞ்ஞானம் சமுதாயம் என்பவற்றை ஆன்மா என்று கூறிய கூற்றுக்களை மறுத்து ஆன்மா அவைகளுக்கு வேறும் என்று சாதிக்கப்பட்டது.

*இச்சூத்திரப்பொருளை விளக்கவே தாயுமான சுவாமிகள்:*

"பாராதி பூதநீ யல்லை — உன்னிப்
பாரிந் திரியங் கரணநீ யல்லை
ஆரா யுணர்வுநீ யென்றான் — ஐயன்
அன்பா யுரைத்தசொல் ஆனந்தம் தோழி
சங்கர சங்கர சம்பு."

*என்று அருளிச் செய்தனர்.*

**மூன்றுஞ்சூத்திரம் முடிந்தது.**

**பிரமாணவியல் முற்றிற்று.**

---

# நான்காஞ்சூத்திரம்

## பொதுவியல்பு – இலக்கணவியல்

## நான்காஞ்சூத்திரம்

அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

### அந்நுவயம்

*ஆன்மா அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று. சகசமலத்து உணராது அமைச்சு அரசு ஏய்ப்ப அவை சந்தித்தது நின்று அஞ்சு அவத்தைத்து.*

### இதன்பொருள்

*ஆன்மா அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று— ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கினுள் ஒன்றன்று,—(ஆயினும்) சகசமலத்து உணராது—சகசமலத்தினால் உணர்வின்றி,—*

அமைச்சு அரசு ஏய்ப்ப — மந்திரிமாரோடு கூடிய அரசனைப்போல்,—அவை சந்தித்தது நின்று அஞ்சு அவத்தைத்து—அவ்வந்தக்கரணங்களோடு கூடிநின்று (சாக்கிர முதலிய) ஐந்து அவத்தையுடைத்தாம் என்றவாறு.

பிரமாணம் இலக்கணம் என்னும் இரண்டாலும் பதி பசுபாசங்களின் உண்மையைச் சாதிக்கவேண்டும் என்னும் முறைமையால் முதல் மூன்று சூத்திரங்களில் அநுமானப்பிரமாணத்தால் முறையே பதி உண்மையையும், பாச உண்மையையும் பசு உண்மையையும் சாதித்து அவற்றின் இலக்கணம் கூறத்தொடங்கி மூன்றும் சூத்திரத்தால் சாதிக்கப்பெற்ற பசுவின் இலக்கணத்தை இச்சூத்திரத்திற் கூறுகின்றார்.

ஆன்மா அந்தக்கரணங்கள் நான்கினுள் ஒன்றன்று ஆயினும் சகசமலத்தால் தனக்கு நுண்ணுணர்வு இல்லாமையினால் அரசன்மந்திரிகளோடு கூடித் தன் தொழிலைச் செய்வதுபோல், துணையாகிய அக்கரணங்களோடு கூடிநின்று, சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளையுடையதாம். அவ்வாறுநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக்குத் தடத்த இலக்கணமாம்.

"செம்பிற் களிம்புபோல் ஆணவம் ஆன்மாவைப் பற்றியிருத்தலால் அது சகசம் எனப்பட்டது" என்று சிவாகமம் கூறுகின்றது.

ஆன்மா என்னும் சொல் வியாபகம் எனவும், சித்தசித்து. எனவும் பொருள்படும்.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்

1. (ஆன்மா) அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று.

2. ஆன்மா சகசமலத்து உணராது (அமைச்சு அரசு ஏய்ப்ப) அவை சந்தித்தது.

3. (ஆன்மா) அமைச்சரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினலன்றித் தொழில் இல்லாத படியினலே, அந்தக்கரணங்களுக்குவேருய் உயிர்உண்டு.

2. மலமறைப்பால் உயிருக்கு அறிவில்லை.

3. உயிர்மூன்றவத்தைப்படும்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. சண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனே புத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது. அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

2. இனி இவ்வான்மாச் சகசமலத்தினல் உணர்வின்று என்றது. அது தான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடுநிற்றலான்.

3. இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனைய் நிற்கும் என்றது. அது தான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

## இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் ஏழு.

# முதலதிகரணம்

ஆன்மா அந்தக்கரணமவற்றின் ஒன்றன்று.

(இ–ள்) ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம், சித்தம் என்னும் நான்கினுள் ஒன்றன்று என்றவாறு. இதில்,

1. தன்னாற் கூறப்படும் பொருள்:

அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

2. ஐயப்பாடு:

உயிர் அந்தக்கரணங்களேயோ? அவற்றின் வேறோ?

3. பிறர்கூறும்பக்கம்:

முற்கூறியவாறுதேகம், இந்திரியம் முதலியன எல்லாம் வெவ்வேறு பெயர் பெற்றிருத்தலால் அவை உயிராகா. அந்தக்கரணமாகிய சிந்தையைச் சீவன் என்றும், சீவனைச்சிந்தையென்றும் வழங்கி வருதலால் அந்தக்கரணங்கள் தனித்தனி ஆன்மாவாம்.

இது அந்தக்கரணான்மவாதிகள் பக்கம்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

அந்தக்கரணங்களானவை தம்மை நோக்கி அசித்தாகவும், தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாகவும் இருக்கும். ஆன்மா அவ்வாறன்றித் தன்னை நோக்கியும் சித்தாயிருக்கும். ஆதலால், ஆன்மா என்பது அந்தக்கரணங்களாகிய மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று.

உயிரோடுகூடி ஐம்பொறிகள் அறிந்த விடயங்களுள் ஒன்றை இதுயாது? எனச் சித்தம் சிந்தித்தறியும்: அச்சித்தம் தான் அவ்வாறு அறிந்ததை அறியமாட்டாது. மனமானது அவ்விடயத்தை இன்னது எனச்சங்கற்பிக்கும். அன்றியும், அது இன்னதாமோ? அன்றோ? எனவிகற்பமும்செய்யும்: அவ்வாறு தான் சங்கற்ப விகற்பம் செய்ததை அறியமாட்டாது. அகங்காரம் அவ்விடயத்தை யான் இன்னது எனத்துணிவேன் என்று ஒருப்பட்டு எழுந்து அறியும்: தான் ஒருப்பட்டு எழுந்ததை அறியமாட்டாது. புத்தி அதனை இன்னது இது என நிச்சயித்தறியும்: தான் நிச்சயித்ததை அறியாது. ஆனல், ஆன்மாவானது அவற்றோடு கூடி அது அதுவாய் இருந்து சிந்தித்தும், பற்றியும், எழுந்தும், நிச்சயித்தும் அறிவதோடு தான் சிந்தித்ததையும் பற்றியதையும் எழுந்ததையும் நிச்சயித்ததையும் அறியும் ஆதலால், தன்னை நோக்கியும் சித்துப்பொருளாயிருக்கும் ஆன்மா, தன்னை நோக்கச் சித்துப்பொருளாகாத அந்தக்கரணங்களுக்கு வேறும்.

சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரணன்மவாதி, சூக்கும தேகான்மவாதி, பிராணன்மவாதி, விஞ்ஞானன்மவாதி, சமூகான்மவாதி என்னும் எண்மருள் அந்தக்கரணன்மவாதிகள் ஒழிந்த மற்றை எழுவரும் பிரமாண இயலாகிய மூன்றும் சூத்திரத்தில் மறுக்கப்பட்டு, இலக்கண இயலாகிய நாலாஞ்சூத்திரத்தில் அநுவாதமுகத்தால் அந்தக்கரணன்மவாதிகள் மறுக்கப்பட்டனர்.

5. இயைபு:

## உதாரணவெண்பா—1

**மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்**
**மனமாதி மன்புலனி னல்லன்—மனமேல்**
**உதித்தொன்றை யுள்ள முணர்த லதனின்**
**உதிக்கும் கடற்றிரையை யொத்து.**

### அந்நுவயம்

*மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள். உள்ளம் உணர்தல் மனமேல் உதித்த ஒன்றை. கடற்றிரையை ஒத்து உதிக்கும். அதனின் மனம் ஆதி புலனின் அல்லன்.*

### இதன் பொருள்

*மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள்— மனம் முதலிய அந்தக்கரணங்களால் உணரப்படுவன ஐம்பொறிகளால் தரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம்,— உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை — ஆன்மா உணர்வது மனத்துக்கு மேல் எனப்படும் புத்தியில் தோன்றியது ஒன்றனை ஆம்,—கடல் திரையை ஒத்து உதிக்கும் — அவ்விரு வேறு உணர்வும் கடலிடை எழுந்து கரைசாரும் திரை போல் (பரம்பரையின் ஆன்மாவிடத்தில்வந்து) தோன்றும்,—அதனின் மனம் ஆதி புலனின் அல்லன்— அதனாலே மனம் முதலியன அவ்விடயங்களின் வேறு யினாற்போல ஆன்மாவும் அம்மனம் முதலியவற்றின் வேறாம் என்றவாறு.*

மன் அசை. புத்தியில் தோன்றியதொன்றுவது சுகதுக்க மோகரூபவிடயம்.

ஐம்பொறியும் புத்தியும் கடலுக்கும், அவ்விரு வேறு உணர்வும் திரைக்கும், ஆன்மா கரைக்கும் உவமிக்கப்பட்டன.

பரம்பரையில் தோன்றுதலாவது முன்னர் வாயிற்காட்சி உணர்வு தோன்றி, அதன்பின் மானதக் காட்சி உணர்வு தோன்றி, அதன்பின் தன்வேதனைக் காட்சியுணர்வு உயிரினிடத்தே வந்து தோன்றுதல். இவற்றுள் வாயிற் காட்சியாவது புறத்துள்ள சத்த பரிசரூபரச கந்தங்கள் ஐம்பொறிகளால் அறியப்படுதல். மானதக்காட்சியாவது ஐம்பொறிகளால் அறியப்படும் சத்தாதிவிடயங்கள் மனம் முதலிய அந்தக்கரணங்களால் அறியப்படுதல். தன்வேதனைக் காட்சியாவது அந்தக்கரணங்களுள் மனத்துக்குமேலாய் புத்தியில் தோன்றியவைகள் ஆன்மாவினால் உணரப்படுதல்.

### உதாரணவெண்பா — 2

**சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறும்
அவ்வேறும் போதுபோல் ஆங்கு.**

### அந்நுவயம்

உள்ளம் ஆங்கு சித்தமாய்ச் சிந்தித்து, மனமாகிப் பந்தித்து, ஆங்காரமாய்த் தெளியாது, புந்தியாய் ஆய்ந்து, வெவ்வேறே துணிந்து இவ்வேறும். போது அவ்வேறும் போல்.

## இதன் பொருள்

உள்ளம் — புருடதத்துவம் எனநின்ற உயிர்,— ஆங்கு—வாயிற்காட்சியாற்கண்ட சத்தாதி விடயங் களுள் ஒன்றை மனம் முதலிய கரணங்களால் உணரும் மானதக்காட்சியினிடத்தும் (ஒரு தன்மைத்தாய் இராமல்),—சித்தம் ஆய் சிந்தித்து—சித்தமாய்நின்று இதுயாது எனச் சிந்தித்தும்,— மனம் ஆகி பந்தித்து— அதன் பின் மனமாய்நின்று இது இன்னது எனப் பற்றியும்,— ஆங்காரம் ஆய் தெளியாது — அதன்பின் அகங்காரமாய்நின்று இஃது ஆமோ? அன்றோ? இதனை இன்னதெனத் தெளிவேன்யான் எனத்தெளிவு பிறவாது எழுந்தும்,— புந்தி ஆய் ஆய்ந்து — அதன் பின் புத்தியாய் நின்று இஃது இன்னது எனத் தெளிந்தும்,—வெவ்வேறே துணிந்து இவ்வேறு ஆம்— இங்ஙனம் வெவ்வேறாகவே உணர்தலால் அவ்வாறு உணரும் புருடன் இவ்வந்தக்கரணங்களின் வேறாம்,— (எதுபோல் எனில்) போது அவ்வேறு ஆம் போல்— (ஞாயிறு முதலியவற்றோடு கூடிநின்று நாழிகை நாள் பக்கம் மாதம் வருடம் முதலிய பாகுபாடுகளைச் செய் யும்) காலதத்துவம் (அஞ்ஞாயிறு முதலியவற்றின்) வேறாயினாற்போல என்றவாறு.

### உதாரணவெண்பா—3

அகார வுகாரம் அகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடின் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று.

### அந்நுவயம்

*அகார உகாரம் அகங்காரம் புத்தி. மகாரம் மனம். விந்து சித்தம். நாதம் உளவடிவாம். இவற்றைப்பகாது நாடில் பிரணவமாம். போதம் கடற்றிரையே போன்று ஆம்.*

### இதன் பொருள்

*அகார உகாரம் அகங்காரம் புத்தி—அகாரம் அகங்காரத்துக்கும் உகாரம் புத்திக்கும் சொரூபமாம்—மகாரம் மனம்—மகாரம் மனத்துக்குச் சொரூபமாம்,—விந்து சித்தம்—விந்து சித்தத்துக்குச் சொரூபமாம்,—நாதம் உள வடிவாம்—நாதம் ஆன்மாவுக்குச் சொரூபமாம்,—இவற்றை — அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் என்னும் இச் சூக்கும பஞ்சாக்கரங்களை,—பகாது நாடில் பிரணவம் ஆம்—பகுக்கப்படாது நிற்கும் போது ஆராயில் பிரணவமாம்,— போதம் கடல் திரையே போன்று ஆம்—இவை கூடின அவசரத்தில் கடலினிடத்து அலை எழுந்தாற் போல் ஆன்மா விடத்தில் அறிவுண்டாம் என்றவாறு.*

### உதாரணவெண்பா — 4

**எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்**
**நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்**
**பகரயன்மா லோடு பரமனதி தெய்வம்**
**அகரவுக ரம்மகரத் தாம்.**

### அந்நுவயம்

*எண்ணிலவு ஓங்காரத்து நண்ணிய விந்துவொடு நாதத்து அதிதெய்வம் கண்ணில் ஈசர் சதாசிவம் ஆம்.*

அகர உகர மகரத்து (அதிதெய்வம்) பகர் அயன் மாலோடு பரமன் ஆம்.

## இதன்பொருள்

எண்ணிலவு ஓங்காரத்து நண்ணிய—சூக்குமபஞ்சாக்கரங்களின் உருவமாக எண்ணப்படும் பிரணவத்திற் பொருந்திய,—விந்துவொடு நாதத்து அதிதெய்வம்—விந்துவுக்கும் நாதத்துக்கும் அதிதெய்வம்,—கண்ணில்—கருதில்,—ஈசர் சதாசிவம் ஆம்—முறையே மகேசுரரும் சதாசிவரும் ஆம்,— அகர உகர மகரத்து அதிதெய்வம்—அகார உகார மகாரங்களுக்கு அதிதெய்வம்,— பகர் அயன் மாலோடு பரமன் ஆம்—முறையே (சுத்த வித்தியாதத்துவத்தில் வைகுவார் என்று) சொல்லப்படும் பிரமனும் மாலும் உருத்திரருமாம் என்றவாறு.

இவ்விருவெண்பாக்களும் அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் என்னும் இவ்வைந்தும் சடமாதலால் இவைகளைக் கருவியாகக்கொண்டு ஆன்மா எவ்வாறு அறிதலைச் செய்யும்? எனின், அக்கருவிகளுள் அகங்காரத்திற்கு அகாரமும், புத்திக்கு உகாரமும், மனத்திற்கு மகாரமும், சித்தத்திற்கு விந்துவும், உள்ளத்திற்கு நாதமும் என்கின்ற எழுத்துக்கள் உடன்னின்று செலுத்துவதால் அறிதலைச் செய்யும் எனவும், எழுத்துக்களும் சடமாதலால் அவை எப்படி அறிதலைச் செய்யும்? எனின், அவைகளை முறையே பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனும் மகேசுரரும் சதாசிவரும் ஆகிய ஐவரும் அதிதெய்வங்களாக நின்று செலுத்துவர் எனவும், இவ்வாறு கரணமும் அக்கரமும்அதிதெய்வமு

மாகிய முக்திறத்துப் பதினெந்தோடும் ஆன்மா பொருந்திய இடத்து அறிதற்றொழிலைச் செய்யும் எனவும் விளக்கியவாறும்.

யோகப்பயிற்சி யுடையோர்க்கே இவ்வுண்மை இனிது விளங்கும். இதனை,

"வளியிரண்டும் தவிர்த்துநிற் றனும் தோன்றும்"

என்னும் சிவஞான சித்தியால் அறிக.

## இரண்டாமதிகரணம்

ஆன்மா சகசமலத்துணராது (அமைச்சரசேய்ப்ப) அவை சந்தித்தது.

(இ-ள்) ஆன்மா சகசமலத்தினுல் உணர்வின்றி (நுண்ணுணர்வில்லாமையால் அரசன் இராச காரியங்களை அறிதற்கு மந்திரிமாருடன் கூடியிருத்தல்போல்) அவ் வந்தக் கரணங்களோடு கூடியது என்றவாறு.

இதனுல் உயிர் அந்தக்கரணங்களோடு கூடியிருத்தற்குக் காரணம் சொல்லப்பட்டது.

மலங்கள் மூன்றனுள் ஆணவமலம் (செம்பினிடத்துக் களிம்பு உடனாய் நிற்றல் போல்) காரணமின்றி ஆன்மாவுடன் அநாதியாகவே உடனாய் (அத்துவிதமாய்) நிற்றலால் சகசமலம் எனப்பட்டது. ஆணவ மலத்தால் அறிவு தடைப்பட்டுநின்ற ஆன்மாவின் அறிவை விளக்கும் பொருட்டு இறைவர் மாயாமலத்தையும் கன்ம மலத்தையும் கூட்டுதலால் இவ்விரண்டு

மலங்களும் ஆகந்துகமலங்கள் எனப்பட்டன. ஆகந்துகம்—இடையில்கூடுவது. ஆணவமலத்திற்கும் மாயை கன்ம மலங்களுக்கும் இடையிலுள்ள இவ்வேற்றுமையை உணர்த்தி, ஆணவமலத்தை வேறுபிரித்தற்கு ஆணவமலத்துணராது என்னாது சகசமலத்துணராது என்று விசேடிக்கப்பட்டது.

இவ்வதிகரணத்தால் பிரமாணவியலில் முதற்சூத்திரத்தில் உண்டெனச் சாதித்த ஆணவமலத்தின் இலக்கணமும் கூறியவாறும்.

சகசமலம் எனப்படும் ஆணவமலத்தின் இலக்கணம்:— இது ஞானநிரோதகமாய் (அதாவது உயிரின் அறிவை மறைப்பதாய்) செம்புள்ளபோதே அதனோடு களிம்பாகிய குற்றம் இருப்பது போல் வேறுகாரணமின்றி உயிருள்ள அன்றே அதனோடு உடனாய் நிற்கும் குற்றமாய், இருள் பலகண்களை மறைத்தும் தான் ஒன்றாய் இருப்பதுபோல் எண்ணிறந்த உயிர்களோடுகூடி அவற்றின் அறிவு இச்சை செயல்களை மறைத்துக்கொண்டிருந்தும் தான் ஒன்றாயிருப்பதாய், உயிர்களை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனமுத்திறப்படுத்துவதாய், உயிர்கள் தோறும் தனித்தனி வெவ்வேறாய் மறைந்து நின்று தத்தம்கால எல்லையில் நீங்குவனவாகிய பலவேறு சத்திகளையுடையதாய், உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்றவத்தைகளை அடைதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகமாகிய உயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவம் எனவும், உயிருக்குப் பசுத்துவத்தைச் செய்தலின் பசுத்துவம்

எனவும், உயிரின் அறிவை மறைத்தலால் பசுங்காரம் எனவும், உயிரைச் சீவிக்க வொட்டாது செய்தலால் மிருத்தியு எனவும், மயக்கிக் கிடக்கச் செய்தலால் மூர்ச்சை எனவும், அசுத்தமாக்கலால் மலம் எனவும், இருள் போல் நிற்றலால் அஞ்சனம் எனவும், அறியாமையைச் செய்தலால் அவித்தை எனவும், உயிரை மறைத்தலால் ஆவிருதி எனவும் பல பேர்களைப் பெற்றது.

இவ்வதிகரணத்தில் :—

1. தன்னுற் கூறப்படும் பொருள்:

ஆன்மா அந்தக்கரணங்களைக் கொண்டு அறியும்.

2. ஐயப்பாடு :

ஆன்மா தானே அறியுமோ? அந்தக்கரணங்களைக் கொண்டு அறியுமோ?

3. பிறர்கூறும் பக்கம்:—

ஆன்மா அந்தக்கரணங்களின் வேறாய அறிவுப் பொருளாயின் அதற்கு அவ்வந்தக் கரணங்களின் துணை வேண்டுவதில்லை.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

ஆன்மா அறிவுப் பொருளாயினும், தன்னோடு அநாதியே உடனாய்நிற்கும் ஆணவமலத்தால் தானே அறியமாட்டாமல் அந்தக்கரணங்களைக் கொண்டு அறிவதாயிற்று.

5. இயைபு:

### உதாரணவெண்பா — 5

**மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல்**
**ஆயாதா மொன்றை அதுவதுவாய்—வீயாத**
**வன்னிதனைத் தன்னுள் மறைத்தொன்றும்**
**தன்னைமல மன்றணைதல் தான். [காட்டம்போல்**

இதன்பொருள்

*உள்ளம்—உயிரானது,— மாயா தனு விளக்கு ஆ காணுதேல் ஒன்றை ஆயாது — மாயாகாரியமாகிய உடம்பைத் தனக்கு விளக்காகக் கொண்டு காணுதாயின் ஒன்றையும் அறியாது,— மற்று மலம் தன்னை அன்று அணைதல் — சகசமலம் உயிரை அநாதியே பற்றி நிற்றல்,— அது அது வீயாத வன்னிதனை—அதுவது வாய் நின்றும் தனக்குக் கேடில்லாத அக்கினியை,— தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம் போல் — தனக்குள் மறைத்துவைத்து ஒன்றேயாய்நிற்கும் விறகைப் போலும் என்றவாறு.*

*அக்கினி அதுவதுவாய் நிற்றலாவது விறகினுள் மறைந்து நின்றபோது அவ்விறகேயாயும், சூரியகாந்தத்தில்மறைந்துநின்றபோதுஅச்சூரியகாந்தமேயாயும்,இவ்வாறேவேறு பொருள்களில் மறைந்த விடத்து அவ்வப் பொருளேயாயும் தான் (அக்கினி) என்பது ஒன்றில்லை என்னும்படிநிற்றல். அக்கினியானது விறகு முதலிய வற்றில் அது அதுவாய்நின்று கேடில்லாதிருப்பது போல், உயிரானது ஆணவமலத்தில் அதுவாய்நின்று (அதாவது ஆணவமலமேயாய் இருந்து) கேடில்லாதிருக்கும்.*

மாயையும் கன்மமும் ஆணவத்தைப்போல் அநாதியன்று எனக் காலத்தானும் வேற்றுமை யுணர்த்த வேண்டி "அன்றணைதல்" என்றார்.

இதனால் விளக்காய்நின்று விடயங்களை அறியும் வண்ணம் உயிருக்கு அறிவை விளக்குதல் மாயையின் செயல் என்பதும், விடயங்களை அறிய வொட்டாமல் அறிவைத்தடைசெய்து நிற்றல் ஆணவமலத்தின் செயல் என்பதும் கூறப்பட்டது.

ஐக்கியவாதசைவர் முதலியோர் இடையேவந்து கூடிய மாயா மலமே ஞானத்தைமறைக்கும், அதனின் வேறாக ஆணவமலம் என்பதொன்று உண்டென்பது மிகையென்பர். அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சையே ஆணவமலமாம் என்பர் சாங்கியர். உயிரின் குணமே ஆணவமலம் என்பர் பாடாணவாதிகள். ஞானபாவமே (ஞானமில்லாமையே) அதுஎன்பாரும், பிராந்திஞானமே (மயக்கவுணர்வு) அதுஎன்பாரும், தமோ குணமே அது என்பாரும் உளர். இவ்வாணவமலத்திற்குப் பற்றுக்கோடாகிய ஆன்மாவையும் இவ்வாறே தத்தம் மதம்பற்றிச் சடம் என வைசேடிகரும், அறிவு மாத்திரையான குணமே யன்றிக் குணிப்பொருள் அன்றெனச் சாங்கியரும், சுதந்திர அறிவுடையது எனப் பாட்டாச்சாரியரும், எவ்வெவ் வுடம்பைப் பற்றிற்றோ? அவ்வவ் வுடம்பினளவாய் வியாபித்து நிற்கும் எனச் சமணரும், அணுஅளவாயிருப்பதெனப் பாஞ்சராத்திரிகளும், உருவம்எனப் பௌராணிகரும்,

அருவம் எனப் பாதஞ்சலரும், அருவுருவம் எனக்கவுள ரும் இன்னும்பலர் பலதிறப்படவும் கூறிமயங்குவர். அவர் கூறுவன எல்லாம் பொருந்தாமை ஆகமங்களி னும், சிவஞான சித்தியார் முதலிய நூல்களினும் கண்டு தெளிக.

## மூன்றுமதிகரணம்

ஆன்மா அமைச்சரசேய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே.

(இ-ள்) ஆன்மா மந்திரிமாரோடு கூடிய அரசனைப் போல் (அந்தக் கரணங்களோடு கூடி) நின்று ஐந்து அவத்தைகளையுடையதாம் என்றவாறு, இதில்:—

1. தன்னுற் கூறப்படும் பொருள்:

ஆன்மா கருவிகளோடு கூடி ஐந்தவத்தையுறும்.

2. ஐயப்பாடு:

ஆன்மா கருவிகளோடு கூடியபோது ஐந்த வத்தைப்படுமோ? படாதோ?

3. பிறர்கூறும் பக்கம்:

இருளில் அகப்பட்ட கண் விளக்கோடு கூடிய போது விடயங்களைக் காண்டல் மாத்திரமன்றி வெவ் வேறு அவத்தைப்படுதல் இல்லை. அதுபோல் மலத்தில் அகப்பட்ட உயிர் கருவிகளோடு கூடியபோது ஒரு தன்மைத்தாய் அறிதலின்றி, ஐம்புலன் அறிந்தும்,

ஒடுக்கம் அறிந்தும், உண்டிவினையின்றிக் கிடந்தும், உணர்த்த உணர்ந்தும் இவ்வாறு வெவ்வேறு அவத்தைப்படுதல் இல்லை. அன்றியும், ஆன்மா அஞ்சவத்தைப் படுமாயின் அது வியாபகப் பொருளாதல் கூடாது.

இது அந்தக்கரணான்மவாதிகள் பக்கம்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

சகச மலத்தினால் அறிவுதொழிற்படாதிருந்த ஆன்மா கருவிகளோடுகூடி அக்கருவிகளும் தானும் அமைச்சரும் அரசனும் போல் நிற்றலால், மந்திரி முதலிய பரிவாரங்களோடு பவனிசென்ற அரசன் தன் மாளிகைக்குட் செல்லுங்கால் வாயில் தோறும் நிறுத்த வேண்டியவர்களை நிறுத்திக் காவலும் வைத்து அவர்களைப்பிரிந்து அந்தப்புரத்திற் செல்வதுபோல் தத்துவங்களைக் கூடிப்பிரியும். அவ்வாறு கூடிப்பிரியும் முறையில் அவ்வான்மா சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளை அடையும். ஆன்மா மலத்தால் மறைப்புண்டு அவ்வாறு அஞ்சவத்தைப்படினும் தான் அருவுடம்பாகிய தத்துவ சொரூபியாய் இருத்தலால் அதன் வியாபகத்திற்கு இழுக்கில்லை.

5. இயைபு:

உதாரணவெண்பா — 6

**ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபியினில்**
**சென்றணையும் சித்தம் இதயத்து— மன்றவே**
**ஐயைந்தாம் நன்னுதலில் கண்டத்தின் வாக்காதி**
**மெய்யாதி விட்டகன்று வேறு.**

## அந்நுவயம்

நல்நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்தாம். கண்டத்தின் (வாக்காதி மெய்யாதி) விட்டு அகன்று வேறு (ஐயைந்தாம்). இதயத்தில் சித்தம் சென்று அணையும். நாபியினில் உயிர் அணையும். அணையா மூலத்து ஒன்று என இயையும்.

## இதன்பொருள்

நல்நுதலில்—சாக்கிரத்தானம் எனப்படும் இலாடத்தில்,—வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் — வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கன்மேந்திரியம்ஐந்தும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியம் ஐந்தும் ஆகிய புற இந்திரியம் பத்தையும் தேற்றமாகப் பொருந்திய,— ஐ ஐந்து— சத்தம் பரிசம் ரூபம் இரசம் கந்தம் என்னும் சத்தாதி விஷயம் ஐந்தும், வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் வசனாதி ஐந்தும், பிராணன் அபானன் வியானன் சமானன் உதானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பிராணாதி வாயுபத்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும், புருடனும் ஆகிய இருபத்தைந்தும்,— ஆம்—(ஆக முப்பத்தைந்து கருவிகளும்) தொழிற்படுவனவாம்,— கண்டத்தின் (வாக்காதி மெய்யாதி) விட்டு அகன்று வேறு ஐயைந்து ஆம் — சொப்பனத்தானம் எனப்படும் கண்டத்தில் வாக்கு முதலிய கன்மேந்திரியம் ஐந்தும் மெய் முதலிய ஞானேந்திரியம் ஐந்தும் தொழிற்படாமல் விட்டு அகல

சத்தாதி விடயம் ஐந்தும் வசனாதி ஐந்தும் அந்தக் கரணம் நான்கும் புருடன்ஒன்றும் பிராணாதி வாயு பத்தும் ஆக இருபத்தைந்து கருவிகளும் தொழிற்படுவனவாம்,— இதயத்தில் சித்தம் சென்று அணையும்— சுழுத்தித்தானமாகிய இருதயத்தில் சித்தம் பிராணன் புருடன் என்னும் மூன்றுகருவிகளும் தொழிற்படும்,— நாபியினில் உயிர்அணையும் — துரியத்தானமாகிய உந்தியில் பிராணவாயு புருடன் என்னும் இரண்டும் தொழிற்படும்,— அணையா மூலத்து ஒன்று எனஇசையும் — இக்கருவிகள் ஒன்றும் அணையாத துரியாதீதத் தானமாகிய மூலாதாரத்தில் புருடன் ஒன்றே தொழிற்படும் என்றவாறு.

இவ்வாறு துரியாதீதத்திலே மலத்தோடுமாத்திரம் சம்பந்தப்பட்டு அறிவின்றிப் புருடன் நிற்பது கேவலாவத்தை எனப்படும்.

## உதாரணவெண்பா — 7

**இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்**
**இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்—இலாடத்தே**
**அவ்வவ இந்திரியத் தத்துறைகள் கண்டதுவே**
**அவ்வவற்றின் நீங்கலது வாங்கு.**

## இதன்பொருள்

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்— இலாடத்தானத்தில் வந்து சாக்கிரத்தை அடைந்த புருடன்,— (அஃதாவது சாக்கிரத்தானமாகிய இலாடத்திலிருந்து கீழ்நோக்கிக், கண்டத்தையுற்றுச்

சொப்பனவத்தையடைந்தும், இதயத்தையுற்றுச் சுழுத்தியவத்தை யடைந்தும், உந்தியையுற்றுத் துரியா வத்தை யடைந்தும், மூலாதாரத்தையுற்றுத் துரியாதீத அவத்தை யடைந்தும்; பின் மூலாதாரத்தினின்றும் மேல் நோக்கி முறையே அவ்வத்தானத்தில் துரியம் சுழுத்தி சொப்பனம் என்னும் அவத்தைகளை அடைந்து மீண்டும் இலாடத்தானத்தையுற்றுச் ; சாக்கிராவத்தையை அடைந்த புருடன்) இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும்—அவ்விலாடத்தானத்திலும் (சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில்சொப்பனம், சாக்கிரத்தில்சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் என்னும்) ஐந்து அவத்தைகளை அடையும்,-

இலாடத்தே அவ்வவ இந்திரியத்து அ துறைகள் கண்டு—இலாடத்தானத்தில் (அவ்வாறு ஐந்து அவத்தைகளை அடையும்போது) அவ்வப்பொறிகளால் அவ்வவ் விடயங்களையுணர்ந்து,– அதுவே–அப்போதே,— அவ்வவற்றின் நீங்கல்—அவ்வவ் விடயங்களின் நீங்குதலாம்,—அது ஆங்கு — இனி வரும் சூத்திரங்களில் கூறப்படும் சுத்தாவத்தையும் இவைபோல் நின்மல சாக்கிரம் நின்மலசொப்பனம் நின்மலசுழுத்தி நின்மலதுரியம் நின்மலதுரியாதீதம் என ஐந்து வகைப்படும் என்றவாறு.

மேல்நோக்கிச் செல்லுங்கால் அவ்வத்தானத்தில் உண்டாகும் அவத்தைகட்கும், கீழ்நோக்கிச் செல்லுங் காற்படும் அவத்தைகட்கும் வேற்றுமையில்லாமையால் இவைகளை வகுத்துக் கூறுவதொழித்து 'இலாடத்தே

சாக்கிரத்தை எய்திய உள்ளம்' என்று கூறியருளினர். அவ்வவ இந்திரியம் — அவ்வத்தானத்தில் விடயித்தற் குரிய இந்திரியம். அவ்வவ்விடயம்–அங்கங்கே புலனுதற்குரிய விடயம்.

இலாடத்தானத்தில் அவ்வப்பொறிகளால் அவ்வவ் விடயங்களை உணர்ந்து அவற்றின் நீங்குதலாவது சாக்கிரத்திற்சாக்கிரம் முதலிய ஐந்தவத்தையினும் ஆன்மா அந்தக்கரணங்கள் வாயிலாக அவ்வப் பொறிகளால் அவ்வவ் விடயங்களை உணர்ந்து அவ்வப்போது அவ்வவ் விடயங்களினின்றும் நீங்குதல்.

ஆன்மாக்களுக்குக் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று மூல அவத்தைகள் உண்டு. இவற்றுள், கேவலாவத்தை யாவது:— ஆன்மாக்கள் சர்வசங்கார காலத்துச் சுத்தமாயா காரணத்திலே ஒடுங்கிச், சிருட்டி காலம் அளவும் ஆணவமலத்தால் மறைப்புண்டு, கலையாதி தத்துவங்களோடும் கூடாமல், அறிவும் செயலும் இழந்துகிடக்கும்நிலை. சகலாவத்தையாவது:— சிருட்டி தொடங்கிச் சர்வசங்காரகாலமளவும் ஆன்மாக்கள் முப்பத்தாறு தத்துவங்களோடு கூடி எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிபேதங்களிலும் பிறந்திறந்து உழலும் நிலை. சுத்தாவத்தையாவது:— கேவல சகலாவத்தைகளை அடைந்து பிறந்திறந்து உழலும் அவசரத்தில் இருவினையொப்பும் மலபரிபாகமும் அடைந்து திருவருளோடு கூடியிருக்கும் நிலை.

ஆன்மா கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூலாவத்தை ஒவ்வொன்றிலும் சாக்கிரம் முதலிய ஐந்து

அவத்தைகளையும் அடையும். இம்முத்திறத்து ஐந்த வத்தைகளுள் ஆன்மா இலாடத்தானம் முதல் மூலா தாரம் வரையிலும் இருந்து சாக்கிரம் முதல் துரியா தீதம் ஈறான ஐந்தவத்தைகளைப் பொருந்தும்நிலை சகலத்திற்கேவலம் எனப்படும். இலாடத்தானத் திலிருந்து சாக்கிரத்திற் சாக்கிரம் முதல் சாக்கிரத்தில் துரியாதீதம் வரையிலும் உள்ள ஐந்து அவத்தைகளை அடையும்நிலை சகலத்திற்சகலம் எனப்படும். நின்மல சாக்கிரம் முதல் நின்மலதுரியாதீதம் வரையிலும் உள்ள ஐந்தவத்தைகளை அடையும் நிலை சகலத்திற் சுத்தம் எனப்படும். இவை முறையே கீழாலவத்தை, மத்தியால வத்தை, நின்மலாவத்தை எனவும்படும்.

கீழாலவத்தையில் ஆன்மாவைக் கூடிநிற்கும் கருவி கள் இதற்குமுன் வெண்பாவுரையில் கூறப்பட்டன.

மத்தியாலவத்தையாகிய சாக்கிரசாக்கிரத்தில் சிவ தத்துவம் முதல் சுத்தவித்தியாதத்துவம் இறுதியாகிய ஐந்துகருவிகளும், சாக்கிர சொப்பனத்தில் சிவதத் துவம் முதல் ஈசுரதத்துவம் இறுதியாக நான்குகருவி களும், சாக்கிர சுழுத்தியில் சிவதத்துவம் முதல் சாதாக்கியதத்துவம் இறுதியாக மூன்றுகருவிகளும், சாக்கிரதுரியத்தில் சிவதத்துவம் சத்திதத்துவம் என்னும் இரண்டுகருவிகளும், சாக்கிரதுரியாதீதத்தில் சிவதத்துவம் என்னும் ஒரு கருவியும் கலாதிகளைச் செலுத்தி நிற்கும்.

நின்மலாவத்தையுள் நின்மலசாக்கிரமாவது ஆசாரியராலே ஞானதீக்கைபெற்று, திரிபதார்த்த

வுண்மை அறிந்து, சிந்தித்துத்தெளிந்து, கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது. நின்மலசோப்பனமாவது கருவிகள்நீங்கியும் நீங்காமலும் நடுவே சற்றுப்பதைப் புண்டாவது. நின்மலசுழுத்தியாவது தத்துவம் நீங்கி மேலானகேவலம் தானாய் நிற்பது. நின்மலதுரியமாவது கேவலம் நீங்கி அருளினாலே தன்னையும் கண்டு அருளையும் கண்டு அவ்வசமாய்நிற்பது. நின்மல துரியாதீதமாவது சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத்து அழுந்துதல்.

## நான்காம் சூத்திரத் தொகைப்பொருள்

இச்சூத்திரத்தால் ஆன்மா அந்தக்கரணங்களுள் ஒன்றன்று என்பதும், சகசமலத்தினால் உணர்வின்றி அவ்வந்தக் கரணங்களோடு கூடிஅறியும் என்பதும், அதனால் ஐந்தவத்தைப்படும் என்பதும் விளக்கப்பட்டன.

## நான்காஞ் சூத்திரம் முடிந்தது.

---

# ஐந்தாஞ்சூத்திரம்

# ஐந்தாஞ்சூத்திரம்

**விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்**
**களந்தறிந் தறியா ஆங்கவை போலத்**
**தாம்தம் உணர்வின் தமியருள்**
**காந்தம் கண்ட பசாசத் தவையே.**

## இதன்பொருள்

*விளம்பிய உள்ளத்து — மேலைச் சூத்திரங்களில் கூறிய உயிராலே,— மெய் வாய் கண் மூக்கு — மெய் வாய் கண் மூக்குச் (செவி) என்பன,— அளந்து அறிந்து — தத்தம் விடயங்களை இஃது இன்னதென்று அளவிட்டறிந்தும்,— அறியா — (அவ்வாறு அறியும் தம்மையும் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும்) அறியமாட்டா,—ஆங்கு அவை போல— அவ்விந்திரியங்கள் போல,— தாம்—உயிர்களும்,—தம் உணர்வின் தமி அருள்—,தமது அறிவை விளக்குவ தாகிய முதல்வனது சிற்சத்தியால்,— அளந்து அறிந்து*

அறியா—மேற்கூறியவாறு கிழாலவத்தையிற்படும் அஞ்சவத்தை இலாடத்திற்படும் அஞ்சவத்தை ஆகிய இருவகை அஞ்சவத்தையில் நின்று வினைப்பயன்களை அறிந்து அநுபவிக்கும் தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டா,— அவையே— உயிர்கள் அவ்வாறு உணர்தல்,— காந்தம் கண்ட பசாசத்து—காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதி மாத்திரையின் வலித்துக் கொள்ளப்படுமாறுபோலக் காரணத்தாலன்றிச் சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வன் சந்நிதிமாத்திரையின் ஆம். ஆதலால் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை என்றவாறு.

'செவி' என்பது சொல்லெச்சம். 'ஆதலால் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை' என்பது குறிப்பெச்சம். ஆகலின் உரையில் வருவிக்கப்பட்டன.

மெய் வாய் கண் மூக்குச் செவிகளைக் கூறியது உபலக்கணம் ஆகலின், ஏனைக்கருவிகளும் அவ்வாறே அளந்தறிந்தறியா என்பது கொள்ளப்படும்.

உயிர் விடயங்களை அறியுமிடத்து முதல்வன் உயிருடன் நின்று அறியும்படி செய்வானாயின், உயிர் விடயங்களை அறிவது போல் முதல்வனையும் அறிதல் வேண்டும் என்பாரை மறுத்தற் பொருட்டு அளந்தறிந்து என்று கூறிவிடாமல் 'அளந் தறிந் தறியா' என்று கூறியருளினர்.

உள்ளத்து—உள்ளத்தால்—உயிரால்.

ஆங்கவை—அவ்விந்திரியங்கள்.

தாம் உணர்வின் தமி—தம் அறிவிற்கு வியஞ்சக மாகிய தமது முதல்.

'தமியருள்' என்பது திரோதான சத்தியை. திரோ தான சத்தியாவது உயிர்களுக்கு மறைப்பைச் செய்து போகத்தில் அழுத்தும் அருட்சத்தியின் அவசரம். மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அதனுள் அடங்குவதனுல் திரோதான சத்தியின் இலக்கணம் கூறவே மாயா கன்மங்களின் இலக்கணங் களும் கூறப்பட்டனவாகக் கொள்ளல் வேண்டும்.

மெய் வாய் கண் மூக்குச் (செவி) உள்ளத்தால் அளந்தறிந்து அறியா. அவைபோல, தாம் (அஃதாவது உயிர்கள்) தம் தமியருள் (அஃதாவது தம் முதல்வனது அருளால்) அளந்தறிந்தறியா எனக் கூட்டிப் பொருளுரைத்துக் கொள்க

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்

1. விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்தறியா.

2. ஆங்கவை போலத் தாம் தம் உணர்வின் தமியருள் காந்தம் கண்ட பசாசத்தவையே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும்.

2. அரனுலே உயிர்களெல்லாம் அறியும்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது. அவற்றினுன் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா ஆகலான்.

2. இனி இதுவும் தமது முதலாலே உணரும் என்றது. இவ்வான்மாத் தன்னுலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை உணராது நிற்றலான்.

## இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் நான்கு.

## முதலதிகரணம்

விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந் தறிந்து அறியா.

(இ—ள்) மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன மேலைச் சூத்திரத்தில் கூறிய உயிராலே தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தும், அவ்வாறு அறியும் தம்மையும் தம்மை அதிட்டித்து அறிவிக்கும் உயிரையும் அறிய மாட்டா என்றவாறு. இதில்,

1. தன்னுற் கூறப்படும் பொருள் :

உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும்.

2. ஐயப்பாடு:

இந்திரியங்கள் விடயங்களை உயிராலே உணருமோ? புத்திதத்துவத்தால் உணருமோ?

3. பிறர்கூறும் பக்கம்:

*புருடன் இந்திரியங்களோடு கூடினும் தாமரை யிலையின் நீர்போலப் பற்றற்று நிற்பப் புருடன் சந்நிதி யில் புத்திதத்துவமே ஐம்பொறி வாயிலாக விடயங்களை அறியும்.*

*இது சாங்கியர் பக்கம்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்று அறிந்தாலன்றி அவை ஒரு விடயத்தையும் விடயிக்கமாட்டா. ஆதலால், உயிரே புத்தியைக் கருவி யாகக் கொண்டு இந்திரியங்களின் வழியாக விடயங்களை அறியும்.*

5. இயைபு:

**உதாரணவெண்பா —1**

**ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப**
**ஐம்பொறிக ளுள்ளம் அறியாவாம்–ஐம்பொறியிற்**
**காணுதேற் காணுது காணுமுளம் காணுதேல்**
**காணுகண் கேளா செவி.**

இதன்பொருள்

*அரசு ஆய்–அரசனைப்போல (அஃதாவது அரசன் அத்தாணிமண்டபத்தில் தங்கித் தன்கீழ்க் காரியங்களைச் செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற்செலுத்தி ஆளுமாறுபோல),— உளம் ஐம்பொறியை ஆண்டு அங்குநிற்ப—உயிர் ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய விடயங்களிற்செலுத்தி ஆண்டு இலாடத்தானத்தில் நிற்றலால்,— ஐம்பொறிகள் உள்ளம் அறியா ஆம்—*

(அரசனால் ஏவப்பட்டோர் அரசன் ஏவிய கருமத்தை மட்டும் செய்தலேயன்றி அதிகமாய்ச் செய்யமாட்டாத வாறுபோல்) அவ்வைம் பொறிகள் (விடயங்களை அறிதலே யன்றி) உயிரை அறியமாட்டாவாம். (ஆனால் ஐம்பொறிகள் உயிரைக்கொண்டன்றி அறிதல் கூடாதாயினும், ஐம்பொறிகளையின்றி உயிர் அறிதல் கூடாதோ? என்னின்),— ஐம்பொறியில் காணதேல் காணது — (அமைச்சரின்றி அரசர் ஒரு காரியமும் செய்யமாட்டாதவாறுபோல்) ஐந்து இந்திரியங்களில் நின்று அறியாதாகில் உயிர் அறியாது,— காணும் உளம் காணதேல் கண் காண செவி கேளா — (அரசனின்றி அமைச்சர் ஒரு காரியத்தையும் செய்யமாட்டாத வாறுபோல்) அவ்வாறு அறிகின்ற உயிர் காணவிடில் கண்ணும் காணது செவியும் கேளாது (அஃதாவது கண் காது முதலிய இந்திரியங்கள் தத்தம் விடயங்களை அறியமாட்டாவாம்) என்றவாறு.

இதனால், உயிரையின்றி ஐம்பொறிகளும் ஐம்பொறிகளையின்றி உயிரும் விடயங்களை அறியமாட்டா என்பது: அஃதாவது ஒன்றை அறிதற்கு உயிரும் ஐம்பொறிகளும் தம்முள் இன்றியமையா என்பது பெறப்பட்டது.

ஐம்பொறிகளையின்றி உயிர் விடயங்களை அறியமாட்டாது என்பது ஐம்பொறிகளில்லாத சொப்பனத் தானத்தை உயிர் அடைந்தபொழுது அவ்விடத்தில் உயிர் இருந்தும் விடயங்களை அறியாமையினால் கண்டு கொள்க.

நிற்ப—நிற்றலால். அரசு ஆய்—அரசைப்போல.

# இரண்டாமதிகரணம்

ஆங்கவை போலத் தாம் தம் உணர்வின் தமியருள் காந்தம் கண்ட பசாசத் தவையே.

*(இ-ள்) (தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தும் அவ்வாறு அறியும் தம்மையும் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தும் உயிரையும் அறியமாட்டாத) அவ்விந்திரியங்களைப்போல், உயிர்களும் தமது அறிவை விளக்குவதாகிய சிற்சத்தியால் இருவகை அஞ்சவத்தையில்நின்று வினைப்பயன்களை அறிந்து அநுபவிக்கும் தம்மையும், தம்மைச் செலுத்திநிற்கும் திருவருளையும் அறியமாட்டா. உயிர்கள் அவ்வாறு உணர்தல் காந்தத்தைக்கண்ட இரும்பு அதன் சந்நிதி மாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறு போலக் கரணத்தாலன்றிச் சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வனது சிற்சத்தியாலாம். (ஆதலால், அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை) என்றவாறு. இதில்,*

1. தன்றாற் கூறப்படும் பொருள்:

*அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.*

2. ஐயப்பாடு :

*உயிர்கள் தாமே அறியுமோ? முதல்வன் அறிவிக்க அறியுமோ?*

3. பிறர் கூறும் பக்கம் :

*இந்திரியம் முதலிய கருவிகள் சடமாதலால் அவை விடயங்கள் முதலியவற்றை அறிதற்குச் சித்தாகிய*

உயிரின் துணையை வேண்டிநிற்கும். உயிர் சித்துப் பொருளாகையால் அது வேறு ஒரு சித்துப்பொருளின் உபகாரத்தை வேண்டாது எதையும் தானே அறியும். சித்துப்பொருளாகிய உயிர் தான் அறிதற்கு வேறொரு சித்துப்பொருளின் உபகாரத்தை வேண்டி நிற்கும் எனின், உயிருக்கு அறிவிக்கும் அச்சித்துப்பொருளும் தனக்கு அறிவித்தற்கு வேறொரு சித்துப் பொருளை வேண்டி நிற்கும் எனப்பட்டு வரம்பின்றியோடும். ஆதலால், சடப்பொருள்களாகிய ஐம்பொறி முதலிய கருவிகளை உயிரோடு உவமித்துக் கூறுதலும், உயிர் முதல்வன் அறிவிக்க அறியும் என்பதும் பொருந்தாது.

இவ்வாறு கூறுவோர் ஈசுர அவிகாரவாதிகள்.

### 4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு :

கருவிகள் சடமாகவும் உயிர்கள் சித்தாகவும் இருக்கும் வேறுபாட்டினுல் இவை இரண்டும் தம்முள் ஒவ்வா ஆயினும், தம்மையும் தமது முதலையும் அறியமாட்டாமையினுல் தம்முள் ஒக்கும் அன்றியும், அறிவிக்க அறியும் முறைமை தமக்கொரு முதலையுடைய பொருள்களுக்கேயன்றித், தனக்குமேல் ஒரு பொருளில்லாத தனிப்பரம்பொருளுக்கு இல்லை. ஆதலால், முற்றும் உணர்ந்த முதல்வனுக்கு அறிவிக்க வேறொரு முதல்வன் வேண்டப்படுதல் இல்லை. அம்முதல்வன் அறிவிக்கச் சிற்றறிவுடைய உயிர்கள் அறியும்.

5. இயைபு :

### உதாரணவெண்பா—2

**மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகம் சேட்டித்த
தென்னு மறையின் இயன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணுன் சிவனசத்தை யின்று.**

*இந்திரியங்கள் உயிரால் அறிவதுபோல் உயிர் முதல்வனால் அறியும் எனின், அவ்விந்திரியங்களுக்கு வரும்பயன் உயிருக்காவதுபோல், உயிருக்கு வரும் இன்பத்துன்பங்கள் முதல்வனுக்கு ஆதல் வேண்டும் என்னும் ஈசுர அவிகாரவாதிகளை மறுத்து முதல்வன் உயிர்களைப்போல் விகாரப்படுதல் இலன் என்பதை இவ்வெண்பா விளக்குகின்றது.*

இதன்பொருள்

*மன்னு சிவன் சந்நிதியின் உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய்—(இவ்வதிகரணத்திற் கூறிய அநுமானப்பிரமாணம் மாத்திரமேயன்றி) நிலைபெற்ற முதல்வனது சந்நிதியில் பிரபஞ்சம் செயற்படுகிறதென்று கூறும் வேதப்பொருளையும் மறந்தவனே,— உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்கும்— உயிரானது அவ்வேதத்துள் எடுத்து ஓதப்படும் முதல்வன் தனக்குக் காட்டாகி நிற்பத் தான் செய்த வினைக்கு ஈடாக ஒன்றனை அறிந்து நிற்கும் (ஆனால், இந்திரியங்கள் தமக்கென ஓர் காரணமின்றி உயிரின் பொருட்டே அறிவனவாம்),— காண்—*

இவ்வேறுபாட்டை நீ அறிவாயாக,— இன்று — (அவ்வாறு காட்டாகி நிற்பினும் தனது சந்நிதியில் அசத்தெல்லாம்) சூனியம் (ஆதலால்),— சிவன் அசத்தை எண்ணான் — மங்கல வடிவினன் ஆகிய முதல்வன் அவ்வுயிர்போல் அவற்றை அநுபவியான் என்றவாறு.

'மன்னு சிவன்', 'சொன்ன சிவன்', 'எண்ணான் சிவன்' என மும்முறை கூறியது யாது காரணத்தால்? என்னின், முதல்வனுக்கு இவ்விடத்தில் கூறற்பாலனவாகிய மூன்று இலக்கணங்களை உணர்த்தும்பொருட்டு என்க. 'மன்னுசிவன்' என்பது முதல்வன் உயிர்கள் போற் பிறந்திறந்து வருந்துதலின்றி என்றும் நிலைபெற்றிருக்கும் இன்பவடிவினன் என்னும் பொருளைத்தந்து, தனது சந்நிதியில் உலகத்தைச் சேட்டிப்பித்தலை உணர்த்துகின்றது. 'சொன்ன சிவன்' என்பது வேதத்தில் முற்றுணர்வினன் என்று எடுத்தோதப்படுவன் என்னும் பொருளைத்தந்து சிற்றறிவுடைய உயிர்களுக்கு அறிவித்தலை உணர்த்துகின்றது. 'எண்ணான் சிவன்' என்பது தூயதன்மையன் என்னும் பொருளைத் தந்து தன் சந்நிதியில் மாயையின் காரியமாகிய அசத்தெல்லாம் முனைத்துத் தோன்றாமையை உணர்த்துகின்றது.

வேறுபாடாவது: ஐம்பொறிகள் ஆன்மாவின் பொருட்டு உணர்வன, தம்பொருட்டு உணர்வன அல்ல; ஆன்மாக்கள் தம்பொருட்டே உணர்வன, முதல்வன் பொருட்டு உணர்வன அல்ல என்பதாம்.

உலகம் — உயிர்கள்.

*மறையின் இயல் மறந்தாய் — மறையின் இயலும் பொருளையும் மறந்தவனே. ஆதலால்—சொல்லெச்சம்.*

## உதாரணவெண்பா—3

**வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது**
**வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனில்**
**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்**
**கண்டுடனாய் மன்னுதலைக் காண்.**

*இவ்வெண்பா முதல்வன் உணர்த்த உயிர் உணருமாயின், உயிர் முதல்வனின் வேறாய் இருந்து உணருமோ? ஒன்றாய் நின்றே உணருமோ? என்று கேட்கும் ஈசுர அவிகாரவாதிகளை நோக்கி, அவ்விரண்டு இயல்புமின்றி நின்று உணரும் என்பதனை வலியுறுத்துகின்றது.*

### இதன்பொருள்

*வெய்யோன் ஒளியில் ஒடுங்கி — சூரியன் ஒளியில் அடங்கி,— விளங்காது — (அதனின் வேறாய்) விளங்கித் தோன்றாமல்,— வெய்யோனை ஆகாத மீன்போல— அச்சூரியனாதலும் ஆகாத நட்சத்திரங்கள் (அச்சூரியனாலே ஒளியுடையவாமாறு) போல, — கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை — கண்டும் கேட்டும் உண்டும் மோந்தும் தீண்டியும் அறியப்படும் ஐவகை விடயங்களையும்,— மெய் அவனில் கண்டு — (உயிர்) மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து,— உடன் ஆய் மன்னுதலை காண் — (வேறாதலும் ஒன்றாதலும் இன்றி அவ்விரண்டுக்கும் பொதுவாய் அடங்கி) உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக என்றவாறு.*

அஃதாவது நட்சத்திரங்கள் சூரியனிடம் ஒளியைப் பெற்று, அதன் ஒளியில் விளங்காது அடங்கி நின்று, அதனோடு ஒன்றாகாமலும் வேறாகாமலும் இருந்து பிரகாசிப்பதுபோல், உயிர்கள் முதல்வன் அறிவிக்க, அவனில் அடங்கி, அவனோடு ஒன்றாகாமலும் வேறாகாமலும் உடனாயிருந்து அறியும் என்பதாம்.

நட்சத்திரங்களின் ஒளி சூரியனிடமிருந்து உண்டாவது என்பது வேதநூற் றுணிபு.

வெய்யோனை என்பதில் ஐகாரம் சாரியை.

உயிர் என்னும் எழுவாய் மேலை வெண்பாவினின் றும் வருவிக்கப்பட்டது.

## உதாரண வெண்பா — 4

**அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே**
**அருளு மவனன்றி யில்லை — அருளின்**
**றவனன்றே யில்லை அருட்கண்ணார் கண்ணுக்**
**கிரவிபோல் நிற்குமரன் ஏய்ந்து.**

இவ்வெண்பா முதல்வன் அறிவிக்க உயிர்கள் அறியுமெனின், உயிர்களின் அறிவு ஒருவகையாய் இராமல் பல்வேறு வகையாய் இருத்தலினால் முதல்வன் உணர்த்தும் முறைமையும் வேறுபட்டிருத்தல் வேண்டும் எனப்பட்டு, முதல்வன் நிர்விகாரி என்னும் சுருதிக்கு மாறாக விகாரி என்றுசொல்ல வேண்டிவரும் என்னும் ஈசுர அவிகாரவாதிகளை நோக்கி முதல்வன் விகாரியா காமையை வலியுறுத்துகின்றது.

## இதன் பொருள்

அருள் ஈசற்கு அன்றே உண்டாம்- (உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற்கண் உளதாகிய) இரக்கம் முதல்வனுக்கு அநாதியே உள்ளது,—அது சத்தி—அவ்விரக்கம் (முதல்வனின்வேறு பொருளன்று, முதல்வனுக்கு உளதாகிய) சத்தியேயாம்,— அருளும் அவனன்றி இல்லை அவன் அருள் இன்று இல்லை— (இரக்கமும் அவனும் முறையே குணமும குணியும் ஆதலால்) அவ்வருளும் முதல்வனை இன்றியமையாது முதல்வனும் அதனை இன்றியமையானாய்,—அருள் கண்ணார் கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்து நிற்கும் அரன் — ஞானக்கண்ணுடையார் உணர்விற்குச் சூரியன் தன் ஒளியோடு தாதான்மியமாய் இயைந்து நிற்பதுபோல் (அவ்வருளோடு தாதான்மியமாய்) இயைந்து நிற்பன் முதல்வன்; ஆதலால், தன் வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்திசங்கற்ப மாத்திரையால் அனைத்தும் செய்தல் கூடும் என்றவாறு.

இவ்வியல்பு சித்தாந்தநெறி உணர்ந்தார்க்கன்றி விளங்காது என்பார் 'அருட் கண்ணார் கண்ணுக்கு' என்றருளினர்.

அவன் அன்றே என்பதில் அன்றே என்பது அசை.

**திருவாசகம்**

''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ '' –18

''குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க''

## ஐந்தாம் சூத்திரத்தின் தொகைப்பொருள்

*உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும் என்பதும், அரனாலே உயிர்களெல்லாம் அறியும் என்பதும் இச்சூத்திரத்தால் சாதிக்கப்பட்டது.*

**ஐந்தாஞ்சூத்திரம் முடிந்தது.**

# ஆறுஞ்சூத்திரம்

# ஆறுஞ்சூத்திரம்

**உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்**
**இருதிறன் அல்லது சிவசத் தாமென**
**இரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.**

இதன் பொருள்

உணர் உரு எனின் — ('தம் உணர்வின் தமி' ஆகிய முதற்பொருள்) அளவைகளால் அறியப்படும் இயல்பையுடையது எனின்,— அசத்து – (அவ்வாறு அறியப்படும் பிரபஞ்சம் போல் அழிபொருளாகிய) அசத்தாம்,— உணராது எனின் — எதனாலும் அறியப் படாதது எனின்,— இன்மையின்–சூனியப் பொருளாம் ஆதலால்,— இரு திறன் அல்லது — இவ்விருபகுதியும் அன்றி,— இரண்டு வகையின் சிவசத்து ஆம் என— (ஒருவாற்றால் அறியப்படாமையும் ஒருவாற்றால் அறியப்படுதலும் ஆகிய) இரண்டுவகையாலும் சிவ சத்தாம் என,— இசைக்கும் மன் உலகே — கூறுவர் மெய்யுணர்வின் நிலை பெற்றுயர்ந்தோர் என்றவாறு.

மேலைச் சூத்திரத்தின் ஐம்பொறிகள் ஆன்மாவினால் விடயங்களை அறிந்தும் அவ்வாறு அறியும் தம்மையும் ஆன்மாவையும் அறியமாட்டாதவாறு போல், முதல்வனால் ஆன்மா அறிந்தும் அவ்வாறு அறியும் தன்னையும் முதல்வனையும் அவ்வான்மா அறியமாட்டாது என்று கூறியதனால், முதல்வன் எதனாலும் அறியப்படாதபொருளோ? என்னும் ஐயம் நிகழாதவாறு இச்சூத்திரத்தால் சத்தையும் அசத்தையும் வரையறுத்து முதல்வனின் சிறப்பிலக்கணத்தைக்கூறுகின்றார்.

முதல்வன் இலக்கணம் பொதுவியல்பு எனவும், சிறப்பியல்பு எனவும் இருவகைப்படும். பொதுவியல்பு—முதல்வன் பிரபஞ்சத்தோடு பேதமாயும் அபேதமாயும் பேதாபேதமாயும் கலந்துநிற்றல். இஃது இரண்டாம் சூத்திரத்தில் விளக்கப்பட்டது. சிறப்பியல்பு — தன்வயத்தனாதல் முதலிய சிற்குணங்கள் எட்டையும் உடையவனாயிருத்தல். இவை எட்டும் சத்து சித்து என்னும் இரண்டனுள் அடங்குதலால் பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் பதியாகிய முதல்வனே சத்தும் சித்துமாயிருக்கும் பொருள் என்பது இச்சூத்திரத்தால் உணர்த்தப்படுகின்றது.

'தம் உணர்வின் தமி' ஆகிய முதற்பொருள் என்னும் எழுவாய் ஐந்தாம் சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. உணருரு அசத்தெனின் என்பதனை உணருரு எனின் அசத்து என மாறுக. எனின் என்பதனை உணராது என்பதனோடும் கூட்டுக. இன்மையின் என்பதில் இன் என்பது ஆகலான்

என்னும் பொருளைத்தரும். 'இருதிறன்' 'இரண்டு வகையின்' என்பவற்றில் தொக்கியிருக்கும் முற்றும்மைகளை விரித்துப் பொருளுரைக்க. 'அல்லது' என்பது அன்றி என்னும் பொருளைத்தரும் வினையெச்சக் குறிப்புமுற்று. இருதிறனும் அன்றியும் எனக்கூட்டுக. ஒருவாற்றானும் அறியப்படாமையாவது பசுஞான பாசஞானங்களால் அறியப்படாமை. ஒருவாற்றால் அறியப்படுதலாவது சிவஞானம் ஒன்றனானே அறியப் படுதல். இரண்டு வகையிற் சிவசத்தாம் எனக்கொண்டு கூட்டுக.

பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப் படுவது சடப்பொருளேயாதலால் அவ்விரண்டினானும் அறியப்படாத பொருள் சிவமாதலும், பதிஞானத்தால் அறியப்படும் பொருள் பாசஞான பசுஞானங்களால் அறியப்படும் பொருள்போல் அநித்தமாகாமையால் சத்தாதலும் பெறப்படும் எனக் கூறவேண்டி "இரண்டு வகையினும் சிவசத்தாமென இசைக்கும்" என்று அருளிச்செய்தனர்.

சிவசத்து என்பது சித்தாகிய சத்து, அஃதாவது சச்சிதானந்தப்பொருள் என்பதை உணர்த்தும்.

சித்தாந்த சைவக் கொள்கையின்படி பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் அநாதிநித்தப் பொருள்களாயிருக்க, சிவம் ஒன்றே சத்துப்பொருள் என்று ஏன் கூறவேண்டும்? என்னில், பாசமானது சடப்பொருளாயிருத்தலினானும், தனுகரண புவன போகங்களாகக் காரியப்பட்டு விகாரங்கள் மருவுத

லானும், முத்தியினும் ஆன்மபோத நீக்கத்தினும் தன் வலிகெட்டு நிற்றலானுஞ், சர்வ சங்காரகாலத்தில் சிவ சத்தியில் ஒடுக்கமுறலானும் அது முதல்வனைப்போல் மெய்ப்பொருள் ஆகாமல் கனவும் கானற் சலமும் போன்ற பொய்ப்பொருளாம் என்ப. ஆன்மா சார்ந்த தன் வண்ணமாயிருந்துகொண்டு கேவலாவத்தையில் ஆணவம் வேறு தான் வேறு என்னுதபடி அவ்வாணவ மலமேயாய் இருத்தலானும், சகலாவத்தையில் பிறப் பிறப்புக்களால் விகாரம் எய்துதலானும், சுத்தாவத்தை யில் ஆன்மபோதம் நசித்துச் சிவமேயாய் விடுதலானும், சர்வசங்காரகாலத்தில் சர்வான்மாக்களும் சிவத்தில் ஒடுங்கச் சிவம் ஒன்றே சேட்டித்திருத்தலானும், ஆன் மாவும் மெய்ப்பொருள் என்று சொல்லப்படாமல் சிவம் ஒன்றே மெய்ப்பொருள் என்று நாட்டப்படும். இத னைத் திருக்குறள் — மெய்யுணர்தல் என்னும் அதிகா ரத்தில் மெய் என்பது முதல்வனை உணர்த்தி நிற்றலும் அறிக. இவ்வுண்மைகளை விளக்கிச் சடமாகிய சத்தி னின்றும் முதல்வனை வேறு பிரித்தற்குச் 'சிவசத்து' என்றருளினர்.

பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் பசுவும் பாசமும் பசுஞான பாசஞானங்களால் அறியப்படுத லினுல் அவை அசத்துப் பொருள்கள் என்றும், பதிப் பொருள் சிவஞானம் ஒன்றினுலேயே அறியப்படுதலால் அது ஒன்றே சிவசத்தாம் என்றும் கூறின் சிவனைக் காணுதவர் தம்மையும் காணுர் பாசத்தையும் காணுர் என்று நூல்கள் கூறுவதனுல் ஏனைப் பசுபாசங்களும் சிவஞானத்தால் அறியப்படும் என்பது பெறப்படும்.

படவே, அவையும் சிவசத்தாம் எனச் சொல்லவேண்டி வருமே என்னில், அவை சிறப்புவகையால் சிவஞானத்தால் அறியப்படுமாயினும் பொதுவகையால் ஏனை ஞானங்கட்கும் விடயமாதலால் அவை உணருருவாகிய அசத்துப்பொருள்கள் எனப்பட்டன என்க. ஒருவன் இதனை யான் அறிந்தேன், அறிகின்றிலேன் என்னுங்கால் இது என்னும் சுட்டுணர்விற்கு விடயம் புறத்தே தோன்றும் குடமும், யான் என்னும் உணர்விற்கு விடயம் அந்தக்கரணங்களை அதிட்டிக்கும் ஆன்மாவும், அறிந்தேன் என்னும் உணர்விற்கு விடயம் அவ்வான்ம போதமும், அறிகின்றிலேன் என்னும் உணர்விற்கு விடயம் அறியாமையுமேயாய் இருத்தலானும்; உடம்பை மயக்கத்தால் யான் என மதிப்பினும் இதனை யான் அறிந்தேன் என்றபோது யான் என்னும் உணர்விற்கு விடயம் ஆன்மாவேயாய் இருப்பதனானும் பசுபாசங்கள் பசுஞான பாசஞானங்களினானும் அறியப்படுதல் பெறப்பட்டது. ஆனல், பதிஞானம் உணராதாரும் சிவன் உண்டு எனவும் சிவனில்லை எனவும் வழங்கி வருவதனால் சிவப்பொருளும் பொதுவகையால் பாசஞான பசுஞானங்களுக்கு விடயமாம்போலும் என்னின், ஆகாது. குடம் உண்டு குடம் இல்லை என்றபோது குடமானது புத்தி விருத்தியில் பரிணமித்துத் தோன்றி ஆன்மாவின்கண் வந்து அநுபவம் ஆகின்றது. சிவப்பொருள் அவ்வாறு அநுபவத்தால் உணர வருகிறதில்லை. அநுபவஞானத்திற்கு விடயமாவதே ஈண்டு 'உணருரு' என்னப்படுவதனால் அவ்வாறு விடயமாகாத சிவப்பொருள் 'உணருரு' அல்ல என்க.

இவ்விடத்தில் அசத்து எனப்படுவது நீர்மேலெழுத்துப்போல் நிலைபெறுதல்போலக் காணப்பட்டுச் சடுதியில் மறைந்துபோம் காரியப் பிரபஞ்சத்தை என்பது அறிக.

பாசஞானமாவது — பாசமாகிய கருவிகளால் ஆன்மாவினிடத்தில் நிகழும் ஞானம். பசுஞானமாவது— தற்போத முனைப்பால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பதிஞானமாவது — பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்

1. உணர் உரு அசத்தெனின் உணரா தின்மையின்.

2. இருதிறன் அல்லது சிவசத்தாம்என இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. உயிர் அறிவினாலே அறியப்பட்டதெல்லாம் அழியும்.

2. அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்தென்றது. அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

2. இனிப் பிரகாசத்திறுக்குப் பிரகாசிக்க வேண்டுவதின்மையாலும் அப்பிரகாசத்திறுக்குப் பிரகாசம் இன்மையாலும், இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்று உணர்தற்பாற்று.

**இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் ஆறு.**

## முதலதிகரணம்

---

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்.

(இ-ள்) பதிப்பொருள் அளவைகளால் அறியப் படும் இயல்பையுடையது என்னில், அது அசத்துப் பொருளாம். எதனுலும் அறியப்படாதது என்னின் அது சூனியப் பொருளாம்: (ஆதலினுல்). இதில்,

1. தன்றற்கூறப்படும் பொருள்:

உயிரறிவினலே அறியப்பட்டன எல்லாம் அழியும். (அஃதாவது அசத்தாம்)

2. ஐயப்பாடு:

முதல்வன் அறியப்படும் பொருளோ? அறியப் படாத பொருளோ?

3. பிறர்கூறும் பக்கம்:

(அ) பிரபஞ்சம் அறியப்படுவதுபோல் முதல்வனும் அறியப்படும் பொருளே.

இது நையாயிகர்பக்கம்.

(ஆ) எல்லாப்பொருளும் சத்தாகலின் அளந்தறி பொருளும் சத்தே.

இது சாங்கியர் பக்கம்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

(அ) முதல்வன் பிரபஞ்சம்போல் அறியப்படும் பொருளாயின் முதல்வனும் பிரபஞ்சம்போல் அசத்தாவன். அசத்து—அழியும் பொருள். ஆதலால் முதல்வன் அறியப்படும் பொருளன்று.

இது நையாயிகரை மறுத்தது.

(ஆ) சற்காரியவாதம்பற்றி எல்லாப் பொருள்களும் சத்தேயாம் எனினும் பிரபஞ்சமானது மாயையின் காரியமாய், தோன்றி நின்று அழிதல்பற்றி அசத்து எனப்படும்.

இது சாங்கியரை மறுத்தது.

5. இயைபு:

**உதாரணவெண்பா — 5**

**அசத்தறியாய் கேணீ அறிவறிந்த வெல்லாம்**
**அசத்தாகும் மெய்கண்டா ஞயின்—அசத்தலாய்**
**நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்**
**ஓரினவை யின்ருமா றெப்பு.**

இதன்பொருள்

அசத்து அறியாய் கேள்நீ—அசத்தின் இயல்பை அறியாத மடவோனே, யாம் கூறும் விடையைநீமனம் பற்றிக் கேட்பாயாக,—மெய் கண்டான் ஆயின்—சத்தின் இயல்பை அறிந்தவன் ஆராய்ந்தானாயின்,—அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும்—அறிவினால் அறியப்பட்டன எல்லாம் அசத்தேயாம்,—அசத்து அலாய்—அசற்காரியவாதியல்லாத அறிவுடையோனே,—அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஓரின் அங்ஙனம் தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமை ஆராயின்,—நிகழ் நீரில் எழுத்தும் கனவும் பேய்த்தேரும் — நிகழாநின்ற நீர் மேலெழுத்தும் கனவிற்காட்சியும் பேய்த்தேருமாம் என்றவாறு.

இதனால், 'அசத்தறியாய்' என்று நையாயிகரையும், 'அசத்து அலாய்' என்று சாங்கியரையும் நோக்கி அவ்விருவர் மதங்களும் மறுக்கப்பட்டன. நையாயிகனை நோக்கி நீ சத்து அசத்து என்பவற்றின் இலக்கணங்களை அறிந்தாயாயின் இவ்வாறு பிணங்காய்; அறியாமையாற் பிணங்குகின்றாய் என்பார் 'அசத்து அறியாய்' என்றருளினர்.

திருஞானசம்பந்தர் தேவாரம்

"ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பும்
கேட்பான்புகிலளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங் குறுகாமையெந்தை
தாட்பால்வணங்கித் தலைநின்றிவைகேட்கதக்கார்."

என்று திருவாய்மலர்ந்தருளியவாறே நீவணங்கிக் கேட்டறிவாயாகஎன்பார் 'கேள்நீ' என்றனர். உபலக்திக்கு அஃதாவது உள்ளது என்னும் உணர்விற்கு விடயமாதல் நிச்சயம் என்பார் 'அறிவறிந்தவெல்லாம் அசத்தாகும்' என்றனர். சத்தின் இயல்பு உணர்ந்தார்க் கன்றி அசத்தின் இயல்பு உணரவாராது என்பார் 'மெய்கண்டான் ஆயின்' என்றனர். ஆய்தற்கு அருமை நோக்கி 'ஆயின்' என்றனர். அசற்காரிய வாதியை 'அசத்து' என்று உபசரித்தார். இன்று ஆம் ஆறு—அசத்தா மாற்றிற்கு. ஈண்டு அறிவு என்றது ஒன்றை முந்தி அது அதுவாகச் சுட்டிக்காணும் அளவை அறிவினை. இதனை ''அறிவினு லறிந்த யாவும் அசத்தாதல் அறிதி'' என்னும் சிவப்பிரகாசச் செய்யுளான் உணர்க.

உள்ளது என்னும் உணர்விற்கு விடயமாகும் பிரபஞ்சத்தை இல்லைஎன்னும்உணர்விற்கு விடயமாகும் இல்பொருளோடு ஒப்ப அசத்தென்றல் பொருந்தாது என்று நையாயிகர் கூறுவதை மறுத்து, அச்சுட்டுப் பொருள்களானவை இராசத குணத்தால் உள்ளது என்னும் உணர்விற்கு விடயமாய்த் தாமதகுணத்தால் இல்லை என்னும் உணர்விற்கு விடயமாதலால் 'அறிவினுல் அறியப்பட்ட எல்லாம் அசத்து' என்று சாதிக்கப்பட்டது.

சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுவதனுலேயே அசத்து என்றல் சற்காரிய வாதத்திற்கு மாறும் என்று சாங்கியர் கூறுவதை மறுத்து, பிரபஞ்சமானது

காரிய அவத்தையில் தூலமாய் விளங்கி நின்றே கண்ணுக்குப்புலனாய், பின் சடுதியின் மறைந்தருக்குமமாய்க் காரணாவத்தையின் விளங்காது நிற்கும் வேறுபாட்டால், அவ்வாறு புலனாகாத காரணப் பொருள்களை நோக்கக் காரியப் பிரபஞ்சம் அசத்தாம் என்று சாதிக்கப்பட்டது.

நீரில் எழுத்தும் கனவும் பேய்த்தேரும் பொய் என்பாரை மறுத்தற்கு 'நிகழ்' என்று அடைகொடுத்தார். நீரில் எழுத்துத் தோன்றும்போதே மறைவது போல், பிரபஞ்சம் தோன்றும்போதே மறையும் இயல்பினதாகையானும்; கனவின்கண் காண்பவை விழித்தலினாலே முடிவு பெறுதலின்றி இடையே மறைந்து போதல்போல், பிரபஞ்சம் என்றும் நிலைத்திருத்தல் போலத்தோன்றி இடையே மறைந்து போதலானும்; பேய்த்தேர் சூரிய கிரணத்தின் வெம்மையால் தோன்றி அக்கிரணம் மேகத்துள் மறைந்த காரணத்தால் மறைந்துபோவதுபோல், பிரபஞ்சம் நோய் முதலிய யாதானும் ஓர் காரணம்காட்டி மறைதலானும் நீரில் எழுத்து முதலிய மூன்றும் பிரபஞ்சத்திற்கு உவமைகள் ஆயின. பேய்த்தேர் என்பது கொடியபாலைநிலத்தில் கோடைக்காலத்தில் நடுப்பகலில் சூரியகிரணத்தின் கொடியவெம்மையால் சலத்தைப்போற் காணப்பட்டுச் சூரியகிரணம் மேகத்துள் மறைந்தபோது மறைந்து போவதாகிய கானல்.

இவ்வுண்மையறியாத மாயாவாதிகள் முதலியோர் பேய்த்தேர் முதலியன இல்பொருள்கள் ஆயிடுதல்

போல் பிரபஞ்சமும் இல்பொருளே என்பார். இது சற்காரியவாதமாகிய சைவசித்தாந்தத்திற்கு முரணும். பேய்த்தேர் முதலாயின மெய்யே; பொய்யன்று. எவ்வாறெனில், பேய்த்தேரை நீர் எனக் காண்பதனால் அதுபொய் எனப்பட்டதேயன்றிப் பேய்த்தேர் பொய்யன்று. கனவின்கண் பெண்களோடு சுகிக்கும்போதும், புலிமுதலியவற்றைக்கண்டு அஞ்சும்போதும் அவ்வநுபவக்குறி தூலஉடம்பினில் உண்டாவதனாலும், நீரில் எழுத்து எழுதுங்கால் உள்ளதாய்த் தோன்றுதலினாலும் இவையும் மெய்யே. ஆதலால், இவைகளோடு உவமிக்கப்பட்ட பிரபஞ்சமும் மெய்யே யன்றிப் பொய்யன்று.

## இரண்டாமதிகரணம்

இருதிறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கு மன் உலகே.

(இ–ள்) அறியப்படும் அசத்துப்பொருளும், அறியப்படாத சூனியப் பொருளும் ஆகிய இவ்விரு பகுதியும் அன்றி ஒருவாற்றால் அறியப்படாமையும் ஒருவாற்றால் அறியப்படுதலும் ஆகிய இரண்டுவகையாலும் சிவசத்தாம் எனக்கூறுவர் மெய்யுணர்வின் நிலை பெற்று உயர்ந்தோர் என்றவாறு. இதில்,

1. தன்றற் கூறப்படும் பொருள் :

அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

2. ஐயப்பாடு :

முதல்வன் வாக்கு மனாதீதப் பொருளோ? கோசரப்பொருளோ? கோசரம் – அறியத்தக்கது.

3. பிறர் கூறும் பக்கம் :

(அ) வாக்கு மனாதீதமாகிய அநிர்வசனம் என்றல் பொருந்தும். கோசரமாம் என்றல் பொருந்தாது.

இது மாயாவாதிகள் பக்கம்.

(ஆ) கோசரமாம் என்றல் பொருந்தும். வாக்கு மனாதீதம் என்றல் பொருந்தாது.

இது நையாயிகர் முதலியோர் பக்கம்.

(இ) பாவனைக்குக் கோசரமாதலேயன்றித் தன்னால் உணரும் உணர்விற்குக் கோசரம் என்றல் பொருந்தாது.

இது பாதஞ்சலர் பக்கம்.

(ஈ) பசுத்துவம் நீங்கிய வழி ஆன்மஞானத்தில் கோசரமாம்.

இது சமவாத சைவர் பக்கம்.

(உ) முத்தியில் சிவமேயன்றி உயிரென வேறு இன்மையின் உயிருக்குக் கோசரமாதல் என்பது ஒன்றில்லை.

இது சிவாத்துவித சைவர் முதலியோர் பக்கம்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு :

வாக்கு மனங்களால் ஓதி உணரப்படும் நிருவசனப் பொருளைச் சாதனங்களினின்று அறியவேண்டுவதில்லையாகையாலும், ஒருவாற்றாலும் அறியப்படாத அநிருவசனப்பொருள் சாதனத்தினின்றும் அறியப்படுதல் இல்லையாகையாலும், அறியப்படுதலும் அறியப்படாமையும் ஆகிய இவ்விரு தன்மையும் இன்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமாம்.

வாக்கு மனாதீதமாவது பசுஞான பாசஞானங் கட்கு எட்டாமை. கோசரமாவது ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவஞானமாத்திரைக்கே விளங்குதல். வாக்கு என்பது நாத முடிவான பாசஞானத்தையும், மனம் என்பது பசுஞானத்தையுமாம். முற்கூறிய ஐவரும் பின்வரும் ஐந்து வெண்பாக்களால் முறையே மறுக்கப்படுதல் காண்க.

5. இயைபு :

**உதாரணவெண்பா — 2**

**எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென்**
**கண்ணி யுளதென்றன் மெய்கண்டான்—எண்ணி**
**அறிய விரண்டாம் அசத்தாதல் சத்தாம்**
**அறிவறியா மெய்சிவன்று ளாம்.**

இதன்பொருள்

எண்ணிய சத்து அன்று அசத்து அன்று ஆம் என்றால் உளது என்றல் என் கண்ணி — பரமார்த்த மாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்தும் அன்று அசத்தும் அன்று என்னின், அங்ஙனம் ஒரு பொருள் உண்டு என்பது யாது பிரமாணம் கருதியோ ? அதனைக் கூறுவாயாக. பிரமாணம் உண்டு எனின், அதற்கு அது பிரமேயம் எனப்பட்டு ஞேய மாவான் செல்லும் என்று அஞ்சிப் பிரமாணம் இல்லை என்பையாயின்,— மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம் — சத்தின் இயல்பை உணர்ந் தோன் ஆராய்ந்து அறியிற் காட்சி முதலிய பிரமாணங் கட்கு விடயமாவதூஉம் ஒருவாற்றானும் பிரமாணம்

அல்லாத சூனியமும் ஆகிய இரண்டும் மேற்கூறியவாற்ருன் அசத்தேயாம்,— ஆதல் சத்து ஆம் அறிவு அறியாமெய் சிவன் தாள் ஆம் — ஆதலால் சாந்தோக்கியம் முதலியவற்றுள் சத்து என்று ஓதப்படும் சுட்டறிவிஞல் அறியப்படாத மெய்ப்பொருள் சைவ உபநிடதங்களினும் சைவாகமங்களினும் அன்னியமின்றி நின்றுணரும் அநுபவமாத்திரையில் கோசரிப்பது என்று ஓதப்படும் சிவனருள் ஆவதன்றி நீ கூறும் சூனியமன்று என்றவாறு.

இதனுல் "பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அவிச்சைவயத்தான் ஞாதா எனவும் ஞேயம் எனவும் பகுக்கப்பட்டு, முன்னர்க் கூறப்படும் சாதகங்களின் நின்று அறியவும்படும். அவிச்சை நீங்கியவழி 'அப்பகுப்பு இன்மையால் சத்தென்றுதல் அசத்தென்றுதல் ஒருவாற்ருனும் ஞேயம் ஆமாறு இன்றிக் கேவல ஞானமாத்திரையேயாய் நிற்பதொன்று ஆகலான் அது கோசரமாம் என்றல் பொருந்தாது" என்று கூறும் மாயாவாதியை மறுத்துச் "சத்துமன்றி அசத்துமன்றி ஒரு பொருள் உண்டு எனின், அதற்குப் பிரமாணம் என்னை? பிரமாணுதீதமாகிய சூனியம் எனின், சூனியமும் அழிபொருளுமாகிய இரண்டும் அசத்தே என்பது மேற்காட்டினமையால் பிரமப்பொருள் அசத்து எனப்பட்டுச் சத்து என்னும் சுருதிகளோடு முரணும் ஆகலின், அவற்றுள் சத்து என்று ஓதப்படும் பரப்பிரமப்பொருளாவதுஉண்மைஞானத்திற்கோசரிப்பதெனயாம் கூறும் சிவமேயன்றி நீ கூறும் சூனியம் அன்று" என்று கூறிக் கோசரம் என்றதனை வலியுறுத்தியவாறும்.

## உதாரணவெண்பா — 3

**உணர்ப அசத்தாதல் ஒன்றுணரா தொன்றை**
**உணருநீ தானுணரா யாயின்—உணருமுனில்**
**தானிரண்டா மெய்கண்டான் தன்னால் உணர்தலால்**
**தானிரண்டாய்க் காணான் தனி.**

### இதன்பொருள்

*உணர்ப அசத்து — (நின்னால்) அறிவனவாய கருவிகளெல்லாம் (நான்காம் சூத்திரத்தில் கூறியவாறு) அசத்தாம்,— (அசத்து எனவே அசித்தாதலும் பெறப் பட்டது.) ஆதல் — ஆதலால்,— ஒன்று ஒன்றை உணராது—(அவற்றுள்) ஒரு கருவியும் ஒன்றாகிய முதற்பொருளை அறியமாட்டாது,— (அஃதாவது பதிப் பொருள் பாசஞானத்தால் அறியப்படாதது என்ப தாம்) உணரும் நீதான் உணராய் — அக்கருவிகளால் அறிகின்ற நீதானும் அம் முதற்பொருளை அறியமாட் டாய்,— (அஃதாவது பதிப்பொருள் பசுஞானத்தாலும் அறியப்படாதது என்பதாம்) ஆயின் — நீ ஆய்ந்தறிவை யாயின்,— உணரும் உனின் இரண்டு ஆம் — உணர் கின்ற நின்னின் வேறாம்,—(அஃதாவது உன்னால் கருவி களைக்கொண்டு அறியப்படும் பொருள்கள் உனக்கு வேறாதல்போல முதற்பொருளும் உனக்கு வேறாம்) மெய்கண்டான் — (உயிர்க்கு அறிவு விளங்கும்) உண் மையை அறிந்தோன்,— தன்னால் உணர்தலால் — தன் அறிவு அச்சிவத்தின் அருளில் அடங்கி அதுவாய் நின்று அதனாலே அதனை அறியுமாதலால்,— தனி — அத்தனி முதற்பொருளை,— இரண்டு ஆய் காணான் —*

(ஏனைப்பொருள்களை அறியுமாறுபோல்) வேறாய் நின்று அறியமாட்டான் என்றவாறு.

உணர்ப — உணர்வன. ஒன்று—ஒன்றும். உன்னின் என்பது உனின் எனநின்றது புறநடை. தமி — தமியை. தான் —அசை.

இவ்வெண்பாவினுற் போந்தபொருள்:

"அறிந்த பொருளைப் பின் வேறுவழியாய் அறிதலும் கூடும். எங்ஙனமெனில்? பரிச உணர்ச்சியால் அறிந்த பொருளை ரூப உணர்ச்சியாலும் அதாவது கண்ணினுலும் அறியலாம். அதுபோல் முன்னே பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறிந்த முதற்பொருளையே பின்னர்ப் பதிஞானத்தால் உயிர் அறியும். ஆதலால் முதற்பொருள் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாதது என்றல் பொருந்தாது" என்றுகூறும் நையாயிகரை மறுத்து; பதிப்பொருள் பசுபாச ஞானங்களால் அறியப்படின், அவ்விரண்டு ஞானங்களினுல் அறியப்படும் குடம் படம் முதலியவை உயிரின் வேறுதல்போல் முதற்பொருளும் உயிரின் வேறும். வேறுகும் பொருள்கள் அஞ்ஞானத்தால் உண்டாகும் சுகதுக்கங்களை உண்டாக்குமேயன்றி அஞ்ஞானத்தினின்றும் நீங்கிய பேரின்பத்தைத்தரா. ஆதலால், ஆன்மா அறியும் உண்மையை உணர்ந்தோன் (முதற்பொருள் ஏனை உலகப்பொருள்கள்போல அசத்தல்லாத தனிமுதற்பொருளாகையால்) அதனை அறியுங்கால்தன் அறிவு அதன்கண் அடங்கி அதுவாய்நின்று அதனுலே அதனை அறிவன். ஏனையபொருள்களைப்போல் வேறாய்

*நின்று அறிவானல்லன் என்றுகூறி முதற் பொருள் வாக்கு மனாதீதமாய் நின்றே கோசரமாம் என வலியுறுத்தப்பட்டது.*

*இவ்வுதாரண வெண்பாவின் கருத்தைக் கீழ்வரும் அருமைத் திருவாக்குகள் விளக்குவனவாம்.*

**திருத்தாண்டகம்**

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்
ஓரூரனல்லனோருவமனில்லி
அப்படியுமந்நிறமுமவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தன்
இவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே."

**திருவாசகம்**

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே."

"உண்டோரொண்பொருளென்றுணர்வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே."

### தாயுமானசுவாமி பாடல்

அருளா லெவையும்பா ரென்றான்—அத்தை
அறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி

**சங்கர சங்கர சம்பு.**

### உதாரணவெண்பா—4

**பாவகமேற் றானசத்தாம் பாவநா தீதமெனிற்**
**பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்–பாவகத்தைப்**
**பாவித்தல் தானென்னிற் பாவகமாம் தன்னருளால்**
**பாவிப் பதுபரமில் பாழ்.**

### இதன்பொருள்

*பாவகமேல் தான் அசத்து ஆம்*–(நீ கூறும் பாவனை ஏனைப்பாவகங்கள் போல மனம் முதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும்) பாவகம் எனில் (அறிவினால் அறியப்பட்ட சுட்டாதலால் அப்பொருள்) அசத்தே ஆம்,—*பாவநாதீதம் எனில் பாவகம் ஆம்*–பாவனையைக் கடந்தது (அஃதாவது கருவிகளோடு கூடாதுநின்று பாவிப்பது) எனில், (கருவிகள் நீங்கியபோது ஒன்றையும் அறிதல் இல்லாத கேவலாவத்தையாம் ஆதலினால் அது) பாவகமாத்திரையே யன்றிப் பயன்படுமாறில்லை,–*அன்று என்னின் அது பாழ் ஆம்*— இவ்விருதிறனும் அன்றி அநிர்வசனமாக (அஃதாவது சொல்லொணாதது ஆக)ப் பாவிக்கப்படுவது எனின் அது சூனியப்பொருளாம்,– *பாவகத்தை பாவித்தல் என்னின் பாவகம் ஆம்*– (இம்மூவகையுமின்றிப் பசித்தவன் உண்டவனைகப்

பாவிக்குமாறு போல உணராத பொருளை உணர்ந்த தாகவைத்துப்) பாவகம் செய்வதாகிய பாவனை என்னில் அது போலிப் பாவனையாம் (ஆதலால் அதனு னும் பயனின்றாம். அவ்வாறாயின் எவ்வழியானும் பாவனைக் கெய்தாதபொருள் பாழாம் எனின்) தன் அருளால் பாவிப்பது பரம்—(அப்பாவகங்களை யொழித் துத்) தனதுதிருவருளால் பாவிக்கப்படுவதாம் பரம் பொருள், —பாழ் இல் – (ஆதலால்நீ கூறும் பாவனைக்கு எய்தாமையால்) அது பாழாதல் இல்லை என்றவாறு.

தான்—அசை. பாவகத்தைப் பாவித்தல்—பாவித் தல்—பாவித்தலைச் செய்தல். பாவனை நான்கு வகைப் படும். அவை கருவிகளோடு கூடிநின்று பாவித்தல், கருவிகளை நீங்கி நின்று பாவித்தல், இவ்விருதிறனு மின்றிப்பாவித்தல், உணராத பொருளை உணர்ந்த தாகப் பாவித்தல் என்பனவாம். இந்நான்கும் மறுக்கப் பட்டமை காண்க.

இவ்வெண்பாவினாற் போந்த பொருள்:—

"தன்னை அறிந்தாலன்றித் தன்னால் (அஃதாவது சிவத்தால்) அறிதல்கூடாது. ஆதலால்மேலை வெண்பா விற் கூறியவாறு 'தன்னால் உணர்தல் என்பது தன்னைப் பற்றுதல் (அஃதாவது ஒன்றனை ஒன்று பற்றுதல்) என்னும் குற்றமாகும்: ஆதலால், அவ்வாறன்றி வாக்கு மனாதீதமாய் நிற்கின்ற பொருள் யோகநூலிற் கூறும் தியானபாவனைகளில் கோசரமாம் என்பதே பொருத்த மாம்" என்றுகூறும் பாதஞ்சலர் கூற்றை ஆசங்கித்து, அம்முதற்பொருளின் அருளைக்கொண்டு அதனை அறி தலே 'தன்னால் உணர்தல்' எனப்படுதலால் தன்னைப்

பற்றுதல் என்னும் குற்றம் உண்டாகுமாறில்லை என்பதையும், நால்வகைப்பாவனைகளுக்கும் அது கோசரம் ஆகாமையையும் விளக்கி அவர்களை மறுத்து அது தன்னாலன்றிக் கோசரம் ஆகாமையை வலியுறுத்திய வாறும்.

தன்னருளை அறியுமாறும், அதனாற் பாவிக்குமாறும் உண்மை அதிகாரத்தில் (ஒன்பதாம் சூத்திரத்தில்) பெறப்படும்.

## உதாரணவெண்பா — 5

**அறிய இரண்டல்லன் ஆங்கறிவு தன்னால்**
**அறியப் படானறிவி னுள்ளான்—அறிவுக்குக்**
**காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்**
**காட்டா தறிவறிந்து கண்டு.**

### அந்நுவயம்

அறிய இரண்டு அல்லன், அறிவினுள்ளான் ஆங்கு அறிவுதன்னால் அறியப்படான். அறிவுக்குக்காட்டாகி நின்றானை அறிவு கண்டறிந்து காட்டாது. மெய் காட்டாகி நின்றானை அறிவு கண்டறிந்து காட்டாது மெய் அறியாக் கண் என்ன.

### இதன்பொருள்

அறிய இரண்டு அல்லன்—(சிவாகமங்களில் அத்துவிதமே கூறுதலால்) உயிர் தன் அறிவால் அறிதற்கு முதல்வன் தன்னின் வேறல்லன் (ஆகலானும்),—அறிவின் உள்ளான் அறிவு தன்னால் அறியப்படான்—

(சமமாதல் இன்றித் தூல சூக்கும முறையில்) தன் அறிவுக்குள்ளாய் நிற்றலின் தன் அறிவினால் அறிய வாரான் (ஆகலானும்),— அறிவுக்கு காட்டு ஆகி நின்றானை — தன்அறிவுக்கு வியஞ்சகமாய் அறிவித்து உயிர்க்குயிராய் நிற்றலானும் அத்தன்மையான முதல்வனை,—அறிவு கண்டறிந்து காட்டாது — (பசுத்துவம் நீங்கிய வழியும்) ஆன்மாவின் அறிவு தான் கண்டறிந்து தன் குணியாகிய ஆன்மாவுக்குக் கோசரமாம்படி காட்டமாட்டாது,— (எதுபோல? என்னில்,) மெய் அறியா கண் என்ன—(தன்னின் வேறின்றித் தனக்குள் நிற்றலினால் தன்னாற்காணப்படாது தனக்குக்காட்டாகி நின்ற) உயிரை அறியமாட்டாத கண்ணொளிபோல என்றவாறு.

ஆங்கு—அசை கண்டறிதல் என்பது ஒருபொருட் பன்மொழி; இது சிறப்பின்கண் வந்த மீமிசை. காட்டு—காட்டுதல் என்னும் பொருளைத் தரும் முதனிலைத் தொழிற் பெயர். கண் என்பது கண்ணொளியை. மெய் என்பது உயிரை. கண் முதலியவற்றை நோக்க உயிர் சத்துச்சித்து என்பதுதோன்ற உயிரை மெய் என்றார்.

உயிரின் வேறான பொருளை உயிரின் அறிவு அறிதல் கூடுமேயன்றி, உயிரோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும் முதல்வனை அறியமாட்டாது என்பது தோன்ற 'அறிய இரண்டல்லன்' என்றார்.

முதல்வன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்திருந்தும் உயிரோடு சமமாதலின்றி, உயிர் தூலமாய்

வெளிப்பட்டுநிற்க, தான்சூக்குமமாய் வெளிப்படாமல் உயிரின் அறிவுக்குள்ளாக நிற்பன். ஆதலால், மலம் நீங்கிய இடத்தும் உயிரின் அறிவால் முதல்வன் அறிய வாரான் என்பது தோன்ற "அறிவுதன்னால் அறியப் படான் அறிவினுள்ளான்" என்றார்.

முதல்வன் உயிர்க்குயிராய் இருந்து அதின் அறிவுக்குத் துணையாய் நின்று அறிவித்தலால் உயிர் அறியும். ஆதலால், அத்தன்மையான முதல்வனை ஆன்மஞானம் கண்டறிந்து உயிருக்குக் காட்டமாட் டாது என்பது தோன்ற "அறிவுக்குக்காட்டாகி நின்றானைக் காட்டாது அறிவறிந்து கண்டு' என்றார்.

கண்ணொளி கண்ணின் வேறான பொருளை யெல்லாம் அறியும். கண்ணின் உள்ளாய் நிற்கும் உயிரை அறியாது. அதுபோல, உயிரின் அறிவு உயிரின் வேறான பொருளை அறிதல் கூடும். உயிர்க்குயிராய் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்துநிற்கும் முதல்வனை அறியமாட்டாது என்பார் "கண்அறியா மெய் என்ன" என்றார்.

இவ்வெண்பாவினாற் போந்தபொருள்:

"பாவனையும் பசுஞானத்தாலும் பாசஞானத் தாலும் ஆவதனால், சத்தாகிய சிவம் பாவனைக்குக் கோசரமாகாதுஎன்றல் ஒக்கும். ஆனாலும்,தன்அருளாற் பாவிக்கவேண்டுவதில்லை. ஆன்மா பசுத்துவம் நீங்கிய முத்திக் காலத்தில் சிவத்தைப்போல் முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்களும் உடையதாம் என்று ஆக

*மங்கள் கூறுவதனால் அப்போது ஆன்மாவின் அறிவு சிவஞானத்தோடு ஒத்தஞானமே யன்றிப் பசுஞான மன்று. ஆதலால், முதல்வன் அவ்வறிவினால் அறியப் படும் கோசரப்பொருளாம் என்பதே பொருத்தமாம்" என்று சிவசமவாதிகள் கூறுவதை மறுத்துத் தன் அருளாலன்றி முதல்வன் கோசரமாகாமை சித்தாந்தம் செய்யப்பட்டது.*

## திருத்தாண்டகம்

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
அடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
உருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே."

## உதாரணவெண்பா—6

**அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே**
**அதுவென் றறியறிவு முண்டே—அதுவென்**
**றறிய விரண்டல்லன் ஆங்கறிவுள் நிற்றல்**
**அறியுமறி வேசிவமு மாம்.**

## இதன்பொருள்

*அது என்னும் ஒன்று அன்று — (சத்தாகிய சிவம் ஞேயப்பொருளாய் அஃதாவது அறியப்படும் பொருளாய் விசிட்டமாய் அஃதாவது பசுபதியாய் நிற்ப தென்று சிவாத்துவிதசைவரும் சுத்தசைவருமாகிய*

உமக்கும் உடன்பாடே யாகலான் அச்சிவம் இன்னதென்று அறியவாராது அநிர்வசனமாய் அதாவது சொல்லொணுததாய் நிற்பதொரு விசேடமற்ற பொருளெனக்கொண்ட மாயாவாதத்தைப்போல) அது என்று அநிர்வசனமாய்க் கூறப்படுவதொரு சூனியம் அன்று (ஆகலான்),— அது அன்றி—அந்த ஞேயமாத்திரையேயன்றி (அதாவது அருளால் அறியப்படும் அச்சிவம் மாத்திரமேயன்றி),– வேறு—அதனின் வேறுக,— அது என்று அறி அறிவும் — (வாக்கு மனுதீதமாய் நிற்பது) அம்முதற்பொருள் என்று அறிகின்ற ஞாதாவாகிய உயிரும்,— ஆங்கு உண்டே — அம் முத்தி நிலையில் உள்ளதேயாம்,— (அவ்வாறு சிவமும் உயிரும் முத்தியில் வெவ்வேருய் உண்டென்றல், உயிர் சிவத்தோடு ஒன்றுதல், அதாவது சிவமாதல் பெறப்படாதே யெனின்) அது என்று அறிய இரண்டு அல்லன் — (உலகத்துப் பொருள்போல்) அது என்று சுட்டி அறியுமாறு முதல்வன் உயிரின் வேருய் நிற்பானல்லன்,— அறிவுள் நிற்றல் — உயிரின் அறிவின்கண் முதல்வன் கலந்து வேற்றுமை தோன்ருது நிற்றலால்,— அறியும் அறிவு சிவமும் ஆம்— (நீரோடு கலந்த உப்பு நீரேயாய் நிற்றல்போல்) சுட்டியறியும் அறிவு கெட்டு முதல்வன் அருளால் அறிகின்ற அவ்வுயிர் சிவமேயாம் என்றவாறு.

சிவமும் ஆம் என்பதில் உள்ள உம்மை உயிர்கலப்பிஞல் சிவமாயும், பொருளின் தன்மையால் உயிராயும் இருத்தலை விளக்கி நின்றது.

ஏகான்மவாதிகள் துவம் பத லட்சியார்த்தமாகிய சித்தே தற்பத லட்சியார்த்தமாகிய சிவம் என்பர்.

வாச்சியார்த்தம் தடத்தமும், லட்சியார்த்தம் சொரூப மும் ஆம். தடத்த நிலையில் உயிரும் சிவமும் அந்நிய மாயிருக்கும்; சொரூபநிலையில் அவ்விரண்டும் அநந்நிய மாய் இருக்கும். அதுபற்றியே உயிர் சிவம் என்று ஆகமங்கள் கூறும். இவ்வளவேயன்றிச் சிவமன்றி உயிர் வேறில்லை என்பது கருத்தன்று. உயிர் வேறில்லை யாயின் இன்ப அநுபவமும் இல்லையாய்விடும். இன்ப அநுபவமும் இல்லை என்பதே தமது கொள்கை என்ப ரேல், அநுபவிப்பவனும் அநுபவமும் இல்லாதபோது அநுபவிக்கப்படும் பொருளும் இல்லை எனப்பட்டு அவர் வாதம் சூனியவாதமாம் என்க.

## இவ்வெண்பாவிற் போந்த பொருள் :—

முத்தியில் முதல்வனோடு கூடிய உயிர் அம்முதல் வனோடு ஒன்றாய்ப் போதலினால் அந்நிலையில் அறியும் பொருளும், அறியப்படும் பொருளும் இல்லை எனச் சிவாத்துவிதசைவரும் சுத்தசைவரும் கூறுவதை மறுத்து, உயிர் முதல்வனுடன் கூடி ஒன்றான இடத் தும் உயிர் அறிவதும் முதல்வன் அறியப்படுதலும் உண்டென்று விளக்கியவாறும்.

## இவ்வதிகரணத்தாற் போந்த பொருள்:—

இவ்வதிகரண வெண்பாக்கள் ஐந்தனுள் முதல் வெண்பாவால் "முதற்பொருள் வாக்கு மனோதீதம் என்றல் பொருந்தும் கோசரமாம் என்றல் பொருந் தாது" என்னும் மாயாவாதிகளையும், இரண்டாவது வெண்பாவால் "கோசரமாம் என்றல் பொருந்தும் வாக்குமனோதீதம் என்றல் பொருந்தாது" என்னும்

நையாயிகர் முதலியோரையும், மூன்றுவது வெண்பாவால் "பாவனைக்குக் கோசரமாம்" என்னும் பாதஞ்சலரையும், நாலாவது வெண்பாவால்" "ஆன்மஞானத்திற்கே கோசரமாம்" என்னும் சமவாதசைவரையும், ஐந்தாவது வெண்பாவால் "முத்தியிற் சிவமேயன்றி உயிரெனவேறு இன்மையின் உயிர்க்குக் கோசரமாதல் என்பது ஒன்றில்லை" என்னும் சிவாத்துவிதசைவர் முதலியோரையும் மறுத்து முதல்வன் வாக்கு மனோதீத கோசரமாய் நிற்கும் இயல்பை வலியுறுத்தியவாறும்.

இவ்வாறு முதல் மூன்று சூத்திரங்களினால் (பிரமாண இயலில் உண்டு என்று சித்தாந்தம் செய்த) பசு பாச பதிகட்கு இலக்கணம் கூறும் முறையில் நான்காம் சூத்திரத்தால் சகசமலத்து உணராது கிடக்கும் கேவலாவத்தையும், ஐந்தாம் சூத்திரத்தால் கருவிகளோடுகூடி விடயங்களை அறியும் சகலாவத்தையும், ஆறும் சூத்திரத்தால் பாசஞான பசுஞானங்களைக் கடந்து பதிஞானத்தால் சிவனை அறியும் சுத்தாவத்தையும் காட்டப்பட்டன.

**ஆறுஞ்சூத்திரம் முடிந்தது.**

**இலக்கணவியல்: பொதுவியல்பு முற்றிற்று.**

---

# ஏழாஞ்சூத்திரம்

## சிறப்பியல்பு — சாதனவியல்

## ஏழாஞ்சூத்திரம்

---

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சததே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

*இந்நூற் சூத்திரம் பன்னிரண்டனுள முதல் ஆறு சூத்திரம பொதுவதிகாரமும, பின ஆறு சூத்திரம் சிறபபதிகாரமுமாம. பொது அதிகாரச சூத்திரம ஆறனுள முதன் மூன்று பிரமாண இயலும, பின்மூன்று இலககணவியலுமாம. சிறப்பதிகாரச சூத்திரம ஆறனுள முன் மூன்று சாதனவியலும, பின மூன்று பயனியலுமாம. பொது அதிகாரம தூலாருநததி நியாயம பறறி (அதாவது கண்ணுககு எளிதிற புலப்படாத சூககுமமாகிய அருநததி நடசத்திரத்தைக காட்ட வேண்டில், அதனருகேயுள்ள தூலமான நட்சத்திரம ஒன்றைக்காட்டி அதன் மூலமாய் அவவருநததியைக்*

காட்டுமாறுபோல) முப்பொருளின் இயல்பைப் பிரமாணத்தாலும் இலக்கணத்தாலும் உணர்த்துவது. சிறப்பதிகாரம் அதனைச் சாதனத்தாலும் பயனாலும் உணர்த்துவது. சிறப்பியல்பு பொதுவியல்புபோல் இடையே நீங்குதலின்றி, எக்காலத்தும் ஒரு தன்மைத்தாயிருத்தலினால் அதனைக்கூறும் சிறப்பதிகாரம் உண்மையதிகாரம் எனப்படும்.

ஆராய்ச்சி அறிவால் அறிவது பொதுவும், அனுபவ வறிவால் அறிவது சிறப்புமாம். அன்றியும் பொதுவியல்பு தூலநிலையும், சிறப்பியல்பு சூக்குமநிலையுமாம். இவை முறையே தடத்தநிலையும் சொரூபநிலையும் எனினும் பொருந்தும். பதிக்குப் பொதுவியல்பு உயிர்களோடு அத்துவிதமாய்க் கலந்திருந்தல்; சிறப்பியல்பு சச்சிதானந்தமயமாய் நிற்றல். பசுவுக்குப் பொதுவியல்பு கருவிகரணங்களோடு கூடியிருத்தல்; சிறப்பியல்பு அவற்றினின்றும் நீங்கி உடனாய் நிற்கும் சிவமாய் நிற்றல்; பாசத்துக்குப் பொதுவியல்பு காரியரூபமாய் நிற்றல்; சிறப்பியல்பு காரணரூபமாய் நிற்றல்.

பொதுவதிகாரத்தில் பிரமாணவியலினால் முப்பொருளுண்மை (அதாவது பதிபசுபாசம் என்னும் முப்பொருள் உண்டு என்பது) சாதிக்கப்பட்டது. இலக்கணவியலினால் முப்பொருளின் இலக்கணம் கூறப்பட்டது.

உண்மையதிகாரத்தில் சாதனவியலினால் அம்முப்பொருள்களுள்ளும் விலக்கவேண்டியதை விலக்கி அதனால் வரும் துன்பத்தினின்றும் நீங்குதலும், கொள்ளத்

தக்கதைக்கொண்டு அதனால் வரும் இன்பத்தையடைதலுமாகிய பயன் பெறுவதற்கேதுவாகிய சாதனம் செய்யுமாறு கூறப்படுகின்றது. பயனியலால் பாசவீடும் சிவப்பேறுமாகிய பயனியல்பு கூறப்படும்.

இவ்வேழாஞ்சூத்திரம் உண்மையதிகாரத்துள் சாதனவியல் முதற் சூத்திரமாம். சாதனஞ்செய்த பின்னரே பயனுண்டாமாதலினால், இவ்வதிகாரத்தில் சாதனவியல் முன்னும் பயனியல் பின்னுமாக வைக்கப்பட்டது.

ஒன்றினை யறிந்தபோது அதனாலாய பயன் பெறுதற்குரிய முயற்சிசெய்ய லுறுவார்க்கு அதனைச் சாதிக்கு மாற்றல் தமக்குண்டென்பதும், சாதித்ததனால் வரும் பயன் இதுவென்பதும், அப்பயனை விளைத்தற்குரிய சாதனம் இதுவென்பதும், அப்பயன் வரும் வழியும் உணர்ந்தாலன்றி, முயற்சிசெய்ய மனமுண்டாகாது ஆதலால், இவ்வியலில் ஓதப்படும் சாதனஞ்செய்து அச்சாதனத்தாலாகும் பயனையடைதற்குரிய அதிகாரியினியல்பையுணர்தற்கும் இச்சூத்திரம் சாதனவியலில் முன்னா வைக்கப்பட்டது.

## இதன்பொருள்

சத்தெதிர் — (வாக்குமனாதீதமாகிய) சிவசத்தின சந்நிதியில்,- யாவையும் சூனியம் ஆகலின்—(உணர்ந்தவாகிய) அசத்தெல்லாம் பாழாகலின், -- சத்தே அறியாது — சத்தாகிய சிவம் (அசத்தாகிய பிரபஞ்சத்தை) அறியாது,— அசத்து இலது அறியாது—அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாதலினால் சத்தாகிய

சிவத்தையறியாது,— (ஆதலாற பாரிசேட அளவை யால) இருதிறன அறிவுஉளது — இருதிறன அறிவுள தொனறு உணடென்பது பெறபபடும. (அதாவது சதது அசத்தாகிய இரணடினையும அறியும அறிவை யுடைய ஒரு பொருள உண்டெனபது பெறபபடும),— ஆதலால் அபபொருளே,—இரண்டலா ஆன்மா — சததாதலும அசத்தாதலும ஆகிய இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள உயிராம (எ—று.)

பொது வதிகாரத்துள் இலககணவியலாகிய ஆறுஞ்சூத்திரததால "உணருருவசத்து" எனவும "இருதிறனலலது சிவசத்து" எனவும கூறி அசத் தினிலககணத்தையும சிவசத்தினிலககணத்தையும வரைசெயதுணாத்திய ஆசிரியா, இது அசத்து, இது சிவசத்து என்று அறியும பொருள் அவவிரணடினுள் ஒனறோ வேறோ என்னும ஐயம நிகழாமைவேண்டி, அசசூத்திரத்திறகுபபுறனுகவெடுத்து உண்மையதிகாரத் துசசாதனவியலாகிய இவவேழாஞ சூத்திரத்தில் சத்து அசத்து என்னும அவவிரணடினையும அறிவதும் அவ விரண்டின்வேறானதுமான (அதாவது சததும அசத் தும அல்லாததுமான) சதசத்தாகிய உயிரின் இயல்பை யுணாத்துமுகத்தால் சாதனஞ்செய்து பயன்பெறுதற குரிய அதிகாரியின இயலபை உணாத்துகின்றா.

"சத்தெதிா யாவையுஞ சூனியம" என்றது சுட்டுணாவின்றி நின்றறியுஞ் சிவசததின் முன்னாசு சுட்டியறியப்படும அசத்தாய பிரபஞ்சம விளங்கித் தோன்றாமையை; (இல்லாமையை யன்று) விளங்கித் தோன்றாமையாவது—இது குடம இது ஆடையென

கம்மவராற் சுட்டியறியப்படுவதுபோல் முதல்வனாற் சுட்டியறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். முற்றுணர்வுடைய முதல்வனுக்கு அசத்தையறியும் சுட்டுணர்வும் உண்டென்பதனால் வரும் குற்றம் யாதெனில், தன்னியல்பாகிய இயற்கை யுணர்வின்முன் பொதுவியல்பாகிய செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையால், முதல்வனுக்குச் சுட்டுணர்வும் உண்டென்பது அறியாதார் கூற்றும்.

சத்தே என்பதில் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சிவமும் பிரபஞ்சமும் ஆகிய இரண்டும் ஒன்றினை யொன்று அறியாதென விலக்கவே, எஞ்சிய உயிரே அவ்விரண்டினையும் அறியும் என்று கூறுதல் பாரிசேட அளவையாகும். உயிர் சத்தாகவேனும் அசத்தாக வேனும் தனித்து நிற்றலன்றிச் சார்ந்ததன் வண்ணமாயிருந்து (அதாவது சத்தொடு கூடிச் சத்தாயும் அசத்தொடு கூடி அசத்தாயும் நின்று) சத்து அசத்து ஆகிய இரண்டினையும் அறிதலால் சதசத்து எனப்பட்டது.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1. யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற்சத்தே யறியாது.
2. அசத்திலதறியாது.
3. இருதிறனறிவுள திரண்டலாவான்மா.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1. அரன் பாசத்தை அநுபவியான்.
2. பாசம் அரனை அநுபவியாது.
3. உயிர் அவ்வரனை யடையும். அநுபவிக்கும்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது — மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

2. இனி, அசத்தினுக்கு உணர்வின்று என்றது — அது தான் நிரூபிக்கில் இன்றாகலான்.

3. இனி இருதிற னறிவுள திரண்டலா வான்மா என்றது—இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டின்பாலு முளதாயுள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.

**இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் ஐந்து.**

## முதலதிகரணம்

**யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்**
**சத்தே யறியாது**

(இ—ள்) வாக்கு மனாதீதமாகிய சிவத்தின் சந்நிதியில் உணருருவாகிய அசத்தெல்லாம் பாழாகலின், சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை யறிதல் செய்யாது என்றவாறு. இதில்,

1. தன்னாற் கூறப்படும் பொருள்:

அரன் பாசத்தை யநுபவியான்.

2. ஐயப்பாடு:

பிரபஞ்சம் அரனால் அறியப்படுவதோ? அறியப் படாததோ?

3. பிறர்கூறும் பக்கம்:

பிரபஞ்சம் சிவனுக்குத் திருமேனியாகவும், மாயை சத்தியாகவும் விளங்கும் எனச் சுருதிகள் கூறுவதனுலும், சத்தின்முன் அசத்தெல்லாம் சூனியம் என்பது அவசித்தாந்தமாய் (அதாவது சைவ சித்தாந்தத்தோடு முரணி) மாயாவாதி கூற்றாய் முடியுமாதலினுலும், முற்றுணர்வுடைய முதல்வனுக்குப் பிரபஞ்சத்தைச் சுட்டியறியும் சுட்டுணர்வும் உண்டு என்பதனுல் வருவதோர் குற்றமில்லாமையானும் பிரபஞ்சம் முதல்வனுல் அறியப்படும் பொருளே.

இவ்வாறு கூறுவோர் சிவாத்துவித சைவர்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

சிவசத்தின் முன் அசத்தாகிய பிரபஞ்சம் சூனியம் என்றது, பிரபஞ்சம் மாயாவாதிகள் கூறுவதுபோல் இல்பொருளாமென்று கூறவந்ததன்று. சிவத்தின்முன் பிரபஞ்சம் விளங்கித்தோன்ருதென்பதே அதன் பொருள். விளங்கித் தோன்ருதென்பதும், பிரகாசியாதென்பதும், முனைத்திடாதென்பதும் ஒருபொருளன. விளங்கித் தோன்ருமையாவது இது குடம் இஃது ஆடையென நம்மவரால் சுட்டியறியப்படுவதுபோல் முதல்வனுற் சுட்டியறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். ஆதலால் சத்தெதிர் யாவையுஞ் சூனியம் என்பது அவசித்தாந்தமாகாது. முற்றுணர்வுடைய முதல்வனுக்குச் சுட்டுணர்வும் உண்டு என்பதனுல் வரும் தோஷம் என்னையோ? எனில், முதல்வனுடைய முற்றுணர்வு தன்னியல்பாகிய இயற்கையுணர்வாம். இது இடையே

நீங்குதலின்றி எக்காலத்தும் நிலைபெற்றிருப்பதனால் மெய்யுணர்வாம். சுட்டுணர்வாவது பொதுவியல்பாகிய செயற்கையுணர்வாம். இது இடையேதோன்றி மறைவதனால் பொய்யுணர்வாம். ஆதலால் முதல்வனுடைய தன்னியல்பாகிய இயற்கையுணர்வின் முன் பொதுவியல்பாகிய சுட்டுணர்வு பிரகாசியாது. அன்றியும், அசத்தை யறிவதாகிய ஏகதேச உணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃது இல்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவதன்றி இழுக்காகாது. இவ்வேதுக்களால், சத்தாகிய சிவத்தின் முன் அசத்தாகிய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாதென்பது துணியப்படும்.

5. இயைபு:

**உதாரணவெண்பா — 1**

**அன்னியமி லாமை யரற்கொன் றுணர்வின்றும்**
**அன்னியமி லானசத்தைக் காண்குவனேல்-அன்னிய**
**காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல [மாக்**
**மாணு வசத்தின்மை மற்று.**

இதன்பொருள்

அன்னியம் இலாமை அரற்கு—(தன்னுள் வியாப்பியமான, அஃதாவது தன் வியாபகத்தினுள் அடங்கி நிற்கும், பசுபாசங்களோடு) வேற்றுமையின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்கு,— உணர்வு — சுட்டியுணரக்கிடப்பதாகிய ஒருபொருள்,— இன்று ஆம் — இல்லை. (ஆகலான்) அன்னியமிலான் — அத்தன்மையனாகிய முதல்வன்,— அசத்தைக் காண்குவனேல் —

அசத்தாகிய பிரபஞ்சத்தை யறியலுறுவானாயின்,— அன்னியமாகானை — (அறிந்தாங்கறிவனன்றி நம்மனோரபோல) வேறாகச்சுட்டியறிவானல்லன,— கதிர முன் இருளபோல — சூரியன முன் இருள் விளங்கி நில்லாததுபோல,— அவன்முன மாறு அசத்து இனமை — அம்முதலவனெதிர நனமையில்லாத பிரபஞசம விளங்கி நிலலாது ஆகலான் என்றவாறு.

இவவதிகரணத்தால் வாக்கு மனாதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில உணருருவாகிய அசத்தெலலாம் பாழேயாகலாறசத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை யறிநது அநுபவியாது என்பது விளககபபட்டது.

## இரண்டாமதிகரணம்

---

அசத்திலதறியாது.

(இ—ள்) அசத்தாகிய பிரபஞ்சம அறிவிலலாத சடமாதலினல் சத்தாகிய சிவத்தையறியாது என்றவாறு. இதில,

1. தன்னுற் கூறப்படும் பொருள்:

பாசம அரனை அநுபவியாது.

2. ஐயப்பாடு:

காரணத்திறகுச் சிவத்தையறியும அறிவு உண்டோ? இலலையோ?

3. பிறர்கூறும் பக்கம்:

சத்தாகிய சிவம அசத்தாகிய பிரபஞ்சத்தை யறியாதாயினும, அசத்தென்று சொல்லபபடும தனு கரணம புவனம போகம் என்னும நான்கினுள் ஒன்றாகிய

காரணமானது, விளக்குப்போல விகாரமின்றி நிற்கும் ஆன்ம சந்நிதியில், பெத்த நிலையில், அசத்தாகிய விடயங்களை யறிந்தாற்போல், முத்தி நிலையில் சிவகரணமாய் நின்று சிவத்தையறியும். ஆன்ம சந்நிதியில் சடமாகிய கரணத்திற்கு அறிவு உண்டாதல் கூடுமோவெனின், கண்ணாடியின் சந்நிதியில் அதன் நிழலுக்குப் பிரகாசம் உண்டாவதுபோலும். அன்றியும், பதிஞானமும் பசுஞானமும் போலப் பாசஞானமும் ஒன்று உண்டெனப் படுதலால், பாசத்தை அறிவுடையதன்று என்றல் பொருந்தாது. ஆதலால் பாசம் சிவத்தையறியும் என்றல் அமையும்.

இவ்வாறு கூறுவோர் சிவசங்கிராந்தவாதிகள்.

சிவசங்கிராந்தமாவது:— ஆன்மாவின் சந்நிதியில் காந்தபசாசம் போல (அதாவது காந்தத்தையடுத்த இரும்புபோல) உடல் இயங்க, அதனைக் கண்ணின்று கருவிகளை விடயங்களை யனுபவிக்கும் மலம் நீங்கிய விடத்து, கண்ணாடியில் முகவொளி தோற்றுமாறு போல முதல்வன் திருவருள் ஆன்மாவினிடத்துச் சங்கிரமித்துத் தோன்றும். அப்போது, உப்பளத்திலிட்டவை யெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மாச் சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களும் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தையறியும் என்பதாம்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு.

பாசஞானம் என்பதைத் தூலமாய நோக்கும்போது அசத்துக்கு அறிவு உள்ளதுபோலத் தோன்றும். சந்தேக விபரீதமின்றிக் குற்றமற்ற காட்சியால் ஆராயுமிடத்து அதன்கண் அறிவில்லாமை விளங்கும். பாசம்

*வாயிலாக உயிரின்கண் நிகழும ஞானமே பாச ஞானம என உபசரித்துக கூறப்படுவதனால், அதனைப பாசத் திறகுள்ளதாகிய ஞானம என்று கொள்ளல அறியா தார கூற்றும. அன்றியும கண்ணாடியின் ஒளி நிழல போலத்தோன்றினதேயன்றி ஒளியின வேறாய நிழ லென ஒன்றிலலாமையால உயிரின் சந்நிதியில கரணம அறியும எனபதறகுக் கூறிய உவமை பொருந்தாது. ஆதலால பாசம சிவத்தை யறியாதென்பது துணியப படும.*

5. இயைபு.

**உதாரணவெண்பா—2**

**பேயததேர்நீ ரென்றுவரும பேதைக்கு மற்றணைந்த**
**பேயத்தே ரசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்**
**கண்டுணாவா ரிலவழியிற் காணு மசத்தினமை**
**கணடுணாவா ரிலலதெனக் காண்.**

இதன் பொருள்

*பேயததேர நீர என்று வரும பேதைககு—(பாலை நிலததிற காணப்படும கானல ஆகிய) பேயத் தேரை நீர எனறு கருதி (அதனையுணண) வருகின்ற (தாகவிடாய உடைய) அறிவிலலாதவனுககு,— மறறு அணைநத பேயததேர — (அதனையடுத்தபோது) தன்னால அணையபபடட அபபேய்த்தேர,—அசத்து ஆகும பெறறிமையின—(தான் முன்கருதியவாறு நீரா தலின்றிப) பொயயாந தன்மைபோல,—வாய்த்து — (ஞானசிரியன் கூறும உபதேசமொழி) கிடைததது,— அதனைககணடு உணாவார இல்வழியின்—அவவசததின*

இயல்பை ஆராய்ந்தறிவார் இல்லாவிடத்து,— அசத்து இன்மைகாணும்— (அவர்க்கு) அவ்வசத்தின் கண் அறிவில்லதாய அசத்தாந்தன்மை காணப்படுதலின்றி, அறிவுள்ளதாயச் சத்தாந்தன்மையே காணப்படும்,— கண்டுஉணர்வார் இல்லது எனக்காண — அவ்வுபதேச மொழி கிடைத்து அதனியல்பை ஆராய்ந்தறியவல் லார்க்கு அவ்வசத்து அறிவில்லதேயாம் என்றறிவார்க என்றவாறு.

இதனால், நெருங்கிப்பார்க்குமுன் பாலைநிலத்தில் நீர் இருப்பதாக மதித்த ஒருவன் அதனை நெருங்கிப் பார்த்தபின் அதில் நீர் இல்லை என்று துணிவதுபோல, குரவன் உபதேசமொழியைக்கொண்டு ஆராய்ந்தறியாத விடத்துக் கரணம் அறிவுடையதுபோலத் தோன்றி னும், உபதேசமொழிகிடைத்து ஆராய்ந்தறிந்த விடத் துக் கரணம் அறிவில்லாததேயாம் என்பது துணியப் படும் என்றவாறும்.

## மூன்றாமதிகரணம்

இருதிறனறிவுள திரண்டலாவான்மா.

(இ-ள்) சத்தும் அசத்துமாகிய இவ்விரண்டினை யும் அறியுந்தன்மைத்தாய், உபதேசியாய் (அதாவது அறிவிக்க அறிவதாய்,) நிலைபெற்ற சத்தும் அசத்தும் ஆகிய இரண்டினிடத்தும் அநுபவ அறிவுளதாய் உள்ள அதுவே சத்தும் அசத்தும் அல்லாத சதசத்தாகிய ஆன்மா என்றவாறு. இதில்,

இருதிறனறிவு என்னுஞ் சொற்றொடர் இரண்டாம வேற்றுமைத் தொகையாக இருதிறனையும (அதாவது சத்தையும அசத்தையும) அறியும அறிவு எனவும், மூன்றும வேற்றுமைத் தொகையாக இருதிறனால விளங்கிய அறிவு எனவும், ஏழாம வேற்றுமைத் தொகையாக இருதிறனிலுமுள்ள அறிவு எனவும மூன்று பொருளைக் கொடுக்கின்றது. இம்மூன்று பொருள்களும பின்வரும மூன்று உதாரண வெண்பாக்களால விளக்கப்பட்டிருக்கின்றன

1. தன்னுற் கூறப்படும் பொருள்:

உயிர் அரனை அடையும், அனுபவிக்கும்.

2. ஐயப்பாடு:

சத்து அசத்தையும அசத்துச்சத்தையும அறியாதாயின இவ்விரண்டினையும அறியும்பொருள் இவ்விரண்டின வேறாய உண்டோ? இல்லையோ?

3. பிறர்கூறும்பக்கம்:

சத்து அசத்தையும அசத்துச சத்தையும அறியாதாயின இவ்விரண்டினையும அறியும்பொருள் வேறில்லை. இவ்வாறு கூறுவோர் சிவாத்துவிதசைவர்சிவசங்கிராந்தசைவர் முதலாயினோர்

4 மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

சத்தும அசத்துமாகிய இவ்விரண்டினையும அறியும பொருள் வேறில்லையாயின இவற்றால யாதொரு பயனுமின்றாய இவை சூனியமாய் முடியும். ஆதலால்

இவ்விரண்டையும் அறியும்பொருள் (பாரிசேட அளவையால்) இவற்றின் வேறாய ஒன்று உண்டு என்பதும், அறிவே சத்தசத்தாகிய ஆன்மா என்பதும் பெறப்படும்.

இருதிறனறிவு என்னுஞ் சொற்றொடர்க்கு இரண்டாம்வேற்றுமைத் தொகைப் பொருள்கொண்டு முற்கூறிய சிவாத்துவிதசைவர் சிவசங்கிராந்தவாத சைவர் முதலியோரும், மூன்றாம் வேற்றுமைத் தொகைப் பொருள் கொண்டு ஆன்மா ஒருவர் அறிவிக்க வேண்டாது தானே அறியும் இயல்புடையது என்னும் சமவாத சைவர் ஈசுரவிகாரவாத சைவர் ஐக்கவாத சைவர் முதலியோரும், ஏழாம்வேற்றுமைத் தொகைப்பொருள் கொண்டு ஆன்மாவினறிவு சத்தோடு கூடுவதில்லை என்னும் பாடாணவாத சைவர் பேதவாத சைவர் முதலியோரும், ஆன்மவறிவு சத்தினோடு கூடியபோது ஒன்றாய்ப் போதலேயன்றி அதனிடத்தில் உள்ளதாகாது என்னுஞ் சுத்தசைவர் முதலியோரும் மறுக்கப்பட்டனர்.

இருதிறனறிவு என்பதற்கு, இருதிறனையும் அறியும் அறிவு என்று பொருள்கூறுங்கால், ஆன்மாவினறிவு சத்துப்போல் ஒருசேர அறியுந்தன்மையும் அசத்துப் போல் அறியாத தன்மையும் இன்றி, இருளின் தன்மையும் ஒளியின் தன்மையுமல்லாத கண்ணின் தன்மை போல், ஏகதேசமாய் அறியும் வேறாய தன்மையது என்பது பெறப்படும். இருதிறனால் விளங்கிய அறிவு என்று பொருள் கூறுங்கால், அந்த ஏகதேச அறிவும் ஆகாயத்தின் குணமாகிய ஓசையானது துணையுள்ள

விடத்து விளங்குவதுபோல, பெத்தத்தில் கருவியை யும் முத்தியில் திருவருளையும் துணையாகக்கொண்டு விளங்குந் தன்மையது என்பது பெறப்படும். இருதிற னிலுமுள்ள அறிவு என ஏழாம்வேற்றுமைத் தொகைப் பொருள் கூறுங்கால் துணையைக்கொண்டு விளங்கும் ஏகதேச அறிவும் சார்ந்த பொருளின் வண்ணமாய் விளங்கும் படிகம்போல அசத்தோடுசார்ந்த விடத்து அசத்தாயும் சத்தோடு சார்ந்தவிடத்துச் சத்தாயும், இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாய் அழுந்துந் தன்மை யது என்பது பெறப்படும். இதனால் ஆன்மாவின் சிறப் பிலக்கணம் கூறியவாறுமாம்.

5. இயைபு:

### உதாரணவெண்பா—3

**அருவுருவுந் தானறித லாயிழையா யான்மா**
**வருவுருவ மன்றகு முண்மை—யருவுருவாய்த்**
**தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது**
**தோன்றன் மலர்மணம்போற் றெக்கு.**

### இதன்பொருள்

ஆய் இழை ஆய் ஆன்மா—நுணுகிய நூற்பொருள் களை ஆராய்வதாகிய உயிரே,—அரு உருவம் அறிதல்—சத்து அசத்துஎன்னும் இரண்டினையும் அறிவதாகலான்,—அரு உருவம் அன்றாகும்—அஃது அவ்விரண்டுமன்றி அவற்றின் வேறாம்,— (அவ்வாறாயின் அவ்விரண்டினை யும் அறியும் உயிர்க்குத் தன் உண்மை அறியப்படுமோ, படாதோ என்று கேட்போர்க்கு அறியப்படும் எனில்,

தன்னோடுகூட மூன்றினையும் ஆன்மா அறிவது என்று கூறாமல் இரண்டினையும் அறிவது என்றல் பொருந்தாது. அறியப்படாது எனின் அறியப்படாதபொருள் சூனியம் எனப்பட்டுக் குற்றமாம். ஆதலால்),—உண்மை — அவ்வான்மாவின் உண்மைத் தன்மையானது,— அருவுருவாய்த்தோன்றி உடன் நில்லாது — சத்தும் அசத்துமாகிய அவ்விரண்டும்போல விளங்கித்தோன்றி அவற்றோடு ஒப்ப நிற்பதும் அன்றாய்,—தோன்றாது நில்லாது —விளங்காது சூனியமாய் நிற்பது மன்றாய்,— மலர் மணம்போல்தொக்கு தோன்றல் — மலரின்கண் வாசம் போல் அடங்கித் தோன்றுவதோரியல்பாம் (அஃதாவது மலரின்கணுள்ள வாசமானது அம்மலர்போல விளங்கித் தோன்றாமலும், விளங்காதுசூனியமாகாமலும் அதனின் அடங்கித் தோன்றுவதுபோல், சத்து அசத்தாகிய அவ்விரண்டும்போல் விளங்கித் தோன்றி அவ்விரண்டினோடு சமமாய் நிற்பதாகாமலும், விளங்காது சூனியமாய் நிற்பதாகாமலும், சத்தைச் சார்ந்த பொழுது சத்தாகவும் அசத்தைச்சார்ந்தபொழுது அசத்தாகவும், இவ்வாறு சார்ந்தபொருளின் வண்ணமாய் அடங்கித்தோன்றுவதோ ரியல்பாம்.) ஆதலால் அவ்வுயிர் அவ்விரண்டும்போல் தனித்தறியப் படுவதன்றி அவ்விரண்டினையும் அறியும் வழியால் அறியப் படுவதாம் என்றவாறு.

இவ்வெண்பாவினால் "இருதிறனறிவு என்பதற்குக் கூறிய மூன்று பொருள்களுள், ஆன்மா இரண்டினையும் அறியும் என்றதனை வலியுறுத்தி, அது அவ்விரண்டல்லாமை விளக்கப்பட்டது.

சுட்டியுணரப்படாமையால் சத்தை அருவென்றும், சுட்டப்படுதல்பற்றி அசத்தை உரு என்றுங் கூறினார். இழை யென்பது நூல். அது இவ்விடத்தில் சாத்திரத்தை யுணர்த்துகின்றது. ஆன்மாக்களுக்கு அறியும் தன்மை இருப்பதுபற்றியன்றோ வேதாகமம் முதலிய நூல்கள் உண்டாயின என அதனை வலியுறுத்தவேண்டி "ஆயிழையாயான்மா" என்றனர்.

## உதாரணவெண்பா — 4

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர் நீ சத்தாகாய் பேசி—லசத்துமலை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

## இதன்பொருள்

மயக்கமது உற்றும்— (நின் அறிவை விளக்குதற்குரிய வியஞ்சகம் இல்லாதபோது ஒரு விடயத்தை இன்னதென அறியமாட்டாது) மயக்கத்தையடைந்தும், —மருந்தின் தெளிந்தும்—(பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்க நோய்க்கு) மருந்தாய வியஞ்சகம் உள்ள போது அம்மயக்கம் நீங்கி அதனை இன்னதென நிச்சயித்தும், —பெயர்த்து உணர் நீ—இங்ஙனம் மாறிமாறி யுணர்ந்து வருகின்ற நீ,— பேசில் சத்து ஆகாய்— சொல்லுமிடத்துச் சிவசத்தோடு ஒப்ப அறியுஞ் சத்தியுடையாய் அல்லை,— அவ்வாறாயின் யான் அசத்தனோ என்பையேல்,—நீ அறிந்து செய்வினைகள் — (வியஞ்சகம் உள்ளபோதும்) நீ முன் அறிந்துசெய்த வினைகளை,—நீ

அன்றி அசத்து தான அறிந்து துய்யாமை — இப்பொழுது நீயே அறிந்து அநுபவிக்க வல்லாயன்றி நின்னின் வேறுபடும் அசத்தாகியதுமாகிய பாசம் அறிந்து அநுபவிக்க மாட்டாமையால், — அசத்தும் அல்லை — அந்நேரொப்ப அசத்தனுவாயு மல்லை — வேறு — (ஓசையாகிய குணத்தையுடைய ஆகாயம் போல, அஃதாவது ஆகாயத்திலுள்ள குணமாகிய ஓசை துணையுள்ள விடத்து விளங்கித் துணையில்லாத விடத்து விளங்காதவாறுபோல, வியஞ்சகம் உள்ள போது அறிதலும் அது இல்லாதபோது அறியாமையும் ஆகிய இரண்டுமுடையநீ) அவ்விரண்டிற்கும் வேறுபட்ட சித்சித்தாம் தன்மையுடையாய என்றவாறு.

இதனால் "இருதிறனறிவு" என்னுஞ்சொற்றொடர்க்கு முற்கூறிய மூன்று பொருள்களுள், ஆன்மா அறிவிக்க அறிவதாகிய உபதேசியாய் நிற்பதென்பதை வலியுறுத்தி அது சத்தும் அசத்துமாகிய இரண்டுமல்லாத சதசத்து என்பது விளக்கப்பட்டது.

மயக்கமது என்பதில் உள்ள அது என்பது பகுதிப் பொருள் விகுதி. ஈற்றிலுள்ள தான என்பது அசை. துவ்வாமை என்பது துய்யாமை என மருவியது. சத்தி யுடைய பொருள் சத்தம். அஃதில்லாப்பொருள் அசத்தம். சத்தம் அசத்தம் என்பன அம்மாறுகெட்டு சத்து அசத்து என நின்றன. ஆதலால் சத்து ஆகாய என்பதற்குச் சத்தியுடையாய அல்லை என்று பொருளுரைக்கப்பட்டது.

## உதாரணவெண்பா — 5

**மெய்ஞ்ஞானந் தனனில் விளையா தசத்தாதல்**
**அஞ்ஞான முள்ள மணைதலகாண்—மெய்ஞ்ஞானந்**
**தானே யுளவனறே தண்கடனீ ருப்புபோற்**
**றுனே யுளமுளவாத் தான.**

அந்நுவயம

*அஞ்ஞானம மெய்ஞ்ஞானநதன்னில அசத்தாதல் விளையாது. மெயஞ்ஞானநதானே உள அனறே தான் ஏய உளம உளவா, உளளம அணைதல் தணகடல்நீ உபபுபோல காண.*

இதன்பொருள்

*அஞ்ஞானம–மேறகூறிய மயககமாவது —மெய்ஞ் ஞானநதன்னில—ஒருபெறறித்தாய அறிவு எனபபடும் சிவததின் முன (அஃதாவது வேறுவேறாகவும விட்டு விட்டும அறியாது எவறறையும ஒருதனமையாகவும் நீங்காமலும அறிகின்ற அறிவுருவாகிய இறைவன் சந்நிதியில),— அசதது ஆதல — (சூரியன்முன் இருள் போல) நிறபதிலலை யாகலான்,— விளையாது — ஆண்டு உளதாதலினறி (அதாவது அவவிறைவனிடத்து உள தாகாமல),— மெய்ஞ்ஞானம தானே உள அன்றே— அசசிவம உளள அனறே (அஃதாவது எனறு சிவம உணடோ அன்றே),—தான் ஏய உளம உளவா–தான் பொருநதுதறகு உரிமையுடைய உயிர்கள் உளளனவாக, —உளளமஅணைதல — அவவுயிர்களைபபறறிநிறறல,— தணகடல நீர உபபுப்போல காண்—தண்ணிய கடலின் கண உளதாதலின்றி அககடலிடததுள்ளதாகிய நீரைப பறறிநிறகும உபபுபபோல என்றறிவாயாக எனறவாறு.*

இதனால் இருதிறனறிவு என்பதற்குக் கூறிய பொருள்கள் மூன்றனுள் இருதிறனிலுமுள்ள அறிவு என்றதனை வலியுறுத்தவேண்டி உயிருக்கு உண்டென்று கூறிய மயக்கம் அவ்வுயிரோடு சம்பந்தமுடைய முதல்வனுக்கு உண்டாகாதோ எனவும், அம்மயக்கந்தான் உயிர்க்கு எக்காலத்து வந்தது எனவும் ஆசங்கை நிகழா வண்ணம் இறைவனுக்கு மயக்கமில்லை என்பதும் இறைவன் என்று உண்டோ அன்றே உயிர்களும் உளவாயிருத்தலால் அம்மயக்கம் உயிருக்கு அநாதியாகவே உள்ளதென்பதும் விளக்கப்பட்டன.

"தண்கடல்நீர்உப்பு" என்பதில் கடல் என்பது நீர் தங்குமிடமாகிய வெளியாம். கடல் சிவத்திற்கும், நீர் உயிருக்கும்,உப்பு பாசத்திற்கும் உபமானங்களாம். கடல் (பூரண) வியாபகமும், நீர் (ஏக தேச வியாபகம் என்னும்) வியாப்பியமும், உப்பு (நீரளவில் வியாபகமான) வியாத்தியுமாம். இவ்வுதாரணத்தால், உப்பானது நீர்க்கு இடம் கொடுத்திருக்கும் ஆகாயத்தைப்பற்றாது நீரைப்பற்றி நிற்பதுபோல் அஞ்ஞானமாகிய மயக்கம் இறைவனைப்பற்றாது உயிரை அநாதியே பற்றி நிற்கும் என்பதும், முப்பொருள்களும் வியாபகவியாப்பியங்களாய் நிற்குமாறும், உயிர் சத்து அசத்து ஆகிய இரண்டன்பாலும் அநுபவ அறிவு உள்ளது என்பதும் விளக்கப்பட்டன.

இச்செய்யுளின் ஈற்றிலுள்ள தான் என்பது அசை.

இருதிறனறிவுளது என்பதற்கு இருதிறனையும் அறியும் அறிவு உளது என்று பொருள் கூறுங்கால்

இருதிறனாகிய சத்து அசத்து என்பன பிரமேயமும், அவற்றை யறியுஞ் சதசத்தாகிய உயிர் பிரமாதாவும், அவ்வுயிரின் அறிவாகிய சிற்சத்தி பிரமாணமும், அவ் வறிவு நிகழ்ச்சி பிரமிதியுமாம் என்பது பெறப்படும். (பிரமேயம்—அளக்கப்படும்பொருள். பிரமாதா— அளப்பவன். பிரமாணம்—அளவைக்கருவி. பிரமிதி— அளத்தல்.) இருதிறனால் விளங்கும் அறிவுளது என்று பொருள் உரைக்குங்கால், அசத்தால் அறிவு விளங்கும் போது தனக்கு வேறாய் நின்று விளக்குவனவாகிய காட்சி அனுமானம் உரை எனப்படும் அசத்தாகிய பாசஞானம் மூன்றும் தனக்கு வியஞ்சகங்களும், சத் தால் (அதாவது சிவத்தால் அறிவு விளங்கும் போது அன்னியமின்றித் தனக்கு ஆதாரமாய் உடன்நின்று விளக்கும் சிவஞானம் தனக்கு வியஞ்சகமுமாம் ஆத லால் அவையும் பிரமாணம் என்று உபசரித்துக் கூறப் படும் என்பதும், இருதிறனினும் அறிவுளது என்று பொருளுரைக்குங்கால் இரண்டிடத்தும் கேடின்றி, அசத்தான் அறிவு விளங்கி அசத்தை அறிந்தவிடத்து அசத்தினிடத்தும், சத்தால் அறிவு விளங்கிச் சத்தை யறிந்த விடத்துச் சத்தினிடத்தும் அதுவதுவாய் அழுந்திநிற்பது என்பதும்பெறப்படும்.

## இச்சூத்திரத்தின் தொகைப்பொருள்;

வாக்குமனாதீதமாய்ச் சுட்டுணர்வின்றி நின்றறியுஞ் சிவசத்தின்முன் சுட்டியுணரப்படுவதாகிய பிரபஞ்சம் விளங்கித்தோன்றாதென்பதும், அசத்தாகிய பிரபஞ் பஞ்சம் அறிவில்லாத சடமாதலினால் அது சத்தாகிய சிவத்தை யறியாதென்பதும், இவை யொன்றை

யொன்று அறியாதெனவிலக்கவே பாரிசேட அளவை யின்படி இவற்றையறியும் பொருள் வேறென்றிருத்தல் வேண்டும் என்பதும், அதுவே சத்தும் அசத்தும் ஆகாமல் சத்தையறியும்போது சத்தாகவும் அசத்தை யறியும்போது அசத்தாகவும் நிற்கும் இயல்புடைய சதசத்தாகிய உயிர் என்பதுமாம்.

ஏழாஞ்சூத்திரம் முடிந்தது.

---

# எட்டாஞ்சூத்திரம்

# எட்டாஞ்சூத்திரம்

**ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத**
**தமமுதல் குருவுமாய்த் தவத்தினி லுணாத்தவிட்**
**டன்னிய மின்மையி னரன்கழல செலுமே.**

ஏழாஞ்சூததிரத்தால சாதிததறகுரிய அதிகாரம தனககுணடென்றறிநத ஆனமாவுககுச சாதிததலால் வரும பயனையும, அதறகுச சிறநத சாதனத்தையும, அது வரும வழியையும் உணாத்தி, அவவான்மாவின ஞானமானது அசத்தால விளங்கி அசத்தினிடம் உளள தாய அசத்தினையறிநது நிறகும தனமையினையும, சத்தால விளங்கிச சத்தினிடம உளளதாய்ச சததினை யறிநது நிறகும தனமையினையும தரிசிககும முறைமை யினை உணாததுதல இசசூததிரத்தின கருததாம.

### அந்நுவயம்

தவததினில தமமுதல குருவுமாய,ஐமபுலவேடரின் வளாநது அயர்நதனை என உணாத்த, விடடு, அன்னிய மின்மையின், அரன் கழல் செலும.

## இதன்பொருள்

தவத்தினில— (ஆன்மாவானது தான் முனனே செய்துகொணட) புண்ணிய விசேடததால,—தமமுதல— (தனககு இதுவரையில வெளிபபடாது அநதரியாமியாய் உளநின்று உணாத்தி வநத) தன முதலாகிய பரமபொருளே,— குருவுமாய—இபபோது குருவடிவமுங்கொணடெழுநதருளிச (சிவதீககைசெயது),— ஐமபுலவேடரின வளாநது அயாநதனை என—(அரசகுமாரனாகிய)நீ ஐமபொறிகளாகிய வேடரோடு கூடியிருநது வளாநததனால நின பெருமை யறியாது மயங்கி இடாபபடடாய், (நினபெருமை இத்தனமையது) என,— உணாதத—அறிவிகக,—விடடு—(அறிநத மாததிரமே அவவேடரை) விடடு நீங்கி,— அனனியம இன்மையின அரனகழல செலுமஅநநியமினறி அநநியமாநதனமையில் நிலைபெறறு அமமுதலவன திருவடிகளை யடையும என்றவாறு.

ஆனமா எனபது மேலைசசூததிரத்தினறுமவருவித்து உரைககபபடடது. அரசகுமாரனாகிய நீ எனபது தோனறா எழுவாய். ஐமபுலம எனபது ஐமபொறிகளை யுணாத்தும ஆகுபெயா. வளாநது அயாநதனை—வளாநததனால் அயாநதனை. அயாததல் — மறத்தல். ஆன்மா தனமுதல என்னாது தமமுதல எனப பனமைபபாலிற கூறியது நான் எங்கள ஊருககுபபோவேன். நீ உங்கள் ஊருக்குபபோ எனபது போலாம. ஆதலினால அது பாலவழு வாகாது. குருவும என்றஉமமைஇதுகாறும உயிாககுயிராய் உண்ணினறுணாததியதுவுமன்றி என

இறந்தது தழுவியது. இறைவன் குருவடிவமுங் கொண்டுணர்த்தும் கருணையின் சிறப்பையுமுணர்த்தலால் அது சிறப்புமையுமாம். அன்னியமின்மையின்— அன்னியமின்றாந் தன்மையுடையதாகி. ஆன்மா ஐம்பொறிகளோடு கூடியிருக்கும்போதும், அவைகளை விட்டு நீங்கியபோதும் முதல்வனோடு பிரிப்பின்றி நிற்குமாயினும், பொறிகளோடு கூடியபோது முதல்வனை மறந்து நிற்கும். அவற்றைவிட்டு நீங்கினபோது இறைவனையறிந்து நிற்கும் அவ்வாறு இறைவனை அறிந்து நிற்றலே ரண்டு அரன் கழல்செலும் எனப்பட்டது. அரன் என்பது அந்தத் தம்முதல என்பதை யுணர்த்தும் சுட்டுப் பெயராமாத்திரையாய் நின்றது.

வெண்கொற்றக்குடையும், நவரத்தின கிரீடமும், சிங்காதனமும் அரசர்க்கேயுரிய அடையாளங்களாம். அதுபோலப் பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒரு பெரு வெண்கொற்றக் குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பான அறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர்முடியும் எவற்றினையும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்து மியல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும் பிறர்க்கின்றித் தனக்கே உரிமையாகச்சிறந்தமைபற்றிப்(பசுக்களுக்குப்பாசங்களை அரித்தலால் அரனெனுந் திருப்பெயருடைய) முதல்வனை மன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ் செல்வமுழுவதும் தனதேயாகக்கொண்டு அநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ் சித்தெனப்படுஞ் சாதியொப்புமையும்பற்றி ஆன்மாவை அரசகுமாரனாகவும், அவ்வான்மாவை அறிவுப்பெருஞ் செல்வமுழு

வதும வழிபறித்துககொணடு சிறுமையுறுததுதலும விதிவிலககை இழப்பித்து இழிதொழிலில நிறபித்தலு மாகிய இயலபு பறறி ஐமபொறிகளை வேடராகவும உருவகஞசெய்தார.

## இச்சூததிரததின அதிகரணங்கள

1. தவததினி லுணாத்த.
2. தம முதல குருவுமாய.
3. ஐமபுல வேடரினயாநதனை வளாநதெனை.
4. விடடனனிய மினமையினரன்கழல செலும.

## இச்சூததிரத்தின சூணிகை

1. உயிருககு நலலறிவு தவத்தினாலேயே வரும.
2. உயிருககுச சறகுருவாய வருவது அரனே.
3. உயிா பஞசேநதிரியங்களைப பறறுகை யினாலே தனனையும அறியமாடடாது.
4. உயிா பஞசேநதிரியங்களிலே பறறறறால தனனையும அறியும்

## இச்சூததிரததின் வார்த்திகம்

1. எண்டு இவவானமாககளுககு முறசெய்தவத் தான் ஞானம நிகழும எனறது — மேறசரியை கிரியா யோகங்களைச செய்துழி நனனெறியாகிய ஞானத்தைக காட்டி யல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்.

2. இனி இவவான்மாககளுககுத் தமது முக குனே குருவுமாய் உணாத்தும என்றது — அவன் அன்னியமின்றிச சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

3. இனி இவவான்மாக்கள ஐயுணாவுகளான் மயங்கித தமமை யுணரா என்றது-அவை தாமபளிங்கி லிட்ட வன்னமபோற காட்டிற்றைக்காட்டி நிறறலான்.

4. இனி இவவான்மா தனனை இநதிரியத்தின் வேறுவான காணவே தமது முதல் சீபாதததை யணை யும என்பது-ஊசல கயிறறறுல தாய்தரையேயாந துணையான.

## இச்சூத்திரததின் உதாரணவெணபா ஒனபது

## முதலதிகரணம்

தவத்தினிலுணாத்த.

(இ-ள.) (ஆன்மாவானது தான் முறபிறவிகளிற செய்த) தவமாகிய சரியை கிரியாயோக விசேடத்தால (முதலவன் குருவடிவங் கொண்டெழுநதருளி) யறிவிகக (அறியும் ) எனறவாறு. இதில்,

1. தன்றுற் கூறப்படும் பொருள் :

உயிருககு நல்லறிவு சரியை கிரியா யோகமாகிய தவத்தினுலேயே வருமு.

2. ஐயப்பாடு :

முத்திககுச சாதனம சரியை யாதிகளோ? ஞான மோ?

3 பிறா கூறும் பக்கம் :

(அ) முத்திககுச சாதனம சரியை யாதிகளாம.

(ஆ) முத்திக்குச்சாதனம் வேதத்துட் கூறிய வேள்வி முதலாயினவாம். (இவ்வாறு கூறுவோர் பாட்டாசாரியர்)

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

(அ) சரியை யாதிகள் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா.

(ஆ) வேள்வி முதலாயினவெல்லாம் அழிவெய்துவனவாகிய காமியப்பயன்களைத் தருவனவேயன்றித் தத்துவ ஞானத்தைத் தருவனவன்று. ஆதலால் மேலான ஞானநெறியொன்றே முத்தியைப் பயப்பதாம்.

5. இயைபு:

**உதாரணவெண்பா—1**

**தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து**
**பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த**
**நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்**
**கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு**

இதன் பொருள்

*தவஞ்செய்தார்—சரியை முதலியவற்றைச் செய்தவர்கள்,—தவலோகம் என்றும் சார்ந்து—அவ்வத்தவப் பயன்களைப் பயப்பிக்குஞ் சாலோக முதலிய பதங்களைத் தப்பாமல் அடைந்து (அங்குள்ள இன்பங்களை யனுபவித்து),— பற்று—(முன் உடம்பு இறக்குங் காலத்தில் உண்டாயிருந்த) அவாவினை,— பவஞ்செய்து*

அறுபபாா ஆக—(மீள நிலத்தின்கண) பிறநது நீககிக கொளளும பொருட்டு,— தவஞ்செய்த நறசாாபில வநது உதித்து (மீளத) தவஞ்செய்தற்குரிய உயாநத குலத் தினகண வநது தோனறி,—ஞானத்தை நணணுதலே— (தவககுறைவால அவ்விடயபபறறு வளராவண்ணம அறுத்துத்) தத்துவஞானத்தையடைவா. அவவாறடை தலே,— கறறாா சூழ — முதநூலகளைக கறறு ர து சூழசசி,—கணடுசொலலும அநநூற கருத்துணாநது சொல்லும. (அதாவது கறறாா தமது சூழ்சசியால் உணாநது சொலலுவா) எனறவாறு.

ரண்டு தவம என்றது சரியை கிரியாயோகங்களை. தவலோகம எனபது அசசரியை கிரியா யோகங்களின் பயனாகிய சாலோக சாமீப சாரூப பதவிகளை.

உயா குலத்திற பிறநது ஞானத்தையடைதல் முற சனனங்களிற செய்த தவமுயறசியுடையாாகளேயாம என்பாா "தவஞ்செயதாா" என்றனா.

இவவுலகத்தில உயிாகளாற செய்யபபடும வினைகள (நலவினையாயினும தீவினையாயினும) த த த ம க குரிய உலகங்களிற செலுத்தித் தத்தம போகங்களைக கொடுபபது எககாலத்தும தவறாது எனபதை யுணாநதுவாா என்றுந தவலோகஞ சாா்நது எனறாா.

பறறறுதறபொருட்டு வந்துதிபபா எனறதனால விடயங்களிற பறறுசசெல்லவிலலையாயின் இவவுலகத தில மீளவநது பிறவாமல் சாலோகமுதலிய பதங்களி லிருநதே ஞானத்தை யடைதலுங்கூடும என்பதறிக.

தவஞ்செயயினும ஞானம உணடாயினனறிப் பறறு முறறினும அறாது. ஆதலால இறககும்போது ஞானமடையாதார மனம விடயத்திற பறறும. பறறவே, அதனையனுபவிப்பதறகுத துணையாகி எஞசி நின்ற உடல் வினையோடும பிறநது அனுபவிதத பினனரே அபபறறறுதலகூடும. ஆதலால பவஞ்செயது பறறறுப்பார என்றார.

தவஞ்செயதார மனம நல்விடயங்களையே பறறு தலால் அவாகள அபபறறுக காரணமாகப பிறநதிடில சிறநத பிறவியே யெய்துவா. ஆதலால தவஞ்செய்த நற சாரபில் வநதுதிதது என்றார.

(இழிதொழிலகளைச செயபவாகளாகிய) இழிகுலத தோர தததுவஞானத்திறகுரியரலலா ஆதலால், நற சாரபில வநதுதித்து ஞானத்தை நணணுதலே என்றார.

தவமுதிரசசியுடையாரககு இறககுந்தறுவாயி லிருந்த பற்றனது மறுபிறபபில இலேசாய் அனுப விததுக கழிவதன்றி வளாவதில்லாமையால் அமமறு பிறபபிலேயே அவாகளுககு ஞானமுணடாம ஆதலால உதிதது ஞானத்தை நண்ணுதலே யென்றார.

இவையெல்லாம வேதாகம நூறறுணிபெனபார் கறறார சூழ் கண்டு சொலலும என்றார. ஆம அசை

**உதாரணவெண்பா — 2**

**பசிததுணடு பின்னும பசிப்பானை யொககு**
**மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த**
**விருவினை யொப்பி லிறப்பி றவததான்**
**மருவுவஞ ஞானத்தை வந்து.**

## இதன்பொருள்

இசைத்து வருவினையில் இன்பம—அறநூலகளிலே சொலலபபடடு வருவனவாகிய புண்ணியபபயனுகிய இனபம,—பசித்து உண்டு பினனும பசிப்பானை ஒககும—முனனாபபசிததது உண்டு பினனும பசிபபானுககு அவ் வுணவால வரும இனபத்தைத யொககும (ஆதலால),—இசைதத இருவினை—சொலலபபபட்ட புண்ணிய பாவங் களிரணடும,—இறபபில தவத்தால ஒபபில—கெடுதலில லாத சரியை கிரியாயோகங்களாகிய தவத்தால் நேராக ஒத்தால்,—வந்து ஞானத்தை மருவுவன் — (அத்தவப பயனுகிய பதமுத்திகளை யனுபவித்து அபபதங்களி லிருநதே ஞான நெறியைத் தலைபபடுவன. அவை அங்ஙனம நேராகாவிடின் மீள நிலத்தினகண்) வந்து (வினையொபபு நிகழ்ந்து குரவன திருவருளால ஞானத் தைத் தலைபபடுவன்) என்றவாறு.

இவவெண்பா, பசுககள பலவாயிருப்பினும அவற்ருல் தரப்படும் பால் ஒன்றேயாவதுபோல, நல் வினைகள் பலவாயிருபபினும அவறருல் விளையும புணணியம ஒன்றேயாக, அவற்றுள வேள்வி முதலிய வறறை யொழித்துச சரியை கிரியா யோகங்களைமாத் திரம ாண்டுத தவம எனறு சிறபபித்துக் கூறியதற்குக் காரணமயாதோ என்னும ஆசங்கையை நீககி, ஏதுவை வலியுறுத்துகின்றது. அறநூலிற கூறப்படும நல்வினை யின் பயனெல்லாம அழிவெய்துவன எனபதறகு அவ் வறநூலே சான்றென்பார இசைத்து வருவினை என்ருர. அதாவது, வேள்வி முதலியவற்றை விதித்த

அறநூலே அவற்றிற்குப் பயன் காமியம் என்பதை யும் உடன் கூறுவதனாலும், காமியப் பொருளெல்லாம் அழிவெய்துவனவாதலாலும், அழிவெய்தும் பயனைத் தரும் புண்ணியங்கள் அழியாமல் நிலைபெற்ற ஞானத் தைத் தரமாட்டாவென்றவாறும்.

சரியை கிரியா யோகங்களால் வரும்பயன் அவை போல் அழிவதன்றென்பார் இறப்பில் தவம் என்றார்.

இசைத்துவருவினையிலின்பம் நிலைபெறுமை, முன்னர்ப் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ் வுணவால் வரும் இன்பத்தை யொக்கும் — எனவே, இறப்பில் தவத்தால் வரும் இன்பம் நிலைபெற்றிருத்தல் பசித்துண்டு பின்னர்ப் பசியாதாராகிய தேவர்களுக்கு அவ்வமிழ்தவுணவால்வரும் இன்பத்தை யொக்கும் என்றவாறுமாயிற்று.

சரியை முதலியவற்றிற்குச் சிறந்த பயன் ஞான மேயாகலாற் சாலோகம் முதலிய பதமுத்திகள் அவாந் தரப்பயனே.

## இரண்டாமதிகரணம்

தம்முதல் குருவுமாயுணர்த்த

(இ—ள்.) தமக்கு அந்தரியாமியாய் உள்நின்று இதுகாறும் உணர்த்திவந்த சிவபரம்பொருளே இப் பொழுது குருவடிவமுங் கொண்டெழுந்தருளி அறி விக்க உயிர் அறியும் என்றவாறு. இதில்,

1. தன்னாற் கூறப்படும் பொருள் :

உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

2. ஐயப்பாடு :

சற்குருவாய் (அதாவது ஞானகுருவாய்) வருவது கடவுளோ? நம்மிலொருவரோ?

3 பிறர்கூறும் பக்கம்:

1. உயிர்களுக்குத் தோன்றும் ஞானமானது ஓர் ஆசிரியன் உணர்த்த உண்டாதலேயன்றித் தானே யுண்டாதலில்லை. அவ்வாசிரியன் ஏனைய நூற்பொருள்களை யுணர்த்தும் நம்மனோரில் ஒருவனாதல் அமையும். (இவ்வாறு கூறுவோர் சாங்கியர் நையாயிகர் முதலியோர்.)

2. அரும்பினின்று மலரும் மலரினின்று காயும் காயினின்று கனியும் தாமேயுண்டாவதுபோலச் சரியை கிரியாயோகங்களின் முதிர்ச்சியால் பிறிது காரணம் வேண்டாது மெய்ஞ்ஞானம் தானேவிளையும். ஆதலால் மெய்ஞ்ஞானத்தை யுணர்த்த அரன் சற்குருவாய் வரவேண்டுவதில்லை.

3. அழியாத திருமேனியையுடைய முதலவன் மாயையின் காரியமாயழிகின்ற வடிவத்தைப் பொருந்தான். பொருந்துவனெனில், அவன் நம்மனோரில் ஒருவனாய் முடிவன். ஆதலால் முதலவனே சற்குருவாய் வருவன் என்றல் பொருந்தாது. முதல்வன் குருமூர்த்தியை யதிட்டித்து (அதாவது ஆதாரமாகக்

கொண்டு) நின்று பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு ஞானத்தை உணர்த்துவன் என்பதே பொருத்த முடைத்து; இதுவே ஆகமங்களிற் கூறியதுமாம்.

### 4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

சரியை கிரியா யோகங்களை முறையே யனுட்டித்து அதனால் மலபரிபாகம் பெற்ற உயிர்களின் பக்குவத்தை யறிந்து உணர்த்துதல் அதுகாறும் உண்ணின்றுணர்த்தி வந்த முதல்வனுக்கே கூடுமன்றி ஏனையோர்க்குக் கூடாது. ஆதலால் உயிர்க்கு ஞானாசிரியனாய் வருவது அரனே.

அரும்பினின்று மலரும், மலரினின்று காயும், காயினின்று கனியும் உண்டாவனவாயினும், அரும்பு மலர் காய் கனிகளுக்குச் சூரியனுதவி இன்றியமையாததுபோல, உயிர்கள் சரியை கிரியா யோகங்களை யநுட்டித்து அதன் பயனாக ஞானத்தை யடைவதற்கும் இறைவன் திருவருள் இன்றியமையாததாம்.

### தேவாரம்

படுவிப்பா யுனக்கேயாள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் தோலுடுத் துழல்வானே
கெடுவிப்பா யல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடைநீ யன்றே

இத்தமிழ் வேதப்பனுவலால் இறைவன் உயிர்கள் சரியை கிரியா யோகங்களைச் செய்து தனக்கு ஆட்படுமாறு செய்வது மாத்திரமன்றி, அவைகட்கு ஞானகுருவாய்வந்து தனது கேடிலாப்பொன்னடிக்கே விடுவித்தலாகிய கருணைத்திறமும் விளங்கும். ஆனால், இறைவன்

உயிர்களிடம் பாலில் நெய்போல் மறைந்திருந்து அவைகளைச் சரியை கிரியா யோகங்களிற் செலுத்துவன். சரியை கிரியா யோகங்களைச் செய்து மலபரிபாகம்பெற்ற பின் தயிரில் நெய்போல ஞானகுருவாய் வெளிப்பட்டு உண்மை ஞானத்தை யுணர்த்துவன்.

### தேவாரம்

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறையநின் றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோ னட் டுணர்வு கயிற்றினுன்
முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே.

இறைவன் ஞானகுருவாய் வரும்போது மாயா காரியமாகிய சரீரத்தை யதிட்டித்து நிற்காமல் குருவாகிய சுத்தான்ம சைதன்னியமே (அதாவது மலமாசு நீங்கிய உயிரையே) தனக்குச் சொரூபமாகக்கொண்டு நிற்கும். அன்றியும், இறைவன் திருமேனியாகக் கொண்டருளும் ஆன்மசைதன்னியம் இறைவனைச் சார்ந்து அவ்விறைவன் றன்மையை யடைந்துவிட்டது. அவ்வான்ம சைதன்னியம் தங்கும் இடமாகிய சரீரமும் மாயாமயமாயிருப்பதொழிந்து அருள்மயமாய்ப் பொலிந்திலங்கும்.

இறைவனுடைய அதிட்டானம் பொதுவெனவும் சிறப்பெனவும் இருவகைப்படும். இவற்றுள், பொதுவதிட்டானமாவது (பாலில் நெய்போல) மற்றெல்லாவுயிர்களிடத்து மறைந்து நிற்றல், சிறப்பதிட்டானமாவது தயிரில் (நெய்போல) ஞான குருவினிடத்து அவர் தமக்கு விளங்கி, கலப்பினுல் ஒன்றாயும் பொருளின்

தனமையால் வேருயும நிற்றல். இது ஆவேசபககம எனவும சொலலபபடும. (பேய்பிடியுண்டவனிடத்து அவன் செயலொழிநது அபபேயின செயல விளங்கி நிற்றல ஆவேசமாம) ஆகமங்கள் கூறியதும இச சிறப்பதிட்டானத்தையேயாம

5. இயைபு

**உதாரணவெண்பா — 3**

**மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்**
**கஞ்ஞான வச்சகலாக் ககுருவாய—மெயஞ்ஞானம்**
**பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருககு**
**முன்னுணாததுந தான்குருவாய முன.**

**அநநுவயம்**

விஞ்ஞானகலாககு தானே மெயஞ்ஞானம விளையும. அன்றிப் பிரளயாகலருககுத தான் குருவாய் முன் உணாத்தும அஞ்ஞான அசசகலாக்கு அககுருவாய்ப பின் மெய்ஞ்ஞானம உணாத்தும் முன்.

இதன்பொருள்

விஞ்ஞானகலாக்குத் தானே மெய்ஞ்ஞானம விளையும — அம்முதல்வன் (மூவகை ஆன்மாக்களுள்) விஞ்ஞானகலருககுத் தனமையில நினறவாறே (அதாவது உளநின்றபடியே) தத்துவஞானத்தை விளைவிபபன்,— அன்றிப பிரளயாகலருக்குத் தான் குருவாய முன் உணர்த்தும — அவ்வாறன்றிப பிரளயாகலருககு நாற்ருேளும் முககண்ணும கறைமிடறும முதலிய உறுப்புகளோடு கூடி முத்தொழில் நடத்திநின்ற தன் இயறகை வடிவே குருவடிவாககாட்டி முன்னுக நின்று

தத்துவஞானத்தை உபதேசித்து உணர்த்துவன்,— அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குரு ஆய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் — அவிச்சையை உடைய சகலருக்கு அச்சகலர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் பின்னுக மறைந்து நின்று தத்துவஞானத்தை உணர்த்துவன,— முன் — அவ்வேறுபாட்டையறிவாயாக என்றவாறு.

முன் என்றது முன்னாகிய முதல்வன் என எழுவாயாய் நின்று உணர்த்தும் என்னும் பயனிலை கொண்டதெனலுமாம்.

விளையும்—விளைவிக்கும். தன்மையில் விளையும்—தன்மையில் நின்றவாறே விளைவிக்கும். எளிதில் சமைக்கப்படுதலை நோக்கி அரிசி தானே வெந்தது என்பதுபோல, விஞ்ஞானகலர்க்கு மெய்ஞ்ஞானம் எளிதில்விளைவிக்கப்படுதலைநோக்கித "தானேவிளையும்" என்றார். மெய்ஞ்ஞானம் என்பது வீடுபயக்கும் உணர்வை.

அஞ்ஞானம் என்பது ஆணவத்தைக் குறிக்குமாயினும், இவ்விடத்தில் சகலர்க்கே அடையாகக் கூறப்பட்டிருத்தலால் அவிச்சையென்றுரை செய்யப்பட்டது. அவிச்சையாவது மாயாமலத்தின் காரியமாகிய மயக்கமாதலால் இவ்விடத்தில் மாயாமலம் அஞ்ஞானம் என்னப்பட்டது.

அச்சகலர் என்றது தவஞ்செய்தார் என்று முற்கூறிய சகலரையும், அக்குரு என்றது இவ்வதிகரணத்து மேற்கோளிற் கூறிய குருவையும் சுட்டியவாறும்.

தானேவிளையும் என்றது விஞ்ஞானகலர்க்குத் தன்மையில் நின்று உணர்த்துதலையும், முன் உணர்த்தும் என்றது பிரளயாகலருக்கு முன்னிலையில் நின்று உணர்த்துதலையும், பின் உணர்த்தும் என்றது சகலர்க்கு படர்க்கையில் நின்று உணர்த்துதலையும் முறை செய்து உணர்த்தியதாகும்.

விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவருள், சகலர்க்குணர்த்துங்கால் இயற்கைவடிவொழித்து பிறிதொரு வடிவத்தை ஆதாரமாக நின்று உணர்த்துதலால் அது சாதாரம் எனப்படும். ஏனையிரண்டும் நிராதாரம் எனப்படும். சாதாரம்—ஆதாரத்தோடு கூடியது. நிராதாரம்—ஆதாரமில்லாதன (ஆதாரம்—இடம்)

விஞ்ஞானாகலர் என்பது விஞ்ஞானகலர் என மருவியது. விஞ்ஞானகலர் — விஞ்ஞானத்தால் கலையற்றவர். பிரளயாகலர் — பிரளயத்தில் கலையற்றவர். சகலர் — கலையோடு கூடினவர். இவை காரணப் பெயர். விஞ்ஞானகலர் ஆணவபந்த மொன்றுமே யுடையவர். பிரளயாகலர் ஆணவம் கன்மம் என்னும் இரண்டு பந்தமுமுடையவர். சகலர்—ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று பந்தமுமுடையவர். இனி, விஞ்ஞானகலர் அநாதியே ஆணவமல பந்தமாத்திர முடைய விஞ்ஞானகலரும், அனுபவத்தாலாயினும் விஞ்ஞானத்தாலாயினும் யோகத்தாலாயினும் சந்நியாசத்தாலாயினும் தீக்கையாலாயினும் இடையே மாயா பந்தமும் கன்மபந்தமும் முழுவதும் நீங்கி, அசுத்த மாயையின்மேல் உள்ள புவனங்களில் அனுபவிப்பன வாகிய போகங்கட்கு ஏதுவாய்நின்ற ஆணவமலபந்தம்

ஒன்றே உடையராகிய விஞ்ஞானகலரும என இரு வகைபபடுவர. பிரளயாகலர அநாதியே ஆணவமலமும கன்மமலமுமாகதிர முடைய பிரளயாகலரும, இடையே பரிபககுவ விசேடததால மாயாபநத மாத்திரம நீங்கி ஏனை இரணடு முடைய பிரளயாகலரும என இருவகைப படுவா. சகலா தேவா மககள முதற பலவகைபபடுவர். விஞஞானகலருககுரிய புவனங்கள அசுத்தமாயைககும சுதத விததைககும இடையே உளளன பிரளயாகல ருககுரிய புவனங்கள அசுததமாயை முதல அராகம ஈருன தததுவங்களில உளளன சகலருககுரிய புவன னங்கள மூலபபகுதி முதல பிருதிவி ஈருன தத்துவங் களில உளளன.

## உதாரணவெண்பா—4

**அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்**
**செறியுமா முன்பின் குறைக—ளெறியிற்**
**குறைவுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின**
**குறைவில்சகன் சூழகொள பவர்கது. [வீடென்**

## அந்நுவயம்

உளங்கள் நெறியின அறிவிகக அன்றி அறியா. குறைவு இல் சகன் சூழ் கொளபவாககு குறைகள் முன பின செறியுமாம. குறைவு உடைய சொல் கொளளார் கொளபவததின வீடு (ஆம) என்.

## இதன்பொருள்

உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா— உயிர்கள் (சாரந்ததன வண்ணமாயிருநது அறியும்

இயலபினவாதலால்) தத்தமககுரிய படிவழியின் வைத்து (முதலவன்) அறிவித்தாலனறி அறியார,— ஆதலால்—குறைவு இல சகனசூழ் கொளபவாககு — ஞானத்தாற குறைபாடிலலாத சககடவுளது உபதேச மொழியைககொணடுணருமபிரளயாகலாககும சகலாக கும,—குறைகள் முனபின் செறியுமாம—(அறிவித்தா லறிதலாகிய) குறைகள் முன்னிலையினும பின்னிலை யினும் நிகழவனவாம,— குறைவு உடைய சொல கொள்ளார் கொளபவத்தின் வீடு (ஆம) என — (பல வாறறானுஞகெடடுச சிநதித்தனறித தெளியமாடடாத) குறைபாடுடைய நூல வேணடாத நுண்ணுணாவுடைய விஞ்ஞானகலருககு முதல்வனற கொளளபபடட தன உணமை மாத்திரையின (அதாவது நிராதாரமாகிய சொருப நிலை மாத்திரத்தால) வீடு பயககும உணாவு உணடெனறறிவாயாக என்றவாறு.

இவ்வெணபாவால, உயிாகள் தத்தம பககுவத் திற் கேறறவாறு படிமுறையில் வைத்து அறிவித்தா லன்றி அறியாவாதலால, முதலவன விஞ்ஞானகலாககு அறிவுக்குள அறிவாய் உள்நினறும, பிரளயாகலருககு உருவத்திருமேனிகொணடு முன்னின்றும, சகல ருககு அசசகலர் வடிவுதாங்கி அதில மறைநது பின் நின்றும் உணாத்துவன் என்பது விளககபபடடது.

குறை — இன்றியமையாமை. பவம — உணமை. வீடு—வீடு பயககும உணாவு. சூழ்—சூழசசி (அதா வது நுணணுணர்வைப) பயககும உபதேசமொழி. கொள்ளார—கொள்ளாககு.

## உதாரணவெண்பா — 5

இலலா முலைபபாலுங கண்ணீரு மேந்திழைபால்
நலலா யுளவாமா னீாநிழலபோ—லில்லா
அருவாகி நினருனை யாரறிவாா தானே
உருவாகித தோனருனே லுற்று

### இதன்பொருள்

*நலலாய-தவததால நனமையுடைய மாணுககனே,—ஏநது இழைபால முலைபபாலுங் கண்ணீருமை இலலா உள ஆம—ஏநதிய விழைகளையுடைய ஒரு பெணணுககு (ததன் குழநதையினிடத்துளள அருவாகிய அன பினைப பிறா அறியுமாறு வெளிபபடுததும அவவன பினுருவாகிய) முலைபபாலும கண்ணீரும (குழநதை தைபககாணுமுன) இலலாதனவாய (கணடபின்) உள்ளன வாம. (அதுபோல),—நீா நிழலபோல இலலா அரு ஆகி நின்றனை — நீரினிடததுளள நிழலபோல (உயிாகளி டதது வெளிபபடடுத தோன்றுதல) இலலாத அருவ மாய் நின்ற முதலவனை,— தானே உருவாகி உறறு தோன்றுனேல ஆரறிவாா — அவனே குருவடிவாய வநது தோனறிநினறு உணாத்தாருயின யாாதாமறி வாா (ஒருவருமிலலை) எனறவாறு.*

*ஆல அசை. நீரானது தனனிடததது வசிககுமை உயிாகளுககு இடங்கொடுத்தலினால நீரினிடத்தில வெளியுணடெனபதுமை, வெளியுணடெனவே அங்கு நிழலுணடெனபதுமை பெறபபடுமை. அநநிழல வேறுநில லாது நீரினகண் விரவிநிறறலின் நீாபோலப புலப்படா தாயிறறு. அதுபோலச் சிவைசதன்னியமுமை யான்*

என்னும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்மசைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்றென்பார் "நீர் நிழல்போல உற்று இல்லா வருவாகி நின்றானே" என்றார்.

## மூன்றுமதிகரணம்

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தென.

(இ-ள்.) (முதல்வன் குருவடிவங்கொண்டெழுந்தருளி அரச குமாரனாகிய நீ) ஐம்பொறிகளாகிய வேடரோடு கூடியிருந்து வளர்ந்ததனால் நின் பெருமையறியாது மயங்கி இடர்ப்பட்டாய் (நின்பெருமை இத்தன்மைத்து) என்று உணர்த்த (உயிர் உணரும்) என்றவாறு. இதில்,

1. தன்னுறை கூறப்படும் பொருள்:

உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது

2. ஐயப்பாடு:

பஞ்சேந்திரியங்கள் தத்துவ ஞானத்தை மறைக்குமோ? விளக்குமோ?

3. பிறர் கூறும் பக்கம் :

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகள் பசுகரணங்களாக நின்று உலகப்பொருள்களை அறியும் அறிவை விளக்குவதுபோல், சிவகரணமாய்

நின்று தததுவஞானத்தை விளககுதலுங்கூடும. ஆத லால தத்துவஞானத்தை விளககுதறகு முதலவன குருவுமாய வருதல வேணடாம. இவவாறு கூறுவோா சிவசங்கிராநதவாதிகள.

4. மறுததுரைககும் சிந்தாந்தததுணிபு:

ஐமபொறிகள் அறிவை விளககுமாயினும, அவற றால விளககபபடுவது விடய விளககமேயன்றி ஆன்மா வின உண்மை விளககமனறு அனறியும ஒவவொரு இநதிரியமும ஒவவொரு விடயத்தையே யுணாத்தும. ஒரு இநதிரியம உணாததும விடயத்தை மறறோிநதிரி யம உணாத்தாது ஆதலால உயிரைமயாககி விடயக் காடசி யொனறையேதரும ஐமபொறிகளால ஆன்மா வினியலபு விளங்கமாட்டாது. முதலவனே குருவடிவங் கொணடெழுநதருளி உணாததுவன.

5. இயைபு :

உதாரணவெண்பா—6

**பனனிறங் காடடும் படிகமபோ லிநதிரியந்**
**தனனிறமே காடடுந் தகைநினைநது — பனனிறத்துப்**
**பொயப்புலனை வேறுணர்ந்து பொயபொயயா மெய**
**மெயப்பொருட்குத தைவமாம வேறு. [கண்டான்**

இதன்பொருள்

பல நிறம காடடும படிகமபோல இநதிரியம தன நிறமே காடடும தகை நினைநது — (தனனைசசாாநத) பலவேறு வகைபபடட வனனங்களையே தனனிடத்துக் காடடும இயலபுடைய படிகமபோல, (ஆன்மா தன்னைச

சாரந்த) இந்திரியங்களினியலடைபயே தனனிடத்து விளககுவதாகிய தனது (சாரநதன வணணமாயிருக குமை) தனமையை முனனாச சிநதிததுணாநது கொணடு (பின்பு),— பலநிறததுபொயபுலனைவேறு உணாநது—பலவேறு வகைபபடட இயலபுடைய பொது வியலபைச செயயும இந்திரியங்களைத் தனககு வேறுககககணடு, — பொயபொயயா — அவறறுலாகிய பொதுவியலபு பொய்யாய ஒழியுமாறு,—மெயகணடான்—தனது சிறபபியலபை உணாநதாஞயின்,—வேறு மெய பொருடகு தைவம ஆம — (அவன அசத்தாகிய அப பொறிகளுககு) வேறுகிய சிவபரமபொருளுககு அடிமையாய, அபபரம பொருளினியலபு தனனிடத்து விளங்கச செய்வன. அபபொழுது முன் விளங்கிய பொது இயல்பு தனககு வேறுபொழியும என்றவாறு.

இதில், பொய் எனபது பொது வியலபையும, மெய் எனபது சிறபபியலபையும குறிப'னவாம.

தைவம எனபது வடமொழிபபகுபதம இது தேவனது உடைமை எனனும பொருளில சிவத்துககு அடிமை எனறதைக குறித்து நினறது.

அடிமையாம எனபது ஆனமாவானது கருவிகளைக கழித்த பினனாக கழிக்கபபடாமல் என்றும உடனுய் வியாபகமாய் நிற்கும சிவததுள் வியாபபியமாய் அடங்கிநின்று சிவானநதத்தை அநுபவித்தலாகியசிறப பியல்பை.

இவ்வெண்பாவினுல் கருவிகள் உள்ளவிடத்து அககருவிகள விடயத்தைக காட்டிநிறறலின குருவாய்

வாதுணாததினும உண்மை ஞானதனைத அறிய முடியாது. கருவிகள நீங்கியவிடத்துககேவலாவத்தை வாது கூடும ஆதலால் தன உணமையாகிய உணமை ஞானத்தைத அறிவதெவவாறு என்னும ஆசங்கை நீககுதறகு, அககருவிகள உளளவிடத்தே அவறறின் இயலபைப பொதுவியலபென்று கணடுகழிககும உபாயத்தால் சிறபபியலபாகிய தன் உண்மையை அறியலாமென்று கூறி அவவிந்திரியங்கள காட்டிறறைக் காட்டி நிறறறகு இருககிலலையென ஏதுவை வலியுறுத் தியவாறுயிறறு.

## நான்காமதிகரணம்

விட்டன்னிய மின்மையி னரல்கழல் சேலுமே.

(இ—ள.) ஆனமா தான் ஐமபொறிகளின வேறென உணாநத மாத்திரமே அவறறை விட்டு நீங்கி அநநியமின்றி அநநியமாக தனமையில நிலைபெற றுச சிவபெருமான திருவடிகளையணையும எனறவாறு.

1. தன்னுற் கூறப்படும் பொருள்:

ஆனமா தன்னை இநதிரியங்களின வேறென உணரவே தனக்கு ஆதாரமாகிய முதல்வனது திருவடியை யணையும.

2. ஐயப்பாடு:

ஆன்மா இநதிரியங்களினின்றும நீங்கின விடத்து முதலவனுக்கு அடிமையாதல உண்டோ? இலலையோ?

3. பிறர்கூறும் பக்கம்:

இநதிரியங்களைத் தன்னின வேறென அறிநது அவ்விநதிரியங்களிலுண்டாகிய தன் பொதுவியல்பு

*பொயயாய ஒழியுமாறு தனது சிறப்பியல்பாகிய மெய்மைககண்ட ஆனமாவினுககு அவவாறு காணடலே போதும. இநதிரியங்களாகிய கருவிகள் நீங்கினவிடத்து ஒரு செயலும செயய முடியாது. ஆதலால் அநநிலையில் முதல்வனுககு அடிமையாதல் கூடாது. இவ்வாறு கூறுவோா பேதவாத சைவா முதலாயினோர்.*

4. மறுத்துரைக்கும் சித்தாநதத்துணிபு:

*ஒருவன் ஏறியிருந்து ஆடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறறறதாயின அவனுககுத் தாரகமாவது தரையேயன்றிவேறில்லை. அதுபோல ஆன்மா தன்னை இநதிரியத்தின வேறுககாணின அதற்குத் தாரகமாய் நிறபது முதல்வன சீபாதமேயாம. அன்றியும, ஆனமா அறிவாயும வியாபகமாயுமஉளள தனது சிறபியலபை யறிநது தான இநதிரியத்தின் வேறெனஉணாநதபிறகு தனனின் வேறெனக கழித்த இநதிரியத்தால ஆவதொனறுமில்லை. ஆதலால குருவினால தனனை இநதிரியங்களின வேறென உணாநத அக்காரணத்தினாலேயே தனககு ஆதாரமாகிய முதலவனது திருவடியை அணையும. ஆன்மா இநதிரியங்களின நீங்குதலாவது அவறறைத் தன்னின வேறெனககணடு பறறறறிருத்தலாம.*

5. இயைபு :

**உதாரணவெண்பா — 7**

**சிறைசெய்ய நினற செழும்புனலி னுள்ளஞ்**<br>
**சிறைசெய புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்**<br>
**டலைகடலிற சென்றடங்கு மாறுபோன் மீளா**<br>
**துலைவிலரன பாதத்தை யுற்று.**

## இதன்பொருள்

சிறைசெய்ய நின்ற செழும் புனலின் உள்ளம்—ஒருவன் அணையை உயர்த்துக் கட்டித் தடைசெய்ய ஆண்டுத் தடையுண்டு தேங்கிநின்ற ஆற்றுநீர்போல (கருவிகளாலாய பாசஞானம் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அதனிடத்தில் ஏகதேசமாய் அடங்கித் தடையுண்டு நின்ற) உயிர்,— சிறைவிட்டு அலைகடலில் சென்று அடங்கும் ஆறுபோல — அவ்வணை முறிந்து தடை நீங்கிய விடத்து இடையீடின்றிக் கடலின்கண் விரைந்துசென்று அந்நீரேயாய் அதனுள் அடங்கி மறித்து வாராத ஆற்றுநீர்போல,— சிறைசெய் புலன் உணர்வில் தீர்ந்து—கருவிகளாலாய பாசஞானத் தடையினின்று நீங்கியபோது,—உலைவுஇல் அரன் பாதத்தை உற்றுமீளாது — தனக்குக் கேடில்லாத சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி அத்திருவடி நிறைவேயாய் அதன்கண் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது என்றவாறு.

புனலின—புனலைப்போல.

மலசத்திக்குக் கேடு இயல்பாயிருத்தலினால் கேவலப்பட்ட உயிர் (அதாவது சகலாவத்தையிலிருந்து கேவலாவத்தையை யடைந்த உயிர்) கருவிகளின் மீளுதலும் கூடும் (அதாவது மீண்டும் சகலாவத்தையை யடைதலுங் கூடும்). சிவசத்திக்கு எக்காலத்தும் கேடில்லாமையால் சகலாவத்தையினின்றும் நீங்கி சுத்தாவத்தையை யடைந்தஉயிர் (அதாவது சிவன் சீபாதத்தை யணைந்த உயிர்) அதுபோல மீள்வதற்கு

(அதாவது மீண்டும் சகலாவத்தையை யடைவதற்கு) ஏதுவில்லை யென்பார் உலைவிலர் என விசேடித்தார்.

இவ்வெண்பாவினால் கருவிகளினின்றும் நீங்கி மலம் தாரகமாகக் கேவலாவத்தையை யடையும் உயிர் மீளவும் கருவிகளைக் கூடிச் சகலாவத்தையை யடையுமாறுபோல, கருவிகள் நீங்கிச் சிவம் தாரகமாய்ச் சுத்தாவத்தையை யடைந்த உயிரும் மீண்டும் கருவிகளைக் கூடிச் சகலாவத்தையை யடையும்போலும் என்னும் ஆசங்கையை உவமை முகத்தால் நீக்கியவாறும்.

## உதாரணவெண்பா — 8

**எவ்வுருவுந் தானென்னி னெய்துவா ரில்லைதா**
**னிவ்வுருவின் வேறே லிறையல்ல—னெவ்வுருவும்**
**கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்**
**கண்பேறே காணக் கழல்**

### இதன்பொருள்

எவ்வுருவும் தான் என்னின் தாள் எய்துவார் இல்லை—உயிருணர்வேயன்றிப் புலனுணர்வும் சிவமே யாயின் (புலனுணர்வைக்காட்டிலும் உயிருணர்விற்கு விசேடமில்லாமையால் புலன் வழியொழுகும் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியை அடைய வேண்டாமை யின் அக்) திருவடியை அடைபவர் ஒருவரும் இல்லை (யாய் முடிந்து "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை யடைய முத்தி" என்னும் வேதாகமங்கள் போலியாய் முடியும்),— இ உருவின் வேறேல் இறை அல்லன —

(ஆதலால முதலவன கருவிகளின அறிவோடு கலவாமல) அவறறின வேறாய நிறபன் எனில், (அககருவிகளின அறிவிறகு முதலவனாலாகவேணடிய உபகாரம ஒன்றுமிலலை யெனபபடடு அவறறிறகு)இறைவனலலன (எனறாகி அவன் முதனமைககு இழுககாய் முடியும),— இவவாறாயின அதனியலபு தான யாதோ? எனின்)— எ உருவம—உயிருணாவுபோலப் புலனுணாவும (கலபபினறி சிவமேயாயினும இரண்டும தமமுள் ஒபபன வலல);— அவயவங்கள கணபோல காணு—(உயிரானது மெய வாய கண மூககுச செவி யெனனும ஐமபொறிகளினும ஒபபககலநது நிறபினும, கண் இநதிரியம நீங்க மறறநான்கும நினறவிடத்திலிருநதே தமமிடதது வநத தத்தம விடயத்தையே யறியும. தூரததிலுளள விடயததை உயிரின அறிவோடு கலநது செனறு அறியா. கணணிநதிரியமோ வெனில், ஒளியால ஆனம போதத்தோடு கலநது தூரததிலுளள விடயத்தையும வியாபித்தறியும. ஆதலால மறற நானகு அவயவங்கள கண்போல் அறியமாடடா,— அ கழல — அககணணினது வெறறிப பாடடை (அதாவது ஏனை இநதிரியங்களைபபோலனறிககணணிநதிரியம ஆனமபோதத்தோடு கலநது தூரத்திலுளள விடயததையும வியாபித்தறிதலாகிய மேமபாட்டினை),— அககண இல்லாா கண பேறெகாண — கணணொளியிழநதாரது கண்பேறறிற கணடு அறிவாயாக (அதாவது அவவொளி யிழநதவா மாசுநீங்கிக கணபெறற விடதது தூரததிலுளள பொருளை அறிவதனாலறிநது கொள்க.) (அவவாறே முதலவன உயிருணாவினும புலனுணாவினும ஒபபக கலநது நிறபினும புலனுணாவு உயிருணாவுபோல

வியாபக விளக்கமாதலின்றி ஏகதேச விளக்கமாம். உயிருணர்விற்குள்ளதாகிய அம்மேம்பாடானது அவ்வியாபக உணர்வை யிழந்த பசுத்துவமுடையாரிடத்தில அறியப்படாதாயினும், அவரது பசுத்துவம நீங்கிய சிவப்பேற்றின்கண் அறியப்படும) என்றவாறு.

கண்ணும் அவயவங்களும இந்திரியங்களை யுணர்த்தும ஆகுபெயர். கண் பேற்றே — கண்பேற்றிலே (அதாவது கண் பெறுதலிலே). கழல் என்பது வெற்றியைக்காட்டும காலணி மணிவடம். கண்ணுக்கு வெற்றியாவது நான்கு இந்திரியங்களையும நோக்கி மேம படுதல.

இவ்வெண்பாவால ஆன்மா பசுத்துவம நீங்கிச சிவத்துவம பெற்ற இடத்துப பசுகரணமுஞ் சிவகரணமாவதனால ஐம்பொறியின் மீளினும இழுக்கில்லையாதலால மேல்வெண்பாவில ஆன்மா கருவிகளின் மீளாதெனக்கூறியது எற்றினுக்கு எனனும சங்கிராந்தவாத சைவரை மறுத்து மீளாமையை வலியுறுத்தியவாறும.

## உதாரணவெண்பா — 9

ஐம்பொறியி னல்லையெனு மந்த தரசிவனை
ஐம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மமவரின்
நீங்கானை நீங்கு நினைந்து

## இதன்பொருள்

ஐம்பொறியின் அல்லை யெனும அந்தரா — (நீ, நினனால அதிட்டிக்கப்பட்டவிடத்தும ஏகதேசவறிவைச செய்பவனவாகிய) ஐம்பொறிகள போலலலை,

(அவற்றின்மேமபடடு வியாபகமாயறியும வெற்றிப்பாடு டையை) என (மேலைவெண்பாவால்) உணர்த்தப்படும தீவிரதரத்திற றீவிரதரமான சத்திநிபாத முடையோனே,—சிவனை ஐமபொறியை விட்டு அங்கு அணை— (அவவியலபினவாகிய) ஐமபொறிகளைக் கைவிட்டே சிவன திருவடியையடைநது, முன் அவ்வைமபொறியினினறதுபோல் அதுவாய் உறைத்து நிறபாயாக,— (அவவாறணைநது நின்றுயாயின்) சகலன் ஐமபொறியின் நீங்கான்—சகலனை ஐமபொறிவிடடு நீங்காதவாறுபோல அசசிவன் உனனை விடடு நீங்கான்,— நீாபாசிபோல நீங்கும மலகனமம வரின்—(கல்லெறிந்த விடத்து நீங்கி, விடடவிடத்துப்பாககும) நீரின்கட பாசிபோல, (நீ அவவாறுறைத்துநிறறலினால்) நீங்குவனவாகிய மல கனம மாயைகள் (உலகபபயிற்சி வயத்தால நிகழும அயாசசிபபறறி) வநது கூடுமாயின்,— நீங்காணைநினைநது நீங்கு — (நின்நிலை குலையினும் நினனைவிடடு) நீங்காத அமமுதல்வனை உணருமாறு முன்னாககூறபபடும உபாயத்தினினறு சாதித்து அவறறை நீங்கிக கொளக என்றவாறு.

விடடனறி அணைதல கூடாதெனபாா விடடு அணை யெனறும, ஐமபொறியை விடடு நீங்கிய இடத்துச சிவன மீளாமையை வலியுறுத்துவார் சகலனைமபொறி யினீங்கான என்றும, ஒருககால் மீளுமாயின அதறகுக காரணம இஃதென உவமை முகத்தால உணாததுவாா நீாபபாசிபோல எனறும, ஐம பொறியின் மீளுமாயின் அவறறிறகு மூலமாகிய மல கன்ம மாயைகளுட அது பறறுக வநது கூடும என்பாா மலகனமம வரின

என்றும, அமமீடசியை நீங்குதற்கு உபாயங் கூறுவாா நீங்காளை நி ளை ந து நீங்கு எனறுங் கூறிஞா. இன் இரண்டும உவமஉருபுகள். அநதம என்றது நானகாஞ் சத்திநிபாதத்தை. அதுவும் நாலவகைபபடுமாகலின அவறறுள்ளும மேமபடட சத்திநிபாதமுடையாய் என பாா அநததா என்றூா. சகலளை என்னும இரண டனுருபு விகாரத்தாற் ருெக்கது. மலகன்மமெனவே இனமபற்றி மாயையுங் கொளளபபடும.

இவவெணபாவிஞல் ஆறறுநீரானது கடலிற சென்று அடங்குவது மாததிரமன்றி அவவாறறினவழி யாக அதினினறு மீளுதலுங்கூடும; அவவாறே சிவன் திருவடியையடைந்தஉயிா அத்திருவடியிலஅடங்கியிருத் தலேயன்றி ஒரு சமயத்தில இநதிரியத்தில மீளுதலுங் கூடும. ஆதலால் அது ஒருபோதும மீளாதெனபது பொருந்தாது என்று கூறும சிவாத்துவித சைவரை மறுத்து அவ்வாறு மீளுதறகுக காரணம பழைய வாசளையென்றும, அபபழைய வாசளையால் மீளவரின், ஆறறுநீா ஆறறுநீராகவே திருமபாது கடலநீராகத் திருமபி. மீணடும அககடலிறசெனறு அடங்குமாறு போல, திருவடியை மறவாத உபாயத்தால் அககருவி களை விடடு மீண்டும திருவடியை யடைநது அதில அடங்கும என்று கூறி மீளாமையை வலியுறுத்திய வாறும.

## எட்டாஞ்சூத்திரம முடிந்தது

---

# ஒன்பதாஞ்சூத்திரம்

# ஒன்பதாஞ்சூத்திரம்

**ஊனக்கண் பாச முணராப் பதியை**
**ஞானக் கணணினிற் சிந்தைநாடி**
**உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத**
**தணணிழலாம பதிவிதி யெணணுமஞ் செழுததே.**

## இதன்பொருள்

ஊனககண — பசுஞானத்தாலும, — பாசம — பாசஞானததாலும, — உணரா — அறியபபடாத, — பதியை — முதல்வனை, — ஞானககணணினில — அம முதலவனது ஞானககண்ணினாலே, — சிநதை — தன் அறிவினிடததிலே, — நாடி — ஆராயநதறிக. (அபபதி ஞானத்தைப பெறுவதெபபடி யெனில), — பாசம — நிலம முதல் நாதம ஈருகிய பாசக கூட்டமானது, — உராத்துனை — நினறவழி நிலலாது பரநது திரிதற கண் அதிவேகமுடைய, — தோதெதன — பேயத்தேரின் இயலபுடையதெனறு அறிநது (அதாவது கானலானது

நீர்போலத் தோன்றிப் பொய்யாகக் கழிவதுபோலக் கழிவதென்றறிந்து),— ஒருவ (அப்பாசக் கூட்டத்தினின்றும்) நீங்கவே,— பதி — அப்பதி ஞானம் — தண் நிழலாம் — (பிறவித்துயராகிய வெப்பத்துக்குக்) குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும் — அஞ்செழுத்தே — (அவ்வாறு விளங்கிய ஞானத்தால் முதல்வனைக் கண்ட காட்சி சலியாதிருத்தற் பொருட்டுப் பாசத்தினின்றும் நீங்கி முதல்வனை யடைதலை உணர்த்துவதாகிய) திருவஞ்செழுத்து,— விதி — அவ்விதிப்படி (யறிந்து),— எண்ணும் — கணிக்கப்படும் (அதாவது செபிக்கப்படும்) என்றவாறு.

தம் முதல் குருவுமாய் உணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனை செய்துணருமாறு அறிவிக்கு முகத்தான், உயிரானது தான் ஐம்புலவேடரின் வளர்ந்தமையாலாகிய அசுத்தத்தினின்றும் நீங்கித் தன்னைப் பரிசுத்தப் படுத்துமாறு உணர்த்துதல் இச்சூத்திரத்தின் கருத்தாம்.

பாச ஞானமாவது பாசமாகிய கருவிகளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பசு ஞானமாவது நற்போத முனைப்பால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பதிஞானமாவது பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

ஊனம் — குறை. ஊனக்கண் — குறையுணர்வு. நாடி — நாடுக. உரா — உலாவல் என்னும் பொருளைத் தரும் முதனிலைத் தொழிற்பெயர். துனை — வேகம். உராத்துனை — உலாவுதற்கண் வேகமுடைமை ஊரா

என்பது உராவெனக குறுகியதாககொணடு உராத் துனைததோ எனபதறகு ஒருவராலும ஊாபபடாத வேகததையுடைய தோ எனறு பொருளுரைத்தலு மாம. தணணிழலாம பதி எனபதில பதி என்பது பதி ஞானததைக குறிககும ஆகுபெயா.

**இசசூததிரத்தின அதிகரணங்கள**

1. ஊனககண பாச முணராப பதியை ஞானக கணணினிற சிநதை நாடி.
2. உராததுனைத தோத்தெனப பாசமொருவத் தணணிழலாம பதி.
3. விதியெணணு மஞசெழுததே.

**இசசூததிரததின சூரணிகை**

1. உயிா அரன ஞானத்தினாலேயே அரனைக காணும.
2. உயிா பாசததிலே பறறறறால அரன வெளிப படுவன.
3. பஞசாக்ஷர செபம பணணினால வாசனாமலம போம

**இசசூததிரத்தின வாாததிகம**

1. ரணடு அமமுதலை ஞானக கணணினாலே காணக எனறது, அவன வாககு மனதீத கோசர மாய நிறறலான.

2. இனி அசததாயுளள வனன பேருங்களை அசத்து எனறு காண உளதாய நிறபது ஞானசொரூப மெனறு உணரறபாறறு.

3. *இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்றது, இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை, வேம்புதின்ற புழுப்போல, நோக்கிறதை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக்கொள்க.*

**இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் எட்டு.**

## முதலதிகரணம்

---

**ஊனக்கண் பாச முணராப் பதியை**
**ஞானக்கண் ணினிற் சிந்தை நாடி**

*(இ—ள்) பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனது ஞானக் கண்ணினாலே தன் அறிவினிடத்தே ஆராய்ந்தறிக என்றவாறு. இதில்,*

1. தன்றுறக்கூறப்படும் பொருள்:

*உயிர் பதி ஞானத்தாலேயே அரனைக்காணும்.*

2. ஐயப்பாடு·

*முதல்வன் பசுஞானத்தாற் காணப்படுவனோ? பதி ஞானத்தாற் காணப்படுவனோ?*

3. பிறர்கூறும் பக்கம்

*சுட்டியறியும் பசுத்துவம் உள்ளபோது செயற்கையால் ஏகதேசத்தின் விளங்கும் பசுஞானமானது, அப் பசுத்துவம் நீங்கியபோது சிவஞானத்தோ டொப்ப*

எங்கும வியாபகமாய் விளங்கும என்பது சிவாகம நூற றுணிபாகலின, அவவாறு சுட்டிறநதறிவதாகிய பசுஞானததால முதலவன் காணபபடுவன என்பது பெறபபடும. இ வ வ ா று கூறுவோா சிவசமவாத சைவா

4. மறுதலுரைக்கும் சித்தாந்தத்துணிபு:

குருவருளாலே உணரபபடும சிவஞானத்தாலே சிவனையறிநதவா அசசிவனில் வியாப்பியமாய் நின்று (அதாவது அடங்கி நின்று) அவவாறு அறியும பொரு ளாகிய தமமையும அறிவா. அவவாறு தலைவனையறிநத பின் அறியபபடுவதாகிய தமமறிவு கொணடு தலைவனை எஙஙனம அறிதல கூடும? ஆதலால முதலவன பதி ஞானம ஒன்றினாலேயே காணபபடுவன் என்பது துணியபபடும.

5. இயைபு:

**உதாரணவெணபா—1**

**நாடியோ வென்போ நரமபுசீக் கோழையோ**
**தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன**
**தன்னாலே தன்னையுங் கண்டு தமைககாணார்**
**எனனு மெனவறிவா ரின்று.**

இதன்பொருள்

நாடியோ என்போ நரமபுசீக கோழையோ — நான் யாா, இடை பிங்கலை முதலிய நாடிகளோா,நரமபோா, சீ எனபபடும புண்நீரோா, கோழையெனபபடும சிலேத் துமமோா,—தேடி எனையறியேன் (என்று)— எனனைத் தேடியும அறிகினறிலேன் என்று,— தோநதவகை

நாடி — இவ்வாறு நோக்கின்ற தோசகியறிவின் கண்ணே இதனைத் தெளிவிப்பதோர் அறிவு வேறு உண்டென ஆராய்ந்து நோக்கி,— அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைகாணார் — (அவ்வாறு நாடுங் கால விளங்கித் தோன்றுவதாய்) முதல்வனது திருவடி ஞானத்தால் முதல்வனையும் உணர்ந்து (முதல்வனின் வியாபியமாய் நின்று அங்ஙனம் அறியும்பொருளாகிய) தம்மையும் உணர்தலைச் செய்யாதார்,— என்னை அறிவார் இன்று — மற்றெவ்வியல்பினரென்று தம்மை அறியவல்லுநர் இடமுததிகாலத்து என்றவாறு.

நரம்பு என்றதில் நாடியும் அடங்குமாயினும் தலைமைபற்றி நாடியை வேறாகக் கூறினார்.

நாடியோ என்போ நரம்புச்சீக் கோழையோ என்ற உபலக்கணத்தால் ஏனைத் தத்துவங்களினும், அவற்றின் காரியமாகிய புறக்கருவிகளினும் அவ்வாறு தெளிதல் கொள்ளப்படும்.

ஓகாரம் தெரிநிலை. தேடியென்னை யறியேன (என்று) என்பதில், என்று என்பது சொல்லெச்சம். வகையென்பது அறிவைக் குறிக்கும் ஆகுபெயர். ஞானத்திற்கும் அரனுக்கும் உள்ள ஒற்றுமையை நோக்கி அரனது ஞானத்தை அரன் என்று உபசரித்தார். தன்னை — தலைவனை. தமை — உயிரை ஆம் அசை

இவ்வெண்பாவினால் முதல்வன் அருளால் (அதாவது சிவஞானத்தால்) அம்முதல்வனையும் தன்னையும் அறியும் இயல்புடைய உயிர் தன்னறிவால் முதல்வனை அறிதல் கூடாது என்பது விளக்கப்பட்டமை காண்க

**திருக்குறுந்தொகை**

என்னையேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன்னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடியா னென்றறிதலுந்
தன்னைநானும் பிரானென் றறிந்தேனே.

## உதாரணவெண்பா — 2

**காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்**
**காட்டாய வுள்ளத்தைக் கண்காணா—காட்டிய**
**உள்ளந் தனைக்காணா உள்ளத்தின் கண்ணாய**
**கள்வனரு ளுள்ளத்திற் காண்**

(இ—ள்) காட்டிய கண்ணே — (உயிரால்) காட்டப்பட்டு ஒரு விடயத்தைக் காணுகின்ற கண்ணானது (அதாவது ஒரு விடயத்தை உயிர்காட்டக் காணும் கண்ணானது),— தனைக்காணா — தன்னியல்பைக் காணமாட்டாது,—கண்ணுக்குக்காட்டு ஆய உள்ளத்தைக் கண்காணா — தனக்கு அவ்விடயத்தைக் காண்பித்து முதலாய் நிற்கும் உயிரையும் அது காணமாட்டாது — (அதுபோல),— காட்டிய உள்ளம் தனைக்காணாது — (முதல்வனால் மறைந்து நின்று) உணர்த்தப்பட்டு ஒன்றைத் தேர்ந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன்னியல்பையும் அறியமாட்டாது (தன்னை உணர்த்திநிற்கும் முதல்வனையும் அறியமாட்டாது),— உள்ளத்தின்கண் ஆய கள்வன்தான் — அதற்கே தாச்சியறிவின் கண்ணும் உடனாய நிற்கும்கள்வன் அம்புகலவன். (ஆதலால்) உள்ளத்திற்காண் — அவனை அவ்வுயிரின்கண்ணே வைத்து நாடித் தெளிவாயாக என்றவாறு.

இவ்வெண்பாவினால், தன் எதிர்முகத்துள்ள ஒரு பொருளைக்கண்ட கண்ணே திரும்பிப் பார்க்குமிடத்து முதுகுப்புறத்துள்ள பொருளையும் காணக்கூடும். அதுபோல நாடி முதலியவற்றைத் தேர்ந்து அறிந்த உயிரே தன்னையும் தலைவனையும் தெளிந்தறியக்கூடும்

என்னும சமவாத சைவரை மறுத்து, எதிர்முகமாகக் காணபபடும பொருளும, முதுகுபபுறமாகக காணப் படும பொருளும் புறததுள்ள சடபபொருள்களாத லினல் அவவிரணடையும கணகாணும அககண் தனககுள்ளிருககும ஒளியையும, உயிரையும காண மாடடாது. அதுபோல் உயிரானது தன்னையும தலை வனையும தானே அறியமாடடாது. ஆனால அது கண போல சடமாகாமல அறிவுபபொருளாயிருத்தலால் தலை வன அருளால தனனையும தலைவனையும அறியும எனறு உணாத்தியவாறும.

கணணே எனபதில் ஏகாரம அசைநிலை காணு— காணுது. இதில் துவவீறு விகாரத்தாறபெறககது. இறைவன் தோன்றாது நிற்றல்பற்றிக கள்வன் எனப் படடான் "என் உள்ளங்கவர் கள்வன்" என்றருளிச செய்தனர் திருஞானசமபந்தப்பெருமானும.

## இரண்டாமதிகரணம்

**உராத்துனைத் தோதமெனப் பாசமொருவத்**
**தணணிழலாம் பதி.**

(இ—ள்.) நிலமமுதல நாதம ஈறுகிய பாசககூடட மானது, நினறுழிநில்லாது பரநதுதிரிதலில அதிவேக முடைய, பேய்த்தேரின் இயலபுடையது எனறறிநது, அதினின்றும நீங்கவே, பதிஞானமானது பிறவித் துயராகிய வெபபத்திற்குக குளிாநத நிழலாய் வெளிப படடு விளங்கும எனறவாறு.

1. தன்ஞற கூறப்படும் பொருள:

உயிர் பாசத்திலே பறறறுல் அரன் வெளிப் படுவன.

2. ஐயப்பாடு :

பாசத்தை அசதெதனறு கணடவிடத்து ஞான சொரூபம தோன்றுமோ? தோனருதோ?

3. பிறாகூறும் பக்கம்:

அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்றறிநது நீங்கியவிடத்து வெறும்பாழாகிய சூனியம தோன்று மேயன்றி ஞானசொரூபம தோனருது. இவவாறு கூறுவோா மாயாவாதிகள.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு :

படிக சொரூபத்தைக காடடாது மறைத்துநினற வேற்றுநிறங்களை இவைநிலையிலலாதனவாகிய வேறறு நிறங்களெனககணடு நீங்கியவிடத்து, படிகத்தின உணமைசசொரூபம நிலத்து விளங்கித்தோன்றும. அதுபோல் எனறும நிலத்திருபபதாகிய ஞானத்தினு டைய சொரூபத்தைககாட்டாது மறைநதுநிறகும நிலை யறற பிரபஞசத்தை நிலையறறதென்று விவேகித்தறிநத விடத்து, சிவஞானததின் சொரூபமானது நிராலமப மாய் விளங்கித் தோன்றும. ஆலமபம — ஆதாரம. நிராலமபம — ஆதாரமிலலாதது,— பறறுகோடில் லாதது; அதாவது மலரகிதமாயிருபபது.

5. இயைபு:

## உதாரணவெண்பா — 3

**நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்**
**தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் — அற்புதம்போல்**
**ஆனா வறிவா யளவிறந்து தோன்றானே**
**வானே முதலகளையின் வந்து**

### இதன் பொருள்

*நிர்க்குணன் ஆய — அசுத்தப்பிரபஞ்சம்போல முக்குண ரூபமாய அளவிட்டறியப்படுவானும் அல்லனாய, — நின்மலன் ஆய — முக்குணங்களைக் கடந்த மிச்சிரப் பிரபஞ்சம்போல மலகன்ம காரியரூபமாய அறியப்படுவானும் அல்லனாய, — நித்தியானந்தன் ஆய — மல கன்மங்களையுங் கடந்த சுத்தப்பிரபஞ்சம் போல அநித்தியானந்தரூபனாய் அறியப்படுவானும் அல்லனாய, — தற்பரம் ஆய் — இம்மூன்றனோடும் கூடிய பொது இயல்புபற்றி அவ்வாறு உணரப்படும் உயிர்போல அன்றி அதற்குமேலாய, — நின்ற தனிமுதல்வன் — இவ்வாறு நிற்றலால் ஒன்றன் இயல்பு பற்றி அறியப்படாத தனிமுதலாகிய இறைவன், — வான முதல் களையின் — ஆகாயமுதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கியவிடத்து, — அளவு இறந்து அற்புதம் போல வந்து — பயின்றறிந்து வரும் தனது சுட்டறிவின் அளவினைக் கடத்தலான் இன்னதென்று அறியவாராச் சூனியப்பொருள் போலத் தோன்றி, — ஆனா அறிவு ஆய்த் தோன்றானே — பின்னர்ச் சுட்டிறந்து அறியும் தன் அறிவின்கண் நீங்காது நிலை பெற்ற அறிவாய்ச் சோதிக்குட் சோதியாய் விளங்கித் தோன்றான் கொல்லோ என்றவாறு.*

அசத்தெனப்பட்ட மூவகைப் பிரபஞ்சத்துள், அசுத்தப் பிரபஞ்சமெல்லாம் முக்குண மயமாதலால், சத்துவகுண விருத்தியாகிய பிரகாசரூபம் சுகரூபமாகத் தான், இராசத குணம் விருத்தியாகிய பிரவிருத்திரூபம் கோரரூபம் துக்கரூபமாகத்தான், தமோகுண விருத்தியாகிய நியமனரூபம் மூடரூபம் மோகரூபமாகத்தான் அளவிட்டறியப்படும். முதல்வன் இம்முக்குணங்களும் கடந்தவனாதலால் இவற்றுளொன்றாக அறியப்பட்டான் என்பார் "நிர்க்குணனை" என்றார்.

மிசிரப்பிரபஞ்சம் முக்குணங்களைக்கடந்து நிர்க்குணமாய் உள்ளதொன்றாயினும் மலகன்மங்களோடு விரவி நிற்றலால் மலகாரியமாகிய மோகம் முதலிய எழுவகை ரூபமாகத்தான், கன்மகாரியமாகிய சுகரூபம் துக்கரூபமாகத்தான் அளவிட்டறியப்படும். முதல்வன் மலகன்மங்களையுங்கடந்து நிற்றலான் அவற்றுளொன்றும் ஓரியல்புபற்றி அறியப்பட்டான் என்பார் 'நின்மலனை' என்றார்.

சுத்தப்பிரபஞ்சம் மலகன்மங்களையுங்கடந்து நின்மலமாயுள்ள தொன்றாயினும் காரியப்பட்டு அநித்தமாம் இயல்புடைமையிற் சாதிசயானந்த ரூபமாய் அளவிட்டறியப்படும். முதல்வன் காரியப்பாட்டினது உபகாரத்தையுங் கடந்தவனாதலால் அவ்வாறும் அறியப்பட்டான் என்பார் "நித்தியானந்தனை" என்றார்.

ஆன்மாவும் இம்மூவகைப் பிரபஞ்சத்துட்பட்டுச் சகுணனும் சமலனும் சாதிசயானந்தனும் பொது இயல்புபற்றி அறியப்படும். முதல்வன் அவ்வாறும் அறியப்பட்டான் என்பார் "தற்பரமாய்நின்ற" என்றனர்.

அங்ஙனம நின்றநிலை ஒன்றோடு உவமித்து அறியபபடாமை பற்றித் "தனிமுதலவன்" என்றனா.

இத்தனமையாகிய முதலவன் நிலமமுதல நாதம ாறுகிய பிரபஞ்சங்களை அசத்தென்று களைநதவழிப பயின்றறியாமையின இனனதெனறறிய வாராத சூனியமபோலச சுட்டறிவின் அளவினைக கடந்து தோன்றிப் பின்னாசசுடடிறநதறியும் அறிவின்கணணே சோதிக்குடசோதியாயவெளிபபடடுததானே விளங்கித் தோன்றுவன் எனபாா "வானே முதல்களையின் அற புதமபோல அளவிறநது ஆறு அறிவாயவநது தோனறுமே" எனறாா.

ாண்டுகக்குணம என்றது முகக்குணங்களை. அவ வாறன்றி நிாகக்குணன என்பது ஒருகுணமுமம இல்லான என்றுரைப்பின் அது தனவயத்தனாதல முதலிய எண் குணங்களை இயல்பாக உடைய முதல்வனுககு ஏலா மையின், மாயாவாதி முதலியோா கூற்றாய் முடியு மென்றொழிக. தறபரம—தனக்குபபரம. தன் என்றது ஆன்மாவை அறபுதம—சூனியம. ஆறு அறிவு – தன் அறிவினிடத்து நீங்காது நிலைபெறும அறிவு.

சாதிசயம——அதிசயத்தோடு கூடியது.

## உதாரணவெண்பா — 4

சுட்டி யுணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
உணர்ந்த நீ சத்தலலை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம.

இவ்வெண்பா, ஆகாசம முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கியஇடத்து, அவ்வாறு தோன்றுவது வேறொரு பொருள என்று கொள்ளலாகாதோ? அது ஞானசொரூபமே எனனில், அதறகுப பிரமாணம யாது? எனனும ஆசங்கையை நீககி அது ஞானசொரூபமே என்பதனை வலியுறுத்துகின்றது.

(இ—ள.) சுட்டி உணாவதனை — (ஏகதேச உணாவால) சுட்டி உணரபபடும நிலம முதல சிவம ஈறாகிய பிரபஞ்சததை,— சுட்டி அசத்து என்ன — (அசத்ததிகரணத்திற கூறியவாறு) ஒவவொன்றாகச சுட்டி அசததென்று கண்டு கழித்துககொண்டே சென்ற இடதது,— இனி உளது சத்தே சட்ட காண் — முடிவில கோசரமானது (வேறினமையால பாரிசேட அளவையால அது) சத்தேயாம என்று செமமையே அறிவாயாக,— (அபபடியாயின அசத்தின் வேறாய முடிவில கோசரமாவது சத்தேயாம என்பது பொருந்தும. அசசத்து முதலவனன்று உயிரேயாம என்றால வரும குறறமெனனை எனனில),—சுட்டி உணாநத நீ சதது அலலை — (இதுகாறும அசத்தோடு கூடி நிலை பெறுமாறின்றி, ஒவவொன்றாகச) சுட்டி அறிநதுவநத நீ (என்றும ஒரு தனமைததாய நிலைபெறறு நிகழும அறிவாகிய) சத்தாவாயலலை—(அசத்தை அசத்தென்று கணடு நீங்கியபோது),— உணமையை — உளதாகிய சததினை, - தைவம (ஆய) புணாநததனால — நீ அடிமையாகச சென்று தலைபபட்டதனால், பொயவிட்டு போம — (சுட்டியறிவதாகிய ஏகதேச அறிவைச செயயும) பொது வியலபு நினனை விட்டு நீங்கும (ஆகலின நீ அசததுமலலை) என்றவாறு.

ஆகலின் அசதது மலலை எனபது குறிபபெசசம. எனவே அசத்தைச சததுடனினறு நீககுவதனால சத சததாவை எனபதாம சடட — செமமையாய. தைவம — தேவனதுடைமை. வாதனையுமினறிப பறறறககழிதலால் பொயவிடும எனறது "பொயவிட டுப போம்' எனறார.

## உதாரணவெண்பா—5

**கணடதை யன்றன றெனவிடடுக கண்டசததாய**
**அணடனை யானமாவி லாயநதுணரப—பணடணைநத**
**ஊனததைத தானவிடுமா றுத்தமனி றெணகருட**
**சானததிற றீரவிடமபோற் றுன**

இவவெண்பா அசததை அசதெதனறு கணடு நீங்கும உபாயமும, நீங்கியபோது உணமையை (அதாவது சததை) தைவம (அதாவது உயிர) புணரும விதமும, புணாநதகாலையில பொய (அதாவது அசதது) விடடுபபோமாறும தெரிததுணாததி அதனை வலி யுறுததுகினறது

(இ—ள) கணடதை அனறு அனறு என கணடு அசதது ஆய விடடு — சுடடி உணரபபடட பிரபஞ சததை இது சததனறு, இது சததனறு என ஒவ வொனறாகக சுடடி அசததாகக கணடு விடடுநீங்கி,— ஆன்மாவில அணடனை ஆய்நது — (அவவாறு நீங்கிய தன) அறிவினகணணே (சுடடுணாவிறகு விடயமாகாத) முதலவனை ஆராயநது,— உணர — (அசசிவஞானத் தாலே ஆசாரியன சிவோயம எனத தனனுளளே

பாவித்தசு 'சிவத்துவமசி'' என்றறிவுறுக்கும் சித்தாந்த மகாவாக்கியப்பொருளை நாடோறும் பயின்று "சிவோகம்" எனப் பாவிப்பானாயின்,— உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு — (அந்தப் பாவகத்தின் விளங்கும்) முதல்வனால் அநாதியே கூடிய பொதுஇயல்பையும் அதற்கேதுவாகிய மல மாயா கன்மங்களையும், (உயிர்) தான் விட்டுநீங்கும். அப்படி விட்டு நீங்குமாறு (எதுபோலுமெனின்),— ஒண்கருடசானத்தின் தீர் விடம்போல—ஒளிரிய கருடதியானத்தில் விளங்குங் கருடனால் அப்பாவகன் விடகலந்தத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாம் என்றவாறு

கருட பாவனையாவது — கருடன் ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆத்தியான்மிக கருடன் என மூவகைப்படும். அவற்றுள் இவ்வுலகத்தில் காணப்படும் கருடன் ஆதிபௌதிக கருடனும், அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடனும், அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடனுமாம். அவற்றுள் இங்கே கருடனென்றது கருடனுக்கதிதெய்வமாய மாந்திரிகன் உள்ளத்தில் காணப்படும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனைசெய்து தன் அறிவு அதன் வசமாம்படி உறைந்து நிற்றல். அங்ஙனம் நின்று அம்மந்திரக் கண்கொண்டு பார்ப்பவே

அஃது அவ்விஷ வேகத்தை மாற்றுதல் அநுபவமாகலின், அப்பாவனை சிவோகம்பாவனைக்குக் கூறப்பட்டது.

புள்ளு விலங்கு மரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வமும் மந்திரமும் உள்ளன என்றும், சார்ந்த பொருள் வண்ணமாகும் இயல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம்மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம் மந்திரசொரூபமாம் என்றும் சர்வஞானோத்தர முதலிய நூல்கள் விரித்துக் கூறுகின்றன

## மூன்றுமதிகரணம்

விதி எண்ணும் அஞ்செழுத்தே

(இ-ள்) திருவைந்தெழுத்து விதிப்படியறிந்து கணிக்கப்படும் என்றவாறு.

1. தன்னாற் கூறப்படும் பொருள் :

ஞானம் பிரகாசித்தபின்னர் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரித்தல்வேண்டும்.

2 ஐயப்பாடு :

ஞானம் பிரகாசித்த பின்னும் செய்ய வேண்டுவதுண்டோ? இல்லையோ?

3. பிறர்கூறும் பக்கம்:

ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறெனக் கண்டு பாசத்தினின்றும் நீங்கியபோது பிறவி வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் விளங்கித் தோன்றுவதாகிய ஞான சொரூபமே அரன்கழல் சேறலாகிய சிவானந்த

போகபயனைப பயப்பிககும ஆதலால் பிரகாசித்த பினனா செய்யக கடவதாகிய சாதகம இல்லை.

4. மறுத்துரைக்கும் சிததாந்தத் துணிபு.

வேமபினைத் தின்றுகொண்டிருந்த புழு அதை விட்டுக கருமபினைத் தினனத் தொடங்கிக கருமபின் சுவையை யறிநதபின்னருமபுன்னிருநத பழககவாதனை யால மீட்டும அவவேமபினையே நோககுதல்போல், ஆன்மா பாசத்தினினறும நீங்கி ஞானம பிரகாசித்து ஞேயததைக கண்டு எங்குந தானாக நிட்டை கூடிய விடததும, தொன்றுதொட்டு வரும ஏகதேசப் பழகக விசேடத்தால அதன் அறிவானது புறத்தே விடயத் திறசெனறு பற்றும. ஆதலால் தன அறிவை அவ வாறு செலலாது மடககி, அகத்தே ஒரு குறியினகண் நிறுத்தி நிட்டைகூடி நிற்கும முறைமையை அஞ் செழுத்தோதும முறைமையில வைத்துக கணடு சிந திககச் சிநதிகக, அது சிவதரிசனத்தை விளககி, வாதனை வயததால புறத்திறசெனறு பற்றும ஏகதேச அறிவைப பறறறத துடைத்துப் பூரண நிலையில கொணடுசெலலும ஆதலால் ஞானம பிரகாசித்த பின்னரும திருவஞசெழுததை விதிபபடி யுசசரித்தல் இன்றியமையாததாம.

5. இயைபு:

**உதாரணவெண்பா — 6**

**அஞ்செழுத்தா லுளள மரனுடைமை கணடரனை**
**அஞ்செழுத்தா லாச்சித் திதயததி—லஞ்செழுத்தாற்**
**குணடலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்**
**அண்டனும் சேடனு மங்கு.**

இவ்வெண்பா ஸ்ரீ பஞ்சாக்கர செபம் எங்ஙனம் வாசனையை நீக்கும்? என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துகின்றது.

## இதன்பொருள்

உள்ளம் அரன உடைமை அஞ்செழுத்தால் கண்டு— ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறையில் வைத்துக் கண்டு,— இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து— தன் உடம்பினகத்தே இதயம் நாபி புருவநடு என்னும் மூன்றினையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு, புறம்பே ஞான பூசை செய்யும் முறைப்படி இதயகமலத்தில் சிவனை அவ்வஞ்செழுத்தால் அமைந்த திருமேனியில் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து,— அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமஞ்செய்து— குண்டலித் தானமாகிய நாபியில் ஞான வனலை யெழுப்பி அதன்கண் அத் திருவைந்தெழுத்தானே விந்துத் தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமஞ்செய்து,— கோதண்டம் சானிக்கில— விந்துத்தானமாகியபுருவநடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப்பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப்பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தால் சிவோகம்பாவனை செய்யின்,— அங்கு ஆம் அண்டன் சேடன் ஆம் — அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் (சேட சேடிய பாவத்தால் ஆகற்பாலதாகிய) அடிமையாம் என்றவாறு.

கோதண்டம் — கோதண்டத்தின்கண், புருவநடுவில். அண்டன்—அண்டனுககு. சேடன் — அடிமை. சுருக்குசசுருவங்கள் என்பன ஓமத்தில் நெய்யைச சொரியும துடுப்புகள்.

பஞ்சாக்கரமாவது தூலபஞ்சாககரம சூக்குமபஞ் சாக்கரம் அதிசூககுமபஞ்சாக்கரம என மூவகைபபடும. நகரத்தைமுதலாகவுடையது தூலபஞ்சாக்கரமும், சிகரத்தைமுதலாகவுடையது சூககுமபஞ்சாக்கரமும, நகரமகரங்களிரண்டுமின்றி ஏனைய மூன்றெழுத்தும முன்னும பின்னுமாய் மாறுதலால் ஐநதெழுத்தாகிச் சிகரத்தை முதலாக உடையது அதிசூககுமபஞ்சாக்கரமாம். அதிசூக்குமபஞ்சாககரம காரணபஞ்சாககரமும முத்திபஞசாககரமுமாம. இதுவே இவவிடத்திற கூறியதாம.

சாநதோக்கிய உபநிடதத்துள்ள தத்துவமசி மகா வாக்கியம தற்பதம் துவம்பதம் அசிபதம் என மூன்று பாதங்களையுடையது. அவறறுள் தற்பதம் இறைவனுவனுடைய தடத்தநிலையாகிய பதித்தன்மையினையும், துவம்பதம் உயிரின தடத்தநிலையாகிய பசுத்தன்மையினையும், அசிபதம் இவ்விரு பொருள்களின் சொரூபநிலையாகிய ஐககியத்தையும உணாத்தும. அவ்வாறே ஸ்ரீபஞ்சாககரத்தில சிகரம பதியையும, யகரம பசுவையும், வகரம் இவ்விரண்டின் ஐக்கிய நிலையாகிய அருளையும் உணர்த்தும். ஆதலால் முத்தி பஞ்சாக்கரம் சித்தாந்த மகா வாக்கியமாவதறிக.

*மந்திரங்களை உச்சரித்தல் மானதம, மந்தம, உரையென மூவகைப்படும. மனத்தாற்பாவித்தல் மானதமும, சூக்கும வைகரிவாக்கால் தன் செவிக்குமட்டும கேட்கும்படி உச்சரித்தல மந்தமும, தூலவைகரிவாக்கால் தனக்கும பிறர்க்கும கேட்கும்படிஉச்சரித்தல உரையுமாம. வாக்கின் கலப்பின்றித் தனித்து அறிவுருபமாய் நின்று பாவித்தலாகிய சுத்தமானதமே இவ்விடத்தில் வேண்டப்படலால் சூத்திரத்தில உச்சரிக்க என்றது "எண்ணும்" என்றனா.*

## உதாரணவெண்பா— 7

**இந்துவிற் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்**
**சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே**
**காட்டாக்கிற் றூனறிக் கனல்சே ரிருமபென்ன**
**ஆட்டாறு மோதஞ் செழுத்து.**

*இவ்வெண்பா, மேலைவெண்பாவிற் கூறியவாறு, அஞ்செழுத்தோது முறையால் ஒருகுறியினை வைத்தன்றி முதல்வனைக் காணடல கூடாதெனபதையும, அவ்வாறு கணடவிடத்து முதலவன தனனிடத்தில விளங்கித் தோன்றுதலையும, தோனறிய விடத்துத் தான அம்முதல்வனுக்கு அடிமையாதலையும், உவமைவாயிலாக உணாத்தி அதனை வலியுறுத்துகின்றது.*

### இதன்பொருள்

*இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு — (அந்தரத்தில இயங்கிக்கொண்டிருக்கும நவக்கிரகங்களுள் மற்ற ஏழு கிரகங்களைப்போல் காணப*

படாத) இராகு கேதுக்களைக கிரகண காலத்தில சநதிர சூரியரிடத்திற காணுமாறுபோல்,— சிநதையில் காணில்—(பதி பசு பாசம என்னும் மூன்று பொருள கருள் யான் இதனை அறிநதேன் இதனை அறிகிலேன் எனனும உணாவிறகு விடயமாகக காணப்படும பசு பாசம்எனனும இரணடினைபபோல வேறு காணபபடாத பதியாகிய முதலவனைத்தன) இதயத்தின்கண் (அஞ செழுத தோதுமுறையால) காணுமாயின்,—உநதவே—(கோலை நட்டுக கயிறறினற சுறறிக) கடையவே,—காட டாககின் சிவம தோன்றி—விறகினினறுமதோன்றும அககினிபோல அமமுதலவன் அங்கே தோனறி,—கண ஆம — அறிவுககறிவாய விளங்கிநிறபன,— தான கனலசோ இருமபு என்ன ஆள ஆம — அபபொழுது தானும கனலைச சோநத இரும்புபோலத் (தன் சுதந திரத்தைவிட்டு) அமமுதலவனுக்கு அடிமையாம,—(ஆகலான்)—அஞ்செழுத்து ஓது—அவவஞசெழுத்தை விதிப்படி ஒருதலையா ஞேதுக எனறவாறு.

இராகுவைபபோல கேதுவும சாயாககிரகமாதலால கேதுவை வேறுகூறவிலலை. கண—அறிவு. காட்டககினி யின என்பது காட்டாககின் என விகாரமாயிறறு. காட டமவிறகு. காடட அககினி—காட்டககினி. இன் உவம உருபு.

### உதாரணவெண்பா — 8

மண்முத ளுளமலா வித்தை கலாரூபம்
எண்ணிய வீசர் சதாசிவமும்—நண்ணிற்
கலையுருவாம நாதமாம் சததியதன் கணணும்
நிலையதிலா மச்சிவன்று ணேர்.

இவ்வெண்பா, தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட முதல்வனை இதயத்துட்கண்டு பூசித்தல் எவ்வாறு கூடும்? என்னும் ஆசங்கையை நீக்கி, அண்டத்தில் உள்ளனவெல்லாம் பிண்டத்திலும் சூக்குமமாய் அடங்கியிருத்தலினாலும், அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்தில் கமல ரூபமாய் விளங்குமாதலாலும், முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டு அங்ஙனம் வியாபகமாய் வயங்கும் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசித்தல் அமையும் என்பதைத் தெளிவித்தற் பொருட்டு அவ்விதய கமலத்தின் இயல்புணர்த்தி அதனை வலியுறுத்துகின்றது.

## இதன்பொருள்

நண்ணில்—(இதயகமலத்தின் இயல்பை) உற்றறியப்புகின்,— மண்முதல் நாளம் ஆம் — நிலம் முதலிய இருபத்துநான்கு தத்துவமும் (நாபியினின்றும் தோன்றும் எட்டுவிரல் அளவினதாகிய) நாளவடிவாம்,— வித்தை மலர் ஆம்—வித்தியா தத்துவமேழும் சுத்தவித்தையுமாகிய எட்டும் எட்டிதழ்வடிவாம்,— எண்ணிய ஈசா சதாசிவமும் கலாரூபம் ஆம்.—அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுரதத்துவமும் சதாசிவதத்துவமும் அறுபத்து நான்கு கேசரவடிவாம்,- சத்தி கலை உருவாம— சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம்,— நாதம் அதன் கண்ணும்—சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவாம,— ஆதலால் — அதில் சிவன்தாள் நிலையாம— அம்முப்பத்தாறு தத்துவமும்

ஆசனமாகக் கொண்டு அவற்றின் மேல் நிற்கும முதல வன் திருவடிகள் அவ்விதய கமலத்தின்மேல நிற்கும,—நேர்—அதனை அறிநது பஞ்சாககரத்தாற பூசைசெய்வா யாக என்றவாறு.

இவவெண்பாவினுக்கு அவவவ்வாகமம் பற்றி வெவவேறு பொருளுரைபபாரும் உளர்.

வித்தை—வித்தியா தத்துவம் எனபபடுமகலாதியும சுத்த வித்தையும. கலை அறுபத்துநான்காதலால அஃது அறுபத்துநான்காகிய கேசரங்களுககுத் தொகைபறறிக் கூறபபடும ஆகுபெயராயிறறு. ராசா என்றது ஆகு பெயராய் அவரால் அதிட்டிக்கப்படும தத்துவத்தை உணாத்தும. கலையுரு—கலைகருள் உரு—கேசரங்களுககு நடுவாய்விளங்குமபொகுட்டு. இதயகமலமானதுநாளம முதலாக மேல்நோக்கித் தோன்றும: உலகத்திற காணபபடும கமலமபோலன்றி, கணமுதலாகக கீழ் நோககித் தோன்றும் திவவியகமலமாம்.

நாளம — பூநதண்டு பொகுட்டு — தாமரைக் கொட்டை. கேசரம — தாமரைப பொகுட்டின புறத்தே தொங்குவன.

**ஒன்பதாஞ்சூத்திரம் முடிந்தது**

**சாதனவியல் முற்றிற்று.**

---

# பத்தாஞ்சூத்திரம்

## சிறப்பியல்பு — பயனியல்

## பத்தாஞ்சூத்திரம்

அவனே தானே யாகிய வங்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

இது முதல் மூன்று சூத்திரங்களும் பயனியல் சூத்திரங்களாம். பாசவீடும் (அதாவது பாசத்தை விடுதலும்) சிவப்பேறும் (அதாவது சிவத்தைப் பெறுதலும்) எனப் பயன் இருவகைப்படும். இவ்விரண்டினுள் பாசவீடாகிய பயனைக் கூறுவது இச்சூத்திரம்.

(இ-ள்) அவனே — ஞானக்கண்ணுற் சிந்தை நாட்டப்பட்ட) அம்முதல்வன்,— தானே ஆகிய அந்நெறி— (உயிராகிய) தானேயாய் நின்ற அப்பெத்தநிலைபோல,— ஏகனாகி—(உயிர்) அவனோடு ஒற்றுமைப்பட்டு (அதாவது அவனேயாய் நின்று),— இறைபணி நிற்க—

அவ்விறைவன் பணியின் வழுவாது நிற்பின்,—மலமாயை தன்னொடு — ஆணவமலம் மாயாமலம் என்னும் இரண்டனோடு,— வல்வினை — வலிய கன்மமலமும்,— இன்றே—இல்லையா யொழியும் என்றவாறு.

முதல்வன் உயிர்தானேயாய் நிற்றலாவது முதல்வன் பொருட்டன்மையால் உயிரின் வேறேயாயினும், பெத்தநிலையில் வேறு காணப்படாது உயிரேயானேன் கண்டேன் என்னும்படி உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

உயிர் ஏகனாகி நிற்றலாவது உயிர்தானென வேறு காணப்படாது அம்முதல்வனேயாம்படி ஒற்றுமைப் பட்டு நிற்றல்.

ஏகாரம் தேற்றம்.

ஏகனாகி ஒற்றுமைப் படுதலின்கண் பற்பல சமய வாதிகளின் மதம்பற்றித் தோன்றும் ஆசங்கைகளை யெல்லாம் நீக்குதற் பொருட்டு "அவனே தானேயாகிய வந்நெறி" என உவமை யெடுத்துக்காட்டி ஓதினார்.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்

1. அவனே தானேயாகிய வந்நெறி யேகனாகி
2. இறைபணிநிற்க மலமாயை தன்னொடு வல்வினையின்றே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. அரனுடன் ஒன்றாகிநில்.
2. உன் தொழிலெல்லாம் அரன்பணியென்று கொள்.

## இச்சூத்திரத்தின்வார்த்திகம்

1. *ஈண்டுப் பரமேசுரனை இவ்வான்மாவாய் நின்ற முறைமையான அவனிடத்தே ஏகனாகி நிற்க என்றது — அவ்வாறு நிற்கவே யான் எனதென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தையணையுமாகலான்.*

2. *இனி இறைபணி வழுவாது நிற்க என்றது— அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞானகன்மம பிரவேசியா ஆகலான்.*

## இச்சூத்திரத்தின் உதாரணவெண்பாக்கள் ஆறு.

## முதலதிகரணம்

அவனே தானே யாகிய வந்நெறி யேகனாகி.

*(இ–ள்) முதல்வன் (பொருட்டன்மையால் உயிரின வேறாயிருந்தும் பெத்தத்தில் வேறு காணப்படாது உயிரேதான் என்னுமபடி) உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்பதுபோல், உயிர்தானென வேறு காணுமாறின்றி அரனோடு ஒற்றுமைப்பட்டு (நிற்றல் வேண்டும்) என்றவாறு.*

*இவ்விடத்து அவன் என்பது முதல்வனை; தான் என்பது உயிரை.*

1. தன்னாற் கூறப்படும் பொருள்:

*உயிர் அரனோடு ஒன்றாகி நிற்றல வேண்டும்.*

2. ஐயப்பாடு:

*ஞானம் பிரகாசித்து விதிப்படி ஸ்ரீ பஞ்சாக்கர செபம் செய்த பின்னர் உயிர் முதல்வனுடன் ஏகனாய் நிற்றலும் வேண்டுமோ?*

3. பிறர்கூறும் பக்கம்.

*ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறியவாறு பிரபஞ்ச சத்தை அசத்தென்று கண்டுவிடுத்துத் தோன்றும் ஞானக்கண்ணினாலே சிவதரிசனம் செய்தபின்னர் வாதனாமலம் நீங்கி ஆன்மசுத்தியுண்டாதற்கு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரித்தல் மாத்திரமே யமையும். அதன்மேலும் ஏகனாகி நிற்றல் வேண்டா.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு.

*ஏகனாகி அப்படி நின்றாலேயன்றி யானென்னப் படும் ஞாதாவும், என்றென்னப்படும் ஞானமும் அதற்குவிடயமாய் என்றென்னப்படும் ஞேயமும் எனப் பகுத்துக்காணும் மயக்கவுணர்விற்கு ஏதுவாகிய மல வாசனை நீங்காது; அது நீங்கினாலன்றி முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை அநுபவித்தல் கூடாது. ஆதலால், அம்மலவாசனை நீங்கிச் சிவானந்தத்தை அநுபவித்தற்கு முதல்வனோடு ஏகனாய் நிற்றல் வேண்டும்.*

*ஞாதா — காண்போன்; ஞானம் — காட்சி; ஞேயம்—காட்சிப்பொருள்.*

5. இயைபு.

**உதாரணவெண்பா — 1**

**நானவனென றெண்ணினாககு நாடுமுள முண்டாதல்
தானெனவொன்றின்றியேதான துவாய்நானெனவொன
றிலலென்று தானே யெனுமவரைத தன்னடிவைத
திலலென்று தாஞ மிறை**

இதன்பொருள்

*நான அவன என்று எண்ணினாககும நாடும உளம உணடாதல—யானெனறும அவனெனறும பகுத்தறிநது நிற்பாாககும (யானே என நிறபாாககு முனைத்துத தோன்றுவதுபோல்) நாடுகினற ஆனம போதம முனைததுத் தோனறும (அதாவது முறபடுத் தோன்றும.) ஆதலினால,— தான் என ஒன்று இனறியே தான அது ஆய்—(அது தோனறியவிடத்து) தானென ஒருமுதல காணபபடுமாறினறித தான அவவுயிரேயாய்க காணபபடடும,— நான என ஒனறு இல எனறு—யான் என்று ஒருமுதல காணபபடுமாறிலலை யெனறறிநது,— தானே எனும அவரை – தானே முழுவதுமெனக காணபவரை,— இல எனறு — அவவாறே வேறு காணபபடுமாறில்லை யெனறு,— தன அடிவைத்து—தனது திருவடி வியாபகத்துள அடங்கி நிறகச செயது,— தான ஆமஇறை—தானே முழுவதுமாய்ககாணபபடடும நிற்பன இறைவன் என்றவாறு.*

*இதில நான் என்பதும அது எனபதும உயிரை அவன எனபதும தான எனபதும இறைவனை. அதுவாய தானும இறை எனக் கூடடுக.*

தூல வொளியாகிய கண்ணொளியும சூக்கும வொளியாகிய விளககொளியும அத்துவிதமாய்க கலந்து நிறகும நிலை பிரித்தறிய வாராமையிற் கண்ணொளி யாயக் காணுங்கால் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றும. ஆதலால் அபபடித்தோன்றும போதும விளககொளியிருந்தும் இல்லையாகும. கண்ணொளி யாய்ககாணுது விளககொளியாய்க காணுமிடத்துக் காணுந்தனமை முனைத்துத் தோன்ருமல காட்டுந தன்மையே முனைத்துத் தோன்றும. ஆதலினுல், அப போது கணணொளியிருந்தும இல்லையாகும. கணணொ ளியும விளககொளியுமெனப பகுத்துக காணப்புகினும காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுதலினுல் விளக்கொளி திரிவுபுலனுகக காட்சிபபடுவதல்லது தெளிவு புலனுகக காட்சிபபட்டு நிறபதில்லை. அது போல, தூல அறிவாகிய உயிரும சூககும அறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க கலந்து நிறகும நிலையும பிரித்தறிய வாராமையின், உயிராய்க் காணுங்காறசிவ மில்லை; சிவமாய்ககாணுங்கால உயிரில்லை. இரண்டு மாய்க் காணபபுகினும தறபோதம முற்பட்டு நிறற லின் அபபோதும சிவம ஐயககாட்சிககுப புலனுய் நிறபதல்லது தெளிவுகாட்சிககுப புலனுய் நிறகு மாறில்லை. ஆகலான் "நானவனென றெணணினாககு நாடுமுள முண்டாதல் — தானெனவொன்றின்றியே தானதுவாய்" என்ருர்.

யாதானு மொன்றைச சார்ந்து அதன்வடிவாய் நிற்பதன்றித் தனித்து நில்லாத உயிரைத் தனித்து நிற்பதாகக் காண்டல் ஐயககாட்சியாம். சிவம உயிரோடு

கூடிய விடத்தும் சிவமாய் விளங்குவதன்றி உயிராய் விளங்காமையால் அச்சிவமாக உயிரைக்காண்டல் தெளிவுக்காட்சியாம.

இறைபணிநிற்க
மலமாயை தன்னேடு வல்வினை யின்றே

(இ-ள்) இறைபணியில் வழுவாது நிற்பின் ஆணவ மலம மாயாமலம என்னும இரண்டேடு வலிய கன்ம மலமும இல்லையாய் ஒழியும் எனறவாறு.

1. தன்னற் கூறப்படும் பொருள் :

மலவாசனையறுதறகு ஆன்மா ஏகனுய பின்னரும இறைபணியில் வழுவாது நிறறல் வேண்டும்.

2. ஐயப்பாடு :

ஆன்மா இறைபணியில் நிற்பின அதன் குணமாகிய அறிவு இச்சை செயலகள கெடடொழியுமோ? கெடாது நிற்குமோ?

3. பிறா கூறும் பக்கம் :

இறைபணியில் நிறபதனல் ஆன்மாவின் குணமாகிய அறிவிச்சை செயல்கள கெட்டொழியுமெனில்' குண குணிகட்குத் தமமுள் வேற்றுமையில்லாமையால், குணம கெடவே குணியாகிய ஆன்மாவும் கெடும எனபபட்டு, முப்பொருளும் நித்தம என்னும் சைவ சித்தாந்தத்தோடு முரணும: கெடாது நிற்குமெனில் ஏகனுதல் கூடாது. அன்றியும, இறை பணியில நிற்ப தனல் ஆன்மா முத்தியிலும் சுதநதிரம்இல்லாதவனுய்ப்

பரதந்திரன் எனப்பட்டு முத்தியும் பந்தமாய் முடியும். ஆதலால் ஏகனாகி நிற்றலேயமையும். அதற்குமேலும் இறை பணியில் நிற்கக் கடவதின்று.

4 மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

விளக்கொளியின்றிக் கண்ணொளிக்குக் காட்சியில்லை ஆதலால் கண்ணானது தான் காண்பனவெல்லாம் விளக்கொளியின் செயலே யெனக்கண்டு, தானென்ன வேறு முனைத்து நிற்பதின்றி, அவ்விளக்கொளியில் அடங்கி நின்றால், ஏனைய விடய மெதுவும் கண்ணுக்குத் தாக்குதலில்லை. அஃதேபோல், ஆன்மாவானது தன்னுடைய இச்சா ஞானக் கிரியைகளயாவும் முதல்வனுடைய இச்சா ஞானக் கிரியைகளின்றித் தொழிற்படா ஆதலால், தன்னிடத்து நிகழும் இச்சா ஞானக்கிரியைகளின் நிகழ்ச்சியாவும் முதல்வனது இச்சா ஞானக்கிரியைகளின் நிகழ்ச்சியே எனக்கண்டு அம்முதல்வன் வியாபகத்திற்குள்ளாக அடங்கி, அவன் அருள்வழி நிற்பின் பிரபஞ்சம் சிறிதும் தாக்கமாட்டாது. அது தாக்காதொழியவே அது காரணமாக மேலைக்கு வினையேறுதலில்லை. அப்படி அடங்கி அருள் வழி நில்லாதவிடத்துப் பிரபஞ்சம் தாக்காமலிராது. அது தாக்குமாயின், அது காரணமாக வரும் விருப்பு வெறுப்பு ஏறாமலிராது. விருப்பு வெறுப்பு ஏறுமாயின் அது பிறவிக்கு வித்தாய் மறுபடியும் பெத்த நிலையிற் செலுத்திவிடும் ஆதலால், அவ்வாறு நிகழாவண்ணம் மாயை கன்மங்களின் வாசனை யறுதற்கு இறைபணியில் வழுவாது நிற்றல்வேண்டும். அவ்வாறு நிற்றல் தன் இச்சையின்படிசிவானந்தத்னை,நயனுபவித்தற்கேதுவாய

இறைபணியாளாகலின் அது பந்தத்தினுட்படுத்து மாறிலலை. அதனால், ஆன்மா சுதந்திரனுவனேயன்றிப் பரதந்திரன் ஆகான.

இங்கு இறைபணியென்றது இறைவனருள் வழி நிற்றலை. வழுவாது நிற்றலென்றது சலியாது நிலை பெறுதலையாம

5. இயைபு:

**உதாரணவெண்பா — 2**

**நாமலல விந்திரியம் நம்வழியி னலலவழி**
**நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னில்**
**எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை**
**முற்செயவினை யுந்தருவான முன.**

(இ-ள்) இந்திரியம நாம அல்ல — செவி வாய் முதலிய இந்திரியங்கள் முதலவனது உடைமையாகிய மாயேயம எனப்படுவனவன்றி ஆனமாவாகிய யாம் எனபடுவனஅல்ல,— நம வழியின் அல்ல — அவை தொழிறபடுதலும முதலவன் வயத்தானன்றி நம்வயத் தானலல,— வழிநாம அலல — (அவவிந்திரியங்கள சத்தம முதலியவைகளையும வாககு முதலியவைகளையும விடயித்தறகு) வழியாகிய தநுகரண புவன போகங் களும அம் மாயேயமாவன வன்றி யாமாவன அலல,— நமவழியின் அலல—அவை சேட்டித்தலும முதலவன் வயத்தானன்றி நமவயத்தானலல,— நாமும அரனு டைமை — (அவற்றோடு இயைந்து நின்று வினைகளை யீட்டுதற்கும நுகாதற்கும வினை முதலாகிய) யாமும (ஞானசசெய்திகளை முதலவன் விளககியபோது விளங் கியும விளககாதபோது விளங்காதும இவவாறு முதல

வினையின்றி அமையுமாறின்மையான்) அம்முதல்வனது உடைமையாவோம—(சுதந்திரராவோமல்லோம),—ஆம என்னில — என்று இங்ஙனம பசு பாசங்களின இயல்புகளை உள்ளவாறு உணர்ந்து செய்வனவெல்லாம அவனருள் வழிநின்று செய்யுஞ் செயலாமெனக் கண்டு கொண்டிருப்பாராயின,— இறை பணியார்க்கு எத்தனுவின் நின்றும வினை இல்லை — அவ்விறைபணியாகிய அடிமைத்திற முடையார எவ்வுடம்பினின்று எவ் வினைகளைச் செய்யினும அவை அவர்க்குப பந்தமாதலில்லை,— முன்செய்வினையும தருவான முன்ஆம — (அவ்வாகாமிய வினையை அவிநாபாவமாய உடன் கொண்டு வருவதாகிய) பிராரத்த வினையும தன்னைக் கூட்டுவிக்கும முதலவன் சந்நிதியில் (உடலூழாய்க்) கழியும. (அப்படிக் கழிவதன்றி ஏனையோர்க்குப்போல அவர்க்காதலில்லை)

நம வழியினல்ல என்பதனை வழிநாமல்ல என்பதனோடுங் கூட்டுக. ஆம என்பதனைத் தருவான் முன் எனபதனோடு சேர்த்துப பொருளுரைக்க. ஆம என்பது சொலலெச்சம. சஞ்சித வினை ஆசாரியன் தீக்கை செய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துபோலக் கெட்டொழிதலின இங்கு முற்செய்வினையென்றது பிராரத்தவினையை யெனக் கொளக.

இவ்வெண்பாவினால் இறைபணியில் நிற்பார்க்குப் பிராரத்தவினை முதல்வன் சந்நிதியில உடலூழாய் ஒழிவதாகலின மேலைக்கு வினையேறுவதில்லை யென்பது விளக்கப்பட்டவாறு காண்க.

# இரண்டாமதிகரணம்

## உதாரணவெண்பா—3

சாரந்தாரைக் காத்தல் தலைவா கடனுதல்
சார்நதாரைக காததுஞ் சலமிலனுய்ச்-சார்ந்தடியார்
தாந்தாஞயச செயதுபிறர் தங்கள்வினை தான்கொடுத்
ஆயந்தாாமுன் செயவினையு மாங்கு. [தல்

### இதன்பொருள்

*சார்நதாரை காத்தல தலைவா கடனுதல்—தம்பால் அடைக்கலமெனச சாரநதாரைக காபபது உத்தமர் கடமையாகலான,—தான் சாரநதாரை காத்தும—முதல்வன தன்னைச சாரந்தவரையே பாதுகாப்போனுகியும,—சலம இலன் ஆய்—அதுபறறிக கோடடமுடையனல்லனுய்,—சாரநது அடியார தான தானுய்செய்து—தன்னைச் சாரநது தன அடிபபணியில நிற்கவலல அடியார் தானே யாய் நிறகுமாறு நிறுவி,—பிறா தங்கள வினைகொடுத்தல் —அவாககு வரும ஆகாமிய வினையைக் கொடுத்து, அது செயயமாட்டாத பிறாககு வரும ஆகாமிய வினையை அவாககுக கொடுபபான. அபபடிக கொடுததலினுல,—ஆய்நது ஆர் முன் செய்வினையும ஆங்கு — அவ்விரு திறததோாககும உணவாகி நுணுகி வநது பொருநதும் பிராரத்த வினையும அவவாறே செய்வோர் செய்திககுத் தக்கபயனுய் இருவேறுவகைபபடச்செய்வன் எனறவாறு*

*சாராதாரை யொழித்துச சார்ந்தவரையே காப்பது நடுவு நிலையாகிய தலைமைக குணமாவதனறி இழி*

குண மன்றென்பார் தலைவா கடன என்றூா - "தன்னை யடைந்தார வினை தீாப்பதன்றோ தலையாயவர் தங் கடனாவது தான்", "சலமிலன் சங்கான் சாாந்தவாக் கலால் நலமிலன்" என்னும தேவாரத்தானும இதனை யறிக. உமமை சிறப்பின்கண வந்தது. சாாந்த என னும் பெயரெச்சம சார்ந்து என ாறு திரிந்தது. தான— முதல்வன் ஆதல்—ஆதலால. கொடுத்தல—கொடுத் தலால். ஆய்ந்து — நுணுகி ஆாவினை — ஆருமவினை; கூடுவதாய வினை பிராரத்தவினை சூக்குமவினையாகலின அது கூடும முறைமையறிதல அரிதெனபாா "ஆயந் தாா முன் செய்வினையும" எனறூா.

### உதாரணவெண்பா—4

இங்குளி வாங்குங் கலமபோல ஞானிபான
முன்செய் வினைமாயை மூண்டிடினும—பினசெய்வினை
மாயையுட னிலலாது மற்றவனறுன மெயப்பொருளே
ஆயவத னுலுணரு மசசு

### இதன்பொருள்

இங்குளி—பெருங்காயத்தின வாசத்தை,— வாங் கும — பெறுகின்ற,— கலமபோல — பாத்திரத்தைப போல்—(அதாவது தன்பால வைத்து எடுககபபட டொழிந்த பெருங்காயததினின்றும அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும பாத்திரத்தில் அவ்வாசம மங்கிப போய் மெலிதாய்க கந்திககுமாறுபோல),—ஞானிபால் முன்செய் வினை மாயை மூண்டிடினும — (நான் அவ னென்றெண்ணிச சிவோகம்பாவனை செய்தறியும) ஞானிக்கு (நாடும உளம உண்டாதல் கூடுமாகையால்

அதுபற்றி) அவனிடத்துப பிராரத்த வினையும், அதற இடனாகிய உடமபு முதலிய மாயையும் வாசனை மாத் திரையாய் மெலிதாய் வநது தாககுமாயினும,— பின் செய்வினைமாயையுடன் நிலலாது—அவவழி ஏறுவதாகிய ஆகாமிய வினை (மேலைககு வித்தாய் நிலை பெற்று முறு குதலின்றித் தனககுப பற்றுக கோடாகிய) மாயையத் திரேனோடும கெடடொழியும,— அவன் தான் மெய்ப் பொருளே ஆய அதனால மற்று அசசு உணருமட—அந்த ஞானி (பினனாப பகுததுணாவுமஇறநது ஏகனாகி இறை பணிநின்று) சத்தாயுளள சிவமேயாகிய அதனால (ஒரோவழி அவவாதனைபற்றிப் பிறழினும் பிறழவொட் டாத) அவவசசினையே (அதாவது அசசாணிபோனற அசசிவத்தைையே) உணாநது நிறபன். (ஆதலினால ஒளி இருளைததாககுமாறு போல அவவுணாவு அவவாகா மியத்தைத் தாககும என்றவாறு

இங்கு—பெருங்காயம். உளி ஐந்தாம வேற்றுமை யுருபு. இங்குளி—பெருங்காயததின். வாசனை யென்பது வருவிககப்படடது.

சககரத்தைபபிறழவொட்டாதுநிலைத்திருககும்படி செய்யும அச்சுபபோல வினைவயத்தால ஞானியைப பிறழவொட்டாது நிலைத்திருககச்செய்வது மெய்ப் பொருளாதலால் அமமெய்பபொருளை அசசாக உரு வகஞ் செய்தார்.

## உதாரணவெண்பா — 5

**நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்**
**பண்ணமர மாச்செலுத்தும் பாகரினும்—எண்ணி**
**அரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்றும்**
**அவர்திற னீங்கா ரதற்கு.**

## இதன்பொருள்

நண் அனல் வேவாத நலதவர் தமமினும—அனல் நடுவில (இருநதும) வேவாத நலல தவததினையுடையாா போலவும (அதாவது, அங்கித்தமபன சித்தியையுடையவா அககினியின் நடுவில இருபபினும தம திறததின் நீங்காதவாறு போலவும),— பண அமா மா செலுத்தும பாகரினும—பணணபபடும கதிகளா பொருநதக குதிரையைச செலுததும பாகரைப போலவும (அதாவது குதிரையை அதன் கதிகளுககிசைய வேகமாய்ச செலுத்துதறகுரிய பாகுநூல கறறுவலலாா அககுதிரையின வேகத்துட்படினும தம திறத்தின் நீங்காதவாறு போலவும), — எணணி — (ஐமபுலனகள் தமக்கு வியாபபியமாய் அடங்கத் தாம அவற்றை வியாபித்து மேறபட்டு நிறகும முறையை) ஆராய்நது,— அரன் அடி ஓர்பவர்— முதலவன் திருவடியாகிய அசசினை (இறைபணியினினறு) உணரவலலோா, - ஐமபுலனில சென்றும் அதறகு அவா திறல நீங்காா— அவவைமபுலனிற சென்றும அதனுலே தம திறல் நீங்குதல் இலா என்றவாறு.

நள் அனல என்பது நணணனல எனமருவியது. நீா கிழ் என்பது கிழ்நீர் என மாறியது போல, அனல நண என்பது நண் அனல என மாறியது. நள்—நடு. பண்—பண்ணபபடும் கதிகள். அதற்கு—அதனுல்

### உதாரணவெண்பா—6

**சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணின்**
**இதமிததல் பாசத்தி லினறிக்—கதமிக்**
**கெரிகதிரின முன்னிருள்போ லேலா வசத்தின்**
**அருகணையார் சத்தணைவா ராஙகு**

## அந்நுவயம்

*சதசத்தாம மெய்கணடான் சத்தருளிறகாணின், பாசத்தில் இதமித்தலினறிச சத்தணேவார் கதமிக் கெரிகதிரின்முன் இருள்போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகணேயார்.*

## இதன்பொருள்

*சத சத்து ஆம மெய்கண்டான் சத்து அருளின் காணின்—சத்தோடு கூடிய இடத்துச சத்தாயும அசத்தோடு கூடிய இடத்து அசத்தாயும, இவவாறு சதசத்தாம் இயலபுடைய தன் உணமை யுணர்நதோன் சத்தாகிய முதல்வன் திருவருளினலல்லது ஒன்றையுங் காணுனின் (அதாவது எதையும அவவருள வழிநின்று காண்பானுயின்),— பாசத்தில இதமித்தல இன்றி—அவவழிபபாசமாகிய அசத்தின இதஞ் செய்தலின்மையால,— சத்து அணேவார — சத்தாகிய அம்முதல்வனைத் தலைபபடுவோர,— கதம மிகுகு எரிகதிரின் முன் இருள்போல—சீற்றமிக்கு எரியா நினற ஒளியின் முன் இருள்போல,—ஆங்கு ஏலா அசததின அருகு அணேயார்—அசசத்திஞெதிர தனது சத்திியை ஏறக மாட்டாத அசத்தாகிய பாசததினிடம் எய்துவாரலலர் என்றவாறு.*

*மெய்கண்டான் காணின், சத்தணேவார் அணேயார் என முடிதலால் ஒருமைபன்மைமயககமன்மை தெளிக. இதமித்தல்—இதஞ்செய்தல்—பறறுசசெய்தல். இன்றி—இன்மையான். அருளின்—அருளினுல். எரிககுக் கோபம் உண்டென்பது ஒபபுமைபற்றி. இதனை ச*

“சினம என்னுஞ் சேரநதாரைக கொல்லி” என்னுந் திருககுறளானும, “எரிதுளளினாலென வெகுணடான” எனனும பெரியபுராணத்தானும அறிக.

இவவைநது வெணபாவானும முறையே இறை பணியினிறபார்ககுப பிராரத்தவினை முதலவன சநநிதியில உடலூழாய் ஒழிவதாகலின் மேலைககு வினையேறுமாறிலலை யென்றும், அது செய்வோர செய்திப பயன் விளையுமாறறாற பெறபபடும என்றும, செய்வோர செய்திப பயனன்றியும விளைவது வாதனை மாத்திரையேயாகலான அதுபறறி வரும வினை ஞானத்தான அழிவெயதும என்றும, அநத ஞானம வாதனைபறறிச சலிககுமாறிலலை என்றும், அது சலிககாமைககேது இது என்றும எடுத்துககாடடி, அஞ்ஞான கன்மம பிரவேசியாமையை வலியுறுததியவாறு காண்க.

**பத்தாஞ்சூத்திரம முடிந்தது.**

---

# பதிணொராஞ்சூத்திரம்

## பதினொராஞ்சூத்திரம்

**காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்**
**காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்**
**அயரா வன்பி னரன்கழல் செலுமே**

இச்சூத்திரம் சிவப்பேறாகிய பயனைக் கூறுகின்றது.

(இ-ள்) *காணுங் கண்ணுக்கு* — காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு,— (*காண* — உருவத்தைக் காணுமாறு),— *காட்டி* —(பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதற்குக்) காட்டி,— (*காணும்*) *உளம்போல* — (தான் காண்கின்ற) ஆன்மாவைப்போல,— (*காணும்* — அறிவிக்க அறிவதாகிய),— *உள்ளத்தை* — அவ்வான்மாவுக்கு,— *காண* — விடயத்தை அறியுமாறு,— *காட்டி* — (முதல்வன் பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதனை) அறிவித்து,— *கண்டலின்* — தான் அறிந்து வருதலால்,—(*அதனை* — அவ்வாறு அத்துவிதமாய் நின்று உதவிசெய்துவரும் பெருங்கருணையை), *அயரா*

அன்பின்—மறவாது கடைப்பிடித்துச செய்யும அன்பி ஞலே,— அரன் கழல் செலுமே — (ஆன்மா) அம முதல்வனது திருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படும் என்றவாறு.

இசசூத்திரம காணும் கண்ணுக்குக (காணக்காட டிக) காணும உளமபோல, காணும உளளதைக காணககாட்டிக காண்டலின, (அதனை) அயரா அனபின அரன கழல செலுமே என விரிததுரை செயயப பட்டது

வெகுண்டு வேர்த்தான் என்பது வேர்த்து வெகுண்டான் எனப்படுவதுபோல, காட்டிக காணடல என்பது கண்டு காட்டல எனபபட்டது. அயராமைக குச் செயப்படுபொருள அதனை யென்றெடுத்துக கொள்க. அயரா அனபு — அயராமையாகிய அனபு. உளளத்திற்கு என்பது உளளத்தையென நினறது உருபு மயக்கம. அறிவிச்சை செயல்களுள் அறிவின் நிகழ்ச்சியாகிய அயராமையும, இசசையின் நிகழ்சசி யாகிய அன்பும, செயலின நிகழ்சசியாகிய அரன் கழல் செல்லுதலும முறையே காரண காரியங்களாய் அரன கழல் செல்லுதலாகிய அவவொரு பொருளமேல ஒருங்கு நிகழுமென்பார "அயராவன்பின் அரன்கழல் செலுமே" என்ருர். இதனுல அறிவு இசசை செயல் ஆகிய இம்மூன்றும முதல்வனையே விடயித்தல் அறிக.

## இச்சூத்திரத்தின் விரிவுரை

காணுங் கண்ணுக்குக் காணக்காட்டிக் காணும் உளம்போல் — ஆன்மாவின் துணையின்றி ஒன்றையும காணமாட்டாத கண் ஒருருவத்தைக் காணுமிடத்து,

ஆன்மபோதமானது கண்ணொளி வேறு தான் வேறு என வேறு காணப்படாது உடனாய்க் கலந்து நின்று, கண்ணுக்குக காட்டிய உருவத்தைக் கண்கண்டது என்றும, கண்ணை அதிட்டித்துநின்ற ஆன்மா கண்டது என்றும பிரித்து அறியப்படாதபடி இருவகைக் காட்சியும ஒன்றையொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே நிகழும முறைமைபோல்,— காணும் உள்ளத்தை காணக் காட்டிக் காண்டலின் — முதல்வன துணையின்றி ஒன்றையும் அறியமாட்டாத ஆன்மா ஒரு விடயத்தை அறியுமிடத்து அம்முதல்வனது சிற்சத்தியானது ஆன்ம சிற்சத்தி வேறு தான் வேறு என்று வேறு காணப்படுமாறின்றி உடனாய்க் கலநதுநிறக, முதலவனும் ஆன்மாவில அவ்வாறு விரவிநின்று அறிவித்த விடயத்தை ஆன்மா அறிந்ததென்றும ஆன்மாவை அதிட்டித்து நின்ற தான் அறிநதான் என்றும பிரித்தறியப்படுமாறின்றி இருவகையறிவும ஒன்றனையொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே விடயித்துசசெல்லுமாறு செய்துவரும இவ்வுபகாரம் பெத்தம் முத்தி இரண்டினும ஒரு பெற்றித்தாய் உணமையின்,- அதனை அயரா அன்பின் அரன்கழல் செலும — ஏனையவறறையெல்லாம கைவிட்டு முதல்வனிடத்து ஏகனாகி அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாய் நின்ற ஆன்மா, முதல்வன் அவ்வாறு அத்துவிதமாய் உடனின்று கருணையான் உபகரித்துவரும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குநதோறும அப்பொருளின் கட் செல்லும் இசசை அடங்காது மீதூர்தலின் அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கபபெறும.

இதனால அறிவிச்சை செயலகள் மூன்றும அம முதலவனை ஒருங்கே விடயித்து நிற்குமாறு விளககி அதீத நிலையின இயல்பு கூறியவாறும.

### இச்சூததிரததின அதிகரணங்கள

1. காணுங் கணணுககுக காட்டு முளமபோல காணவுள்ளத்தைக காட்டிக காண்டல்.

2. அதனை அயராவன்பி னரன்கழல் செலுமே.

### இசசூததிரததின சூர்ணிகை

1. ஞானிககு வருகிற விடயங்களை அரனே அநு பவிபபன.

2. அரனை மறவாமல அனபு இருநதால அவ னிடத்திலே ஐககமாயப போவன.

### இச்சூத்திரத்தின் வார்ததிகம்

1. ஈணடு அவனும அவற்றது விடயத்தை உணரும எனறது—இவவான்மாக்கள அவனையினறி யமைநதொனறையும விடயியா வாகலான்

2. இனிப பததியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை அணையும எனறது—அவன் அநநியமின் றிச செயவோர செய்திபபயன் விளைத்து நிற்றலான.

### இச்சூத்திரததின உதாரணவெணபா ஆறு.

## முதலதிகரணம்

---

காணுங கண்ணுக்குக் காட்டு முளமபோல்
காணவுள்ளத்தைக் காட்டிக் காண்டல்.

(இ-ள்) காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு உரு வத்தைக் காணுமாறு அதனோடு ஒருங்கு கலந்துநின்று காட்டித் தான் காண்கின்ற ஆன்மாவைப்போல, அறி விக்க அறிவதாகிய அவ்வான்மாவுக்கு விடயத்தை யறியுமாறு அதனோடு ஒருங்கு கலந்து நின்று அறி வித்துத் தான் அறிந்து வருதலால் என்றவாறு.

1. தன்றுற் கூறப்படும் பொருள்:

ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அனுபவிப்பன்

2. ஐயப்பாடு:

முதலவனிடத்தில் காட்டும் உபகார மாத்திரமே யன்றிக் காணும் உபகாரமும் உண்டோ? இல்லையோ?

3. பிறாகூறும்பக்கம்:

கண் சடமாதலாலும், காணுதலாகிய பயன் ஆன்மாவுக்கே யாதலாலும், கண் காணும்போது ஆன் மாவும் உடனின்று காணும் என்பது பொருந்தும். ஆன்மா சடமல்லாமையாலும், அறிதலாகிய பயன் ஆன்மாவுக்கேயன்றி முதலவனுக்கில்லாமையாலும் முதலவனும் அவற்றின் விடயத்தை உடனின்று அறி யும் என்பது பொருந்தாது அன்றியும், ஆன்மாவானது பெத்தத்தில் உலகப்பொருள்களை அறியுமிடத்து முதல வன் உடனின்று அறிவன் என்பது பொருந்துமெனி னும், முத்தியில் ஆன்மாவுக்கு விடயமாவதொன்றில்லா மையால் அவ்விடத்தும் முதலவன் உடனின்று அறி வன் என்பது பொருந்தாது.

அன்றியும், முதல்வன் காட்டும் தொழில் மாத்திரம் உடையவனெனில (5-ம சூததிரத்தில்) "காநதங் கண்ட பசாசத்தவையே" எனறபடி விகாரியாகான். உடனின்று காணுநதொழிலும உடையவனாயின ஆன் மாக்கள்போல பந்தமுற்று விகாரமெய்துவன.

## 4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு.

விளககொளியானது கணணொளியோடு கலநது உருவததினுங் கலநதால மட்டும கண் உருவத்தைக காணும. அவவாறு கலவாதபோது கண உருவத்தைக காணமாட்டாது. அதுபோல, முதல்வன் அறிவித தால அறியுந தன்மையுடைய உயிர்களும முதலவ னுடைய அறிவு உயிராகிய தமமறிவோடு கலநது பொருளினும கலநது நின்றால மட்டும, தம அறிவு விளங்கிய பொருளையறியும. முதலவனறிவு உயிரின் அறிவோடும பொருளோடுங் கலவாதபோது உயிகள் தனித்து ஒன்றை அறியமாட்டா, தனித்து நின்று ஒரு பொருளை அனுபவிககவும மாட்டா. ஆதலால் அறிவு விளங்குதற்பொருட்டு மாத்திரமன்றி விடயத் திற் சென்று பற்றுதற்கும் முதல்வன் உடனிற்றல் பெறப்படும். படுதலும், முதல்வனும விடயத்தை உணரும என்பது துணியப்படும.

பரமுத்தியில் ஆன்மா சிவானந்தத்தை அநுப வித்தலினாலும் அவ்வநுபவம் முதல்வனையின்றிக கூடா மையாலும, முதல்வனும் அவ்வநுபூதியை அவவான் மாவினிடம் தங்கி நின்று உணர்வன். இக்கருத்தையே பற்றிச் சில ஆகமங்கள் முதல்வனும தன் ஆனந்தத்தை

அநுபவிப்பன் என்று கூறும். (இவ்விடத்தில் முதல்வன் அநுபவிப்பன் என்று ஆகமங்கள் கூறுவதின் கருத்து அறிவன என்பதேயாம். (அழுந்தியறிதலே அநுபவித்தல் என்னுஞ் சொல்லுக்குப் பொருளாதலாலும், அழுந்தியறிதல் ஆன்மாவுக்கேயன்றி முதல்வனுக்கு இல்லாமையாலும், முதல்வன் ஆனந்தரூபமாயிருத்தலினால் தானே தன்னைப் புதிதாக அநுபவித்தல் வேண்டாமையாலும், முதல்வன் செய்யுஞ் செயலெல்லாம் தன் பொருட்டன்றி ஆன்மாவின் பொருட்டேயாதலினாலும், ஆகமங்கள் முதல்வனும் தன் ஆனந்தத்தை அநுபவிப்பன் என்றதற்கு அறிவன் என்று பொருளுரைப்பதே பொருத்தமுடைத்தாம்)

உயிரும் முதல்வனும் உடனாய் நின்று விடயங்களை யறியினும், உயிர் தன்னாற் சாரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையே பற்றிப் பலவேறு வகைப்பட அறியும். முதல்வன் எல்லா உயிராலுஞ் சாரப்பட்ட எல்லா விடயங்களையும் ஒரு தன்மையாக அறிவன். ஆதலால் உயிர்போல முதல்வன் பந்தமடையான். ஆதலால் அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்பது துணியப்படும்.

5. இயைபு:

**உதாரணவெண்பா — 1**

**ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ**
**தைந்துமபோ னின்றுணரு மாகலான்—ஐந்தினையும்**
**ஒன்றொன்றாப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகும்**
**ஒன்றொன்றாப் பார்க்கு முணர்ந்து.**

அந்நுவயம்—உள்ளமே அவற்று ஐந்தும்போல் நின்று உணாவது உணருமாதலான் ஐந்தையும் ஒக்க உணராது, ஐந்தினையும் ஒன்று ஒன்றுப்பார்த்து உணாவது ஒன்று எவ்வுலகும் ஒன்று உணாந்து பாாக்கும்.

## இதன்பொருள்

உள்ளமே அவற்று ஐந்தும்போல் நின்று உணாவது உணரும் ஆகலான் — ஆன்மாவானது சுவையொளி யூறோசை நாற்றம் என்னும் ஐந்தினும் ஐம்பொறி போல் அதுவதுவாய்ச் செறிந்து நின்று உணாதற் பாலதனை உணருந் தன்மைத்தாகலான், (அதாவது, மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து இந்திரியங்களும் தத்தம் விடயங்களை உணருமிடத்து அந்த அந்த இந்திரியம் அதனதன் விடயத்தை அதுவதுவாக நின்றுணாந்து பிறிதொரு விடயத்தை உணராதவாறு போல, ஆன்மாவானது இரதம் உருவம் பரிசம் சத்தம் கந்தம் என்னும் ஐந்து விடயங்களை உணருமிடத்து அந்த அந்த விடயமாய் நின்று உணரக் கூடிய ஒவ்வொரு விடயத்தையே உணருந் தன்மையுடையது. ஆதலால்),— ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒன்று ஒன்று பார்த்து உணாவது — அவ்வைம்புலன்களையும் ஒருங்கே உணரமாட்டாது, அவ்வைந்தினையும் ஒவ்வொன்றுய் றிந்தனுபவிப்பதாம் (அவ்வாறு அனுபவிப்பதனால் சார்ந்ததன் வண்ணமாயிருக்கும் அவ்வான்மா பல தன்மைப்பட்டு விகாரமடையும்),— ஒன்று எ உலகும் ஒன்று உணாந்து பாாக்கும்—(அதுபோலச் சாாந்ததன் வண்ணமாய்ப்பல திறப்படுதலன்றி) என்றும் ஒரு பெற்றித்தாயிலங்கும

*பரமபொருள் (எல்லா உயிர்களுடைய) எல்லா விடயங்களையும (பொதுவகையால) ஒருங்கே யுணர்ந்து (அவவுயிர்களுடனின்று சிறபபு வகையாலும) அறியும். (ஆதலால உடனின்றறிதலே பற்றி ஆன்மாப்போல் பரமபொருள் விகாரமடைதலில்லை என்றவாறு.*

## உதாரணவெண்பா—2

**ஏகமாய் நின்றே இணையடிக ளொன்றுணரப்**
**போகமாய்த் தானவிளைந்த பொற்பினுன்—ஏகமாய்**
**உள்ளததின கண்ணுை னுளகுவா ருன்கிற்றை**
**உள்ளத்தாற் காணுரே வுற்று.**

### இதன்பொருள்

*ஒன்று இணையடிகள் ஏகமாய நின்றே உணர— முதல்வன திருவடிகளில் (நான் என ஒன்றிலலை,எல்லாம் அமமுதல்வனே யென) ஏகமாகி நின்று கொண்டே (பிராரத்த விணைகடோக வரும விடயத்தை) உணாவா ராயின்,—தான் போகமாய் விளைநத பொறபினுன்— அது தான் அசசீவன முத்தாகரு (விணைப்பயனுதலின் றிச) சிவபோகமாய் விளைகினற பொறபினுலே,— உள் குவாா உள்கிறதை—அவவாறு உணாவாரால் உணரப் படும விடயத்தை,—உளளத்தான உறறு காணுரே— அவ்வுணர்வினிடத்தாற் பொருநதி அறிந்து தனக்காக் கிக் கொள்ளான் கொல்லோ,— ஏகமாய் உள்ளத்தின் கண் ஆனுன்—(பெத்தம் முத்தி இரணடினுமம) அத்து விதமாய் அவ்வறிவின் கண் நீங்காது உடனின்று உணர்த்தியுமம உணாநதும வரும் அம்முதல்வன் என்ற வாறு.*

நின்றே என்பதில் உள்ள ஏகாரம நிலலா துணர் தலைப் பிரித்தமையின் பிரிநிலைககண வநதது. இணை யடிகள்—இணையடிகளின் கண். விளையுமபொறபினுன் என்பது தெளிவு பறறி விளைநத பொற்பினுன் என இறநதகாலத்தாற கூறப்பட்டது விளைந்த பொற்பி ஞன் என்றமையிற் போகம சிவபோகமாதல் பெறறும ஆனமை—நீங்காமை. உள்ளத்தின் கண் ஆனை—உள் ளத்தின் கண் நீங்காதுறைபவன்

இணையடிகளில் ஏ க ம ா ய் நின்று கண்டதோர பொருளை அநதக கருத்தினுற் காண்பாாககு அது சிவ போகமாய் விளையுமெனபதை "பெற்ற சிறறின்பமே பேரின்பமாம" எனவும "காணுங் காணங்களெலலாம பேரின்பமெனப—பேணுமடியார" எனவும வருவன வறறுனுணர்க.

இவ்வதிகாணத்தால் பெத்தம முத்தி இரண்டினும ஆன்மாவால் விடயிககப்படும விடயங்களை முதலவன உடனினறு விடயிபபன் என்பதும, பெத்தத்தில முதல்வன் ஆன்மாவாய் நின்று விடயித்தலின் விடயங் கள் முதல்வனுககன்றி ஆன்மாவுககாயின வெனபதும, முத்தியில ஆன்மா முதல்வனாய் நினறு விடயித்தலின் விடயங்கள் ஆன்மாவுககன்றி முதல்வனுககாயின வென்பதும, உடல் பொருளாவி முழுவதும முதல் வனுடைமையெனக கொண்டு முதலவனுக்கு அர்ப பணஞ் செய்து பதார்த்தங்கள் பாராது பரமே பாரத் திருக்கும சீவன்முத்தாகளால் விடயிககபபடுவன யாவும அவாகளுககுப பேரின்பமாய் விளையுமென்பதும அதனுல எஞ்சி நின்ற பிராரத்தவினை அவாகளைத் தொடர்தலில்லை யென்பதும் பெறறும.

# இரண்டாமதிகரணம்

**அதனை அயராவன்பி னரன்கழல் செலுமே**

(இ-ள்) ஆன்மாவானது முதல்வன் அத்துவிதமாய் உடனின்று கருணை மேலீட்டினாலே உபகரித்து வரும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அவன்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூர்தலின் அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அனுபவிக்கப் பெறும் என்றவாறு.

1. தன்றை கூறப்படும் பொருள்:

முதல்வன் செய்யும் உபகாரத்தை மறவாமல் அன்பு செய்தால் உயிர் அவன் சீபாதத்தை யடையும்.

2. ஐயப்பாடு:

உயிர் பத்தி செய்தலினாலேயே முதல்வன் சீபாதத்தை அணைதல் கூடுமோ?

3. பிறர் கூறும் பக்கம்:

ஒரு பொருளை யறிந்த மாத்திரத்திலேயே அதனிடத்தில் இச்சை நிகழக்கூடுமாயினும், இச்சை யுண்டான மாத்திரத்திலேயே அப்பொருளை யடைதல் கூடும் என்பது உலகத்திலில்லை. ஆதலால், ஆன்மா பத்திமாத்திரையால் முதல்வன் சீபாதத்தை யணைவது கூடாது. பத்தியாவது சீவன் முத்தி நிலைக்குச் செய்யப்படும் ஒரு சாதனமேயாம்.

4. மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு:

*முதல்வன் உலகத்தார் போலன்றிப் பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் உடனின்று கொண்டு, யார் யார் யாது செய்கின்றாரென்று அறிந்து, அவரவர்க்குத் அவ்வச்செய்திக்குத் தக்கபயனை அவ்வப் பொழுதே விளைவிப்பவனாகலான், உயிரானது பத்தியினால் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணைவது திண்ணம். அன்பு பத்தி என்பனவற்றிற்கு இச்சை மீதூர்தல் என்பது பொருள். பரமுத்தி நிலைக்கண் இச்சை நிகழாதபோது சிவபோகம் அநுபவமாதலில்லையாகையால் அவ்விடத்தும் இச்சை மீதூர்தல் உண்டென்பதறிக. மறவாதேத்துதலென்பது அயராது அருள்வழிநிற்றலே.*

5. இயைபு:

### உதாரணவெண்பா — 3

**அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்<br>கிருட்கணணே பாசதத்தார்க்கீசன்—அருட்கணணாற்<br>பாசததை நீககும் பகலலாத்துந் தாமரைபோல்<br>நேசததிற் றன்னுணர்ந்தார் நோ.**

இதன் பொருள்

*அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே—(படலவிசேடத்தால் ஒளி மழுங்கிய கண்ணிடத்தும், அது நீங்கி ஒளி விளங்கிய கண்ணிடத்தும் வேறறுமையின்றி) ஆதித்தன சமமாய் நின்றாலும், அவ்வாதித்தன் ஒளி மழுங்கிக் காட்சியிலலாத கண்ணுககு மாலையிருளேயாய்த் தோன்றுவன். (ஒளி*

விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறு போல விளங்கித் தோன்றுன்). அதுபோல்,— ஈசன் பாசத்தார்க்கு இருட்கண்ணே — முதல்வன் (பெத்தரிடத்தும முத்தரிடத்தும அத்துவிதமாய் ஒப்பநின்றுனும) பாசத்தாகிய ஏகதேச அறிவுடைய பெத்தாக்குப் பாச ஞானமேயாய்த்தோன்றுவன்,—அருட்கண்ணால் நேசத்தில தன உணாநதார் நோபாசத்தை நீக்கும — (அப்பாசப பிணிப்புககு ஏதுவாகிய அபக்குவம நீங்கித் தனது) திருவருட் பாாவையாற பத்தி செய்து தன்னை அறிதற்குரிய பக்குவமுடைய ராயினுர்க்குப் பாசத்தாகிய அவ்வேகதேச அறிவை மாறறிப பூரண அறிவு விரியசசெய்து அவரெதிரே விளங்கித் தோன்றுவன,— (எதுபோலுமெனின்)—பகல அலாத்தும தாமரைபோல—தனது கிரணம தீண்டிப் பக்குவமெய்திய தாமரை மலருககு முனனுளளதாகிய கூமபுதலை மாற்றித் தன்போல் ஆயிரஇதழும அலாசசெய்யும் ஆயிரங்கதிரபபரிதி போலும என்றவாறு.

அல்லும, காணுரும, பாசமும, பகலுமஆகுபெயர். தோற்றுவன் என்பது சொல்லெசசம.

இதனுல் முதலவன் பெத்தம முத்தி இரண்டினும திரிபின்றி ஒரு பெற்றித்தாகிய அத்துவிதமாய நின்று உபகரிபபாணுயின, பெத்த நிலையினும அமமுதல்வன் புலபபடல வேணடாவோ என்னும ஆசங்கையை அகற்றியவாறுயிற்று.

**உதாரணவெண்பா—4**

**மன்னு மிருளை மதிதுரந்த வாறனபின்**
**மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்**
**வலித்திரும்பைக்காந்தம் வசஞ்செய்வான் செய்தல்**
**சலிப்பில் விகாரியலன் ருன்.**

## இதன்பொருள்

மன்னும இருளை—கணணின் கண் நிலை பெற்றுள்ள தாகிய இருளை,— மதி துரநதவாறு—பூருவ பக்கத்துச சந்திரன் உடனாய் நின்று முறை முறையான உநதித் தள்ளிய வாறு போல,—அன்பின் மன்னும அரனே ஆன்மாவைத் தனது திருவடியினிடத்துச சோத்துக கொள்வதன் கண் உளளதாகிய இசசை மிகுதியான அவ்வான்மாவின கண் அநாதி முதல அத்துவிதமாய் நிலை பெறும முதல்வனருனே,—மலம துரநது—அவவான்மாவின் கண நிலைபெறற ஆணவ மலத்தைச சோபானமுறையில் உநதித்தள்ளி,—காநதம இருமபைத் தன்னில் வலித்து வசம செய்வான் செய்தல் சலிப்பு இல்—காநதககல் இருமபைத தனனிடத்தே ஈர்த்துக்கொண்டு தன் வசமாயப் பறறச செய்தல போலத தனது திருவடியின கண சோத்துத் தன் வசமாய்ப் பற்றிக்கொண்டு நிற்குமபடி பண்ணுதல அவனுககு ஒரு போதும சலித்தொழிதலிலலை,—விகாரி அலன் தான—(அவ்வாறு சலியாது செய்யுமாயினும அதனால்) விகாரியாவானல்லன (எல்லாத் தொழிலும தனது சந்நிதியின கண் சத்தி சங்கற்ப மாத்திரையாயப பாமின்றி, அதாவது இலேசாக, விளையாட்டைப் போலச செய்யும) அம முதல்வன் என்றவாறு.

ஏகாரம மலத்தைத் துரக்துற்குக காரணம் அவ்வன்பெனப்படும இச்சை யனறிப பிறிதிலலை யென்பதுணர்த்தி நிறறலில் பிரிநிலை. வசஞ் செய்வான் செய்தல்—வசஞ் செய்தலபோல செய்தல். வசமாதல—பறறி விடாமை. செய்வானது சலிபபின்மை செயகை மேலேறறபபட்டது.

இதனால் முதநிலையில் ஆன்மாவினது அன்பு நிகழுமாறும் அது முதல்வன் அன்மையின்றி அமையாமையும் விளக்கியவாறாயிற்று.

## உதாரணவெண்பா — 5

**நசித்தொன் றி னுள்ளம் நசிததலா லொன்ரு**
**நசிததிலதே லொ ன்ருவ தில்லை—நசித்துமலம்**
**அப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாம்**
**கப்பின்ரு மீசன் கழல.**

### இதன் பொருள்

நசித்து ஒன்றின் உளளம நசித்தலால ஒன்று— (மேலை வெண்பாகக ளிரணடினுங் கூறியவாறே, பூரண அறிவு விளங்கி ஆன்மா முதல்வன வசமாய ஒன்றுபட்டுக கூடுங்கால பண்டை ஏகதேசவறிவு கெட்டுக் கூடுமோ? கெடாது கூடுமோ? எனபாாககு) கெட்டுக கூடுமெனின குணங்கெடவே குணியாகிய ஆனமாவும் கெடுதலால கூடமாட்டாது, — நசித்திலதேல ஒன்றுவதில்லை — கெடாது கூடுமெனின ஏகதேச அறிவு கெடாதபோது வியாபகபொருள் விளங்குத லின்மையால கூடுமாறில்லை,—(மறறெங்ஙனம கூடுமாறெனின்)— மலமநசித்து உளம அப்பு அணைந்த உப்பின் அணைந்து சேடமாம — ஏகதேச அறிவைச செய்யும ஆணவம கனமம மாயை என்னும மலங்கள மாத்திரமே கெட்டொழிய, ஆன்மா தணணீரைச சேர்ந்த உப்புபோல் முதல்வன் திருவடியைத தலைப்பட்டுச சேடமாம,— ஈசன்கழல கப்பு இனறும— முதல்வன் திருவடி அவவான்மாவை விட்டுக் கவர்த்தலின்றி இயைந்து நிற்குமாகலான் என்றவாறு.

ஒன்றாது என்பதில் அவ்விகுதி விகாரததாற றொக்கு ஒனறு என நின்றது. மலம நசித்து அணைநது— மலம நசிகக அதனால் அணைநது. தன்னிடத்துளள கடின குணம நீங்கி அபபிணைச சோநதொனறாகிய உபபு ஆன்மா மலம நசித்து முதல்வனைச சோநது ஒன்றுபடுதல் மாத்திரைககு உவமையாயிற்று. ஒரு பொருள தன் பொருட்டன்றி மற்றோர் பொருளின் பொருட்டேயாய்த் தனககெனச சுதநதரமின்றி நிறகு மாயின் அவவாறு நிறகும பொருள் அமமறறோர பொருளுக்குச சேடமாம. இவ்விடததில, அவனருளா லலலது ஒன்றையும செய்யாதாய்த் தன்னை விடடுக கவர்த்தலின்றி இயைநது நிறகுமாசன் கழலையே அறிநது இசசித்து அநுபவித்தலாகிய முதல்வனது வழிபாட்டின் பொருட்டு உரிமை யெய்திய ஆன்மா முதலவனுககுச சேடமாயினவா றுணர்க. ஏனைய பசு பாசங்களும முதல்வனுககுச சேடமேயாயினும அவை பொது இயலபு பறறிய சேடமாவதலலது சிறப் பியல்பு பற்றிய சேடம ஆகாமையின, இதனை வேறெடுததோதினர்.

இதனால் முத்திநிலையில் ஆன்மாவினது கிரியை நிகழமாறும, அது முதல்வனது கிரியையை இன்றி அமையாமையும கூறப்பட்டன.

## உதாரணவெண்பா — 6

**பொன்வாண்முன கொண்மூவிற் புக்கொடுங்கிப் போய**
**தன்வாளே யெஙகுமாந்தன்மைபோன்முன்வாண் [கலத்**
**மலததின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு**
**மலத்திரிததுச் செல்லும் வரத்து.**

## இதன்பொருள்

பொன் வாள் முன கொண்மூவில் புககு—சூரியன் முன்பு முகிறபடலத்துண் மறைநது (ஒளி விளங்கா மலிருநது),— ஒடுங்கி — (அம முகிற்படலம சிறிது நீங்கியவிடத்துத் தனது) ஒளி சுருக்கமாய்ச சிறிதே விளங்கி,— போய் அகல எங்கும் தன்வாளே ஆம் தனமை போல—அம முகிறபடலத்தை வாயு துரபப அதனால் அது சத்திமடங்கி விட்டு நீங்கியபோது அவ் வொளி தானே எங்கணும விரிவாய் விளங்கு முறைமை போல,—உள்ளம முன் மலத்தின் மறைந்து—ஆன்மா வும முன்பு மலத்தில் மறைபபுண்டு (அறிவு சிறிதும விளங்கப் பெறுமற் கேவலப்பட்டு),— மறறு (ஒடுங்கி) உலகை உண்ணும—(இறைவன் கூட்டியருளிய கருவி களைககொண்டு) தன்னறிவு ஏகதேசமாய்ச சிறிதே விளங்கிப் பிரபஞ்ச விடயத்தை அறிநது அதில் அழுந் தும்,— மலத்து இரித்து (எங்குமாய்) வாள் வரத்து செல்லும—பின்பு முதல்வன் திருவருள் அட்டமலசத் தியைக கெடுத்தடக்கிய வழி அவவறிவே பூரணமாய் விளங்கிக் கப்பின்றி அம்முதலவன் திருவடியைத் தலைப் பட்டு அநத ஞேயத்தில் அழுநதும என்றவாறு.

ஒடுங்கி எனவும எங்குமாம எனவும உவமைக் கோதிய வினையைப் பொருளினுங்கூட்டி உரை செய்யப பட்டது. இது விளங்குதல் மாத்திரைககு ஏகதேச வுவமை என்பாா உலகையுண்ணும வரத்துச செல்லும என வேற்றுமையும் உடன் கூறினர். ஏகாரம தேற்றம. முன்வாள் என்றதில் வாள் பிரகாசத்தையுடைய

அறிவைக் குறித்தலால் ஆகுபெயர். இரித்து என்பது செயவெனெச்சத்திரிபு. மலத்து இரித்து — மலத்தை இரிக்க. வரத்துச் செல்லும் — விளங்கிச் செல்லும். மலம் நசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் மாத்திரையேயாம். இதனை இதற்கோதிய உவமையாலறிக

இதனால் நித்தமாகிய மலத்திற்கு நாசமுண்டாகு மாறும், அது நசித்தவழி அறிவு பூரணமாய் விளங்கி வியாபகத்தை அடையுமாறும் உவமைமேல் வைத்து விளக்கப்பட்டமை காண்க.

பதினொராஞ்சூத்திரம் முடிந்தது.

---

# பன்னிரண்டாஞ்சூத்திரம்

# பன்னிரண்டாஞ்சூத்திரம்

செம்மலா நோன்ருள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யனபரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே

இதன்பொருள்

*செம்மலா நோன்தாள்— (அயரா வன்பின அரன் கழலடைந்த சீவன் முத்தா) செங்கமலமலாபோல் விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை,—சேரல் ஒட்டா — அணைதற்கு உடம்படாது அயாத்தலைச செய்விக்கும,— அ மலம கழீஇ — அவவியல்பினை யுடைய மும்மல வழுக்கை ஞான நீரால கழுவி,— அன்பரொடு மரீஇ — (தன்னைபபோல அயராவன்பின் அரன் கழலடைந்த) மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி,— மால் அற நேயம மலிந்தவா வேடமும் — (அவவாறு கழுவப்பட்டு மல மயக்கு நீங்க அனப ரொடு கூடி) அன்பு மிகவுடைய அவரது திருவேடத்*

தையும்,— ஆலயம் தானும் — சிவாலயத்தையும்,— அரன் என தொழுமே — முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வான் என்றவாறு.

நோன்தாள் — அடியார்களைத் தாங்குந் திருவடி. நோன்றல் — பொறுத்தல்.

இதனால் சீவன் முத்தர்க்கு ஒரு சமயத்தில் அறிவு இச்சை செயல்கள் புறத்துச் செல்லுமாயின், மலத்தை நீக்குதலிலேயே அறிவும், அன்பரொடு மருவுவதிலேயே இச்சையும், திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடுதலிலேயே செயலும் நிகழும் என்பதை யுணர்த்தி, அவ்வாறு உணர்த்தும் முறைமையில் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாமல் அதீதமாய் அயரா அன்பினால் அணைந்து வழிபட நின்ற முதல்வனை வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டும்படி அன்பர் வேடத்திலும் ஆலயத்திலும் தெரியக்கண்டு வழிபடும் முறைமை உணர்த்தியவாறும்.

### இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1. செம்மலர் நோன்தாள் சேரலொட்டா அம்மலம் கழீஇ
2. அன்பரொடு மரீஇ
3. மாலற நேயமலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

### இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. மும்மலங்களையுங் களைக.
2. சிவஞானிகளுடனே கூடுக.

3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனெனவே தேறி வழிபடுக.

4 வழிபடாமையை ஒழிக.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டு ஆணவம் மாயை காமியமென்னும் மலங்களைக்களைக என்றது — அவை தாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்துமாகலான்.

2. இனிச் சிவபத்தர்களோடிணங்குக என்றது — அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவராகலான்.

3. இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக என்றது — அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

4. இனி இவ்விடங்களின் வழிபடுக என்றது — நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவை ஆகாவாறு அப்புருடனு மாகலான்.

## இச்சூத்திரத்தின் உதாரணவெண்பா எட்டு.

## முதலதிகரணம்

---

**செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇ**

(இ—ள்) செங்கமல மலர்போல் விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை அணைதற்கு உடம்படாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை ஞான நீராற்கழுவி என்றவாறு.

1. தன்றாற் கூறப்படும் பொருள்:

சீவன் முத்தர் மும்மலங்களையுங் களைதல் வேண்டும்.

2. ஐயப்பாடு:

சீவன் முத்தரான பிறகு மலங்களைக் களைதலும் வேண்டுமோ?

3. பிறர் கூறும் பக்கம் :

ஏகனாகி இறைபணிநின்று உண்மை ஞானத்தை அடைந்தார்க்கு மலமாயை தன்னொடு வலிய கன்ம மலமும் இல்லாதொழிதலினால், அம்மலங்களால் மறுபடியும் செய்யக்கடவதொன்றில்லை. ஆதலால் சீவன் முத்தர் மும்மலங்களைக் களையவேண்டுவதில்லை.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு :

ஏகனாகி இறைபணி நின்று உண்மை ஞானத்தை யடைந்தார்க்கு எல்லா மலங்களும் கழிந்தொழியினும், உடம்புள்ளளவும் பிராரத்த வினையொன்று மாத்திரம் அவர் உடம்பை யொட்டிநிற்கும். அவ்வினை, பெருங்காயம் வைத்திருந்த பாண்டத்தில் பெருங்காயம் இல்லாதபொழுதும் அதன் வாசனை தங்கியிருந்து அப்பாண்டத்தைத் தாக்குதல்போல், ஒவ்வொரு சமயத்தில் முற்பழக்க விசேடத்தால் வந்து தாக்கும். அப்படித் தாக்குங்கால், செய்கையின் வழியாகவே அப்பிராரத்த வினையின் அனுபவமும் நிகழுமாதலினாலும், அச்செய்கையும் விருப்பு வெறுப்புக்களின் வழியாக

கிகழுமாதலானும், விருப்பு வெறுப்புக்கள் உண்டாகவே பரமே பார்த்திருந்த சீவன் முத்தர்க்கு நிலம் முதல் மாயாதத்துவமீறாகிய ஏகதேசப் பொருள் காட்சிப்படும். அவை காட்சிபபட்டவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீத உணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்தாம். இவ்வாறு விருப்பு வெறுப்புக்களைச் செய்யும் கன்மமலமும், பிரபஞ்சப் பொருளைத் தோற்றுவிக்கும் மாயாமலமும், விபரீத உணர்வு மேம்படச் செய்யும் ஆணவமலமும் ஆகிய மூன்றும் பிராரத்த வினை காரணமாக நிட்டையினின்றும் நீங்கிய சமயம் பார்த்து வந்து கூடும். ஆதலால் சீவன் முத்தர்களும் மும்மலங்களைக் களைதல் வேண்டும்.

5. இயைபு :

### உதாரணவெண்பா — 1

**புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்**
**மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய**
**அஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்றும்**
**மெய்ஞ்ஞானிக் காகா விடு.**

இதன்பொருள்

புண்ணிய பாவம் பொருந்தும் இ கான்மியமும்— புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக்களாய்ப் பொருந்துகின்ற இக்கன்ம மலமும்,— மண் முதல் மாயைகாண் (இ) மாயையும் — மண்முதல் மாயாதத்துவ மீறாய்க் காணப்படுகின்ற இம்மாயா மலமும்,— கண்ணிய அஞ்ஞானம் காட்டும் இ ஆணவமும்

—சுட்டியறிவதாகிய விபரீத உணர்வைப் பயக்கும் இவ்வாணவ மலமும்,— இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகாவிடு-என்னும் மும்மலங்களும் மெய்ஞ்ஞானியாகிய உனக்கு ஆகா. ஆதலால் இவற்றை விடுத்தொழிக என்றவாறு.

முன்னர்க் கன்மமலமும், கன்மமலங் காரணமாக மாயாமலமும், மாயாமலங் காரணமாக ஆணவ மலமும் வந்து கூடும் என்பதை அறிவித்தற்பொருட்டு இச் செய்யுளில் முதலில் கன்மமலத்தையும், இரண்டாவது மாயாமலத்தையும், மூன்றாவது ஆணவமலத்தையும் கூறினார்.

## இரண்டாமதிகரணம்

### அன்பரோடு மரீஇ

(இ—ள்) தன்னைப்போல் அயரா அன்பின் அரன் கழலடைந்த மெய்ஞ்ஞானிகளோடு கலந்துகூடி என்றவாறு.

1. **தன்னாற் கூறப்படும் பொருள்:**

   *சீவன் முத்தர்கள் சிவஞானிகளோடு கூடி வாழ்தல் வேண்டும்.*

2. ஐயப்பாடு:

   *சீவன் முத்தர்கள் சிவஞானிகளல்லாதாரோடு இணங்கலாமோ? இணங்கலாகாதோ?*

3. பிறர்கூறும் பக்கம்:

*இவர் உறவினர் இவர் பகையினர் என்பதின்றி எல்லாவுயிரையும் ஒக்கப்பார்க்கும் சிவஞானிகளுக்குச் சிலரிடத்தில் விருப்பும் சிலரிடத்தில் வெறுப்பும் செய்துகொண்டு பகுத்து நிற்றல் தகுதியன்று. ஆதலால் அவர்கள் சிவஞானிகளோடு மாத்திரமன்றி அல்லாதாரோடும் ஒப்பக்கூடி வாழலாம். அல்லது சிவபத்தியில்லாதவரோடு இணங்காதிருத்தலே போதுமானது. சிவபத்தர்களோடு இணங்கியிருத்தல் அனாவசியமாம்.*

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*சிவஞானிகள் எல்லா உயிரையும் ஒக்கப் பார்த்தலாவது அவைபடும் துன்பங்கண்டவிடத்து வேற்றுமை பாராட்டாது அதற்கு இரங்கல் மாத்திரமேயன்றி எல்லாரோடும் இணங்கி வாழ்தலன்று. வீட்டுணர்வை நிலைபெறச்செய்யும் சிவபத்தர்களோடிணங்கினாலன்றித் தொன்றுதொட்டுப் பயின்றுவந்த மற்றையோர் இணக்கம் நீங்காது. ஆதலால் சீவன் முத்தர்களுக்கும் சிவஞானிகளின் இணக்கம் இன்றியமையாததாம்.*

5. இயைபு:

**உதாரணவெண்பா—2**

**மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்**
**சிறப்பில்லார் தந்திறத்துச்சேர்வை—அறப்பித்துப்**
**பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும்**
**மெய்த்தவரை மேவா வினை.**

## இதன்பொருள்

தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இலார் தம் திறத்து சேர்வை அற—(மும்மலங்களும் நீங்கி, முதல்வன் அத்துவிதமாய் நின்று காட்டியும் கண்டும் உபகரித்து வரும் பெருங்கருணையை மறவாது கடைப்பிடிக்கும் மெய்த்தவராயினோர்) அதனை மறக்குமாறு செய்து (ஞானக்கண்ணை இழப்பித்துத் தீ நெறிக் கட்கொண்டு சென்று) மலங்களாகுய பிறவிக் குழியில் வீழ்த்துத் துயருறுத்தும் அன்பிலார் கூற்றிலே தொன்றுதொட்டுப் பயின்றுவந்த சேர்ச்சி அறும்படி,—பத்தர் இனத்துப் பித்து ஆய் பரன் உணர்வினால் உணரும் மெய் தவரை—(அம்மறவியை மாற்றி ஞானக்கண் விளக்கிப் பிறவிக் குழியினின்றும் எடுத்து நன்னெறிக் கட் செலுத்தி வாழ்விக்கும்) சிவபத்தர் கூற்றிலே பேரன்புடையராய் (அவ்வன்பு சார்பாக விளங்குவதாகிய) சிவஞானக் கண்ணால் அந்நிலை கடைப்பிடித்து உணரப்பெற்ற மெய்த்தவரை,— வினை மேவா —(எல்லா அநர்த்தங்கட்கும் மூலமாய்வரும்) பிராரத்த வினைகள் வாதியா என்றவாறு.

மலம் என்பது மலங்களினாலாய பிறவிக் குழியை யுணர்த்தும்; ஆகுபெயர். சிறப்பு இலார் — அன்பில்லார்: எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின் அது சிறப்பு எனப்பட்டது. சேர்வை — சேர்ச்சி. பித்து என்பது பேரன்பு. இதனைக் கண்ணப்பர் செய்கையாலறிக. ஏனைத் தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மல நடையாய்ப் போதலினால் பரனுணர்வினாலுணருந் தவமொன்றே மெய்த்தவம் எனப்பட்டது.

வினை பால்பகா அஃறிணைப் பெயர். சிவபத்தரிடத்து அன்பு செய்து அவரது மனம் வாக்குக் காயங்களின் வழிநிற்பார்க்கு உலகிய லுணர்வு மாறிச் சிவாநுபூதி யுணர்வே மேம்பட்டு நிகழும். அதனால் உடம்பு உள் ளளவும் நிற்பனவாகிய பிராரத்த வினைகள் அவர்க்கு அநுபவமாகாமையால் அவரை வாதிக்கமாட்டா. அவை வாதியா தொழியவே சிறப்பிலார் தந்திறத்துச்சேர்வை பற்றறக் கழியும் என்பார் "அறப்பித்து பத்தரினத் தாய்ப் பரனுணர்வினாலுணரு மெய்த்தவரை மேவா வினை" என்றார். எனவே வீட்டுணர்வை நிலைபெறச் செய்யும் சிவபத்தர்களோ டிணங்கினாலன்றித் தொன்று தொட்டுப் பயின்றுவந்த சிறப்பிலா ரிணக்கம் அறுதாக லான் அவ்விணக்கம் சீவன் முத்தர்க்கு இன்றியமை யாததென்பது வலியுறுத்தியவாறாயிற்று.

## மூன்றுமதிகரணம்

---

**மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந் தானு மரனெனத் தொழுமே.**

(இ—ள்) சீவன் முத்தர் தனது மலமயக்கம் நீங்க முதல்வனிடத்தில் அன்பு மீதூரப்பெற்ற சிவ ஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வர் என்றவாறு.

1. தன்னாற் கூறப்படும் பொருள்:

சீவன் முத்தர் சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே தேறி வழிபடுவர்.

2. ஐயப்பாடு:

சீவன் முத்தர்க்கும் திருவேட வழிபாடும் சிவாலய வழிபாடும் வேண்டுமோ?

3. பிறர் கூறும் பக்கம்:

சீவன் முத்தர்க்கு யாவும் சிவமாகத் தோன்றுதலால் திருவேடத்தையும் சிவாலயத்தையும் வேறு பிரித்து வழிபட வேண்டுவதின்று.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

முதல்வன் எங்கணும் வியாபகமாய் நிற்பினும், இவ்விரண்டிடத்து மாத்திரமே தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றி ஏனைய விடங்களில் பாலில் நெய் போல் வெளிப்படாது நிற்றலானும், காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல, பத்தாது திருவேடமும் ஆலயமும் மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரத்தாலேயே வசீகரித்து இன்பஞ் செய்தலானும் சீவன் முத்தர் இவ்விரண்டையும் சிவனெனவே கண்டு வழிபடுவர்.

5. இயைபு:

**உதாரணவெண்பா — 3**

**தன்னுணரவேண்டித்தனதுருவைத்தான்கொடுத்துத்**
**தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரும்**
**நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்**
**பாசத்தார்க் கின்றாம் பதி.**

இதன்பொருள்

*பதி—வாக்கு மனதீதமாய் நின்ற பரம்பொருள், தன் உணர வேண்டி—உலகத்தார் தன்னை யறியும்படி கருணை செய்து,—தனது உருவை தான் கொடுத்து—தனது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன் அன்பர்க்குக் கொடுத்து (அவர்களிடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குதலாலும்),—தன் உணர—அவர் தம்மைச் சோகம் பாவனையால் உணரச் செய்தலாலும்,— தன்னுள் இருத்தலால்—அவரை ஒரு குறியின் கண் நிறுத்தித் தனது வியாபகத்திற்குள்ளாக இருத்துதலாலும்,— தன்உணரும் நேசத்தர் தம் பால் ததி நெய்போல் நிகழும்—(குறியிறந்து நின்று) தன்னை உள்ளவாறுணரும் அன்பாளராகிய அவரிடத்தில் தயிரிலுள்ள நெய்போல் விளங்கித் தோன்றும்,— பாசத்தார்க்கு இன்று ஆம்—பாசக் கட்டு உடையார்க்கு (இவ்வியல்பில்லாமையால்) அவரிடத்தில் விளங்கித் தோன்றாது பாலில் உள்ள நெய்போல் விளங்காது நிற்கும் என்றவாறு.*

*தன் உருவைக் கொடுத்து, தன்னுணரச்செய்து, தன்னுளிருத்தலால் ததி நெய்போல் நிகழும் எனக் கூட்டி முடிக்க. இன்று—விளங்காது. தன்உணர—தன்னை உணரச் செய்து. இதில் செய்து என்பது சொல்லெச்சம். இருத்தலால்—இருத்துதலால்.*

**உதாரணவெண்பா—4**

**கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே**
**றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்**
**தானதுவா யன்றுஞன் றனதுவாய்த் தோன்றுமே**
**தானதுவாய்க் காணுந் தவர்க்கு.**

இவ்வெண்பா, முற்கூறிய இயல்புகளையுடைய சங்கமவேடத்தினிடத்து இறைவன் எக்காலத்தும் பிரகாசமாய் நிற்றலால் சீவன் முத்தர்கள் அவ்வேடத்தை வழிபடுக வென்றது பொருந்துமாயினும், மந்திர சாந்நித்திய முண்டானபோது இறைவன் விளங்கியும் அது இல்லாதபோது விளங்காமலும் இருக்கும் சிவலிங்கமாதி மூர்த்திகளையுடைய சிவாலயங்களையும் சீவன் முத்தர்கள் வழிபடல் வேண்டுமென்பது எங்ஙனம் பொருந்தும்? என்னும் ஆசங்கையை நீக்குவதாகும்.

## இதன்பொருள்

காட்டத்தில் அங்கி வேறு உண்டல்போல் — விறகில் உள்ள தீயானது கடைந்தபோது வேறாய் விளங்கும். (கடையாதபோது விளங்குவதன்று.) அதுபோல்,—கண்ட உருதான் அது ஆய் அன்று ஆனான்— (உயிர்களுக்குப் புத்திமுத்தி யளித்தற் பொருட்டுக்) காணப்பட்ட தாவரத்தின் அருவுருவின்கண் கலப்பினால் அதுவே தானாய், அதுவன்றி வேறு பொருளுமாம் இயல்புடைய முதல்வன்,—(காணார்க்கு) கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளதாம்— (அதுவே தானாய்க் காணமாட்டாதார்க்குத் தம்மால்) அறியப்பட்டதொரு மந்திர சாந்நித்தியம் (இல்லாதபோது அங்கே விளங்காது நின்று) உள்ளபோது விளங்கித் தோன்றும் பொருளாம்,— அதுதான் ஆய்காணுநவர்க்கு அதுதான் ஆய்த்தோன்றுமே—(அவ்வாறன்றி) அதுவே தானாய்க் காணப்பெறும் உண்மைத் தவம் உடையார்க்கு எப்போதும் அப்படியே விளங்கித் தோன்றமாட்டாதோ என்றவாறு.

காணார்க்கு என்பது சொல்லெச்சம். உண்டல்— விளங்கித் தோன்றல்.

## நான்காமதிகரணம்

வழிபடாமையை யொழிக

(இ-ள்) சீவன் முத்தர்கள் சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடும் வழிபாட்டைக் கைவிடாதிருக்கக்கடவர்.

இவ்வதிகரணம் முன் மூன்றுஅதிகரணங்களினால் உண்டான ஆசங்கையை நீக்குதற்கு அவற்றின் சேடமாயெழுந்ததனால் ஒழிபு அதிகரணம் என்னப்பெற்றது.

1. தன்னாற் கூறப்படும் பொருள்:

சீவன் முத்தர்கள் முன் மூன்று அதிகரணங்களிற் கூறிய மலங்களைக் களைதல், சிவஞானிகளோடு கூடி வாழ்தல், சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடுதல் என்னும் இவற்றை எக்காலத்தும் கைவிடாதிருத்தல் வேண்டும்.

2. ஐயப்பாடு:

இம்மூன்றினையும் சீவன் முத்தர்கள் அநுட்டிக்க வேண்டிய விதிகளாக வைத்துக் கூறுதல் பொருந்துமோ? பொருந்தாதோ?

3. பிறர் கூறும் பக்கம்:

இம்மூன்றும் சீவன் முத்தரிடத்தில் இயல்பாகவே அமைந்து கிடத்தலால், முன் மூன்று அதிகரணங்களிற் கூறியனவே சாலும். அவற்றை மீண்டும் அவர்கள் கைக்கொள்ளவேண்டிய விதியாக வைத்துக் கூறுதல் பயனுடைத்தன்று.

4 மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

*(உடம்போடு கூடிநின்று, உடம்பு வேறு தான் வேறு என்று பிரிக்க வாராதபடி உடம்பே தானாய் நின்ற உயிர், தத்துவ சோதனையின்கண் அவ்வுடம்பாகாது அதின் வேறுமாயினாற்போல) உயிர்க்குயிராகிய முதல்வன் சித்து சடம் என்னும் இருவகைப் பொருள்களினும் இரண்டறக்கலந்து அவையே தானாயும், அவற்றின் வேறுமாயும் நிற்பன். ஆதலால், முதல்வன் அவையே தானாய் நிற்றலைக்காணும் காட்சியினால் அவனிடத்திற் செய்ய நேரிடும் வழிபாடு, அவன் அவற்றிற்கு வேறாய் நிற்றலைக் காணுங் காட்சியினால் நேர்படமாட்டாது. ஆதலால் முதல்வன் அவைகளுக்கு வேறாய் நிற்றலைக் காணுங் காட்சியின் கண்ணும் சீவன் முத்தர்கள் மலங்களைக் களைதலும், சிவஞானிகளோடு கூடி வாழ்தலும், சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடுதலுமாகிய இவற்றைக் கைவிடாது கடைப்பிடித்தல் வேண்டுமென மீண்டும் வற்புறுத்தி விதித்தல் பொருத்தமுடைத்தே.*

5. இயைபு :

**உதாரணவெண்பா — 5**

**அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்**
**கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனில்**
**அத்துவித மாத லகண்டமுந் தைவமே**
**அத்துவிதி யன்பிற் றொழு.**

இதன்பொருள்

*கண்டார்க்கு — (முதல்வன் சடம் சித்து என்னும் இருவகைப் பொருள்களிடத்தும் நிற்கும் நிலைமை)*

அறியப் பெற்றூர்க்கு,— அது இது என்றது அல்லான் — (கண்ணும் சூரியனும் கலந்து நிற்பினும் கண் வேறு சூரியன் வேறு காணப்படுமாறுபோல) அதுவும் இதுவும் எனப்பிரித்து ஓதப்படும் பேதநிலைமையுடையவனுமல்லனாய்,—அது (என்றது அல்லான்)—(உடலும் உயிரும் பிரிக்க முடியாதவாறுபோல) எல்லாம் முதல்வனே என்று சொல்லப்படும் அபேத நிலைமை யுடையவனு மல்லனாய்,— அது இது என்றதையும் அல்லான்— (குணமும் குணியும் ஒருவாறு பேதமும் ஒருவாறு அபேதமு மாதல்போல்) முதல்வனாகிய இப்பொருள் என்று பிரிக்க முடியாமை பற்றிக் கூறப்படும் பேதா பேத நிலைமையுடையவனுமல்லனாய்,— பொது வதனில் அத்துவிதம் ஆதல், அகண்டமும் தைவமே — (உயிரின் அறிவும் கண்ணொளியும் கலப்பால் அபேதமாயும், பொருளின் தன்மையால் பேதமாயும், உடனாகச் செல் லுந் தன்மையால் பேதா பேதமாயும் நிற்குமாறுபோல) பேதம் அபேதம் பேதாபேதம் ஆகிய மூன்றுக்கும் பொதுவாய் அம்மூன்றுமாகிய அத்துவித நிலைமை யுடையானாய் நிற்பன். ஆதலால், எல்லாப் பொருளும் அவன் வடிவமேயாம்,— (ஆயினும்) அத்துவிதி அன்பின் தொழு — (அப்பொருள்கள் எல்லாவற்றுள்ளும்) கண்டமாத்திரத்தே அன்பு உண்டாகும் இடம் எதுவோ அவ்விடத்தில் அத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடைய நீ முதல்வனை வழிபடுவாயாக என்றவாறு.

இதனால் பசுவின் உடல் முழுதும் வியாபித்திருப்பினும் காணப்படாத பால், கன்றை நினைத்த மாத்திரத்தில் மடியின்கண்ணே விம்மியொழுகுமாறுபோல்,

எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் அன்பர்பொருட்டுத் திருக்கோயிலினுள்ளிருக்கும் திருமேனியினிடமாக வெளிப்பட்டருளுவன் என்பதையுணர்த்தி, எங்குமா யெல்லாமாயிருக்கு மிறைவனை எந்த இடத்திலும் வழி படலாமென விதித்தல் பொருந்தாதோ? என்னும் ஆசங்கையை அகற்றியவாறும். (அதாவது சிவாலயத் திற் செய்யும் வழிபாடே அனுபவமான அத்துவித ஞானத்தை நிலைக்கச்செய்யும் என்பதை யுணர்த்திய வாறும்.)

முதலடியில் உள்ள அது இது என்பது அதுவும் இதுவும் என்னும் பொருளைத் தருதலால் உம்மைத் தொகை. இரண்டாமடியிலுள்ள அது இது என்பது அதுவாகிய இது என்னும் பொருளைத் தருதலால் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

அல்லான் என்னும் குறிப்புவினைமுற்று அல்லா னாய் என்னும் பொருளைத்தரும் குறிப்பு வினையெச்ச மாய் நின்று அத்துவிதமாதல் என்பதைக்கொண்டு முடிந்தது.

என்றதையும் அல்லான் — என்றதுவும் அல்ல னாய். பொதுவைதனில் — பொதுவினில். ஆதல் ஆதலால். தைவம் — தேவனதுடைமை. அன்பிற் றொழு — அன்பு விளையும் இடத்தில் தொழு

**உதாரணவெண்பா — 6**

**வினையா லசத்து விளைதலான் ஞானம்**
**வினைதீரி னன்றி வினையா—வினைதீர**
**ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழும்**
**ஆனத்தா லன்பிற் றொழு.**

## இதன்பொருள்

*வினையால் அசத்து விளைதலான் — பிராரத்தவினை வாசனையால் பிரபஞ்சத் தோற்றம் மேம்படலால்,— வினை தீரினன்றி ஞானம் வினையா — பிராரத்தவினை வாசனை யொழிந்தாலன்றி (மெய்யுணர்வின் பயனாகிய) சிவத்தோற்றம் மேம்படுதல் உண்டாகாது,— (ஆதலால்) வினை தீர — அப்பிராரத்தவினை பற்றறக் கழியும்பொருட்டு,— ஞானத்தை நாடி தொழுவே அது நிகழும் — அம்மெய்யுணர் வுடையாரை நாடி வழிபடவே (அப்பிராரத்தவினைநீங்கி)மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும்,— ஆனத்தால் — ஆனதனால்,—அன்பின் தொழு—(அவரை) அன்பினால் வழிபடுவாயாக என்றவாறு.*

## உதாரணவெண்பா—7

**தன்னை யறிவித்துத் தான்றனைச் செய்தானைப்**
**பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே**
**தானேதா னச்செய்துந் தைவமென்றுந் தைவமே**
**மானே தொழுகை வலி.**

## இதன்பொருள்

*தன்னை அறிவித்து—(தன் உண்மையை யறியமாட்டாது குருடாய்க்கிடந்த உயிர்க்குப் பலவழியாலும்) அதனை அறிவித்து,— தான் — (மிகவும் எளிய) அவ்வுயிரை,— தான் ஆச் செய்தானை — (மிகவும் அரிய பொருளாகிய) தானாகும் வண்ணம் செய்தளித்த குருமூர்த்தியின் பேருதவியை,— பின்னர் மறத்தல் — அதன்பின் மறத்தல்,— பிழையலது — (இதற்குமுன்*

அறியாமையால் மறந்த குற்றம்போல்) ஒழியக்கூடிய குற்றமன்று,–(ஆதலானும்) முன்னவன் தானே தானுச் செய்தும் — முதல்வன் அவ்வாறு உயிராகிய தன்னைப் பதியாகிய தானேயாகச் செய்தாலும்,— தைவம் என்றும் தைவமே — (இதுகாறும் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனது உபகாரத்தை அவாவி அடிமையாயிருந்த உயிர் எக்காலத்தும் (அதாவது சிவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை யடைந்தவிடத்தும்) அவ்வாறு அடிமையேயாம்,— (ஆதலானும்) மானே — (ஞானாசிரியனாகிய) அப்பெரியோனை,— தொழுகை வலி — வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலியாவது என்றவாறு.

ஆன்மா முத்தியிலும் சிவத்தின் அடிமை யென்பதை "மீளா வடிமை யுமக்கே யாளா" என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தாலும், "சங்கவெண் குழையோர் காதிற் கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே" என்னும் திருத்தாண்டகத்தாலும் அறிக.

முன்னவனே என்பதில் ஏகாரம் அசைநிலை. மற்ற ஏகாரங்கள் தேற்றம்.

தைவம் — தேவனதுடைமை.

மான் — மஹான் — பெரியோன்.

மானே தொழுகை — அப்பெரியோனை வழிபடுதலே.

தானுச் செய்தும் — தானுகச் செய்தாலும்,

*வலிதருவதனை வலியென்றுபசரித்தார்.*

*இவ்வெண்பாவினால் சீவன் முத்தர்க்கும் சிவதேசிகன் வழிபாடு அவசியமென்பது உணர்த்தியவாறும்.*

## உதாரணவெண்பா — 8

**சிவமென்னு மந்ததர சிந்தைநேர் நோக்கப்**
**பவமின்றாங் கண்வா சகத்திற்—சிவமுண்டா**
**மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவால்**
**இன்றிந்நூன் மும்மை மலர்க்கு.**

### இதன்பொருள்

*சிவம் என்னும் அந்ததர — (சீவன் என்னும் தன்மையினின்றும் நீங்கிச்) சிவம் என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தையுடைய மாணவகனே,— ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு — ஒன்றும் இரண்டும் ஆய மலங்களையுடையவர்க்கு (அதாவது ஆணவமலம் ஒன்றையுடைய விஞ்ஞானகலருக்கும் ஆணவமும் கன்மமும் ஆகிய இரு மலமுடைய பிரளயாகலருக்கும்),— சிந்தை நேர் நோக்க கண்வாசகத்தின் பவம் இன்று ஆம் சிவம் உண்டாம் — (முதல்வன்) முறையே அறிவின் கண் நின்று அருட்பார்வையில் நோக்குதலாலும், தேவகுருவாய் முன் நின்று செய்யும் திருநோக்கம் (பரிசம்) வாக்கு எனப்படும் தீக்கையாலும் பிறவிக்கு ஏதுவாய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கும்,—(ஆதலால்) – மும்மைமலர்க்கு இங்கு ஒண் குருவால் இன்று இந்நூல்—மும்மலமுடைய சகலர்க்கே உரித்து இவ்வுலகத்து அனுபவமுடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞானபோதநூல் என்றவாறு.*

அந்தம் — வேதாந்தம். அந்ததரம் — சித்தாந்தம். சித்தாந்தத்தைப் பெற்ற பெரியோர் பெருமை கூறுவார் "சிவமென்னும் அந்ததர" என்றார். சிவம் என்னும் — சிவம் எனப்படும்.

சிந்தை — அறிவின்கண். நேர் நோக்குகலாவது முன்னிருந்த மருட்பார்வையைப் போக்கி அருட்பார்வையால் நோக்குதல். நோக்க — நோக்குதலால். இந்நூல் அனுபவமுடைய தேசிகனாலன்றி விளங்காதென்பார் ஒண் குருவால் என்றார்.

இன்று இந்நூல் — "இக்காலத்து உரைக்கப்பட்ட நூல்" எனினும் அமையும்.

மும்மை — மூன்று. மும்மைமலத்தார் சகலர்.

பயனியல் — சிறப்பியல்பு முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம். திருச்சிற்றம்பலம். திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீ வெங்கடேஸ்வர் அச்சுக்கூடம், கும்பகோணம்.